சிவமயம்.

அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த

சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும்,

இதற்கு

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

திராவிடமாபாடிய கர்த்தராகிய

மாதவச் சிவஞானயோகிகள்

உரையைத்தழுவி

திருவாவடுதுறை ஆதீன சைவப்பிரசாரகர்

காக்குடி

பொ. முத்தையபிள்ளை எழுதிய

பொழிப்புரை முதலியனவும்.

னை வ

ஷை பொ. முத்தையபிள்ளைபால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றன.

1914.

விலை] — [சூ 1—8—0

All Rights Reserved

உ

பொருளடக்கம்.

1. முகவுரை.

2. உரிமையுரை.

3. நூலாசிரியர் வரலாறு.

4. அவதாரிகையின் அகராதி.

5. விஷய அகராதி.

6. இயல் அகராதி.

7. அதிகார அகராதி.

8. பாட்டு முதற்குறிப்பு அகராதி.

9. உரைப்பாயிரம்.

10. நூல்.

11. பிழை திருத்தம்.

உ

கணபதி துணை.

முகவுரை.

இந்நில வுலகத்துள்ள மக்கள்யாவரும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒவ்வொன்றையேனும் அன்றி ஒருங்கேனும் எய்தப்பெற்று இன்புறுதலில் மிக்க விருப்பத்தினையும் முயற்சியினையும் உடையா ரென்பது, அவரவர் அநுபவ வாயிலாக வுணரத்தக்க தொன்றும். இவ்வுறுதிப் பொருள்க ணான்கனுள் முதலிறுதியொழித்து இடைப்பட்ட இரண்டினைப் பெற அவாவுவார் இவ்வுலகின் மிகப் பலராவர். முதற்கண் உள்ள தனைப்பெற விரும்புவார் சிலராவர். இம்மூன்றனையும் ஒருவி, யிறுதிக்கண்ணுள்ள வீட்டினை விழையும் உண்மையறிஞர் சிலரினுமிகச் சிலரேயாவர். இந்நால்வகைப் பொருள்களாலும் பெறப்படும் பயன்களை யாராயுங்கால், பொருளுமின்பமுமுறையே இம்மை மறுமையினும், இம்மையினும் நின்றொழிதலானும், அறம் இருமையுமுதவி வீட்டுக்குச் சாதனமாக நிற்றலானும், வீடு தன்னை யெய்தப் பெற்றாரைப் பிறப்பிறப்புத் துன்பம் இரித்துப் பேரின்புறுத்த வல்லதாகலானும் இறுதியதாகிய வீட்டினையே உண்மை யறிவுடையார் ஒருதலையானெய்த விரும்புவ ரென்பதும், அதற்குரிய சாதனங்களைப் பெறுதற்குத் தக்க முயற்சிகளையே மேற்கொள்ளுவ ரென்பதும் போதரும். அச்சாதனங்களுண் முக்கியமானவை, தத்தஞ்சமய நூலுணர்ச்சியும், அந்நூனெறியுணர்ந்தாங் கொழுகுதலுமேயாம். அங்ஙனமாயின், நமக்குரிய சமயம்யாது? அதன்கட்கூறப்படும்பொருள்களெவை? அவற்றை விளக்கும் நூல்களெவை? என்றின்னோரன்ன ஆராய்ச்சியை மேற்கொள்ளுவேமாயின், உயர்ந்த மகாஞானிகளாற் றெளிந்து நிச்சயிக்கப்பட்ட பரம்பொருளாகிய சிவபிரானை வழிபாடுசெய்யும் நம்மோர்க்கு உரியசமயம் சைவசமயம் என்பதும், அதன்கட் டெளியப்பட்ட பொருள்கள் அநாதியாகவுள்ள

கண்ணிறந்த ஆன்மாக்களை அநாதியே பற்றிநிற்கு மூலமலமாகிய ஆணவ அழுக்கைகக் கழீஇச் சிவப்பேறுதவிப் பிரின்புறுத்துங்கரு ணையே காரணமாக, அவ்வவற்றின் கன்மங்களுக்கு ஈடாகத்தநுகா ணை புவன போகங்களை அளித்து இயங்கி யியக்கியும், அறிவித் தறி: தும் விளங்குகின்ற சிவபரம்பொருளாகிய பதியும், அப்பதியாலறிவி க்க அறிந்தும், கன்மப்பயனை நுகர்ந்தும், சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யெய்தப்பெற்றுள்ள எண்ணிறந்த ஆன்மாக்களாகிய பசுக்க ளும், அவை, தம் உண்மைநிலையுணர்ந்து தலைவனுகிய சிவபிரானைத் தரிசித்து இன்புறுதற்குத் தடையாக அநாதிய பற்றி நிற்கின்ற ஆணவமும், அதனை யொழிக்கற்குப் போந்த கன்மமாயைகளும் ஆகிய பாசங்களும் என்னும் இம்முத்திறத்தனவா மென்பதும், இவ்வுண்மைகளைப் பொதுவகையாலுஞ் சிறப்புவகையாலும் ஐய்த் திரிபறச்செவ்வனே விளக்கி நிலைப்படுத்து நூல்கள் வேதசிவாகமங் களும், அவற்றின் வழிப்போந்த வடமொழி தென்மொழிக்கண் உள்ள பிறநூல்களுமா மென்பதும் பெரியோர்களால் நன்கு தெளி யப்பட்டனவாம்.

ஆயின், வேதத்தின்கண், பற்பல தேவர்களுக்குத் தலைமை கேட்கப் படுதலானும், பலபல சமயக் கொள்கைகளுங் கூறப்படு கின்றமையானும் தலைவர் யாவர்? எக்கொள்கை உண்மையாகச் சிறந்தது? என்னும் ஐயப்பாடு எய்துமாலோவெனின்; அஃதெ ழித்தற்கே வேதம் பொது நூலாயதென்க. உலகத்துள்ள மக்கள் பலதிறப்பட்ட அறிவினையும், கொள்கையினையு முடையாராகலின், அவ்வெல்லாரையுங் காக்கவேண்டு மென்னுங் கருணை வள்ளலாகிய சிவபெருமான், அவ்வவர் தகுதிக்கேற்பப் பற்பல கருத்துக்கள் தோன்ற வேதங்களை யருளிச்செய்தார். அவ்வேத ஆராய்ச்சியு டையார் பலரும், கீழ்க்கண்ட தத்துவங்களையே பரம்பொருளென முன்னர்க்கண்டு பின்னர் அனையதனைத்தும் அழிதன் மாலையவென் றொருவி மேற்சென்று சென்று முடிவில், தனக்கொப்பாரு மிக்காரு மில்லாத சிவபிரானையே பரம்பொருளெனத் தெளிதற்குரிய சிவாக மநெறி நின்று அப்பெருமான் றிருவடிநீழல் எய்தி யின்புறுவாத லின், பக்குவமிக்க ஆன்மாக்களின் பொருட்டு அருளப்பட்டனவா கிய சிவாகமங்கள், சிறப்பு நூல்களாகும். இதனால் வேதங்களிற்

முகவுரை

பிற தேவர்களுக்குக் கூறப்படுந்தலைமை உபசாரமென்பதும்; சிவ பிரானுக்குக் கூறப்படுந்தலைமை யுண்மையென்பதும் வெளியாம். இவ்வுண்மை, வேதங்களில் உபசாரமாகக் கூறப்பட்ட சமயங்களுக் கெல்லாம் வழிநூல்சிரியர்கள் பிறதேவர்கள் இருடிகளாகவிருப்ப, அவ்வேதங்களை யருளிச்செய்த முதலாசிரியராகிய சிவபிரானே உண்மையாகக் கூறப்பட்ட சைவசமயத்தைப் போதிக்குஞ் சிவாக மங்களுக்கு ஆசிரியராக வுள்ளமையின், சிறிதும் ஐயமின்றித்தெளி யலாம். இவ்விஷயமெல்லாம் தத்துவஞானிகளாகிய சைவாசிரியர் கள் இருமொழிக்கண்ணும் தருக்க நெறிபிறழாமல் அருளிச்செய்த சைவநூல்களின் மிகவிளக்கமாக வுணரலாம்.

இனி, சைவவுண்மைகளை யறிவுறுத்துந் தமிழ்நூல்கள், சமய குரவர்களருளிச் செய்தனவும், சிவபரத்துவ மொன்றனையே கூறுவ னவுமாகிய தேவார முதலிய வேதங்களும், சந்தான குரவர்க ளருளிச் செய்த சிவஞானபோத முதலிய பதினான்கு சாத்திர ங்களும் பிறவுமாகிய ஆகமங்களுமாம். இப்பதினான்கனுள் ஒன் றும், நம்மனோர்தவப் பேற்றால், தமிழ்நாட்டில், திருவெண்ணெய் நல்லூரில், சைவவேளாண் மரபில் அவதரித்தருளிய ஸ்ரீ மெய் கண்டதேவர் அருளிச் செய்ததுமாகிய சிவஞான போதமே முப் பொருள்களைத் தெளிவுறுத்துஞ் சித்தாந்த சைவநூல்களுட் சிறந்த முதனூலாகும். அது, சூத்திரங்களாகவும், வார்த்திகப் பொழிப் பாகவும் அருளிச் செய்யப்பட்டிருக்கலான், அந்நுண்பொருள் களை விரிவாக விளக்கி யாவருக்குந் தெளிவுறப் போதிக்க வேண்டு மென்னுங் கருணையே காரணமாக, அம்முதனூலாசிரியராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் மாணாக்கரும், அந்தணர் குலத்தி லவத ரித்தவருமாகிய ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் சிவஞானசித்தியார் என்னும் வழிநூலை யருளிச் செய்தார்கள். அந்நூல், பரபக்கம், சுபக்கம் எனவிருபகுதித்தாக, பரபக்கத்தில், புறப்புற முதலிய சமயங்களை, அவ்வச்சமயப் பார்வையாற் கண்டித்தும், சுபக்கத்திற் சித்தாந்தப் பார்வையால் ஏனைச்சமய வாதிகள் ஆசங்கைகளை மறுத் தச் சித்தாந்தசைவவுண்மைகளைப்புலப்படுத்தி நிரூபணஞ்செய்தும் அமிழ்தினு மினியம்தூரம் பழுத்தொழுகுஞ் செய்யுள்வடிவினதாக யாக்கப்பட்டுள்ளது. சுபக்கப்பகுதி கடவுள் வாழ்த்துள்பட

முகவுரை.

செய்யுட்களையுடையதாகும். இது, முதனூன் முறைப்படி பன்னிரு சூத்திரப் பிரிவாகவுள்ளது: ஒவ்வொரு சூத்திரக் கருத்துக் களையும் சில பலசெய்யுட்களால் இவ்வாசிரியர் விளக்கியிருக்கின்றனர்

இந்நூலிலுள்ள முன்றை சூத்திரங்கள் பொதுவதிகாரம் எனவும், பின்றை சூத்திரங்கள் சிறப்பதிகாரமெனவும் பெயர் பெறும். அவை மும்மூன்று சூத்திரங்களையுடைய இயல்களாகப் பகுக்கப் பட்டு முறையே, பிரமாணவியல், இலக்கணவியல் எனவும், சாதன வியல், பயனியலெனவும் பெயர் பெறும். பிரமாண வியலிலுள்ள மூன்று சூத்திரங்கள் முறையே பதியுண்மை, பாசவுண்மை, பசு வுண்மைகளையும், இலக்கண வியலிலுள்ள மூன்று சூத்திரங்கள் பசு விலக்கணம், பாசவிலக்கணம், பதியிலக்கணங்களையும், சாதன வியலி லுள்ள மூன்று சூத்திரங்கள், சாதிக்கும் பொருளதியல்பும், சாதிக் கப்படும் பொருளதியலபும், சாதிக்கு முறையும், பயனியலி லுள்ள மூன்று சூத்திரங்கள், பாசகூடியமும், சிவப்பேறும், அப்பே ற்றையுடைய சிவன் முத்தர் செயலுங் கூறுவனவாம். இம்முறைகள் முதனூற்குள்ளவாறேஇந்நூற்கும்அமைந்துள்ளன. இந்நூலிலுள்ள செய்யுட்களெல்லாம் அழகிய செவ்விய சுருங்கிய சொற்களாற் றெ நிக்கப்பட்டனவாய் விழுமிய இனிய ஓசையுடையனவாய், ஆயுந் தோறும், ஆயுந்தோறும் மேன்மேற்கிளைக்கு ஞண்பொருட் பெரு க்கத்தை யுடையனவாயுள்ளன.

இப்பெருமை நோக்கியன்றே? பெரியாரும்,

> "பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
> யோர்விருத்தப் பாதிபோ தும்" எனவும்,
>
> "பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
> சாதித்தார் பொன்னடியைச் சாருநா னெந்நாளோ"

எனவும் பாராட்டிப் போற்றுவாராயினர்.

இத்தகைய மாட்சிமிக்க சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு ஸ்ரீ மறைஞான தேசிகர், ஸ்ரீ சிவாக்கிரயோகியார், ஸ்ரீ ஞானப்பிர காசர், ஸ்ரீ சிவஞானயோகியார், ஸ்ரீ நிரம்பவழகியார், ஸ்ரீ சுப்பிர

முகவுரை

மணிய தேசிகர் ஆகிய இவ்வறுவர்களாலும் சிற்சில கருத்து வேறு பாடுகளுடன் தனித்தனி செய்யப்பட்டவுரைகள் வெளிப்பட்டிருக்கின்றன. இன்னும் வெளிப்படாத வேறுரைகளிருப்பினுமிருக்கலாம். வெளிவந்த இவ்வுரைகளுள் ஸ்ரீசிவாக்கிரயோகியாருரையும், ஸ்ரீசிவஞானயோகியாருரையும், அதனைப் பதப்பொருளோடு வைத்தாராய்ந்துபகாரமாக ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் செய்த வுரையும் மிக உபயோகங்களாக வுள்ளன. ஏனையவுரைகளினும் ஆங்காங்குச் சிற்சில நயங்களைக் காணலாம். பல செய்யுட்களில், ஸ்ரீசிவஞான யோகிகள் கொண்டுகூட்டி வேறுபட்டிருக்கும். அது பொருணயங்கருதியதாகும் ஸ்ரீ ஞானப்பிரகாசர் உரைசித்தாந்தசைவத்துக்கு முரணுகச்சிவசமவாதம் போந்திப்பதாகலின், அது பொருந்தாதென நியாயவாயிலாக எடுத்து ஸ்ரீ சிவஞான யோகிகளாற் கண்டிக்கப் பட்டுள்ளது. ஏனையபெரும்பாலுந் தம்முண் மாறுபாடுடையனவாகா.

இவ்வுரைகள், பெரும்பாலும் வடசொற்களாலும், உயர்ந்த செந்தமிழ்ச் சொற்களாலும் எழுதப் பட்டிருக்கலாலும், சிற்சில விஷயங்கள் வேறு சைவநூல்களிற் றெளிந்து கொள்ளுமாறு சுருங்கக் கூறுதலாலும், வடமொழிப் பயிற்சியும் தமிழிற் பேரிலக்கிய இலக்கணவாராய்ச்சியு மின்றிச் சிற்றிலக்கிய இலக்கணந் தெரிந்த எவனேயாரும் எளிதில் விஷயங்களையுணர்ந்து கொள்ளும் வண்ணம் முன்னோர் கருத்துக்கு மாறுபாடின்றி, திருவாவடுதுறை யாதீன வைவப்பிரசாரகராகிய தூத்துக்குடி ஸ்ரீ பொ.முத்தையபிள்ளையவர்கள் புதியதாக ஒருரை யெழுதி முடித்திருக்கின்றனர். இவ்வுரைப் பிரதி யொன்று என் பார்வைக்கு அனுப்பினர்கள். ஆங்காங்குச் சிற்சில செய்யுட்களுக்கு விசேடமாக எழுதப்பட்ட வுரைக்குறிப்புக்களைப் பார்த்தேன். ஒவ்வொரு செய்யுட்களின் தலைப்பில் அச்செய்யுளின் கருத்துறு பொருளைத் தெரித்துக் காட்டும் வாக்கியங்களுள்ளன. செய்யுளின் பின் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் கருத்துப்படி கொண்டுகூட்டித் தனித்தனியே எழுதப்பட்டுள்ளது; இது, கற்பார்க்கு, செய்யுள் இவ்வாறு அந்வயஞ் செய்யப்பட்ட தென்று இலகுவில்லுணர்தற்குபயோகமாம். இவ்வுரை, ஸ்ரீசிவஞானசுவாமிகள் பொழிப்புரையையும், ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் பதவுரையையும் சிறிதும் பிறழாமல் எடுத்து விளக்கமான எளிய சொற்றொ

டைதளால் எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீசிவஞானசுவாமிகள் மிகச்சுருக்கமாக வ்ரைந்த சில விஷயங்கள் இதன்கண் விளக்கப்பட்டிருக்கின்றன. சிவஞான போதமாபாடியம் சிற்றுரைகளின் ஆராய்ச்சியிற் கண்ட சில விஷயங்களும் ஆங்காங்கு இதன்கட் காணலாம். இவ்வுரை, பெரும்பான்மை முன்னுரை யாசிரியர்கள் கருத்தைத் தழுவிச் சிறுபான்மை விளக்க விசேடங்களை யுடையதாயினும் அரிய விஷயங்கள் எளிய நடையில் விளக்கப்படுதல், கற்பார்க்கு மிக உபயோகமாதலின், இதுவுந் தமிழ்நாட்டார்க்குப் பயன்படு மென்பது என் கருத்து.

இவ்வுரை யாசிரியராகிய ஸ்ரீ பொ. முத்தையபிள்ளையவர்கள், தம் பாலப்பருவ முதல் சிவஞானபோத முதலிய சைவசாத்திரங்களை இடைவிடாது ஆராய்ந்து தமிழ் நாட்டிலுள்ள சபைகளிலும் பிறவிடங்களிலும் சைவசித்தாந்த சம்பந்தமான பல அரிய உபந்நியாஸங்கள் செய்து வருகின்றனர். உபந்யாசஞ் செய்யுங்கால், எடுத்துக் கொண்ட விஷயத்துக்கு இயைபில்லாதவற்றிற் பிரவேசியாமல் மேற் கொண்ட விஷயத்தைத் தொகை வகை விரிகளால் விளக்கி நூற் பிரமாணங்களை இன்றி யமையாத விடங்களிற் காட்டி. விளக்கமான செஞ்சொற் சிறப்புடன் இறுதியிற் றொகையுரை யுரைத்து முடித்துக் காட்டுவதில் மிக்க திறமை வாய்ந்தவர்.

திருவாவடுதுறை யாதீனத்தில் இப்பொழுது மஹா ஸந்நிதானமாக எழுந்தருளி யிருப்பவர்களும், வரையாது கொடுக்கும் வள்ளன்மையும், கூர்ந்த அறிவும், தேவார முதலிய தமிழ் மறைகளில் நலனுகிய ஆராய்ச்சியும், உடையவர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள், இவ்வுரையாளராகிய பிள்ளையவர்களின்சைவ சித்தாந்த நூலாராய்ச்சியையும், உபந்யாஸ ஆற்றலையுங் கண்டு மகிழ்ந்து தம் ஆதீனத்துச் சைவப்பிரசாரகராக இருந்து பற்பல நகரங்களினும் சைவசித்தாந்த உபந்யாசங்கள் புரிந்து வரும்படிகட்டளையிட்டருளினர்கள். பிள்ளையவர்களும் அக்கட்டளையை மிக்க சிரத்தையுடன் ஏற்று நடாத்தி வருகின்றனர். இவர்களுக்கு மேன் மேலும் ஓங்கும் வண்ணம் சிவஞானச் செல்வத்தையும், இன்னோன்ன ஞானசாத்திர வாராய்ச்சியிலும், உரை யெழுதுவதிலும்,

முகவுரை.

உபந்யாசஞ் செய்வதிலும் மிகுந்த விருப்பத்தையும் முயற்சியையும், நீண்டவாணாளையும் பிறநலன்களையும் பரம கருணாநிலயமாகிய சிவபிரான் அருளிக் காப்பாராக.

இவ்வுரையை திராவிடமா பாடிய கர்த்தாகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் திருவடித்தாமரைமலர்கட்கு உரிமைப்படுத்திருப்பதால் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் மீதும் ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் மீதும் இப்பிள்ளையவர்கள் கொண்டுள்ளமெய்ப்பன்பு தெற்றென விளங்கும். இந்நூலாசிரியர் சரித்திரமும், அவதாரிகையின் அகராதியும், விசேடவுரையிற் கண்ட விஷய அகராதியும், செய்யுண் முதற் குறிப்பு அகராதியும் ஆகிய இவைகள் கற்பவர்க்குப் பெரிதும் உபகாரமா மென்பதிகாரமில்லை.

சிவதருமமும், சைவசித்தாந்தமும், தமிழ் மொழியும், நிலவாழ்க.

மகிபாலன் பட்டி.
5—7—14.

இங்ஙனம்,
மு. கதிரேசன்.

உரிமையுரை.

தென்மொழியும் வடமொழியுந் தேர்ந்துபசம் பொருள்சிவ மென்றுதேர்ச் சாருரு, நன்மையெனும் வீடருளுந் துணைசைசமச் சிவா யகுரு நற்றாள் பேணி, வன்மலவே ரைக்கெடுத்துச் சிவஞான பா டியஞ்செய் தருளுரும் வள்ளல், சின்மயமாந் சிவஞான முனிவரிரு திரு வடிகள் சிந்தை செய்வாம்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பலவற்றுள்ளும் பல அரிய விஷ யங்களைத் தன்னுட் கொண்டு விளங்குவது சிவஞான சித்தியாரென் னும் நூலேயாம். இதற்கு முதனூலாகிய சிவஞானபோதத்தில் குறிப்பால் உணர்த்திடந்த பல விஷயங்கள் இச்சிவஞான சித்தியா ரில் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலுக்கு ஆறு ஆசி ரியர்கள் உரையருளிச் செய்திருக்கின்றனர். அவ்வுரைகளுள் தரு க்க முறை இலக்கண முறைகளோடு சொல்நயம் பொருள் நயம் தோன்ற விளங்குவது ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் உரையே யாம். இவ்வுரை பொழிப்பாயிருந்தமையால் அதனை அநுசரித்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகாவர்கள் பதவுரை யருளிச் செய்தார்கள். திருவருட்டோன்றலாகிய இச்சிவஞான யோகிகள் திரு அவதாரஞ் செய்திலரேல் சித்தாந்த சைவச் செந்நெறி இதுவெனத்திகைப்பின் றித் துணிந்து கூற எவர்க்கும் இயலா தென்பது என் அபிப்பிரா யம். இவர்கள் பல அரிய பெரிய விஷயங்களை சிவஞானபோதமா பாடியத்தில் விரிவாக அருளிச் செய்திருக்கின்றமையால் சிவஞான சித்தியாருக்கு சுருக்கமான பொழிப்புரை அருளிச் செய்தார்கள் போலும். சித்தியாரில் சுருக்கமாகக் கூறியுள்ள பல விஷயங்கள்

உரிமையுரை.

பாஷியத்தில் தெளிவாகக் காணலாம். ஸ்ரீ சிவாக்கிரயோகிகளும் அநேக விஷயங்கள் சித்தியார் உரையில் அருளிச் செய்திருக்கின் றார்கள்.

ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் திருவடியைச் சிரமேற்கொண்டு அவ்வுரைகளையும் பிறநூல்களையும் என் சிற்றறிவிற் கெட்டியவாறு ஆய்ந்த பொழுது தோன்றிய கருத்துக்களைத் திரட்டிப் பலருக்கும் உபயோகமாகும் வண்ணம் இவ்வுரை எழுதி அச்சிற்பதிப்பித் தேன். இதில் தவறு காணப்படின் அது என் சிற்றறிவின்பால் நிகழ்ந்ததாகும். அதனைப் பொறுத்தருளும்படி பெரியோர்களைப் பிரார்த்திக்கின்றேன். நயம்காணப்படின் அது ஸ்ரீமாதவச்சிவஞானயோகிகள் திருவருட்பெருக்கால் விளங்கியதாகும். ஆதலால் இவ்வுரையை ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகள் திருவடித்தாமரைகட்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்

பொ. முத்தையா.

உ

சிவாயம்.

நூலாசிரியர் வரலாறு.

அருணந்தி சிவாசாரியர்.

பொன்னுடைதனினுஞ் சிறந்த தென்னுடைதனுள் நடுநாட்டில் திருத்துறையூர் என்னுந் திவ்ய தலத்தில் ஆதிசைவப் பிராமணர் குலத்தில் பூந் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மாமனாகிய ஸ்ரீ சடங் கவி சிவாசாரியருடைய இருபத்தொன்றாவது பரம்பரையில் சாலி வாகன சகாப்தம் ககனருஷ்-ல் அதாவது இற்றைக்கு ஈஈஉ வருடங் கட்குமுன் சிவாகமப்பொருள் இனிது விளங்குதற்பொருட்டு ஒரு வர் அவதாரஞ் செய்தார். இவர் ஆதிசைவ மரபிற்கேற்றவாறு வேதாகமங்களில் வல்ல பெரியோரால் சாதகர்ம்மம், நாமகரணம் முதலியன செய்யப்பெற்று காயத்திரி மந்திரமும் உபதேசிக்கப் பெற்றனர். பின்னர் பொதுநூலாகிய வேதத்தின் கர்மகாண்டம், பக்தி காண்டம், ஞானகாண்டங்களையும் வேதாங்கமாகிய கற்பம், சிகைஷ முதலியவற்றையுங் கற்று அதன்பின்னர் சிறப்புநூலாகிய காமிகம் முதலிய இருபத்தெட்டுச்சிவாகமங்களின் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதப்பொருள்களையும் நன்கு கற்றனர். அம்மட்டோ! தமிழினும் மிக வல்லுநராய்த் தமிழ்நூல் களுங்கற்றனர். இவ்வாறு சகல ஆகமங்களினும் வல்லுநராயிருக் குஞ் சிறப்புநோக்கி இவருக்கு சகலாகம பண்டிதரென்னுந் திருநா மம் பெரியோரால் இட்டு வழங்கப்பெற்றது.

இவ்வாறு சகல கலைகளினும் வல்லுநராய் விளங்கும் நாளில் பொய்ச்சமயமாகிய புறச்சமய இருள் நீங்கவும் மெய்ச்சமயமாகிய சைவசமய ஒளி மேலிடவுங்கருதி சகல ஆகமங்களையும் சகடத் தின்மேல் ஏற்றிக்கொண்டு சிதம்பரம், திருவண்ணாமலை, காசி, நேபாளம் முதலிய பல இடங்களினுஞ் சென்று தருக்கமுறையில்

நூலாசிரியர் வரலாறு.

எவருந் தன் கீழடங்க சைவஸ்தாபனஞ் செய்வாராயினர். • இசய் யுங்கால் தம்முடைய அநுபூதிதசத்தைக் கடைப்பிடித்து சைவ நெறியில் ஒழுக விருப்பமுடையராய் வரும் பக்குவருக்கு சிவாகம நிதிப்படி தீட்சைபுரிந்து அவருடைய மும்மல அழுக்கைப் போக் குவர்.

இவருடைய மாணாக்கர் பலருள் திருப்பெண்ணாகடத்தில் வசிக் கும் பரம்பரைச்சைவவேளாளருலதிலகராகிய அச்சுதகளப்பாளரும் ஒருவர். இவருக்குப்பிள்ளைப் பேறின்மையால் தம் ஆசிரியரையடை ந்து அக்குறையை விண்ணப்பஞ் செய்தனர். அதனைக் கேட்ட சகலாகம பண்டிதர் தமிழ்வேதமாகிய தேவாரத்திருமுறையைத் திவ்ய ஆகனத்தில் எழுந்தருளச்செய்து அச்சனை தீபதூப ஆரா தனைகள் சமர்ப்பித்து அத்திருமுறையில் கயிறுசாத்தும்படி கட் டளையிட்டனர். உத்தரவின்படி அச்சுதகளப்பாளர் திருமுறையை நமஸ்கரித்து கயிறு சாத்தினர். திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவெண்காட்டுப் பதிகத்துள்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையிலர் நோயினவை
வாயினவே வரிச்சிறுவ ரையுறவெண் டாவென்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னும் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாசுரத்தின் பொருளை சகலாகம பண்டிதர் உற்று நோக்கி மிக மகிழ்வெய்தி அச்சுதகளப்பாளரை திருவெண்காட்டில் வசிக்கும்படி உத்தரவு செய்தனர். அவர் அவ்வாறே வந்து அங்கே உள்ள சோமசூரிய அக்கினி தீர்த்தங்களில் முழுகி சுவேதவனப்பெருமாளை வணங்கி ஓர் பிள்ளையைப்பெற்றனர்.

அப்பிள்ளையார் இரண்டு வயதில் பரஞ்சோதி முனிவரால் சிவ ஞானபோதம் உபதேசிக்கபெற்று மெய்கண்டதேவர் என்னுந் திரு சாகாமத்தையும் ஆசாரியரால் பெற்று பலருக்கும் சிவஞான போத உபதேசஞ்செய்வாராயினர். செய்துவரும்நாளில் சகலாகம பண்டிதர் அவ்வரலாற்றைக் கேள்வியுற்று தம்முடைய மாணாக்க ராகிய இவர் நம்மை வந்து பார்க்கவில்லையென்றெண்ணி ஆயி

றும் நாம் அவரைப் பார்ப்போமென்று அவரிருக்குமிடஞ் செல்ல விரும்பி அக்கருத்தை திருவெண்ணெய்நல்லூர் வாசிகளாகிய தம் மாணாக்கர்கட்குத் தெரிவித்தனர்.

அதனைக்கேட்ட திருவெண்ணெய் நல்லூரார்தம் குலகுருவின் வரவுக்காக மிக மகிழ்வெய்தி நகரமெங்கும் அலங்கரித்தனர். ஆக மங்கள் ஏற்றிய சகடைகளுடனும் விருதுகளுடனும் சகலாகம பண்டிதர் திருவெண்ணெய்நல்லூரை நோக்கிச் சென்றனர். நகரை அடுத்தவரும்பொழுது அங்குள்ளா ரனைவரும் எதிர்வந்து வணங்கி சிவாகமப்பொருளை உபதேசிப்பதற்காக திரு அவதாரஞ் செய்த ருளிய எம் குருநாத! தேவரீரது நல்வரவால் நாங்கள் உய்ந்தோம் உய்ந்தோம் என்று பலவாறு துதித்து திருவெண்ணெய்நல்லூருக்கு அழைத்துச் சென்றனர். சென்றதும் வீதிவலம் வந்து திருக்கோயிலையடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருமடம்போய்ச்சேர்ந்தனர். சேர்ந்தபின்னர் மாணாக்கர்கள் அனைவரும் வணங்கி திருவழுது செய்வித்தனர். சிவபெருமான் றிருவடிக்கமலத்திற் பதிந்த சிந்தையை உடைய மெய்கண்டதேவர் தம்குலகுருவாகிய சகலாகம பண்டிதரைப் பார்க்கவில்லை.

சகலாகமபண்டிதர் மெய்கண்டதேவர் வராமையை உணர்ந்து நாமேபோய்ப் பார்ப்போமென்றெண்ணி அவரிருக்குமிடஞ் சென்று உலாவிக்கொண்டுநின்றார். நிற்குங்கால் மெய்கண்டதேவர் தம் மாணாக்கருக்கு சிவஞானபோதம் பாடஞ்சொல்லிக்கொண்டிருக்கின்றார். பாடத்தில் ஆணவுமலத்தின் தன்மையைப்பற்றி ஆராயத் தொடங்குஞ் சமயமாயிருந்தது. உலாவிக்கொண்டிருந்த சகலாகம பண்டிதர் மெய்கண்டதேவரை நோக்கி ஆணவமலத்தின் இலக்கணம் என்னவென்று வினவினர். மெய்கண்டதேவர் தம்முடைய சுட்டுவிரலால் சகலாகமபண்டிதரைச் சுட்டிக்காட்டினர். உடனே சகலாகமபண்டிதர் நானென்னுமுணர்ப் போடு வணங்காதிருக்கும் படிசெய்ததே ஆணவமலத்தின் இலக்கணமென உணர்ந்து மெய்கண்டதேவரை வணங்கினர். வணங்கவே தன் குருமரபிற்கு முதற்குருவாகிய நந்திதேவர் திருநாமக்கையே இச்சகலாகம பண்டிதருக்குச் சூட்ட வெண்ணி அருணந்தியென திருநாமஞ்சூட்டி

சிவஞானபோதத்தையும் உபதேசித்து மனவாசகங்கடந்தார் சிற்றம் பலநாடிகள் முதலான ஈற்பத்தொன்பது மாணாக்கருள் முதல் மாணாக்காக ஏற்றருளப்பெற்றனர்.

இவ்வாறு மெய்கண்ட தேவருடைய அருளுபதேசம் பெற்ற அருணந்தி சிவாசாரியர் திருப்பெண்ணாகடத்தில் வேதியர்குலத்தில் அவதரித்த மறைஞானசம்பந்த, சிவாசாரியாருக்கு சிவஞான போதப் பொருளை உபதேசித்து சிவஞானபோதத்திற்கு ஓர் விருத்தியுரையாக இனியதமிழ்ச் செய்யுளால் சிவஞான சித்தியாரென்னும் நூலும், பாசலட்சணங்களைப் பகுத்து விளவிடையாகஇருபா இருபஃது என்னும் நூலும் அருளிச் செய்தனர்.

இவ்வாறு உலகோபகாரமாக இருபெரும் நூல்களை அருளிச் செய்து நெடுங்காலம் சிவானந்த நிட்டையில் வீற்றிருந்து திருத்துறையூரென்னும் பதியில் புரட்டாசி மாதத்து பூரநட்சத்திரத்தில் சின்மயானந்த சிவசொரூபத்தில் இரண்டறக் கலந்தனர்.

நூலாசிரியர் வரலாறு முற்றுப்பெற்றது.

அவதாரிகையின் அகராதி.

அவதாரிகை. பக்கம்.

அகங்காரத்துவமும் அதன் இயல்பும் அது முத்திறப்படுமெனலும் ககஉ

அகப்பூசையே விசேடமெனல் ... ... உஎஎ

அகலியை முதலிய பிரமாணமெல்லாம் சாபமும் அநுக்கிரகமேயன்றி வினைப் பயன் அன்று என்பார்க்கு வினைப்பயன் தருதலும் இறைவன் சாப அருளேயாமெனல் ... ... கஎஉ

அசுத்தமாயாகாரியத்தைத் தொகுத்துக்கூறல் ... ... ‘சக

அஞ்ஞானமும் புத்திதத்துவமும் அவற்றின் இயல்பும் " ககக

அத்துவசுத்தியே சிறந்ததென்பதும் இவ்வத்துவசுத்தியால் ஆணவமகன்ம மாகிய எனைய மலங்களும் சுத்தியாமென்பதும் ‘உஉசு

அந்தக் காரணங்களைச்செலுத்தும் அக்காரங்களின் அதிதெய்வங்கள் இவை எனலும் பதினைந்தும் கூடியவிடத்து ஆன்மா அறிதலைச் செய்யு மெனலும் யோகப்பயிற்சியுடையார்க்கு இப்பதினைந்தின் உண்மை விளங்கு மெனலும் ... ... கநக

அந்தக் காரணங்களை உடனின்று செலுத்தும் அக்காங்கள் இவை எனலும் அவ்வக்காரங்களைச் சேர்த்து நோக்கிற் பிராணவமா மெனலும் இப்பிராணவத்தின் உண்மை நால்வகை வாக்குக்களை உற்று நோக்க வல்லார்க்கு விளங்குமெனலும் ... கநக

அந்தக் காரணங்கள் கருவி எனலும் ஆன்மா இவற்றின் வேறெனலும் ஆன்மாவை யறியும் ஞானம் பசுஞானமெனலும் சிவஞானம் அதனினும்வேறெனலும் ... ... கநஏ

அந்தக் கணமுதலிய பதினைந்தும் சுட்டியறிப்படுதலின் அவை ஆன்மா வின் வேறெனல் ... ... கநஉ

அந்தரியாக பூசைக்குவேண்டிய பூசாதிரவியங்கள் சேகரிக்குமுறையும் இப்பூசை அவசியம் வேண்டுமெனலும் உஎஅ

அரசன் செயலும் வேதாகமங்களின் வழியேயாதலின் அச்செயல் இறை வன் அருள்வழியே என்பதும் இறைவன்செயலைக்குறிப்பிப்பதென் பதும் ... ... கஉ

ஆனுடைய சத்தி ஒவ்வொன்றே பிரமனுதியோர்டத்து நிற்றலால் அ னே முதலெனலும் அவ்வானுக்குப் பிரமனுதியோர் இன்றியமை யாது வேண்டப்படுவரெனலும் ... ... கஉ

ஆசுத்துவமும் காலமுதலிய் ஐந்திலேதுங் கூடியபுருடதத்துவமும் கஎக
அருவமாகிய மாயையினின்று உருவந்தோன்றுதென்னும் மாயாவாதியை மறுத்தல். ... ... சஉ
அவ்வத் தெய்வமே பலன்கொடுக்கும் என்பாரை மறுத்தல் அக
அறமும் சிவபெருமானிடத்து அன்பில்லாது செய்யின் பாவமாமெனலும் பாவமும் சிவபெருமானிடத்து அன்போடுசெய்யின் அறமாமெனலும் கூஉ
அறியப்படும்பொருள் அழிதற்றன்மையுற்றி அசத்தெனல் ககூடு
அறியப்படும்பொருள் அனேகத்தும் வேறுகச் சுட்டியறியப்படுதலால் அசத் தெனல் ... ... ககூடு
அறியாத பொருள் வினைசெய்வாறால் அறியப்படாமையால் உண்டென் றல் பொருந்தாதெனல் ... ... ககூசு
அனுமானத்தின் அடங்கும் பிற அளவைகளின் இலக்கணம் கக
அனுமான அளவையை உபயோகிக்குமிடத்து உண்டாகுங் குற்றங்களின் பாகுபாடு உ0
ஆகமப்பிரமாணம் மூன்றின் இலக்கணம் உ0
ஆணவமலம் கன்மமலமென்னும் நோயைத்தீர்த்து சிவத்தை அடைவித் தற்கு தூலசூக்குமஉடம்புகளை மருந்தாக இறைவனுற்றாப்படுமெனல் கஎசு
ஆணவமலத்தின் இலக்கணம் ... ... கஙஉ
ஆணவமலம் அநாதியாதலால் பற்றறக் கழியாதென்பாரைமறுத்தல் உகூசு
ஆணவமலம் உயிர்க்குக்குணமென்பாரை மறுத்தல் கஙடு
ஆணவமலம் கெடுமென்பதற்கு உவமைகூறி ஏனைப் பெத்தரிடத்திருத்த லினால் நித்தத்திற் கிழுக்கில்லை எனல் உகூசு
ஆணவமலம் மாயாமலங்களின் வேற்றுமையை விளக்கி ஆணவமலத்தின் தன்மை உயிரின் உணர்வைத் தடுத்தலாமெனல் கஙச
ஆன்ம இலக்கணம் சித்தாந்தநெறிப்படி இதுவெனல் கசூங
ஆன்மா அசித்தென்பாரையும் சித்தசித்தென்பாரையும் சுத்தசித்தென்பா ரையும் மறுத்தல் ... ... [illegible]
ஆன்மா அந்தக் காணங்களைக்கூடி ஐந்தவத்தைப்படுமெனல் கசகூ
ஆன்மா அருவமென்பாரை மறுத்தல் ... ... கருசு
ஆன்மா அருவுருவமென்பாரை மறுத்தல் கருசு
ஆன்மா அறிவுடைப்பொருளாதலின் அதுவே தன்னைச் செலுத்திக்கொள் ளும் இறைவன் வேண்டாமென்பாரை மறுத்தல் கசஅசு
ஆன்மா ஆகாசம்போல் அருவமாமென்பாரை மறுத்தல் கருஅ
ஆன்மா உடம்பகத்து ஏகதேசமாய் நிற்குமென்பாரை மறுத்தல் கசுக
ஆன்மா உடம்பளவாக நிறைந்து நிற்குமென்பாரை மறுத்தல் கசுக
ஆன்மா உருவப்பொருளென்பாரை மறுத்தல்

ஆன்மா ஐந்தவத்தையிற் போக்குவரவு புரிதலே அரச வுவமையின்வைத்து விளக்கல் ... ... கஎக

ஆன்மா ஐந்துகோசங்களிற் கட்டுப்பட்டுப் போக்குவரவு செய்து நிற்கு மெனல் ... ... கசுசு

ஆன்மா ஐந்துகோசங்களினும் வேறென்பதை அநுபவத்தால் வலியுறுத் தல் ... ... கஎஉ

ஆன்மா சந்திரன்போல அநுவுருவமென்பாரை மறுத்தல் கருஎ

ஆன்மா தூலசரீர சூக்குமசரீரங்களைப் பொருந்தி ஐந்தவத்தைப்படுமுறை மை ... ... கசுருி

ஆன்மா தன்னைச்செலுத்தி உடனுய் நிற்கும் முதல்வனை யறியமாட்டா தெனல் ... ... கஅசு

ஆன்மாக்களைச் செலுத்துதல் கன்மமேயன்றி முதல்வன் அன்றென் பாரை மறுத்தல் ... ... கஅருி

ஆன்மா பஞ்சகோசங்களினும் நிற்கு முறைமை கசுஎ

ஆன்மா பஞ்சகோசங்களினும் வேறெனல் கசுசு

ஆன்மா பஞ்சகோசங்களின் வேறென்றல் கூடா தென்பாரை மறுத் தல் கஎ0

ஆன்மா பரசரீர மூன்றினையும் பொருந்து முறைமை. கசுச

ஆன்மா பரமாணு வென்பாரை மறுத்தல். கசு0

ஆன்மா பிரமமாகாதெனல். ... ... கருக

ஆன்மா முதல்வனின்வேருய் அநாதியே அணவமலத்தில் மறைந்துநிற்கு மெனல் ... ... கஎக

ஆன்மா முதல்வன்போல வியாபகப்பொருளென்பாரை மறுத்தல் கசுஉ

ஆன்மா விஞ்ஞானமயகோச ஆனந்தமயகோசங்களே என்பாரை மறுத் தல் கஎ0

ஆன்மாவின் அறிவு மாயாகாரியத்தால் ஏகதேசப்படுவதாயிற்றென்பாரை மறுத்தல். ... ... கசுஞ

ஆன்மாவின் முன் காணுந்தொழிற்படு மென்பதற்குக் கூறும் காந்த உவ மை பொருந்தாதெனல் ... ... கஅசு

ஆன்மாவிற்கு அறிவிச்சை செயல்களாகிய குணம் இன்றென்னும் ஆன்ம சந்நிதியில் காணுங்கட்டே உண்டெனவுங் கூறுவாரை மறுத்தல் கருச

ஆன்மாவிற்கு தத்துவங்களே அறிதலே உண்டுபண்ணும் இறைவன் வே ண்டாமென்பாரை மறுத்தல் கஅள

இச்சாஞானக்கிரியா சத்திகள் சிவனுக்கும் உண்மையால் சிவன் சிவனே ஒப்பாகாதெனல் ... ... கூ

இதம் அகிதங்களை இறைவன் பொருந்தி அறிதற்கு எது கருணையே யெனல் ... . அஉ

இந்திரியக்காட்சி மானதக்காட்சிகளினிலக்கணம் ஙஞ

இருமலம் மாயாகாரியமும் திரோதாயி சத்தியும் எனலும் ஐந்து மலமும் உயிர்க்குப்பந்தஞ் செய்யுமெனலும் கஙஎ

இருவகை அனுமானங்களின் இலக்கணம் ஙன

இருவினையாவது முயற்சியென்பதும் அதுவே காமிய மலமென்பதும் அதற்கு மூலம் உண்டென்பதும் கூஅ

இலயபோக அதிகார அவத்தைகட்கு எதுவாய் நின்ற ஆதாரங்கள் சிவ தத்துவங்களெனலும் அவற்றின் இயல்பும் ஈஎ

இறைபணி நிற்றல் இவ்வாறெனலும் அவர் செயலை இறைவன் தன்செய லென என்று கொள்வனெனலும் அதுபற்றி நடுவு நிலைமைக்குக் குறையாகா தெனலும் ... ... உஅங்

இறைபணியில் நில்லாதார் செய்யுங் கிரியாயோகங்களால் பிறப்பு அறு தினல் ... ... உஎ

இறைபணியில் நின்றலன்றி இந்திரியங்களின் வழிப்பட்டுச் செல்லும் பாதந்திரம் நீங்குதலில்லையெனல் .. உஅ

இறைபணியில் நின்றோர் இந்திரியங்களோடு கூடினும் பற்றற்றிருப்ப ரென்பதை உவமை முகத்தால் விளக்கல் உஅஅ

இறைவனை கூட்டப்படும் வினைப்பயனை அக்கட்டளைகளை மீறினால் அறமாயும் தீயனவாயின் பாவமாயும் இருந்திறப்படுமெனல் அள

இறைவனைற் செய்யப்படும் அநுக்கிரகம் நிக்கிரகமாகிய இரண்டும்கருணை யேயெனல் ... ... அ.

இறைவனற்றலால் ஒரு சூக்கும உடம்பே பலதூல உடலாப் மாறுதலி னல் சற்காரியவாதத்திற் கிழுக்கில்லை யென உவமை முகத்தால் விளக்கல் ... ... ஈக

இறைவனுக்கு அத்துவாக்களும் வடிவமென்று உபசரித்துரைக்கப்படு மெனல் ... ... சுக

இறைவனுக்கு அத்துவாக்களுள்ளும் மந்திரவடிவம் சிறந்தென்பதற்கு எதிர்க்கூறல் ... ... சுக

இறையனுக்கு அருவங்கொள்ளுதலும் அருவுருவம் கொள்ளுதலும் பொருந்தாதெனல் ... ... (illegible)

இறைவனுக்கு அருவத்திருமேனியும் அருவுருவத்திருமேனியும் உண்டி, அவைபுங் கருணையே யெனல் ... ... (illegible)

இறைவனுக்கு உருவங்கொள்ளுதலால் மாறுதலையடைந்து அழிவெய்து தலாகிய குற்றம் இன்றெனல் ... ... (illegible)

அவதாரிகையின் அகராதி.

இறைவனுக்கு உருவங்கொள்ளுதல் பொருந்தாது, அருவங்கொள்ளுதலே பொருந்துமெனல் ... ... நச

இறைவனுக்கு உருவத்திருமேனியுண்டு, அதுகொண்டு நம்மிலொருவனதலில்லை யெனல் ... ... நம

இறைவனுக்கு ஐந்தொழிலால் யாதொரு பயனுமின்றெனினும் அருட்பெருக்கால் அவ்வாறு செய்தல் இயல்பேயா மெனலும் ககூஉ

இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டேல் நம்மில் ஒருவனுமேயென விளைதல். ... ... சகூ

இறைவனுக்குத் தனுவுண்டாகவே வாக்கு மனாதீத னென்றல் பொருந்தாதென்பதை மறுத்து பொருந்து மெனல் நருஇ

இறைவனுக்கு மந்திர வடிவுள்ளும் பஞ்சப்பிரம மந்திர வடிவம் சிறந்ததெனல் ... ... சுஉ

இறைவன் அதிகாரூபமாய் ஐந்தொழிற்குப் பயன் உயிர்போக மோட்சங்களை அடைதலா மெனல் ... ... ககூக

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் சிந்தித்து அன்புசெய்தலினால் மலம் நீங்கிச்சிவானுபவம் உண்டாமெனல் உகூக

இறைவன் உபகாரத்தைப்பக்குவரேயன்றி அபக்குவர் அறியாரெனல் நஂOO

இறைவன் உருவங் கொள்ளுதலாற் போந்த பயன் ... நசூ

இறைவன் உருவத்திருமேனி கொள்ளாமலே இத்தொழிலனைத்துஞ் செய்யக் கூடாதோ வென்னும் ஐயத்தை நீக்கி உருவத்திருமேனி இன்றியமையாது வேண்டப்படுமெனல் ... நகூ

இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று கன்மத்துக் கேற்ப மாயையினின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பனெனல் எஉ

இறைவன் உயிர்களோடு கலந்து உடனாய் நிற்பினும் வேறுவனென உவமை முகத்தாற் கூறல் ... ... எசூ

இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த அருளினால் தான் நினைந்த வடிவங் கொள்ளுதலால் கன்மத்தால் வடிவங் கொண்டவர்க்குப் போல குற்றமின்றெனல் ... ... நஎ

இறைவன் உயிர்க்கு அறிவித்தலால் உயிர் போலும் பந்தம் அடையா னெனல் ... ... கஅகூ

இறைவன் உயிர்க்கு அறிவித்தலால் விகார மெய்தா னெனல் ககூO

இறைவன் கலந்து நிற்றல் தனது சத்தியால் வினையின் பயனாகிய இன்பதுன்பங்களை உயிர்க்கு ஊட்டுதற் பொருட்டெனல் எநி

இறைவன் குருவாகி வந்து உணர்த்துவ னெனல் உகO

இறைவன் கொள்ளும் உருவத்திருமேனியின் பேதங்களும் அவற்றின் தொழில்களும் இவை யெனல் ... நகூ

இறைவன் தடத்த இலக்கணமாய் நிற்பினும் அதனைப் பொருந்தாது சொரூபஇலக்கணமாய்நிற்பனெனஅவ்விலக்கணத்தைத்தொகுத்துக் கூறல் ... ... எக

இறைவன் உருவத்திருமேனிகளின் தொழில்களின் பயன் இவையெனல் நுஎ

இறைவன்திருமேனிகளும் அவற்றின் றொழில்களுஞ் உயிர்களின் பொருட்டேயென்பதை அநுபவத்தில் வைத்துக்காட்டல் நுஅ

இறைவன் திருமேனி கொள்ளுதல் உயிரின் பொருட்டாதலால் அசிந்திதனே யெனல் ... ... நுஎ

இறைவன் தொழிலுக்கு வேடம் உறுதியாய் வேண்டப்படு மெனல் நுக

இறைவன் தொழில் மறம், வீண், தன் நயம் என்னுங் குற்றங்களுட்படாது அருளே யெனல் ... ... சஎ

இறைவன் பிறர் அறிவிக்க வேண்டாது தானே தூலஞ் சூக்குமம் அசூக்குமமென்னும் இத்தொழிலைச் செய்வனெனல் கஎ

இன்ப துன்பங்கட்குக் காரணம் முயற்சியே யென்பாரை மறுத்தல் ஙஎ

இன்ப துன்பங்கள் இயல்பே யன்றி வினையின் பயன் அன்றெனக் கூறும் உலோகாயதரை மறுத்தல் ... ஙசு

ஈசுவர அவிகாரவாதி பரிணமவாதி அயிக்க வாதிகள் கூறும் முத்திகளை மறுத்தல் ஆ0க

ஈசுவர அவிகாரவாதி முதலியோர் கூறுமை ஆசங்கைகளை மறுத்து சித்தாந்தத்தை வலியுறுத்தல் ... ... ஆ(ச

உடம்பாட்டுச் சொல் எதிர்மறைச் சொற்களினிலக்கணம் கசு

உடல் இடம் குறி உணர்வு மாறினும் உயிர் ஒன்றேயென உவமை முகத்தால் விளக்கல் ... ... கள

உண்மைச் சமயமும் அதன் இலக்கணமும் உண்மை நூலும் இவையெனல் ... ..

உத்தமஜாதியிற்பிறக்கினும் வாழ்வினுடைய செருக்கும்வறுமையாலாகிய சிறுமையும்நீங்கிசைவசமயத்தைச்சார்ம்மிகஅரிதெனலும். அதனினும் சித்தாந்த நெறியினுல் சிவனை வழிபடுவாரே வீடுபெறுவரெனலும் கசஎ

உத்தம நாட்டில் உத்தம ஜாதியில் மானுடராய்ப் பிறத்தல் வேண்டப்படு மெனலும், வேண்டப்படுதற்குக் காரணம் உணர்ச்சிவிசேடமெனலும் கசo

உயிர் இறைவனை விட்டு பெத்த முத்தி இரண்டினும் தனித்து நிற்றல் இல்லை எனல் ... ... உகஅ

உயிர் உடம்பு அன்றென்பதை பிணமாய்க் கிடத்தலினும் உறக்கத்தினும் உணரப்படாமையின் வைத்து விளக்கல் ஙச

உயிர் ஐந்து மலங்களினுல் பிறந்திறந்து உழலு மெனல் கஙஅ

உயிர்ஐம்பொறிகளன்றென்பதை ஒவ்வொன்றையேயறிதலினும்ஒன்றையொன்று அறியாமையினும் தானேயறியாமையினும் வைத்துவிளக்கல். கசசு

இறைவனுக்கு உருவங்கொள்ளுதல் பொருந்தாது, அருவங்கொள்ளுதலே பொருந்துமெனல் ... ... நச

இறைவனுக்கு உருவத்திருமேனியுண்டு, அதுகொண்டு நம்மிலொருவனுதலில்லையெனல் ... ... நப

இறைவனுக்கு ஐந்தொழிலால் யாதொரு பயனுமின்றெனலும் அருட்பெருக்கால் அவ்வாறு செய்தல் இயல்பேயா மெனலும் ககூ

இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டேல் நம்மில் ஒருவனுமேயெனவிளைதல். ... ... சகூ

இறைவனுக்குத் தனுவுண்டாகவே வாக்கு மனாதீத னென்றல் பொருந்தாதென்பதை மறுத்து பொருந்து மெனல்

இறைவனுக்கு மந்திர வடிவுள்ளும் பஞ்சப்பிரம மந்திர வடிவம் சிறந்ததெனல் ... ...

இறைவன் அதிகூக்கும ஐந்தொழிற்குப் பயன் உயிர்போக மோட்சங்களை அடைதலா மெனல் ... ... ககூக

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் சிந்தித்து அன்புசெய்தலிலுல் மலம் நீங்கிச்சிவானுபவம் உண்டாமெனல் உகூக

இறைவன் உபகாரத்தைப்பக்குவமேயன்றி அபக்குவர் அறியாரெனல் நOO

இறைவன் உருவங் கொளலுதலாற் போந்த பயன் ... நச

இறைவன் உருவத்திருமேனி கொள்ளாமலே இத்தொழிலனைத்துஞ் செய்யக் கூடாதோ வென்னும் ஐயத்தை நீக்கி உருவத்திருமேனி இன்றியமையாது வேண்டப்படுமெனல் ... நக

இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று கன்மத்துக் கேற்ப மாயையினின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பனெனல் எஉ

இறைவன் உயிர்களோடு கலந்து உடனாய் நிற்பினும் வேறுவனென உவமை முகத்தாற் கூறல் ... ... எச

இறைவன் உயிர்கள் மாட்டு வைத்த அருளினால் தான் நினைந்த வடிவங் கொள்ளுதலால் கன்மத்தால் வடிவங் கொண்டவர்க்குப் போல குற்றமின்றெனல் ... ... நஉ

இறைவன் உயிர்க்கு அறிவித்தலால் உயிர் போலும் பந்தம் அடையா னெனல் ... ... கஅக

இறைவன் உயிர்க்கு அறிவித்தலால் விகார மெய்தா னெனல் ககO

இறைவன் கலந்து நிற்றல் தனது சத்தியால் வினையின் பயனுகிய இன்பதுன்பங்களை உயிர்க்கு ஊட்டுதற் பொருட்டெனல் எந

இறைவன் குருவாகி வந்து உணர்த்துவ னெனல் உகO

இறைவன் கொள்ளும் உருவத்திருமேனியின் பேதங்களும் அவற்றின் தொழில்களும் இவை யெனல் ... நசு

இறைவன் தடத்த இலக்கணமாய் நிற்பினும் அதனைப் பொருந்தாது சொருப இலக்கணமாய்நிற்பனென அவ்விலக்கணத்தைத்தொகுத்துக் கூறல் ... ... எக

இறைவன் உருவத்திருமேனிகளின் தொழில்களின் பயன் இவையெனல் நுஎ

இறைவன்திருமேனிகளும் அவற்றின் தொழில்களும் உயிர்களின் பொருட்டேயென்பதை அநுபவத்தில் வைத்துக்காட்டல் நுஅ

இறைவன் திருமேனி கொள்ளுதல் உயிரின் பொருட்டாதலால் அசிந்தித மே யெனல் ... ... நுஎ

இறைவன் தொழிலுக்கு வேடம் உறுதியாய் வேண்டப்படு மெனல் நுக

இறைவன் தொழில் மறம், வீண், தன் கயம் என்னுங் குற்றங்களுட்ப டாது அருளே யெனல் ... ... சஎ

இறைவன் பிறர் அறிவிக்க வேண்டாது தானே தூலஞ் சூக்குமம் அசூ சூக்குமமென்னும் ஈர்தொழிலைச் செய்வனெனல் கஅஎ

இன்ப துன்பங்கட்குக் காரணம் முயற்சியே யென்பாரை மறுத்தல் வஎ

இன்ப துன்பங்கள் இயல்பே யன்றி வினையின் பயன் அன்றெனக் கூறும் உலோகாயதரை மறுத்தல் ... ஏசு

ஈசுவர அவிகாரவாதி பரிணமவாதி அயிக்க வாதிகள் கூறும் முத்திகளை மறுத்தல் ... ... டுஎ

ஈசுவரா அவிகாரவாதி முதலியோர் கூறுமு ஆசங்கைகளை மறுத்து சித்தாந் தத்தை வலியுறுத்தல் ... ... நுஅ

உடம்பாட்டுச் சொல் எதிர்மறைச் சொற்களினிலக்கணம் கக

உடல் இடம் குறி உணர்வு மாறினும் உயிர் ஒன்றேயென உவமை முகத் தால் விளக்கல் ... ... கஎ

உண்மைச் சமயமும் அதன் இலக்கணமும் உண்மை நூலும் இவை யெனல் ... ..

உத்தமஜாதியிற்பிறக்கினும் வாழ்வினையிய செநக்கும்வறுமையாலாகிய சிறுமையும்நீங்கிசைவசமயத்தைச்சார்மிகஅரிதெனலும், அதனினும் சித்தாந்த நெறியினில் சிவனை வழிபடுவோரோ வீடுபெறுவரெனலும் கசஎ

உத்தம நாட்டில் உத்தம ஜாதியில் மானுடராய்ப் பிறத்தல் வேண்டப்படு மெனலும், வேண்டப்படுதற்குக் காரணம் உணர்ச்சிவிசேடமெனலும் கசஎ

உயிர் இறைவனை விட்டு பெத்த முத்தி இரண்டினும் தனித்து நிற்றல் இல்லை எனல் ... ... உகஅ

உயிர் உடம்பு அன்றென்பதை பிணமாய்க் கிடத்தலினும் உறக்கத்தினும் உணரப்படாமையின் வைத்து விளக்கல் ... ...

உயிர் ஐந்து மலங்களினால் பிறந்திறந்து உழலு மெனல் கஉஅ

உயிர்ஐம்பொறிகளன்றென்பதை ஒவ்வொன்றையேனுமறிதலினும்ஒன்றை யொன்று அறியாமையினும் தானேயறியாமையினும் வைத்துவினக்கல். கசஉ

உயிர்/கட்கு வினைப்பயன்களைத் தருதலே யன்றி பாவ புண்ணியங்களை பகுத்தறிவதற்கு வேதாகமங்களையும் நரக சுவர்க்கங்களையும் சில பெருமானே தந்தருளுவனென ... கூஉ

உயிர் சூனியம் தூலவுடம்பு ஐம்பொறிகூக்குமவுடம்பு பிராணவாயுபிரமம் சமுதாயம் என்னும் ஏழும் அல்ல, இவற்றின் வேறாய்க் காணப்படும் உடலின் கண் உண்டெனல் ... கசச

உயிர் பிராணவாயு அன்றென்பதை அபபிராணவாயு நிற்கும் போதும் கருவிகள் நில்லாமையில் வைத்து விளக்கல் கசள

உயிர் பூமி நரக சுவர்க்கங்களில் போகம் அனுபவித்தற்குரிய சரீர இயல்பு கூறல் ... ... கஞ

உலகந் தோன்றி நின்றொடுங்குதலின் ஒருகருத்தாவை யுடைய தெனல் .. .. உஉ

உலகாயதர் மதம் பற்றி வந்து நின்று போவதை வலியுறுத்துதல் உங

எல்லாப்பிரமாணங்களும் மூன்றி லடங்கு மெனல் ... கூ

என்னுடைய ஆன்மா என்பதற்குப் பொருள் கூறல் களக

எகனுய் நிற்றல் இறைபணி நிற்ற லென்னும் இருதிறத்தானும் மும்ம 'லங்களும் நீங்குமெனல் ... ... உஅக

எகனுய் நின்றுலன்றி யான் எனது என்னும் செருக்கறுத்தல் இல்லை எனல் ... ... உஅங

ஏது மூன்றின் பெயரும் இலக்கணமும் ... கஅ

ஐந்தவத்தைகளும் சகலத்தில் கீழாலவத்தை மேலாலவத்தை என இருதி றப்படு மெனல் ... ... களசு

ஐந்தவத்தையினும் சிவதத்துவம் ஐந்தும் நின்று செலுத்துமுறைமை களஅ

ஐந்தவத்தையுள் ஒவ்வொரு அவத்தைக்குரிய தத்துவங்களுந் தானங்க ளும் இவை எனல் ... ... களஞ

ஐந்து சோசங்களை ஆன்மாவென வேதத்துட் கூறியதும் ஆத பெயரால் எனல் ... ... களஉ

ஒரு உடலை விட்டவுடன் பிறிதோர் உடலை எடுக்கினு மெடுக்கும் எடுக் காது கற்போற் கிடக்கினுங் கிடக்கு மெனல் ... கூசு

ஒரு சூக்கும உடலினின்று பல தூல உடம்பு தோன்றி அழிதற்கு உவமை ... ... கஎச

ஒருவனை வழிபட மற்றொருவர் பலன் தருதல் கூடுமென்பதை உவமை முகத்தால் விளக்கல் ... ... அகூ

ஒன்றைப்பற்றி அதுவாய் நிற்கு மூயிர் முன்பற்றியதை விட்டு பிறிதொ ன்றை இறைவனுணையாற் பற்றி அதுவாய் நிற்கு மெனல் கஎஉ

ஓருடம்பு கெடாத பிற்தோரூட்டம்பாய் மாறும் மயிர்க்குட்டி முதலிய உவமை கெட்டுத் தோன்று மென்பதனேடு பொருந்தா தென்பார்க்கு அகலியையுதலிய உவமைகூறி உடல்மாறுமென்பதை வலியுறுத்தல் கo க

கடவுளின் தடைத்த வடிவம் அருவம், அருவுருவம், உருவமெனல் சகூ

காணங்கடத்தற் கு உபாயம் இதுவெனல் ... உசூக

கன்மமே யன்றி இறைவனில்லை என்னும் மீ மாம்சகர் மதம்பற்றி இதம் அகிதம் என்னும் முயற்சி இறைவுணல் என்றுகொள்ளப்பட்டு இன்ப துன்பப்பலனே இறைவன் தருவனெனல் ... அக

கன்ம இந்திரியங்கள் இவை என்பதும் அவற்றின் தொழில்கள் இவை என்பதும் காட்டல் ... ... ககசு

காரண அவத்தை கேவல சகல சுத்த மென மூன்று உண்டெனலும் அவற்றின் பொது இயல்பு இவை யெனலும் ... கஎக

கால் தத்துவமும் அதன் இயல்பும் ... கஎஅ

கெட்ட இடத்தில் பயன் தருந்தழை முதலியன பிறிதோரிடத்தில் பலன் தரும் வினைக்கு உவமையாகாதெனலும், அக்கினியில்காய்ச்சியதிரும் பில் சுவறிக்கெட்டநீர் பிறிதோரிடத்தில் பலன்தராததுபோல்கெட்ட வினை பிறிதோரிடத்தில் பலன் தராதெனலும் ... அஞ

கேட்டலாகிய ஞானத்தின் முறையும், அதன்கண் நிகழும் அனுபவமும் உருக கேவலத்தின் சிறப்பியல்பு இதுவெனல் ... கஅக

சகலத்தில்மந்தியாலவத்தை ஐந்துண்டெனலும், சுத்தத்திலும்ஐந்தவத்தை உண்டெனலும் ... ... களஎ

சகலத்திற் சிறப்பியல்பு இதுவெனல் ... கஅஉ

சத்தியிற் காணப்படுதல் தனக்காமாறு உவமை முகத்தாற் கூறல் எo

சத்தியும் சிவமுமாகிய தான் முதலென்றதனை பிரத்தியட்சமாகிய அனுபவத்தில்வைத்து விளக்கி முதல்வனுக்குரிய பொது விலக்கணத்தைத் தொகுத்துக்கூறல் ... ... எo

சரீர தீட்சைக்கு அதிகாரி இவனெனலும், அத்தீட்சையின் இலக்கணம் இதுவெனலும், அதுசாதிகாரதீட்சையென்று சொல்லப்பட்டசமயமுதலிய நான்காய் விளங்குமெனலும், இத்தீட்சையுடையார்சாதகர் ஆசாரியரென இருதிறப்படுவரெனலும், இத்தீட்சையும் உலகதருமிணி சிவதருமிணியென ஆச்சிரமபேதம்பற்றி இருதிறப்படுமெனலும் உஉc

சப்தாதி தன்மாத்திரை ஐந்தும் அவற்றினியல்பும் இத்தன்மாத்திரையைந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆக எட்டும் புரி அட்டக சரீரமெனலும் ... ... ககரு

சன்மார்க்கமாகிய ஞானத்தின் இலக்கணமும் அதன் பயனும் உசுரு

சாதார் தீட்சை நோக்க முதலாக பலவிதப்படு மெனலும், அவற்றுள் அவுத் திரி சிறந்ததெனலும், அது ஞானவதி கிரியாவதியென இருவகைப் படு மெனலும், அவ்விரண்டுந் தனித்தனி நிர்ப்பீசம் சபீச மென நாலுவகைப்படு மெனலும் ... ... உகசு

சாந்தியாதீத கலையில் அடங்கும் அத்து வாக்களின் தொகை ... உஉஎ

சித்தாந்த நெறியில் நிற்பவர்க்கு சிவபெருமான் அந்தச் சென்மத்திலேயே முத்தி தந்தருளுவ னெனல் ... ... உகள

சிந்தித்தலாகிய ஞானத்தின் முறையும் அதன்கணிகழும் அனுபவமும் உருக

சிருட்டியாதி பல சத்திகள் உளவெனவே அச்சத்திகளை யுடைய சத்தன் பலவா மெனப்பட்டு அநேகேசுவர வாதமாகாதா என்பாரை மறுத்து அரன் ஒருவனே யெனல் ... ... சுச

சிருட்டி முதலிய ஐந்து தொழில்களும் அருளே யெனல் ஊஅ

சிவஞானமாய் நின்ற விடத்துச் சிவனைக் காணக்கூடுமென்றிக் காணக்கட ந்த விடத்துச் சிவனைக் காண்ப னென்பது பொருந்தா தென்பாரை மறுத்தல் ... ... உருக

சிவ சத்தி ஒன்றே சிறப்பு வகையாய்த் தொழிற் படுதலா லுண்டாம் பயன் ... ... சுருி

சிவ சத்தியின் சொரூபங் கூறல் ... ... சுச

சிவசமாதல் ஆன்மாவுக்கில்லை என்பது ... ... நஅந

சிவ சடவாதி கூறும் முத்தியை மறுத்தல் ... ... நடஉ

சிவத்தைப் பொருந்தினவர் பழைய வாசனையால் காணங்களைக் கூடநேரில் உபாயத்தினல் வாசனையை நீக்க வேண்டு மெனல் ... உசுஉ

சிவத்தைப் பொருந்தினவன் காணங்களில் மீளவரினும் இழுக்கில்லை என் பாரை மறுத்தல் ... ... உசுக

சிவபிரானிடத்தில் முற்றுணர்வு முதலிய குணங்கள் உளவென்பதற்கு ஏதுக்கள் இவை யெனல் .. .. உஙஅ

சிவபெருமானை வழிபடுதற்குரிய இடங்கள் இவை யெனல் கூக

சிவபேத மேழற்கும் பாசசத்தியாகிய ஒருத்தியே சத்திபேத மேழாய் நிற்ப ளெனல் ... ... கஉள

சிவமும் சத்தியு மெனப்பிரித் தெண்ணப்படினும் அவ்விரண்டும் பிரிப்பி ன்றி நாயகன் நாயகி பாவமாய் நிற்கு மெனல் ... கஉஅ

சிவமும் சத்தியும் நாயகன் நாயகி பாவமாய் நிற்பினும் சிவன் பிரமசாரி யும் சத்தி கன்னிகையுமா மெனல் ... ... கஉக

சிவம் அறியப்படும் பொருளாகவும் அறியப்படாத பொருளாகவு மின்றிச் சித்துச் சத்தாய் நிற்கு மெனல் ... ... ககூக

சிவாநுபமுடைய முத்தருக்குச் சிவமே யன்றி பிற பொருள் தோன்று
தனல் ... ... உகஉ
சிவாநுபமுடையார்க்கு ஆணவ மலம் பற்றறக் கழியுமெனல் உகச
சிவாலயத்தைச் சிவனெனக்கண்டு வழிபடுமுறை... ... நுகo
சிவோகம் பாவனை நிலைப்பதற்கு பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க
வேண்டு மெனல் ... ... உளஉ
சிறப்பியல்பு பொதுவியல்பின் இலக்கணம் ... ... கச
சீவன் முத்தர் இயல்பு இவ்வாறெனல் ... ... நுoசு
சீவன் முத்தன் சிவனடியாரிடத்து அன்புடையனாகவும் ஏனைய அறிவில்
லாரிடத்து வெறுப்புடையனாகவும் இருக்க வேண்டு மெனல் நுoள
சுத்தசிவனே சுத்த மாயா தத்துவங்களில் ஒன்பது பேதமாய் நின்று தொ
ழிற் செய்வனெனல் ... ... கஉச
சுத்தத்தின் சிறப்பியல்பு இதுவெனல் ... ... கஅஉ
சுத்தமாயா தூரியமே மந்திரேசுவர் முதலிய அபரமுத்தர்களின் தனுகர
ணாதிக ளெனல் ... ... சo
சூக்கும உடம்புக்கு மூலம் அசுத்தமாயை யென்றும் தூல சூக்கும உடல்
கள் சிவத்தைச் சார்தற் பொருட்டு அஞ்ஞான காலத்தில் உளவாமென்
றுங் கூறல் ... ... கoரு
சூக்கும சித்தாவதற்கும் தூல சித்தாவதற்கும் காரணம் இவை யெனல் உoஅ
சூக்கும வாக்கின் இலக்கணம் ... ... நுஅ
செயல் யாவும் செய்யப்படுகின்ற பொருளிற் கிடந்து பலன்றரு மென்பா
ரையும் . றுத்து வினைப்பலன் றருதற்கு இறைவன் வேண்டு மென
வும் . ருதல் அவன் கடமை யெனவும் கூறல் ... ... அசு
செய்தவர் மனத்தில் வினை கிடந்து வேறிடத்திற் பலன்றருதலால் இட
வேற்றுமை கொண்டு தழை உவமை பொருந்தா தென்றல் கூடா
தென்பாரை மறுத்தல் ... ... அரு
சைவநெறி சரியை முதல் நான்கு வகைப்படு மெனலும், அவற்றின்பயன்
பதமுத்தி பாமுத்தி எனஇருதிறப்படு மெனலும் ... உநஅ
சொரூபசிவம் சுத்த தத்துவங்களைப்பற்றிய வியாபார பேதத்தால் இலய
போக அதிகார மென்னும் அவத்தை எய்தினும் அவை சத்தியிற்
காணப்படலால் விகாரி ஆகா வெனல் ... ... சுக
ஞான குருவின் அருளாலன்றி சிவபிரான் திருவடியை அடைதல் கூடா
தெனல் ... ... நுகஉ
ஞானகுருவை வழிபட்டவர்க்கு உண்டாம் பயன் இதுவெனல் .. நுகஉ
ஞான நிட்டையில் நிலை பெறுதார் அந்நிட்டையில் நிலைத்தற்குச் செய்யும்
உபாயம் ... ... உருஅ

அவதாரிகையின் அகராதி.

ஞான நிட்டையில் முயல்பவரின் பெருமை ... ... உருஅ

ஞான நிட்டையுடையோர் எத்தொழிலைச் செய்யினும் இறைவன் திரு
வடியை விட்டுப் பிரியாரெனல் ... ... உருக

ஞானிக்கு நால்வகை வழிபாடும் கூடுமெனலும் எனையோர்க்கு தன்னிலை
மைக்கு மேம்பட்ட வழிபாடு கூடாதெனலும் ஞானியே யாவர்க்கும்
குருவாவரெனலும் சிவாலயமும் சிவனடியாரும் அக்குருவின் வேற
ன்மையும் ... ... உருக

ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் புறக்கருவியும் மனமுதலிய நான்கும்
அகப்புறக்கருவியும் கலைமுதலியன அகக்கருவியுமாம் முறைமை உருஇ

ஞானேந்திரியங்க ளிவையென்பதும் அவற்றின் விடய வகளிவை யன்
பதும் உருச

ஞானம் நான்குவகைப்படுமெனலும் ஞானத்தி ற் வராமல் ஓதல் முதலிய
வற்றினின்று சரீரம் நீங்கினவர் கதி இதுவெனலும் உருள

ஞானயாகமே முத்தியைத்தருமெனலும் ன்மமுதலிய நான்கு யாகங்க
ளும் போகத்தைத்தருமெனலும் ... . உருசு

சடாத்தசிவம் மூன்றாயினும் சொரூபசிவம் என்ற அதுவே சதாசிவ
மாயும் சடாத்தசிவத்தின் அவத்தைக்கேதுவான ஆதாரமாயும் நிற்கு
மெனல் ... ... சுசு

தண்டித்தலுங் கருணையே என்பதை உபமை முகத்தாற் கூறல் அடு

தத்துவங்கள் உயிரைப் பொருந்துவதற்குக் காரணம் உயிர்கட்டு கன்ம
மலம் ஆணவமலங்களைப் போக்குதற் பொருட்டெனல் சுக

தத்துவங்கள் ஒடுங்குமுறை இவ்வாறெனலும் ஒடுங்கு கடவுளர் இவ
ரெனலும் ... ... சுஎ

தத்துவம் தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என மூன்றிறப்பதெனலும் தத்
துவங்களைப் பொருந்திய அணுபக்கசம்புபக்கத்தி அதிதெய்வங்கள் அ
வ்வத்தத்துவப்பெயர்களைப் பெறுமெனலும் யாவையும் தத்துவத்தில்
வைத்துக் காணவேண்டுமெனலும் ... ... சுடஉ

தத்துவம் முப்பத்தாறும சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தமென மூவகையாக
வும் பிரளயகாண்டம் போககாண்டம் போக்கியகாண்டம் என
மூன்று காண்டமாகவும் இருக்குமெனல் ... ... சுஉக

தத்துவம் முப்பத்தாறும் மூவகை இயல்பையுடையன வெனல் சுஉ

தத்துவாதீதனாகிய பரசிவனே அறிபவன் தத்துவஞானியெனல் சுஉ

தருங்கால் தருபவன் இலயபோக அதிகாரத்திட்பட்டு துடக்குற்றும் துடக்
குறுவானல்லனெனல் ... ... சுக

தருபவன் எதில்நின்று தருவனென வினவுதல் .. சுஉ

தருபவன் ஒருவன் வேண்டுமெனல் (உலகாயதர்மதம்பற்றி) ... உச, உடு

தருபவன் ஒருவன் வேண்டுமென்னல் (மீமாம்சகர் மதம்பற்றி) கூந-நச
சருபவன் தருமுறைமையைத் தொகுத்துக்கூறுதல் ... கூஙி
தருபவன் நிராதாரமாய் நின்று தருவனென்னல் ... சுந
ஞன் வேதனைக்காட்சி யோகக்காட்சிகளின் இலக்கணம் கசு
தாசநெறியாகிய சரியையினிலக்கணமும் அதன் பயனும் ... உ-0
தானமும் சிவஞானிகளுக்குக் கொடுக்கில் முத்திக்கேதுவாமென்னல் உசக
தானம் முதலியன பசுபுண்ணியமென்னலும் சரியை முதலிய மூன்றும் பதி
புண்ணியமென்னலும் இம்மூன்றும் ஞானத்தைப் பயப்பித்து முத்தி
யைத் தருமென்னலும் ... ... ஒ-அ
திவ்விய தேகத்தோடு இருத்தலே முத்தியென்பாரை மறுத்தல் உசச
தீட்சை சாதார தீட்சை நிராதார தீட்சை என இருவகைப்படுமென்னலும்
சாதார தீட்சைக்குரியார் சகலரும் நிராதார தீட்சைக்குரியார் பிர
யாகலரும் விஞ்ஞானகலருமென்னலும் ... உஎந
தீட்சை செய்யும் ஆசிரியன் சிவமென்னலும் செய்யும் விதாகிய அத்துவ
சுத்தி இவ்வாறென்னலும் ... ... உஉஉ
தெனிதலாகிய ஞானத்தின் முறையும் அதன்கணிகழும் அனுபவமும் உதிச
தேவபோகத்தை மானுடனுகவும் மானுடபோகத்தைத் தேவனுகவும் அனு
பவித்தல் கூடாதாகலின் உடல்மாறுமென்னவலியறுத்தல் கூ0
தேவர்க்கும் மனிதர்க்கும் அவரவர்க்குரிய வடிவமாறினும் உறுப்புக்க
ளும் அங்கங்களும் மாறுவாகலின் உடல் மாறுமென்றல் பொருந்தா
தென்பாருக்கு மயிர்க்குட்டி முதலியன வண்டு முதலியனவாய் மா
றும் பிரத்தியட்சங்காட்டி உடல் மாறுமென வலியுறுத்தல் கூந
தோழநெறியாகிய யோகத்தினிலக்கணமும் அதன் பயனும் உ-ந
நாகமேயன்றிச் சுவர்க்கமும் மருந்தெனல் கூ-
கல்வினையினுள்ளும் சிறந்ததாகிய சடவுள் வழிபாடு கத்தம் மதத்திற்சேற்ற
வாறு செயினும் சிவபெருமானே பலன்றருவனென்னல் அ-அ
கிட்டையாகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் உநி
நியதி, கலை, வித்தை என்னுந்தத்துவங்களினியல்பு ... கூ0ந
நிருவிகற்ப முதலிய காட்சி நான்கின் இலக்கணம் ... ஙந
நிர்ப்பீச தீட்சைக்கு அதிகாரி இவனென்னலும் அத்தீட்சையின் இலக்கண
மும் அது நிராதிகாரதீக்கை யெனச்சொல்லப்பட்டு சபயம் விசேடம்
நிருவாணமென மூன்றுய் விளங்குமென்னலும் ... உகஅ
நிவிர்த்தி பிரதிட்டை என்னும் கலைகளுள் அடங்கும் அத்துவாக்களின்
தொகை ... ... உஉசு
பஞ்ச முகன்றின் பெயரும் இலக்கணமும் ... ஙஈ

அவதாரிகையின் அகராதி.

பசுஞான பாசஞானங்கட்கு தானே பிரகாசித்தலும் பிறிதொன்றைப் பிர
காசப்படுத்துதலும் இல்லாமையை அனுபவத்தில் வைத்து விளக்கல் உசுஅ
பசுஞானம் பாசஞானங்களால் சிவனை அறியக்கூடாமைக்கு ஏது உசுஎ
பஞ்சாக்கரத்தால் இதயத்தில் இறைவனைப் பூசிக்குமுறை உஎச
பதிசுக்கும சித்தும் பசு தூலசித்துமாய் நிற்றலால் பசுவைப் பாசம் பற்று
மெனலும் அப்பற்றுதல் அநாதியெனலும் பதிபசு பாசத்திற்கு உவ
மையும் உ0எ
பதிஞானத்தால் சிவனை அடைதல் கூடும் எனலும் அப்பதி ஞானத்
தில் நிலைபெற ஒட்டாது செய்யும் வாசனையைக் கெடுக்கும் உபாய
ங்கள் இவையெனலும் உசுச
பதிஞானம் பிரபஞ்ச வைராக்கியத்தாலுண்டாமெனல் ... உஎ0
பதிபாசம் இரண்டனையும் ஆன்மா அறியுமெனலும் அவ்விரண்டனையும்
அறியும் முகத்தால் ஆன்மா தன்னையறியுமெனலும் ... உ0சு
பரம்பொருளை அப்பொருளின் அருளால் ஆன்மா பிரிப்பின்றி நின்று
அறியுமெனல் ... ... கசுஎ
பரம்பொருள் அநிர்வசனமுமன்று மனம் வாக்குகட்கு எட்டுவதும் அன்
றெனல் ... ... கசுஎ
பலவுயிர்களோடும் ஒரு இறைவன் கலந்து உடனாய் நிற்பனென உவமை
முகத்தாற் கூறல் ... ... எசு
பலதூல உடம்பு தோன்றி ஒடுங்குவதற்கு ஒரு சூக்கும உடம்பு வேண்ட
ப்படுமென உவமை முகத்தால் விளக்கல் ... கஅச
பலன்தருபவன் சிவபெருமானே யாதலின் சிவபெருமானை வழிபடுதலே
சிறப்பாகிய அறமெனல் ... ... கூ0
பாசஞானம் பசுஞானம் பதிஞானங்களின் இலக்கணம் உசுடு
பாசத்தைப் பதி அறியாது பதியைப் பாசமறியாதெனல் உ0டு
பாசப்பற்றுடையார் பற்றுவிடற்கு சிவனடியாரைச் சிவனெனவே துணி
ந்து வழிபடவேண்டு மெனல் ... ... கூ0சு
பாடாணவாத ஞானமும் பேதவாதஞானமும் பசுஞானமே யெனலும் பதி
ஞானத்தாலன்றிப் பசுத்துவவாதனை நீங்காதெனலும் உசுசு
பாவத்தின் பலனைப்புசிப்பித்துத் தீர்ப்பது புண்ணியஞ் செய்வதின் பொ
ருட்டுப்போல புண்ணியத்தின் பலனைப் புசிப்பித்துத் தீர்ப்பது மல
நிவர்த்தியின் பொருட்டெனல் ... ... கூச
பிரத்தியட்ச முதலிய மூன்றின் இலக்கணம் ... கஎ
பிரத்தியட்ச முதலிய மூன்றின் பாகுபாடும் அவற்றுள்ளடக்கப்படும் பொ
ருளின் பாகு பாடும் ... ... கச

அவதாரிகையின் அகாதி.

பிரபஞ்ச வைராக்கியம் நிலைப்பதற்கு சிவோகம் பாவனைசெய்ய வேண்டு
மெனல் ... ... உஎக

பிரித்தறிய முடியாத நிலையில் ஒன்றுதலும் வேறுதலும் உடனுதலும் உள
வென்பதற்கு எதுக்கூறல் ... ... உ-ஐக

புத்தர் மதம் பற்றி ஈறுமாகி மருவுவித்திடுமெனல் (இதில்உலகந்தோன்றி
ஒடுங்குதற்குக் காரணமும் முத்தொழிலால் இறைவனுக்கு விகார
மின்றெனலும் விளங்கும்) ... ... கஉ-கரு

புத்திரதெறியாகிய கிரியையி னிலக்கணமும் பயனும் உசு0

புறச்சமயத் தெய்வங்கள் பிரகிருதி மாயாதத்துவம் அசுத்தமாயா தத்துவ
ங்களில் நிலைபெறுமெனலும் அகச்சமயத் தெய்வமாகிய இல்யபோக
அதி+ார சிவபேதங்கள் சுத்தமாயா தத்துவத்தில் நிலைபெறு மென
லும் சுத்தசிவம் முப்பத்தாறுதத்துவங்களையுங்கடந்துநிற்குமெனலும் கஉச

புறச்சமயநெறி முதல் படி முறையான் மேம்பட்டு சைவத்தை அடைந்த
வர்க்கு அத்துவசுத்தி எய்துதற்குரிய பருவம்உண்டாமெனலும் சை
வ நெறியும் சரியை முதல் நான்குவகைப்படுமெனலும் உக0

புறச்சமய நெறிமுதல் பல வேறுவகைப்பட்ட நெறிகளின் பயனுகிய முத்
தியின் இலக்கணமும் சைவமுத்தியினிலக்கணமும் உ.ட.உ.

புறப்பூசையும் ஆன்ம சுத்திக்கு அங்கமெனலும்அதனைச்செய்யுமுறையும் உ.எ.

பூதங்களின் அடையாளங்களும் அதிதெய்வங்களும் கூறி அவை பஞ்ச
கலைகட்கும் உளவென்னல் கச0

பூதங்களின் வடிவம் நிறமும் பீசாக்கரமும் ... கச0

பூதங்களின் குணமும் தொழிலும் ... ... கசச

பூதங்கள் தோன்றுமுறையும் அவற்றின் குணங்கள் ஒன்றற்கொன்று வற்
றுமாயிருக்கு மெனலும் பூதங்களின்காரியங்கள் தாத்துவிகங்களாகிய
அங்கமாகவும் பூதங்கள் அங்கியாகவும் இருக்குமெனலும் கசக

பைசந்தி வாக்கின் இலக்கணம் ...

பௌராணிகர் மதம் பாஞ்சராத்திரமதம் இரண்ய கற்பமதம் பற்றி ஈறு
மாகி மருவுவித்திடுமெனல், (இதில் முத்தொழிலும் சங்கார காரண
ன் ஒருவனுக்கே உண்டு; அவனல் பிரமவிட்டுணுக்களும் சங்காரிக்க
ப்படுவர் எனவிளங்கும்) ... ... கரு-கஎ

மத்திமை வாக்கின் இலக்கணம் ... ... கூ0

மனமும் சித்தமும் அவற்றினியல்பும் ஞானேந்திரியமும் கன்மேந்திரிய
மும் ... ... ககூ

மூலமாகிய ஆணவ கன்மங்களைப் பிரிதொருமலமாகிய மாயையினைத்
தீர்ப்பதற்கு உவமை ... ... குஎக

மலம் நீங்கிய உயிரின் அறிவால் சிவனை அறியக்கூடு மென்னுஞ் சிவசம
வாதியை மறுத்தல் உ.0

மாயாமலத்தைத் தவிர ஆணவமலம் வேறில்லை யென்பதற்குக் கூறும்
உவமை பொருந்தாதெனல் ... ... கஉ

மாயையின் இலக்கணம் ... ... கஅ

மாயையே ஆணவமல மென்பாரை மறுத்தல் ... ... கஉ

மாணுடர் மாணுடராகவும் மிருகம் மிருகமாகவும் இவ்வாறே பிறவும் பிறப்
பதன்றி ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவி வாரா தென்பாரை
மறுத்தல் ... ... கஎ

மாணுடப் பிறவியினுள்ளும் உத்தம நாட்டில் உத்தம சாதியில் உத்த சம
யத்திற் பிறத்தல் அரிதெனல் ... ... கஉ

மாணுடப் பிறவியே அரிதெனல் ... ... கஉ

மும்மலங்களும் உயிரைப் பற்றப்பிடித்தல் நெல்லிற்கு முளை தவிட் உமி
போலெனலும் வேறு இருமலம் உண்டெனலும் ... கஉ

முயற்சியால் வினையும் வினையால் முயற்சியும் வித்தும் மரமும் போலா
மெனல் ... ... எஉ

முயற்சியானது செயல் வகையால் அனுபவமாயும் ஞான் செய்தெனன்
னுங் கருத்து வகையால் மேல்வினைக்கு வித்தாயும் இருதிறப்பட
மன ... ... அக

முயற்சியின் பயன் மேல்வினையும் முன் வினைப்பயனை அனுபவிக்கச்செய்
யுங் ணையுமென இருதிறப்படுமெனல் ... ... எஅ

முயற்சியின்றி வினைப்பயன் அனுபவித்தல் கூடாதென்பதும் வினைப்ப
யனை அனுபவிப்பதற்கான முயற்சி மேல்வினைக்கு வித்தா மென்
ப அ0

மூலப் பிரகிருதியும் குணதத்துவமும் குணதத்துவத்தினியல்பும் கக0

யோகபாவனையால் இறைவனைக் காணக்கூடு மென்பாரை மறுத்து அவ
னருளால் காண வேண்டுமென்பதை வலியுறுத்தல் ... ககஉ

வந்தின்று போவது (மீமாம்சகர் மதம்பற்றி) இதில்உடல் உலகம்போல
அழியாதென்பாரையும், அழியினும் ஒரு சோ அழியாதென்பாரை
யும், காலமே கடவுளென்பாரையும் மறுத்தல் விளக்கும் உஅ, உக

வருமுறை. (உலோகாயதச் சார்புபற்றி) இதில் உலகம்அவ்வச்சார்பிற்றோ
ன்று மென்பாரையும், அநிருவசனப் பொருள் தோன்று மென்பா
ரையும், உண்மையாய் இல்லையுமாயுள்ள பொருள் தோன்று மென்பா
ரையும் மறுத்தல் விளக்கும் ... ... உசு, உஎ

வருமுறை (சார்க்கோர் மதம்பற்றி) இதில் அணுகாணவாதம் மறுக்கப்படு
கின்றது ... ... உக, உ0, உகசஉக, உஉ

வறுமையாலுண்டாஞ் சிறுமை நீங்குதற்குச் செல்வரைப் பின்பற்றி வாழ்
தல் பயனில்லை யென்றுணர்தல் உபாய மெனல் ... கசங
வர்ச்சு நான்கும் சிவதத்துவம் பந்திலிருக்குமெனல் கஅ
வாக்கை இன்றி எவர்க்கும் அறிவுண்டாகாதெனல் சா
வாழ்விலுலாகிய மையலை நீக்குதற்கு அதிகாரஞ்செய்வோர் தாம் சும்மா
யிருத்தலோநோக்கி தம்மை பிணமெனக்கருதுதலும் உபாயமெனல் கசஉ
வாழ்விலுலாகிய மையலை நீக்குதற்கு சரீரநிலையாமையை நோக்குதல்உபா
யமெனல் ... ... கசக
வாழ்விலுலாகிய மையலை நீக்குதற்கு விடயங்களை அறியும் அறிவும் வாழ்
க்கையும் நிலையுடையனவல்லவென அறிதலும் உபாயமெனல் கசக
லித்தை சாந்தி யென்னுங்கலைகளுள்அடங்கும் அத்துவாக்களின்தாலை உஉள
வினைசெய்வதாகிய உயிரொன்றும் அவ்வினை நிகழ்தற்குரிய துணைகள்
ழும் ஆக எட்டு முதல் நிலைகளும் சிற்றறிவுடையதும் சடமுமாத
லின் முற்றறிவுடைய முதல்வனுக்கு வினைப்பயனைக் கூட்டுவித்தல்
கடனமெனல் ... ... அள
வினையானது தொடர்ச்சியாய் இறைவனுணையால் உயிர்க்கு பலவேறு
வகைப்பட்ட உடல்களைத் தோற்றுவிக்கும் எனல் ... கூக
வினையே பலன்தருமென்பாரை மறுத்து இறைவனேதரவேண்டும் கெட்
டுப் பலன்தருதல் எவ்விடத்துஞ் செல்லாது எனல் ... அச
வீடுபேற்றிற்குச் சிறந்தசாதனம் ஞானமேயன்றிப் பிறிதில்லையெனல் உரு0
வேதம் பொதுநூலும் ஆகமம் சிறப்புநூலும் சித்தாந்தமும் எனல் உஉசு
வேதாகமங்களின் விதியிற் றவறிழைத்தண்டித்தற்கும் அவ்விதியில்வழு
றினை வாழ்வித்தற்கும் அரசனை உவமையாகக்கூறல் கூஉ
வேதாகமங்கள் முதனூலெனலும் வேனையநூல்களெல்லாம் வழிநூல் சார்பு
நூல்களாய் முதனூலில் அடங்குமெனலும் ... உஉஙு
வைகரிவாக்கின் இலக்கணம் ... ... கூசு
வைத்தியன் மருந்தாலும் பிராயச்சித்தத்தாலும் நோயைத் தீர்ப்பதுபோல
இறைவனும் நாகசுவர்க்க முதலிய பலவாற்றானும் வினைநோயைத்
தீர்ப்பன் எனல் ... ... கூரு

அவதாரிகையின் அகராதி முற்றிற்று.

விசேடவுரையிற்கண்ட விஷய

	பக்கம்.
அகரம்	74
அங்கம்	55
அசபை	243
அதிகரிக்கும ஐந்தாழில்	185
அத்துவா	223
அத்துவா ஆறும் இருவகைப் பிரபஞ்சம்	224
அத்துவாக்கள் விபாகம்	228
அத்துவாகளால் கன்மம் வருதல்	223
அத்துவிதம்	203
அத்துவித திருட்டாந்தத்தின் பேதம்	2
அந்தக் காணங்களின் தோற்றுமுறை தொழிற்படுமுறை வேறுபாடு	112
அபிடேகம்	221
அருத்தாபத்தி	12
அவுத்திரி	218
அனுகதம்	243
அன்னமயகோசம்	167
ஆக்கினை	243
ஆணவமலத்தின் மறைப்பு	132
ஆகனம்	244
ஆனந்த மயகோசம்	167
ஆன்மா அணுவென்றதன் கருத்து	160
ஆன்மா சூக்குழு வடிவம்	275
இச்சை விளைவித்தன்மலம்	297
இயமம்	244
இரகசியம்	247
இராகம்	133

	பக்கம்.
இராசதகுணம்	111
இருவினை யொப்பு	49
இனமை	12
உடம்பு மூவகை	96
உணர்ச்சி மூவனை	18
உபாங்கம்	50
உவமை	12
எண்குணங்கள்	278
ஐதிகம்	12
ஐந்து தொழில்களை முத்தொழிலாகக் கூறல்	48
ஐந்தெழுத்தின் பொருள்	274
ஐந்தெழுத்துத் தூலவடிவம்	275
ஒருக்கமுறை	36
ஒன்பது பேதந் தோன்று முறை	125
ஒன்பது பேதத்திற்கு உதாரணம்	126
ஒன்பதுபேதம் மூன்று திருமேனி	127
கலை	223
கமலை	133
காட்டும் உபகாரம் காணும் உபகாரம்	299
காமிகம்	219
காயவுவமை திகிரி உவமைகளின் வேற்றுமை	289
காரணகாரிய அவத்தை	180
காரணகாரிய வேற்றுமை	31
காரண சரீரம்	38
கேவலத்தில் ஐந்தவத்தை	180
சகசம்	13

சகலர் 214
சகலரில் மூவர் 21
சக்ராதி வேவர் நாமம 11
சத்தி அதிரூக்குமவடிவம் 275
சத்தி அதிஷ்டிதகலை 22
சத்தியின் தொழுபதடத்தம் 6
சத்திகலை 22
சத்திநிபாதம் 21
சந்தி 19
சந்தி மாத்திரையால் தோன்றுதல் 252
சந்திரகலைஉவமைவேறுபாடு 10
சந்திரன் அருவுருவம்
சபீசம் 218
சமயதீட்சை 219
சமயாசார் கன்மம் 221
சமாதி 244
சம்பவம் 12
சற்காரியவாதம் 196
சாக்கிரமுதலியஐந்தவத்தை 166
சாக்கிரத்தில் ஐந்தவத்தை 17
சாங்கம் 55
சாதாக்கியதீட்சை 216
சாதிகாரதீட்சை 221
சாத்துவிக குணம் 111
சாந்திராயணம் 247
சாமீபம் 239
சாம்பவம் 218
சாயுச்சியம் 240
சாரூபம் 239
சாலோகம் 239
சித்தாந்தசத்தி னிலக்கணம் 194
சிவதத்துவம் இறைவனுடை யு விபாபாசத்திற்கு இடமும் இறைவனுக்கு வடிவமும் 68
சிவம் சத்தியெனப் பிரித்தகன் கருத்து 128
சிவரூபமுதலிய நான்கு 305
சுகலர் 181
சுவாதிட்டானம் 243
சூக்கும ஐக்தொழில் 188
சூக்குமசித்து 164
சூசிகடாகாயம் 15
செயப்படுபொருளும் வினைமுதலும் தலும்மென்றுமாறில்லை 25
ஞானவதி கிரியாவதி 218
தத்துவம் 223
தமம் 41
தயம் 41
தனுகரணபுவனபோகம் 108
தாபம் 133
தாமதகுணம் 111
தாரணை 244
தியானம் 241
திருவடி 233
திருவடி அடைதலென்றதன் பொருள் 233
திரோதான சத்திபின்பேதம் 225
துரியாதீதத்தில பிராணவா ன் காலல் 175
தூல ஐந்தொழில் 188
தூலசரீர தத்துவம் (கூ0) 118
தூலசித்து 164
தூலம் 41
தேகஸ்திரஞ்செலுத்துதல் 168
தேர்ப்பாவனையை யாட்டுதல் 168
தேவர்முறை 36
தடனம் 60
நித்தியகன்மம் 219
நியமம் 241
நிராதாரதீட்சை 216
நிர்ப்பீசம் 218
நிர்வாணதீட்சை 220
நீருக்கு நிழலுண்டு 201
நூல் (சாஸ்திரதீட்சை) 217
நைட்டிகதீட்சை 221
நைமித்திக கன்மம் 219

நிராக்கரம் 217
பக்கம் சபக்கம் விபக்கத்தி
ற் உவமை 18
பசுஞானம் 216
பசுஞானம்மிலைத்தோன்றுதல் 274
பஞ்சீகரணம் 117
பஞ்சபசுபாவுவமைவேறுபாடு 119
பரகாயப் பிரவேசஞ்செய்தல் 168
பரமுத்தி சீவன்முத்தி 290
பரிக்கிரக சத்தி 39
பரிசதிட்சை 217
பரிணமம் 36
பவுத்திக திட்சை 221
பாசம் 18
பாசம்மிலைத்தோன்றுதல் 274
பாரிசேடம் 12
பாவனை 217
பிரத்திபங்கம் 55
பிரத்திபாகாரம் 244
பிரபஞ்சம் முத்திறப்படும் 35
பிரளயாகலர் 214
பிராணமயகோசம் 167
பிராணோபாமம் 241
புண்ணிய வேறுபாடு 90
பூதம் நான்கும் முத்திதாழிற் படிமுறை 25
பெத்தான்மாவை நணுகி நிற் றலினால் மலம் நித்தம் 293
பேதாபேதம் 153
பொற்பணிஉவமைவேறுபாடு 104
மகாவாக்கியப் பொருள் 272
மணிபூரகம் 243
மதம் 133
மரத்தினின்று உதிர்ந்த இலை மரத்தில் ஒடுங்குதல் 32
மரப்பாவைவமை இயக்குதல் 168
மரநிழலயகோசம் 167
மானதம் 247
மும்மலங்களுக்கு நெல்முதலி உவமை 136
மூமலங்களின் வேற்றுமை 137
மூலகன்மம் 98
மூலாதாரம் 243
மோகம் 133
யோகம் (யோகதிட்சை) 218
வாக்து (வாசகதிட்சை) 217
வாக்து நானகும் ஐவகைப்ப ட்டு நிற்றல் 39
வாசகம் 247
வாட்டம் 133
வாயுவை யடக்குதல் 242
விசித்திரம் 133
விசுத்தி 243
விசேடதிட்சை 220
விஞ்ஞானகலர் 213
விஞ்ஞானமயகோசம் 167
விந்து மாங்களின் முற்பிற் பாடு 79
விபாபக விபாப்பிரபஞ்சம் 229
விஷ்ணு 81
வேடங்கட்டியாடுதல் 168

இயல் அகராதி.

பாயிரம்	...	...	...	7
அளவை	...	...	...	11
பிரமாணவியல்	...	...	...	22
இலக்கணவியல்	...	...	...	148
சாதன இயல்	...	...	...	204
பயனியல்	...	...	...	241

அதிகார அகாதி

பதிஉண்மை	...	...	27
பாசஉண்மை	...	...	79
பசுஉண்மை	...	...	114
பசு இலக்கணம்	...	...	118
பாச இலக்கணம்	...	...	133
பதி இலக்கணம்	...	...	193
சாதிக்கும் பொருளது இயல்பு	...	...	201
சாதிக்கப்படும் பொருளது இயல்பு		...	209
சாதிக்கும் முறை	...	...	265
பாசபரிக்கம்	...	...	271
சிவப்பேறு	...	...	291
சிவன்முத்தர் இயல்பு	...	...	306

பாட்டு முதற்குறிப்பகராதி.

அ		அகாதிடட	294
அகலிலை	101	அகாதிய	20
அங்குத்தம்	288	அகாரி	276
அசித்தரு	163	அக்கியமி	200
அசித்தனனி	159	அயனரி	151
அஞ்செழுத்	273	அயன்றனை	63
அண்டசந்	139	அரசனுந்	93
அத்துமாழி	61	அரனடி	92

அன்விதி 106
அரிசனம் 142
அருந்தின்பத் 16
அருமறை 235
அருவமோ 49
அருவவிகா 158
அருவினிலு 41
அருவுருவி 42
அருவுருவெ 156
அருளதுச 192
அருளிலைலா 11
அருளிலைலு 94
அவ்வவ 103
அவ்வுடலு 151
அழிந்தபி 29
அழிப்பிளை 48
அழிவிலா 222
அளவை 12
அறிதருமு 177
அறிந்திடுமா 186
அறிந்திரும் 147
அறிவொரு 198
அறியாமை 254
அறிவதைம் 146
அறிவரியான் 39
அறிவிக்க 208
அறிவிச்சை 153
அறிவிலன் 181
அறிவுடல் 172
அறிவுறும் 193
அனகை 8
அனைத்து 25
அன்னியசாதி 14

ஆ

ஆங்காரம் 112
ஆணவந் 296
ஆணையால 93
ஆண 54
ஆவதா 195
ஆன்மாவின் 152

இ

இங்குநா 89
இதமதி 82
இந்தன 277
இந்திரிய 285
இங்கிலை 258
இம்மையி 77
இம்மையே 232
இயல்புகா 24
இராந்தா 118
இரும்பை 304
இருவகை 176
இருவினைச்செயல்க 182
இருவினைச்செயல்காணி 77
இருவினைய 99
இருவினையின்பத் 75
இருவினை யென்னை 76
இவ்வுலகி 281
இறுதியாங் 46
இறைவனு 238
இறைவனிங் 82
இறைவனே 185
இறைவன் 189

ஈ

ஈசனுக்க 308
ஈண்டுபெக் 20

உ

உடலியா 170
உடலினி 161
உடலின் 146
உடல்விடா 96
உடற்செய 79
உணராத 196
உணர்வன 149
உதிப்பது 23
உயிரனை 44
உயிரினை 160
உயிரிலே 15
உயிரென 144
உருமேனி 60
உருவருள் 55
உருவினி 161
உருவினை 182
உருவுயி 155
உரும்வாடு 74
உரைதரு 212
உரைத்தவிக் 45
உலகமெயு 190
உலகினிற் 52
உலகினை 56

உலகுடல் 87
உலகலா 72
உள்ளது 26
உள்ளுண 36

எ

எங்குந்தானி 300
எங்குந்தான 261
எங்குந்தாண்வி 162
எல்லாமாய் 131
298
எழுமுடல் 107
என்னுடல் 169
என்னைஇப் 9

ஏ

ஏது மூன்று 18

ஐ

ஐந்துசாக் 178
ஐந்து சுத் 121

ஒ

ஒருகோட் 7
ஒருபுல 142
ஒருபொரு 27
ஒருவனே 69
22
ஒழுக்க 87
ஒன்றதாய 132
ஒன்றதாயி 65
ஒன்றென 73
201
ஒன்றொடொன் 57

ஓ

ஓசைநற் 116
ஓதியுண 220
ஓதுச 234
ஓரிட 28

க

கண்டபொருளா 13
கண்டவினை 271
கண்டிடுங் 268
கண்டுணர் 172
கண்ணுறுதல் 59
காணங்கள் 266
குருதிகாணை 33
குவிகழிந் 259
கருவியாம 150
கருவியாற் 187
கருவியும் 187
கருவினுள 141
கற்றதூற் 44

கா

காண்டல் வாயில் 14
காண்பவன் 90
காயத்தினழிவு 28
காயமொழி 291
காரணவனு 30
காரியகாரண 34
காரியமென்ப 31
காலமே கடவு 29

கு

குணங்களாயி 154
119
குறிக்கடியி 270
குறித்ததொ 53

கே

கேட்டலுடன் 247
கேவலசகல 179

ச

சகமா 241
சங்கமங் 100
சத்தசத்த 206
சத்திதன் வடி 64
சத்திதானுத 128
சத்திதான்பல 64
சத்தியாய் 127
சத்தியுஞ் 70
ய வடி 51
சுந்திரன்வ 157
சந்திதிகு 155
சலமில 286
சன்மார்க்கஞ் சகமா 239
சன்மார்க்கஞ் சகலகலை 245

சா

சாக்கிரத் 258
சாக்கிரமு 175
சாந்தியா 227
சார்பினிற் 26
சாற்றியப 116

சி

சித்தமா 112

சித்தாந்த 273
சிவஞ்ஞாச் 249
சிவஞ்சத்தித 129
சிவஞ்சத்திநா 124
சிவணருவுரு 71
சிவனெனயல 267
சிவன்சிவ 303

சீ

சீலமோரு 43
சீவனுமிச் 66

சு

சுத்ததத் 120
சுத்தமாமா 13
சுத்தமாம் 61
சுத்தமெய் 207

சூ

சூக்குமங் 14
சூக்குமமே 165
சூக்குமவா 38
சூக்குமவு 156
சூரியகாங் 251

செ

செங்கமல 306
செப்பினுப் 102
செம்பிரத 302
செயல்கள்ள 84
செய்க்கிடந் 84
செய்தவர் 85
சென்றஞ்ண 301

சொ

சொன்னவி 47

ஞா

ஞாலமதின் 256
ஞானத்தா 250
ஞானநூற 246
ஞானமேமயா 67
ஞானயோ 311

த

தத்துவஞ் 197
தத்துவமெ 123
தத்துவரூப 122
தந்தைதாய் 83
தலுகாண 130
தன்மமோ 98

தண்ணியல் 76

தா

தாதமார் 240
தாபாசங் 91
தாணுசெ 85
தானமியா 248

தி

திவியமு 85
திருக்கோயி 310

தூ

தூலமாமு 105

தெ

தெரிந்து 191
தெரிவரிய 295

தே

தேசகிட 257
தேவரிறை 56

தோ

தோற்பா 167
தோற்றமு 31
தோற்றவித் 45

ந

நண்ணரிய 50
நர்களாப் 100
நர்பயி 139
நற்செவி 114

நா

நாடுகளி 287
நாட்டுமி 274
நாயகன் 58

நி

நிகழ்ந்திடு 38
நிக்கிரகங் 83
நித்தமா 108
நியதிபின் 109
நிலம்புன 25

நெ

நெல்லி 207

ப

பக்கமூன்றின் 17
படைகொடு 174
படைப்பாதி 59
பண்டைநற் 10
பந்தமும் 53

பரஞான 498
பரம்பிரம 313
பரிதியை 134
பலவிதமா 216
பஞ்ஞக 97
பன்னிற 261

பா

பாசுரஞா 264
பாசிபடி 262
பாலரொடு 218
பாவிப்ப 199

பி

பிணத்தினை 143

பு

புகையா 19
புண்ணிய 255
புத்திமற் 33
புத்திரமார் 241
புந்தியை 171
புருடனை 173
புருடன்ற 135
புறச்சமய 231
புறம்பே 276

பூ

பூதஞைசீ 96

பே

பேறிழ 78

பொ

பொறிபுலன் 184
பொன்மை 70
பொன்னணி 170

போ

போகியா 57
போதகாரி 135
போதுமா 19

ம

மண்டனில் 195
மண்ணினில் 42
மண்ணுளீள 95
மண்புன 119

மி

மிக்கதொரு 226
மிஞ்சித் 312
மிஞ்சமத 62
மந்திரமதனு 61
மருத்துவ 95
மருவாணக் 166
மலயானை 138
மலமென 133
மறைகளீ 92
மறையினை 10
மனமதுனை 113
மனமதுநி 88
மன்னவன் 210

மா

மாசறுகாட்சி 13
மாயைதான் 51
மாயையிற் 108
மாயையினு 32
மாயையின்கா 137
மாயையின்ப 164
மாயைபீ 134
மாறியிவ் 103
மாலுடப் 140

மி

மிக்கதொரு 253

மு

மும்மலதெ 136
முற்செயல் 80

மூ

மூவனைபை 40
மூன்றுநி 229
மூன்று பக்கம் 17

மே

மேலுக்கு 81

மொ

மொய்குரு 124

யா

யாதொரு 89
யான்செ 283

வ

வண்டுக 101
வருங்குண 110

வா

வாக்கொ 114
வாயாதி 115
வாழ்வெ 140

வி

விச்சையி	110
விதிப்படி	105
வித்தக	50
வித்தைகள்	40
வித்தையி	227
வித்தையோ	67
விந்துவின்	35

வே

வேதசாத்	265
வேதநூல்	236
வேற்றுமைப்	37

ஸை

ஸைகரிசெ	36

சிவமயம்.

சிவஞான சித்தியார் * சுபக்கம்.

மூலமும் பொழிப்புரையும்.

உரையாசிரியராகிய மாதவச்சிவஞான யோகிகளருளிச்செய்த
உரைப்பாயிரம்.

குருவணக்கம்.

'பண்ணினைச்சிவம் பரிதிமதி திலதயிலந் தீபிரும்பு பாணி யுப்பு
'விண்ணிலை முடனுயிர்நீர் நிழலுச்சிப் பனிங்குப்கல் விளக்குப்பாண்'
கண்ணிரவி புணர்வொளிபோற் பிரிவரிய வத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாயகுரு சரணம் போற்றி.

(பொ-ரை) பண்ணும் (இராகமும்) ஓசையும்போலவும், சூரியவெளியும் பகற் காலத்துக் காணப்படும் சந்திரவெளியும்போலவும், எள்ளும் அதனுள்ளிருக்கும் நெய்யும்போலவும், தீயும் அதனாற் காய்ச்சப்பட்ட இரும்பும்போலவும், தண்ணீரும் அதனோடு சேர்ந்த உப்பும்போலவும், ஆகாயமும் காற்றும்போலவும், உடலும் உயிரும்போலவும் † நீரும் அதனிழலும்போலவும்; மத்தியான வேளையிலுள்ள சூரிய வெளியும் பளிங்கின் ஒளியும்போலவும், சூரியவெளியும் பகற் காலத்து விளக்கொளியும்போலவும், பாலும் அதனுடன்சேர்ந்த நீரும்போல்வும்; கண்வெளியும் அதற்குப்பொருளைக் காட்டியும், கண்டும் உடனுய் நிற்கும் சூரியவெளியும்போலவும், ஆன்மாவின் அறிவும் அவ்வறிவால் பொருளையறியும் கண்வெளியும்போலவும் பிரிக்கமுடியாத சிவசீவர்களின் அத்துவிதம்போல்கிய கல்வியை கிருபையினல் அனுபவமாய் அறியும்படிசெய்து அடியேன்ஆட் கொண்டருளிய திருவாவடுதுறையின்கண் எழுந்தருளியிருக்கும் நமச்சிவாய தேசிக குருமூர்த்திகளின் திருவடிகளைத் துதிப்பாம். (எ-று.)

---

* சுபக்கம் - தன்பக்கம்.

† நீருக்குநிழலுண்டென்பது சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம் இரண்டாமதிகரணத்தில் "நீர் நிழல்போல் இல்லா அருவாகி நின்றனை" என்னும் வெண்பாவினாலும், உரைபாலும் அறிக.

ஆவடுதுறை ஆதீனம் திருப்பணி

சிவனும் சீவனும் பொருட்டன்மையில் இரண்டாயினும் பிரிக்க முடியாவாம். இவ்வாறு பிரிக்கமுடியாத மலப்பின் சம்பந்தத்தை யே அத்துவிதமென்ன நூல்கள் கூறும். இவ்வத்துவித சம்பந் தம் எதுபோலும் என்பதை அறிவித்தற்கு பதின்மூன்று உவமை கூறினர். அப்பதின்மூன்றுவமைகட்கும் பதின்மூன்றுபேதங்கள் உளவாகலின் மிகைபடக்கூறலென்னுங் குற்றமின்றும். அப்பேதங் கள் வருமாறு.

அத்துவிதமாகிய கலப்பை ஒன்றாய் நிற்றலென்பேமா? வேறாய் நிற்றலென்பேமா? ஒருவாற்றால் ஒன்றும் ஒருவாற்றால் வேறுமான உடனாய் நிற்றல் என்பேமா? எனின் இம்மூன்றுமாய் நிற்றலே அத்துவிதமாமென்க. மூன்றுமாய்நிற்றற்குப்பயன் யாதெனின் உயிர் கள் நிலைத்தற்கு இறைவன் ஒன்றாய் நிற்றலும், பொருள்களை உயிர் கள் அறியும்படி அறிவித்தற்கு இறைவன் வேறாய் நிற்றலும், அறி யினும் அறிந்தவாறே அனுபவிக்கும் சுதந்தரமின்மையின் அனுப விக்கும் வண்ணம் செலுத்துதற்கு இறைவன் உடனாய் நிற்றலும் வேண்டப்படுதலின் நிலைத்தல், அறிதல், அனுபவித்தலென்னும் மூன்றும் பயனும். இம்மூன்றனுள் எப்பயனும் அடங்கும். இவ் வாறு நிற்கும் முத்திறத்துள் ஒன்றாய் நிற்றற்கு மூன்று உவமையும், வேறாய் நிற்றற்கு மூன்று உவமையும், உடனாய் நிற்றற்கு ஏழு உவ யும் முறையே கூறினர். அவற்றுள்.

பண் என்பது ஓலியின்பேதம். ஓலியைவிடப் பண் வேறன்று. ஆயினும் ஓலி எல்லாம் பண்ணாகாமையின் ஓலியுமன்று; இவ்வாறு ஓலியுமன்றாய் ஓலியின்பேதமேயாகிய பண் ஓலியைவிட்டுத்தனித்து நில்லாதவாறுபோல சிவனாகிய சித்தன்றாய் சித்தின்பேதமாகிய சீவன் சிவனை இன்றித்தனித்து நில்லாமையை உணர்த்த "பண்இசை" என்றார். இதனையே "யானெனுந் தன்மை நினையின்றி இல்லாத் தன்மையால் வேறலென்" எனத்தாயுமான சுவாமிகள் அருளிச் செய்வாராயினர்.

ஓலியின்பேதமே பண்ணென்றாற்போல சிவபேதமே சீவ னென்னலாமோ என்பார்க்கு சூரியன் ஒளியைவிட்டுச் சந்திரனுக்கு ஒளியில்லை யாயினும் பொருளால் வேறு காணப்படுமாறுபோல

சிவனேயின்றிச் சீவன் தனித்து நிற்றல் இல்லையாயினும் பொருளால் வேறுண்டென்பது உணர்த்த "வெம்பரிதிமதி" என்றார்.

சூரியனும் சந்திரனும் வேறுவேறு பிரித்தறியப்படுமாறுபோல சிவனும் சீவனும் வேறு வேறு பிரித்தறியப்படுமோ வென்பார்க்கு எள்ளைவிட்டு வேறு பிரித்தறிய முடியாத நெய்போல, சீவனைவிட்டுச் சிவனை வேறு பிரித்தறிய முடியாதென்ப துணர்த்துதற்கு "நில கைதல்" மென்றார். எள்ளினின்றும் நெய்வேறு பிரிக்கவும் படுகின்றதே எனின், நெய் உள்ளளவுந்தான் எள்ளெனப்படுவதேயன்றி நெய் பிரிந்தபின்னர் எள்ளென்பதின்றுதலின் அதன்கண் ஆசங்கையின்மை யறிக. இம்மூன்றுவமைகளும் ஒன்றுய் நிற்றலை விளக்கியவாறும்.

இனிநெய்யைவிட்டு எள்ளுத்தனித்து நில்லாதவாறுபோல சிவனை விட்டு உயிர் தனித்து நிற்றலில்லை எனப்பட்டு அவ்வாறு தனித்து நில்லாத பொருளைக்கு அறிவிக்கமுடியாதாகுமே என்பார்க்கு தீயினுற் காய்ச்சப்பட்ட இரும்பு தீயேயாயினும் இரும்பின் வேறுய்'தீ நிற்றல் காணப்படுதல்போல உயிரின் வேறுய் சிவன் நிற்பன் என்பதை உணர்த்துவதற்கு "தீ இரும்பு" என்றார்.

இரும்பின் வேறுப் தீ தனித்து நிற்பினும் இரும்போடியைந்த தீ தனித்துக் காணப்படாதவாறுபோல இறைவன் வேறு காணப்படாமை என்பார்க்கு உப்போடு கூடிய நீர் உப்பேயாயினும் உப்பில் நின்றும் நீர் தனித்து நிற்கவும்படுவதுபோல இறைவனும் தனித்து நிற்பனென்பதுணர்த்துவதற்கு "பாணி உப்பு" என்றார்.

நீரைவிட்டு உப்பு ஒருகாலத்துப் பிரிந்திருப்பதுபோல இறைவனைவிட்டு உயிர் ஒருகாலத்துப்பிரிந்திருக்குமோ என்பார்க்குக் காற்று எக்காலத்தும் ஆகாயத்தைப் பிரிந்திராதவாறுபோல உயிர் எக்காலத்தும் இறைவனைவிட்டுப் பிரிந்திரா தென்பதுணர்த்துதற்கு "விண்ணநிலம்" என்றார். "தீ இரும்பு, பாணிஉப்பு, விண்ணநிலம்" என்ற இம்மூன்று உவமைகளும் வேறுய் நிற்றலை விளக்கியவாறும்.

காற்றுக்கு ஆகாயம் இடங்கொடுத்திருத்தலேயன்றி காற்றை ஆளுகையும்படி செய்வதில்லை; அதுபோல உயிர்க்கு இறைவன்

ஆதாரமாய், நிற்றலேயன்றி உயிரைச் செலுத்துதல் இல்லையோ. வென்பார்க்கு உடனிருத்தற்காதாரமாகிய வுயிர் உடலை உடனின்று செலுத்துவதுபோல இறைவனும் உயிருடன் நின்று, செலுத்துவ னென்பதுணர்த்துதற்கு "உடல் உயிர்" என்றார்.

உடலை உயிர் இயக்கும் முறைமையில் சாக்கிரத்தில் தூல உடலையும், சொப்பனத்தில் தூலத்தைவிட்டுச் சூக்கும உடலையும்சுழுத்தியில் தூல சூக்குமம் இரண்டையும்விட்டுக் காரண உடலையும், இயக்குவதுபோல இறைவன் உயிரை இயக்கும் முறையில் கூடியும், பிரிந்தும் நிற்பானேனு, என்பார்க்கு நீரினிடத்து நிழல் எக்காலத்தும் பிரிப்பின்றி விரவி நிற்றல்போல உயிரினிடத்து இறைவன், எக்காலத்தும் பிரிப்பின்றி விரவி நிற்பனென்பதுணர்த்துதற்கு "நீர்நிழ" லென்றார்.

நிழலின் உபகாரமின்றியே நீர் எக்காலத்தும் உவர்ப்பு, கைப்பு, முதலிய ரசங்களைப்பற்றி அது அதுவாய் நிற்பதுபோல இறைவன் உபகாரமின்றியே உயிர் எக்காலத்தும் விடயங்களைப்பற்றி அது அதுவாய் நிற்குமோ என்பார்க்கு சூரியன் ஒளி பக்கத்திருக்கும் பொழுது அவ்வொளியைக்கொண்டே பளிங்கின் ஒளி பஞ்சவன்னங்களைப் பற்றுதலும், சூரியன் ஒளி உச்சியிலிருக்கும்பொழுது, பளிங்கின் ஒளி அச்சூரியன் ஒளியோடு கலந்து ஒரு வன்னங்களையும், பற்றுமலும் இருத்தல்போல, பெத்த காலத்து, இறைவன் மறைந்து நிற்க அவ்விறைவன் துணையைக்கொண்டே உயிர்கள் விடயங்களை அறிதலும், முத்திக்காலத்து இறைவனோடு உயிர் கலந்து, ஒரு விடயங்களையும் அறியாதிருத்தலும் கூடுமென்பதுணர்த்துதற்கு "உச்சிப்பளிங்கு" என்றார்.

உச்சிக்காலத்து எதிர்ப்பட்ட பளிங்கு தன் ஒளி மழுங்காதவாறுபோல, முத்திக்காலத்து, உயிர்க்குத்தற்போதம் கெடுதலில், ஆமோவென்பார்க்கு, பகற்காலத்து விளக்கின் ஒளி சூரியன் ஒளியில் அடங்கி நிற்பதுபோல முத்திக்காலத்து, உயிர் தற்போதம் கெட்டு நிற்குமென்பதுணர்த்துதற்கு "பகல் விளக்கு" என்றார்.

பகற்காலத்து, விளக்கு செயலற்றிருத்தல்போல, முத்திக்காலத்து உயிர்க்கு இன்பானுபவம் இல்லையொ வென்பார்க்கு பால் தன சுவை, முழுதும் தன்மீறு கலந்த நீருக்காக்கி நீரைத் தன்னுள் அடங்கி நிற்கச்செய்யுமாறுபோல இறைவனும் முத்திக்காலத்து தன் இன்பம் முழுதும் உயிருக்காக்கித் தன்னுள் அடங்கி நிற்கச் செய்யு, மென்பதுணர்த்துதற்கு "பால் நீர்" என்றார்;

நீர் பாலோடு கூடியவழி பாலின் சுவையாயும் பாலோடு கூடாதவழி தன்சுவையாயும் நிற்குமாறுபோல உயிர் இறைவனோடு கூடியவழி இறைவனுக்குரிய இன்பமயமாயும், இறைவனோடு கூடாத வழி தனக்குரிய இன்பமையமாயும் நிற்குமோ என்பார்க்கு கண், ஒளியுடைப்பொருளாயினும் அக்கண் ணொளி சூரியன் முதலிய பிறவொளியின் துணையையின்றி எக்காலத்தும் பிரகாசிக்க மாட்டாதவாறு போல உயிர் அறிவுடைப் பொருளாயினும் இறைவனையின்றி எக்காலத்தும் அறியமாட்டா தென்பதுணர்த்துதற்கு "கண்ணிரவி" என்றார்.

கண்ணொளியும் சூரிய னொளியும் கலந்து நிற்பினும் கண்ணும் சூரியனும் வேறு வேறு, இடத்திருத்தல்போல உயிரின் அறிவும் இறைவன் அறிவும் கலந்து, நிற்பினும் உயிரும் இறைவனும் வேறு வேறிடத்தில் இருத்தல்கூடுமோ, என்பார்க்கு கண்ணொளியின் உள்ளீடாய் விரவி நிற்கும் உயிரையின்றிக் கண்ணொளி விடயத்தை அறியாத, வாறுபோல உயிரின் உள்ளீடாய், உயிர்க்குயிராய் நிற்கும் இறைவனையின்றி உயிர் ஒன்றினையும் உணராதகலின் உயிரும் இறைவனும் வேறு வேறிடத்திலிருப்பதில்லை எனவும் ஓரிடத்தில் கலந்து நிற்பதுண்டு எனவும் உணர்த்துதற்கு "உணர்வொளி" என்றார்.

உடலுயிர், நீர் நீழல், உச்சிப்பளிங்கு, பகல் விளக்கு, பால்நீர், கண்ணிரவி, உணர்வொளி என்ற இவ்வேழுவமைகளும் உடனுயிர், நிற்றலை விளக்கியவாறும்.

—(*)—

சிவஞானசித்தியார் சுபக்கம்.

நூலாசிரியர்ராகிய அருணந்திதேவ நாயனார்
அருளிச்செய்த

காப்பு.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னல்வாயைங் கரத்த னறு
கருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றேவென்னச் செய்யுந் தேவே.

(கொண்டுகூட்டு) ஆறுதருகோட்டு அம்பிறை இதழித்தாழ் சடையான் றரும் ஒரு கோட்டன் இருசெவியன் மும்மதத்தன் நால்வாய் ஐங்காத்தன், ஒரு வாரணத்தின் தாள்கள் உருகு ஓடு அன்பொடும் ஓவாதே வணங்கி இரவு பகல் உணர்வோர் சிந்தைத் திருகு ஓட்டும் அயன் திருமால் செல்வமு மொன்றே வென்னத் தேவே செய்யும்.

(பொ-ரை) கங்கையும், இயல்பாலுண்டாகிய வளைவால் அழகு பெற்ற பிறையும், கொன்றைமாலையும் அணிந்த தாழ்ந்த சடையையுடைய சிவபிரான் தந்தருளிய ஒற்றைக் கொம்பையுடையனும், முறம்போலும் இரண்டு செவிகளையுடையனும், * மூன்று மதங்களை யுடையனும், தொங்கிய வாயையுடையனும், ஐந்து கரங்களை யுடையனுமாகிய ஒப்பற்ற யானை முகத்தானுடைய திருவடிகள்; உருகுதலுடன் ஓடப்பெற்ற போன்பால் இடையறாது தம்மை வழிபட்டு இரவும் பகலும் தியானிப்போரறிவின் கண்ணதாகிய மலச்சேட்டையை ஓட்டும். அதுவேயுமன்றி அயனரிவாழ்வும் ஒரு பொருளன்றென வெறுப்ப சிவமாம் தன்மைப் பெருவாழ்வையுந் தரும். (எ—று)

இத்தகைய திருவடிகளுக்கு இடையூற்றை யோட்டி இந்நூல் முடிவு பெறச் செய்தல் அருமையன்றென்பது கருத்து

* மூன்று மதம்:—கன்னமதம், கபோலமதம், கோசமதம். பஞ்சாக்கரத்தின் பேதமாகிய நாலெழுத்தும் பஞ்சாக்கர மென வீழங்கப்படுதல் போல, கழுத்துக்கு மேலுள்ள இரண்டு மதம் மூன்று மதமெனப்பட்டது.

பாயிரம்.

மங்கல வாழ்த்து.

மங்கலமென்பது ஈண்டுநூலின் மாட்சியாம். அதனை கடவுள் வாழ்த்தில் அடக்கிக் கூறுதலின் மங்கல வாழ்த் தெனப்பட்டது.

சிவபெருமான் வணக்கம்.

அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாப் வேதா கமங்களின் குறியி றந்தங்
கறிவினி னருளான் மன்னி யம்மையோ டப்ப ணுகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி. சென்னி வைப்பாம்.

(கொ-டு) அறுவகைச் சமயத்து ஓர்க்கும் எனவும், அங்கு அம்மையோட ப்பனுகி எனவுங் கூட்டுக. ஞானக் கண்ணினுல் இறைவனுடைய சொரூபத் திருமேனியையும், ஊனக் கண்ணினுல் அவ்விறைவனுடைய தடத்தத் திரு மேனியையுங் காணப்பெறுது தத்தங் கருத்திற் கேற்றவாறு பொருளின் முத ண்மை கொள்கின்றுராதலின் ஓர்க்கு மெனப் பிரிக்கப் பட்டது.

(பொ-ரை) புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் சமயம் நான் கனுள் அகச்சமயம் ஒழித்து ஒழிந்த முக்கூற்று (மூவகை) புறச்சமயங்களிலே தனித்தனி அறுவகைப்பட்ட சமயங்களில் நின்றுகொண்டு அவற்றுள்ளும் பல வேறுவகைப்பட ஆராய்ந்தறிகின்ற அவரவர் கொண்ட முதற் பொருளாய் அவ ரின் வேறுகிய அகச்சமயத்தாருக்கு லயம், போகம், அதிகார மென்னும் மூன் றவத்தையின் முறையே சத்தியும், உத்தியோகமும், பிரவர்த்தியும் என்னும் தொழில் வேறுபாடு பற்றி சிவன், சதாசிவன், மகேசனென்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவமென்னும் *தடத்தக் குறியே குறியாயுடைத்தாய். சித்தாந்த சைவர்க்கு அத்தடத்தக்குறியே யன்றி வேதாகமங்களின் கருத்துக் கதீதமாய் உயிர்க்குயிராய் உயிர்கட்கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மை யப்பனுமாகி எங்கணும் எக்காலமும் கலந்து வியாபகமாய் நின்ற சிவபெரு மான் திருவடியைச் சிரமேற் கொள்வாமென்றவாறு.

"இதனுள், அறுவகைச் சமயத்தோர்க்கு மவ்வவர் பொருளா யெனவே மேற்கூறிப்போந்த பரபக்கத்துப் பொருளும், வேறுங் குறியது வுடைத்தாயெனவே முதற்சூத்திர முகலிய வைவர்து சூத் திரத்திற் பெறப்படுந் தடத்தப்பொருளும், வேதாகமங்களின் குறி யிறந்தெனவே இரண்டுமன்றி யேனைச் சொரூபலக்கணங் கூறும்

---

*தடத்தம் - தூலம்

ஆறஞ் சூத்திரப்பொருளும், அறிவினிலெனவே ஆன்ம தெரூபங் கூறு மேழாஞ் சூத்திரப்பொருளும், அருளான் மன்னியெனவே ஞானகரிசனங் கூறுமெட்டாஞ் சூத்திரப்பொருளும், அம்மையோ டப்பனுகி யென்வே ஞானமுமேனையமுனாதிருவுமாகக் காண்படு மொன்பதாஞ் சூத்திரப்பொருளும், செறிவொழியாது நின்றவென வே வகனுகி நிற்றல் கூறும் பத்தாஞ்சூத்திரப்பொருளும், சிவண்டி சென்னிவைப்பாமென்வே அரன்மலரடிக் கிழிருத்தல் கூறும் பதி னொராஞ் சூத்திரப்பொருளும், சென்னி வைப்பா மென்னுஞ் சொல் லியல்பான் அணைந்தோர் தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்தி ரப் பொருளுங் குறிப்பானறியக் கிடந்தன. இங்ஙனந் தொகுத்துக் காட்டுதல் மங்கலவாழ்த்துக்கு இலக்கணமென உணர்க" என்ப. (க)

சிவஞான போதமாகிய

மூன்னூற் சிறப்பு.

—(:o:)—

ன்னையிப் பவத்திற் சோரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னலே தாளிணை தலைமேற் சூட்டு
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டார்நூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றும்.

(தொ-டு.) என்னை யிப்பவத்திற் சோராவகை அருளினலே எடுத்து என்சித் தத்தே தன்னை வைத்து தாள் இணை தலைமேற் சூட்டும்

(பொ-ரை.) பிறப்பு இறப்பாகிய கடலில் அமிழ்ந்துகின்ற என்னை அதன் கண் அழுந்தாத வண்ணம் கருணைக்கையாலெடுத்து என்னறிவின் கண்ணே தன்னுடைய சொரூபத்தை விளக்குதற் கெழுந்தருளி வந்து திருவடிகளை சிர மேற் சூட்டி தீக்கை செய்தருளிய பின்னலையுடைய மேகந் தங்குதற்கிடமாகிய சோலைகள்சூழ்ந்த திரு வெண்ணெய் நல்லூரென்னும் திருப்பதியில் விருப்பமு ற்று வாழ்கின்ற மெய்கண்ட தேவன் மொழி பெயர்த்து உரைத்தருளிச்செய்த சிவஞானபோதநூலை ஏனை ஆசிரியன்மார் செய்த பிரமாண நூல்களெல்லாம் சிரத்தானமாகக் கொண்டு அதனிற் கூறப்படும் வைதிக ஆகமப்பொருட் கூற்றை

இந்நூலில் சொல்லப்படும் பொருளும், அதிகாரியும், பயனும்.

பண்டைநற் றவத்தாற் றேன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டனைத் தானே தூய கதியினிற் றெருட்பன் மார்க்கர்
கண்டனூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றும்.

(பொ-ரை.) முற்சென்மத்தில் நன்றாய் சாதனம் முற்றுப்பெற்றவராகிய சாமுசித்தரும், நித்த அநித்த வேறுபாடுணர்ந்து அநித்தத்தை வெறுத்து நித்தத் தைநாடும் வினையாகிய வைஞைகரும், காணப்படும் பிரபஞ்சத்தைத் தவிர வேறு பொருளுண்டென்றறியாத மூடராகிய பிராகிருதரும் என மனித வர்க்கத்திற் பிறந்தார் முத்திறப்படுவர். அவருள் முற்செய் தவவிசேடத்தால் சாமுசித்தரா ய்ப் பிறந்து வீடு சாதலித்து முதல்வனிடத்தே பத்திபண்ணுகின்ற சிவபத்தரை நூல் வழியாலன்றி தானே சிவபக்தியிற் சேர்ப்பன், ஆகலின் அவர்க்கு நூல் வேண்டாம். வைஞைகராய்ப் பிறந்தார்க்கு ஞானிகளெல்லாம் பிரமாண மென் றுகைக்கொண்ட நூலை ஓதி அதன் வழியால் வீடடைய வேண்டுவது முறை மையாகலின் அவ்வைஞைகராயினர்க்கு சிவபெருமானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடி கூடும் முறைமையினை இந்நூலில் வருத்தக் கூறுகின் றும். (எ-று)

இதனால் பிராகிருதராகிய மூடருக்கு இந்நூல் பயன்படாதென் பது கருத்து. கூடும் முறைமை சொல்லப்படும் பொருள். வைஞை கர் அதிகாரி. திருவடி பயன். (சு)

அவையடக்கம்.

—:o:—

மறையினை னயனுன் மாலான் மனத்தினுன் வாக்கான் மற்றுங்
குறையிலா வளவி னுனுங் கூறரு ணாகி நின்ற
விறைவனுர் கமல பாத மின்றியா னியம்பு மாசை
நிறையினர் குணத்தோர்க் கெல்லா நகையினை நிறுத்துமன்றே.

(பொ-ரை.) வேதங்களினுலும், பிரமாவினுலும், விட்டுணுவினுலும், மன் த்தினுலும், வாக்கினுலும் அனுமானப் பிரமாணத்தினுலும் அறிதற்கு அரிதாய் நின்ற முதல்வனது செந்தாமரை மலர்போலும் திருவடியின் இயல்பை இன்று யான் சொல்ல தென்றெழுந்த எனது புல்லிய ஆசையானது நிறைந்த குணத் தினை யுடையா ரெல்லாருக்கும் இவனறிவு இவ்வளவு தானே என்று எள்ளி கையாடுதற் கேதுவாகும். (எ-று) (ச)

பாயிரம்.

ஒன்றுணும் அறியக்கூடாதோ என்னும் ஆசங்கையை நீக்கல்.

அருளினு லாகமத்தே யறியலா மளவி னுலுந்
தெருளலாஞ் சிவனே ஞானச் செய்திபாற் சிந்தை யுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
விருளெலா மிரிக்க லாகு மடியமோ டிருக்க லாமே.

(கொ-டு.) சிவனே ஆகமத்தே அருளினுலறியலாம், அளவினுலுந் தெருளலாம் சிந்தையுள்ளே ஞானச் செய்தியால் மருளெலாம் நீங்கக் கண்டுவாழலாம், பிறவிமாயா இருளெலாம் இரிக்காலாகும், அடியமோடிருக்கலாமே.

(பொ-ரை.) இறைவனியல்பு மேற்கூறியவாறு ஒன்றுணுமறியப்படாவாயினும் அவ்விறைவனே அவனருளிய சிவாகமத்தின் வழி நின்ற அனுபவமுடைய தேசிகரருளிச் செய்யும் உபதேசத்தால் கேட்டுமறியலாம்:உபதேசப் பொருளைப் பிரமாணத்தால் சிந்தித்து மறியலாம். சிந்தித்ததனைசிவஞானத்தால் தன்னறிவின் கண்ணே மாசறத்தெளிந்துமறியலாம். அத்தெளிதலினுல் பிறவிமாயாமைக் கேதுவாகிய பாசத்தைக் கெடுக்கலாம். அப்பாசக் கேட்டால் அச்சிவனடியாரோடு கலந்து நிட்டை கூடி சிவானந்த அனுபூதியும் பெற்றிருக்கலாம்.

(எ-று)

(நி)

மங்கல வாழ்த்து முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் சு.

அளவை இலக்கணம்.

—:o:—

அளவை எனினும் பிரமாணமெனினும் ஒக்கும். அஃதாவது பொருள்களை அளக்கும் கருவியாம். பொருள் காணப்படும் உலகப் பொருளும், காணப்படாத பதி, பசு, பாசப்பொருளுமென இருவகைப்படும். அவற்றுள் காணப்படும் பொருளை எண்ணல், நிறுத்தல், *நீட்டல், †முகத்தல், என்னும் நான்கு கருவிகளான் அளக்கலாம். காணப்படாத பதி, பசு, பாசப்பொருளை அக்கருவிகளான் அளக்கமுடியாது. அதனை ஆகமம் அநுமானமென்னுங் கருவியைக்கொண்டு ஆன்மசிற்சத்தியால் அளத்தல் கூடும். ஆகலின் அளவை இலக்கணம் முதற்கட் கூறுகின்றார். இதனால் ஆன்ம சிற்சத்தியே பிரமாண மென்பதும் கருவிகளும் உபசாரத்தால் பிரமாணமெனப்படு மென்பதும் அறிக.

---

*நீட்டல் - கொலாலளத்தல். †முகத்தல் - படியாலளத்தல்.

எல்லாப் பிரமாணங்களும் மூன்றிலடங்கும் என்பது.

அளவை, காண்டல் கருதலுரை யபாவம் பொருளொப் பாதென்ப,
ளவை மேலு மொழிபுண்மை யைதி கூத்தே டியல்பெனநான்
களவை, காண்ப ரனவையிற்றின் மேலு மறைவ ரவையெல்லா
மளவை, காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றி னடங்கிடுமே.

(பொ-ரை.) பிரமாணமாவது பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், இன்மை, அருத்தாபத்தி, உவமை என ஆறுவகைப்படும் என்பாரும் அவ்வாறுவகைப் பிரமாணங்கட்கு மேலும் பாரிசேடம், சம்பவம், உலகவாதம், சகசம் என நான்கு பிரமாணமுள வென்பாரும், அப்பத்துக்கு மேலும் பிரமாணமுள வென்பாரு முளர். அவையெல்லாம் பிரமாணமே யாயினும் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்ற இம்மூன்றில் அவையாவும் அடங்குவனவாம். (எ-று)

இன்மை என்பது :—என்றும் இன்மை, ஒன்றி னொன்றின்மை, இல்லதனின்மை, உள்ளதனின்மை, அழிவுபாட்டின்மை, என ஐவகைப்படும். அவை முறையே முயற்குக் கோடில்லை, கடத்திற் படமில்லை, படத்திற் கடமில்லை, பெரியோர் வாயிற் பொய் இல்லை, யாவினையைப் *பந்தியிற் கண்டிலம், கடம் உடைந்தால் அஃதில்லை வென்பனவாம்.

அருத்தாபத்தி இவ்வூரில் கொடுப்பவன் இவனெனில் கொடா தாருமுண்டென்பது,

உவமை கண்ணன் கருமுகில்போ லென்பது.

பாரிசேடம் மூவரிலிருவர் கள்வர் அல்லரெனில் மற்றவன் கள்ள வனென்பது,

சம்பவம் நூற்றிலே தொண்ணூறுண்டென்பது.

ஐதிகம் இம்மாத்திற் பேய், உண்டென்பது,

சகசம் மாப்பூத்த தெனில் மாம்பூத்த தென்பது.

பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் மூன்றும் முன்னர் கூறப் பட்டிம். (க)

---

* பந்தி - யாவினை கட்டுமிடம்.

அளவை இலக்கணம்.

பிரத்தியட்சமுதலிய மூன்றின் இலக்கணம்.

மாசறு காட்சி யையந் திரிவின்றி விகற்ப முன்ன
வாசற வறிவதாகு மனுமான, மதின பாவம்
பேசறு மேதுக் கொண்டு மறைபொருள் பெறுவ தாகுங்
காசறு முரையிம் மான தடங்கிடாய் பொருளைக் காட்டும்.

(கொ-டு.) விகற்பமுன்ன ஐயந்திரிவு இன்றி ஆசு அற அறிவது மாசு அறு காட்சியாகும் மறைபொருள் அதினுபாவம் பேசுறும் ஏதுக்கொண்டு பெறுவது அனுமான மாகும் இம்மானத்து அடங்கிடாப் பொருளைக் காட்டும், காசு அறும் உரை.

நிருவிகற்ப மென்பது விகற்பமெனத் தலைக் குறைத்து நின்றது. விகற்ப முன்ன ஐயந்திரிவின்றி என்பதனை அநுமானத்தோடும் உரையோடுங் கூட்டி உரைக்க.

(பொ-ரை-) பிரதியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் அம்மூன்றனுள் பெயர், சாதி முதலிய விகற்பமின்றி நிருவிகற்பவுணர்வை முன்னதாகக் கொண்டு ஐயவுணர்வும், விபரீத வுணர்வுமின்றி விடயங்களை நேரேயறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி குற்றமற்ற காட்சியளவை எனப்படும். அவ்வாறு நேரேயறியப்படுவதன்றி மறைந்துநின்ற பொருளை அதனைவிட்டு நீங்காது எக்காலத்தும் உடனாய் நிகழும் ஏதுவைக்கொண்டு ஐயவிபரீதக் குற்றமின்றி அறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி அநுமான அளவை எனப்படும். இவ்விரண்டு பிரமாணங்களாலும் அறியப்படாத பரலோக, பாதாளலோக முதலிய பொருள்களை அறிவுடையோர் வாக்கியங்கொண்டு ஐயவிபரீதக் குற்றமின்றி அறிவதாகிய ஆன்மாவினது ஞானசத்தி குற்றமற்றஆகம அளவை எனப்படும்.

(எ-று) (உ)

நிருவிகற்பம் முதலிய நான்கின் இலக்கணம்.

கண்ட பொருளை யிரட்டுறவே கருத லையந் திரியவே
கொண்ட றிரிவாம் பெயர்சாதி குணமே கன்மம் பொருளெனைவந்
துண்ட விகற்ப வுணர்வினுக்குப் பொருளி னுண்மை மாத்திரத்தின்
விண்ட லில்லா வறிவாகும் விகற்ப மில்லாக் காட்சியே.

(கொ-டு.) விண்டல் இல்லா பொருளின் உண்மை மாத்திரத்தின் அறிவு விகற்பமில்லாக்காட்சியே, ஆகும் கண்ட பொருளை இரட்டுறவே கருதல் ஐயம், திரியவேகொண்டல் திரிவாம் பெயர் சாதி குணமே கன்மம் பொருள்எனை ஐந்து அவிகற்ப உணர்வினுக்கு உண்டு.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

(பொ-ரை.) மேற்கூறிப்போந்த நிருவிகற்பம், ஐயம், விபரீதம், நேரே யறியுஞ் சுதாய்சவிகற்பமென்னும் காட்சி நான்கனுள் பெயர் முதலியவற்றுல் பகுத்தறி தலின்றி இஃதொன்று தோன்றுநின்றதென பொருளுண்மை மாத்திரையே யறியும் ஞானசக்தி நிருவிகற்பக் காட்சி எனப்படும். அங்ஙனம் நிருவிகற்ப மாய் அறிந்த பொருளை இஃது யாதோவென ஒன்றிற் றுணிவுபிறவாது ஆரா யும் ஞானசக்தி ஐயக்காட்சி எனப்படும். அப்பொருளை வேறுபொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஞானசக்தி திரிபுக்காட்சி எனப்படும். *பெயர், ஜாதி, குணம், கன்மம், பொருள் என்னும் ஐந்தும் அப்பொருட்கண் உள்ளவாறி விளங்க உணரும் ஞானசக்தி சவிகற்பக்காட்சி எனப்படும். (எ-று).(ங)

பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் மூன்றின் பாகு பாடும் அவற்றுனளக்கப்படும் பொருளின் பாகுபாடும்.

காண்டல் வாயின் மனந்தன்வே தனேயோ டியோகக் காட்சியென
வீண்டு நான்கா மனுமானந் தனக்கும் பிறர்க்கு மென்றிரண்டா
மாண்ட வுரைதந் திரமந்திரத்தே தாபதே சச்சொல் லெனமூன்றும்
பூண்ட வளவைக் கெதிர்புலன்றன் னியல்பு பொதுவென் றிரண்டாமே.

(பொ-ரை.) பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் அம்மூன் றனுள் பிரத்தியட்சப்பிரமாணமாவது இந்திரியப் பிரத்தியட்சம், மானதப்பிர த்தியட்சம், தன் வேதனைப்பிரத்தியட்சம், யோகப்பிரத்தியட்சம் என நான்கு வகைப்படும். அநுமானப்பிரமாணமாவது தானறிதற் பொருட்டனுமானமும், பிறர்க் கறிவித்தற் பொருட்டனுமானமுமென இரண்டு வகைப்படும். மாட் சிமைப்பட்ட ஆகமப் பிரமாணமாவது தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என மூன்றுவகைப்படும். பொருந்திய இப் பிரமாணங்களால் அறியப்படும் பொருள்களது இயல்பு சிறப்பியல்பு, பொதுவியல்பென இரண்டு வகைப் படும். (எ-று) (ச)

சிறப்பியல்பு பொதுவியல்பின் இலக்கணம்.

அன்னிய சாதி யுந்தன் சாதியு மகன்று நிற்ற
றன்னியல் பன்னி யத்தைத் தவிர்ந்துதன் சாதிக் கொத்த
றன்னிய பொதுவி யற்கை சொன்னவிவ் விரண்டி னுள்ளே
மன்னிய பொருள்க ளியாவு மடங்கிடு மான முற்றுல்.

---

* பெயர் - மாவென்பது, சாதி - மாவினது தன்மை, குணம்-வண்ணம் வடிவு முதலாயின, கன்மம் - அசைதல் நிற்றல் முதலாயின, பொருள் - மாம்.

அளவை இலக்கணம்.

(கொ-டு) அன்னியசாதியுந் தன்சாதியுமகன்று நிற்றல் தன்னியல்பு அன்னிய த்தைத் தவிர்ந்து தன் சாதிக்கேகாத்தல் துன்னிய பொது வியற்கை மானம் மன் னிய பொருள்கள் உற்றுல் யாவும் சொன்ன இவ்விரண்டினுள்ளே அடங்கிடும்.

(பொ-ரை) சிறப்பியல்பு பொதுவில்பு என்ற இரண்டனுள் ஒரு பொருட்கு வேற்றுச் சாதிப் பொருளினும் தன் சாதிப் பொருளினும் அதாவது தேமா வெ ன்ற விடத்து பலா முதலிய வேற்றுச் சாதியினும் புளிமா முதலிய தன் சாதியி னும் செல்லாது தனக்கு மாத்திரையே நிலைபெறுந் தன்மை சிறப்பியல்பு, வே ற்றுச் சாதிப் பொருண் மாத்திரையிற் செல்லாது தன் ஜாதிப் பொருட்கெல் லாம் அதாவது மாவென்ற பொழுது பலா முதலியவற்றை நீக்கி தேமா முத லிய தன் ஜாதிக்கெல்லாம் ஒப்பநிலைபெறுந்தன்மை பொதுவியல்பு. பிரத்தி யட்சமுதலிய பிரமாணங்களால் பொருந்திப் பொருள்களை அறியுமிடத்து அப் பொருள்களெல்லாம் சிறப்பியல்பு பொதுவியல் பென்னும் இவ்விடத்துக் கூறிய இவ்விரண்டியல்பினுள்ளடங்கும். (எ—று).

இது சூசிகடாக நயம். அதாவது ஊசியும் கடாரமும் செய்யக் கொடுப்பின் வாங்கியவன் கடாரத்திற்கு முன்னும் ஊசிக்குப் பின் னும் பொருள் வாங்கிய பொழுதினும் ஊசி சிறுமையை யாதலின் முன்னர்க் கொடுப்பது போல் பிரமாணங்களின் இலக்கணம் பொரு ள்களினிலக்கண மென்னு மிரண்டனுள் பின்னையது சுருங்கியதான தால் முன்னர்க் கூறப்பட்டது. (டு)

இந்திரியக்காட்சி மானதக்காட்சிகளினிலக்கணம்.

உயிரிமே லுணர்வு வாயி லொளியுரு வாதி பற்றிச்
செயிருறு விகற்ப மின்றித் தெரிவதிந் திரியக் காட்சி
யயர்வினிந் திரிய ஞான மைம்புலன் சார்ந்து யிர்க்கண்
மயர்வற வந்த ஞான மானதக் காண்ட லாமே.

(கொ-டு) ஐம்புலன் சார்ந்து அயர்விலிந்திரிய ஞானம் மயர்வுஅற உயிர்க் ண்வந்த ஞானம் மானதக்காண்டலாமே. புத்தியையுயிரென்றுபசரித்தார்.

(பொ-ரை) மேற்கூறிய இந்திரியப் பிரத்தியட்ச முதலிய காட்சி கான்க ளுள் ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கி ஓடும் அறிவாகிய சிற்சத்தி கண் முதலிய பொறிகளையும் அப்பொறிகட்குத் துணையாய் உடனிற்கும் தெயுமுத லிய பூதங்களையும் அப்பூதங்கட்கு முதற்காரணமாய் அவற்றைவிட்டு நீங்கா உருவ முதலிய தன் மாத்திரைகளையும் ஆதாரமாகக் கொண்டு ஐயவிபரீதக்

ருத்தங்களும் பொருந்திய பெயர் ஜாதி முதலிய விகற்பமுமின்றி உருவ முத
லிய விடயங்களை நிருவிகற்பமாய் அறியும் அறிவு இந்திரியக் காட்சி எனப்படு
ம். அவ்வாறு அறிந்த பின்னர் அக்காட்சியை மீள மறத்தலின்றி பெயர் ஜாதி
முதலிய வற்றால் விபரீதமாதலின்றி உள்ளவாறு நிச்சயமாய் புத்தி தத்துவத்
தின்கண் வருதலாலுகிய சவிகற்ப உணர்வுமானதக் காட்சியெனப்படும். (எ—று.)

புத்தியையின்றி இந்திரியம் தொழிற்படாவாயினும் புத்தி
துணையாக உள்நிற்ப இந்திரியம் முற்பட்டுத் தொழிற்படுதல் பற்
றி இந்திரியக் காட்சி எனவும், மனம் தொழிற் படுங்கால் இந்திரிய
மும் தொழிற்படினும் மனத்தின் தொழிலாகிய பகுத்தறிவு முற்ப
ட்டும் இந்திரியத்தின் றொழிலாகிய பொருள்மாத்திரையான அறிவு
உட்பட்டும் நிற்றலின் மானதக் காட்சி எனவும் வகுத்தவாறு உய்த்
துணர்க. (சு)

தன் வேதனைக் காட்சி யோகக் காட்சிகளின் இலக்கணம்.

அநந்தின்பத் துன்ப முள்ளத் தறிவினுக் காக மாதி
கருந்தன்வே தனையாங் காட்சி சமாதியான் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால விபல்பகல் பொருள்க ளெல்லா
மிருந்துணர் கின்ற ஞான மியோகநற் காண்ட லாமே.

(கொ-டு) தன்வேதனைக் காட்சியாம் மலங்கள் சமாதியால் வாட்டிஇரு
ந்து பொருந்திய தேசகால இயல்பு அகல் பொருள்கள் எல்லாம் உணர்கின்ற
ஞானம் நல்யோகக் காண்டலாமே.

(பொ-ரை) அம் மானதக் காட்சியால் பகுத்தறியப்பட்ட பொருளில் மன
த்தின் குணமாகிய சத்துவகுண விளக்கத்தாலின்பமும், இராசதகுணவிளக்கத
தால்துன்பமும், தமோகுண விளக்கத்தால் மோகமும் புருடனது அறிவிற்கு
விளங்கும்படி காலம், நியதி, கலை, வித்தை, அராகம் முதலிய ஐந்து தத்துவங்க
ளாலும் சேர்க்கப்படும். அவ்வின்பதுன்பங்களை அறியும் ஞான சக்தி தன் வேத
னைக் காட்சி எனப்படும். தானுகிய ஆன்மா சுகதுக்கமாகிய வேதனையில் அழு
ந்துதலால் தன் வேதனைக்காட்சி என்ப்பட்டது. இவ்வாறு சுக துக்க வசப்ப
டாது அங்ஙனம் வசப்படுதற்கேதுவாய் தடைசெய்து நின்ற மல சத்திகளை
இயமம், நியமம் முதலிய யோகசமாதியாற் கெடுத்து ஓரிடத்து ஒரு காலத்து
இருந்தபடியிருந்து பொருந்தப்பட்ட மூவிடத்து முக்காலத்தும் இயல்பாக விரி
ந்த பொருள்களெல்லாவற்றையும் காண்கின்ற காட்சியாகிய ஞான சத்தி நன்
மையாகிய யோகக்காட்சி எனப்படும். (எ—று) (எ)

அளவை இலக்கணம்

இருவகை அநுமானங்களின் இலக்கணம்.

பக்க மூன்றின் மூன்றே தது வுடைய பொருளைப் பார்த்துணர்த்
தக்க ஞானந் தன்பொருட்டாம் பிறர்த்தம் பொருட்டா மநுமானம்
தொக்க வவ்வற்றுற் பிறர்தெளியச் சொல்ல லர்கு மச்சொல்லு
மிக்க வந்று வயத்தினெடு வெதிரே கச்சொல் லெனவிரண்டாம்.

(கொ-டு) மூன்று ஏதுவுடைய பொருளை பக்கமூன்றின் பார்த்துணரத்தக்க ஞானம் தன் பொருட்டாம் தொக்கஇவற்றால் பிறர் தெளியச் சொல்லல் பிறர்த்தம் பொருட்டனுமானமாம் ஆகும் அச்சொல்லும் மிக்க அன்னுவயத்தினெடு வெதிரேகச் சொல் என இரண்டாம்.

(பொ-ரை) இயல்பு முதலிய மூன்று ஏதுவினுள் ஒரு ஏதுவுடைய பொருளை பக்க முதலிய மூன்றின் வைத்து ஏதுவை விட்டு நீங்காததாகிய அவினாபாவம் பற்றி ஆராய்தற்குரிய ஞான சக்தி தன் பொருட்டனுமானம். பொருந்திய அவ் வேதுக்களானே தானறிந்ததனை பிறர் அறியப் போதிப்பதாகிய ஞான சக்தி பிறர் பொருட்டனுமானம். அங்ஙனம் பிறரறியப் போதித்தலாகிய அநுமானச்சொல் மேலாகிய உடம்பாட்டுச் சொல்லும் எதிர்மறைச் சொல்லுமென இரண்டு வகைப்படும். (எ...று). (அ)

பக்க மூன்றின் பெயருமிலக்கணமும்.

மூன்று பக்கம் பக்கநிகர் பக்க நிகரில் பக்கமெனத்
தோன்றும் பக்கந் துணிபொருளுக் கிடமா முவமை நிகர்பக்க
மான்ற பொருள்சென் றடையாத விடமா நிகரில் பக்கமுத
லென்ற விரண்டும் பொருளுணர்மைக் கிடமா மொன்று பொருளின்றும்.

(பொ-ரை) பக்கமூன்றுவன :—பக்கமும், சபக்கமும், விபக்கமும் என்பனவாம். சபக்கமென்பது சமானமான பக்கம். விபக்கம் என்பது சமானமில்லாதபக்கம். அவற்றுள் துணியற்பாலதாய பொருளிருக்குமிடம் பக்க மெனப்படும். அப் பொருளுக்கு உவமையாய் எடுத்துக் காட்டப்படுவதான் பொருளிருக்குமிடம் சபக்கமெனப்படும். மாட்சிமையாகிய அப்பொருளில்லாதவிடம் விபக்கமெனப்படும். இம் மூன்றனுள் முதற்கட் பொருந்திய பக்கம், சபக்க மிரண்டும் பொருள் உண்டென அறிதற் கிடமாம். ஏனை விபக்கம் பொருளில்லை என்றிதற்கிடமாம். (எ...று).

புகை காணப்படுகின்ற மலையில் அக்கினி உண்டென்றறிதலால் மலை பக்கத்திற்கும். புகையிருக்கும் அடுக்களையில் அக்கினி யிருத்தல் போல வென்றறிதலால் அடுக்களை சபக்கத்திற்கும், புகையில்லாத தடாகத்தில் அக்கினியில்லை யென்றறிதலால் தடாகம் விபக்கத்திற்கும் உவமானமாகும். (கூ)

ஏது மூன்றின் பெயருமிலக்கணமும்.

மூன்று மியல்புகா ரியத்தோ டநுப லத்தியிவை
யோதி னியல்பு மாமரத்தைக் காட்ட லுறுகா ரியம்புகைதன்
னுதி யாய வனல்காட்ட லாகு மநுப லத்தியது
சீத மின்மை பனியின்மை காட்டல் போலுஞ் செப்பிடினே.

(பொ-ரை)மேல் எடுத்துக்கொண்ட மூன்றேதுவாவன. இயல்பும், காரியமும், அநுபலத்தியுமாம். இவற்றிற்கு இலக்கணங் கூறுமிடத்து மா முதலிய சொல்லின்கண் மா முதலிய பொருளை உணர்த்துமிடத்து அச்சொற்களில் இயல்பால் உளதாகிய ஆற்றல் இயல்பு ஏதுவெனப்படும். புகை முதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தம் காரணங்களை யுணர்த்துமிடத்து அக்காரியங்கள் பொருந்திய காரிய ஏது எனப்படும். சொல்லுமிடத்து குளிரில்லாமை முதலிய காரியத்தின் இன்மைகள் பனியில்லாமை முதலிய காரணத்தின் இன்மைகளை உணர்த்து மிடத்தும் பனியில்லாமை முதலிய காரணத்தின் இன்மைகள் குளிர்வராமை முதலிய காரியத்தின் இன்மைகளை உணர்த்து மிடத்தும் அவ்வின்மைகள் அநுபலத்தி ஏது எனப்படும் (எ—று).

முன்னிலைப் பொருளையுறிதல், மறைந்த பொருளையறிதல், இல்லாத பொருளை யறிதல் என உணர்ச்சி மூவகை. இவற்றிற்கு முறையே இயல்பு, காரியம், அநுபலத்தி என்னும் மூன்றும் ஏதுவாயின. காரியம் எனினும் உபலத்தி எனினும் ஒக்கும். உள்ளதென்னும் உணர்விற்கு விடயம் உபலத்தி, இல்லதென்னும் உணர்விற்கு விடயம் அநுபலத்தி; இவை முறையே புகையுள்ளதால் அக்கினி உண்டு, சீதமின்மையால் பனியில்லை என்றறிவதுபோல்வன. மா என்னுஞ் சொல் மரம், குதிரை, வண்டு முதலியவற்றின் பெயராயினும் மாப்பூத்த தென்றவிடத்து மரத்தையும், மாப்பாய்ந்த தென்றவிடத்துக் குதிரையையும், மாப்பறந்த தென்றவிடத்து வண்டையும் உணர்த்துதல் சகஜமாதலின் இயல்பெனப்பட்டது. (கo)

உடம்பாட்டுச் சொல் எதிர்மறைச் சொற்களின் இலக்கணம்.

புகையா லனலுண் டடுக்களோ போ லென்னப் புகற லந்நுவயம்
வகையா மனலி லாவிடத்துப் புகையின் றரு மலரிலெடு
முகையார் நீரிற் போலென்று மொழிதல் வெதிரே கச்சொலினவை
தொகையா ருறுப்பைந் தொடுங்கூடச் சொல்லுவாருமுளர்தணிந்தே

(பொ-ரை)மேல் எட்டாவது செய்யுளிற்கூறிய உடம்பாடு எதிர்மறையென்னும் சொல்லிரண்டனுள் புகையுள்ளவிடத்தே நெருப்புண்டென்பதும் அதற்கு புகையிருக்கும் அடுக்களையை உவமை கூறுவதும் உடன்பாட்டுச் சொல்லாம். விளக்கமாகிய நெருப்பில்லாதவிடத்துப்புகையில்லை என்பதை மலரும் அரும்பும் நிறைந்த தாமரையோடையை உவமை கூறுஞ் சொல் மறுதலைச் சொல் இவ்விரு வகைச் சொற்களையும் மேற்கோளும், எதுவும், உவமானமும், உபநயமும், நிகமனமும்என்னும் தொகை பொருந்திய ஐவகை உறுப்புக்களால் இணங்க வைத்துத் தெளியக் கூறுவாருமுளர். (எ...று).

மேற்கோள்–என்பது மேற்கொள்ளுதல் என்னும் பொருட்டு. அது இம்மலை தீயுடைத்தென்பது. எது–புகையிருத்தலினை யென்பது. உவமை–புகையிருக்கும் அடுக்களை போலென்பது. உபநயம்–நெருப்பில்லாத தாமரைத் தடாகத்தில் புகை யில்லை என்பது. நிகமனம்–ஆகலால் இம்மலை தீயுடைத்தென்பது. இவ்வைந்தனுள் உபநயம் மறுதலைச் சொல். ஏனைய நான்கும் உடன்பாட்டுச் சொல். இவ்வாறு இருசொல்லையும் ஐந்துறுப்புக்களால் இணங்க உரைப்பவர் தார்க்கிகர். (கக).

அனுமானத்தின் அடங்கும் பிற அளவைகளின் இலக்கணம்.

போது நாற்றத் தாலறிதல் பூர்வக் காட்சி யனுமான
மோது முரையா லறிவினள வுணர்தல் கருத லனுமான:
நீதி யான்முற் கன்மபல நிகழ்வ திப்போ திச்செய்தி
யாதி யாக வரும்பயனென் றறித லுரையா லனுமானம்.

(கொ:டு) நீதியான் இச்செய்தி முன்கன்ம பலம் இப்போது நிகழ்வது ஆதியாக வரும்பயன் என்று அறிதல் உரையாலனுமானம்.

(பொ-ரை)முதலாவது செய்யுளில் மேலும் பிரமாணங்கள் உளவென்பாரு மென்றமையால் அப்பிரமாணங்கள் எவையோ வென்னும் சங்கதத்தை நீக்குவ

தற்கு இவ்விடத்து சிலபிரமாணங்களின் இலக்கணம் கூறுகின்றார் அவையாவ
மாறு. வாசனை முதலிய ஏதுவைக் கொண்டு வாசனையுடைய புட்பத்தை முன்
கண்ட வுணர்ச்சியிஞல் இவ்விடத்து புட்பம் உண்டென்றறிதல் பூர்வக்காட்சி
யநுமானமெனப்படும். சொல்லப்பட்ட வார்த்தை முதலிய ஏதுவைக்கொண்டு
சொல்லிய அவனறிவின் அளவுமுதலியவற்றை அறிவது கருதலனுமானமெனப்
படும். இவ்விரண்டினும் வேறாய் இன்பமும் துன்பமும் முற்பிறவியில் செய்த
வினை எனப்படும் முயற்சியே யாஞல் இப்பொழுதும் அவ்வினைகளைச் செய்
யின் மேலைக்கு ஆகுமென்றாற் போல் நூல்களுள் சொல்லியது கொண்டு சொ
ல்லாத பொருளையும் ஒப்புமை பற்றி யூகித்துத் துணிதல் உரை அனுமான
மெனப்படும். (எ–று) (கஉ)

ஆகமப்பிரமாணம் மூன்றின் இலக்கணம்.

வேறு.

அகாதியே யமல ரூப வறிவனூ லாக மந்தான்
பிறதிமா றின்றீப் பேண றந்திர மந்தி ரங்கண்
மறைதிக ளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகுந்
தகுதியீ றிலாதான் றன்மை யுணர்த்துத லுபதே சந்தான்.

(பொ-ரை) அகாதிமுத்த சித்தருருவாகிய முதல்வனருளிச்செய்த நூல்களென
ப்படும் வேதாகமங்கள் கருமகாண்டம், உபாசனைகாண்டம், ஞானகாண்ட மென
மூவகைப்படும். அவற்றுள் கருமகாண்டம்பற்றி பின்னைய உபாசனைகாண்டம்
ஞான காண்டங்கட்கு மாறுபாடின்றி அனுட்டித்தலை அறிவது தந்திர கலையா
கிய உரையளவை எனப்படும். உபாசனைகாண்டம்பற்றி மன முதலிய கருவி
களை யடக்கித் தெய்வத்தை வழிபடும் உண்மையை அறிவது மந்திர கலையாகிய
உரையளவை எனப்படும். ஞானகாண்டம் பற்றி முதலும் முடிவு மில்லாத
இறைவன் தன்மைகளைத் தானுணருமாறும். பிறர்க்குணர்த்துமாறும் அறிதல்
உபதேச கலையாகிய உரையளவை எனப்படும். (எ–று) (கந.)

அனுமான அளவையை உபயோகிக்குமிடத்து உண்டாம்
குற்றங்களின் பாகுபாடு.

வேறு.

சண்டி பக்கப் போலிதான் கேதுப் போலி யொருமூன்றுப்
வேண்டு மெழுமூன் றுதாரண் விளக் குவமைப் போலி யீரொன்பான்
காண்டற் கோல்வித் தானமிதன் டிருபத் திரண்டதன் குற்றினைவு
யாண்டு மொழிவ தலையெல்லா மளக்கி லறுபத் தைந்தாகும்.

அளவை இலக்கணம்

(பொ-ஏ) மேற் கூறிப்போந்த அநுமானத்திற்குரிய பக்கமுதலிய தினைகளுள் தணிபொருட் கிடனுதலாகிய பக்க இலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபக்க மொத்து பக்கம்போலத்தோன்றுவதாகிய பக்கப் போலி தணியும் பொருட்கு இடனுகாததாயும், அதற்குஒருபக்கம் இடனுகாததாயும், தணிந்த பொருட்கு இடனுவதாயும், அதற்கு ஒருபக்கம் இடனுவதாயும் என நான்கு வகைப்படும். ஏதுவிலக்கணத்திற் குறைபாடுடைத்தாயும் ஒருபக்கம் ஒத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலி தணியப்பட்டாததாயும், மறுதலைக்கட்படுவதாயும், ஒருதலைப் படாததாயுமென மூவகைப்பட்டு விரியான் இருபத்தொன்றும். உவமை இலக்கணமின்றியும் உவமைபோலத் தோன்றுவதாகிய உவமைப் போலி உடம்பாடு பற்றியும் எதிர்மறைபற்றியும் இருவகைப்பட்டு விரியால் பதினெட்டு வகைப்படும். இனி தர்க்கவாதத்தின்கண் பேச்சத்தெரியாமை யாகிய தோல்வித்தானம் மயங்கப் பேசுதலும் சும்மாவிருத்தலுமென இரு வகைப்பட்டு விரியான் இருபத்திரண்டாம். அவை யெல்லாம் அளக்குமிடத்து அறுபத்தைந்தாம். இவைகளை விசாரிக்கில் அநுமான அளவைக்கு எவ்விடத்திலும் குற்றங்களாமென்று விடுப்பர். (எ—று.)

இவ்வறுபத்தைந்தும் குற்றமாதலின் ஆகம அளவைக்கு முன்னுக அநுமானத்தே தாடுவையாது இறுதிக்கண் வைத்தார். (வி-ரை)

அளவை இலக்கணம் முடிந்தது

ஆகத்திருவிருத்தம் 20.

பிரமாணவியல்:

பிரமாணத்தால் பதி, பசு, பாசமெனுமீப் பொருள் உண்டென்று சாதித்தலில் முதல் மூன்று சூத்திரமும் பிரமாணவிய லெனும் பெயராயிற்று. பல சூத்திரங்களின் தொகுதி இயல்.

முதற் சூத்திரம்.

பதி உண்மை.

பிரத்தியட்சம், அநுமானம் ஆகமமென்னும் பிரமாணம் மூன்றுள்ளுள் பிரத்தியட்சம் காணப்படும் பொருளையும், அநுமானம் ஆகமம் இரண்டும் காணப்படாத பொருளையும் அளத்தற்குக் கருவியாகலின் காணப்படாத பதி, பசு, பாசங்கள் உண்டென்பதை ஆகமத்தை ஒப்புக்கொள்ளாதாரும் ஏற்குமாறு அநுமானப் பிரமாணத்தாலறிவிக்கத்தொடங்கி இயல்பு, காரியம், அநுபலத்தி என்னும் மூன்றேதுக்கொண்டு மறைந்து நின்ற பொருளை உணர்த்துவது அநுமானமாதலின் அவற்றுள் குடத்தைக் கண்டவிடத்தே செய்வோனுகிய குயவன் உண்டெனக்கொள்ளும் இயல்புபோலத்தோன்றி நின்றழியும் பிரபஞ்சத்தைக் கண்டமாத்திரத்தே அத்தொழிலைச் செய்யும் கடவுள் உண்டென நாட்டுகின்ற இயல்பு ஏது எனப்படும் அநுமானப் பிரமாணம் முதற் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

உலகம் தோன்றி நின்றொடுங்குதலின் ஒரு கருத்தாவை உடைய.
தெனச் சூத்திரப் பொருளை தொகுத்துக் கூறுகின்றது.

ஒருவனே டொருத்தி யொன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாத லாலே
தருபவ னெருவன் வேண்டுந் தான்முத லீறு மாகி
மருவிடு மாதி முத்த சித்தரு மன்னி நின்றே.

(தொ-டு) ஆதலால் தருபவனெருவன் வேண்டும் ஈறுமாகியே ஆதி முத்த சித்தருமன்னி நின்றே மருவிடும் தான்முதல்: ஆகி யென்பது ஊனவனென்பதால் பெயர்.

(பொ-ரை) அவனென்றும், அவளென்றும், அதுவென்றும் தனித் தனி வேறுபாடுடைத்தாய்க் கூறப்படும் பிரபஞ்சக் கூட்டம் உள்ளதாகிய-கா

ணத்தினின்று தோன்றுகின்ற காரியமுறையால் தோன்றி நின்று அழிதலை யுடையது. ஆதலால் அப்பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒருகர்த்தா வேண்டப்படும். அக்கருத்தா முன்னெடுக்குதற் கேதுவாய் நின்ற சங்கார காரணனேயாகும். அக்காரணன் பிரபஞ்சம் ஒடுங்கிய பின்னும் அநாதிமுத்த சித்துருவாய் நிலைபெற்று நின்று அநாதி பெத்த சித்துருவின் பொருட்டு மீளவும் அப்பிரபஞ்சத்தை முன்போலவே தோற்றுவிப்பன். இவ்வாறு ஒடுக்கியும் தோற்றுவித்தும் செய்வதனால் அச்சங்காரகாரணனே உலகிற்கு முதற் கடவுள். (எ—று.) (க)

அநாதி முத்தசித்துரு வென்பது அநாதியே அதாவது இயல்பாகவே பாசங்களினின்றும் விடுபட்ட ஞானவடிவினன். அநாதி பெத்தசித்துருவென்பது இயல்பாகவே பாசத்தோடு கூடிய ஞானவடிவினன். முன்னையது கடவுள். பின்னையது உயிர்.

இம்முதற் செய்யுள் முதனூற் சிவஞான போதம்போலமூன்று கூற்றையுடையது. அவற்றுள் முதற்கூறு—ஒருவனேனும் ஒருத்தி .....தருபவன் ஒருவன் வேண்டும்.

இரண்டாங்கூறு—ஈறுமாகி அநாதி முத்தசித்துருவாய் மன்னி நின்று மருவுவித்திடும்.

மூன்றாங் கூறு—தானே முதல்.

முத*லதிகரணம்.

"ஒருவனேனும் ஒருத்தி.....,.....தருபவன் ஒருவன் வேண்டும்" என்பது. இம் முதலதிகரணம் வருமுறை ஒருகூறும், வந்துநின்று போவது ஒருகூறும், தருபவன் ஒருவன் வேண்டும் என்பது ஒருகூறுமாக மூன்கூற்றையுடையது.

உலகாயதர்மதம் பற்றி வந்துநின்று போவதை வலியுறுத்துகின்றது.

உதிப்பது மீறு முண்டென் றுரைப்பதிங் கென்னை முன்னோர்
மதித்துல காதி யாக மன்னிய தென்ப தென்னில்
னிதற்கிபா னநுமா ணதி பெடனிப்பூ தாதி யெல்லாம்
விதிப்படி தோற்றி மாயக் காணலான் மிதனி னிக்கே.

---

* அதிகரணம் = கூறு

(கொ-மி) முன்னோர் மதித்து உலகு அநாதியாக மன்னியது என்பர் உதிப்பதும் சாறும் உண்டு என்றுரைப்பது என்னை 'என்னின் இங்கு விதிப்படி இம்மெதினிக்கே பூதாதியெல்லாம் தோற்றி மாயக்காண்லான் யான் இதற்கு அனுமானஞ்சி எடேன். முன்னோனென்பது தாழ்ந்தாரின் முதன்மைபற்றியும் முன்னிலையான உலகமே பொருளென உணர்தல் பற்றியும் உலகாயதனைக் குறித்தது.

(பொ-ரை) உலகாயத நூலுணர்ந்தோர் பிரத்தியட்சப் பிரமாணத் திற்கு எய்தாதன பிரமாணமாகாவென எண்ணி உலகம் நித்தமாக நிலைபெறு தலே யன்றித் தோற்றமும் நாசமும் உண்டெனக் கூறுவது பொருந்தா தென் பர். இவ்விடத்து அவர் கூறிய நிலைத்தொழில் போலவே இவ்வுலகின் கண் ணே பஞ்ச பூதமாகிய முதற் காரணத்தின் கண் தோன்றிய எல்லாவற்றிற்கும். தோற்ற நாசங்களாகிய ஏனை இரண்டு தொழிலும் உடனிகழ்ச்சியாய்க் காண்டல் கூடும். அதாவது ஒரு பொருளும் என்றும் நிலைத்திருப்பதில்லை- ஒரு பொ ருள் தோன்றவும், மற்றொரு பொருள் நிற்கவும், பிறிதொரு பொருள் அழிய வும் காண்டல் பிரத்தியட்சமாம். ஆதலின் இவ்வுலகம் முத்தொழிற்படு மென் பதனை சாதித்தற்கு அவர் கொண்ட காட்சி யளவை ஒன்றே அமையுமாதலின் அநுமானம் முதலிய வேறு பிரமாணங்கள் எடுத்துக் காட்டேன். (எ—று.)(உ)

தருபவன் ஒருவன் வேண்டுமென்பதைக் கூறுகின்றது.

இயல்புகாண் டோற்றி மாய்கை யென்றிடி னியல்பி னுக்குச்
செயலதின் றியல்பு செய்தி செய்திமே லியல்ப தின்றா
மியல்பதாம் பூதந் தானே யியற்றிடுஞ் செய்தி யென்னிற்
செயல்செய்வா னொருவன் வேண்டுஞ் செயற்படு மசேத னத்தால்.

(கொ-டு) தோற்றிமாய்கை இயல்புகாண் என்றிடின் செயலது இயல்பி னுக்கின்று செய்தி இயல்மேல் செய்தி இயல்பதின்றும். பூதந்தானே இயல்ப தாம் செய்தி இயற்றிடும் என்னின் செயற்படும் அசேதனத்தால் செயல் செய்வா னொருவன் வேண்டும்.

(பொ-ரை) உலகம் தோன்றி அழியினும் அத்தோற்றக் கேடுகள் உலகிற்கியல்பாகலின் அத்தொழில் கொண்டு ஒரு கருத்தா வேண்டப்படுவ தன்று என்பர் உலோகாயதரில் ஒருசாரார். தோன்றலுங் கெடுதலும் வேற்று மையாதலின் இயல்பிற்கு வேற்றுமையாதல் கூடாது, அவ்வாறு வேற்று மையாதலே இயல்பு என்று சொல்லில் அவ்வாறு சொல்லுவார்க்கு வேற்றுமை யின் வேறாய் இயல்பென்பது ஒன்றில்லை என ஒப்புக்கொள்ளவரும். வரவே தோற்றிமாய்கை இயல்பென்று முன் சொன்னது விட்டுப்போய் தோல்வித்

தானமாய் முடியும். இனி இயல்பும் வேற்றுமையும் வேறெனவே கொண்டு "பூதநான்கும் இயல்பாய் உள்ளனவாம். அவை தோற்றிமாய்தலாகிய வேற்றுமையைச் செய்யும் என்று சொல்லில் நன்று சொன்னாய்! அப்பூதங்கள் அவ்வாறு தோன்றியழிதலாகிய தொழிலைப் பொருந்தி நிற்கின்ற காரியப் பொருளாகலின் அக்காரியப் பொருளாகிய செயப்படு பொருட்குத் தோன்றியழிதலென்னும் தொழிலைத் தானே செய்தல் கூடாமையின் அத்தொழிலைச் செய்வதற்கு அப்பூதத்தின் வேறாய் ஒரு கருத்தா வேண்டப்படும். (எ—று)

இதனால் செயப்படு பொருளும் வினை முதலும் ஒன்றுமாகில்லையென்பதறிக. தன்னைக் குத்தினை னென்றவிடத்துக் குத்தியவினை முதல் கையும் குத்தப்பட்ட செயப்படுபொருள் பிறிதோருறுப்பும் எனவும், தன்னைத் தானறிந்தானென்ற விடத்து அறிந்தது கண்ணும், அறியப்பட்டது தன் வடிவும் எனவுங் கண்டு கொள்க. (ஈ)

இதுவுமது.

நிலம்புன லனல்கால் காண நிறுத்திடு மழிக்கு மாக்கும்
பலந்தரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னி
னிலங்கிய தோற்ற நிற்ற லீறினை யிசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசந் தனக்கிலா நாதன் வேண்டும்.

(கொ-டு) கால் காண நிறுத்திடும் அனல் அழிக்கும் புனல் ஆக்கும் நிலம் பலந்தரும் ஒருவன் இங்குப் பண்ணிடவேண்டா என்னின் இலங்கிய இனை தோற்றம் நிற்றல் ஈறு இசைதலாலே தோற்றம் (நிற்றல்) நாசம் தனக்கு இலா நலம் கிளர் நாதன் வேண்டும்.

(பொ-ரை) நான்கு பூதங்களுள் வாயு, ஏனைய மூன்று பூதங்களையும் நிலைக்கச் செய்து தான் அவற்றது சமுகத்தில் நிலைபெறும். அக்கினி ஏனைய மூன்று பூதங்களை அழித்துத் தான் அவற்றது சமூகத்தில் அழியும், அப்பு ஏனைய பூதங்களைத் தோற்றுவித்துத்தான் அவற்றது சமூகத்தில் தோன்றும், பூமி ஏனைய பூதங்களினின்று பயனைப் பயப்பித்துத் தான் அவற்றது சமூகத்தில் பயன் படும். இவ்வாறு செயப்படு பொருளும் கருத்தாவும் பூதங்களுக்குள்ளே அமைந்து கிடக்கின்றமையின் வேறு இறைவன் வேண்டாமென்று சொல்லில் இப்பூதங்கள் ஒவ்வொன்றும் உன்கூற்றனே தனித்தனியே முத்தொழிற் படுதலின் அத்தொழிலைச் செய்விக்க முத்தொழிற்படாத இறைவன் வேறு வேண்டப்படும். (எ—று)

இச்செய்யுளால் கூறப்பட்டது என்னையோ எனின் தண்ணீரில்லாதபோது ஒன்றுந் தோற்றாதலின் அது ஏனையவற்றைத் தோற்று

விக்குமெனவும், காற்றில்லாத போது ஒன்றும் நிலையாதாதலின், அது நிலைப்படுத்துமெனவும், அக்கினி எவற்றையும் அழிக்குமாதலின் அது சங்காரிக்கு மெனவும், இவ்வாறு முத்தொழிலையும் மூன்று பூதங்களை செய்யுமெனவும், கன்மமின்றிப் பிருதுவியே பயன்களு மெனவுங்கூறி யதை, கண்ணீர் ஏனைபவற்றைத் தோற்றுவிக்குமுகத் தால்தான் தோன்றி வாயுவினால் நிலைத்து அக்கினியால் அழிக்கப்ப டுதல்போல ஒவ்வொன்றும் முத்தொழிற் படுமென மறுத்தவாறும்.

வருமுறை என்பதைக் கூறுகின்றது.

சார்பினிற் றோன்று மெல்லாந் தருபவ னில்லையென்னிற்
றோரினில் லதற்கோ தோற்ற முள்ளதற் கோநீ செப்பா
யோரினில் லதுவுந் தோன்று துள்ளதே லுதிக்க வேண்டா
சோர்விலா திரண்டு மின்றி நிற்பது தோன்று மன்றே.

(கொ-டு) எல்லாம் சார்பினிற்றோன்றும் தோரின் தருபவன் இல்லை என்னின் தோற்றம் இல்லதற்கோ உள்ளதற்கோ நீ செப்பாய் ஓரின் இல்லதுவுந் தோன்றுது உள்ளது உதிக்கவேண்டாவேல் இரண்டுமின்றிச் சோர்வு இலாது நிற்பது தோன்றும் அன்றே.

(பொ-ரை) கணந்தோறும் மாறுதலையுடைய எல்லாப் பொருள்களுள்ளும் முற்கணத்திற் றோன்றிய பொருள் பிற்கணத்திற் றோன்றும் பொருட்குச் சார் பாய் மேம்படுதலின் வித்தின் கேட்டின் மூலபோல எல்லாப்பொருளும் அவ் வச்சார்பிலே தோன்று மெனச் சவுத்திராந்திகர் முதலியோர் மதம்பற்றிக் கூற அமையுமாதலில் ஆராயுமிடத்து இப்பிரபஞ்சத்திற்குத்தோற்றநாசமில்லாத மேம் பாடுடைய ஒரு கருத்தா வேண்டுமென்றல் கூடாதெனின் அப்படியன்று; ஒன் றன் சார்பில் ஒன்று தோன்று மென்று நீ கூறியது இல் பொருட்கோ உள் பொருட்கோ கூறுவாயாகி: உணருமிடத்து இல்பொருட்கென்பையாகின் அது முயற்கோடு போல ஒரு காலத்தும் தோன்றுமாறில்லை, உள்டொருட்கெனின் உதிக்கவேண்டுவதில்லை. என மறுத்தவிடத்து மாத்துமிகர் மதம்பற்றி இல்லது மன்றி உள்ளது மன்றி அநிருவசனமாகிய சூனியமாய் மெலிவின்றி நிற்கும் பொருள் தோன்றுமெனக் கொள்வேன். (எ-று) (டு)

உள்ளது மிலது மின்றி நின்றதொன் றுளதே லுண்டா
மில்லதே லில்லை யாகுந் தோற்றமு மிசையா தாகு
முள்ளகா ரணத்தி லுண்டாங் காரிய முதிக்கு மண்ணி
லில்லதாம் படங்கடாதி யெழிறரு மியற்றுவானல்.

(கொ-டு) இயற்றுவானுல் மண்ணில் படம் இல்லதாம் கடாதி எழில்-தரும் உள்ள காரணத்தில் உண்டாங் காரியம் உதிக்கும்.

(பொ-ரை) அவ்வாறு உள்ளதுமின்றி இல்லது மன்றி அநிர் வசன மாய்க் கூறப்படும் பொருள் தான் உண்டோ இல்லையோ என வினவினார்க்கு உண்டென்று கூறில் உள்பொருளேயாம், இல்லை என்று கூறில் இல் பொருளேயாம். இவ்வாறுகவே முன்னர் அநிர்வசன மென்றது போலியாய் ஒழியும். அதுவன்றியும் அநிர்வசனப் பொருள் சூனியமாதலின் அதற்குத் தோற்றமும் கூடாது. இவ்வாறு சவுத்திராந்திகர் முதலாயினோர் கூறும் இல் பொருட்கும், மாத்திமிகர் முதலியோர் கூறும் அநிர்வசனப் பொருட்கும் தோற்றம் கூடாமையால் பாரிசேட அளவையால் திகிரி முதலிய துணைக்கார ணங்களை மண்ணுகிய முதற் காரணத்தின்கண் செலுத்தும் குயவனுல் அம் மண்ணினின்றும் வஸ்திரம் முதலிய் காரியம் தோன்றுது, குடம், பானை, கலசம் முதலிய காரியமே வெளிப்பட்டுத்தோன்றுவதுபோல அவ்வெதிர்மறை முகத்தானும் உடன்பாட்டு முகத்தானும் உள்பொருளாகிய காரணத்தினின்றும் உள்பொருளாயிய காரியம் ஒரு கருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்று மென்று, சித்தாந்தி கூறியது (எ-று) (சூ)

இதுவுமது.

ஒருபொரு ளொருவ னின்றி யுளதில தாகு மென்னிற்
றரு பொரு ளுண்டே லின்றுந் தன்மையின் றின்றே லுண்டாய்
வருதலின் றிலது காய்ய முதலுள தாகு மென்னிற்
கருதுகா ரியமு முண்டாய்த் தோற்றமுங் கருத்தா வாலாம்.

(கொ-டு) ஒரு பொருள் உளது இலது ஒருவன் இன்றி ஆகும் என்னின் தருபொருள் உண்டேல் இன்றுந்தன்மைஇன்று இன்றேல் உண் டாய்வருதல் இன்று முதல் உளதாகும் காரியம் இலது என்னின் கருது காரிய மும் உண்டாய் தோற்றமுங் கருத்தாவால் ஆம்.

(பொ-ரை) இல் பொருட்கும் அநிர்வசனப்பொருட்கும் தோற்றம் உண் டென்றல் இயலாமையின் சமணர்மதம்பற்றிக் காரியப்படுவதோர் பொருள் உண்டுமாய் இல்லையுமாய் நிற்கும் காரியல்புடையதாம், ஆகலின் இதற்கொரு கருத்தா வேண்டப்படுவதின்றியே உண்டாமெனக் கொள்ளுமெனின் பொருந் திய பொருள் உள்ளதாயின் இல்லையாந் தன்மையின்றி உள்ளதேயாம், இல்லையா யின் உண்டாய் வருதலின்மையின் இல்லதேயாம்; ஆதலின் உண்டுமாம், இல்லை யுமாமென மாறுபட்ட இரண்டு தன்மை ஒரு பொருட்கிசைதல் கூடாது; என மறுக்க சித்தாந்ததக் கொள்கைப்படி காரண ரூபமாய் உண்டு காரிய ரூபமாயில்லை எனபதே உண்டும் இல்லை என்பதற்குப் பொருளென்றுகூறின் நன்று சொன் னாய் காரணகாரியங்கட்கு தம்முள் வேற்றுமையின்மையால் காரணம் உள

னொருளாயின் கருதுகின்ற காரியமும் அதன்கட் சூக்கும ரூபமாய் உள்ளதே யாகும் அ்வ்வாறு சூக்கும ரூபமாயுள்ள காரியம் பின்னர்த் தூல ரூபமாய் விளங்கித் தோன்றுதல் ஒரு கருத்தாவிலுலா மென்பதுதானே விளங்கும். (எ-று.)

மீமாம்சகர் மதம்பற்றித்தருபவன் ஒருவன் வேண்டுமென்பதைக்

காயத்தி னழிவு தோற்றங் கண்டன முலகிற் காணு
நீயித்தை யுரைத்த வாறிங் கென்னெனி னிகழ்த்து முண்மை
மாயத்த வுலகம் பூநீர் தீவளி வான மாதி
யாயித்தா வொன்றி னொன்று தோன்றி நின் றழித லாலே.

(கொ-ரு) தோற்றம் அழிவுகாயத்திற் கண்டனம் உலகிற் காணும் இங்ஙு நீ இத்தை உரைத்தவாறு என்னெனின் மாயத்த உலகம் பூநீர் தீ வளி வானம் ஆதி ஆயஇத்தான் உண்மை ஒன்று ஒன்றின் தோன்றிநின்றழிதல் ஆலே

ஒன்றின் - ஒன்றுபோல. - ஆலே-அசை-

(பொ-ரை) உடலும் உலகும் என்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஆண், பெண், அலி என மேற்கூறிய அவயவப் பகுப்பு உடலுக்கேயன்றி எனை உலகத்திற் கின்மையால் தோற்றமும் அழிவும் உடலிற் கண்டனம் அன்றி உலகத்திற் காணவில்லை என்பது நிச்சயமாயிருக்க இவ்விடத்து இரண்டற்கும் ஒப்பத்தோற்றக் கேடுகள் கூறுதல் அமையாதென்று சொல்லில் இவ்வாறு மயக்கத்தைச் செய்வதாகிய உலகமும் நிரவயவம் (அவயவமின்மை) இன்றி மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்றது முதலான அவயவப் பகுப்புடைத்தாகிய இதனால் அப்பகுப்புண்மையே இருகூற்றுப் பிரஞ்சத்தி லொன்றாகிய உலகமும் எனைக் காயம்போலத் தோன்றியழிதலையுணர்த்தும் (எ-று) (அ)

இதுவுமது.

ஓரிட மழியப் பின்னு மோரிட நிற்கு மொக்கப்
பாரிட மழிவ தின்றாம் மென்றிடிற் பயில்வித் தெல்லாங்
காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனிற்
சீருடைத் துலகு காலஞ் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

(மொ-ரு) பாரிடம் ஒக்க அழிவதின்றாம் ஓரிடம் அழியப் பின்னும் ஓரிடம் நிற்குமென்றிடின் பயில் வித்து எல்லாம் கார்இடமதனில் அங்குரங் காட்டும் வேனிற்கழியும் சீர்உடைத்து உலகுகாலம் சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும்.

(பொ-ரை) நிலம், மலை, கடல்முதலிய வடிவிற்ருகிய உலகமும் காயம் போல அவயவப்பகுப்புடைமையால் அதுபோலத் தோன்றின்றழிதல் பெறும் படுமென்ற தொக்கும். அங்ஙனமாயினும் பார்த்தறியப்படும் உலகமெல்லாம் ஒருசேர அழியுமென்று கூறின், உலகம் அனந்தி என்னும் சுருதியோடு முரணுதலானும் அழிந்தது மீளத்தோன்றுதற்கோர் சம்பந்த மின்ருய் முடியு மாகலானும் அவ்வாறன்றி உலகத்தில் ஒருபக்கம் அழியினும் பிறிதொரு பக்கம் நிற்கும் என்றலே பொருத்தமுடைய தென்னின்: அப்படியல்ல, ஒரு சாதி பலபொருளாகிப் பழகிவருகின்ற வித்து முதலிய சடங்கள் கார்காலமாகிய ஓர் கால விசேடத்தில் ஒரு சோமுளை தோன்றும், வேனிற்காலமாகிய ஓர் காலவிசேடத்தில் ஒரு சோ அழியும், ஆகலின், அவ்வாறு சடத்தன்மையுடைய உலகமும் அவ்வக்காலம் வந்தவிடத்து முழுவதும் ஒரு சோத் தோன்றி ஒரு சோ அழியும். (எ...று) (கூ)

இதுவுமது.

காலமே கடவுளாகக் கண்டனந் தொழிலுக் கென்னிற்
காலமோ வறிவின் முரு மாயினுங் காரி யங்கள்
காலமே தரவே காண்டுங் காரணன் விதியி னுக்குக்
காலமுங் கடவு ளேவ லாற்றுணைக் காரண மங்காண்.

(கொ-டு) தொழிலுக்குக் காலமே கடவுளாகக் கண்டனம் என்னெனின் ஆயினும் காலமோ அறிவு இன்ருகும் காரியங்கள் காலமே தரவே காண்டும் கடவுள் ஏவலால் காரணன் விதியினுக்கு காலமும் துணைக் காரணங் காண்.

(பொ-ரை) மேற்கூறியவாறு காலம்வந்தவிடத்து தோன்றி யழிதலால் அத்தோற்றக் கேடுகட்குக் காலமே கருத்தாவாய் முடியுமென்று கூறுவர். அஃ தொக்குமாயினும் அக்காலம் அறிவில்லாத சடமாதலால் கருத்தாவாகாது. ஆதலால் தோற்றக் கேடுகளுக்காலமே தரல் காண்டலின் அறிவுடைய கருத்தாவி னது ஏவலால் அக்கருத்தா செய்யும் தோற்றக்கேடுகட்குக் காலமும் துணைக் காரணமாமென் றறிவாயாக. (எ...று) (கo)

அம் மீமாம்சகர் மதம்பற்றி வருமுறை என்பதைக் கூறுகின்றது.

அழிந்தபி னனுக்க டாமே யகிலமாய் வந்து நின்று
கழிந்திடுங் கன்மத் தென்னிற் கன்மமு மனுவுங் கூட
மொழிந்திடுஞ் சடமே யாகி முடிதலான் முடிபா செய்தி
யெழிந்திடு மனுரு பங்க ளுலகெலா மொடுங்கு மன்றே.

(கொ-டு) அழிந்தபின் அணுக்கள்தாமே கன்மத்து அகிலமாய் வந்து நின்று கழிந்திடும் என்னின் மொழிந்திடுங் கன்மமும் அணுவும் சடமாகியே மூடிதலால் செய்தி முடியா உலகு எலாம் ஒடுங்கும் அன்றே அணுரூபங்கள் கூட ஒழிந்திடும்.

(பொ-ரை) உலகம் அழிந்தபின்னர் அணுக்களாய் ஒடுங்கி மீள அப்பர மாணுக்கள் தாமே உயிரின் கன்மம் எதுவாகப்பிரபஞ்சமாய்த்தோன்றிநின்றழி யும்.கன்மமும் காலமும்போல் இறைவன் இச்சையும் ஒரு துணைக் காரணமாம், அத்தனையேயன்றிப் பிறிதில்லை எனின் அவ்வாறன்று சொல்லப்பட்ட கன்ம மும் அணுவும் சடமாகவே முடிதலின் அவை தம் முட்கூடித் தொழிற்படுதல் அதாவது பிரபஞ்சமாகத் தோன்றியழிதல் அறிவுடைய முதல்வன் தொழிலே யின்றிக் கூடாது. அஃதன்றியும் உலக முழுதும் ஒடுங்கும்பொழுது அணு வும் கூடவே ஒடுங்கும்,ஆகலான் அவ்வணு பின் உலகமாய் வந்துநின்று அழியு மென்றல் எவ்வாறு பொருந்தும். (எ...று) (கக)

இதுவுமது.

காரண வணுக்கள் கெட்டாற் காரிய வுலகின் றென்னிற்
காரண மாயை யாகக் காரியங் காண லாகுங்
காரண மாயை யென்னே காண்பதுங் கணுமே யென்னிற்
காரண மாயை யேகாண் காரிய மணுவிற் கண்டால்.

(கொ-டு) காரண அணுக்கள் கெட்டால் காரிய உலகு இன்று என்னின் மாயை காரணமாகக் காரியம் காணலாகும் அணுமே இங்குக் காண்பது மாயை காரணம் என்னே என்னின் அணுவிற் காரியங் கண்டால் மாயையே காரணங்காண்.

கணடா லென்பது காண்டலா லென்னும் பொருட்டு.

(பொ-ரை) அணுக்களை மொடுங்குமாயின் காரணமாகிய அணுக்களழிந் தால் காரியமாகிய பிரபஞ்சம் இல்லையாகுமே எனின் பிரபஞ்சத்திற்கு முதற் காரணம் சத்திவடிவக் கூட்டமாய் நிலைபெற்றிருக்கும் மாயையேயாம். ஆத லால் அணுக்கள் அழிந்தமைபற்றி உலகம் மீளத் தோன்றுதற் கிழுக்கில்லை ஆனால் அணுவே இவ்விடத்து முதற்காரணமாய்க் காணப்படுவதின்றி மாயை முதற்காரணமென்று கூறுவது பெறப்படாதெனின் அணுக்களிடத்துத் தோன்றியழிதற் றன்மை காணப்படுதலால் அவ்வணுக்கள் உலகிற்கு முதற்கா ரணமாதல் செல்லாதாதலின் தோன்றியழிதல் வில்லாத மாயையே உலகிற்கு முதற்காரணமா மென உணர்க.(எ...று) (கஉ)

இதுவுமது.

காரிய மென்ப தென்னை காரண வணுவை யென்னிற்
காரிய மவயவத்தாற் கண்டனங் கடாதி போலக்
காரிய வுருவ மெல்லா மழிதருங் காரணத்தாற்
காரிய வுறுப்பின் மாயை தருமெனக் கருதிடாயே.

(கொ-டு) காரண அணுவை காரியம் என்பது என்னைனென்னின் காரியங் கடாதிபோல அவயவத்தாற் கண்டனம்.

(பொ-ரை) காரணமாகிய அணுவைக்காரியமென்றல் எவ்வாறு பொருந் துமெனின் மண்ணுகிய காரணத்தினின்று தோன்றும் காரியமாகிய குடமுத லியனபோலப்பலவேறு வகைத்தாகிய அவயவமுடைமையால் அணுக்கள் காரிய மாகும். அங்ஙனம் பலவேறு வகைத்தாகிய காரியமெல்லாம் அழிதற்றன் மையவாகலின் பலவேறு வகைத்தாய் அவயவத் தன்மையில்லாத நிலைபெற்ற மாயையே முதற்காரணமென அறிவாயாக. (எ...று)

இதனால் காரணம் ஒன்றாய்த் தோன்றி அழிதலின்றி நிலை பெற் றிருக்குமென்றும், காரியம் பலவாய்த் தோன்றி அழிதலை உடைய தாயிருக்குமென்றுமறிக. ஆயின், பலவாகிய ஆன்மா காரியமெனப் பட்டுத் தோன்றி யழியுமென்னலாகுமே யெனின்; அன்று; பலவாயும் சடமாயும் இருப்பது தோன்றி அழியும். அதுவே காரியமெனப் படும். பலவாயும் சித்தாயுமிருப்பது தோன்றி அழியமாட்டாது. ஆகலின் அது காரிய காரணங்கட்குட் பட்டதன்றென்க. (கஈ)

இதுவுமது

தோற்றமு நிலையு மீறு மாயையின் றொழிலென் றோதி
சாற்றிடு முலகம் வித்துச் சாகாதி யணுக்க ளாக
வேற்றதே லீண்டு நிற்கு மில்லதே லியைவ தின்று
மாற்றநீ மறந்தா யித்தான் மாயையை மதித்திடாயே.

(பொ-ரை) அன்றியும் தோற்றம், நிலை, இறுதி என்னும் மூத்தொழி லும் மாயைதரு மென்பதற்கு மாயையே பிரகிருதி என்று அறிகவென்று கூறுகின்ற வேதமொழியும், வித்தின்கண்ணே சாகை முதலியன சூக்கும ரூப மாய் அடங்கினின்றனவாயின் அவை தூலரூபமாக வெளிப்படுமென்று கூறும் உடம்பாட்டானும் அவ்வாறு சூக்கும ரூபமாய் அடங்கிநிற்ற வில்லையாயின்

அவை தூலரூபமாக வெளிப்படுதலு மின்ரு மென்று கூறும் எதிர்மறையா னும் வீழங்குகின்ற உலகமொழியும் சான்ருகலின் அதனை நீ மறந்தாய் அவ யவமாகிய உறுப்பில்லாமை மாத்திரையே யன்றி வேதமொழி, உலகமொழி சான்ருதலாகிய இதனனும் அணுகாரண வாதத்தை விட்டு மாயையே முதற் காரணமென்றறிவாயாக. (எ...று) (உசு)

பிரதிருதி என்பதன் பொருள் இயல்பாயிருப்பது.

இதுவுமது.

மாயையி னுள்ள வஞ்சம் வருவது போவ தாகு
நீ யதிங் கில்லை யென்னி னிகழ்ந்திடு முயலிற் கோடு
போயுகு மிலக ளெல்லா மரங்களிற் புக்குப் போதி
னுயிடு மதுவு மென்னிற் காரணங் கிடக்க வாமே.

(கொ-டு) நீ அது இங்கு இல்லை என்னின் முயலிற் கோடு நிகழ்ந்திடும் உள்ள வஞ்சம் மாயையின் போவது வருவதாகும் மரங்களின் ஏகும் இலக ளெல்லாம் போய்ப்புக்கு போதின் ஆயிடும் என்னின் காரணங்கிடக்க அது வும் ஆமே.

(பொ-ரை) அதுவன்றியும் உள்ளதாகிய காரணத்தில் உள்ளதாகிய காரி யம் தோன்றுமென்று கொள்ளாது இல்லது உற்பத்தியாமென்பை யாயின் முயலின் கண்ணும் கோடுளதாதல் வேண்டும். அவ்வாருயின் உள்ள பிரபஞ் சமே மாயையில் ஒடுங்கி மீளத்தோன்றுமென்னும் சித்தாந்தாந்தக் கருத்துடை யார்க்கும் அவ்வாறே மரத்தினின்றும் உதிர்ந்த இலைகளெல்லாம் தானே மரத் தில் ஒடுங்கி அதற்குரிய காலத்தில் மீளத்தோன்றுதல் வேண்டுமென்று அவர் கூற அஃதொக்கும். அங்ஙனம் உதிர்ந்த இலைகளெல்லாம் சத்தி ரூப காரண மாய் நிலை பெற்றிருக்கு மாதலின் அச்சத்தி மீளத் தோன்றுதற்குரிய கன்மம், கால முதலிய பிறகாரணங்க ளெல்லாம் அதனேடு ஒருங்கு கூடிய விடத்து அவ்வாறேதோன்றும் கூடாதவிட்த்துத்தோன்ருது ஆதலின் அதுபற்றியென்ன ஆசங்கை? (எ...று)

மரத்தில் நின்று உதிர்ந்த இலை முதலியன சத்தி ரூபமாய் மரத்தில் ஒடுங்குதல் எவ்வாறெனின் அவ்விலை முதலியன தம் தன்மைகெட்டு உரமாக மரத்தின் கண்ணடங்கி மீளத்தோன்று மென்க. அவ்வாறொடுங்குதற்கு முன் உதிர்ந்த இலை முதலியன தோன்றுதற்கு மரத்தின்கண் அவ்வாறுபலசக்திகள்உளவென்பதும், உதிர்ந்த இலை முதலியனவும் மரத்தின் கண்ணன்றி ஏனைய பயி ருக்கு உரமாக உபகாரப்படினும் அப்பயிருக்குரிய இலை முதலியன வாய்த் தோன்றுமாதலின் அதுபற்றி இழுக்கில்லை என்பதுமாம். (

கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி
வருதலா லநாதி வைய மற்றொரு கடவு ளித்தைத்
தருதலா லாதி யாகச் சாற்றலு மாகு மாயைக்
கொருவனை யென்னிங் கென்னி னுள்ளவா றுரைப்பக் கேணீ.

(பொ-ரை) மேற்கூறியவாறு சற்காரியவாதம் அதாவது உள்ளது காரியப்படுமென்று சொல்லுதலுடையார்க்கு உலகம் அழிபொருளென்று கூறுதல் பொருந்தாதாய் முடியுமெனின் அவ்வாறன்று கருதுகின்ற காரணம் உள் பொருளாக அதன்கட்டோன்றும் காரியமும் உள் பொருளே என்பது மேற் கூறியவாற்றுன் இனிது விளங்குதலின் காரியமாகிய பிரபஞ்சமும் நித்தப் பொருளேயாம். இப்பிரபஞ்சம் ஒரு கருத்தாவால் ஒரு காலத்து விளங்குதலும் ஒரு காலத்து மறைதலுமாகிய அவத்தை வேறு பாடு பற்றி அழி பொருளென்றும் சொல்லப்படும். அழிபொருளென்றும் என்றதிலுள்ள உம்மையால் அவத்தைS.வேறுபாடு கருதாத விடத்து நித்தப் பொருளென்பதே துணிவு. (எ...று)

மாயை என்பது முதல் கேணீ என்பதுவரை அடுத்து வருஞ் செய்யுளிற் சேர்த்துப்பொருளுரைக்கப்படும். (கசு)

மீமாம்சகர் மதம்பற்றித் தருபவன் ஒருவன் வேண்டுமென்பதைக் கூறுகின்றது.

புத்திமற் காரி யத்தாற் பூதாதி புருடன் ருனு
மத்தனு காரணம் பெற்ரு லறிதலா லவற்றை மாயை
யுய்த்திடு மதனுன் மாயைக் குணர்வொன்று மில்லை யென்றே
வைத்திடு மதனு லெல்லாம் வருவிப்பா னொருவன் வேண்டும்.

(கொ-டு) இங்கு மாயைக்கு ஒருவன் ஆர் என் என்னின் உள்ளவாறு உரைப்ப நீ கேள் பூதாதி புத்திமற் காரியத்தால் புருடன்ருனும் அத்தனுகாரணம் பெற்ருல் அறிதலால் மாயை அவற்றை உய்த்திடுமதனுல் மாயைக்குணர் வொன்றுமில்லை யென்றே வைத்திடுமதனுல் எல்லாம் வருவிப்பான் ஒருவன் வேண்டும்.

புத்திமற்காரியம் - புத்திமானது காரியம்.

(பொ-ரை) இவ்விடத்துக் கூறியவற்றுள் எனைய வெல்லாம் ஒக்கும் மாயையே தன் காரியத்தைத் தருமாகலின் மற்றொரு கடவுள் மாயையினின்

றும் தருவாரென்றல் பொருந்தா தென்று கூற, அறியாது கூறினாய் அதனை உள்ளவாறு சொல்ல நீகேட்பாயாக. குடம் முதலியன மண்ணினின்றும்குயவனுற் செய்யப்படும் காரியமானற்போலப்பூத முதலிய பிரபஞ்சமெல்லாம் ஒரு சேதனப் பொருளால் மாயையினின்று செய்யப்படும் காரியமேயாம். ஆன்மா சேதனப்பொருளாதலால் அதுவேதோற்றுவிக்கு மென்னலாகாதோ வெனின் அவ்வான்மா அப்பூதாதியாலாகிய தநுகாரணதிகளைப்பெற்றபின்னரே அறிதற் றொழிலைச் செய்தலானும் மாயை தநுகாரணதிகளுக்கு முதற்காரணமாய் நின்று அவற்றை மயக்கிச் செலுத்துதலினால் அம்மாயைக்கு உணர்ச்சி சிறிதுமில்லை என்றே கூறி யிருத்தலானும் இவ்வாறு ஆன்மாவிற்கும் மாயைக்கும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பதில் அதிகாரமில்லாமை பெறப்படவே பாரி சேட அளவையால் இவ்விரண்டினும் வேறாய் பூதம் முதலிய பிரபஞ்சம் எல்லாவற்றையும் தோற்றுவிப்பதற்கு ஒரு கடவுள் வேண்டப்படும்.(எ-று)(கள)

காரிய காரணங்கண் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணைநி மித்தந்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக
வாரியன் குலால னுய்ந்நின் றுக்குவ னகில மெல்லாம்.

(கொ–டு) காரிய காரணங்கள் முதல் துணை நிமித்தம் பாரில் மண் திரிகை பண்ணுமவன் முதல் துணை நிமித்தம் கண்டாம் தேரின் அகிலம் எல்லாம் மாயை மண்ணுக தன்சத்தி திரிகை ஆக ஆரியன் குலாலனுய்ந்நின்று ஆக்குவன்.

(பொ–ரை) அன்றியும் ஒரு காரிய நிகழ்ச்சிக்கு வேண்டுங் காரணங்கள் முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணமென மூவகைப்படும். அக் காரணங்கள் தம்முள் ஒன்றேனுமின்றிக் காரியம் தோன்று தென்பதும்;அக் காரணங்கள் தம்முள் வேறும் என்பதும், இவ்வுலகின் கண்ணே குடம் முதலிய காரியத்தில் மண் முதற்காரணமாகவும் திரிகை துணைக்காரணமாகவும் குலாலன் நிமித்த காரணமாகவும் காண்டலால் அறிந்தாம். ஆராயுங்கால் பிரபஞ்சக் கூட்டமாகிய காரியத்திற்கும் அவ்வாறே மண்போல மாயைமுதற்காரணமாகவும் திரிகைபோல இறைவனது சத்தி துணைக்காரணமாகவும், குலாலன் போல அவ்விரு காரணங்களின் வேறாய் சிவபிரான் நிமித்த காரணமாகவும் நின்று அப்பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பன். (எ...று)

இரு காரணங்களின் வேறாய் இறைவனிற்பன் என்றது அக்காரணங்களின் தன்மையின் வேறாய் என்பதேயாம். இவ்வாறன்றி"

திருட்டாந்தம் போல வேறு வேறுப் நிற்குமென்றல் வியாபகப்பொ ருட்குப் பொருந்தாது. இதனை வருகின்ற உள-வது செய்யுளிற் காண்க. (கஅ)

தருபவன் தரு முறையைத் தொகுத்துக் கூறுகின்றது.

விந்துவின் மாயை யாகி மாயையி னவ்வி யத்தம்
வந்திடும் விந்து, தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடு மராக மாதி முக்குண மாதி மூலந்
தந்திடுஞ் சிவன வன்றன் சந்நிதி தன்னி னின்றே.

(கொ-டு) விந்துத் தன் பால் வைகரியாதி முந்திடும் மாயை அராகம் ஆதி (முந்திடும்) மூலம் முக்குணம் ஆதி (முந்திடும்) சிவனவன் றன் சந்நிதி தன் னின் நின்றே தந்திடும்.

(பொ-ரை) சுத்தப் பிரபஞ்சம், சுத்தா சுத்தப் பிரபஞ்சம், அசுத்தப் பிரப ஞ்சமெனக் காரியப் பிரபஞ்சம் முத்திறப்படுதலின் அவற்றிற்கு முதற்காரணங் களும் தம்முள் வேறுதல் வேண்டும். அவற்றுள் மலகன்மங்களோடு விரவாது முதற்காரணமாய் நிற்பது சுத்த மாயை. அஃது ஏனை அசுத்தமாயை பிரகிருதி மாயை இரண்டனையும் வியாபித்து மேலாய் நின்று சுத்தப் பிரபஞ் சத்திற்குக் காரணமாம். அச்சுத்த மாயையின் கீழாய் அடங்கி மல கன்மங்க ளோடு விரவி முதற்காரணமாய் நிற்கின்ற அசுத்த மாயை சுத்தா சுத்தப் பிரப ஞ்சத்திற்குக் காரணமாம். அவ்வசுத்த மாயையினது தூல பரிணமமாய்த்தோ ன்றி நிற்கின்ற பிரகிருதி மாயை அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாம். அக் காரணம் மூன்றனுள் சுத்த மாயையினின்றும் ஒடுக்க முறைபற்றி வைகரி முதல் வைத்தெண்ணப்படும் சுத்தப் பிரபஞ்சமாகிய நாலுவாக்குந் தோன்றும். அசுத்த மாயையினின்றும் ஒடுக்க முறை பற்றி அராக முதல் வைத்தெண்ணப் படும் சுத்தா சுத்தப் பிரபஞ்சமாகிய ஐந்துதத்துவங்களும் தோன்றும். பிரகிருதி மாயையினின்றும் தோற்றும். முறைபற்றி குணதத்துவ முதல் வைத்தெண் ணப்படும் அசுத்தப் பிரபஞ்சமாகிய இருபத்து நான்கு தத்துவங்களும் தோன் றும். இவ்வாறு சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயையென்ற மூன்றும் தத்தம் காரியங்களைச் சிவசத்தியின் சங்கற்ப ரூபமாகிய சந்நிதியினின்றும் தோற்றுவிக்கும். (எ...று.)

பிரபஞ்ச மென்பது தத்துவத்துளடங்குதலின் தத்துவம் (36) முப்பத்தாறுக்கும் முதற் காரணமாகிய சுத்தம், அசுத்தம், பிரகி ருதி என்னும் மாயை மூன்றின் வைத்து முறையே சுத்தம், சுத்தா சுத்தம், அசுத்தமெனப் பிரபஞ்சம் முத்திறப்படு மென்று கூறிய

தாம். பரிணமம் ஒன்று பிறிதொன்றுதல். அது தூலம் சூக்குமமென இருவகைப்படும். தூலபரிணமம் பால் தயிராதல், நெய்யிற்புழுவுண் டாதலென இருவகைப்படும். முன்னையது முற்றும் பரிணமம். பின் னையது ஏகதேச பரிணமம். சூக்கும பரிணமம் சேலைகூடாரமாதல். இவற்றுள் சூக்கும பரிணமம் சுத்த மாயைக்கும், தூலத்தில் ஏக தேசம் அசுத்தமாயைக்கும், முற்றும் பிரகிருதி மாயைக்குங் கொள் ளப்படும். ஓதிக்க முறை - கடைசியிலிருந்து எண்ணுதல். தோ ற்றமுறை - ஆரம்பத்திலிருந்து எண்ணுதல். (ககூ)

தருபவன் தரு முறையை வகுத்துக் கூறத் தொடங்கிச் சுத்த மாயாகாரியமாகிய வைகரி வாக்கின் இலக்கணம் கூறுகின்றது..

வைகரி செவியிற் கேட்ப தாயத்த வசன மாகி
மெய்தரு முதான வாயு மேவிட விளைந்த வண்ணம்
பொய்யற வடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம் தாகி
யையமில் பிராண வாயு வடைந்தெழுந் தடைவு டைத்தாம்.

(கொ-டு) வைகரி செவியிற் கேட்பதாய் அத்த வசனமாகி புந்திகாரணம தாகி மெய்தரும் உதான வாயு மேவிட விளைந்த வண்ணம் ஐயம் இல் பிராண வாயு அடைந்துஎழுந்து பொய் அறஅடைவு உடைத்தாய் அடைவுஉடைத்தாம்.

(பொ-ரை) மேற்கூறிய வைகரி யாதி வாக்கு நான்கனுள் வைகரி வாக் காவது தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவதாய், நினைந்த பொரு ளைச் சொல்லும் சொல்லாய் அச்சொல்லுவானுக்கும் கேட்பானுக்கும் பகுத்து ணர்வுண்டாதற் கேதுவாயும் உடம்பின் கண் எழுகின்ற உதானனென் னுங் காற்றால் தள்ளப்பட்டு மூத்திரமைத் தானத்துச் சூக்கும ரூபமாய்ப் பிரிந்து தோன்றிய அக்கரங்கள் பிராணனென்னும் காற்றால் தள்ளப்பட்டெழு ந்து ஐயமின்றுதற் கேதுவாய் விபரீதம் அற புறத்தே அடைதலுடைத்தாகியும் சொல்லாகின்ற இவ்விருவகை இலக்கணத்தையுடையதாம். (எ...று.)

தனக்கும் பிறர்க்கும் பகுத்துணர்வைத் தரும் வண்ணங் கேட் டப்படுவதாய் வாயின் வழியாய் வெளியே வருவதாய்ச் சொல்லும் ஒலி வைகரி வாக்கென்பதாம். (உ0)

மத்திமை வாக்கின் இலக்கணம் கூறுகின்றது.

உள்ளுண ரோசை யாகிச் செவியினி லுறுதல் செய்யா
தொன்னிய பிராண வாயு விருத்தியை யுடைய தன்றிக்

பிரமாணவியல் க-ம் சூ-ம் க-ம் அதி.

தெள்ளிய வக்காங்கள் சிந்திடுஞ் செயல தின்றி
மெள்ளவே யெழுவ தாகு மத்திமை வேற தாயே.

(கொ–டு) மத்திமை வேறதாயே உள் உணர் ஓசையாகி செவியினில் உறுதல் செய்யாது மெள்ளவே எழுவது (உள் உணர் ஓசையாகி) ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடையது அன்றி சிந்திடுஞ் செயலது இன்றி தெள்ளிய அக்காங்கள் ஆகும்.

இரட்டுற மொழித லென்னும் உத்தியால் உள் ளுணர்ோசையாகி என் பது இரட்டித்தது. உணர்ோசை யென்பது உணரு மோசையென விரிந்து முன்னையது எதுவினும் பின்னையது பொருளினும் நின்றது.

(பொ–ரை) மத்திமை வாக்காவது பைசந்திக்கும் வைகரிக்கும் வேறாய் அதாவது நடுவாய் சொல்லுவான் தன்னுள்ளே உணரும் சவிகர்ப்பப் உணர்விற் கேதுவாய் செவியிற் கேட்கப்படாததாய் மெல்லோசையாய் கண்டத்திலெவிளங்குவதால் உள்ளே உணரப்படும் ஓசையாகியும் விளங்கிய பிராணவாயுவின் றொழிற் பாடின்றி உதான வாயுவின் தொழிற் பாடு மாத்திரையால் பல், இதழ், நா, அண்ணங்களிற் பட்டு வெளியே சிதறிப்போதலின்றி உள்ளே சூக்கும ரூபமாய் அக்காங்களின் வடிவு பிரிந்து தோன்றி விளங்குதலுமாகிய இவ்விரு வகை இலக்கணத்தை உடையது. (எ...று.)

தன்னுள்ளே உணரும் ஓசையாய் உள்ளே அக்காங்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாயுள்ள ஒலி மத்திமை வாக்கென்பதாம். (உ-க)

பைசந்தி வாக்கின் இலக்கணங் கூறுகின்றது.

வேற்றுமைப் பட்ட வண்ணம் வெவ்வேறு விபாக மாகித்
தோற்றுத லடைவொ டுக்கிச் சொயம்பிர காச மாகிச்
சாற்றிய மயிலி னண்டந் தரித்திடுஞ் சலமே போன்றங்
காற்றவே யுடைய தாகிப் பைசந்தி யமர்ந்து நிற்கும்.

(கொ–டு) பைசந்தி சாற்றிய மயிலின் அண்டந் தரித்திடுஞ் சலமே போன்று வேற்றுமைப் பட்ட வண்ணம் வெவ்வேறு விபாக மாகி தோற்றுதல் அடைவு ஒடுக்கி அங்கு ஆற்றவே உடையதாகி சொயம் பிரகாசமாகி அமர்ந்து நிற்கும்.

(பொ–ரை) பைசந்தி வாக்காவது பஞ்சவண்ணங்களையும் சூக்கும ரூபமாக ஒடுக்கி நிற்பதாகிய மயில் முட்டையில் தரித்திடும் நீர்போல பலவகைப்பட்ட ஏழுத்துக்கள் வேறு வேறாக விளங்கித் தோன்று முறைமையினை அடக்கி மிகவும் சூக்கும ரூபமாய்க் கொண்டு சிந்தையின் அமர்ந்து நிற்றலும் அக்காங்கள்

நிருவிகற்ப உணர்வினிற்கு வேதுவாதலுமாகிய இரண்டு இலக்கணத்தை உடை யது. (எ...று.)

மயிலின் முட்டைக்குள் னிருக்கும் சலத்திலே மயிலின் பஞ்ச வன்னம் ரூபீகரித்துத் தோன்றுவது போல சித்தத்தில் ஓருணர்வு மாத்திரமாய்த் தோன்றி அக்காரங்களை நிருவிகற்பமா யுணரும் ஓவி பைசந்தி வாக்கென்பதாம். (22)

சூக்கும வாக்கின் இலக்கணம் கூறுகின்றது.

சூக்கும வாக்க துள்ளோர் சோதியா யழிவ தின்றி
யாக்கிடு மதிகா ரத்திற் கழிவினை தன்னைக் கண்டா
னீக்கமி லறிவா னந்த முதன்மைநித் தியமு டைத்தாய்ப்
போக்கொடு வரவி லைப்பும் விகாரமும் புருட னின்றும்.

(கொ-டு) சூக்கும வாக்கது உள் ஓர் சோதியாய் அதிகாரத்திற்கு அழி வினை ஆக்கிடும் அழிவது இன்றி தன்னைக்கண்டால் புருடன் நீக்கம் இல் அறிவு ஆனந்தம் முதன்மை நித்தியம் உடைத்தாய் ஆம் போக்கொடு வரவு இலைப்பும் விகாரமும் இன்று.

(பொ-ரை) சூக்கும வாக்காவது காரண சரீரத்தின் உள்ளாக நாத மாத்தி ரையாய் விளங்குதலும் ஞான மாத்திரைக் கேதுவாதலுமாகிய இலக்கணத்தை யுடையது. அது தான் பைசந்தி மத்திமை வைகரியாய் விருத்திப்படுவ தாகிய தன்னதிகார மாத்திரைக்கே அழிவுண்டாக அச் சூக்கும வாக்கு சுத்த மாயா ரூபமாய்க் கேடின்றி நிலை பெறுவதாம். தவ விசேடத்தால் அதனை உள் ளபடி காணப் பெறுவார்க்கு நீங்காத பேரறிவும், ஆனந்தமும், சுதந்தரமும், நித்தியத்துவமும் உடையதாய் சுத்தமாயா புவனத்தின்கண்ணதாகிய அபரமுத் திப் பெரும்போகம் உண்டாம். காசோற்பத்தியால் வரும் இலைப்பும் விகாரமு மதலும் இல்லையாம். (எ...று.)

காரண சரீரமாவது கேவலமாகிய அறியாமையினின்று நீங் கியும் தத்துவங்களுடன் கூடிப் பகுத்தறிதலின்றியும் தத்துவத்தோ ற்றத்திற்குக் காரணமான மாயையோடு கூடி நிற்கும் மயக்க வுண ர்வு. (உ

வாக்கு நான்கும் சிவதத்துவம் ஐந்தில் இருக்குமெனக் கூறுகின்றது.

நிகழ்ந்திடும் வாக்கு நான்கு நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடு மஞ்ச தாகச் செயல்பரி ணாம மன்று

பிரமாண்வியல் கம் சூ-ழ்ீ கம் அதி.

புகழ்ந்திடும் விருத்தி யாகும் படங்குடி லாஞற் போல
மகிழ்ந்திடும் பிரமி மன்று மாமாஞய யென்பர் நல்லோர்.

(கொ-டு) நிகழ்ந்திடும் நான்கு வாக்கும் நிவிர்த்தி ஆதி கலேயைப்பற்றி அளுசதாகத் திகழ்ந்திடும் படம் குடில் ஆனற்போல புகழ்ந்திடும் விருத்தியாகும் செயல் பரிணமம் அன்று மகிழ்ந்திடும் பிரமம் (என்பர்) நல்லோர் (பிரமம்) அன்றுமாமாயை (ஆகும்) என்பர்.

(பொ-ரை) மேற்கூறிப் போந்த வைகரி முதலிய நான்கு வாக்குகளும் நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் பஞ்ச கலை களைப் பற்றுக் கோடாகச் சார்ந்து ஐவகைப்பட்டுச்சிவம், சத்தி, சாதாக்கியம், மகேசுவரம், சுத்தவித்தை என்னும்பஞ்சதத்துவங்களி லிருக்கும். இவ்வாக்குகள் சுத்தமாயையினின்றும் படமே குடி லாயினற் போல விருத்தியாய்க் காரியப் படுவனவாம். அசுத்த மாயா காரியம்போலப் பரிணமமாய்க் காரியப்படுவன் வல்ல. இவ்வாக்குகளை சத்தப் பிரம்மி வாதிகள் மகிழத்தக்க பிரமம் என்பர். சைவசித்தாந்திகள் பிரமமாதலின்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரகசத்தி எனப்படும் சுத்தமாயா ரூபமாகுமென்று கூறுவர். (எ...று)

விருத்தி யெனினும் சூக்கும பரிணம மெனினும் ஒக்கும். படம் குடிலாத லென்பது–சேலை கூடாரமாதல். பரிக்கிரக சத்தி யென்பது– வைப்புச் சத்தி. அதாவது வேண்டும்போது உபகாரப் படுவதாய்த் தன்னுள் அடங்கி நிற்பது.

வாக்கு நான்கும் பஞ்சகலைகளைச் சார்ந்து ஐவகைப்பட்டு நிற்ற லாவது—சாந்தியதீதகலையைச் சார்ந்து சூக்குமையும், சாந்திகலை யைச் சார்ந்து பைசந்தியும், வித்தியா கலையைச் சார்ந்து மத்திமை யும், பிரதிட்டா கலையைச் சார்ந்து தன்செவிக்குக் கேடகப்படுவ தான சூக்கும வைகரியும், நிவிர்த்தி கலையைச் சார்ந்து தன் செவிக் கும் பிறர் செவிக்குங் கேட்கப்படுவதான தூலவைகரியுந் தோன்றி ஐவகைப்பட்டு நிற்கும். இவ்வாறு பஞ்சகலையிற் றோன்றிய வாக்கி னுள் சூக்குமை சிவதத்துவத்தினும், பைசந்தி சத்திதத்துவத்தி னும், மத்திமை சாதாக்கிய தத்துவத்தினும், சூக்குமவைகரிமகே சுவர தத்துவத்தினும், தூலவைகரி சுத்த வித்தை யென்னுந் தத்து வத்தினும் நின்று தொழிற்படுமாதலால் நான்கு வாக்கும் ஐந்துதத் துவத்திலிருக்கு மெனக் கூறப்பட்டது. (உ ச)

சிவஞான சித்தியார் சுபக்கம்.

சுத்த மாயா காரியமே மந்திரேசுவரா முதலிய அபரமுத்தர்களின் தத்துவாதிகளெனக் கூறுகின்றது.

வித்தைகள் வித்தை யீசர் சதாசிவ ரென்றி வர்க்கு
ணவத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கண் மந்தி ரங்க
டத்துவந் சரீரம் போகங் காரணங்க டாமெ லாமு
முய்த்திடும் வயிந்த வந்தா னுபாதான மாகி நின்றே.

(கொ-டு) உபாதானமாகி நின்றே உய்த்திடும் வைந்தவந்தான்.

(பொ-ரை) மேற்கூறிப் போந்த வாக்கு மாத்திரைக்கேயன்றி மந்திரேசுவரர் மந்திர மகேசுவரர், அணு சதாசிவர் முதலிய அபாமுத்தர்களுக்கு வேண்டப்ப டும் பதங்களும், அக்காரங்களும், புவனங்களும், மந்திரங்களும், தத்துவங்களும் சரீரங்களும், போகங்களும், காரணங்களுமாகிய சுத்தாத்துவாக்கள் எவற்றிற்குங் கும் முதற் காரணமாய் நின்று செலுத்துவது சுத்த மாயை யாகும். (எ...று)

தத்துவ மென்றது கால முதலிய வித்தியா தத்துவத்தை. காரண மென்றது அந்தக்காண முதலிய ஆன்ம தத்துவத்தை யென அறிக.

சுத்த மாயா காரியமாகிய வாக்கை இன்றி ஏனைக்தும் அறிவுண்
டாகா தென்று கூறுகின்றது.

மூவகை யறுங்க ளுக்கு முறைமையி ன் வித்து ஞான
மோவின நில்லை யாகில் விளங்கிய ஞான மின்று
மோவிட வித்து ஞான முதிப்பது தார் ஞான முண்டேடற்
சேவடிப் கொடியி னென்றன் சேவடி சேரலாமே.

(கொ-டு) வித்து ஞானம் மூவகை அணுக்களுக்கும் முறைமையின்மேவி னது இல்லையாகில் விளங்கிய ஞானமின்றும் வித்துஞானம் ஓவிட ஓர்ஞானம் உதிப்பது உண்டேடல் சேவுயர் கொடியினென்றன் சேவடி சேரலாமே.

(பொ-ரை) மேற்கூறிப் போந்த வாக்குக்கள் பகுத்துணர்வதாகிய சகிகர் ப்ப ஞானத்திற் கேதுவாதலால் இவ்விடத்துக் கூறிய மந்திரேசுவரர் முதலிய அபாமுத்தர்க்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலருக்கும் இன்றியமையாது வேண்டப்படும். சரீர வேறு பாடுபெற்றி விஞ்ஞான கலருக்குத் தூலமாயும், பிரளயா கலருக்குத் தூலதரமாயும், சகலருக்குத் தூலதமமாயும் பொருந்தி நிற் கும். இவ்வாக்கு இல்லையாயின் விளங்கிய ஞானமில்லையாம். இதனுள்ள டாம் ஞானம் உலகப் பொருளை அறியும் ஞானமாம். ஆதலின் அவ்வாக்குக் கள் மேலான பந்தமாம். இவ்வாக்குக்களை தன்னின் வேறுகக் கண்டு நீக்கி அவற்றிற்கு மேலாகிய தெளிவு ஒருவனுக்கு விளங்குமாயின் அப்பொழுது இடபக்கொடியை உயர்த்திய சிவபெருமான் திருவடியாகிய பரமுத்தினைத் தலைப்படுவன். (எ...று)

தூலம் - விளங்கித் தோன்றுதல். தரம் - அதிகம். தமம் - குறைவு. இதனானே, நான்கு வாக்குக்களும் விஞ்ஞானகலர்க்கு விளங்கித் தோன்று மெனவும் பிரளயாகலர்க்கு அவ்வாறின்றி சகலரினும் அதிகமாய் விளங்கித் தோன்றுமெனவும், சகலருக்கு பிரளயாகலரினும் குறைந்து விளங்கித் தோன்று மெனவும் அறிக. (உசூ)

சுத்த மாயா காரியங் கூறி நிறுத்த முறையானே தருபவன் தரு முறை வகையில் அசுத்த மாயா காரியத்தைத் தொகுத்துக் கூறு கின்றது.

அருவினி லுருவந் தோன்றி யங்காங்கி பாவமாகி
யுருவினி லுருவ மாயே யுதித்திடு முலக மெல்லாம்
பெருகிடுஞ் சுருங்கும் பேதா பேதமோ டபேத மாகு
மொருவனே யெல்லா மாகி யல்லவா யுடனு மானவன்.

(கொ-டு) அருவினில் உருவம் தோன்றி உருவினில் உருவமாயே உதித் திடும் உலகமெல்லாம் அங்காங்கி பாவமாகி பெருகிடும் சுருங்கும் பேதாபேத மொடு அபேதமாம் ஒருவனே எல்லாமாகி அல்லவாய் உடனுமாவன்.

(பொ-ரை) சூக்குமமாகிய அசுத்த மாயையினின்றும் தூலமாகிய கலை முதலிய தத்துவங்களும் அவற்றினும் தூலமாகிய மூலப்பகுதியும் அதனினும் தூலமாகிய குணதத்துவ முதலாயினவுந் தோன்றும். அத்தூலங்களினின்றும் தோன்றும் காரியம் அவற்றினுந் தூலமேயாம். இவ்வாறே காரியப் பிரபஞ்ச மெல்லாந் தோன்றி நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆண், பெண், அலி என்றது முதலான அவயவப் பகுப் புடையனவாய் வளர்ந்தும், தேய்ந்தும், மாறியும் வரும். இத்தன்மையவாகிய காரிய் காரணங்கட்கு தம்முட் பெரும் பாலும் வேற்றுமை கூறுவர் கையாயிகர் முதலியோர். அவர் மதம் அடாது. என் னெனின் ஒன்று பிறிதொன்றாக மாறுதலே நோக்கிற் பேதா பேதமாம். அத வது ஒன்றே பிறிதொன்றுவதில் அபேதமும் முன்னையதிற்பின்னையது வேறு தலிற் பேதமுமாம். உள்ளது காரியப்படுதலே நோக்கி அபேதமாம். இவ்வாறு அபேதமாயும், பேதாபேதமாயும் விளங்கும் காரியங்களை முதற்காரணமாகிய மாயையில் நின்றும் தோற்றுவிக்குங்கால் நிமித்த காரணனாகிய முதல்வன் அக் காரணத்தோடு கலப்பினால் ஒன்றாயும் பொருட்டன்மையால் வேறாயும் செலுத் துதலால் உடனாயும் நிற்பன். (எ...று.) (உஎ)

5வமாகிய மாயையினின்று உருவந் தோன்று தென்னும், மாய்வாதியை மறுத்துரைக்கின்றது.

அருவுருவீ தாகும் விகாரமு மவிகா ரத்தின்
வருவது மில்லை யென்னின் வான்வளி யாதி பூதந்
தருவது தன்னின் மேக சலனசத் தங்க ளோடு
முருவமின் னுருமே றெல்லா முதித்திடு முணர்ந்து கொள்ளே.

(கொ-டு) அரு உரு ஈதாகும் அவிகாரத்தின் விகாரமும் வருவதும் இல்லை யென்னின்.

(பொ-ரை) அருவமாகிய மாயை உருவமாகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்காது. அருவமென்றதினாலேயே அவிகாரமென்பதும் பெறப்படுமாதலால் அவிகாரமாகிய (விகாரமில்லாத) அம்மாயையினின்றும் விகாரமாகிய பிரபஞ்சந் தோன்றுவதுமில்லை என்று மாயாவாதி கூற, அறியாது கூறினாய் உன்மதத்தில் அரூபமும் அவிகாரியுமாகிய ஆகாயத்தினின்றும் உருவமும் விகாரியுமாகிய வாயு முதலிய பூதங்கள் முறையே தோன்றும். அதுவேயுமன்றி அவ்வாகாயத்தினின்று பல மேகங்களும் மேகத்தின் கண் பல விகாரங்களும், பல ஓசைகளும், பல மின்னல்களும், பல இடிகளும் இன்னும் இவைபோல்வன பலவும் தோன்றுமாகலான் அதனை மறந்து அரூபத்தில் ரூபம் தோன்றுதென்று கூறுதல் உனக்கே வழுவாய் முடியுமென்பதனை அறிவாயாக. (எ...று.)

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

ஈறுமாகி அநாதிமுத்த சித்துருவாய் மன்னிநின்று மருவுவித்திடுமென்பது.

இவ்வதிகரணம் ஈறுமாகி மருவிடுமெனவும், மன்னிநின்றே மருவிடுமெனவும்; அநாதிமுத்த சித்துருவெனவும் மூக்கூற்றை உடையது. அவற்றுள்மேல் தருபவன் தருமுறை கூறிய இயைபு பற்றி மன்னி நின்றே மருவிடுமென்னும் நடுக்கூறு முன்னர் மூன்று செய்யுளால் கூறப்படுகின்றது.

தருபவன் எதில்நின்று தருவன் என வினவுகின்றது.

மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலால னீலை
யெண்ணிய வருவ மெல்லா மியற்றுவ னீசன் ரூலுங்

கண்ணுகா ரியங்க ளெல்லாங் காரண மதனிற் காண்பன்
பண்ணுவ தெங்ஙே நினறிங் கென்றிடிற் பகரக் கேணீ.

(கொ-டு) குலாலனுலே மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது ஈசன் ருனும் எண்ணிய உருவ மெல்லாம் இயற்றுவன் (ஆயின்) இங்கு கண்ணுகாரி யங்கள் எல்லாம் காரணமதனின் (நின்று) காண்பன்எங்கே நின்று பண்ணு வது என்றிடில் பகராீகேள்.

ின் என்பது சொல் எச்சமாய் வருவிக்கப்பட்டது. நின்று என்பது காரணம் அதனின் என்பதனேடும் கூட்டப்பட்டது.

(பொ - ரை.) குயவனுல் மண்ணில்நின்றும் குடமுதலிய காரியமனைத் தும் வருதல் போல இறைவனும் கருதிய உலகமெல்லாவற்றையும் மயையி னின்று ஆக்குவனுயின் குயவன் இவ்விடத்து கடாதிகாரியங்களெல்லாம் ஆக்குங்கால் அவற்றிற்குக் காரணமாகிய அந்நிலத்தினின்று செய்வனெனக்கண் டோமே! அதுபோல இறைவன் எவ்விடத்து நின்று செய்வானென்று கேட்க யாமதற்கு விடைகூற நீ கேட்பாயாக. (எ...று) (உ கூ)

தருபவன் நிராதாரமாய் நின்று தருவனெனக் கூறுகின்றது.

சீலமோ வுலகம் போலத் தெரிப்பரி தனனி றற்குங்
கோலமு மறிவா ரில்லை யாயினுங் கூறக் கேணீ
ஞாலமே ழினையுந் தந்து நிறுத்திப்பின் ஞசம் பண்ணுங்
காலமே போலக் கொண்ணீ நிலைசெயல் கடவுட் கண்ணை.

(கொ-டு) காலமே போல கடவுட் கண்ணை நிலைசெயல் நீகொள். கண் என்பது அறிவு. அது சத்தினயைக் குறிக்கும்.

(பொ-ரை.) இறைவன் தன்மையோ உலகம்போலன்றி வாக்குமனு தீதகோசரமாகலான் அவ்விறைவன் நிற்கும் நிலையும் வாக்குமனுதீத கோசர மேயாம். அங்ஙனமாயினும் ஒருவாற்றுன் உவமையில் வைத்து உனக்குக் காட்டுதும் நீ அறிவாயாக. உலகமெல்லா வற்றையும் தோற்றுவித்து நிறுத்தி பின்னர் அழித்துக் காரியப்படுத்துங்காலம் அவற்றைக் காரியப்படுத்துங்கால் எல்லாப்பொருட்கும் தான் ஆதாரமாய் தனக்கோர் ஆதாரமின்றி நிற்றல்போல் சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே உலகத்தைக் காரியப்படுத்து முறைமையை உணர்ந்துகொள்வாயாக. (எ...று.)

வாக்கு மனுதீதகோசரம் என்ற சொல்லில் அதீதமென்பது எட்டாமைம்மையையும், கோசரமென்பது எட்டுதலையும் குறித்து ஒன்

மேலுடொன்று முரணுதோவெனின் முரணுது என்னை? வாக்கிற்
கும் மனதிற்கும் எட்டாதென்பது தோன்றவாக்கு மனுதீத மென்
னும் எட்டாததொன்று உண்டென்று கூறுதலால் யாது பயனென்
னும் ஐயம் நிகழாமைப்பொருட்டு அறிவிற்கெட்டுமென்பது தோன்ற
கோசர மென்றுங கூறியதனாலென்க. (கூ0)

தருங்கால் தருபவன் இலயபோக அதிகாரத்துட்பட்டு தடைக்
குற்றம் தடக்குறவானல்லனெனக் கூறுகின்றது.

கற்றநூற் பொருளுஞ் சொல்லுங் கருத்தினி லடங்கித் தோன்றும்
பெற்றியுஞ் சாக்கி ராதி யுயிரினிற் பிறந்தொடுக்க
முற்றதும் போல வெல்லா வுலகமு முதித்தொடுங்கப்
பற்றொடு பற்ற தின்றி நின்றனன் பரனு மன்றே.

(கொ டு) உயிரினில் சாக்கிராதி ஒடுக்கம் உற்று பிறந்ததுபோல் பர
னும் எல்லாவுலகமும் உதித்து ஒடுங்கபற்றொடு (நின்றனன்) கற்றநூற் பொரு
ளும் சொல்லும் கருத்தினில் அடங்கி தோன்றும் பெற்றியும் (போல) பற்றது
இன்றி நின்றனன் அன்றே.

(பொ-ரை) ஆன்மாவினிடத்து சாக்கிரமுதலிய அவத்தைகள் காணங்க
ளால் ஒடுங்கித் தோன்றும்வழி ஆன்மாவும் அவத்தைப்பட்டு தடக்குறுதல்
போல முதல்வனும் தன்பால் எல்லா உலகும் ஒடுங்கி உதிப்பத் தானும் அது
பற்றி இலயம், போகம், அதிகாரமென்னும் அவத்தைப்பட்டு தடக்குறுவனெ
னும் ஒருவன் கற்ற நூற்பொருளும் சொல்லும் அதாவது சொற்கம் நரகம்
நன்மை தீமை முதலியனவும் அவற்றைக் குறிக்குஞ் சொல்லும் வாதனை ரூப
மாய் புத்திதத்துவத்தை ஒடடி நின்று ஆன்மபோதத்தின் கண் ஒடுங்கி மீளத்
தோன்றுமிடத்து அவ்வான்மபோதம் அதுபற்றித் தடக்குறுத வாறுபோல
இறைவனும் தடக்குறுதலின்றியே நின்றனன். (எ...று) (கூக)

ஈறுமாகி முருவிடு மென்றதனை ஆறு செய்யுளால் வலியுறுத்து
வான் தொடங்கி முதற்கண புத்தர் மதம்பற்றி "ஈறுமாகி மருவுவித்
திடு" மெனக் கூறுகின்றது.

உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதனரன்பா லென்னிற்
செயிருறு மலத்தி னுகுஞ் சிதைந்தமீ தென்னிற் சித்தத்
தயர் வொழி காரி யங்க ளழியுங்கா ரணங்கி டக்கும்
பயிறரு காரி யம்பின் பண்டுபோற் பண்ணு மீசன்.

பிரமாணவியல் சு-ம் சூ-ம். உ-ம் அதி.

(கொ-டு) ஈசன் ஒடுங்கி(ய) உயிர் அனை பின்னும் அரண்பால் உதிப்பது என் என்னில் செயிருறு மலத்தின் ஆகும் சிதைந்தது எது என்னில் சித்தத்துள் அயர்வு ஒழி(ய) காரியங்கள் அழியும் பயில்தரு காரணம் கிடக்கும் காரியம் பின் பண்டுபோற் பண்ணும்

(பொ-ரை.) சங்காரகாரணனுகிய இறைவனால் சங்காரமெய்திய உயிரோடும் கூடிய உலகம் சங்கார மெய்தியவாறே ஒழியாது மீளவும் அவ்விறைவன் பால் நின்றுதோன்றுதல் எற்றுக்கெனின் குற்றம் பொருந்திய மலத்தின் பரிபாகம் ஆன்மாவிற்கு வருதற் பொருட்டு தோன்றும், அவ்வாருயின் மீளவும் தோன்றற்பாலதாகிய உலகம் முன் அழியாது நிலைபெறவே யமையும். அவ்வாறன்றி அழிதல் எற்றுக்கெனின் உயிரின் இளைப்பொழித்தற் பொருட்டு முன்னிளைப்பினைச் செய்துநின்ற காரியங்கள் அழியும், அழிந்தவிடத்தும் காரண ரூபமாய் கிடக்கின்ற அவ்வுலகங்களை முன்னை வினைத் தொடர்ச்சிக் குரியனவாய் தத்தங் காரணங்களி னின்றும் ஒடுங்கியவாறே பின்னர் உதிக்கும்படி செய்வன் (எ...று.)

(சூ உ)

தோற்றுவித் தளித்துப் பின்னுந் துடைத்தரு டொழில் கண்மூன்றும்
போற்றவே யுடைய னீசன் புகுந்தது விகார மென்னிற்
சாற்றிய கதிரோ னிற்கத் தாமரை யலருங் காந்தங்
காற்றிடுங் கனலை நீருங் காந்திடுங் காசினிக்கே.

(கொ-டு) ஈசன் தோற்றுவித்து அளித்து பின்னும் துடைத்தருள் மூன்றுதொழில்களும் போற்றவே உடையன் புகுந்தது விகாரம் என்னின் சாற்றிய கதிரோன் நிற்க காந்தம் கனலைக் காற்றிடும் தாமரை அலரும் காசினிக்கே நீருங்காந்திடும்.

(பொ-ரை) ஒரு கடவுள் தோன்றச்செய்து நிலைப்பித்து பின்னர் சங்காரத்தை செய்விக்கின்ற முறைமையில் இம் மூத்தொழில்களும் இடையறுது செய்வனையின் பாரமெய்தி விகாரியாகாதே எனின் ஆகான் எதுபோலவெனின் சூரியன் தன் சன்னிதியில் சூரியக்காந்தக் கல்லில் நெருப்பைத் தோன்றச்செய்தும் தாமரையை அலரும்படிசெய்தும் பூமியில் நீரைச் சுவறும்படி செய்தும் ஆகிய மூத்தொழில் பற்றி அச்சூரியன் விகாரமெய்தாதது போல் என்க. (எ...று.)

(சூ ஊ)

பவுராணிகர்மதம்பாஞ்சராத்திரமதம்இரண்டியகற்பமதம்பற்றி
ஈறுமாகி மருவுவித்திடு மெனக் கூறுகின்றது.

ஊரைத்தவித் தொழில்கண் மூன்று மூவருக் குலக மோத
வரைத்தொரு வணுக்கே யாக்கி வைத்தநிங் கென்னை யென்னின்

விரைக்கம லத்தோன் மாலு மேவலான் மேவிலோர்கள்
புரைத்ததி கார சத்தி புண்ணிய நண்ண லாலே.

(கொ-டு) உரைத்த இம்மூன்று தொழில்களும் மூவருக்கு உலகம் ஒத இங்கு ஒருவனுக்கே ஆக்கிவைத்து வரைத்தது என்னை யென்னின். விரைக் கமலத் தோன்மாலும் புண்ணியம் நண்ணலாலே புரைத்த அதிகார சத்தி எவ லான் மேவிலோர்கள்.

(பொ-ரை) இங்ஙனம் கூறிப்போந்த சிருட்டி, திதி, சங்காரமென்னும் மூத்தொழில்களும் பிரம்மா, விட்டுணு, ருத்திரனென்னும் மூன்று கடவுளருக்கு முரியவென உலகஞ் சொல்லா நிற்பவும் இவ்விடத்து ஒரு கடவுளுக்கே முத் தொழிலும் செய்யும் சுதந்தரம் உண்டென்று வரையறுத்தது என்னையெனின் வாசனை பொருந்திய தாமரை மலரின்கண் உறைகின்ற பிரம்மா, விட்டுணு, இருவரும் புண்ணிய விசேடம் பொருந்தியதால் முதல்வனுடைய உயர்ந்த அதி காரசக்தியை அம்முதல்வனது ஏவலால் பெற்றுடையர். அவ்வாறன்றி அத்தொழிற்கு அவ்விருவரும் சுதந்தரரல்லர், முத்தொழிலும் செய்தற்குரிய சுதந்தரம் சங்காரகாரணனாகிய ஒருவனுக்கே உண்டு. (ச...று)

விட்டுணுவுக்கு காத்தற்றொழில் சுதந்தரமாயின் தன்மகனாகிய மன்மதனை சிவபெருமான் நீறுக்கிய காலத்து நீறுபடாது காத்தி ருக்கலாம். பிரமனுக்குப் படைத்தற்றொழில் சுதந்தரமாயின் சிவ பிரானால் கொய்யப்பட்ட தனது தலையை மீளப் படைத்திருக்கலாம். அங்ஙனம் செய்யாமையானே அவர்க்கு அத்தொழில்கள் சுதந்தரம் உடையன வல்லவாதல் அறிக. (ந-சு)

இதுவுமது.

இறுதியாங் காலந் தன்னி லொருவனே யிருவ ருந்தம்
முறுதியி னின்று மென்னி னிறுதிதா னுண்டா காதா
மறுதியி லானே யெல்லா மழித்தலா லவனி லின்னும்
பெறுதுநா மாக்க நோக்கம் போதி காணத் தாலே.

(கொ-டு) இறுதியாங் காலந் தன்னில் இருவரும் தம்உறுதியில் நின்றார் என்னின் இறுதிதான் உண்டாகாதாம் அறுதியில் அனே எல்லாம் அழித்த லால் ஒருவனே போதி காணத்தாலே இன்னும் ஆக்கம் நோக்கம் அவனால் நாம் பெறுதும்.

(பொ-ரை) அன்றியும் சங்கார காலத்தில் பிரம விட்டுணு இருவரும் தத்தம் ஆற்றலோடு நிலைபெறுவராயின் உலகம் சங்காரமாதலின்று. ஆதலால்

சங்காரகாலத்தில் அவ்விருவரும் சங்கரிக்கப்பட்டு உனரல்லர் என்பது பெற்றும்.
அதுவன்றியும் வேறெருருவராலும் சங்கரிக்கப்படாத சங்காரக்கடவுள் சிலவற்றை
ஒழித்து சங்கரிக்கமாட்டாஞகலானும் முழுதும் சங்கரித்தவிடத்து சங்காரக்
கடவுளாகிய அவ்வொருவனே எஞ்சி நிற்றல் பெறப்படுதலானும் ஒடுங்கிய உல
கங்கட்கு பெரியதோர் ஆதாரம், எஞ்சி நின்ற சங்காரக்கடவுளே யாதலானும்
ஒடுங்கிய உலகத்தை மீளத்தோற்றுதலும் நிறுத்துதலும் செய்தலை அவனுலே
நாம் பெற்றுக்கொள்ளுதும் (எ...று) (நடு)

இறைவன் ருழில் மறம், வீண், தன்னயம் என்னும் குற்றங்க
ளுட்படாது அருளே எனக் கூறுகின்றது.

சொன்னவித் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாமு யிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவு மருளான் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதுந் சொல்ல லாமே.

(கொ-டு) முன்னவன் சொன்ன இத்தொழில்கள் தோற்றக் காரணம்
என்ன என்னில் விளையாட்டு என்று மொழிதலுமாம் உயிர்க்கு முன்னே
மன்னிய புத்தி முத்தி துன்னிய மலங்களெல்லாம் அருளால் துடைப்பதும்
வழங்கவும் (அருளாற்) சொல்லலாமே.

(பொ-ரை) சங்காரக்கடவுள் இங்ஙனம் கூறிப்போந்த சிருட்டி முதலிய
தொழில்களைச் செய்தற்குக் காரணம் யாதெனின் "காத்தும் படைத்தும் கரந்
தும் விளையாடி" என்பது முதலிய திருவாக்குகள் பற்றி அத்தொழிற்குக்
காரணம் விளையாட்டென்றலுமாம். விளையாட்டென்றதிலுல் சிறு மகார்
விளையாட்டுப்போல் பயனற்ற வீண் விளையாட்டோ வெனின் அன்று. விள
யாட்டென்றதின் கருத்தென்னையோவெனின் "ஐயா நீ ஆட்கொண்டரு
ளும் விளையாட்டின் உய்வார்களுய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்"
என்பது முதலிய திருவாக்குகள் பற்றி பெரும் பாரஞ்சுமத்தல் சாத்தனுக்கு
விளையாட்டென்பதுபோல எளிதிற் செய்யப்படுதலை நோக்கியேயாம். அங்
ஙனஞ் செய்வதும் தன்பயன் கருதியோ வெனின் அன்று. ஆன்மாக்களுக்கு
பெத்தகாலத்துசுவர்க்காதி போகமும் பதமுத்திகளும் முத்திக்காலத்து மும்மலங்
களும் நீங்குதலாகிய வீடுபேறும் பயத்தற் பொருட்டேயாம். அவ்வாறு செய்
வதற்குத் தான் காரணம் யாதெனின் உயிர்கண்மேற் சென்ற கருணையே
யாம். (எ...று) (நடு)

அநுக்கிரகமாகிய தொழில்மட்டே மன்று சிருட்டி முதலிய ஏனைய நான்கு தொழில்களும் அருளே எனக் கூறுகின்றது.

அழிப்பினோப் பாற்ற லாக்க மவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட னாகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பிற்
றெழித்திடன் மலங்க ளெல்லா மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடி னருளே யெல்லாம்.

(கொ-டு) அழிப்பு இளைப்பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம் கழித்திடல் காப்பது நுகரச் செய்தல் மறைப்பு கன்ம வொப்பில் மலங்களெல் லாம் தெழித்திடல் அருள் பந்தம் வீடு பார்த்திடின் எல்லாச் செய்தி தானும் அருளே பழிப்பு ஒழி.

(பொ-ரை) மேற்கூறிய முத்தொழில்களையும் ஐந்து தொழில்களாக விரித் துக் கூறவும்படும் அவற்றுள் சங்காரமாவது இளைப்பாற்றலாம். சிருட்டியாவது அவ்வவர் கன்மமுழுதும் கழியுமுகத்தால் மலபாகம் வரச்செய்தலாம். திதியா வது கன்மங்கழியுமாறு அதை நுகர்வித்தலாம். திரோபவமாகிய மறைப்பா வது இருவினை ஒப்பு வரச்செய்து மலங்களைத் தெளித்தலாம்; அதாவது அனு பவிக்கவேண்டிய வினையின் பயனை அனுபவிக்கும் முறைமையில் அதிலுள்ள குணங்குற்றம் தோன்றுதிருக்கும்படி மறைத்து அனுபவிக்கச் செய்து மல த்தைத் தேய்த்தல். அருளாகிய அநுக்கிரகமாவது பந்தம் விடுவித்தலாம். இவ் வாறு ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு படன்தருதலால் ஆராயுமிடத்து ஐந் தொழிலும் அருட்செயலேயாம். இவற்றுள் சங்காரமும், மறைத்தலும் மறத் தொழிலே போலுமெனப் பழித்தலைச் செய்யற்க. (எ...று)

சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என் னும் ஐந்து தொழில்களை சிருஷ்டி திதி சங்காரமென்னும் முத்தொ ழிலாகக் கூறுமிடத்து திரோபவத்தைத் திதியினுள்ளும் அநுக்கிர கத்தை சங்காரத்தினுள்ளும் அடக்கிக்கூறப்படும்.

இருவினை ஒப்பு:—மிகுந்த புண்ணியத்தின் பயனும் மிகுந்த பாவத்தின் பயனும் ஒருகாலத்து அனுபவிக்க வருங்கால் அவ்வி ரண்டும் ஒன்றோடொன்று முரணுதலின் திருவருட்சத்தி அவ்வி ரண்டனையும் அனுபவிக்கவொட்டாது தள்ளிவிடுமாதலின் அதுவே இருவினை ஒப்பென்பர் ஒரு சார். அங்ஙனமாயினும் எஞ்சியவினை யின் பயன் அனுபவித்துத் தீரவேண்டுதலின் அது இருவினை ஒப்

"பாகாது. எல்லா நல்வினைப்பயனும் தீவினைப்பயனும் அனுபவித் தொழிதலே இருவினை. ஒப்பென்பர் மற்றொரு சாரார். அங்ஙன மாயினும் அது மலசத்தினைக் கெடுக்காது ஆணவமலமுடைய விஞ்ஞானகலராக்குதலே யாதலின் அதுவும் இருவினை ஒப்பாகாது. இனி இருவினை ஒப்புத்தான் யாதெனின் ஆன்ம அறிவின்கண் நல் வினை தீவினைகளும் அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களும் விருப்பு வெறுப்பின்றி ஒப்பதேதான்றலேயாம். இதனால் நான் என்னும் ஜீவபோதமாகிய மலச்சேட்டைதீரும் ஆதலின் மலபரிபாகத்திற்கு உரிய இருவினை ஒப்பு இறுதியிற் கூறியதேதயாம். (கூ-ள)

அனதி முத்தசித்துருவென்னும் மூன்றுங் கூறுகூறத்தொடங்கி அக்கடவுளின் தடத்தவடிவம் அருவம் அருவுருவம் உருவமெனக் கூறுகின்றது.

அருவமோ வுருவா ரூப மானதோ வன்றி நின்ற
வுருவமோ வுரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னி
னருவமு முருவா ரூப மானது மன்றி நின்ற
வுருவமு மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ள வாமே.

(கொ-டு) உரைக்கும் கர்த்தா வடிவு அருவமோ உருவாரூபம் ஆனதோ அன்றிநின்ற உருவமோ இங்கு எனக்கு உணர்த்து என்னின் சொன்ன ஒரு வனுக்கு அருவமும் உருவாரூபம் ஆனதும் அன்றி உருவமும் நின்ற மூன்றும் உள்ளவாமே.

(பொ-ரை) இங்ஙனங் கூறிப்போந்த இத்தொழிற்செய்யு மிறைவனுக்கு வடிவம் இன்றிமுடியாமையின் அவ்வடிவம் அருவமோ அருவுருவமோ உரு வமோ இம்மூன்றனுள் அவனுக்குரிய வடிவம் இதுவென இவ்விடத்து எனக் குணர்த்தவேண்டுமென்று வினவில் அனதி முத்த சித்துருவென மேற்கூறப் பட்ட ஒருவனுக்கு அருவும் அருவுருவும் அவ்விரண்டுமின்றி நின்ற வுருவ மென மூன்று வடிவமும் உள்ளனவாம். (எ...று)

தடத்தமென்பது ஸ்தூலமாக அறியப்படுவது. (கூ-அ)

இனி இரண்டு செய்யுளால் இறைவனுக்குத் தடத்தவடிவமா கிய உருவத்திருமேனி உண்டேல் நம்மில் ஒருவனுமே என வினவுகின்றது.

நண்ணிடு முருவ மென்னி னமக்குள வுருவம் போலப்
பண்ணிட வொருவன் வேண்டு மிச்சையேற் பலருமிச்சை
கண்ணிய வுருவங் கொள்ளேம் யாம்பெருங் கடவு டானு
மெண்ணிய யோக சித்தர் போலுரு விசைப்பன் காணே.

வித்தக யோக சித்தர் வேண்டுருக் கொள்ளு மாபோ
லுத்தமன் கொள்வ னென்னி னவர்களி லொருவ னுவ
னத்தகை யவர்க ளெல்லா மாக்குவ தருளா லாங்கு
வைத்தது மாயை யென்னின் வடிவெலா மாயை யாமே.

(கொ-டு) உருவம் நண்ணிடும் என்னின் உருவம் நமக்கு உள போல பண்ணிட ஒருவன் வேண்டும் இச்சையேல் பலரும் இச்சை யாம் கண்ணிய உருவம் கொள்ளேம் பெருங் கடவுள் தானும் யோக சித்தர் போல் எண்ணிய ஒரு இசைப்பன்காணே வித்தக யோக சித்தர் வேண்டு ஒரு கொள்ளுமாபோல் உத்தமன் கொள்வன் என்னின் அவர்களில் ஒருவன் ஆவன் அத்தகை அவர்கள் எல்லாம் ஆக்குவது அருளால் ஆங்கு வைத்தது மாயை என்னின் வடிவெலா மாயை யாமே.

(பொ-ரை) இறைவனுக்கு உருவம் உண்டென்னில் உருவமெல்லாம் ஒருதன்மையவாகலின் உருவமுடைய நம்மனோர்க்கு உளதாகிய சுய இச்சையின்றிய பாதந்தாம்போல முதல்வனுக்கு உருவம் உண்டாதற்கு ஒரு கர்த்தா உண்டெனப்பட்டு பாதந்திரமுளதாதல் வேண்டும். அஃதன்றி முதல்வன் நினைந்த வடிவங் கொள்ளுதலால் சுதந்தரமுடையனெனில் முதல்வனுக்குள தாகிய சுதந்தரம் நம்மனோர் பலர்க்கும் உருவமுடைய ஒற்றுமைபற்றி உளதாதல் வேண்டும். இனி நம்மனோர்க்கு கருதிய வடிவங்கள் எடுக்க முடியாமலும் யோகசித்தர் தான் கருதியதொரு வடிவத்தை எடுத்துக்கொள்ளுதலும் உண்மையின் அவ்யோகசித்தர்போல தான் கருதியதொரு வடிவத்தை இறைவன் எடுத்துக்கொள்வனெனினின் அங்ஙனமாயினும் அவ்யோகசித்தரில் ஒருவராய் முடியும் அன்றியும் அவ்யோகசித்தர் தாம் நினைந்ததொரு வடிவத்தைக் கொள்வது முதல்வன் அருளாலன்றி முடியாமையானும் யோகசித்தர்களுக்குண்டாகிய உருவம் மாயாகாரியமாதலானும் யோகிகள் முதலிய நம்மனோர்க்கும் முதல்வனுக்குமுளதாகிய வேறுபாடு பெரிதாகலின் ஒப்புமை கூறுதல் பொருந்தாது. அங்ஙனமாயினும் உருவமெல்லாம் ஒரு தன்மையவாகிய மாயாகாரியமேயாகலின் உருவத்தின் வேற்றுமையில்லாதவிடத்து வேறுபாட்டால் போந்தபயனென்னை. (எ...று) (நூ) (சு0)

இறைவனுக்கு உருவத்திருமேனி உண்டு அதுகொண்டு நம்மில் ஒருவனுதலில்லை எனக் கூறுகின்றது.

பிரமாணவியல் கம் சூம். உம் அதி.

மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகு
மாயவா ணவம கன்ற வறிவொடு தொழிலை யார்க்கு
நாயக னெல்லா ஞான தொழின் முத னண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னுல்.

(கொ-டு) ஆய ஆணவம் அகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும் காயகன் எல்லா ஞானத் தொழில் முதல். நண்ணலாலே மலத்தைப் பற்றி வருவதோர் மாயைதான் வடிவமாகும் காயுமோ மாயை அன்று சத்தி தன்னுல் காண்பது (ஆகும்.)

மலத்தைப் பற்றி யென்பதை மலத்தைப் பற்றிக்க என விரித்துரைக்க.

(பொ-ரை) நீ அங்ஙனங் கூறுதல் பொருந்தாது. வடிவத்தை உடைய வர்களது எற்றுத்தாழ்வால் வடிவங்களும் எற்றத்தாழ் வுடையனவேயன்றி தம் முள் ஒப்பனவாகா. அவ்வேற்றத்தாழ்வுகள் என்னையோவெனில் கூறுதும் யோகிகள் முதலிய நம்மனோர் எல்லாரும் மலத்தைப்பற்றிக் கிடக்கும் பசுக் கள் அதுவன்றியும் ஒன்றேறயறிதலும் ஒன்றே செய்தலும். ஒன்றிலே முதன் மையாதலுமாகிய அற்ப ஞானத்தொழில் உடையராம். முதல்வன் பந்திப்பா தாய அவ்வாணவமல நீங்கிய ஆன்ம அறிவிலே தங்கிநின்று உணர்த்தும் தொழி லுடையோனுகிய பசுபதி அதுவுமன்றி எல்லா அறிவும் எல்லாத் தொழிலும். எல்லா முதன்மையும் உடையன் இங்ஙனம் வடிவத்தையுடைய அங்கிகட்கு. தம்முள் எற்றத் தாழ்வுகள் உண்மையின் அதற்கேற்ப மலத்தைப் பற்றிய பசுக்களுக்கு அம்மலத்தோடியை புடைத்தாய் ஏகதேச அறிவைச் செய்யும். மாயையே வடிவமாம். அனுதிமுத்த சித்துருவாகிய பசுபதிக்கு ஏகதேசத் தைச் செய்யும் மலத்தோடியை புடைய மாயாவடிவமன்று. அவனுக்கு மல நீங்கிய உயிர்க்கு வியாபக அறிவைச் செய்யும் சத்தியினுலேயே வடிவமாம். ஆதலின் அங்கங்களினும் தம்முள் எற்றத் தாழ்வுகளுண்டென்பது இனிது விளங்குதலால் அதனை அறியாது கூறுதல் அடாது. (எ...று) (சூ)

இறைவனுக்கு உருவங்கொள்ளுதல் பொருந்தாது அருவங் கொள்ளுதலே பொருந்துமெனக் கூறுகின்றது.

சத்தியே வடிவென் றுலுந் தான்பரி ணும மாகு
நித்தமோ வழியு மத்தா னின்மல னருவே யென்னி
லத்துவா மார்க்கத் துள்ளா னலனிவ னருமை தன்னைப்
புத்தி தடையைப் போல விருந்தவ புகலக் கேணீ.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

(பொ-ரை) அங்ஙனஞ் சத்தியே வடிவாயினும் உருவமெல்லாம் கண்டிதப்பொருளாதலின் மாறுதலேயடைந்து அழிவெய்துதும் அவ்வாறழிவெய்தல் சிவசத்திக்குத் தகாமையால் அனாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் அருவப் பொருளாதலே அமை உனடத்தெனின் அருவப்பொருளாகிய ஆறத்துவாவை யுங் கடந்த கடவுட்பொருளே அவ்வத்துவாக்களோடு ஒப்ப அருவமெனக் கூறுதல் பொருந்தாது. ஆயினும் இவ்விறைவன் தன்மையை புத்தியுடையாய் போலிருந்தவனே கூறுவாம். நீ கேட்பாயாக. (எ...று)

அத்துவா எனினும் வழி எனினும் ஒக்கும். அது கலை, மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனமென அறுவகைப்படும். பிரபஞ்சந் தோன்றுதலும் ஒடுங்குதலும் ஆன்மாக்கள் வினைகளை ஈட்டுதலும் இவ்வழியே யாதலின் வழியெனப்பட்டது. இதன் விபரம் முன்னர்க் கூறப்படும்.

இறைவனுக்கு அருவங்கொள்ளுதலும் அருவுருவங்கொள்ளுதலும் பொருந்தாதெனக் கூறுகின்றது.

உலகினிற் பதார்த்த மெல்லா முருவமோ டருவ மாகி
நிலவிடு மொன்றொன் றுகா நின்றவந் நிலையே போல
வலகிலா வறிவன் றனு மருவமே யென்னி லாய்ந்து
குலவிய பதார்த்தத் தொன்றுய்க் கூடுவன் குறித்திடாயே.

(கொ-டு) உலகினிற் பதார்த்த மெல்லாம் உருவமோடு அருவமாகி நிலவிடும் ஒன்று ஒன்று ஆகா அலகு இலா அறிவன் அருவமே என்னில் நின்ற தானும் அந்நிலையே போல குலவிய பதார்த்தத்து ஒன்றுய்க் கூடுவன் ஆய்ந்து குறித்திடாயே.

(பொ.ரை) உலகத்திற் காணப்பட்ட பொருள்களெல்லாம் உருவமும் அருவமும் அருவுருவமுமாய்க் காணப்படும். அவற்றுள் ஆகாய முதலிய அருவப்பொருள் உருவத்தின் இயல்புடையதாகாது. நிலமுதலிய உருவப் பொருள் அருவத்தின் இயல்புடையதாகாது. சந்திரன் முதலிய அருவுருவப் பொருள் அருவுமாகாது உருவுமாகாது. இங்ஙனம் ஆறத்துவாவுட்பட்ட பொருள்களெல்லாம் ஒன்று பிறிதொன்றின் இயல்புடையதாகமாட்டாது. ஆகலான் அனாதிமுத்த சித்துருவாகிய முதல்வனே அருவப்பொருளே எனின் நிலைபெற்ற அவனும் அப்பொருள்போல் பிறிதொன்றாகமாட்டாமை உடையனெனப்பட்டு பொருந்திய அவற்றுள் ஒருவனுய் முடியும். ஆகலான் நீ இதனை ஆராய்ந்தறிவாயாக. (எ...று)

சந்திரனுக்கு ஒருகலையென்று மிருக்கவும் அமாவாசையில் அறி யமுடியாமையின் அருவம், மற்றைக்கலைகள் அறியப்படுதலின் உருவம், ஆதலின் அருவுருவமாம். (சஉ)

றைவனுக்கு உருவங்கோள்ளுதலால் மாறுதலையடைந்து அழிவெய்துதலாகிய குற்றமின்றெனக் கூறுகின்றது

பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லா
னந்தமு மாதி யில்லா னளப்பில னதலாலே
யெந்தைதா னின்ன னென்று மின்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்ற மின்றே.

(கொ-டு) எந்தை தான் பந்தமும் வீடும் ஆய பத பதார்த்தங்கள் அல் லான் ஆதி ,அந்தமும் இல்லான் அளப்பிலன் ஆதலாலே இன்னன் என்றும் இன்னது ஆம் இன்னது ஆகி வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற் றம் இன்றே.

(பொ-ரை) அனுதிமுத்தசித்துருவாகிய இறைவன் சட்டுவீடென்னும் பசுங்களையுடைய பசுபாசபதார்த்தங்களது இயல்புடையனல்ல ஏகலாஞும் ஆதி யும் அந்தமும் இலனாகலாஞும் அவை இலனாகவே அளவைகட் கெட்டாதவனாக லாஞும் அருவம், உருவம், அருவுருவம் என்னும் முக்கூற்றுள் இன்னனுவ னென்றுவது அம்முக்கூறும் படும்விருத்தி, பரிணமம், விவர்த்தனம் என் பவற்றுள் ஒன்றிற்படுவன் படானென்றுவது கூறுதற்கு ஓர் ஆசங்கையுமில்லை. ஆசங்கை இன்மையின் அதற்கு மறுமொழியாகிய பரிகாரமுமில்லை- (எ...று)

விருத்தி, பரிணமம் மேற்கூறப்பட்டிருக்கின்றன. விவர்த்தனம் ஒன்று பிறிதொன்றுய்த் தோன்றல் அதாவது கட்டை கள்ளனுய்த் தோன்றல் போல்வன. (சக)

இறைவன் உயிர்கள் மாட்டுவைத்த அருளினுல்தான் நினைந்த வடிவங்கோள்ளுதலால் கன்மத்தால் உருவங் கோள்ளுவார்க்குப் போல குற்றமின்றெனக் கூறுகின்றது.

நான் முக மாட்டாக் குறைவில னதலானு
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் பேவுத லிலாமை யானு
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே.

(கொ-டு) நின்மலன் அருளினாலே நினைந்த மேனி நிறுத்திடும்.

(பொ...ரை.) இறைவன் விகாரப்படுதற்குக் காரணமாகிய நினைந்ததொரு வடிவத்தை எடுத்துக்கொள்ளமாட்டாத குறைபாடிலனுதலானும் முறைமைப்பட ஏகதேச மாதற்குக் காரணமாகிய சிற்றுணர்வு சிறு செயல்களின்றிய நிறைந்த தொழிலுடைய ஞான நிலைமையனுதலானும் தடக்குறுதற்குக் காரணமாகிய விருப்பு வெறுப்புக்கள் தன்மாட்டுப் பொருந்தல் இல்லாதவனுகலானும் அவ்வுபாதிகள் இலனுகலே அக்குற்றங்களுக்குந் தூரனுய் அனதிமுத்தசித்தருவாகிய முதல்வன் மலநீங்கிய அறிவிலே தங்கிநின்று உணர்த்தும் அருளுடையனுய் நிற்றலின் தானினைந்ததொரு திருமேனியைத் தனதாகக் கொண்டருள்வன்.(எ...று) (சஎ)

இறைவன் உருவங் கொள்ளுதலாற் போந்த பயன் கூறுகின்றது.

ஆரண மாக மங்க ளருளினு லுருவு கொண்டு
காரண னருளா னுகிற் கதிப்பவ ரில்லை யாகு
நாரணன் முதலா யுள்ள சுரர் நரர் நாகர்க் கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றி டாவே.

(கொ-டு) காரணன் அருளினுல் உருவு கொண்டு ஆரணம் ஆகமங்கள் அருளானுகில் கதிப்பவர் இல்லையாகும்.

(பொ... ரை) உயிர்க்கு தன்னுடம்பைத் தொழிற்படுத்துதற்கு வேறுருவடிவம் வேண்டாதவாறுபோல அனதிமுத்தசித்துருவமாகிய முதல்வனுக்குத் தன் வடிவமாகிய உலகத்தை தொழிற்படுத்துதற் பொருட்டு வேறுரு வடிவம் வேண்டப்படுவதன்று ஆயினும் அம்முதல்வன் கருணையினுல் திருவுருக் கொண்டு வேதாகமங்களை முறைப்பட அருளிச் செய்யவில்லையாயின் நோகவும் பிறிதொரு வடிவத்தில் மறைந்து நின்றும் அறிவித்தால் அறியுந்தன்மையுடைய பிரளயாகலர் சகலரென்னும் உயிர்வர்க்கங்கள் பொருளியல் புணர்ந்து வீடு பேறடைதல் இல்லை யாகும் அதுவன்றி திருமால் முதலிய தேவர்க்கும் மானுடர்க்கும் நாகர் முதலியோர்க்கும் மிக்க சிறப்புடைய குரு பரம்பரையின் வைத்து அருளுதலும் செல்லாவாம் ஆதலின் திருமேனி உறுதியாக வேண்டப்படும். (எ...று)

விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் என்று ஆன்மவர்க்கம் மூன்று வகைப்படும். அவை முன்னர் எட்டாஞ் சூத்திரத்திற் கூறப்படும் (சஅ)

இறைவனுக்கு தனு உண்டாகவே வாக்கு மனுதீதனென்றல் பொருந்தா தென்பானைமறுத்து ஆன்மாக்கள் மலத்தினால் கொள்ளும் நியதியான உருவை நூல்வழிபாகக் கண்டு வாக்காற் சொல்லவும் மனத்தாற் சிந்திக்கவுங் கூடுதல்போல இறைவன் அருளாற் கொள்ளும் நினைந்ததொரு மேனிக்கு கூடாதாகலின் சிந்தனையும் வாக்குமனுதீதனென்றல் பொருந்துமேனக் கூறுகின்றது.

உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளருளிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் காசச ணுதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளரு வுயிருக் கென்றே யாக்கின னசிந்த னன்றே.

(கொ-டு) அரன்றன் உரு அருள் தரும் காசாணுதி சாங்கம் அருள் உணர்வு அருள் உருவில் தோன்றும் கருமமோடும் குணங்களும் அருள் உபாங்கம் எல்லாம் தான் அருள் அருளரு உயிருக்கென்றே தனக்கு ஒன்று இன்றி ஆக்

(பொழி) அரன் திருவடிவம் அருளாதலால் தரப்பட்ட திருக்கை திருவடி முதலிய பிரத்தியங்கங்களும் அருள் வடிவேயாம். உயிர்கட்கு அறிவைக்கொடுப்பதாகிய அத்திருவுருவிற் றோன்றுகின்ற தொழில்களும் வாய்மை முதலிய குணங்களும் ஆகிய சாங்கங்களும் அருள் வடிவேயாம். உபாங்கமாகிய புவனபோகங்களும் அருள்வடிவேயாம். இவ்வருளாகிய வடிவெல்லாம் உயிர்களின் பொருட்டன்றி சிறிதுந்தன் பொருட்டுக் கொள்வோனல்ல னாதலின் இவ்வடிவும் பற்றி சிந்திதனையினும் அசிந்திதனே. (எ...று.)

அங்கம்—சிரசு முகம் இருதயம் என்னு மூன்றுமாம்.

பிரத்தியங்கம்—நேத்திரம் நாசி கண்டம் மார்பு தோள் நாபி கை கால் விரல் முதலிய உறுப்புக்களாம்.

சாங்கம்—அங்கத்துடன் கூடியது. அதாவது சூலமுதலிய பத்து. அவற்றுள்—சூலம் ஆணி சென்னி ரோதயத்திரி ஆகிய முத்தொழிற்குரிய மூன்றுசத்திகளையும் பரசு சத்தியத்தையும் வாள் பிரதாபத்தையும் வச்சிரம் தன்னையாவது தன் செயலையாவதுபிறரால் பேதிக்கப்படாமையையும் அபய முத்திரை அநுக்கிரஹத்தையும் நாகம் சுத்தமாயையையும் பாசம் அதோமாயையும் அங்குசம் விரிவையும் கண்டை சத்தநாதத்தையும் அக்கினி பாசசங்காரத்தையுங்குறிக்கும்.

ஏ-பாங்கம்-அங்கத்தின் சமீபத்திலிருப்பது. அதாவது வஸ்திரம் மாலை ஆபரணம் ஆசனம் முதலியன. அவை இவ்விடத்து புவனபோகங்களைக் குறித்து நின்றன. (சஎ)

இறைவன் கொள்ளும் உருவத் திருமேனியின் பேதங்களும் அவற்றின்றொழில்களும் இவையென நூற்பிரமாணத்தாற் கூறி அசிந்

உலகினை யிறந்து நின்ற தாணுரு வென்ப தோரா
ருலகவ ணுருவிற் றோன்றி யொடுங்கிடு மென்று மோரா
ருலகினுக் குயிரு மாகி யுலகுமாய் நின்ற தோரா
ருலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

(கொ-டு) அரன் உரு உலகினை இறந்து நின்றது என்பது ஓரார் அவன் உருவில் உலகு தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார் உலகினிற்கு உயிருமாகி (நின்றது) ஓரார் உலகும் ஆய் நின்றது ஓரார் உருவினை உணரார் எல்லாம்உலகினில் ஒருவன் என்பர்.

(பொ—ரை)இறைவன் வடிவம் உடையனுயினும் வாக்கு மனுதீதனென்பதற்கு உருத்திரன்வடிவம் உலகினைக்கடந்துநிற்றலால் வேதத்துள்உருத்திரன் உலகாதீதனென்று கூறுஞ்சுருதியினையும் உணரார். அவ்விறைவன் திருவுருவில் உலகந்தோன்றிஒடுங்குமாதலால் உலககாரணனென்றுகூறுஞ் சுருதியினையும் உணரார். உலகிற்கு உயிராய்நிற்றலால் உலகத்திற்கு அந்தரியாமி என்று கூறுஞ் சுருதியினையும் உணரார். உலகமாய்நிற்றலால் உலகரூபி என்று கூறுஞ் சுருதியினையும் உணரார். இங்ஙனங் கூறுஞ்சுருதிகள் சான்றாகவும் திருமேனியின் இயல்புணராதவர்கள் அஞ்சிவபிரானை உலகத்திலுள்ளார் கூறுங் கடவுளரின் ஒருவனென்பர். (எ—று) (சஅ)

இதுவுமது

தேவரி னொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாத
ராவது முணரா ராதி யரியயற் கறிய வொண்ணை
மேவுரு நிலையு மோரா ரவனுரு விளைவு மோரார்.

(கொ-டு) அரிஅயற்கு அறிய வொண்ணை ஆதி மேவு உரு நிலையும் ஓரார் தேவர் மூவர் ஆய் திருவுரு நின்றது ஓரார் அவன் உரு விளைவும் ஓரார் முதல் உருப் பாதி மாதர் ஆவதும் உணரார் சிவனை தேவரின் ஒருவன் என்பர்.

(பொ—ரை) மேற்கூறிய நான்கு சுருதிகளையும் முறையே உறழ்ப்படுத்தவனவாய அரியும் அயனும் அடிமுடிதேடி அறியாவண்ணம் உயர்ந்த முதல்வன் திருவுருவின் நிலைகூறும் புராண வசனத்தினையும் உணராார். மும்மூர்த்திகளுந் தன்னுறுப்பிற்றோன்றி நின்ற திருவுருவின் இயல்புகூறும் புராணவசனத்தினையும் உணராார். அவ்விறைவன் வடிவிலே விளங்த வண்ணமே உலகிற்கு விளவுகூறும் புராணவசனத்தினையும் உணராார். பாதி உருவுமையோடு கூடிய அர்த்த நாரீசுவர வடிவு கூறும் புராண வசனத்தினையும் உணராார். இங்ஙனம் கூறும் புராணவசனங்கள் சான்றாகவும் இவ்வுண்மை யறியாதவர் அச்சிவபிரானை ஏனைக்கடவுளரின் ஒருவனென்பர். (எ—று)

வடிவத்திற் பாதிசத்தி பாகமாயிருப்பது சிவபெருமான் ஒருவனுக்கேயன்றி ஏனைய கடவுளருக்குக் கிடையாது. உண்டென்பதற்குப் பிரமாணமுமில்லை. (சகூ)

உருவத் திருமேனிகளின் தொழில்களின் பயனிலை யெனக்கூறி அசிந்தித்தனென்பதனை வலியுறுத்துகின்றது.

போகியா யிருந் தாரிக்குப் போகத்தைப் புரிந லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரா
ரருவா முடலெல்லா மும்பரி னெறுவ னென்பர்.

(கொ-டு) வேகி ஆனற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார் என்றதின் பின்னை யோகியாய் என்ற இரண்டா மடியை வைத்து உரைக்க.

(பொ—ரை) முதல்வன் கொண்ட திருமேனிகள் போக வடிவம், கோர வடிவம், யோக வடிவமென முத்திறப்படும். அவற்றுள் போக வடிவம் உயிர்கட்கு போகம் புரிதற் பொருட் டென்பதனையும் உணராார். கோரவடிவம் உயிர்கள் செய்த வினையினைக் கெடுத்தற் பொருட் டென்பதனையு முணராார். யோக வடிவம் உயிர்கட்கு யோக முத்தி உதவுதற் பொருட் டென்பதனையு முணராார். இவ்வாறு திருமேனி கொள்ளும் முறைமையினை ஆராய்ந்தறியும் வலியில்லாரனைவரும் அம்முதல்வனை தேவரில் ஒருவனென்பர். (எ...று) (சுo)

அங்ஙனந் திருமேனி கொள்ளுதல் உயிர்களின் பொருட்டாதலால் அசிந்திதனே என வலியுறுத்துகின்றது.

ஒன்றொடொன் றொவ்வா வேட மொருவனே தரித்துக் கொண்டு
நின்றலா லுலக நீங்கி நின்றன னென்று மோரா

ன்றியவ் வேட மெல்லா மருள்புரி தொழி லென் றோரார்
கொன்றது வினையைக் கொன்று நின்றவக் குணமென் றோரார்.

(கொ-டு) ஒன்றெறு ஒன்று ஒவ்வா வேடம் ஒருவனே தரித்துக்கொண் டு நின்றலால் அன்றி(ய) அவ்வேட மெல்லாம் அருள் புரி தொழில் என்று ஓரார் கொன்றது வினையைக் கொன்று நின்ற அக்குணம் என்று ஓரார் உலகம் நீங்கி நின்றனன் என்றும் ஓரார்.

(பொ-ரை) அவ்வாறு போக வடிவம், கோர வடிவம், யோக வடிவமாய்த் தம்முள் மாறுபட்ட பலவடிவம் ஒருவனே தரித்துக்கொண்டு நிற்றலால்மாறுபட்ட அப்பல வடிவங்களும் மேற் கூறிய வாறு போகமும், வீடும், யோகமும் உதவுவதாகிய அநுக்கிரகம் ஒன்றற்கே எதுவா மென்பதனையு முணரார். கொல்லுதலாகிய தீமை செய்வது வினையைக் கெடுத்து நன்மை பயத்தலாகிய நிலைபெற்ற குணமென்பதனையு முணரார். இங்ஙனம் உலகத்தில்லை வத்து அறியப்படாத அதிசய நிலையன் என்பதனையு முணரார். ஆதலின் இவ்வதிசய நிலையும் அசிந்தித னென்பதற்கு சான்று. (எ...று) (நக)

இறைவன் திருமேனிகளும் அவற்றின் தொழில்களும் உயிர்களின் பொருட்டே என்பதை அநுபவத்தில் வைத்துக் காட்டி அசிந்தித னென்பதனை வலியுறுத்துகின்றது.

நாயகன் கண்ண யப்பா னுபகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூய நேத் திரத்தி னுலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னர்.

(கொ-டு) நாயகி நயீபால் நாயகன் கண் புதைப்ப எங்கும் பாய் இருள் ஆகி மூட பரிந்து உலகினிற்கு தூய நெற்றி நேத்திரத்தினுலே சுடர் ஒளிகொடுத்த பண்பின் தேயம் ஆர் ஒளிக ளெல்லாம் சிவன்உருத் தேசது என்னர்.

(பொ-ரை) முதல்வி திருவுளம் மகிழ்ச்சியால் முதல்வனது திருக்கண் புதைத்த திருவிளையாட்டின் கண் எவ்விடத்தும் பரவிய இருளாகி மூடவும் திருநெயினல் உலகத்திலுள்ளார்க்கு பரிசுத்தமாகிய நெற்றிக் கண்ணல் மிகுந்த பிரகாசத்தினை தந்தருளிய தன்மையினனே உலகின் கண்ணுள்ள ஒளிக ளெல்லாம் அச் சிவ பெருமான் திருமேனிப் பிரகாசமே என்பதனை. உணரார். ஆதலின் இறைவன் கொள்ளும் அவ்வேட மெல்லாம் அருளைத் தருகின்ற தொழிலென்பதற்கு இந் நிகழ்ச்சியே சான்று. (எ---று) (நஉ)

தொழிலுக்கு வேடம்உறுதியாய் வேண்டப்படுமெனக் கூறுகின்றது.

கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாறு
னெண்ணிவெண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்

(கொ-டு) கண்ணுதல் யோகு இருப்பவேட்கைக்கு காமன் நின்றிட.

(பொ-ரை) நெற்றிக் கண்ணுடைய சிவ பெருமான் யோக நிலையிலிருந்த விடத்து காமத்திற்குக் காரணமாகிய மன்மத னிருக்கவும் மேலிடத்திலுள்ள தேவர்கள் முதலியோர் காம வேட்கையின்றி மெலிவுற்றதும் அறியார். விட்டுணு அம் மெலிவு கெடும்படி கருதி இறைவனிடத்து மன்மதனை யேவுதல் செய்ய அம் மன்மதனை நெற்றிக் கண்ணை விழித் தெரித்து இமையமலை அரையன் பெற்ற உமாதேவியை மணந்து அவ்வுயிர்கட்கு பேரின்பத்தினை அருளிச் செய்தது முணாார். ஆதலின் பல வேறு வகைப் பட்ட அருள்தரு தொழிலும் அவ் வேடத்தை இன்றி முடியாமைக்கு இந் நிகழ்ச்சியே சான்று-
(எ...று) (நாக)

இறைவன் உருவத் திருமேனி கொள்ளாமலே இத் தொழிலனைத்தும் செய்யக் கூடாதோ வென்னும் ஐயத்தை நீக்கி இறைவனுக்கு உருவத் திருமேனி இன்றியமையாது வேண்டப்படு மென்றது.

படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும்பா வனையு நூலு
மிடைப்பாக மாத ராளோ டுயைந்துயிர்க் கின்ப மென்று
மடைப்பாணு மதுவு முத்தி யளித்திடும் யோகும் பாசந் [தே.
துடைப்பாணுந் தொழிலு மேனி தொடக் கானேற் சொல்லொ ணை

(கொ-டு) படைப்பு ஆதித்தொழிலும் பத்தர்க்கு அருளும் பாவனையும் உயிர்க்கு என்றும் இன்பம் அடைப்பாணும் அதுவும் நூலும் மாதராளோடு இட்டப்பாகம் இணைந்து முத்தியளித்திடும் யோகும் பாசம் துடைப்பாணும் தொழிலும் மேனி தொடக்கானேல் சொல்ல வொணாதே.

(பொ-ரை) முன் கூறிப் போந்தபடி உபதேச மாத்திரைக்கே யன்றி படைப்பாகிய முதற் றொழிலுக்கும் வாதுளாகமத்திலோதியவாறே அசையும் பொருளும் அசையாத பொருளுமாகிய உலகங்கள் முதல்வனது திருமேனி

யில் ஒவ்வோ ருறுப்புக்களினின்று தோன்றுமாறு செய்ய வேண்டுமாதலானும், பக்தர்களுக்கு இருவினை ஒப்பு வந்த விடத்து அநுக்கிரகத்தின் பொருட்டு செய்யும் பாவனையாகிய மறைத்தற் றொழிற்கும் ஊன நட்ன மியற்றவேண்டுமாதலானும் உயிர்கட்கு எக் காலத்தும் இன்பத்தைச் செய்வதாகிய திதிக்கும்வதாகமங்களை அருளிச்செய்யும் அருளாகிய உமாதேவியோடு இடப்பாகத்தே பொருந்தவேண்டுமாதலானும் முத்தியளிப்பதாகிய அநுக்கிரகத்திற்கும் நிட்டையிருந்து காட்ட வேண்டுமாதலானும் 'பாச நீங்குதலாகிய சங்காரத் தொழிற்கும் தோன்றினமுறையே அவ் அவ்வுறுப்புகளில் ஒடுக்க வேண்டுமாத லானும் இவற்றிற்கும் அவ்வுருவத் திருமேனி இன்றியமையாது வேண்டப்படும். (எ...று)

நடனம்—ஊன நடனம், ஞான நடனமென் றிரு வகைப் படும். அவற்றுள் சிருட்டி, திதி, சங்காரம் அநுக்கிரகமென்னும் நான்கும் அறிவித்தற் றொழிலா யிருத்தலின் ஞான நடன மெனவும், திரோபவம் மறைத்தற் றொழிலா யிருத்தலின் ஊன நடனமெனவும் கூறப்படும். (ருச)

இறைவனுக்கு உருவத்திருமேனி உண்டாகவே அவ்வியைபுபற்றி அருவத்திருமேனியும் அருவுருவத்திருமேனியும் உண்டென்றும்அவையும் கருணையே என்றுங் கூறுகின்றது.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது
திரு மேனி யுபயம் பெற்றேஞ் செப்பிய மூன்று நந்தங்
கரு மேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே.

(பொ-ரை) மேற்கூறியவாறு உருவத்திருமேனி தரித்துக்கொண்ட தென்ற மாத்திரையால் உருவமெனப்படுந் தூலப்பொருட்கெல்லாம் அருவமெனப்படுஞ் சூக்குமை அவித்தை உண்டென்பது துணிபாதலின் அச்சற்காரிய வாதத்தின் இயல்புபற்றி உருவமொடுங்குதற்குக் காரணமாகிய அருவத்திருமேனியது உண்மையுங் கண்டாம். அவ்வருவமெனப்படும் சூக்குமப்பொருள் பின் உருவமெனப்படும் தூல அவத்தையெய்தும் பொழுது அவ்விரண்டிற்கும் பொதுவாகியதொரு அவத்தையுமுண்டாம் ஆதலின் அதுபற்றி அருவுருவத்திருமேனியது உண்மையும் பெற்றும். திருமேனி எல்லாம் ஒரு தன்மையவாகலின் இங்ஙனம் கூறிய மூன்று திருமேனியும் நமது பிறவிக்கே துவாகிய மாயையினுருவை ஒளித்தற்கு முதல்வன் கருணையினாற் கொண்டவடிவே. ()

இறைவனுக்கு கிருணபாற் கொள்ளும் நிர்ணர்தம்தாருவடிவமேயன்றி எவற்றுடனும் கலந்து உடனாய் நிற்குமேதுவால் அத்து

வாக்களும் வடிவமென்று உபசரித்துரைக்கப்படு மெனக் கூறுகின்றது.

அத்துவா மூர்த்தி யாக வறைகுவ மதனாலே யென்னி
னித்தனுப் நிறைந்த வற்றி னீங்கிடா நிலைமை யானுஞ்
சித்துட னசித்திற் கெல்லாஞ் சேட்டித னுகை லானும்
வைத்ததா மத்து வாவும் வடிவென மறைக ளெல்லாம்.

(கொ-டு) மறைகள் எல்லாம் அத்துவாமூர்த்தியாக அறைகுவது என்னென்னின் நிறைந்து அவற்றின் நீங்கிடா நிலைமையானும் நித்தனுய் சித்துடன் அசித்திற்கு எல்லாம் சேட்டிதன் ஆதலானும் அத்துவாவும் வடிவுஎன வைத்தது ஆம்.

(பொ-ரை) இவ்விடத்துக் கூறியவாற்றுல் முதல்வனுக்கு கருணையினுல் கொள்ளும் வடிவமேயன்றி மாயாவடிவமில்லையாயின் ஆகமங்களிலெல்லாம் அத்துவாக்களாறும் முதல்வனுக்கு வடிவமென்று கூறுதலெதுபற்றியெனின் முதல்வன் அவ்வத்துவாக்கள் முழுதினும் நிறைவுற்றுக் கலந்து எல்லாமாகி நிற்றலானும் அவ்வத்துவாக்கள் அல்லனுய் நிற்றலானும் சடசித்துக்களேயெல்லாம் இயக்கி உடனுமாய் நிற்றலானும் அம்மூவகை இயல்புடைய முதல்வனுக்கு அம்முதல்வனது திரோதான சக்தியின் சம்பந்தத்தால் அத்துவாவும் வடிவமென உபசரித்துக்கூறப்படும்- (எ-று) (நிசு)

இரண்டு செய்யுளால் இறைவனுக்கு அத்துவாக்களுள்ளும் மந்திர வடிவஞ் சிறந்ததென்பதற்கு ஏது கூறப்படுகின்றது.

மந்திர மத்து வாவின் மிகுத் தொரு வடிவ மாகத்
தந்தமெ னரனுக் கென்னிற் சகத்தினுச், குபாதா னங்கள்
விந்துமோ கினிமான் மூன்று மிவற்றின்மே லாகி விந்துச்
சிந்தையா ரதிக மான சிவசத்தி சேர்ந்து நிற்கும்.

சுத்தமாம் விந்துத் தன்னிற் ரோன்றிய வாத லானுஞ்
சத்திதான் பிரேரித் துப்பின் ரூனதிட் டித்துக் கொண்டே
யத்தினுற் புத்தி முத்தி யளித்தலா லானுக் கென்ரே
வைத்தவா மந்தி ரங்கள் வடிவென மறைக ளெல்லாம்

(கொ-டு) அரனுக்கு அத்துவாவின் மந்திரம் ஒருவடிவமாக மிகுத்து தந்தது என் என்னின் சகத்தினுக்கு உபாதான்ங்கள் விந்து மோகினி மான் மூன்

ரும் இவற்றின் மேலாகி விந்து சிந்தை ஆர் ஆதீதம் ஆன சிவசத்திசேர்ந்து நிற்கும் சுத்தம் ஆம் விந்துத்தன்னில் தோன்றிய ஆதலானும் சத்திதான் பிரேரித்து பின்தான் அதிட்டித்துக்கொண்டே அத்தில்லல் புத்தி முத்தி அளித்தலால் மறைகள் எல்லாம் அரனுக்கு மந்திரங்கள் வடிவுஎன வைத்தஎன்றே ஆம்

பொரை) முதல்வனுக்கு அத்துவாக்களுள்ளும் மந்திர வடிவத்தைஒப்பற்ற வடிவமாகச் சிறந்தெடுத்தோதிய தென்னேயெனின் உலகிற்கு முதற்காரணங்கள் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை எனமூன்றுகும். இம்மூன்றனுள் மேலாகிய சுத்தமாயையின் கண் மனத்தால் நினைப்பதற்கு அருமையாகிய அதீதமெனப்படும் சிவசத்தி சேரப்பட்டு நிற்றலானும் சுத்தமாயையாகிய அவ்விந்துவில் மந்திரங்கள் முதலாவதாய்த்தோன்றிய தலைமையுடையனவாதலானும், அம்மந்திரங்களை சாதகராவார் கணிக்குமாறு அச்சிவசத்தி செலுத்தி கணித்தபின் பயன்கொடுத்தற்பொருட்டு அம்மந்திரங்களை வாயிலாகக்கொண்டு கணித்த அதனால் போகம் வீடு பேறுகளாகிய பயன் கொடுத்தலானும் அவைபற்றி ஆகமங்களிலெல்லாம் முதல்வனுக்கு மந்திரவடிவம் விசேட உரிமையாகக் கூறியணவையாம். (எ-று) (நஎ)(நஅ)

இறைவனுக்கு மந்திரவடிவுள்ளும் பஞ்சப் பிரம மந்திரம் சிறந்தது என்பதற்கு ஏது கூறுகின்றது.

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவ மாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னனிற் சாற்றக் கேணீ
முந்திய தோற்றத் தாலு மந்திர மூலத் தாலு
மந்தமில் சத்தியாதிக் கிசைத்தலு மாகு மன்றே

(கொ.டு) தந்திரம் மந்திரம் அதனில் பஞ்ச மந்திரம் வடிவமாக இங்கு சொன்னவாறு என்எனின் சாற்றகேள் முந்தியதோற்றத்தாலும் மந்திரமூலத் தாலும் அந்தம் இல் ஆதிசத்திக்கு இசைத்தலும் ஆகும் அன்றே.

(பொ-ரை) ஆகமங்களில் இறைவனுக்கு மந்திரவடிவுள்ளும் பஞசப்பிரம மந்திர வடிவத்தை ஒப்பற்ற வடிவமாகச் சிறந்தெடுத்தோதிய தென்னேயெனின் கூறுதும் நீ கேட்பாயாக. அப்பஞ்சப் பிரமமந்திரம் ஏனையமந்திரங்கட்கெல்லாம் முற்பட்டதோன்றியதானும் மூலமாதலானும் அம்மந்திரங்களைச் செலுத்தி நிற்கும் அழிவில்லாத ஆதியாகிய திரோதான சக்திக்கு முற்பட்டபொருந்துவதாகிய வடிவாதலானும் என்க. (எ-று) (நகூ)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்றும்மதிகாணம்.

தான் முதலென்பது.

அரனுடைய சத்தி ஒவ்வொன்றே பிரமனுதியே ரிடத்து நிற்ற லால் அரனே முதலெனவும் அவ்வரனுக்கு பிரமனுதியோர் இன்றி யமையாது வேண்டப்படுவரெனவும் கூறுகின்றது.

அயன்றனை யாதி யாக வரனுரு வென்ப தென்னை
பயந்திடுஞ் சத்தியாதி பதிதலாற் படைப்பு மூல
முயன்றன ரிவரே யாயின் முன்னவ னென்னை முற்று
நயந்திடு மவனி வர்க்கு நண்ணுவ தொரோ வென்றுமே.

(கொ-டு) , இவரே மூயன்றனர் எனவும் ஒரோ ஒன்று நண்ணுவதுமேமே எனவும் கூட்டுக.

(பொ-ரை) பிரமாவினுடைய அழகிய உருவம் விட்டுணுவினுடைய உருவமுதலியவற்றையும் அரனுருவோடொத்த வுருவாக வைத்து வேதாகமங் களில் அவரவர் எல்லையளவும் *அத்துவநியாசம் ‡ மந்திரநியாச முதலாயின விதித்தலில் அரனுகிய சங்காரக் கடவுளோடொப்ப அவரும் முதல்வராவான் போலுமென மலைய வேண்டாம். படைப்பாதி தொழில்செய்யும் ஐனனி முதலிய சிவசத்திகள் ஒரோ ஒன்று பிரமனுதியோர் மாட்டு பதிந்துநின்று செலுத்துதலால் அச்சத்தி பதிந்திருக்கு மியல்புபற்றி வேதாகமங்களில் அரனே டொப்ப உபசரித்து ஓதப்பட்டன. சத்தி பதிந்திருக்கு மதனால் படைப்பாதி தொழிலை அயன் அரிமுதலாயினரே முதல்வ னருளின்றியும் தாம் தாம் நினைந்தவாறு செய்வரென்று கூறின் முதல்வன் எதற்காக வேணடும் வேண் டுவதின்றும். ஆகலின் அமைச்சர் முதலாயினர்க்கு அரசனையின்றிச் செல் லாமைபோல அயனரி முதலாயினர்க்கு அரனருளையின்றிச் செல்லாது ஆயின் ஐந்தொழிலுஞ் செய்யும் அம்முதல்வன் அத்தொழிலனைத்தும் தான் செய்யாது அயனரிமுதலாயினர்க்கு ஒவ்வொரு தொழிலியற்றச் செய்தலின் அரசனுக்கு அமைச்சர் முதலாயினர் போல முதல்வனுக்கு அயனரிமுதலாயினரும் வேண் டப்படுவர். (எ...று, (சூ0)

சிருட்டியாதிபல சத்திகள் உளவெனவே அச்சத்திகளையுடைய சத்தன் பலவாமெனப்பட்டு அநேகேசுர வாதமாகாதா என்பானை

---

* அத்துவநியாசம் - அத்துவசோதனை. ‡ மந்திரநியாசம் - மந்திர வைப்பு.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

மூலத்து உவமை முகத்தால் சிவசத்தி ஒன்றின் தடத்தமே பல சத்திகளாதலின் அரன் ஒருவனே எனக் கூறுகின்றது.

சத்திதான் பலவோ வென்னிற் றுரிணென்றே யதேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லா
மூப்த்திடு மொருவன் சத்தி போலர னுடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவ னினைந்த வாறும்.

(கொ–டு) சத்திதான் பலவோ வன்னின் ஒருவன் சத்தி மந்திரியாதிக்கு எல்லாம் உய்த்திடும்போல் அரனுடைய தாகி தான்ஒன்றே காரியத்தால் அநேக மாக வைத்திடும் புத்திமுத்திகளை யெல்லாம் புரிந்து அவன் நினைந்தவாறு ஆம்.

(பொழிப்புரை) மேற்கூறியவாறு இறைவனுக்கு சத்திகள் அநேகமோ வென்றிடின் அன்று அரசன் சத்தி ஒன்றே அமைச்சர், படைத்தலைவர், தண்டக்காரர் முதலாயினர் மாட்டுநின்று செய்யும் காரியவேற்றுபாட்டால் பலவேறு வகைப்பட்டாற் போல சிவசத்தி ஒன்றே பிரமன் முதலாயினர் மாட்டுநின்று செய்யுங் காரிய வேற்றுபாட்டால் ஜனனி முதலியவாய் பலவேறு வகைப்படும். ஆயினும் சிவசத்தி ஒன்றேயென்பதும் அதுவே பல கடவுளர் மாட்டுநின்று நடாத்துமென்பதும் அமைச்சர் முதலாயினர் எவை எவை செய்யினும் அரசன் நினைந்தவாறன்றி ஆகாமைபோல போகமோட்சங்களெல்லாம் கருணையினால் அவ்வரன் நினைந்தவாறின்றி ஆகாமையின் வைத்தறியப்படும். (எ...று)

அரன் நினைந்தவாறன்றி யாகாமையை தக்கன் வேள்வி மார்க்கண்டன் வாழ்நாள் பாற்கடலில் விடந் தோற்றரவு முதலியவற்றால் அறிக. (கூக)

மேல் சிவசத்தியின் தட்டத்தங் கூறினமையால் அச்சிவசத்தியின் சொரூபங் கூறுகின்றது.

சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞான மாகு
மூப்த்திடு மிச்சை செய்தி யிவைஞானத் துளவோ வென்னி
னெத்திற ஞான முள்ள தத்திற மிச்சை செய்தி
வைத்தலான் மறைப்பின் ஞானன் மருவிடுங் கிரியை யெல்லாம்.

(கொ-டு) சத்திதன் வடிவுஎது என்னின் தடையிலா ஞானமாகும் (தடைசெய்யும் ஞானம்) உய்த்திடும் இச்சைசெய்தி இவைஞானத்து உளவோ என்னின் ஞானம் எத்திறம் உள்ளது அத்திறம் இச்சைசெய்தி வைத்தலால் கிரியை யெல்லாம் மறைப்பு இல் ஞானன் மருவிடும்.

பிரமாணவியல் க-ம் சூ-ம். கூ-ம் அதி.

தடையிலா ஞானம்என்றதிஞல் தடை செய்யும் ஞானம் வருவிக்கப் பட்டுது. அதுவே திரோதான சத்தியாம்.

(பொரை) ஒன்றுகிய சிவசத்தியின் சொரூபம் யாதெனின் உயிர்கட்கு அனுக்கிரகம் மாத்திரம் குறித்து அதற்கு வேண்டுவனவற்றை சிறப்புவகை யால் தான் அறியாமலும் உயிர்க்கு அறிவிக்காமலும் பொதுவகையால் தான் அறிந்தும் உயிர்க்கு அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றேயாம். அந்தஞானமே பராசத்தியெனப்படும். அந்த ஞானம் உயிர்கட்கு மலபரிபாகம் வருதற்பொரு ட்டு ஐந்தொழில் செய்தலைக் குறித்து சிறப்புவகையால் வியாபரிக்கும் கால் ஒரு கூற்றுனே திரோதான சத்தியென நின்று இச்சாஞானக் கிரியையென முத்தி றப்பட்டுத் தொழிற்படும். அவ்வாறுயின் இச்சை கிரியை யென்கின்ற இவை கள் ஞானத்தினின்றுந் தோன்றுவனவோ வெனின் ஞானம் எவ்வாறுளதோ அவ்வாறே இச்சை கிரியைகளும் கட்டத்தலின் அவ்விரண்டும் ஞானத்தின் வியாபாரவிசேடங்களேயன்றி வேறு தோன்றுவனவல்ல. ஆதலால் காரியத் தால் அனேகமாகிய செனனி முதலிய வியாபார சத்திகளெல்லாம் முற் கூறப் பட்ட பராசத்தி ரூபமாகிய ஞானம் ஒன்றுல் உளவாவனவேயாம். (எ...று

இதனுல் பராசத்தி திரோதான சத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தியென ஐந்து சத்திகள் இறைவனுக்கு ...ண்டென்றும் அவற்றுள் பராசத்தி ஒன்றே சொரூபமென்றும் ஏனைய நான்கும் அவற்றின் வியாபாரபேதமாகிய செனனி முதலிய சத்திகளாந் தன்மை யுடைத்தென்றும் அறிக. பொது வகையால் அறிதல் - அனுக்கிரகமாத் திரம் குறித்து நிற்றல். சிறப்பு வகையால் அறிதல் - சிருட்டி. முத லிய நான்கு தொழிலையுங் குறித்து நிற்றல். இவை முறையே உபகாரஞ் செய்ப வேண்டுமென்றெண்ணுதலும் இன்னவிதஞ் செய்ப வேண்டுமென்றெண்ணுதலும் போலவாம். (கூ2)

சிவசத்தி ஒன்றே சிறப்புவகையால் தொழிற்படுதலால் உண் டாம் பயன் கூறுகின்றது.

ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன்றுகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கருளாகு மாகு
நன்றெலா ஞான சத்தி யானயந் தறிவ ஞைக
னன்றருட் கிரியை தன்னு லாக்குவ னகில மெல்லாம்.

(கொ-டு) சத்தி ஒன்றதாய் இச்சா ஞானக்கிரியை என்று ஒரு மூன்றுகி நின்றிடும் இச்சை உயிர்க்கு அருள் (நாதன்) நேசம் ஆகும் ஞானசத்தியால் நன்று எலாம் (நாதன்) நயந்து அறிவன் அருட்கிரியை தன்னுல் அன்று அகில மெல்லாம் நாதன் ஆக்குவன்.

(பொ-ரை) 'பாசசத்தியாவது தடையிலாஞானமெனப் பொதுமையால் ஒன்றாய் இச்சாஞானக்கிரியையென வியாபாரபேதத்தால் மூன்றாய் அ வையே மற்றும் அவ்வக்காரிய பேதத்தால் பல திறப்படும். அம்மூன்றனுள் இச் சாசத்தியாவது உயிர்கட்கு மலத்தைநீக்கி சிவானுபவத்தைத் தருதற்பொருட்டு முதல்வனிடத்து உளதாகிய கருணையாம். ஞானசத்தியால் சிவப்பேறுகிய அதற்குச் செய்யக்கடவதான உபாயங்களையெல்லாம் முதல்வன் விரும்பி அறி வன். அருளின் வேறல்லாதகிரியாசத்தியால் அறிந்த அவற்றை அறிந்தவாறே முதல்வன் சங்கற்பித்துச் செய்வன். (எ...று) (சூத)

இச்சை ஞானம் கிரியை யென்னும் மூச்சத்திகளும் சீவனுக் கும் உண்மையால் சீவன் சிவனை ஒப்பாகானெனக் கூறுகின்றது.

சீவனு மிச்சா ஞானக் கிரியையாற் சிவனை யொப்ப
னுவனென் றிடின நாதி மலமிவற் றினைம றைக்குங்
காவல னிவன்செய் கன்மத் தளவினிற் கொடுப்பக்காண்டன்
பாவியாம் புத்தி முத்திப் பயன்கொளும் பண்பிற்றாகும்.

(கொ-டு) இச்சா ஞானக கிரியையால் சீவனும் சிவனை ஒப்பன் ஆவன் என்றிடின் இவற்றினை அநாதிமலம் மறைக்கும்.

(பொ-ரை) · இச்சாஞானக்கிரியையாகிய மூன்று சத்திகளும் முதல்வ னைடொப்ப உயிர்க்கும் ...ளவாம் அதுகொண்டு உயிர்களும் முதல்வனைடொக் குமோ எனின் அன்று உயிர்களின் இச்சா ஞானக் கிரியைகளை கேவலாவத்தை யில் அநாதியாகிய ஆணவ மலம் மறைக்கும். பின்னர் சகலாவத்தையில் உயிர் கள் தாம் செய்கின்ற கன்மத்தளவிற் ...பயனை முதல்வன் கொடுக்கப் பெற்று ஒன்று அனுபவிக்குங் கால் பிறிதொன்றை அனுபவிக்கமாட்டாமல் எகதேசப்பட்டு அனுபவிக்கும். .சுத்தாவத்தையில் முத்திப்பயனும் சகலாவத் தையில் போகப்பயன்போல் முதல்வன் கொடுப்பவேகொள்ளும் உரிமையுடை யனவாம். ஆதலால் இதன்மைகளில்லாத் முதல்வனுடைய இச்சாஞானக் கிரியாசத்திகளுக்கும் இத்தன்மைகளையுடைய சீவனுடைய இச்சாஞானக் கிரி யாசத்திகளுக்கும் வேற்றுமை பெரிதாகலின் ஒப்புமையாகாவாம். (எ...று) ()

சிவசத்தியின் தடத்தம்பலவாயினும் சொரூபம் ஒன்றாயினுற் போலத் தடத்த சிவமும் லயசிவம் போகசிவம் அதிகாரசிவமென மூன்றாயினும் சொரூப சிவம்ஒன்றே யெனவும், அதுவே தடத்த சிவ மாயும் தடத்த சிவத்தின் அவத்தைக்கேதுவான ஆதாரமாயும் நிற்கு மெனவுங் கூறுகின்றது.

பிரமாணவியல் க-ம் சூ-ம். கூ-ம் அதி.

ஞானமே யான போது சிவன்றொழின் ஞான மொக்கி
னீனமில் சதாசி வன்பே ரீசனுந் தொழில தேறி
லானமேற் கிரியை விக்கை புருத்திர னிலய போக
மானபே ரதிகா ரத்தோ டதிகர ணத்தனமே.

(கொ-டு) ஞானமே ஆனபோது சிவன் தொழி(லே ஆனபோது) ஞான
ம் ஒக்கின் ஈனம் இல் சதாசிவன் தொழில் அது எறின்பேரீசன் ஆம் கிரியை
ஊனமேல் வித்தை இலயம் போகம் பேர்ஆன அதிகாரத்தோடு அதிகரணத்
தன் உருத்திரன் ஆமே.

(பொ-ரை) மேற்கூறிப்போந்த சிவசத்தி மூன்றனுள் எப்பொழுதும் ஒரு தன்மையாய்த் தொழிற்படுவது இச்சாசத்தி அவ்விச்சை ஒழிந்த ஞானம் கிரியையெனும், இரண்டனுள் முதல்வன் ஞானசத்தியேயாய் நின்றபோது சிவமெனவும் கிரியாசத்தியாய் நின்றபோது சத்தியெனவும் ஞானமும் கிரியையுமாய் ஒத்து நின்றபோது சதாசிவமெனவும் ஞானம் குறைந்து கிரியையேறி நின்றபோது மகேசுவரம் எனவும் கிரியை குறைந்து ஞானம் ஏறி நின்றபோது சுத்தவித்தை யெனவும் இவகைப்பட்டிலயம் போகம் பொரி தாகிய அதிகாரமென்னும் மூன்று அவத்தைகளையும் அவ்வவத்தைக்கேதுவாய் வேறுபட்ட ஆதாரங்களையும் உடையனுய் அவத்தைக்கு ஆதாரம் ஆகிய அவற்றின் பேரைப்பெற்று நிற்பன். (எ-று)

சிவம் சத்தி யென்ற இரண்டும் எல்லாம் ஒடுங்குதற்கிடமாய் நிற்றலால் லயமெனவும் சதாசிவம் ஏனைய மூர்த்தங்களைத் தோற்று வித்தலால் போகமெனவும் மகேசுவரத்தில் இருபத்தைந்து மூர்த்தமும் சுத்தவித்தையில் பிரமவிட்டுணுவும் தோன்றித் தொழிற்செய்வதால் மகேசுவரம் சுத்தவித்தை யென்ற இரண்டும் அதிகாரமெனவும்அறிக. (சூ)

இலயபோக அதிகார அவத்தைகளுக்கு ஏதுவாய் நின்ற ஆதாரங்கள் சிவதத்துவங்களெனவும் அவற்றினியல்பும் கூறுகின்றது.

வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்க ளோர்ந்துஞ்
சுத்ததத் துவஞ்சி வன்றன் சுதந்தர வடிவ மாகு
நித்தமென் றுரைப்பர் கால நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு வருவித்தார் கருமத் தாலே.

"(கொ-டு) வித்தையோர்டு ஈசர் சாதாக்கியம் சத்திசிவங்கள் சுத்ததத்துவம் ஐந்தும் சிவன்றன் சுதந்தரவடிவம் ஆகும்கருமத்தாலே (முற்பிற்பாடு) வருவித் தார் காலநீங்கிய நிலைமையாலே முற்பிற்பாடு வைத்திலர் நித்தமென்றுரைப்பர்.

(பொ-ரை) சுத்தமாயா காரியமாகிய சுத்தவித்தை ஈசுவரம் சாதாக்கியம் சத்தி சிவமென்னும் சுத்ததத்துவங்களைந்தும் முதல்வனுடைய ஞானக்கிரியா வியாபாரங்களுக்கு இடமாய் அவ்வியாபாரங்களால் மேற்கூறிப் போந்த சுத்த வித்தை முதலிய இறைவன் பெயரே பெயராக அவ்விறைவனுக்கு சுதந்தர மாகிய வடிவமுமாம். முன்பின்னாக நிகழும் ஞானசத்தி கிரியா சத்திகளின் வியாபார பேதம்பற்றி இச் சிவ தத்துவங்களுக்கு ஒன்றின்பின் ஒன்றாக முற் பிற்பாடு கூறினர்- ஆயினும் முற்பிற்பாடு கூறினமையால் காலம் எதுவாக கூறப்பட்டதென்னலாமோவெனின் சுத்தமாயையில் இவ்வைந்து தத்துவங் களும் தோன்றியபின்னர் தோன்றுவதாகிய கால தத்துவம் இவ்வைந்தின் தோற்றத்திற்கு எதுவாகாதாம் ஆதலின் காலம்பற்றி முற்பிற்பாடு கூறிற்றிலர். காலவரையறை கடந்து நிற்றலால் அதுபற்றி இச்சிவதத்துவமைந்தும் சிவ பிரானுக்கு நிலைத்தவடிவமென்றுரைப்பர். (எ-று)

இதனால் சிவதத்துவம் இறைவனுடைய வியாபாரத்திற்கு இட மாதலும் இறைவனுக்கு வடிவமாதலும் அறிக. இது உயிருக்கு உடம்பு இடமாதலும் வடிவ மாதலும் போலவாம். வடிவமென்பது இவ்விடத்து அதிட்டானமாகிய வாயிலை. உயிருக்கு வடிவம் உணர்வேயாயினும் வாயிலாகிய உடம்பும் வடிவ மென்று உபசரித் துக் கூறப்படுவது போல இறைவனுக்கு வடிவம் சித்தேயாயினும் சிவ தத்துவமும் வடிவ மென்று உபசரித்துக் கூறப்படும். உயி ருக்கு உடம்பு மாறி மாறி வருதல் போல இறைவனுக்கு வருதலில்லை யென்பதும் சிவ் தத்துவம் என்றும் அதிட்டானமாம் என்ப தும் தோன்ற "நித்த" மென்றார். அதிட்டான மென்பது வாயி லா மென்பதனை இச் சூத்திரம் நிகழ்வது செய்யுளில் "அதிட்டித் துக் கொண்டே" யென்பதற்குக் கூறிய உரையா னறிக. மேல் சுக வது செய்யுளில் சத்தியினிலேயே வடிவ மென்றதனை இக் கருத்து முரணுதா எனின் முரணுது. என்னை? வருகின்ற செய்யு ளில் வடிவ மெல்லாஞ் சத்தியிற் காணப்படுவன வென்றும் அதற் கடுத்த செய்யுளில் சத்தியிற் காணப்படும் வடிவமெல்லாந் தானுகத் தோன்றி நிற்பன் சத்தியி னிடமாக வன்றி இறைவன் தானுகத் தோன்றான் என்றும் இரண்டாஞ் சூத்திரம் கூறுவது செய்யுளில்

சிவ தத்துவம் ஐந்தும் சடமாயினும் சிற்சத்திக்கு சுதந்தாவடிவமின்றும் உரை யாசிரியர் கூறியவாற்றால் இறைவனுக்கு வடிவம் சிற்சத்தியே யென்றும் சிற்சத்திக்கு சிவ தத்துவம் வடிவமா மென்றும் ஒற்றுமை பற்றி சத்திக்குரிய வடிவத்தை இறைவனுக் குரிய வடிவமாகக் கூறியதால் முரணில்லை யென்றும் அறிக.

சிவ பெருமானுக்கு எங்கும் இடமாகவும் சிவ தத்துவத்தை இடமென்று வேறறுத்துக் கூறிய தென்னை யெனின் எல்லா இடத்திலும் தான் வெளிப்படாது மறைந்தும் சிவதத்துவத்தில் வெளிப்பட்டும் நிற்றல் பற்றி யென்க. அன்றியும் இச் சிவ தத்துவம் ஏனைய தேவர்க் கிடமாகாமையின் சுதந்தர மெனப் பட்டது.

காலம்மின்றியும் முற் பிற்பாட்டிற்குக் காரணம் காலத் தான் மாய் நிற்கும் சிவ சத்தியே யாம். (சுசு)

கொரூப சிவம் சுத்த தத்துவங்களைப் பற்றிய வியாபார பேதத்தால் இலயம் போகும் அதிகார மென்னும் அவத்தை எய்தினும் அனவ சத்தியில் காணப்படலால் விகாரி ஆகா னென உவமை முகத்தாற் கூறுகின்றது.

ஒருவனே யிராவ ணாதி பாவக முற்றுற் போலத்
தருவனிவ் வுருவ மெல்லாந் தன்மையுந் திரியா ஞகும்
வரும்வடி வெல்லாஞ் சத்தி சத்திதான் மாமுங் காழ்ப்பு
மிருமையும் போல மன்னிச் சிவத்திலே டினைந்து நிற்கும்

(கொ-டு) ஒருவனே இராவணன் ஆதிபாவகம் உற்றுற்போல தருவன் இவ்வுருவமெல்லாம் வரும் வடிவு எல்லாம் சத்திதான் மாமுங் காழ்ப்பும் இருமையும் போல மன்னி சிவத்திலேடு இயைந்து நிற்குஞ் சுத்திதன்மையுந் திரியாதாகும்.

இயைந்துநிற்குஞ்சுத்தியிற் காணப்படுவன வென்பதை சத்தியென்றார்.

(பொ-ரை) ஒருவன் கூத்திற் குரிய இராவணாதி பல வேடங் கட்டி நடித்தா லுமினும் தன் தன்மையிற் சிறிதும் மாறுபடாதது போல முதல்வன் ஐந் தொழிற் குரியனவாய் மேற் கூறிப் போந்த சுத்த வித்தை முதலிய பேத வடி

வெல்லாம் எய்தியும் பொருந்தப்பட்ட அவ் வடிவு வேறுபாடெல்லாம் சத்தியுந் தானும் மாமும் வயிரமும் போல நிலை பெற்றுப் பிரிப்பின்றி நிற்கும் தனது சத்தியிற் காணப்படுவனவாம் ஆகலின் அவ் வடிவத்தின் வேறுபாடு பற்றி தன் தன்மை வேறு பட்டு விகாரியாவனல்லன். (எ...று) (சூ ம)

சத்தியிற் காணப்படுதல் தனக்காமாறு உவமை முகத்தாற் கூறு

பொன்மைநீ லாதி வன்னம் பொருந்திடப் பளிங்க வற்றின்
றன்மையாய் நிற்கு மாபோற் சத்திதன் பேத மெல்லா
நின்மலன் ருணத் தோன்றி நிலைமையான் ருயே நிற்பன்
முன்னருட் சத்தி தன்பான் முகிழ்க்குந்தான்முளையானன்றே

(கொ-டு) முன்அருட்சத்தி தன்பால் முகிழ்க்கும் தான் (ஆக) முளையா ன்அன்றே பொன்மை நீலம் ஆதிவன்னம் பொருந்திட பளிங்கு அவற்றின் தன்மையாய் நிற்குமாபோல் நின்மலன் சத்திதன் பேதமெல்லாம் தான் ஆத் தோன்றி நிலைமை ஒன்ருயே நிற்பன்.

(பொ...ரை.) அவ்விறைவன் எவ்விடத்தும் கருதப்பட்ட அருட்சத்தி யின் இடமாகவே தோன்றுவானன்றி தானுக வேறுதோன்ருனுகலான் பொன் றன்மையையும் நீலம் முதலிய பொருள்களையும் பளிங்கினது நிறமே பற்றவும் அப்பளிங்கும் அப்பொருள்களின் தன்மை அனைத்துமாப் தோன்றி வேற்று மையின்றி நின்ருற்போல முதல்வனும் தனது சத்தியிற் காணப்படும் வடிவ பேதமெல்லாம் தானுகத்தோன்றி வேற்றுமையின்றியே நிற்பன். (எ-று) (சூ அ)

சத்தியும் சிவமுமாகிய தான்முதலென்றதனை பிரத்தியட்ச மாகிய அனுபவத்தில் வைத்துவிளக்கி முதல்வனுக்குரிய பொதுவிலக் கணத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வானும் பெண்ணு முணர்குண குணியு மாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லா
மித்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்.

(கொ-டு) இவ் வாழ்க்கை யெல்லாம் அவளால் வந்த ஆக்கம்.

(பொ-ரை.) இறைவன் இவ்வாறு சத்தியுஞ் சிவமுமென தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனுயிருத்தலா னன்றே தன் வியா

பகத்துட்பட்ட பல வேறு வகைப்பட்ட இவ்வுயிர் வடிவங்க ளனைத்தும், புனு டர் மிருகம் முதலிய அவ் வப் பிறப்பிற்கியைய வடிவங்கள் ஒத்தும் அவ் வவ் வடிவத்துள்ளும் குறியும் குணங்களும் ஒவ்வாது இரு வேறு வகைப்பட்ட ஆணும் பெண்ணுமாகிய குறிகளையும் ஆண்மையும் யமைதியுமாகிய குணங்களை யுமுடையனவாய் ஒத்து தம்முட் கூடிக் களித்து வாழும்படி செய்தனன். ஆக லான் இப்படியே தனுகாண புவன போகமாகக் கூறிப் போந்த வாழ்வுகளெல் லாம் சிவமும் சத்தியும் மணந்ததனு லாகிய வாழ்வு என்பது அறியப்படும். இவ் வாறு எல்லாவடிவங்களும் ஆண் தன்மையும் பெண் தன்மையுமாம்படி சிவமும் சத்தியும் நின்ற முறைமையும் உணராா். சத்தியுஞ் சிவமுமாக இறைவன் இரு வேறு வகைப்பட நிற்பனென்பதை பீடமும் இலிங்கமுமாக அமைந்திருத்தலே பிரத்தியட்சமான சான்முகவும் அதனையும் உணராா். (எ...று)

பீடமென்பது ஆவுடையாள் அதுவே சத்தி- இலிங்கம் சிவம். (சுசு)

இது முதல்வன் தடத்த இலக்கணமாய் நிற்பினும் அதனைப் பொருந்தாது சொரூப இலக்கணமாய் நிற்பினை அவ் விலக்கண த்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

சிவனரு வுருவு மல்லன் சித்திசே டசித்து மல்லன்
பவமுதற் றொழில்க ளொன்றும் பண்ணிடு வானு மல்லன்
றவமுத லியோக போகந் தரிப்பவ னல்லன் முனே
யிவைபெற வியைந்து மொன்று மியைந்திடா வியல்பி னானே.

(பொ-ரை) சிவபிரான் அருவும் உருவு மல்லாதவன். சித்துமசித்து மல்லாதவன் சிருட்டி முதலிய ஐந்தொழில் ஒன்றுஞ் செய்வானும் அல்லாத வன் தவ முதலியவற்றிற் குரிய யோக வடிவும் போக வடிவம் கொள்வானும் அல்லாதவன் ஆதலால் அம்முதல்வன் தடத்த இலக்கணமாகிய இவற்றைப் பொ ருந்தி நின்றனையினும் அவற்றைச் சிறிதும் பொருந்தாத சொரூப இலக்கணத் தை யுடையான். அச் சொரூப இலக்கணம் ஆறாவது சூத்திரத்தில் கூறப்படும். (எ...று)

(எ0)

மூன்றாமதிகாணம் முடிந்தது.

முதற் சூத்திரம் முடிந்தது.

ஆக திருவிருத்தம் கூ0.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

இரண்டாம் சூத்திரம்.

பாசவுண்மை.

மேலைச் சூத்திரத்தில் "ஈறுமாகி மருவிய மென்றதனாலே" எவ்வாறு கின்று மருவுவிப்பன் மருவுவித்தற் குரிய பிரபஞ்சத்தை எதனினின்றும் தோற்றுவிப்பன் என்னும் ஆசங்கைகள் நிகழுமன் றே அந்நிகழ்ச்சி பற்றி இரண்டாஞ் சூத்திரமெழுந்தது.

குடமாகிய காரியத்தைக் கொண்டு செய்பவனாகிய குயவன் உண்டென்று கொள்ளுவதுமன்றி முதற்காரணமாகிய மண்ணும் துணைக்காரணமாகிய திகிரியு முண்டென்றறியப்படுமாகலின் அது போல காரியப்பிரபஞ்சத்தைக் கொண்டு கருத்தாவுண்டென்று மேலைச்சூத்திரத்தால் விளக்கி அப்பிரபஞ்சத்திற்கு முதற்காரண மாகிய மாயையும் சிற்சத்தி வழித்தாய துணைக்காரணமாகிய க்ன்ம மும் என்னும் பாசவுண்மையை நாட்டுகின்ற காரிய ஏதுவெனப் படும் அனுமானப்பிரமாணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று கன்மத்திற் கேற்பமாயையி னின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்ப னெனச் சூத்திரப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

உலகெலா மாகி வேறு முடனுமா யொளியா யோங்கி
யலகிலா வுயிர்கள் கன்மத் தாணைபி னமர்ந்து செல்லத்
தலைவனு யிவற்றின் றன்மை தனக்கெய்த வின்றித் தானே
நிலவுசீ ரமல னாகி நின்றன னீங்கா தெங்கும்.

(கொ-டு) உலகு எலாம்ஆகி வேறு ஆய் உடனும் ஆய் ஓங்கி ஒளியாய் ஆணையின் கன்மத்து அலகிலா உயிர்கள் அமர்ந்து செல்லத் தலைவனுய் இவற் றின் தன்மை தனக்கு எய்தல் இன்றி நீங்காது எங்கும் தானே நிலவுசீர் அமல னாகி நின்றனன்.

(பொ-ரை) மேற்கூறிப் போந்த சிவபிரான் புதிதாகப் பிரபஞ்சத்தைத் தோன்றச் செய்யுங்கால் உயிர்களிடத்தே கலப்பிலுல் உடலும் உயிரும்போல ஒன்றாய் பொருளின் தன்மையால் கண்ணும் சூரியனும் போல அவ்வுயிர்க ளின் வேறுமாய் உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியும் ஆன்ம போத மும் போல அவ்வுயிர்களோடு உடனுமாய் அவ்வவ்வுயிர்களினிடமாக மேலாய் நிற்பதாகிய சத்தி ரூபமாகியும் அச்சத்தியினுல் கூட்டுவிக்கின்ற இருவினைக ளுக்கேற்ப எண்ணிறந்த அவ்வுயிர்கள் ஐந்தொழிற்பட்டு தெரிந்துங்கால் அவ்வைவ்

தொழில் நடாத்துவதாகிய பதிரூபமாகியும் சத்திரூபம் பதிரூபமாகிய அத் தன்மைகளில் வேறுயும் அத்தன்மைகளோடும் பிரிப்பின்றியும் எவ்விடத்தும் தானே சுயம்பிரகாச ரூபமாம் இயல்புடையனாய் நிற்பன். (எ—று)

இதனானே சுயம்பிரகாசமாய் நிற்கும் தன்மையில் சிவமெனவும் உயிர்களின் வழி நிற்குந் தன்மையில் சத்தி யெனவும் ஐந்தொழில் செய்யுந் தன்மையில் பதி எனவும் முதல்வன் பெயர் பெற்று நிற்ப வென்ப தறிக.

இச் செய்யுள் முதனூல் இரண்டாந் சூத்திரம் மோல் மூன்று கூற்றையுடையது அவற்றுள்.

முதற்கூறு "உலகெலாமாகி வேறுயுடனுமாய்

இரண்டாங்கூறு "அலகிலா வுயிர்கள் தன்மத்தாயினாய்"

மூன்றாங் கூறு "அமர்ந்து செல்லத் தலைவனாய்"

நாலாங் கூறு "இவற்றின் றன்மை தனக்கெப்தலின்றித் தானே நிலவு சீர்அமலனாகி யொளியாயோங்கி நின்றனன் நீங்கா தெங்கும்." (க)

முதல தி கரணம்.

உலகெலமாகி வேறு யுடனுமாய் என்பது.

பல வுயிர்களோடும் ஒரு இறைவன் கலந்து உடனுய் நிற்ப னென உவமை முகத்தாற் கூறுகின்றது.

ஒன்றென மறைக ளெல்லா முரைத்திட வுயிர்க ளொன்றி நின்றன னென்று பன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி னன்றவை பதிதா னென்றென் றறையுமக் காங்க டோறுஞ் சென்றிடு மகரம் போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே.

(கொ-டு) மறைகள் எல்லாம் ஒன்று என உரைத்திட உயிர்கள் ஒன்றி நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவது என்னை என்னின் அவைபதிதான் ஒன்று என்று அறையும் அன்று அக்காங்கள் தோறுஞ் சென்றிடும் அகரம் போல சிவனுஞ் சேர்ந்தே நின்றனன்:

(பொ-ரை) வேதங்களி லெல்லாம் ஆன்மா ஒன்றே என்று உரைக்கவும் உயிர்களோடு கலந்து உடனுய் நிற்ப னென்று இவ்விடத்து உயிர் பலவென்று கூறுவது எவ்வாறு பொருந்து மெனின் அவ் வேதங்களில் ஆன்மா ஒன்று என்பது உயிராகிய ஜீவான்மாவை யன்று அச் சீவனுக்குப் பதியாகிய பரமான்மா ஒன்றே யென்பதாம். ஆதலால் முரணுதலின்று. சீவான்மாக்கள் பலவாகவும் பரமான்மா வாகிய இறைவன் ஒன்றாகவும் இருத்தலால் மேலுச்செய்யுளில் சீவான்மாக்களின் இறைவன் வேறு என்றதும் பொருந்தும். வேறும் ஒருவனுயும் நிற்கும் இறைவன் பல உயிர்களுடன் கலந்து நின்றனன் என்பது எவ்வாறு பொருந்துமெனின் ஒன்றாகிய அகர அக்காரமானது அதனின் வேறாகிய பல அக்காரங்களோடும் கலந்து நிற்றல் போல இறைவனும் உயிர்களோடு கலந்து நிற்றல் கூடும். அவ்வாறு கலந்து நிற்றலால் மேலுச்செய்யுளில் உடனுமா யென்றதும் அமைவுடைத்து. (எ...று)

அகரமாவது அக் காரங்களுள் முதலாவதாய் நிற்கும் அக்கரமென்பர் ஒரு சாரார். அவ்வக்காரம் ஏனை அக்காரங்களோடு கலந்து நிற்றல் பெறப்படாமையின் அவர் கருத்துப்பொருந்தாது. இனி அங்காத்தல் எல்லா அக்காரங்களோடும் பொருந்துதலின் அவ்வங் காத்தலே அகர மென்பர் மற்றொரு சாரார். அங்காப்பின்றியே வாக்கு மௌனமா யிருந்து ஒருவன் ஒரு பொருளைச் சிந்திக்கும் பொழுது அப் பொருளுணர்த்தற்குரிய சொல்லும் எழுத்தும் அகத்திற் றோன்றுமா தலின் அங்ஙனந் தோன்று மெழுத்துடன் அங்காத்தல் பொருந்தாமையால் அவர் கருத்தும் பொருந்தாது. இவ்வாறுகவே அகரமென்பது தான் யாதோ வெனின் அகத்தின் கண் எப்பொழுதும் இயங்கிக் கொண் டிருக்கும் நாதமாகிய ஒலியே அகரமாம். அவ்வொலி அகரம் போல் ஒலித்தலால் அகரமெனப் பட்டது. அவ்வொலி பல வேறு வகைப்பட்ட அக்காரங்களாகிய ஒலிகளுக் கெல்லாம் முதலாயும் அவ் வொலிகளோடு கலந்தும் நிற்றலால் அகரம்போ லென உவமைகூறப்பட்டது. இதனையே ஆசிரியர் திருவள்ளுவரும் "அகர முதல வெழுத் தெல்லாம்" என்றார். உரை யாசிரியர் பரிமேலழகரும் நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலென்று அகரத்திற்கு இலக்கணங் கூறினர். (உ)

இறைவன் உயிர்களோடு கலந்து உடனுய் நிற்பினும் வேறுவனென உவமை முகத்தாற் கூறுகின்றது.

உருவொடு கருவி யெல்லா முயிர்கொடு நின்று வேறுய்
வருவது போல வீச னுயிர்களின் மருவி வாழ்வன்.

பிரமாணவியல் உ-ம் சூ-ம். உ-ம் அதி.

றருமுயி ரவனே யாகா வுயிரனை தானு மாகான்
வருபவ னினைதரு ளுபும் வேறுமாய் மன்னி நின்றேறு.

(கொ-டு) உயிர் உருவொடு கருவி எல்லாம் கொடு நின்று வேறாய் வரு. வதுபோல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன் தானும் உயிரனையாகான் தரும் உயிரவனையாகா இனைதான் ஆயும் வேறும் ஆய் மன்னிநின்றே வருபவன்.

(பொ-ரை) உயிரானது நடம்பு முதலியவற்றால் கட்டப்படும் உடம்பை யும் செவி கண் முதலிய கருவிகளையும் பற்றிக் கொண்டு அவ்வுடம்போடு உட னாய் நிற்கும். நிற்குங்கால் உடம்பிற் கிட்ட போதால் பிறன் அழைத்த விட த்து உயிர் என்னை என்று கேட்கும். கேட்கினும் உயிர் உயிரே உடம்பு உடம் பே. உயிரானது உடம்பாகமாட்டாது உடம்பு உயிராக மாட்டாது. அவ்வா றாயினும் உயிர் அவ்வுடம்பின் வேறாகியும் அவ்வுடம்பாகியும் நிற்றல் முறையே என் செவி கேட்டது என்பதனாலும் நான் கேட்டேன் என்பதனாலும் காணப் படும். அதுபோல முதல்வன் உயிர்களோடு அபேதமாய்க் கலந்து நிற்பன் அவ் வாறு நின்ற விடத்தும் முதல்வன் முதல்வனே உயிர் உயிரே. முதல்வன் உயி யிராகமாட்டான் உயிர் முதல்வனாகமாட்டாது. அவ்வாறாயினும் முதல்வன் அறி வித்தலால் உயிரின் வேறாகியும் உடனின்று செலுத்துதலால் உயிர்கள் எல்லா மாகியும் நிற்பன். (எ...று) (கூ)

முதலதிகாரணம் முடிந்தது.

ரண்டாம் அதிகாரணம்.

அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் என்பது.

இறைவன் அவ்வாறு நிற்றல் தனது சத்தியால் வினையின் பய னெகிய இன்ப துன்பங்களை உயிர்கட்கு ஊட்டுதற் பொருட் டென்ப தைத் தொகுத்து கூறுகின்றது.

இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்தி றந்து
வருவது போவ தாகு மன்னிய வினைப்ப லன்க
டருமரன் றாணி யோடு தாபதி போலத் தாமே
மருவிட வடிவுங் கன்ம பலன்களு மறுமைக் கண்ணே...

(கொ-டு) இவ்வுயிர் இருவினை இன்பத்துன்பத்து பிறந்திறந்து போவது வருவது ஆகும் வடிவுங் கன்மபலன்களும் தாமே மறுமைக்கண்ணே மருவிடா மன்னிய வினைப்பலன்கள் தாணியோடு தாபதிபோல அரன்தரும்.

(பொ-ரை) மேற் கூறிப்போந்த உயிர்க்கு முற்பிறவியிற் செய்யப்பட்டுக் கிடந்த இருவினையின் பயனுக இப்பிறவியில் இன்பதுன்ப அனுபவமுண்டாம். அவ்வனுபவத்தால் மேலும் வினையேறும். அதனால் மீட்டு மீட்டும் பிறந்திறத்தலும் சுவர்க்க நரகங்களில் சென்று மீளுதலுங்கூடும். உடம்பும் வினைப்பயனும் அறிவில்லாத சடமாதலின் உடம்பு வினைப்பயனை எடுத்துக் கொள்ளவாவது வினைப்பயன் உடம்பைப் பொருந்தவாவது முடியாவாம். ஆதலால் உடம்பினையும் அவ் வுடம்பிற் குரிய வினைப்பயன்களையும் வைத்தியனும் அரசனும்போல முதல்வனே தனது சத்தியால் அவ் வுயிருக்குக் கூட்டுவன். (எ...று)

வைத்தியன் அரசன்என்ற உவமையை முன்னர் மூப்பதாவது செய்யுள் முதல் முப்பத்தைந்தாவது செய்யுள் வரை விரித்துக் கூறப்படுமாதலின் ஆண்டுக்காண்க. இச் செய்யுளில் கூறப்படும் இருவினை யென்பதை உலகாயதர் கூற்றாகவும், தாமே மருவிடா வென்பதை மீமாஞ்சகர் கூற்றாகவும், தாணியோடு தாபதி யென்றதை உவமைக் கூற்றாகவும், இன்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும் என்பதை உயிர் அருந்துங் கூற்றாகவும் முறையே முன்னர் விரித்துக் கூறுகின்றார். (சு)

இன்ப துன்பங்கள் இயல்பே யன்றி வினையின் பயன் அன்றெனக் கூறும் உலகாயதரை மறுத்துரைக்கின்றன.

இருவினை யென்னை யின்பத் துன்பங்க ளியல்பதென்னி
னெருதன்மை யியல்புக் குள்ள தொருவனுக் கிரண்டு செய்தி
வருவதென் மலருந் தீயு மருவலின் வாசம் வெம்மை
தருவதை னீரொன் செய்தி தானியல் பாகு மன்றே.

தன்னியல் பொழியப் பூவுந் தழலுமம்வந் தணைய நீரின்
மன்னிய திரண்டு செய்தி வருமிரு வினையி னுணர்
முன்னிய வின்பத் துன்ப முறுமுயி ருணர்வில் லாத
துன்னிய வசித்தை யின்பத் துன்பங்கள் சூழ்ந்தி டாவே.

(கொ-டு) நீர் என் செய்து தருவதுதான் இயல்பு ஆகும் என் அண்மே நீரின் தன்னியல்பு ஒழிய பூவுந்தழலும் வந்தணைய இரண்டுசெய்தி மன்னியதா உன்னிய இன்பத்துன்பம் உயிர்உறும் துன்னிய இன்பத்துன்பங்கள் இருவினையினாலும் வரும் உணர்வு இல்லாத அசித்தைச் சூழ்ந்திடாவே.

(பொ-ரை) இருவினை என்பதே இல்லை இன்பதுன்பங்களெல்லாம் இயல்பேயாகும் என்று உலகாயதர்கூற இயல்பென்பது எப்பொழுதும் ஒரு தன்மையாயிருப்பதன்றி ஒரு பொருளில் தம்முள் மாறுபட்ட இன்பதுன்பங்களாகிய இரண்டு தன்மை யிருக்குமென்றல் எவ்வாறு பொருந்தும்? அவ்வின்பதுன்பம் காரணத்தாலன்றிப் பொருந்தாவாம். அக்காரணம் இருவினையேயாம். தண்ணீரில் பூவும் அக்கினியும் பொருந்துதலால் மணமும் சூடும் உண்டாவன்வாம். அவ்வாறன்றி தண்ணீரில் மணமும் சூடுங் கிடையா. மணமுஞ் சூடும் இயல்பு எனின் அன்று. எப்பொழுதும் ஒரு தன்மையான தட்பமாயிருத்தலே தண்ணீருக்கு இயல்பு. வாசமும் வெப்பமும் தண்ணீருக்கு செயற்கையான் உளவாயின. இவை போல எப்பொழுதும் ஒரு தன்மையான அறிவே உயிருக்கு இயல்பு. அவ்வியல்புடைய உயிரே இன்பதுன்பங்களை யநுபவிக்கும். அவ்வுயிருக்கு இன்ப துன்ப அனுபவம் இருவினையாகிய செயற்கையாலுண்டாம். அவ்வனுபவம் உடம்புக்கே யெனின் உடம்பு சடமாதலால் அனுபவித்தல் கூடாது. (எ—று) (கு-சூ)

இன்ப துன்பங்கட்குக் காரணம் முயற்சியே என்பாரை மறுத்துரைக்கின்றன.

இம்மையின் முயற்சி யாலே யிருநிதி யீட்டி யின்ப
மிம்மையே நுகர்வர் செய்தி யிலாதவர் பொருளு மின்றி
யிம்மையே யிடரு ழப்பர் வேறிரு வினைய துண்டே
லிம்மையின் முயற்சி யின்றி யெய்திட வேண்டு மிங்கே.

இருவினைச் செயல்கா ணிம்மை யிரும்பொரு ளின்பம் வேண்டி
வருவினை செய்யுங் காலை மடிவரு மடியு மின்றித்
தருவினை யதனி லத்தந் தானறுந் துயருந் தங்கு
மொருவினை செய்யா தோரு முடையரிவ் வுலகத் துள்ளே.

(கொ-டு) முயற்சியாலே இம்மையின் இருநிதியீட்டி இன்பம் இம்மையேநுகர்வர் செய்தி இலாதவர் பொருளுமின்றி இம்மையே இடருழப்பர் இருவினையது வேறுஉண்டேல் இம்மையின்முயற்சி இன்றிஇங்கே எய்திடவேண்டும் இம்மை இரும்பொருள் இன்பம் வேண்டி வருவினை செய்யுங்காலை மடிவரும் மடியும் இன்றி தருவினையதனில் அத்தந்தான அறும் துயருந்தங்கும்

இவ்வுலகத்துள்ளே ஒருவினை செய்யா தோரும் உடையர் இருவினைச் செயல் காண்.

(பொ-ரை) இன்பதுன்பங்களுக்குக் காரணம் முயற்சியேயாம். வினை யென்பது பொருந்தாது. எதனலெனின் முயற்சியால் இவ்வுலகின் கண் மிகுந்த பொருள்களைச் சேர்த்து இன்பத்தையும் இப்பிறப்பின் கண் அனுபவிப் பர். முயற்சியில்லாதவர் பொருளீட்டுதலுமின்றி இப்பிறப்பின் கண்ணே துன்பத்தை அடைவர். இவ்வனுபவத்தில் வைத்து முயற்சியே இன்பதுன்ப த்திற்குக் காரணமெனப் பிரத்தியட்சமாக் அறியக்கிடத்தலின் அதுவே யமை யும். அதுவன்றி இருவினை என்பதொன்றுண்டு என வேறுமோர் காரணம் கொள்ளில் அவ்வினையானது இப்பிறப்பின் கண் யாதொரு முயற்சியின்றியும் இவ்விடத்துப் பொருள் கைகூடச் செய்யவேண்டும். அவ்வாறின்மையால் முயற் சியைவிட வினை என்னும் வேறு காரணங் கொள்ளுதல் குற்றமாகதோ வெ னின் ஆகாது. இம்மைக் கண்ணே மிக்க பொருளின்பங்கள் கருதி வருகின்ற முயற்சியைச் செய்யுமிடத்து அம்முயற்சி முற்றுப்பெறுது, சிலர்வுண்டாகலா னும் சிலர்வின்றிப் பொருந்திய முயற்சியில் பயனின்றிப் போதலானும் முய ற்சியினலே துன்பம் எய்துதலினலும் இவ்வுலகின்கண் யாதொரு முயற்சி செய்யாதாரும் செல்வராய்த் தங்குதலினலும் அம்முயற்சி பிறத்தல் காணக்கிட த்தலின் இவ்வாறு பிறழ்தற்குரிய காரணம் வேறுண்டென்பது பெறப்படுதலால் அக்காரணமே இருவினை என்றறியப்படும் (எ—று) (எ)(அ).

முயற்சியின் பயன் மேல் வினையும் முன்வினைப்பயனை அனுபவி க்கச் செய்யுந் துணையு மென இருதிறப்படு மெனக் கூறுகின்றது.

பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னு
மாறுமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தா
லேறிடு முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறுநீ யினிச்செய் கன்ம மேலுடற் சேரு மென்றே.

(கொ-டு) பேறு இழவு மூப்புச் சாக்காடு இன்பமோடு பிணி என்னும் ஆறும் முன்கருவுட்பட்டது அவ்விதி எறிடம் அனுபவத்தால் இனிச்செய் கன் மம் மேலுடற் சேரும் முன்பு செய்த கன்மம் இங்கு இவற்றிற்கு எது என்றே தேறு.

(பொ-ரை) எடுத்த உடம்பில் வரக்கடவனவாகிய செல்வம், வறுமை, உயர்வு, இழிவு, இன்பம், துன்பம் என்னும் ஆறும் உடம்பு எடுப்பதற்கு முன்னே சூக்குமமாய் கருவிலுள் அமைந்து கிடந்தனவாம். அன்றி அப்போ தப்போது உளவாவன வல்ல. முன் கருவுட் கிடந்த அவை பின்னர் அவற்றை

அனுபவித்தற்குத் துணையாகிய முயற்சியால் தூலமாய் வந்து கூடும். அவ்வாறனுபவித்தற்குத் துணையாக உண்டான முயற்சி அனுபவிக்கச் செய்தலோவிட்டாழியாது மற்றோர் உடம்பிற் பொருந்துவதான அவ்வறுவகைக்கும் வித்தாய் நிலைபெறும். முற்பிறவியிற் செய்த முயற்சி இப்பிறவியில் வரும் இவ்வாறறிகும் ஏதுவாயிற்றேபால இப்பிறவியிற் செய்யும் முயற்சி மேல் வினைக்கு வித்தாதலே யன்றி இப்பொழுது மயன்றருவதில்லை யென்பதனை நீ தெளிவாயாக. (எ—று) (கூ)

முயற்சியால் வினையும் வினையால் முயற்சியும் வித்தும் மரமும் போலாமெனக் கூறுகின்றது.

> உடற்செயல் கன்ம மிந்த வுடல்வந்த வாறே தென்னின்
> விடப்படு முன்னு டம்பின் வினையிந்த வுடல்வி னைக்குந்
> தொடர்ச்சியா லொன்றுக் கொன்று தொன்றுதொட் டாதி வித்தி
> னிடத்தினின் மரம ரத்தின் வித்தும்வந் தியைபு மாபோல்.

(கொ-டு) வித்தின் இடத்தினின் மரம் மரத்தின் வித்தும் வந்து இயையும் ஆபோல் ஒன்றுக் கொன்று தொடர்ச்சியால் தொன்று தொட்டு அநாதி.

(பொ-ரை) உடலின் முயற்சியால் வினையுண்டாம். அவ்வாறுயின் இவ்வுடல் உண்டாவதற்குக் காரணம் யாதெனின் விடப்பட்ட முன் உடம்பின் வினையாம். அவ்வினையே இவ்வுடம்பை உண்டு பண்ணும். இவ்வாறு உடம்பால் வினையும் வினையால் உடம்பும் வருதல் வித்தின் கண் மரமும் மரத்தின் கண் வித்தும் வந்து பொருந்துமாறு போலவாம். வினையுடலென்னும் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று காரண காரியமாய் தொன்று தொட்டு ஒன்றன்பின் ஒன்றுக வருதலால் அவற்றிற்கு முற்பிற்பாடு கூறமுடியாது. (எ—று)

வித்தும் மரமும் ஒன்றுக்கொன்று காரண காரியமாயிருப்பினும் இறைவன் முதலாவதாக இரண்டிலொன்றைத்தான் உற்பத்தி செய்திருக்க வேண்டும். அது மரமாகவே யிருக்கவேண்டும். இக்கருத்துப் பற்றியே: "விச்சதன்றியே வினையு செய்குவாய்" என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்தனர். இது போல கேவலத்தில் அறிவு தொழிற் பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்கு குருடனுக்குக் கோல் கொடுப்பது போல் இறைவன் சூக்கும தேகத்தைக் கருணையினால் கொடுப்பன். அச்சூக்கும தேகத்தை இறைவன் தருதல் வினை காரணமாக வன்று. அறியாமையுட்பட்டு வருந்தும் காரணத்தால் தரப்பட்டதாம். அச்சூக்குமதேகம் முத்தியடையும்வரை எத்துணைப்

பிறவிகளை யெடுப்பினும் ஒன்றுகாவே யிருந்து முக்தியடையினீங்கும். அச்சூக்குமதேகம் எல்லா உயிர்க்கும் ஒரு தன்மையாகவே யிருக்கும் இருப்பினும் முன் பொருந்தி நின்ற அறியாமை பல வேறு வகைப்படுமாதலின் அவ்வறியாமைக் கேற்பத்தூலவுடம்பும், ஆவ்வு-ம்பால் வினையும் மாறி மாறி வரும். ஆகலால் வின்ன உடல் என்னும் இரண்டற்கும் மூலமாகிய சூக்கும தேகம் ஒன்றுண்டென்ப தால் முற் பிற்பாடு கூற முடியாத குற்றத்திற் குட்படாமையறிக. ()

முயற்சி யின்றி வினைப்பயன் அனுபவித்தல் கூடாதென்றும் முன் வினைப்பயன் அனுபவிப்பதற்கான அம்முயற்சிமேல் வினைக்து வித்தா மென்றும் கூறுகின்றது.

முற்செய்ல் விதியை பிந்த முயற்சியோ டனுப விந்தா
னிச்செயல் பலிக்கு மாறென் னிதமகி தங்கண் மூன்ன-
ரச்செய லாணை லிங்கு மனவெசயின் மேலைக் காகும்.
பிற்செயா தனுப விப்ப தின்றுபின் றொடருஞ் செய்தி.

(கொ-டு) செய்தி பின்றொடரும்.

(பொ-ரை) இத்துணையுங் கூறியவாற்றால் முற்பிறவியில் செய்த முயற்சியிப்பிறவியில் வரும் செல்வ முதலிய மேற்கூறிய ஆறற்கும் ஏதுவென்பதும் அச்செல்வ முதலியவற்றை இப்பிறவியில் முயற்சியாகிய துணையால் அனுபவித்தல் கூடுமென்பதும் பெற்றும். அவ்வாறு முன்வினைப்பயனுக்கிடாக இப்பொழுது வருகின்ற முயற்சி மேல்உடலெடுத்தற்குரிய வினையா மாறு யாங்ஙன மெனின் முன் வினை யெனப்படும் இதம் அகிதங்களாவன முற் பிறவியில் அவ்வாறு நிகழும் முயற்சியே யன்றி வேறின்மையினால் இப்பொழுதும் அம்முயற்சி நிகழ்ந்தால் அது மேலைக்கு வினையாமென்பது தானே விளங்கும். அவ்வாறுயின் சில விடத்து முயற்சியின்றி யிருப்பார்க்கு மேல் வினை யேறுமாறு இல்லை என்று கொள்ள வருமே எனின் அனுபவமாவது பின்னர் முயற்சியை ஒட்டியே நிகழுமாதலின் பிராரத்த வினையின் அனுபவமுள்ள அளவும் முயற்சியும் உறுதியா யுண்டென்பது பெறப்படும். ஆதலின் அனுபவமுள்ள இடத்து மேல் வினை ஏறுமாறில்லை என்றல் பொருந்தாது. (எ—று)

மேல் முயற்சி செய்யாதாரும் செல்வராய்த் தங்குதலென்றது வருந்திச் செய்ய வேண்டாது எளிதிற் பெறுவது நோக்கியே ஆதலின் அதனேடு முரணின்மை அறிக. (கக)

பிரமாணவியல் உ-ம் சூ-ம். உ-ம் அதி

முபற்சியானது செபல் வகையால் அனுபவமாயும் யான் செய்தேனென்னும் கருத்துவகையால் மேல் வினைக்கு வித்தாயும் இருதிறப்படு மெனக் கூறுகின்றது.

மேலைக்கு வித்து மாகி வினைந்தவை யுணவு மாகி
ஞாலத்து வருமா போல நாஞ்செயும் வினை களெல்லா
மேலத்தான் பலமாச் செய்யு மிதமகி தங்கட்கெல்லா
மூலத்த தாகி யென்றும் வந்திடு முறைமை போலே.

(கொ-டு) ஞாலத்து வினைந்தவை உணவும் ஆகி மேலைக்குவித்தும் ஆகி வரும் ஆபோல நாம் செயும் வினைகளெல்லாம் என்றும் முறைமையோலே. எலத்தான் பலம் ஆ (வந்திடும்) செய்யும் இதம் அகிதங்ககட் கெல்லாம் மூலத்தது ஆகி வந்திடும்.

(பொ-ரை) உலகத்தின் கண் உணவின் பொருட்டு வினைந்த கனி முதலாயின உணவுமாய் மேலைக்கு வித்துமாய் வருமாறுபோல நாம் செய்தே மென்னும் முனைப்பால் செய்யப்படுவதாகிய முயற்சியும் எக்காலத்தும் செயல்வகையால் வினைக்கிடாய் வரும் அனுபவத்தைப் பயக்கும். அவ்வனுபவத்தை வினையின் பயனென்று கருதாது நான் செய்தே னென்னும் கருத்து வகையால் செய்யா நின்ற இதம் அகிதமெனப்படும் ஆகாமிய வினையைப் பயக்கும். (எ-று)

வினை, ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ஆகாமியமாவது கல்வினை தீவினை என்னும் முபற்சி. சஞ்சிதமாவது அம்முபற்சி பலனுக்கு வராமல் கட்டுப்பட்டிருப்பது. கட்டுப்பட்டிருக்குமிடம் செய்தவன் புத்தி தத்துவமும் மாயையுமாம். பிராரத்தமாவது அம்முயற்சியின் பயனை அனுபவித்தல். இம்மூன்றற்கும் திருட்டாந்தம் வருமாறு, வித்தை நிலத்திலிடுதல் ஆகாமியம், அவ்வித்து இட்டவன் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக பலன்தருமவரை பூமியிற்றங்கியிருப்பது சஞ்சிதம், பலன் அனுபவத்திற்கு வருதல் பிராரத்தமாம். (க0)

கன்மமே அன்றி இறைவனில்லை என்னும் மீமாஞ்சகர் மதம் பற்றி இதம், அகிதம் என்னும் முபற்சி இறைவனால் பன்று சொல்லப்பட்டு இன்பதுன்பப் பலனை அவ்வினைவன் தருவனெனக் கூறுகின்றது.

இதமகி தங்க ளென்ப திகன்மன வாக்குக் காயத்
திதமுயிர்க் குறுதி செய்த லகிதமற் றதுசெய் யாமை
யிதமகி தங்க ளெல்லா மிறைவனே யேற்றுக் கொண்டிங்
கிதமகி தத்தா லின்பத் துன்பங்க ளீவ னன்றே.

(கொ-டு) உயிர்க் குறுதி செய்தல் இதம் மற்றது செய்யாமை அகிதம் இறைவனே இதம் அகிதங்க ளெல்லாம் ஏற்றுக்கொண்டு இங்கு இதம் அகிதத்தால் இன்பத்துன்பங்கள் ஈவன் அன்றே.

(பொ-ரை) இதம், அகிதங்களாகிய வினைகளி னதியல்பு யாதெனின் நினைத்தலுஞ் சொல்லுதலுஞ் செய்தலுமாகிய, மாறுபட்ட மனவாக்குக் காயங்களால் வேதாகமங்களில் உயிர்க்குறுதி என விதித்தவற்றைச் செய்தலே இதம். அவ்வேதாகமங்களில் விலக்கியவற்றைச் செய்தலே அகிதம். இதம் செய்பவன் தன் மனதில் இதமென்று கருதிச்செய்யுங்காலத்து அவனை அறியாது அகிதம் வருதலுங் கூடும். அகிதம் செய்பவனிடத்தும் இவ்வாறு இதம் வருதலுங்கூடும். அன்றியும் அகிதம் செய்பவன் அதனை அகிதமென எண்ணுன். ஆதலால் இதம் அகிதமாகிய அவ்விரண்டனையும் அறிபவன் அம்முதல்வனே யாம். அம்முதல்வனே அவ் இதம் அகிதங்களைப் பொருந்தி அறிந்து இவ்விடத்து, அவற்றிற்கேற்ப இன்பதுன்பமாகிய பயனைத் தருவன்(எ...று) ()

இதம் அகிதங்களை இறைவன் பொருந்தி அறிதற்கு ஏது கருணையே எனக் கூறுகின்றது.

இறைவனிங் கேற்ப தென்னை யிதமகி தங்க ளென்னி
னிறைபர வுயிர்க்கு வைத்த நேசத்தி னிலைமை யாகு
மறமலி யிதஞ்செய் வோருக் கநுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி யகிதங் செய்யி னிக்கிர கத்தை வைப்பன்.

(கொ-டு) இறைவன் இதம் அகிதங்கள் இங்கு ஏற்பது என்னைஎன்னின்

(பொ-ரை) ஆன்மாக்கள் செய்த இதம் அகிதமாகிய வினையை முதல்வன் இவ்விடத்துப் பொருந்தியறிவதற்குக் காரணம் யாதெனின் எவ்விடத்தும் நிறைந்த அம்முதல்வன் உயிர்கள் முத்தியின்ப மடைதற் பொருட்டு வைத்த கருணையேயாம். கருணையாயினும் வினையாகிய காரணம் இதம் அகிதமென இருவேறுவகைப்பட நிகழ்ந்தமையின் அவற்றிற்கேற்ப அறமிகுந்த நல்வினைசெய்வோர்க்கு இன்பத்தையும் மறமிகுந்த தீவினை செய்வோர்க்குத் துன்பத்தையுஞ் செய்வன். (எ...று) (கச)

இறைவனல் செய்யப்படும் அநுக்கிரகம், நிக்கிரகமாகி இரண்ய இம் கருணையே எனக் கூறுகின்றது.

நிக்கிர கங்க டானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
யிக்கிர மத்தி ணூலே யீண்டற மியற்றி டென்ப
னெக்கிர மத்தி ணுலு மிறைசெய லருளே யென்றும்.

(கொ-டு) ஈசன் நிக்கிரகங்கள் செய்வது தானும் நேசத்தால்.

(பொ-ரை) முதல்வன் நல்வினை செய்தாருக்கு அநுக்கிரகம் செய்தல் போல் தீவினை செய்தாரைத் தண்டித்தலும் நல்வழிப்படுத்தற்பொட்டுச் செய்யும் கருணையேயாம். தண்டித்தல் கருணையாவது எவ்வாறெனின்: அக் கிரமத்தாற் செய்யப்பட்ட குற்றங்களைத் தண்டித்து நீக்குதலால் அச்சமுண் டாகச் செய்து இம்முறைமையால் இவ்வாறு குற்றஞ்செய்யாது இனி அறத் தினைச் செய்திடல் வேண்டுமென உணர்த்துவ ஞதலால் கருணையேயாம். வினையின்பயனை அனுபவிக்கும் முறைமையிற் செய்யும் மறைத்தலாகிய திரோ பவ கிருத்தியமும் உடம்பினை நீக்குதலாகிய சங்கார கிருத்தியமும் உளப்பட அம்முதல்வன் செய்யும் எச்செயலும் எக்காலத்தும் கருணையே என்பதற் கிழுக்கில்லை. (எ...று) (சூ.)

தண்டித்தலுங் கருணையே யென்பதை உவமை முகத்தால் கூறுகின்றது.

தந்தைதாய் பெற்ற தத்தம் புதலவர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவ மெல்லாம் பார்த்திடற் பரிவே யாகு
மிந்தநீர் முறைமை யன்மே லீசனுர் முணிவு மென்றும்.

(பொ-ரை) உலகத்தில் தந்தை தாயர்களாவார் தம்முடைய புதல்வர்கள் தம்முடைய சொல்வழி நடவார்களாயின் அப்புதல்வர்களை அச்சமுறுத்தி வளாரி னுலே அடித்துக் கொடிய விலங்குமிடுவர். பார்க்குமிடத்து இச்செயல்கள் செயல்வகையால் துன்பஞ் செய்தல்போலத் தோன்றினும் நல்வழிப்படுத்தவேண் டுமென்னுங் கருத்து வ்கையாலே அருளேயாமென்பது பின்னர் நல்வழிப்படுத் லாலறியப்படும். இதுபோல் முதல்வன் செய்யுந் தண்டமும் எக்காலத்தும் கரு யாம். (எ...று) (சூ.)

வினையே பலன்றரு மென்பானை மற்றது வினையானது செய்த பொழுதே கெட்டொழிதலால் இன்பதுன்பப்பலனை அவ்வினை தரா தென்றும் இறைவனே தரவேண்டுமென்றும் கேட்டுப் பலன் தருதல் எவ்விடத்தும் செல்லாதென்றுங் கூறுகின்றனை.

செயல்களே பலத்தைச் செய்யுந் தெய்வம் வேண்டாவிங் கென்னின்
முயலுமிச் செயல்க ளிங்கே முழுவது மழியு மெங்கே
பயனளிப் பனவழிந்தே பலன்களைப் பண்ணுங் கெட்டே
வயலிடுந் தழையுந் தின்னு மருந்தும்பின் பலிக்கு மாபோல்

செய்க்கடுந் தழையுந் தின்னுந் திரவிய மதுவும் போல
வுய்த்திடுஞ் செய்தி கெட்டே யுறுவிக்கும் பலத்தை யென்னின்
வைத்திடுஞ் சோறும் பாக்கு மருந்தினர் வயிற்றின் மாய்ந்தான்
மெய்த்திடும் பலமு னக்கு மலமலால் வேறு முண்டோ.

(கொ-டு) செயல்களே பலத்தைச் செய்யும் இங்குத் தெய்வம் வேண்டாவென்னின் முயலும் இச்செயல்கள் இங்கே முழுவதும் அழியும் எங்கே பயனளிப்பன வயலிடுந் தழையுந் தின்னும் மருந்தும் கெட்டேபின் பலிக்கும் ஆபோல் அழிந்தே பலன்களைப் பண்ணும் எனவும் பலத்தை உறுவிக்கும் எனவும் உனக்கு மெய்த்திடும் பலம் எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு தண்டித்தலால் நல்வழி கடந்தே பயன்பெறுதல் சித்தித்தலின் வினைகளே பயனைத்தரும் ஆதலின் வினைப்பயனைத் தருவதற்கு இறைவன் வேண்டாமென்னில் செய்த அவ்வினைகள் செய்தபொழுதே முழுதும் கெட்டொழிவனவாம். அவ்வினைகள் பின்னின்று பயன்தருதல் செல்லாது எனமறுக்க வுயலின் கண்களிட்ட தழைகளும் உண்ணப்பட்ட மருந்துகளும் கெட்டு பின்னே பலிக்குமாறு போல வினையுங் கெட்டு பலத்தைப் பொருந்தச் செய்யுமெனின் உண்ணப்பட்ட சோறுமுதலிய உணவுகளும் பாக்கு முதலியனவும் உண்டார் வயிற்றின்கண் கெடப்பெற்றால் அம்மெய்யின் கண்ணதாய் வரும் பலன் மலமன்றி வேறில்லை யாதலின் கெட்டவை பயன்றருமென்பது தழை மருந்து முதலிய சிலவற்றினன்றி எல்லாவற்றினுஞ் செல்லாது ஆதலின், வினைகெட்டுப் பலன்தருமென்றல் பொருந்தாது.(எ...று)

கெட்ட இடத்தில் பலன்தரும் தழை முதலியன பிறிதோரிடத்தில் பலன்தரும் வினைக்கு உவமையாகாதெனவும் அக்கினியில் காய்ச்சிய இரும்பில் சுவறிக்கெட்ட நீர் பிறிதோரிடத்தில் பலன்

தராததுபோல் கெட்டவிடத் பிறிதோரிடத்திற் பலன்தாா தெனவுங் கூறுகின்றது.

திரவிய முவமை யன்று செய்திக்கட் டிரவி யங்கள்
விரவிய விடத்தே வீந்து பலந்தரு மிம்மை யம்மை
பரவிநீ பார்நீ ரங்கி பாத்திரத் திட்ட வெல்லாங்
கரவிடு மிங்கே யெங்கே பலன்கொளக் கருதிலுமே.

(கொ-டு) திரவியங்கள் விரவிய இடத்தே வீந்து பலந்தரும் இம்மை அம்மைசெய்திக் கண் திரவியம் உவமையன்று அங்கி பாத்திரத்து இட்டநீர் எல்லாம் இங்கே காவிடும் எங்கே பலன் கொளக்கருதிலுமே நீ பாவிப்பார்.

(பொ-ரை) மேல் எடுத்துக்காட்டிய தழைமுதலிய பொருள்களும் தாம் கிடந்த இடத்தே கெட்டு கெட்ட அவ்விடத்தே பலன் தருவனவாம். அவ்வாறன்றி இவ்வுடம்பிற் செய்தவினை இவ்விடத்தே கெட்டு மற்றோர் உடம்பிற் பலன் தருமாகலின் வினைக்கு தழை முதலிய பொருள்கள் உவமையாகாவாம். தானமாகத் தண்ணீரிலும் யாகமாக அக்கினியிலுஞ் சேர்க்கப்பட்ட பொருள்கள் அவ்விடத்துக்கெட்டு மற்றோரிடத்தில் பலிக்குமெனக் கொள்வதுபோல் வினையுங்கெட்டுப் பலன்தருமென்று கூறுவோமெனின் தீயொழுகக் காய்ந்த பாத்திரத்தில் இட்ட நீர் முதலியன இவ்விடத்துக் கெட்டுப்போதலேயன்றி வேறிடத்துப் பலன்தருதல் காணப்படாமையால் தானமாகவும் யாகமாகவுங் கொடுத்துக் கெட்டபொருள் பிறிதோரிடத்திற் பலன்தாாது. அப்பொருளால் செய்யும் தானம் யாகமென்ற வினையே பிறிதோரிடத்துப் பலன்தரல் வேண்டும். அவ்வினை சடமாதலின் தானே பயனுகி வருமென்றல் கூடாது. இவ்வுண்மையை நன்கு விசாரித்து ஆாய்வாயாக. (எ...று) (கக)

செய்தவர் மனத்தில் வினைகிடந்து வேறிடத்திற் பலன்தருதலால் இடமேவற்றுமை கொண்டு தழை உவமை பொருந்தா தென்றல் கூடா தென்பாரை மறுத்துரைக்கின்றது.

செய்தவர் மனத்தே யெல்லாச் செய்தியுங் கிடந்து பின்னை
செய்தவே பலன்க ளீது மென்றிடி னிருஞ்சு வர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி புந்தியிற் கிடந்து போந்த
தையனே யழகிதுன்சொ லிந்திர சால மூாய்த்தே.

(கொ-டு) ஐயனே உன்சொல் அழகிது இந்திரசாலம் ஆய்த்தே.

(பொ-ரை) வினை செய்தவர் மனத்தின்கண்ணே எல்லா வினைகளுந் தங்கிப் பின்னர் பொருந்தியே பலன் தருமாதலின் வயலின் கண் தழை கெட்டு பலன் தருதலாகிய உவமை கூடா தென்றது பொருந்தா தென்று கூற, வினைக்குப் பயனாவன சுவர்க்கம், நரகம், பூமி யென்னும் இவற்றுட்பட்ட பல்வேறு வகை, புவன போகங்களேயாம். அவை யனைத்தும் வயலின்கண் விளைவு போல ஆன்மபோதத்தின் கண் கிடந்து உளவாக வேண்டுமே அவ்வாறுளவா மென்றல் ஐயனே உனதடிகளாகிய சொன் மாத்திரையே யன்றிப் பொருள்ப டாத இந்திரசாலம் போலவுமாம். (எ—று) (20)

செயல்யாவுஞ் செய்யப்படுகின்ற பொருளிற் கிடந்து பலன்றரு மென் பாரையு மறுத்து வினைப்பலன் றருதற்கு இறைவன் வேண்டு மெனவும் தருதல் அவன் கடனை யெனவும் கூறுகின்றது.

தானஞ்செய் பொருட் டித்தோர் செய்தவர், தக்க செய்தி
யூனப்பின் னுறவே காண்டும் பலமுறு விபபான் வேண்டு
மீனமில் செய்தி யீச னிடும்பணி யிலைவநாஞ் செய்தா
னானங்க ளதிக நோக்கி நுகர்விப்பன் வினைநோய் தீர.

(கொ-டு) பின் னுனம் உறவே காண்டும் எனவும் வினைநோய் தீர நுகர் விப்பன் எனவுங் கூட்டுக.

(பொ-ரை) வினையானது செய்தவர் மனத்தின் கட்கிடந்து பலன்றரு மென்றல் பொருந்தாதாயினுஞ் செயப்படுகின்ற பொருளிற் கிடந்து பின்னர் பலன்றரு மெனக்கொள்வோ மெனில் தானஞ் செய்யப்பட்ட பொருளும் தானத்தை எற்றோருந் தானஞ் செய்தோரும் தானமாகிய செயலும் ஆகிய் அனைத்தும் நிலையின்றிக் கெட்டொழிவனவேயாம். ஆதலால் நிலை பேறு டைய முதற் கடவுளே அவற்றை யறிந்து பலன் றரல் வேண்டும். அம்முதற் கடவுள் பலன்றருதற்குச் சம்பந்தமென்னை யெனின் முயற்சி யெல்லாம் முன் வினைப்பயனை அனுபவித்தற் பொருட்டு முதல்வனுற்றராப்படுகின்ற எவல் வினையாதலால் அவ்வெவல் வினையாகிய முயற்சியை நாம் செய்தோ மென்னு முணர்ப்பால் செய்யின் அம்முனைப்புத் தீருதற் பொருட்டு அம்முயற்சியிலுலா கிய பாவ புண்ணியங்களை அறிந்து அப்பாவ புண்ணியமாகிய வினை நோய் தீருதற் பொருட்டுப்பலன்றருதல் அவ்விறைவனுக்குக் கடப்பாடாம். (எ—று).

வினை செய்வதாகிய உயிரொன்றும் அவ்வினை நிகழ்தற்குரிய கரணைகள் எழும் ஆக எட்டு முதல் நிலைகளும் சிற்றறிவுடையதும்

சடமுமாதலின் முற்றறிவுடைய முதல்வனுக்கு விஞ்ஞப்பயனைக் கூட்டுவித்தல் கடனமையாயிற் றெனக் கூறுகின்றது.

உலகுடல் கரணங் காலை முறுபல நியதி செய்தி
பலவினை கொண்டு கன்மம் பண்ணுவ துண்ப தாரு
னிலவிடா தினைதாஞ் சென்று நிணைந்துயிர் நிறுத்திக் கொள்ளா
தலகிலா வறிவ னுணை யணைத்திடு மருளி னுலே.

(கொ-டு) இவைதாஞ் சென்று நிலவிடாது.

(பொ-ரை) முயற்சிக்கு முதற்கருத்தாவாகிய உயிரானது அவ்வுயிர் தங்குதற்கிடமாகிய உடல், உடலிற் பொருந்திய கருவிகளாகிய காரணம், வினைசெய்தற்குரிய காலம், வினை செயப்படுகிறன்ற பொருள், அப்பொருளைக்கூட்டுகின்ற நியதி, செயல், பயன் ஆகிய எழுமுதல் நிலைகளையும் துணையாகக் கொண்டு வினைகளைச் செய்தலும் அனுபவித்தலும் கூடு மென்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாம். அவ்வெழு முதல் நிலைகளும் உயிரை யின்றித் தாமே தொழிற் படமாட்டாத சடமாதலால் அவை தாமே உயிரை வந்து கூடமாட்டா. அம் முதல் நிலைகளையின்றி அறிவு தொழிற்படமாட்டாத அவ்வுயிர் அம்முதல் நிலைகளை தானே கருதி நிறுத்திக் கொள்ளாது. உயிரும் எனைய முதல் நிலைகளும் இவ்வாறுகலின் பாரிசேட அளவையானே அளவிட்டறிதற்கரிய சுதந்தர அறிவினனுகிய முதல்வனே தனது ஆணையாகிய திருவருளால் உயிருக்கு அவ்வெழு முதல் நிலைகளைக் கூட்டுவிப்பன். ஆதலால் அம்முதல் நிலைகளோடு கூடிச் செய்யும் செயல்களெல்லாம் இறைவன் கட்டளையேயாம். (எ—று) (உ உ)

இறைவனுற் கூட்டும் வினைப்பயனுகிய அக்கட்டளை நல்லனவாயின் அறமாயும் தீயனவாயின் பாவமாயும் இருதிறப்படு மெனக் கூறுகின்றது.

ஒழுக்கமன் பருளா சார முபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
யழுக்கிலாத் துறவ டக்க மறிவொடர்ச் சித்த லாதி
யிழுக்கிலா வறங்க ளாரு விரங்குவான் பணிய றங்கள்.

(பொ-ரை) வினைப்பயனை அனுபவிப்பதற்காக இறைவனுற் நாப்படும் கட்டளையாகிய செயலானது உலகத்தோடொட்ட ஒழுகுதலுடைமை, யாவர் மாட்டும் அன்புடைமை, அருளுடைமை, வேதாகமங்களில் விதித்தவாறு அனுட்டித்தலுடைமை, தக்கோர் மாட்டுச் செய்யும் உபசரிப்புடைமை, யாவர் மாட்

நிம் கலப்புடைமை, நற்குணமுடைமை, ஐம்பொறியடக்கல் விரதங் காத்தல் முதலிய குற்றமில்லாத தவமுடைமை, தக்கோர்மாட்டு உவகையோடு செய்யும் தானங்களுடைமை, தன்னின் மூத்தார் மாட்டு தோத்திரஞ் செய்தலுடைமை, நமஸ்காரஞ் செய்தலுடைமை, சத்தியமுடைமை, பிறர் மனைவிழையாமை, வரைவின் மகளிர் விழையாமை முதலிய குற்றமில்லாத ஆண்தகைமையுடைமை, தீ நெறிக்கட் செல்லாது அடங்குதலுடைமை, தக்கன இகவை, தகாதன இகவை எனப்பகுத்தறி வுடைமை, தன்னின் மூத்தார் மாட்டு அர்ச்சித்த லுடைமை ஆகிய பதினெறும் மற்றும் அவைபோல்வனவுமாகிய குற்றமில்லாத நல்வினைகளாயின் கருணையிறற் றரப்பட்ட அக்கட்டளை அறமாய் முடியும். தீவினைகளாயின் பாவமாய் முடியும் (எ--று) (உக)

நல்வினையினுள்ளும் சிறந்ததாகிய கடவுள் வழிபாடு தத்தம்மதத்திற் கேற்றவாறு செய்யினும் மேல் சிவன்முத லென்றதனெடு முரணுது அவ்வழிபாட்டிற்குப் பயன் சிவபெருமானே தருவனெனக் கூறுகின்றது.

மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
வினமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ் செயலற மாஞல் யார்க்கு
முணமொரு தெய்வ மெங்குஞ் செயற்குமுன் னிலையா மன்றே.

(கொ-டு) சினம் முதல் அகற்றி அங்கு இச்சித்ததெய்வம் மனமது நினையவாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல கையில் இனமலர்கொண்டு போற்றிவாழும் செயல் அறமாஞல் யார்க்கும் முனம் ஒருதெய்வம் எங்குஞ்செயற்கு முன்னிலையாம் அன்றே.

சினமுதலகற்றி யென்பதை அகற்றிக்கு என விரித்து அகற்றுவானுக்கு என உரைக்க.

(பொ-ரை) மேற்கூறிய ஒழுக்கமுதலிய நன்மைகளை உடையனுய் அவற்றின் மறுதலையாகிய தீமைகளை நீக்கி ஒழுகுவானெருவன் தன் கருத்துக்குப் பொருந்தியதொரு கடவுளை மனத்தால் நினைந்து வாக்காற் றுதித்து அக்கடவுட்குரிய மந்திரங்களை உச்சரித்து கைகளால் பல மலர்களைக்கொண் டர்ச்சித்து, வழிபட்டு வாழுஞ் செயலாகிய அறமுடையனுயின் அவனுக்கு முன்னைப் பழம் பொருட்குழ் முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானே அவன் வழிபடும் தெய்வத்தினிடமாக நின்று அச்செயலை ஏற்றுக்கொண்டு ப்யன் கொடுப்பன். (எ...று) (உசு)

அவ்வத் தெய்வமே பலன்கொடுக்கு மென்பாரை மறுத்துணரக் கின்றது.

யாதொரு தெய்வங் கொண்டூ ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக னுர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவையி லாதா னறிந்தருள் செயவ னன்றே.

(கொ:டு) மற்று அத்தெய்வங்கள் வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ் செய்யும் ஆதலான் இவை இலாதான் மாது ஒரு பாகனுர்தாம் யாதொரு தெய்வங் கொண்டூர் ஆங்கே அத்தெய்வம் ஆகி வருவர் அறிந்து அருள்செய்வன் அன்றே.

(பொ-ரை) அவ்வாறு வழிபட்டார்க்கு வழிபட்ட அவ்வத்தெய்வமே பலன்கொடுக்குமெனில் அதனையுண்டாம் குறை வென்னை என்பார்க்கு நால் வகை யோனியுள் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறப்பனவெல்லாம் ஜீவவர்க்கம் அவ்வாறு யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலில்லாதது பதிப்பொருள். பதிக்கும் ஜீவனுக்கும் தம்முள் வேற்றுமை இதுவேயாம். ஆதலின் ஏனைத் தெய்வமெல்லாம் யோனிவாய்ப்பட்டு பிறந்திறத்தலேயன்றி மேல்வினையும் செய்யுமென்றல் கேட்கப்படுதலால் சுதந்தர அறிவில்லாதனவேயாம். அவை ஒன்றும் இல்லாத சுதந்தர அறிவுடையவன் சிவபிரானேயாம். அச்சிவபிரான் ஒருவனே நீர் எவ்விடத்து யாதொரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டீராயினும் அவ்விடத்து அத் தெய்வத்தினிடமாக நின்று அவ்வழிபாட்டை யறிந்து உயிர்கட்குப் பலனைக் கூட்டுவன்! ஏனைத் தெய்வம் சுதந்தர அறிவின்மையாற் பலன்கொடுக்கமாட்டாது. (எ...று)

ஒருவனை வழிபட மற்றொருவர் பலன்றருதல் கூடுமென்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது.

இங்குநாஞ் சிலர்க்குச் பூசை யியற்றிலு லிவ்க ளாவந்
தங்கு வான் றருவா ரன்றே லத்தெய்வ மத்த னைக்கா
ணைங்கும்வாழ் தெய்வ மெல்லா மிறைவனு ணியபிணனிற்ப
தங்குநாஞ் செய்யுஞ் செய்தித் காணைவைப் பல னிப்பான்.

(கொ-டு) சிலர்க்கு இங்கு நாம் பூசை இயற்றினல் எனவும் இறைவன் ஆணையினல் எங்கும் வாழ்தெய்வம் எல்லாம் நிற்பது எனவுங் கூட்டுக.

'(பொ-ரை) மேற்கூறியவாற்றால் ஒருவனை வழிபட மற்றொருவர் பலன் கொடுப்பரென்பது பெறப்படும். அவ்வாறு பலன்றருதல் உலகத்துக் கண் டிலமென்பாரைநோக்கி பசுபார்ப்பார் தந்தைதாய் முதலாயினரை இவ்விடத்து நாம் வழிபட்டால் சுவர்க்கமுதலிய உலகங்களில் அவர்களா வந்து பலன்றரு கின்றார்கள்? நம் வழிபாட்டைக் கடவுள் அறிந்து அதற்கேற்ற பலன்களைத் தருமென்பது எல்லார்க்கும் சம்மதமான முடிவாம். அதுபோல எத்தெய் வத்தை வழிபடினும் அவ்வழிபாட்டிற்குச் சிவபெருமானே பலன்றருவனென் றல் பொருந்தும். அவ்வாறுயின் பிறதெய்வத்தை வழிபட்டார்க்கு அவ்வத்தெய் வமே எதிர்தோன்றி நின்று பலன்கொடுத்ததென நூல்களிற் கூறப்படுதலின் அத்தெய்வங்களும் பலன்கொடுக்கும் வல்லமையுடையனவென எண்ண வரு மேயெனின் அரசன் ஆணையே மந்திரி முதலாயினரிடத்து நின்று பிறர்க்குப் பலன் கொடுக்குமாறுபோல சிவபெருமானே தன் ஆணையை தன்னேவல் வழிநிற்கும் அவ்வத்தேவரிடம் வைத்து அத்தேவரிடத்து நாம்செய்யும் வழி பாட்டிற்கு அத்தேவரிடமாக நின்று பலன்றருவன் ஆதலால் ஏனைத் தேவர்கள் சுதந்தரமாய்ப் பிறருக்குப் பலன்கொடுக்குமாறு இல்லை. (எ...று)

' இதனால் பசுவர்க்கமாகிய பிறதெய்வங்களின் வழிபாட்டிற் குச் சிவபெருமானே பலன்றருவனென்று பெறப்பட்டமையால் பசு புண்ணியமும் சிவபுண்ணியமாகுமென்று கொள்ளவருமெனின் பசுக்களைநோக்கிச் செய்யும் புண்ணியம் பசு புண்ணியம். பதியை நோக்கிச்செய்யும் புண்ணியம் பதிபுண்ணியம். ஆயினும் இகபரபோ கத்தை விரும்பி பதியைநோக்கிச் செய்யும் புண்ணியம் பசுபுண்ணி யமே. முத்தி இன்பம்வேண்டிப் பதியை நோக்கிச்செய்யும் புண்ணி யம் பதிபுணியமே. இனிபசுக்களிடத்து சிவபாவனையோடு செய்யும் புண்ணியம் பதிபுண்ணியமாம். பதியினிடத்து நம்மிலொருவனென் னும் பசுபாவனையோடு செய்யும் புண்ணியம் பசுபுண்ணியமாம் என க்கூறுதலும் உளவாம். ஆதலால் புண்ணியச்செயல் செய்பவன் கருத் து வகையால் வேறுபடுமென்பது அறிக (உசு)

பலன்றருபவன் சிவபெருமானே யாதலின் அச்சிவபெருமானை வழிபடுதலே சிறப்பாகிய அறமெனக் கூறுகின்றது.

காண்பவன் சிவனே யாண லவனடிக் கன்பு செய்கை
மாண்பற மாண்றன் பாத மறந்துசெ ய்றங்க ளெல்லாம்
வீண்செய வினைறவன் சொன்ன விதியறம் விருப்பொன் றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.

(கொ-டு) அறம் இறைவன் சொன்னவிதி.

(பொ - ரை) இதுவரையுங் கூறியவாற்றால் எனைத்தெய்வங்கள் மாட்டுஞ் செய்யும் வழிபாடுகளையும் சிவபெருமானே ஏற்றுக்கொண்டு பலன்றருவனென்பது பெறப்பட்டது. ஆகலான் அச்சிவபெருமான் றிருவடியை வழிபடுதலே நல்ல அறமாம். அவன்றிருவடியை மறந்து செய்கின்ற அறங்களெல்லாம் வீண்செயல்களாம். அன்றியும் புண்ணியமாவது அச்சிவபெருமானால்வேதாகமங்களின் விதிக்கப்படும் விதியாதலால் அவ்வாறு விதித்தற்கு சிவபிரான் ஒரு பொருளிலும் பற்றிலனாய் உயிர்களிடத்து வைத்த கருணையே காரணமாதலின் அங்ஙன்றிசெய்த அச்சிவபிரான் றிருவடிப்பூசனையே உறுதியாகச்செய்யக்கடவது. (எ...று) (உஎ)

சிவபெருமானை வழிபடுதற்குரிய இடங்கள் இவை எனக்கூறுகின்றது.

காபரு சங்க மங்க ளென்றிரண் டுருவி னின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைட்டா
ன்பரன் றன்னை நெஞ்சி னினைவையே னிறைந்த பூசை
யாய்பரம் பொருளை நாளு மர்ச்சிநீ யன்பு செய்தே.

(கொ-டு) பூசை மாபரன் தாபரசங்கமங்கள் என்ற இரண்டு உருவில் நின்று நீ பரன்றன்னை நெஞ்சில் நினைவையேல் நிறைந்த பூசை கொண்டுமன் உயிர்க்கு அருளைவைப்பன் நீ ஆய்பரம் பொருளை நாளும் அன்பு செய்தே அர்ச்சி,

முதலாவது நின்ற பூசை யென்பதனை பூசைக்கு எனவிரித்துரைக்க.

(பொ - ரை) மேற்கூறியவாறு சிவபெருமானை வழிபடுதற்கு வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத அச்சிவபெருமான் திருமேனிகொண்டவிடத்தும் அத்திருமேனி சுத்த மாயாதத்துவ புவனத்தில் தோன்றி விளங்குவதன்றி இவ்வுலகத்தில் தோன்றி விளங்குத லின்மையால் இவ்விடத்திலுள்ளார் வழிபடுதற்கு மாட்சிமைபெற்ற இறைவன் புறத்தே திருக்கோயிலிலுள்ளிருக்கும் திருமேனியும் விபூதி உருத்திராக்க முதலிய திருவேடமும் ஆகிய இரண்டையும் ஆதாரமாகக்கொண்டு நின்றும் அப்பரனை மனத்தால் வழிபடவிரும்புவையாயின் அகத்தே உயிரிடமாகக்கொண்டு நின்றும் இங்குள்ளார்செய்யும் நிறைந்த பூசையை ஏற்று அவர்க்கு அருள்செய்வன். ஆதலான் நீ இவ்வுண்மையை அறிந்து பரம்பொருளைத் தினந்தோறும் மேற்குறித்த இடங்களில் பத்திசெய்து வழிபடுக. (எ...று). (உஅ)

அறமுஞ் சிவபெருமானிடத்து அன்பிலார் செய்யின் பாவமாகு மேன்வும், பாவமும் அச்சிவபெருமானிடத்து அன்போடு செய்யின் அறமாகுமேனவுங் கூறுகின்றது.

அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பால்ன் செய்த பாதக நன்மை யாய்த்தே.

(பொ - ரை) அறம் பாவங்கள் பலன்றருவது அவ்வறம் பாவங்களைக் கொள்வோர் உயர்வு தாழ்வு பற்றியேயாம். அவ்வாறன்றி செய்வாரது உயர்வு தாழ்வுபற்றியாவது செய்யப்படும் வினைகளின் உயர்வு தாழ்வுபற்றியாவது பலன்றருதல் அன்று. ஆதலால் சிவபெருமான் றிருவடிக்கு அன்புடையார் பாவஞ் செய்யினும் அப்பாவமானது புண்ணியமாய் முடியும். அவன்றிருவடிக்கு அன்பிலார்செய்யும் புண்ணியமானது பாவமாய் முடியும். இவற்றிற்கு தேவரில் வரங்கள்பெற்ற தக்கன் செய்த பெரியயாகமானது புண்ணியமேயாயினும் இறைவனிடத்து அன்பில்லாமையால் பாதகமாய் முடிந்ததும் மானுடரில் பாலப் பருவத்தையுடைய சண்டீசநாயனார் தமது பிதாவுக்குச்செய்த கொலைப்பாதகமானது இறைவனிடத்து அன்புடைமையால் புண்ணியமாய் முடிந்ததும் சான்றும். ஆதலால் சிவபெருமானையே அர்ச்சித்தல் வேண்டும். (எ...று) (உக)

அரச உவமை கூறத்தொடங்கி உயிர்கட்கு வினைப்பயன்களைத் தருதலேயன்றி பாவபுண்ணியங்களைப் பகுத்தறிவதற்கு வேதாகமங்களையும் நரக சுவர்க்கங்களையும் சிவபெருமானே தந்தருளுவரெனக் கூறுகின்றது.

மறைகளீ சன்சொ லச்சொல் வழிவாரா வுயிரை வைக்குஞ்
சிறைகண்மா நிரய மிட்ட பணிசெய்வோர் செல்வத் தோடு
முறையுமா பதிக ளும்ப ருலகங்கள் யோநிக் கெல்லா
மிறைவனு ணையினு ளின்பத் துன்பங்களினையவ தாகும்.

(கொ-டு) மறைகள் ஈசன்சொல் மாநிரயம் அச்சொல்வழிவாரா உயிரை வைக்கும் சிறைகள் உம்பர் உலகங்கள் இட்டபணி செய்வோர் செல்வத்தோடும் உறையும் மாபதிகள் யோநிக் கெல்லாம் இன்பத் துன்பங்கள் இறைவன் ஆணையினால் இயைவதாகும்.

(பொ-ரை) மேற்கூறியவாற்றால் இருவினை முதலாயின அழிவெய்தாவன. அவ்விரு வினைகளைச் சிவபிரானே பொருந்தி அறிந்து இன்பத்துன்பம்

கள் தருவனென்பது பெறப்பட்டது. அதுவன்றியும் வேதாகமங்கள் என்பன சிவபிரான் கற்பித்தருளிய வாய்மொழியே. பொய நாகமாவது அவ்வேதாக்ம வழி நடவாதாரைத் தண்டித்தற் பொருட்டு அவனுல் அமைக்கப்பட்ட சிறைக் களமே. சுவர்க்க உலகமாவது அவ்வேதாகமவழி நடப்போரை வாழ்வித்தற் பொருட்டு அவனுல் அமைக்கப்பட்ட பெரிய நகரமே. ஆதலால் உயிர்கட்கு இன்பத் துன்பங்கள் அச்சிவபெருமான் ஆணையால் ஆகற்பாலனவேயாம். (எ...று)

வேதாகமங்களின் விதியில் தவறினரைத் தண்டித்தற்கும் அவ்விதியில் ஒழுகினரை வாழ்வித்தற்கும் அரசனே உவமையாகக் கூறுகின்றது.

ஆணையா லவனி மன்ன னருமறை முறைசெய் யாரை
யாணையிற் றண்டஞ் செய்து மருஞ்சிறை யிட்டும் வைப்ப
ரணையின் வழிசெல் வோருக் கரும்பதி செல்வ நல்கி
யாணியும் வைப்ப னெங்கு மாணையே யாணை யேகாண்.

(கொ-டு) அவனிமன்னன் ஆணையால் அருமறை முறை செய்யாரை. (பொ-ரை) உலகத்து அரசர் தமது ஆணையால் நிகழ்ந்த அரிய கட்டளையின்படி நடவாதாரைத் தமது ஆணையிலுல் தண்டித்துப் பொறுத்தற்கரிய சிறைக்களத்தில் வைப்பர். அக்கட்டளையின்படி நடப்போருக்கு உயர்ந்த பட்டமும் செல்வமுங் கொடுத்து வாழ்வித்து அவரை தங்கீழ் அதிகாரமுஞ் செய்ய வைப்பர். அவ்வாறு அதிகாரம் பெற்றிருக்கும் மந்திரி முதலாயினரிடத்துக் காணப்படும் ஆணையும் அவ்வாசனது ஆணையேயாம். இதுபோல முதல்வனிடத்துங் கண்டுகொள்க. (எ...று) (உக)

அரசன் செயலும் வேதாகமங்களின் வழியே யாதலின் அச் செயல் இறைவன் அருள்வழியே யென்றும் இறைவன்செயலைக் குறிப்பிப்பது என்றுங் கூறுகின்றது.

அரசனுஞ் செய்வ தீசனருள்வழி யரும்பா வங்க
டரையுளோர் செய்யிற் றீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமுஞ் சோரா ரந்த நிரயமுன் னீர்மை யீதாம்.

(கொ-டு) தரையுளோர் அரும்பாவங்கள் செய்யின் தீயதண்டலின் வைத்து தண்டத்து உரைசெய்து தீர்ப்பன் தூயோர் பின்புசொல்வழி நடப்பர்-நிர

யாரும் சோார் அந்த நிரயம் ஈது முன்னீர்மையாம் அரசனும் செய்வது ஈசன் அருள்வழி.

(பொ-ரை) இவ்வுலகத்துள்ளார் பெரும்பாதகங்கள் செய்தால் செய்த அவர்க்கு அரசனவன் கொடிய தண்டஞ்செய்து மேலும் பாவஞ்செய்யின் இவ்வளவினன்றி இன்னுங் கொடிதாகச் செய்வனெனச் செய்யப்படுந் தண்டத்தை யெடுத்துச் சொல்லி அச்சமுறுத்தி அவன் பாதகத்தைத் தீர்ப்பன். அறிவுடையார் அவ்வாறு செய்வித்தபின்பு விதிவழி நடந்து பாவத்தின் பயனாகிய நரகத்தி லழுந்தார். அந்த நரகதண்டம் இவ்வரசதண்டம்போல உண்டென்று கருதுவதற்கு அரசதண்டம் எதுவாகின்ற தன்மையுடையதாம். இவ்வாறு அரசதண்டம் வைத்தது நரக தண்டம் வராமல் பாவத்தைத் தொலைத்துக் காத்தற்பொருட்டும் அரசர் தண்டிக்கும் படியான நிலையில் வெளிப்படாமல் மறைந்து பாவஞ்செய்யின் நரகதண்டத்தை உயிர்க்குயிராகிய இறைவன் அறிந்து தருவனென்று அறிவுறுத்தற் பொருட்டுமாம். ஆதலால் அவ்வரசன் ஆணையும் முதல்வன் ஆணையின் வழியாய் நிகழ்வதன்றி சுதந்தரமாய் நிகழ்வ தன்று. (எ...று)

வைத்தியன் உவமை கூறத்தொடங்கி பாவத்தின் பலனைப் புசிப்பித்துத் தீர்ப்பது புண்ணியஞ்செய்வதின் பொருட்டுப் போல் புண்ணியத்தின் பலனைப் புசிப்பித்துத் தீர்ப்பது மலநிவிர்த்தியின் பொருட்டெனக் கூறுகின்றது.

அருளினு லுரைத்த நூலின் வழிவாரா ததன்மஞ்செய்யி
னிருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மலங்க டீர்க்கு மருந்திவை வயித்திய நாதன்

(கொ-டு) மருள் உலாம் மலங்கள் வயித்தியநாதன் இவை தீர்க்கும் மருந்து. வயித்திய நாதனுக்கு என விரித்துரைக்க-

(பொ-ரை) இறைவன் கருணையினால் உரைத்தருளிய வேதாகம வழி நில்லாது பாவஞ்செய்யின் இருள்நிறைந்த நரகத்திற் செலுத்தித் துன்பத்தினை அனுபவிக்கச் செய்து அப்பாவத்தினைத் தீர்ப்பன். அவ்வேதாகம வழி நடப்போரை அதிசயப் பொருள்கள் தங்கிய சுவர்க்க முதலிய வற்றில் வைத்து இன்பத்தினை அநுபவிக்கச்செய்து அப்புண்ணியத்தைதத் தீர்ப்பன். புண்ணியம் நல்வழி நிற்றலேயாயினும் நான் செய்தேனென்னும் ஆணவமலம் அறுதலாகிய அருள்வழி நில்லாமையால் அதுவும் பந்தமேயாம். பந்தமறுதற் கது

வாகிய பாவபுண்ணியம் இரண்டும் உயிர்க்கு நோய் ஆதலின் சிவபிராற்கிய வைத்தியனுக்கு இன்பத்துன்பங்கள் அந்நோய்தீர்த்தற்குரியமருந்தாம் (எ-றி)()

வைத்தியன் மருந்தாலும் பிராயச்சித்தத்தாலும் நோயைத் தீர்ப்பதுபோல இறைவனும் நரகசுவர்க்கமுதலிய பலவாற்றானும் வினை நோயைத்தீர்ப்பனெனக் கூறுகின்றது.

மருத்துவ னுரைத்த நூலின் வழிவாிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிக டப்பிற் றப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யா துறும்பிணி சென்றுந் தீர்ப்ப
னுரைத்தநூற் சிவனு மின்னே யுறுங்கன்ம மூட்டித் தீர்ப்பன்.

(கொ-டு) நூலின் உரைத்தவழிவாின் பிணிகள்வாரா தப்பின் வருத்திடும் பிணிகள் செய்யமருந்து திருத்தினன் தப்பியவழியும் செய்யாது உறும் பிணிசென்றும் மருத்துவன் தீர்ப்பன் இன்னே உரைத்தநூற் சிவனும் உறுங்கன்மம் ஊட்டித்தீர்ப்பன்-

(பொ-ரை) வைத்தியநூலின் உரைத்தவழி நடப்போர்க்கு நோய்கள் வாரா தணுகா. அந்நூல் வழியிற் றப்பியவர்க்கு தன் செயலாலும் செயலுக்கு முன்னிலையான பொருள்களாலும் நோய்கள் வரும். இந்நோய் அபத்தியத்தால் உண்டானதாமாதலின் அதற்குத்தக்க மருந்துகளை வைத்தியன் கொடுத்துத்தீர்ப்பன். வைத்தியநூல்வழியில் தப்பாதிருக்கவும், கன்மங்காரணமாக தெய்வத்தால் பிணிகள் வரவுங்கூடும். அப்பிணிகளை அவற்றிற்குத் தக்க பிராயச்சித்தங்களாகிய தானம் பூசை ஓமம் முதலிய புண்ணியச்செயல்களை நோயாளியைச் செய்யச் செய்து மருந்துங்கொடுத்து வைத்தியன் தீர்ப்பன் .இவ்வாறே சிவாகமங்கள் உணர்த்திய வண்ணம் சிவபெருமானும் உயிர்கட்கு வரும் இருவினையாகிய நோயை பல திறத்தானும் இன்ப துன்பங்களை ஊட்டித் தீர்ப்பன். (எ-று) ()

நரகமேயன்றி சுவர்க்கமும் மருந்தென உவமை முகத்தால் விளக்குகின்றது.

மண்ணுளே சிலவி யாதி மருத்துவ னருத்தி யோடுந்
திண்ணமா யறுத்துக் கீறித் தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாங்
கண்ணிய கட்டி பாலுங் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்ப
னண்ணலு மின்பத் துன்ப மருத்தியே வினைய றுப்பன்.

(கொ-டு) மருத்துவன் மண்ணுளே சில வியாதி அருத்தியோடும் எனவும் கண்ணியகட்டி பாலும் உடன் கலந்து கொடுதீதுத் தீர்ப்பன் எனவுங் கூட்டுக.

(பொ-ரை) இவ்வுலகத்துள்ளார்க்கு உண்டாகிய சில வியாதிகளை வைத்தியன்னவன் நோயாளியிடத்து அன்பும் உறுதியும் உடையவனாய் அறுத்துக் கீறித் தீர்த்திடுவன். வேறு சில வியாதிகளை சர்க்கரையும் பாலும் மருந்தோடு கலந்து கொடுத்துத் தீர்த்திடுவன். இவ்வாறு வைத்தியன் செய்யும் துன்பமும் இன்பமும் மருந்தா மாறுபோல முதல்வனும் இன்பத்துன்பங்களாகிய மருந்தை அனுபவிக்கும்படிசெய்து இருவினையாகிய நோயைத் தீர்ப்பான். (எ-று) ()

உயிர் இன்பதுன்பம் அருந்தும் விதம் கூறத் தொடங்கி பூமி, நரக, சுவர்க்கங்களில் போக மனுபவித்தற்குரிய சரீர இயல்பு கூறுகின்றது.

பூதனு சரீரம் போனற் புரியட்ட ரூபந் தானே
யாதனு சரீர மாகி யின்பத்துன் பங்க ளெல்லா
நாதனு ராணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா வணுவா யோநி சேர்ந்திடுஞ் சீவ னெல்லோர்ம்.

(கொ-டு) பூதனுசரீரம் போனல் புரியட்டரூபந்தானே யாத்னுசரீரம் ஆகி சீவன்எல்லாம் நாதனுர் ஆணை உய்க்க சுவர்க்க மொடு நாகு இன்பத்துன்பங் களெல்லாந்துய்த்து தீது இலாஅணுவாய் யோநி சேர்ந்திடும்.

(பொ-ரை) சிவபிரானுகிய வைத்தியன் ஊட்டும் மருந்தாகிய இன்பத் துன்பங்களை உயிர் அருந்து முறைமை எவ்வாறெண்பார்க்கு இத்தூல உடம்பு நீங்கிய விடத்து அதனோடு உடன்போகாது நிலைபெற்றுள்ளதாகிய சூக்கும உடம்பினின்றும் வினைப்பயனை அனுபவித்தற்குரிய வெவ்வேறுடம்புகள் உள வாம். ஆதலால் உயிர்களெல்லாம் அச்சூக்கும உடம்போடு இறைவன் ஆணை செலுத்தச்சென்று சுவர்க்க நரகத்து இன்பத்துன்பங்களை அனுபவித்துப்பின்பு எஞ்சிய சஞ்சித வினைப்பயனை அனுபவித்தற் பொருட்டு குற்றமில்லாத அச் சூக்கும உடம்போடு மண்ணுலகத்தில் கருப்பாசயத்தில் பொருந்தும். (எ-று)

பூத உடம்பு, பூதசார உடம்பு, யாதனுஉடம்பு என உடம்பு மூன்று. இவை முறையே பூமி, சுவர்க்கம், நரகமாகிய உலகங்களுக்குரித்து. (நூசு)

-ஆல விட்டவுடன் பிறிதோருடலை எடுக்கினுமெடுக்கும். எடுக்காது கற்போற்கிடக்கினும் கிடக்குமெனக் கூறுகின்றது.

உடல்விடா யோநி பற்றி யுதிப்பினு முதிக்கு மொன்றிற்
படர்வுறு துறும்பா வத்தாற் பாடாணம் போற் கிடந்து

கடனதாங் காலஞ் சென்றுற் கதிரா கதனில் வீழ்ந்தங்
கிடருறு முருவங் கன்மத் தளவினி லெடுக்கு மன்றே.

(கொ-டு) கன்மத்து அளவினில் உருவம் எடுக்கும் அன்றே என்பதை முன்னர் வைத்து உடல்விடாயோநி பற்றி என்பதை அதன் பின்னாகவைத்து ரைக்க.

(பொ - ரை) அந்த அந்த வினைகளது வன்மை மென்மைகட்கேற்ப பூத சரீரமாகிய இவ்வுடல் போயபொழுது யாதனு சரீரத்தை டொாது மற்றுமோர் பூத சரீரத்தை எடுத்தலும் யாதனு சரீரம் போயவாறே பூதசரீரம் எடாது மற்றுமோர் யாதனு சரீரமெடுத்தலு முளவாம். ஆகலான் இவ்வுடம்பினைவிட்டு பிறிதோருடம்பை எடுத்தல் இடைவிடாது நிகழ்தலுமுண்டு. ஒரு உடம்பிலும் தங்காது மிகுந்த பாவத்தால் கற்போல் சூக்குமதேகத்துடன் பிரகிருதியில் சிறிதுகாலங்கிடந்து அக்காலம் செல்லுங்கால் கொடிய நரகத்தில் வீழ்ந்து அவ்விடத்துத் துன்புற்று இவ்வுலகத்து வந்து பிறத்தலுமுண்டு. (எ...று) (நூ)

உடல், இடம், குறி, உணர்வு மாறினும் உயிர் ஒன்றே என உவமை முகத்தால் விளக்குகின்றது.

பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்
துன்னுதோன் முட்டை யாக்கை துறந்துசெல் வதுவே போல
வுன்னிய வுயிர்க்க ணெல வுடல்விட்டு வானி னூடு
மன்னிடு நனவு மாறிக் கனவினை மருவு மாபோல்.

(கொ-டு) பன்னகம் துன்னுதோல் (துறந்துசெல்வதுவே போல) அண்டசங்கள் முட்டை (துறந்து செல்வதுவே போல) பரகாயந்தன்னிற் பாய்வோர் யாக்கை துறந்துசெல்வது வேபோல நனவுமாறிக் கனவினைமருவும் ஆபோல் உன்னிய உயிர்கள் தூலவுடல்விட்டு வானினூடு. (சென்று) மன்னிடும்.

(பொ - ரை) முன்னைத்தோலாகிய நெருங்கின உடலைவிட்டுச்சென்று மற்றொரு தோலாகிய உடலினைப்பற்றும் பாம்புபோலவும் முன்னை முட்டையாகிய இடத்தினை விட்டுச்சென்று மற்றோரிடத்தினைப் பற்றும் பறவைகள் போலவும் முன்னைச்சரீரத்தினை விட்டு மற்றோர் சரீரத்தினைப் பற்றும் பரகாயப் பிரவேசிகள் போலவும் நனவுணர்வுமாறி கனவுணர்வைத் தலைப்படுமாறு போலவும் கருதப்படும் உயிர்கள் தாம் வேறுகாது. அறிவு வேறுபட்டு தூலவுடலாகிய முன்னை உடம்பினைவிட்டு வானேறிச்சென்று மற்றோர் உடம்பில் நிலைபெறும். (எ...று) (நூ)

மூற்கூறிய இருவினையாவது முயற்சியென்றும் அது வேகாமிய மலமென்றும் அதற்குமூலம் உண்டென்றும் கூறுகின்றது.

தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து
நன்மைதீ மையினு மின்பத் துன்பினு நாடிக் காண
முன்னமே யான்மா வின்றன் மும்மலத் தொன்ற தாகித்
தன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்.

(கொ-டு) முன்னமே ஆன்மாவின்றன்கன்ம முந்தான் தன்மமோடு அதன்மமாகி இருபயனுந்தந்து மூலங்காட்டிக் காமியமலமாய் நன்மை தீமையினும் இன்பத்துன்பினும் நாடிக் காணநிற்கும்.

(பொ - ரை) இதுகாறுங் கூறியவாற்றுல் கன்மமாவது மூற்பிறவியில் ஆன்மாவினுல் செய்யப்படும் இதம் அகிதமென்னும் முயற்சியாமென்பது பெறப்பட்டது. இதுவே ஆகாமியம். அம்முயற்சி பலனுக்கு வருங்காறும் கட்டுப்பட்டு அறம், பாவம் என்னும் இருவகைத்தாம். இதுவே சஞ்சிதம். அவ்வறம், பாவம் பலனுக்கு வருங்கால் இன்ப துன்பமென்னும் இருவகைத்தாம். இதுவே பிராரத்தம். இவ்வாறு ஆகாமியத்தால் சஞ்சிதமும் பிராரத்தமும் அப்பிராரத்தத்தை அனுபவிக்குமுறையில் மேல் ஆகாமியமும் உண்டாமாயின் முன்னர் பிராரத்தமுண்டாயிற்று, ஆகாமியமுண்டாயிற்று என்னுஞ் சங்கை நிகழுமன்றே? பிராரத்தமென்பது ஆகாமியத்தின் பலனேயன்றிப்பிறிதில்லையாதலின் ஆகாமியமே முன்னர் உண்டாயிற்றென்று சொல்லல்வேண்டும். அவ்வாகாமியமாகிய இதமகிதத்தை முன்னர் செய்வதற்கும் ஓர் காரணம் வேண்டும்; இன்றேல் அச்செயல் நிகழாது. அக்காரணம் விருப்பு வெறுப்பேயாம். அக்காரணமாகிய மூலகன்மம் உண்டென்று காட்டுவதான அவ்வாகாமிய கன்மம் பிறப்பு இறப்பிற் கட்டுப்படுத்தலில் ஆணவமலம் மாயாமலங்களோடொத்தலால் இதுவுமலமெனப்பட்டு காமியமலமாய் மும்மலத்துள் ஒன்றாய் வைத்து எண்ணப்படும். காமியமலமாகிய இருவினையென்பது இப்பொழுது செய்யப்படாமையால் உண்டென்று பிரத்தியட்சமாய் அறியப்படாவிடினும் இன்ப துன்பமாகிய காரியத்தாலும் புண்ணியபாவமாகிய காரணத்தாலும் உண்டென்றறியப்படும். இவ்வாறறிவது அனுமான அறிவு. (எ...று)

விருப்பு வெறுப்பென்னும் மூலகன்மம் தொழிற்பட்டன்றிப் பூபன்றாணமையின் ஏனை ஆகாமிய சஞ்சித பிராரத்தங்களோடொப்ப நான்கென வேறுவைத் தெண்ணப்படாதாயிற்று. மூலகன்மம் விருப்பு வெறுப்பென்பதனை "வேண்டுதல் வேண்டா

மையிலான்" என்னுந்திருக்குறளும் வலியுறுத்தும். எவ்வாறெனின்; இறைவனுக்கு விருப்பு வெறுப்பு இல்லாமை கூறலே அவ்விருப்பு வெறுப்பு ஆன்மாவிற் குண்டென்பது குறிப்பாலுணரப்படு மாதலா லென்க. இவ்விருப்பு வெறுப்பையே திருவாலவாய்ப் புராணத்தில் கச்சியப்ப முனிவர் "இரண்டெனும் பழையவினையும்" எனவும் பட்டினத்தடிகள் "இருவாதனையற் றிறந்தான் பெருமை" என்பதில் "இருவாதனை" எனவும் அருளியவாறும். கன்மமலத்திற்கு முன்விருப்பு வெறுப்பு உளவென்பதை "செம்புறுகளிம்டெண வரா திமல மூழ்கியிருள் சேருமலர் விழியென்னவே, தெளிவற்ற சேவலத் தசைவற் றிருந்துமல சேட்டையாற் குழவி குருடாம், தம்பிணியி னுஞற்ற பால்கோலை நோக்கவனைவ தமையனிப் பாரென்ன நான், சார்தன்ம மாயையை விரும்பீ தந்திடச் சகலனுய்" என மாதவச் சிவஞான யோகிகள் அருளியவாற்றானு மறிக. (சூசு).

அவ்வினையானது தொடர்ச்சியாய் இறைவன் ஆணையால் உயிர்க்குப் பல வேறுவகைப்பட்ட உடல்களைத் தோற்றுவிக்குமெனக் கூறுகின்றது.

இருவினை யாதி யாதி பியற்றலா னுகர்வா லந்தம்
வருமலஞ் சார்ந்து மாயா வுருவுகண் மருவி யார்த்துத்
தருசெயன் முறைமை யாலே தான்பல பேதங் காட்டி
யருவதாய் நின்ற ரன்ற ணையி னமர்ந்து செல்லுமே.

(கொ-டு) இருவினை நுகர்வால் இயற்றலால் வரும் ஆதி அந்தம் அநாதி மலம்சார்ந்து மாயாவுருவுகள் மருவி ஆர்த்துத்தரு செயல் முறைமையாலே தான் பல பேதம் அன்றன் ஆணையின் அருவதாய் நின்று காட்டி அமர்ந்து செல்லும்

(பொ - ரை) அவ்வாகாமிய வினையானது செய்யப்பட்டும் அழியப்பட்டும் வருதலால் ஆதியும் அந்தமும் உடையதாம். ஆயினும் இடையறுதோடும் நீர்ப்பெருக்குப்போல தொடர்ச்சியாய்த் தொன்று தொட்டு வருதலால் பிரவாக அனாதியாம். அது வினை ஆணவமல காரியமாகிய மோகம் முதலிய குணங்களோடும் மாயாமலகாரியமாகிய தனு கரண புவன போகங்களோடும் கூடி உயிரைப் பிறப்பு இறப்பிற் கட்டுப்படுத்தி தனது காரியமாகிய இன்ப துன்பங்களின் வேறுபாட்டிற்கேற்ப பல வேறுவகைப்பட்ட உடல்களை இறைவன்

ஆகிணயால் அவ்வுயிர்க்கு வெளிப்படாது சூக்குமமாய் நின்று தோற்றுவித்து நடக்கும். (சய)

மனுடர் மனுடராகவும் மிருகம் மிருகமாகவும் இவ்வாறே பிறவும் பிறப்பதன்றி ஒரு பிறவியிலிருந்து மற்றொரு பிறவி வராதென்பாரை மறுத்துரைக்கின்றது.

சங்கமந் தாப ரங்க டத்தங்கள் மத்துக் கிடா
வங்குரு போகி மாறு மச்சுமா றுதிங் கென்னி
னிங்குமா நுடரி யற் றும் புண்ணியத் தின்ப வீட்ட
மங்குவான் சுரர்க ளெமியா நார்களா யருந்து வாரோ.

(கொ-டு) தத்தம் கன்மத்துக்கு ஈடா சங்கமம் தாபரங்கள் அங்கு உருபோகிமாறும் இங்கு அச்சுமாறுது என்னின்

(பொ - ரை) அவரவர் வினைக்கீடாக சங்கமம் தாபரமாகிய அவ்வவ்வுயிர்கள் உடலைப் பிரியுங்கால் மீட்டும் அவ்வப்பிறவியிற் பிறத்தலேயன்றி வேறு பிறவியில் மாறிப்பிறத்தலில்லை என்னின், இவ்வுலகத்தில் மானுடர்செய்யும் புண்ணியத்தின் பயனுகிய இன்ப மிகுதியை மேலுலகத்தில் வாழ்கின்ற தேவர்களாய் அனுபவித்தலேயன்றி மானுடர்களாய் அனுபவிப்பதுண்டோ. (எ-று)

தேவபோகத்தை மானுடனுகவும் மானுடபோகத்தைத் தேவனுகவும் அனுபவித்தல் கூடாதாதலின் உடல்மாறுமென வலியுறுத்துகின்றது.

நார்களாய்த் துய்ப்ப ரென்னி னரர்பதி சுரரு லோகஞ்
சுரர்களாய்த் துய்ப்ப ரென்னிற் சொன்னவச் சழியு மாகுஞ்
சுரர்களாய்ப் பலண்க டெய்த்துத் தாமிங்குத் தோன்றும் போது
நரர்களாய்ப் பிறப்பர் ஞாலத் தமராராய் நண்ணி டாரே.

(கொ-டு) சுரர் உலோகம் நார்களாய்த்துய்ப்பர் என்னின் நரர்பதி எனவும் அமராராய் ஞாலத்து நண்ணிடாரே எனவும் கூட்டுக.

(பொ - ரை) இன்பமாகிய தேவபோகத்தை மேலுலகத்தில் மானுட வடிவுகொண்டே அனுபவிப்பரென்னின் அவ்வாறனுபவிக்கில் அது தேவ உலகமாகாது மண்ணுலகமேயாம். தேவர்களாயே அனுபவிப்பரென்பதை ஒத்துக்கொள்ளின் மேற்சொல்லியவாறு உடல்மாறுதலுண்டென்பது இனிது விளங்கும். ஆதலால் தேவர்களாய் இன்பப்பயனை அனுபவித்துத் தொலைந்தவிடத்து மீண்டிவ்வுலகிலுதிக்கும்போது மானுடவடிவாய்ப் பிறப்பதன்றி தேவராய் இவ்வுலகத்திற் பிறவார். (எ-று) (சஉ)

தேவரும் மனிதரும் அவரவர்க்குரிய வடிவம் மாறினும், உறுப்புக்களும் அங்கங்களும் மாறுவாதலின் உடல் மாறுமென்றல் பொருந்தாதென்பாருக்கு மயிர்க்குட்டி முதலியன வண்டு முதலியனவாய் மாறும் பிரத்தியட்சங்காட்டி உடல்மாறுமென வலியுறுத்துகின்றது.

வண்டுக ளாகி மாறு மயிர்க்குட்டி மற்றோர் செந்துப்
பண்டைய வுருவந் தானே வேட்டுவ ணுய்ப்பி றக்குங்
கண்டுகொள் யோநி யெல்லாங் கன்மத்தான் மாறு மென்றே
கொண்டன சமய மெல்லா மிச்சொணீ கொண்ட தெங்கே.

(கொ-டு) மயிர்க்குட்டிவண்டுகளாகி மாறும் மற்றோர் செந்துபண்டைய உருவந்தானே வேட்டுவனுய்ப் பிறக்கும் கண்டுகொள் கன்மத்தான் யோனி எல்லாம் மாறுமென்றே சமயம் எல்லாங் கொண்டன இச்சொல் நீ எங்கே கொண்டது.

(பொ - ரை) அவ்வாறுயினும் மனுடவுடல் தேவ உடலாய் வேறுபட்ட விடத்தும் செவி முதலிய உறுப்புக்கள் மனுடருக்குந் தேவருக்கும் வேறுபடுதலில்லையாதலால் முற்றும் மாறுமென்றல் பொருந்தாதெனின், இவ்விடத்திலும் மயிர்க்குட்டி வண்டாகவும் புழு குளவியாகிய வேட்டுவனுகவும் உடல்மாறு மென்பதும் அவ்வாறு மாறுவதில் அதுவதற்குரிய உறுப்புக்கள் வேறு வேறுமென்பதும் பிரத்தியட்சம் ஆதலால் கன்மத்திற்கேற்ப உடல்கள் மாறுதல் உண்டென்பது எல்லாச்சமய நூல்களுக்கும் ஒப்பமுடிந்ததாம். பிரத்தியட்சப் பிரமாணத்தோடும் நூற்பிரமாணத்தோடும் மாறுபட்டு முற்றும் மாறுதலில்லை என்று நீ கூறும் இப்போலிக்கூற்று எங்கே கொண்டாய். (எ...று) (சூ)

ஓர் உடம்பு கெடாது பிறிதோருட்ம்பாய் மாறும் மயிர்க்குட்டி முதலிய உவமை கெட்டுத் தோன்றுமென்பதனேடு பொருந்தாதென்பார்க்கு அகலியை முதலிய உவமைகூறி உடல் மாறுமென்பதை வலியுறுத்துகின்றது.

- அகலியை கல்ல தாரு ளரிபல பிறவி யானுன்
பகலவன் குலத்திற் ரோன்றிப் பாலொலா முழுது மாண்டு
நிகரிலா வாச னுதுஞ் சிலந்திநீ டுலகம் போற்றச்
சகமதி லெலிதா ன்ன்ரே மாவலி யாய்த்துத் தானே.

(கொ-டி) சிலந்தி பகலவன்குலத்திற் ரோன்றி எனவும் எலிதான் அன்ரே நீடு உலகம் போற்ற சகமதில் மாவலி ஆய்த்துத்தானே எனவும் கூட்டுக.

(பொ - ரை) மேற்கூறியவாறு வண்டு முதலியனவற்றின் உடல்களே மயிர்க்குட்டி முதலிய உடல்களாய் மாறுபட்டனவன்றி முன்னுடலழிந்து வேறு உடல்தோன்றுவ தன்றுதலால் முன்னுடல் கெட்டு பிறிதோருடல் தோன்று மென்பதனோடு பொருந்தாதென்னின் அகலியையானவள் கௌதமமுனிவனிட்ட சாபவயத்தால் கல்லாக முன் உடல் அழிந்தே மாறினள் என்பதும் விட்டுணுவானவன் பிருகுமுனிவனிட்ட சாபத்தால் மச்ச முதலிய பத்துவித தோற்றத்தினும் முன் உடல் அழிந்தே மாறினனென்பதும் சிலந்திப்பூச்சியானது திருவானைக்காவில் சிவபெருமானை அர்ச்சித்த பலத்தால் சூரிய வம்சத்தில் அரசனுப் உதித்து பூமி முழுவதும் ஆண்ட முறைமையில் முன் உடலழிந்தே மாறியதென்பதும் எலியானது சிவாலயத்துள்ள திருவிளக்கைத் தூண்டப் பெறலால் தேவ உலகத்துள்ளாரும் துதிக்கும்படி இம்மண்ணுலகத்தின்கண்ணே மகாபலிச்சக்காவர்த்தியாக முன் உடல் அழிந்தே மாறியதென்பதும் நூல்களிற் கேட்கப்படுதலால் எவ்விடத்தும் அவ்வாறே தெளியப்படும். (எ...று) ()

அகலியை முதலிய பிரமாண மெல்லாம் சாபமும் அருளுமே யன்றி விஷப்பயன் அன்றென்பார்க்கு விஷப்பயன் தருதலும் இறைவன் சாப அருளே யாமெனக் கூறுகின்றது.

செப்பிலுப் மாற வேறு சிலர்விதி யாலே கன்மால்
வைப்புறும் யோநி யெல்லா மாறிவந் திடாவிங் கென்னி
னெப்படி யாணுஞ் செய்திக் கிறைகரி யாவ னென்றே
நீற்படை மொழிந்தே னெல்லா முதல்வன்றன் விதியே யாகும்.

(கொ-டு) சிலர்விதியாலே வேறுமாறச் செப்பிலுப்.

(பொ - ரை) மேற்கூறியவாறு அகலியை முதலியோர்க்கு உடல் மாறிய சாப அருள்களாலன்றி கன்மத்தாலன்றுதலின் அதுபற்றி எவ்விடத்தும் அவ்வாறு உடல் மாறுமென்றல பொருந்தாதென்னின் அவரவர் செயலுக்கேற்ப சாப அருள் நிகழ்ந்தவாறுபோல் எவ்வகையானும் உயிர்கள் செய்யுங்கன்மங்கட்கு முதல்வன் சான்றுவனென்று மேற்கூறிப் போந்தாமாதலின் விஷப்பயனெனப்பட்டன வெல்லாம் முதல்வனுடைய சாப அருள்களேயாம். ஆதலால் எவ்விடத்தும் உடல் மாறுமென்றது பொருந்தும். (எ...று) (சு)

ஒன்றைப்பற்றி அதுவாய் நிற்கும் உயிர் முன்பற்றியதை விட்டுப் பிறிதோன்றை இறைவன் ஆணையால் பற்றி அதுவாய் நிற்குமெனக் கூறுகின்றது.

அவ்வவ யோநி தோறு மவ்வவ வுலகந் தோறும்
செவ்விதி னறிந்து கன்மஞ் சேர்ந்திடா சிவன் சேரா
விவ்வகை தம்மிற் சேர்வு பிறைசெய லானுற் செய்த
வெவ்வுரு வுந்தங் கன்மான் மாற்றுவ னிறைவன் றானே.

(கொ-டு) கன்மம் அவ்வவயோநி தோறும் எனவும் இறைவன்றானே செய்த எவ்வுருவும் தங்கன்மால் மாற்றுவனெனவும் கூட்டுக.

(பொ - ரை) உயிர் ஒன்றனைப்பற்றி அதுவாய் நிற்பதேயன்றி பிறிதொன்றனை எவ்வாறு பற்றுமெனின் வினைகள் சடமாதலால் அவ்வினைகட்கிடாய தனுக்களும் புவனங்களும் நேராக அறிந்துசென்று அணையமாட்டா. உயிர்கள் அறிவுடைப்பொருளாயினும் தமக்கென அறிவின்மையால் வினையின் பயனைத் தாமே அறிந்தெடுத்துக் கொண்டு அனுபவிக்கமாட்டா. இவ்வாறுதலின் மாயையினையும் வினைகளையும் காரியப்படுத்தி உயிர்கட்குச் சேர்த்தல் இறைவன் செயலே என்பது பாரிசேட அளவையால் பெறப்பட்டது. ஆதலால் இறைவன் செய்த எவ்வகை உடலையும் அவ்விறைவன் வினைக்கேற்பமாற்றி பிறிதோருடலைப் பற்றச் செய்வன். (எ...று) (சசு)

இறைவனற்றலால் ஒரு சூக்கும உடம்பே பலதூல உடலாய் மாறுதலில் சற்காரிய வாதத்திற் கிழுக்கில்லை என உவமை முகத்தால் விளக்குகின்றது.

மாறியிவ் வுருவ மெல்லாம் வருவதெந் தேகநின் றென்னின்
கூறிய சூக்கு மத்தா முருவெனிற் குறியொன் றென்னின்
வேறொரு குறியா மாரம் வீரசங் கிலியுமாகுந்
தேறுநீ யொருவ னலிச் செயலெலாஞ் சிவனு லாகும்.

(கொ-டு) இவ்வுருவமெல்லாம் மாறிவருவது என்னின் எங்கே நின்று என்னின் உருக் கூறிய சூக்குமத்து ஆம் குறி ஒன்று என்னின் ஒருகுறி ஒருவனல் வேறும் ஆம் வீரசங்கிலியுமாகும் சிவனல் இச்செயலெல்லாம் ஆகும் நீ தேறு.

(பொ - ரை) அவ்வாறு உடல்மாறித் தோன்றுவதாயின் உள்ளது காரியப்படுமென்னும் சற்காரிய வாதத்திற் கிழுக்காகாதா, ஆகாதெனின் வேறு வேறு உடல் எங்கிருந்து தோன்றுமெனின் மூலமாகிய சூக்கும உடம்பினின்றும் பலதூல உடம்புகளுண்டாம். காரணம் ஒன்றாகவும் காரியம் பலவாதல் எவ்வாறமையுமெனின் காரணமாகிய ஒரு பொன்செப்வானது வல்லமையால் ஆம், வீரசங்கிலி முதலிய வெவ்வேறு ஆபரணங்களாய் மாறுபடுமாறு போல

ஒரு சூக்கும உடம்பாகிய காரணம் இறைவனது ஆற்றலால் வெவ்வேறு உடல் களாய்த் தோன்றும். ஆதலால் சற்காரிய வாதத்திற் கிழுக்கில்லை என்பதனை நீ தெளிவாயாக. எ...று

ஒரு சூக்கும உடம்பினின்று பல தூல உடம்பு தோன்றியழி தற்குவமை கூறுகின்றது.

சூக்கு மங்கெட்டுத் தூலந் தோன்றிடா சூக்கு மத்தி
னுங்கியோ ருடல்கி டப்ப தின்றுட லாக்குந் தன்மைக்
கோக்கிய சத்தி யுண்டா யுடறருங் கால முற்று
நீக்கிட மாம்பின் வேறோர் நீண்மர நிகழ்த்து மாபோல்.

(கொ-டு) மாம்காலம் உற்று நீக்கிட பின்வேர் ஓர் நீள்மரம் நிகத்ழ்த்தும் ஆபோல் ஓக்கிய சத்தி உண்டாய் உடல் தரும்.

ஓக்கிய மென்பது யோக்கிய மென்னும் பொருட்டு.

(பொ-ரை) அவ்வாறு ஒரு சூக்கும உடம்பினின்றும் பல தூல உடம்பு வருவது பொன்னனைத் ஆரம் வீரசங்கிலியானாற் போல ஒன்று பிறிதொன்று வதுமன்று. வித்து மரமானாற் போல ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவது மன்று. சந்திரனிடத்து எழுகின்ற கலைகள் போல் ஒன்றின்கண் ஒன்று அடங் கிக்கிடந்து தோன்றுவது மன்று. இவ்வாறுயின் சூக்கும உடம்பினின் றும் தூல உடம்புகள் உண்டாவதற்கு மற்றென்னையோ திருட்டாந்தமெ னின், மரமானது கெடுகின்ற காலம் பொருந்துதலால் அழியவும் பின்பு அம்ம ரவேரின் மற்றொரு நீண்டமரம் உண்டாதல் போலும். ஆதலால் சூக்கும உடம் பில் தூல உடம்புகள் தோன்றுதற்கு யோக்கியமான சத்தி அடங்கியிருந்து தோன்றுவனவாம். (எ..று)

மேலைச் செய்யுளில் பொன்னென்றே பல ஆபரண மாறுற்போ லென்றது உள்ளது காரியப்படுமென்பதற்கு. அவ்வுவமையில் ஒன்று பிறிதொன்றுதல் பெறப்படுதலின் இச்செய்யுளில் ஒன்றினிருந்து வேறு பல தோன்றுமென்றதற்கு வேறு உவமை கூறி அவ்வுவமை யை மறுத்தலால் முரணின்மையறிக. (சூ)

பல தூல உடம்பு தோன்றி ஒடுங்குவதற்கு ஒரு சூக்கும உடம்பு வேண்டப்படுமென உவமை முகத்தால் விளக்குகின்றது.

விதிப்படி சூக்கு மத்தே யுருவரும் வினையா லிங்கே
யுதித்திடா வுருவ மாக வுருவரு மரங்கள் வித்திற்
கதித்தெழு மாழும் வித்துங் கழியுமப்பின் னழியுஞ் சூக்க
மதிக்கெழு கலைகள் போல வருவது போவ தாமே.

(சொ-டு) உருவரும் மரங்கள் வித்தின்கதித்து எழும் விதிப்படிவினையால் சூக்குமத்தே உருவரும் மாமும் வித்தும் கழியும் பின் சூக்கம் அழியும் (என்னின்) வருவது போவது மதிக்கு எழுகலைகள் போல ஆமே இங்கே உருவமாக உதித்திடா.

(பொ-ரை) உருவமாய் விளங்குகின்ற மரங்கள் அனைவக்கு முதலாகிய வித்தினின்று தோன்றிவிளங்கும். அதுபோல இறைவன் ஆணையால் வினைக் கேற்ப சூக்குமஉடம்பினின்றும் தூலஉடம்புகள்தோன்றும். மரம் அழிந்தவிடத்து அதற்கு மூலமாகிய வித்தும் உடனழிதல்போல தூலஉடம்பு கெட்டவிடத்து அதற்கு முதலாகிய சூக்கும உடம்பும் கெடுமோ எனின், மேற்கூறிய உவமைசூக்குமத்தினின்றும் தூலம் தோன்றுவதற்கு மட்டுமே யன்றி முற்றுவமையின்முதலால் தூலஉடம்புகெட்டவிடத்து சூக்குமஉடம்பு கெடாது. அவ்வாறு கெடாதிருக்கவும் தூலஉடம்பு தோன்றி ஒடுங்குதல் எதுபோலவெனின், சந்திரனுக்கு உளவாகிய கலைபதினாறிற் காரணமாகிய ஒருகலை அழியாது நிற்க மற்றக்கலைகள் தோன்றுதலும் ஒடுங்குதலும் போலவாம். ஒருகலை இல்லாதிருப்பின் மற்றக்கலைகள் தோன்றுதலும் இல்லாது போமாறுபோல சூக்கும உடம்பாகிய ஒருமுதல் இல்லாதவிடத்து தூல உடம்புகள் உருவமாகத் தோன்றிடாவாம். (எ-று)

மேலைச் செய்யுளில் ஒருகலையில் ஏனையகலைகள் அடங்கிக் கிடந்து தோன்றுமென்பதை எடுத்துக்காட்டி மறுத்து இச்செய்யுளில் ஒருகலை யிருத்தலினால் ஏனையகலைகள் தோன்றி ஒடுங்குமென அவ்வுவமையை ஒப்புக்கொண்டதுபற்றி முரணின்மையறிக. (சகூ)

சூக்கும உடம்பிற்கு மூலம் அசுத்தமாயை என்றும் தூலசூக்கும உடல்கள் சிவத்தைச் சார்தற் பொருட்டு அஞ்ஞான காலத்தில் உளவாமென்றுங் கூறுகின்றது.

தூலமா முருவி னுக்குச் சூக்கும முதல தற்கு
மூலமா னதற்கு மூல மோகினி யதன்மு தற்றான்
மேலதாம் விந்து சத்தி சிவமிவை மிசைபோ லெல்லாஞ்
சாலவின் முரு மான்மாச் சிவத்தினைச் சார்ந்த போது.

(கொ-டு) முதல் சூக்குமம் எனவும் ஆன்மாசிவத்தினைச் சார்ந்தபோது சால இன்று ஆகும் எனவுங் கூட்டுக.

விந்துசத்தி சிவம் என்பதைவிந்து சத்திசுத்தமெனவும் சார்ந்தபோது என்பதை சார்தற்கு ஏதுவாகியகாலம் எனவும் சால என்பதை அமைதற்பொருட்டு எனவும் இன்றுஎன்பதை இப்பெத்தகாலத்து எனவும் உரைக்க. இவ்வாறன்றி சிவத்தினைச் சார்ந்தபோது எல்லாம் இல்லையாகும் எனக்கூறின் சாலவென் னுஞ் சொல்லுக்குப்பொருளின்று. கூறினும் சிறப்பின்று. அன்றியும் எல்லாம் இல்லை யாதலுமில்லை. ஆதலால் அவ்வுரை பொருந்தாது.

(பொ-ரை) தூல உடம்பிற்கு முதற்காரணம் சூக்கும உடம்பு எனப் பெறப்பட்டது. அச்சூக்குமஉடம்புக்கு முதற்காரணம் உண்டோஎனின், உண்டு. அதுமூலப்பிரகிருதியாம். அம்மூலப்பிரகிருதிக்கு முதற்காரணம் அசுத்தமாயை. அப்பிரகிருதிக்கு முதலாகிய அவ்வசுத்தமாயையே இப்பிரபஞ்சத்திற்கு மேலா கிய முதற்காரணமாம். மேலாகிய முதற்காரணமென்றதனால் மூலப்பிரகிருதி அதன் கீழாகிய முதற்காரணமாகுமென்பதை அறிக. ஏனைச்சுத்தமாயையாகிய குண்டலினிசத்தி சுத்தமாய் இவ்விருமாயைக்கும் வியாபகமாய் நிற்கும். பிரகி ருதிமாயை அசுத்தமாயை ஆகிய இருமாயைகளாலுண்டாகும் தூல சூக்குமங்க ளாகிய இருவகைப் பிரபஞ்சமும் ஆன்மாசிவத்தினை அடைவதற்கு ஏதுவாகிய பக்குவகாலம் பொருந்துதற்பொருட்டு இப்பெத்தகாலத்து இறைவனால் உளவா வனவாம். (எ...று)

இருமாயையினின்றுண்டாகும் இருவகைப்பிரபஞ்சம் இவை யென முன்னர் விரித்துக்கூறப்படும். (நo)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்றும் அதிகாணம்.

அமர்ந்து செல்லத் தலைவனுய் என்பது.

ஆணவமலம் கன்மமல மென்னும், நோயைத்தீர்த்து சிவத்தை அடைவித்தற்கு தூல சூக்குமஉடம்புகளை மருந்தாக இறைவனுற் றரப்படுமெனக் கூறுகின்றது.

அரன்விதி யருள தென்றே யறைந்தன னதுவு முன்னே
தரைநர கருந்து றக்கந் தருகர ணாதி யெல்லாம்
வருவதுஞ் செய்ட நாதி மலங்களிம் மருந்தாற் நீர்த்துப்
பரகதி யதுவுந் தந்து பாதபங் கயமுஞ் சூட்டும்.

(கொ-டு) அதனும் அன்விதி (என்று) அருளதே என்று முன்னோ அறைந்தனன் எனவும் இம்மருந்தால் அநாதி மலங்கள் தீர்த்து எனவும் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறிய் அவ்விருவகைப் பிரபஞ்சங்களும் ஆன்மா சிவத்தினை யணுடவதற்கு எதுவாகிய பக்குவகாலம் பொருந்துதற்கு இப்பெத்த காலத்து உளவாதல் எவ்வாறெனின், இறைவன் இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தைகளினின்று செய்யுஞ் செய்தியால் உளவாம். அவ்வாறு செய்தலும் உயிர்களிடத்து வைத்த கருணையேயாகும் என்பதைத் தொகுத்தும் வகுத்தும் மேலே கூறியிருக்கின்றும். ஆதலால் பூமி நாக சுவர்க்கமுதலியவற்றிற் சென்று அவைக்குரிய பயனை அனுபவித்தற்கேதுவாகிய தனுகரணாதிகளை உளவாகச்செய்து அத்தனுகரணாதிகளாகிய மருந்துகளினால் அநாதியாகிய மலகன்மங்களென்னும் நோய்களைத்தீர்த்து பரஞானத்தை விளக்கி சிவானந்தப் பெரும் பேறு அவ்விறைவனாற்றரப்படும் (எ...று)

மேல் முப்பத்தைந்தாவது செய்யுளில் இன்பதுன்பம் மருந்தெனக்கூறி இவ்விடத்து தனு கரணாதிகள் மருந்தென்றல் மலவாதாதோ னனின், ஆகாது. என்னை? நோய் தீர்தற்கு எதுவாயின வெல்லாம் மருந்தெனப்படுமாதலினென்க. இதனை "உற்றவன் தீர்ப்பான் மருந்து உனைச்செல்வானென்று அப்பால் நாற்கூற்றே மருந்து" என்னுந்திருக்குறளாலறிக. (நாக)

மலமாகிய ஆணவ கன்மங்களை பிறிதொரு மலமாகிய மாயையினால் தீர்ப்பதற்கு உவமை கூறுகின்றது.

எழுமுடல் கரண மாதி யிவைமல மலம லத்தாற்
கழுவுவ னென்று சொன்ன காரண மென்னை யென்னிற்
செழுநவை யறுவை சாணி யுவர்செறி விக்க முக்கை
முழுவதுங்கழிப்பன் மாயை கொடுமலமாழிப்பன்முன்னோன்.

(கொ-டு) செழுநவை அறுவை அழுக்கை சாணி உவர் செறிவித்து எனவும் முன்னோன் ஒழிப்பன் எனவுங் கூட்டுக.

(பொ-ரை) உண்டாகின்ற தனுகரண முதலியன யாவும் மாயாமல காரியமாகவும் ஆணவகன்ம மலங்களை இம்மாயாமலத்தால் நீக்குவனென்று கூறிய காரணம் என்னையோ வெனின், அழுக்குடைய மெல்லிய ஆடையின் அழுக்கை சாணி உவர்மண் முதலிய பிறிதோர் அழுக்கைக்கொண்டு வண்ணான் முழுவதும் நீக்குதல்போல மாயாகாரியமாகிய உடல்முதலியவற்றை மருந்தாகக் கொண்டு, ஏனை ஆணவகன்ம மலங்களாகிய நோயை முதல்வன் தீர்ப்பன் (எ...று)

சிவஞான சித்தியார் சுபக்கம்.

தனு என்பது உடல், கரணமென்பது செனி முதலிய இந்திரியங்களும் மனமுதலிய அந்தக்கரணங்களுமாம். புவனமென்பது உலகம். போகம் என்பது உலகத்திலுள்ள பொருள்கள். (நஉ)

மாயையி னிலக்கணங் கூறுகின்றது.

நித்தமா யருவா யேக நிலையதா யுலகத் திற்கோர்
விதுதமா யசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தநுகர ணமுமு யிர்க்காய்
வைத்தலீதார் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யு மன்றே.

(கொ-டு) மாயை நித்தமாய் எனக் கூட்டுக.

(பொ-ரை) உலகிற்குமுதற்காரணமெனப்படும் அசுத்தமாயையின் இலக்கணம் யாதெனின், மாயையாவது உற்பத்தியில்லாததால் நித்தமாகியும் கண்ணுக்குத்தோற்றுமையால் அருவமாகியும் அழிதலில்லாமையால் ஒன்றுகியும் உலகம் உண்டாவதற்கு ஓர் காரணமாதலால் வித்தாகியும் அறிவில்லாததால் சடமாகியும் எவ்விடத்தும் ஆன்மாக்களுக்கு தனுகரண புவன போகங்களைக் கொடுத்தலால் வியாபகமாயும் முதல்வன் வியாபகத்துள் அடங்கலால் அவனுக்கு ஓர் வைப்புச் சத்தியாகியும் புவனமும் போகமும் தனுவும் காரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிதலால் ஒரு மலமாகியும் விபரீத உணர்வினைச் செய்தலால் மயக்கமாகியும் உள்ள இலக்கணங்களை உடையதாம் (எ...று)

ஒன்றுயுள்ளது அழியாதென்ற இதனால் பலவாகிய ஆன்மா அழியுமோ எனின், பலவாயும் சித்தாயுமிருத்தலால் அழியாதென்க. ஆகவே பலவாயும் சடமாயும் உள்ளன அழியுமென்றும் ஒன்றுயும் சடமாயுமுள்ளது அழியாதென்றும் சித்து ஒன்றுயினும் பலவாயினும் அழியாதென்றும் அறிக. (நங)

மாயையினின்று கால தத்துவம் தோன்றுமெனவும் அதனியல்பும் கூறுகின்றது.

மாயையிற் கால மோடு நியதியின் கலாதி தோன்று
மாயவக் கால மூன்று யாக்கியு மனித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாங் காலசங் கையினைப் பண்ணி
நாயக னுணை யாலே நடத்திடுஞ் சகத்தை யெல்லாம்

(கொ-டு) ஆய அக்காலம் நாயகன் ஆணையாலே மூன்றாய் ஆக்கியும் அளித்தும் போக்கி(யும்) காயமோடு உலகுக்கெல்லாம் காலசங்கையினைப் பண்ணி சகத்தை யெல்லாம் நடத்திடும்.

(பொ-ரை) அத்தன்மைத்தாகிய அசுத்தமாயையினின்றும் காலதத்துவமும் நியதி தத்துவம் கலாதத்துவம் முதலியனவும் முறையே தோன்றுவனவாம். அவற்றுள் ஒன்றாகிய கால தத்துவமாவது முதல்வன் ஆணையால் செல்லுங் காலம், நிகழ்காலம், வருங்காலமென முத்திறப்படும். அக்காலம் சிருட்டிதிதி சங்காரமென்னும் முத்தொழிலை அடைவதாகிய உடலும் உலகுமாகிய காரியப் பிரபஞ்ச மனைத்தையும் காலவரையறைக்குட்படுத்தி உலகத்தை எல்லாம் கண் மத்தளவில் நடத்திநிற்கும். (எ...று) (நிச)

அவ்வசுத்தமாயையினின்று கால தத்துவத்தின் பின்னர் நியதி தத்துவமும் கலா தத்துவமும் தோன்றுமெனவும், அக்கலையில் வித்தைதத்துவம் தோன்றுமெனவும், அவற்றினியல்புங் கூறுகின்றது.

நியதிபின் றோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கு
மயர்விலாக் கலைபின் றோன்றி யாணவ மொதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
யுயர்கலை யதனிற் றோன்றி யறிவினை யுதிக்கப் பண்ணும்.

(கொ-டு) பின் நியதி தோன்றி கன்ம நிச்சயம் பண்ணிநிற்கும் பின் அயர்வு இலாக்கலை தோன்றி ஆணவம் சிறிதே ஒதுக்கி சித்தின் செயல் புரிகிரியா சத்தி தெரிவிக்கும் உயர்கலை யதனில் வித்தைதோன்றி அறிவினை(ச்சிறிதே) உதிக்கப்பண்ணும்.

(பொ - ரை) அக்கலா தத்துவத்தின் பின்னர் அம்மாயையினின்றும் நியதி தத்துவம் தோன்றும். அந்நியதி அவரவர் செய்த கன்மம் அவரவரே அனுபவிக்குமாறு முதல்வன் ஆணையால் நியமிக்கும். அதன்பின் அம்மாயையினின்றே அயர்ச்சியில்லாத கலா தத்துவம் தோன்றி ஆணவமாகிய மறைப்பைச் சிறிது நீக்கி ஆன்மாவின் தொழில் செய்யுங் கிரியா சத்தியைவிளக்கி முதல்வன் ஆணையால் வினைக்கீடாகவரும் போகத்தில் செலுத்திநிற்கும். அக்கலா தத்துவத்தினின்றும் வித்தியா தத்துவம் தோன்றி அவ்வான்மாவினது அறிவினைச் சிறிது விளக்கி முதல்வன் ஆணையால் அப்போகத்தின்கட்செலுத்தி நிற்கும். ().

வித்தையினின்று அராக தத்துவந்தோன்றுமெனவும் அதனியல்பும் காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்தினையும் கூடிய உயிர் புருட தத்துவமெனவுங் கூறுகின்றது.

விச்சையி னாகந் தோன்றி வினைவழி போகத் தின்க
ணிச்சையைப் பண்ணி நிற்குந் தொழிலறி விச்சை மூன்றும்
வைச்சபோ தித்சா ஞானக் கிரியைமுன் மருவி யான்மா
நிச்சயம் புருட னாகிப் பொதுமையி னிற்ப னன்றே.

(கொ.டு) விச்சையின் ஆகம் தோன்றி இச்சையை வினைவழி போகத் தின்கண் பண்ணி நிற்கும் தொழில் அறிவு இச்சை மூன்றும் வைச்சபோது ஆன்மா இச்சா ஞாகக்கிரியையை முன் பொதுமையின் மருவி நிச்சயம் புருட னாகி நிற்பன் அன்றே.

(பொ - ரை) அவ்வித்தையினின்றும் அராக தத்துவந்தோன்றி ஆன்மாவினது இச்சாசத்தியை விளக்கி வினைக்கீடாக வரும் அப்போகத்தில் முதல்வன் ஆணையால் ஆன்மாவைச்செலுத்திநிற்கும். இவ்வாறு கலாவித்தை அராகம் முதலிய மூன்றுந் தொழில் அறிவு இச்சை முதலிய மூன்றனையும் விளக்கிய விடத்துக் கன்மத்தை வரை யறுத்தல் செய்யுங்காலமும் நியமித்தல் செய்யும் நியதியும் உளப்பட ஐந்து தத்துவங்களாகிய சட்டையோடு கூடிய உயிர் இச்சா ஞானக்கிரியை மூன்றனையும் சிறிது பொதுவகையால் பொருந்திநிற்கும். அவ்வுயிரே நிச்சயமாகிய புருட தத்துவமெனப் பெயர் பெற்று அப்போகத்தில் முதல்வன் ஆணையால் பற்றுச்செய்து நிற்கும். (எ...று) (நிசு)

மேற்கூறிய கலா தத்துவத்தினின்று மூலப்பிரகிருதியும் அதினின்று குண தத்துவமுந் தோன்றுமெனவும் குண தத்துவத்தின் இயல்புங் கூறுகின்றது.

வருங்குண வடிவாய் மூலப் பிரகிருதி கலையிற் றோன்றித்
தருங்குண மூன்று யொன்றிற் றுன்மூன்றுய் மும்மூன் றுகு
மிருங்குண ரூப மாகி யினைந்திடு மெங்கு மான்மாப்
பெருங்குண வடிவாய்ப் போக சாதனம் பெந்த மாமே.

(கொ-டு) கலையின் மூலப்பிரகிருதி வரும் குணவடிவாய்த் தோன்றி தருங்குணம் மூன்றுய் ஒன்றின் தான் மூன்றுய் மும் மூன்றுகும் போக சாதனம் பெருங்குணவடிவாய்ப் பெந்தமாமே எங்கும் ஆன்மா இருங்குண ரூபமாகி

(பொ - ரை) அசுத்தமாயையினின்றும் மேற்கூறியவாறு கால முதலிய தத்துவங்கள் தோன்றியபின்னர் அத்தத்துவங்களுள் ஒன்றாகிய கலா தத்துவத்தினின்றும் குணங்கள் அடங்கியிருக்கின்ற மூலப்பிரகிருதி முதல்வன்

ஆணையாற்றோன்றும். அம்மூலப்பிரகிருதியினின்றும் சாத்துவிகம் இராசதம் தாமதமென்னும் மூவகையான குண தத்துவந்தோன்றும். அக்குணம் ஒவ்வொன்றும் முத்திறப்பட்டு ஒன்பது வகையாம். அக்குண தத்துவத்தில் போகத்துக்குச் சாதகமாகிய புத்தி முதலிய தத்துவங்கள் தோன்றி அத்தத்துவங்களெல்லாம் குணவடிவமாகவே முதல்வன் ஆணையால் உயிரைப் பந்திக்கும். அதனால் போகம் அனுபவிக்கும் இடம் எல்லாம் உயிரும் பெரிய அக்குண ரூபமாகிற்கும். (எ...று)

சாத்துவிக குணமானது பொறுமையையும் மன உறுதியையும் மனதின் சூட்சுமத்தையும் தன்பத்திலும் சந்தோஷமாயிருக்குந் தன்மையையும் மனம் வாக்குக்காயம் மூன்றும் கபடமின்றி ஒத்திருக்குந் தன்மையையும் நல்ல உத்தியோகத்தையும் பெற்றதுகொண்டே மகிழுந்தன்மையையும் மோட்ச இச்சையையும் இந்திரிய அந்தக் காரணங்களின் அடக்கத்தையும் சகல சீவர்களிடத்து இரக்கத்தையும் பிருதுவான உணர்வையும் உண்டுபண்ணும்.

இராசத குணமானது இலௌகிகப் பிரவிருத்தியையும் கோபமுதலிய குரூரத்தன்மையையும் யானெனதென்னும் அபிமானத்தையும் வஞ்சனையையும் இரக்கமில்லாமையையும் போகத்தின் கண் இச்சையையும் டம்பநடையையும் துக்கத்தையும் உண்டுபண்ணும்.

தாமத குணமானது ஒன்றிலும் திருப்தி இல்லாமையையும் உற்சாகம் இன்மையையும் ஈனப்பிரவிருத்தியையும் கோட்சொல்லுகையையும் அசுத்த உணர்வையும் அதிக நித்திரையையும் கர்வத்தையும் சோம்பலையும் பிறருடைய மதிப்பைக் குறைக்க எண்ணுகலையும் அறிவில்லாமையையும் மோகத்தையும் உண்டுபண்ணும். ஒவ்வொன்றும் முத்திறப்படுதலாவது ஒரு குணம் மேற்பட்டிருக்குங்கால் ஏனைய இரண்டு குணங்கள் அடங்கித்தோன்றுதல். தோன்றுங்கால் சாத்துவிகத்தில் சாத்துவிகம் இராசதம் தாமதம் இராசதத்தில் இராசதம் தாமதம் சாத்துவிகம் தாமதத்தில் தாமதம் சாத்துவிகம் இராசதமென ஒன்பது வகைப்படும். (ருள)

மூலப்பிரகிருதியினின்று குணதத்துவமேயன்றி அஞ்ஞானமுந் தோன்றுமெனவும் குணதத்துவத்தினின்றுபுத்திதத்துவந்தோன்றுமெனவும் அவற்றின் இயல்பும் கூறுகின்றது.

சித்தமா மவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்தற் றோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரிணையும் டேணி நிற்கும்.

(கொ-டு) வரும் வத்து நிச்சயமும் பண்ணி எனக்கூட்டுக.

(பொ - ரை) குண தத்துவத்திற்குக் காரணமெனச் சித்திக்கப்பட்ட தாகிய மூலப்பிரகிருதியானது அக்குண தத்துவத்தைத் தோற்றுவித்தலேயன்றி ஒன்றைப்பிறிதொன்றாக உணரும் அவிச்சையாகிய அஞ்ஞானத்தினையுந் தோற் றுவிக்கும். அதன்பின் அந்தக்குண தத்துவத்தினின்றும் புத்தி தத்துவந்தோன் றும். அப்புத்தி தத்துவம் உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களைப் பொருந்தி அப்புண்ணிய பாவத்திற்கிடாக வந்த பொருளை இன்னதென நிச்சயித்து நிச்ச யித்தபின்னர் அப்பொருளை சுகதுக்கமோக வடிவாய் வேறு படுத்தி, வேறு படுத்தியவிடத்து அவ்வேறு பாட்டிற்கேற்ப அறிவையுந் தொழிலையும் பொரு ந்தி நிற்கும். (எ-று)

"சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதாய் ஆங்காரம் புந்தியாயாய் ந்து மனமாகி" யென்னுஞ் சிவஞான போதத் திருவெண்பாவால்சித் தம் மனம் அகங்காரம் புத்தியாகிய இவை முறையே ஒன்றன்பின் ஒன்றுப்த் தொழிற்படுமென்று கூறியிருக்கவும் இவ்விடத்து புத் தியை முன்னதாகக் கூறி, வருஞ் செய்யுட்களில் அகங்காரம் மனம் சித்தம் முறையே ஒன்றன்பின் ஒன்றுப்த் தோன்றுமெனக் கூறுதல் முரணுதோனின், முரணுது. என்னை? இவ்விடத்துத் தோற்று முறையுஞ் சிவஞான போதத்தில் தொழிற்படுமுறையுங் கூறியதற்கு லென்க. இது எதுபோலனின்; ஓர் அரசன் மாளிகையைக் கூறு மிடத்து அகத்துக்கொலுவீற்றிருக்கும் மண்டபமுதல் வெளிவாயல் வரை ஒவ்வொன்றும் உள்ளனவாகக் கூறுதலும் அம்மாளிகைக்குச் செல்லுங்கால்வெளிவாயல் முதலாகஒவ்வொன்றுப்க் கடந்து செல் லுதலும் போலவாம். (நுஅ)

புத்தி தத்துவத்தினின்று அகங்கார தத்துவந்தோன்றுமென வும் அதன் இயல்பும் அது முத்திறப்படுமெனவுங் கூறுகின்றது.

ஆங்காரம் புத்தி யின்க ணுதித்தகந் தைக்கு வித்தா
யீங்கார்தா னென்னு டொப்பா ரென்றிபா னென்ன தென்னு

நீங்காதே நிற்குந் தானு மூன்றதாய் நிகழு மென்பார்
பாங்கார்பூ தாதி வைகா ரிகந்தைச தந்தா னென்றே.

(கொ-டு) புத்தியின்கண் ஆங்காரம் உதித்து ஈங்கு ஆர்தான் என்னைடு ஒப்பார் என்று அகந்தைக்கு வித்தாய் யான் என்னது என்றே நீங்காதே நிற்கும் தானும் பாங்கு ஆர்பூதாதி வைகாரிகம் தைசதம் தான் என்றே மூன்றதாய் நிகழும் என்பர்.

(பொ - ரை) அப்புத்தி தத்துவத்தினின்றும் அகங்கார தத்துவந்தான் றும். அவ்வகங்காரம் இவ்விடத்து என்னைடொப்பவர் ஒருவருமில்லை என அகந்தைப்படுவதற்குக் காரணமாய் உடலை யானென்றும் மற்றப்பொருள்களை என்னதென்றும் அபிமானித்து உயிரோடு வேற்றுமை இன்றி நிற்கும். அவ் வாறு நிற்கும் அகங்காரம் தனக்கு மூலமாகிய குண தத்துவத்தின் வேற்றுமை பற்றி தாமதகுணத்தின் தோற்றமான பூதாதி அகங்காரம், இராசதகுணத்தின் தோற்றமான வைகாரி அகங்காரம், சத்துவகுணத்தின் தோற்றமான தைசத அகங்காரமென்று முத்திறப்படுமென்பர். (எ...று) (நுகூ)

தைசத அகங்காரத்தினின்று மனந்தான்றி அம்மனம் சித்த ரூபமாய் நிற்குமெனவும், அவற்றின் இயல்பும் அவ்வகங்காரத்தில் மனத்தின் பின்னை ஞானேந்திரியமும் வைகாரி அகங்காரத்தில் கன்மேந்திரியமுந் தோன்றுமெனவுங்கூறுகின்றது.

மனமது தைச தத்தின் வந்தொரு பொருளை முந்தி
நினைவதுஞ் செய்தங் கைய நிலைமையி னிற்கு மாங்கே
யினமலி சோத்தி ராதி கன்மவிந் திரிய மெல்லா
முனமுறை செய்த வைகா ரிகந்தரு மென்பர் முன்னோர்.

(கொ-டு) தைசதத்தின் மனமது வந்து முந்தி ஒருபொருளை நினைவது செய்தும் அங்கு ஐயநிலைமையில் நிற்கும் இனம் மலி சோத்தி ராதி ஆங்கே (தோன்றும்) முனம் உரைசெய்த வைகாரிகம் கன்ம இந்திரியம் எல்லாம் தரும் என்பர் முன்னோர்.

(பொ - ரை) அவ்வகங்கார மூன்றனுள்ளே தைசத அகங்காரத்தினின்று மனமானது தோன்றும். அம்மனம் எதிர்ப்பட்டதொரு பொருளைச் சித்தரூப மாய் நின்று அப்பொருளின் உண்மை அறியாமல் பிண்டமாக அறிந்து சிந்திக் கும். அதுவன்றி அம்மனமே அவ்வாறு சிந்தித்த பின்னர் அப்பொருளின் கண் அதுவோ இதுவோ என்று சந்தேகித்து நிற்கும். இவ்வாறு சந்தேகித்து நிற்றலால் மனமென்றும் சிந்தித்து நிற்றலால் சித்தமென்றும் மனம் இரு

திறப்படுமாறு அறிக. மனந்தோன்றியபின்னர் உணரும் வகையில் அம்மனத் திற்கின்மாகிய ஞானேந்திரியங்கள் அத்தைசத அகங்காரத்தினின்று முதல்வன் ஆணையாற்றோன்றும். முற்கூறியவனை வைகாரியகங்காரத்தினின்று கன்மேந் திரியமைந்தும் முதல்வன் ஆணையால் தோன்றும் என்பர் முன்னோர். (எ-று)

ஞானேந்திரியங்களாவன இவை என்றும் அவற்றின் குணங் கள் இவை யென்றுங் கூறுகின்றது.

நற்செவி துவக்குக் கண்ணு நாசியைந் தினையு நல்லோர்
புத்தியிந் திரிய மென்று புகன்றன ரிவைத மக்குச்
சத்தநற் பரிச ரூப ரிரதகந் தங்க ளைந்தும்
வைத்தனர் விடய மாக வடைவினின் மருவு மென்றே.

(கொ.டு) நற்செவி துவக்குக் கண் நா நாசி ஐந்தினையும் புத்தியிந்திரியம் என்று நல்லோர் புகன்றனர் இவைதமக்கு விடயமாக அடைவினில் சத்தம் கன்பரிசரூப ரிரத கந்தங்கள் ஐந்தும் மருவு மென்றே வைத்தனர்.

(பொ - ரை) அவ்விருவகை இந்திரியங்களுள் நன்மையாகிய செவியும் உடலுங் கண்ணும் நாக்கும் நாசியும் ஆகிய ஐந்தினையும் ஞானேந்திரியங்க ளென்று நல்லோர் மொழிந்தனர். அறியுந்தன்மையால் ஞானேந்திரியமெனப் பெயராயிற்று. அவ்விந்திரியங்கள் ஐந்திற்கும் முறையே சப்தமும் பரிசமும் ரூபமும் இரதமும் கந்தமும் குணமாகப் பொருந்து மென்றுவைத்தனர். (எ-று)

கன்மேந்திரியங்களிவை என்றும் அவற்றின் தொழில்கள் இவை யென்றும் கூறுகின்றது.

வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்த மைந்து
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்க ளெனநி னைந்தே
யாக்கிய வசன கமன தானமும் விசர்க்கா னந்த
மூக்கமா மைந்து மைந்தின் மொழிலென வோதி னரே.

(கொ-டு) வாக்கொடு பாதம் பாணி பாயுவோ டுபத்தமைந்தும் கன் மேந் திரியங்களென முன்னே நினைந்து நீக்கினர் ஐந்தின் தொழில் ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்கம் ஆனந்தம் ஊக்கம் ஆர் ஐந்தும் என ஓதினரே.

(பொ-ரை) கன்மேந்திரியங்களாவன—வாக்கும் பாதமும் கையும் மலவி சர்க்கஞ் செய்யும் பாயுவும் சலவிசர்க்கஞ் செய்யும் உபத்தமு மென்ன ஐந்தாம். இவ்வைந்தும் தொழில் செய்யுங் கருவியா தலால் ஞானேந்திரியங்களின் வேறாக

கன்மேந்திரியங்களென முன்பே கருதி வைத்தனர். இவ்வைந்தின் ஒழில்கள் முறையே வசனமும் நடையும் கொடையும் மல விசர்க்கமும் ஆனந்தமும்மாகிய வலிமை பெற்ற ஐந்துமாமென மொழிந்தனர். (எ—று) (சூஉ)

உயிர்க்கு ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் புறக்கருவியும் மன முதலிய நான்கும் அகப்புறக் கருவியும் கலை முதலியன அகக் கருவியுமாம் முறைமை கூறுகின்றது.

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ் கருவீ யாகு
மோயாத மனாதி காயத் துணருமுட் கருவி யாகு
மாய்வார்கட் காகா மாதி யவற்றினுட் கருவி யென்பர்
மாயாடன் வயிற்றி வற்றூற் றுடக்குண்டு வாழு மான்மா.

(கெ-டு) அராகம் ஆதி ஆய்வார்கட்கு எனவும் ஆன்மா துடக்குண்டு வாழு மெனவும் கூட்டுக.

(பொ—ரை) ஆன்மாவின் அறிவு தொழில்களை விளக்குவதற்கு இந்திரியம் அந்தக்காணம் கலாதி என்னும்முத்திறத்துள் ஒன்றுமே போதாதோவெனின், போதாது. எதனாலெனின், ஒரு பொருளை அறிய வேண்டுமேவார்க்கு கன்மேந்திரிய ஞானேந்திரியங்களாகிய அவ்விருவகை இந்திரியங்களும் புறத்துத்தோன்றி அறிந்து தொழிற்படும் புறக்கருவிகளாம். ஒழிவில்லாத மனமுதலிய காணங்கள் அவ்விந்திரியங்களால் அறியப்பட்ட பொருளை உடம்பின் அகத்தே நின்று பகுத்தறியும் உட்கருவிகளாகும். எனைக்கலாதிகளாவன—ஆய்வார்க்கு அவ்வந்தக் காணங்களால் அறியப்பட்ட பொருள்களில் விருப்பு வெறுப்புற்று ஆன்மாவின் இச்சாஞானக்கிரியாசத்தி பொருந்தச் செய்தலின் உள்ளந்தக்கரணங்களாகிய கருவிகளாம் என்பர். இவ்வுள்ளத்துக் காணங்களை நோக்க மன முதலிய அந்தக் காணம் புறமாகவும் இந்திரியங்களை நோக்க அகமாகவும் இருத்தலால் அம்மன முதலியவற்றை அகப்புறக் கருவி என்றும் கலை முதலியவற்றை அகக்கருவி என்றுங் கூறுவர். இவ்வாறு இவை தம்முள் வேற்றுமையாதலால் மாயையின் உண்டாகிய இம்முத்திறக் கருவிகளாலும் உயிர் கட்டுப்பட்டு நிற்கும். (எ—று) (சூஉ)

பூதாதி அகங்காரத்தினின்று சப்தாதி தன் மாதத்திரை ஐந்தும் தோன்று மெனவும் அவற்றினியல்பும் இத்தன் மாத்திரை ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆகி எட்டும் புரியட்டக சரீரமெனவுங் கூறுகின்றது.

ஓசைசற் பரிச ரூப விரதகந் தங்க ளென்று
பேசுமாத் திரைக ளைந்தும் பிறக்கும்பூ தாதி கத்தி
னேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனுற் காண்டு
மாசைசேர் மனுதி தன்மாத் திரைபுரி யட்ட கந்தான்.

(கொ-டு) பூதாதிகத்தின் ஓசை சற்பரிசமெனவும் தன்மாத்திரை ஆசை சேர் மனுதி புரியட்டகந்தான் எனவும் கூட்டுக.

(பொ-ரை) அவ்விருவகை யிந்திரியங்களுந் தோன்றிய பின்னர் ஏனைப் பூதாதி அகங்காரத்தினின்று சப்தமும் பரிசமும் உருவமும் இரதமும் கந்த முமெனக் கூறப்படும் தன் மாத்திரைகளைந்தும் தோன்றும். மேற்கூறிய விருப்பப் பெற்ற இந்திரியங்கள் தத்தம் விடயங்களை விடயிக்கு மாறு முதல்வன் ஆணையால் அத் தன்மாத்திரைகள் ஊக்கஞ் செய்வித்து நிற்கும். இத்தன் மாத்திரைகளைந்தும் இச்சா ரூபமாகிய மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் ஆக எட்டும் புரியட்டகவுடம்பாம். (எ...று)

மேல் சூக-வது செய்யுளில் ஞானேந்திரியங்களின் குணங்களாகக் கூறிய சத்தாதி வேறு. ஈண்டுக்கூறிய சத்தாதி வேறு. அது போக ரூபமாய் புறத்தே யிருக்கும். இது தேக ரூபமாய் அகத்தே இருக்கும். அவ்வாறிருத்தல் எவ்வாறெனின், சப்தம் அகத்தில் கேட்குந் தன்மையான அறிவாயும், புறத்தில் கேட்கப்படும் தன்மையான ஒலியாயுமிருக்கும். இவ்வாறே ஏனையவும் உய்த்துணர்ந்து கொள்க. கேட்பது தன்னளவிற்றாயும் கேட்கப்படுவது பொருள் அளவிற்றாயு மிருக்குமாதலின் கேட்பதற்குத் தன்மாத்திரை என்றும் கேட்கப்படுவதற்கு விடயமென்றும் பெயராயிற்று. செய்யுளில் "மனுதிதன் மாத்திரை" என்றதும் அகத்திலிருத்தல் உணர்த்துதற் பொருட்டு. (சூசு)

தன் மாத்திரையினின்று ஆகாயமுதலிய ஐந்து பூதங்கள் தோன்றுமெனவும் அவற்றின் குணங்கள் ஒன்றற் கொன்று வற்றுமாயிருக்குமெனவும் இப்பூதங்களின் காரியங்கள் காத்துவிகங்களாகிய அங்கமாகவும் இப்பூதங்கள் அங்கியாகவு மிருக்குமெனவும் கூறு

சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்த முன்னைக்
கோற்றும்மான் வளிதீர்மண் டொடக்கியே யொன்றுக் கொன்றற்

கேற்றமா மோசை யாதி யிருங்குண மியைந்து நிற்கு
மாற்றவே விடய பூத,மங்காங்கி பாவத் தாமே.

(கொ-டு) சத்தம் முன்னைச்சாற்றிய பஞ்சதன்மாத்திரைகளின் வான்வளிதீ நீர் மண் தோற்றும் தொடக்கியே ஒன்றுக்கொன்று அங்கு எற்றமாம் ஓசை ஆதி யிருங்குணம் இயைந்து நிற்கும் பூதம் ஆற்றவே விடயம் அங்காங்கிபாவத் தாமே.

(பெர்—ரை) மேற்சத்த முதலியவாகக் கூறிய தன்மாத்திரைகள் ஐந்தனுள் சத்தத்தில் ஆகாயமும் பரிசத்தில் வாயுவும் ரூபத்தில் அக்கினியும் இரதத்தில் அப்புவும் கந்தத்தில் பிருதிவியுமாகிய தூல பூதம் ஐந்தும் தோன்றும். அப்பூதங்களுள் ஆகாயம் சப்தகுணத்தையும் வாயு சப்தபரிச குணங்களையும் அக்கினி சப்தபரிச ரூபகுணங்களையும் அப்பு சப்த பரிச ரூப இரத குணங்களையும் பிருதிவி சப்த பரிச ரூப இரத கந்த குணங்களையும் உடைத்தாய் நிற்கும். இவ்வைம் பெரும் பூதங்களும் தன்மாத்திரையோடு கூடி நின்று இந்திரியங்களைத் தொழிற்படுத்துவதற்கு இப்பூதங்களில் நின்று காரிய பூதங்களாகிய அறுபதுதாத்துவீகங்களும் தோன்றும். அத்தாத்துவிகம் அங்கமாகவும் இத்தூல பூதங்கள் அங்கியாகவும் நிற்கும் (எ—று)

காரிய பூதமென்பது தூல பூதத்தினின்றும் காரியப்படுகின்ற பஞ்சீகரண பூதங்களாம். பஞ்சீகரணமாவது ஒரு பூதத்தை இரண்டு பங்காக்கி ஒரு பாதி நிற்க மற்றப்பாதி ஒவ்வொன்றையும் நான்கு கூறுகச் செய்து ஒவ்வொரு நான்கு கூறையும் தன்யாதி நீங்கிய ஏனைய பாதியோடு கூட்டலாம். கூட்டவே பிருதிவியில் எலும்பு தசை மயிர் தோல் நரம்பு முதலானவையும் அப்புவில் மூத்திரம் ரத்தம் சிலேட்டுமம் வியர்வை சுக்கிலம் முதலானவையும் அக்கினியில் இருதய உஷ்ணம் அன்னபாகாதிகளைச் சீரணிக்கச் செய்கை நயனத்தில் சூடு தேகத்தில் சூடு பயித்தியம் முதலானவையும்வாயுவில் தசவாயுக்களும் ஆகாசத்தில் தசநாடிகளும் உண்டாம்.

தூல சரீரதத்துவங்களாகிய தாத்துவீகங்கள் சூக்கும சரீரதத்துவங்கள் போல ஆன்மாவுக்கு நிலைத்திருப்பதின்றி அழியுந் தன்மையுடையதாதலால் தாத்துவீகம் என்பப்பட்டது. தூல சரீரதத்துவம் அறுபதாவன:—

மேற் கூறியவாறு பிருதிவியில் உண்டான எலும்பு முதலிய ஐந்தும் அப்புவிலுண்டான மூத்திரம் முதலிய ஐந்தும் அக்கினியிலுண்டான இருதய உஷ்ண முதலிய ஐந்தும் வாயுவிலுண்டான பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்து வாயுக்களும் கிடத்தல், ஓடல், இருத்தல், நடத்தல், நிறுத்தல் என்னும் அவ்வாயுவின் கூறு ஐந்தும் ஆகாயத்திலுண்டான அத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, குகுதை, சங்கினி, சிகுவை, புருடன் என்னும் பத்துநாடிகளும், காமம், குரோதம், மதம், லோபம், மோகம் என்னும் அவ்வாகாயத்தின் கூறு ஐந்தும், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்னும் கன்மேந்திரியத்தின் தொழில் ஐந்தும், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்கு நான்கும் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் குணம் மூன்றும் சைதசதம், பூதாதி, வைகாரிகம் என்னும் அங்காரம் மூன்றும் ஆக அறுபதுமாம். வாக்கு நான்கும் சுத்த மாயாகாரியம் ஆயினும் தொழிற்படும் முறைபற்றி தூல பூதகாரிய மாய்க் கூறப்பட்டது. இவ்வாறே பிறவும் காண்க. (சூரு)

ஐந்து பூதங்களின் குணமும் தொழிலும் இவை எனக் கூறுகின்றது.

இரந்தர மாகி வான்று னிடங்கொடுத் திடுஞ்ச லித்துப்
பரந்தவை திரட்டுங் காற்றீச் சுட்டொன்று வித்தல் பண்ணுஞ்
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயு நீர்மண் டாதை
முரந்தருங் கடின மாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே.

(கொ-டு) வான்தான் இரந்தரமாகி இடங்கொடுத்திடும் கால் சலித்துப் பரந்தவை திரட்டும் தீசுடட்டு ஒன்றுவித்தல் பண்ணும் நீர் நிரந்தரம் குளிர்ந்து நின்று பதஞ்செய்யும்.

(பொ-ரை) மேற்கூறிய ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயமானது வெளியாகிய குணத்தையும் இடங்கொடுத்தலாகிய தொழிலையும் உடையதாம். வாயுவானது சலித்தலாகிய குணத்தையும் பரந்தவற்றைத் திரட்டுதலாகிய தொழிலையுடையதாம். அக்கினியானது சுடுதலாகிய குணத்தையும் எவற்றையும்

சுட்டு நீரூக்கும் தொழிலையும் உடையதாம். நீரானது இடைவிடாது குளிர் தலாகிய குணத்தையும் நனைத்தலாகிய தொழிலையு முடையதாம். மண்ணானது வலிமை தருதற்கேதுவாகிய கடினமான குணத்தையும் எவற்றையும் தாங்குத லாகிய தொழிலையுமுடையதாம் இவற்றினையறிவாயாக. (எ—று) (சுசு)

ஐந்து பூதங்களின் வடிவும் நிறமும் பீசாக்கரமும் இவை எனக் கூறுகின்றது.

மண்புன லனல்கால் வான்பால் வடிவுநாற் கோண மாகுந்
தண்பிறை மூன்று கோணந் தகுமறு கோணம் வட்டம்
வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூம வன்ன
மெண்டகு மெழுத்துத் தானும் லவரய வவ்வை மாமே.

(கொ-டு) மண்புனல் அனல்கால்வான் நாற்கோணம் தண்பிறை மூன்று கோணம் தகும் அறுகோணம் வட்டம் ஆகும் பால்வடிவு வண் பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமம் (பால்) வண்ணம் லவரய அவ்வுமாம் எண்தகும் எழுத்துத்தானுமே.

(பொ - ரை) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் அப்பூதங்கள் முறையே நாற்கோணமும், குளிர்ந்த பிறைபோலும் இருகோணமும் முக்கோ ணமும் தக்க அறுகோணமும் வட்டமுமாகிய ஐவகை வடிவுகளையும் முறையே வளப்பமாகிய பொன்மையும் வெண்மையும், செம்மையும், கருமையும், புகை மையும் ஆகிய ஐவகை நிறங்களையும் அவ்வாறு முறையே லகாரமும்,வகாரமும், ரகாரமும், யகாரமும், அகாரமும் ஆகிய ஐவகை பீசாக்கரங்களையும் உடைய னவாம். (எ...று) (சுஎ)

ஐந்து பூதங்களின் அடையாளங்களும் அதிதெய்வங்களும் இவை எனக்கூறி அவை நிவிர்த்தி முதலிய • பஞ்சகலேகட்டும் உள வெனக் கூறுகின்றது.

குறிசுள்வச் சிரத்தி ரேடு கோகந தஞ்சு வத்தி
யறுபுள்ளி யழுத,விந்து வதிதெய்வ மயன்மா லாதி
செறிபுக ழீச ரேடு சதாசிவம் பூத தெய்வ
நெறிதரு கலையைந் திற்கு நிகழ்த்துவ ரிந்த நீர்மை.

(கொ-டு) பூதம் வக்சிரத்திரேடு அயன் கோகநதம் மால் சுவத்தி ஆதி அறுபுள்ளி செறிபுகழ் ஈசன் அழுதவிந்து சதாசிவம் குறிகள் அதிதெய்வம் நெறிதருகலை ஐந்துக்கும் இந்த நீர்மை நிகழ்த்துவர்.

(பொ - ரை) முற்கூறிய ஐந்து பூதங்களுள் பிருதிவியானது வச்சிராயுதத்தை அடையாளமாகவும் பிரமாவை அதிதேவதையாகவும் உடைத்தாயிருக்கும். அப்புவானது தர்மரையை அடையாளமாகவும் விஷ்ணுவை அதிதேவதையாகவும் உடைத்தாயிருக்கும். அக்கினியானது இருதலை மேழியை அடையாளமாகவும் உருத்திரனை அதிதேவதையாகவும் உடைத்தாயிருக்கும். வாயுவானது அறுபுள்ளியை அடையாளமாகவும் மகேசுவரனை அதிதேவதையாகவும் உடைத்தாயிருக்கும். ஆகாசமானது அமிர்த விந்துவாகிய வட்டத்தை அடையாளமாகவும் சதாசிவதேவனை அதிதேவதையாகவும் உடைத்தாயிருக்கும். மந்திர முதலிய அத்துவாக்களை அடக்கி நிற்பதாகிய நிவிர்த்தி முதலிய ஐந்துகலைகட்கும் இவ்வடையாளங்களும் அதிதெய்வங்களும் உளவாமென்று பேரியோர் கூறுவர். (எ...று)

ஐந்து கலைகளாவன—நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தி அதீதை என்பனவாம். இவற்றை முன்னர் எட்டாஞ்சூத்திரத்தில் விரித்துக் கூறப்படுமாதலால் அவ்விடத்துக்காண்க. (சூ-அ)

மேல் முதற்சூத்திரம் அறுபத்தாறுவது செய்யுளிற்கூறிய தத்துவம் ஐந்தும் இச்சூத்திரத்திற்கூறிய தத்துவம் முப்பத்தொன்றும் ஆக தத்துவம் முப்பத்தாறும் மூவகை இயல்பை உடையனவெனக் கூறுகின்றது.

சுத்ததத் துவங்க ளென்று முன்னமே சொன்ன வைந்து
மித்தகை மையினி யம்பு மிவைமுப்பத் தொன்று மாகத்
தத்துவ முப்பத் தாறுஞ் சைதன்னி யங்க ளைந்து
சித்தசித் தான்மா வொன்று முப்பது மசித்தே செப்பில்.

(கொ-டு) முன்னமே சொன்ன சுத்ததத்துவங்களென்று ஐந்தும் இத்தகைமை யினியம்பும் இவை முப்பத்தொன்றும் ஆக முப்பத்தாறு தத்துவமாம் செப்பில் ஐந்து சைதன்னியங்கள் ஆன்மா ஒன்று சித்துஅசித்து முப்பதும் அசித்தே.

(பொ - ரை) மேலைச்சூத்திரத்துட்கூறிய சுத்த தத்துவங்கள் ஐந்தும் இச்சூத்திரத்துட்கூறிய தத்துவம் முப்பத்தொன்றும் ஆகத்தத்துவம் முப்பத்தாறும். சொல்லுமிடத்து இவற்றுள் சுத்த தத்துவமாகிய முன்னைய ஐந்தும் சடமாயினும் சிற்சத்திக்குச் சுதந்தர வடிவாதலின் சைதன்னியமென்று சொல்லப்படும். ஏனை முப்பத்தொன்றனுள் புருடதத்துவமாகிய ஒன்று சித்தையும்

அசித்தையுஞ்சார்ந்து அதனதன் வண்ணமாய் நிற்கும் உரிமை உடைமையிரல் சித் தசித்தெனப்படும். ஆஃதொழிந்த முப்பது தத்துவங்களும் சடமாதலால் அசித்தெனவேபடும். (எ...று) (சூ கூ)

. அம்முப்பத்தாறு தத்துவமுஞ் சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்த மென மூவகையாகவும் பிரோரககாண்டம் போககாண்டம் மோக்கிய காண்டமென மூன்று காண்டமாகவும் இருக்குமென்கூறுகின்றது.

ஐந்துசுத் தத்தின் கிழேழ் சுத்தாசுத் தம்ம சுத்தந்
தந்திடும் புமான்கீ ழெண்மூன் றுயதத் துவஞ்சீ வர்க்கு
வந்திடும் பிரோர காண்ட மருவுபோ கசயித் திரத்தோ
டந்தமி லணுக்க ளுக்குப் போக்கிய காண்ட மாமே.

(இகா-டீ) ஐந்து (சுத்தம்) சுத்தத்தின்கீழ் எழ் (தத்துவம்) சுத்தாசுத்தம் தந்திடும் புமான்கீழ் எண்மூன்று ய தத்துவம் அசுத்தம் சீவர்க்கு வந்திடும் பிரோர காண்டம் மருவுபோக சயித்திரத்தோடு அந்தம் இல் அணுக்களுக்குப் போக்கிய காண்டமாமே.

(பொ - ரை) இத்தத்துவம் முப்பத்தாறனுள் முற்கூறிய ஐந்து தத்துவமும் சுத்த தத்துவமாம். அதன்கீழான காலமுதலிய எழுதத்துவமும் சுத்தாசுத்த தத்துவமாம். புருடதத்துவத்தின் கீழான ஏனைய இருபத்துநாலு தத்துவமும் அசுத்த தத்துவமாம். இவைமுறையே சுத்தமாயையில் உண்டானதிரளும் அசுத்தமாயையில் உண்டானதிரளும் பிரகிருதிமாயையி லுண்டானதிரளும் இவ்வாறு வகுக்கப்பட்டனவாம். அசுத்தமாயையானது சுத்தமாயைக்கும் பிரகிருதிமாயைக்கும் நடுவாய் நின்றமையால சுத்தா சுத்தமெனப்பட்டது. பிரகிருதிமாயை தூலசூக்கும உடல்களுக்கு ஆதாரமாய் நின்றமையால் அசுத்த மெனப்பட்டது. சுத்த தத்துவம் ஐந்தும் கலாதி தத்துவங்களைப் போகத்தில் செலுத்துவதற்கு ஏதுவாய் நிற்குமாதலால் பிரோரக காண்டமாம். பிரோரகம் - செலுத்துதல். சுத்தா சுத்த தத்துவம் எழும் உயிர்களுக்குப் போகங்களைத் தோற்றுவிக்குமாதலால் போகசயித்துரு காண்டமாம். சயித்துரு வென்பது உண்டுபண்ணுதல். அசுத்த தத்துவம் இருபத்துநாலும் உயிர்கள் போகங்களை அனுபவிப்பதற்கு ஏதுவாயிருக்குமாதலால் போக்கியகாண்டமாம். (எ...று) (எ0).

பிரபஞ்சம் அனைத்தும் தத்துவவடிவாய் தூலம் சூக்குமம் அதி சூக்குமமென முத்திறப்படுமெனவும் இத்தத்துவங்களைப் பொரு

ந்தும் அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்கள் அவ்வத்தத்துவப் பெயரைப் பெறுமெனவும் யாவையுந் தத்துவத்தில் வைத்துக்காண வேண்டுமெனவுங் கூறுகின்றது.

தத்துவ ரூப மாகுந் தருமரு வுருவ மெல்லாந்
தத்துவந் தூல சூக்க பரங்களு மாகி நிற்குந்
தத்துவந் தன்னிற் சாரு மணுக்கள்சா தாக்கி யத்திற்
றத்துவ சத்தஞ் சாருஞ் சகலமுந் தத்து வங்காண்.

(கொ-டு) தரும் எல்லாம் அரு உருவம் தத்துவரூபமாகும்.

(பொ - ரை) மாயையினுலே தரப்பட்ட பிரபஞ்சமனைத்தும் அருவும், உருவும், அருவுருவுமென முத்திறப்படும். எவ்வாறெனில், பிரபஞ்சமெல்லாம் பஞ்சபூதத்திலடங்கும். அப்பஞ்சபூதத்துள் ஆகாயங்கண்ணுக்குப் புலப்படாமையால் அருவமாம். வாயுகண்ணுக்குப் புலப்படாமையாலும் பரிசித்தலாலும் அருவுருவமாம். அக்கினி, அப்பு, பிருதிவி மூன்றும் கண்ணுக்குப் புலப்படுவதால் உருவமாம். இப்பூதங்களின் காரியமாகிய பிரபஞ்ச மனைத்தையும் இவ்வாறேயறிக. இத்தன்மைத்தாய பிரபஞ்சமனைத்தும் தத்துவங்களுள் அடங்குதலால் தத்துவவடிவேயாம். தத்துவம் மூப்பத்தாறும் தூலதத்துவம், சூக்கும தத்துவம், அதிசூக்குமதத்துவமென முத்திறப்படும். எவ்வாறெனில், தத்துவங்களுக்குக் காரணமாகிய பிரகிருதிமாயை தூலம். அசுத்தமாயை சூக்குமம். சுத்தமாயை அதிசூக்குமம். இவற்றிற்ரேன்றும் தத்துவங்களும் அவ்வாறுகுமென அறிக. இனி ஒவ்வொரு மாயையிற் ரேன்றிய தத்துவங்களும், தூலம், சூக்குமம் அதிசூக்குமமென முத்திறப்படும். அவற்றையெல்லாம் இவ்விடத்தில் விரிப்பிற்பெருகும். விரிந்தநூலிற்காண்க. இத்தன்மையவாய தத்துவங்களைப் பொருந்திச் செலுத்துகின்ற அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்களும் அவ்வத்தத்துவப்பெயரைப் பெறும். ஆதலின் எல்லாப்பொருளையும் தத்துவங்களில் வைத்துக்காண்க. (எ...று)

தத்துவங்களைப்பொருந்திய தெய்வங்கள் அத்தத்துவப் பெயரைப் பெறுதல் எதுபோலவெனின், அரசசத்தியாகிய உத்தியோகத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் அவ்வப் பெயரைப் பெறுதல் போலாம். அணுபக்க மென்பது ஜீவவர்க்கம். சம்பு பக்க மென்பது பதிவர்க்கம். (எக)

தத்துவங்கள் ஒடுங்கு முறை இவ்வாறெனவும் ஒடுக்குங் கடவுள் இவரெனவுங் கூறுகின்றது.

தத்துவ மெண்மூன் றுஞ்சென் றுண்மதத் துவத்தொ டுங்கும்
வித்தையி னெடுங்கு மாறுஞ் சிவத்தினி னெடுங்கு மூன்றும்
நித்ததத் துவமிம் மூன்று மென்பர்க ளிரண்டு நின்ற
சுத்தமாஞ் சிவத்தொ டுங்குந் தோற்றமு மிதுபோ லாகும்.

(கொ-டு) ஆறும் வித்தையில் ஒடுங்கும் மூன்றும் சிவத்தினில் ஒடுங்கும் நின்ற இரண்டும் சுத்தமாஞ் சிவத்தினிலொடுங்கும் தோற்றமும் இதுபோ லாகும் இம்மூன்றும் நித்ததத்துவ மென்பர்கள்.

(பொ-ரை) இம் முப்பத்தாறு தத்துவங்களும் சங்கார காலத்து தத்தங் காரணங்களில் ஒடுங்கும். ஒடுங்கு மிடத்து நில முதல் மூலப் பிரகிருதியீறு கிய இருபத்து நான்கு தத்துவங்களும் சென்று சகலவர்க்கத்து ஆன்மாக்கட்கு அதி தெய்வமாகிய சதாசிவ மூர்த்தியானல் ஒடுங்கும். மூலப் பிரகிருதிக்கு மே லுள்ள ஆறு தத்துவமும் வித்தை யீசாகிய அனந்த தேவரால் ஒடுங்கும். சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம் ஆகிய மூன்று தத்துவமும் லய சிவனுல் ஒடுங் கும். ஏனைச் சுத்தி தத்துவம் சிவ தத்துவ மிரண்டும் சுத்த சிவனுல் ஒடுங்கும். புனர் உற்பவம் ஆங்காலும் அவ்வத் தத்துவங்கள் அவ்வவாற்றேன்றும். சுத்த சிவ னொருவனே தோற்றம் ஒடுக்க மில்லாத நித்தியன். லய சிவன், போக சிவ னுகிய அனந்த தேவர், அதிகார சிவமாகிய சதாசிவ மூர்த்தி யென்னும் மூவ ரையும் அவ்வாறு நித்தியரென்பாருமுளர். அஃது உபசாரமே. (எ...று) (எஉ)

மூன்றாம் அதிகரணம் முடிந்தது.

நான்காம் அதிகரணம்.

இவற்றின் றன்மை தனக்கெய்தலின்றித் தானே நிலவுசீர் அமலனுகி ஒளியாய் ஓங்கி நின்றனன் நீங்கா தெங்கும் மென்பது.

இவ் வதிகரணம் முக் கூற்றை உடையது. அவற்றுள் முதற் கூறு "நிலவுசீர் அமலனுகி என்பது" இரண்டாங் கூறு "நின்றன னீங்கா தெங்கு மென்பது" மூன்றுங்கூறு "இவற்றின்றன்மை தனக் கெய்த லின்று" என்பது. இவை முறையே முன்னர் விரித்துக் கூறப்படுகின்றன.

முக்குற்றப் புறச் சமயத் தெய்வங்கள் பிரகிருதி மாயா தத்து வம், அசுத்த மாயா தத்துவங்களில் நிலை பெறு மெனவும் அகச்சம

யத் தெய்வமாகிய லயபோக அதிகார சிவபேதங்கள் சுத்த மாயா தத்துவத்தில் நிலை பெறு மெனவும் சுத்த சிவம் இம் மூப்பத்தாறை யுங் கடந்து நிற்கு மெனவும் அமலனுதலை விளக்கிக் கூறுகின்றது.

மொய்தரு பூத மாதி மோகினி யந்த மாகப்
பொய்தரு சமய மெல்லாம் புக்குநின் றிடும்பு கன்று
மெய்தரு சைவ மாதி யிருமூன்றும் வித்தை யாதி
யெய்துதத் துவங்க ளேயு மொன்றுமின் றெம்மி றைக்கே.

(கொ-டு) பொய்தரு சமய மெல்லாம் மொய்தரு பூதமாதி எனவும் எம்மிறைக்கு ஒன்று மின்றே எனவுங்கூட்டுக. சமய மென்பது சமயத் தெய்வங்

(பொ-ரை) பொய்ம்மை பெற்ற சாருவாக முதல் ஐக்கியவாத சைவமீறுகிய புறப்புறச் சமயமும் புறச் சமயமும் அகப்புறச் சமயமுமென்னும் மூக்கூற்றுச் சமயத் தெய்வங்க ளெல்லாம் நெருங்கிய பூத முதல் அசுத்த மாயாதத்துவமீறுக ஒவ்வொரு தத்துவங்களில் நிலை பெறும். சிவாகமங்களுட் கூறப்படும் ஏமன், அனேகன், இருள், கருமம், மாயை இரண்டு என்னும் ஆறு பொருளின் உண்மைத் தன்மையை விளக்குகின்ற சைவ மெனப்படும் தலையாகிய அறுவகைச் சமயத் தெய்வமாய் நின்ற அதிகார சிவம், போக சிவம், லய சிவம் என்னும் சிவபேதங்கள் சுத்த வித்தை முதலிய சுத்த தத்துவம் ஐந்துள் ஒவ்வொன்றில் நிலை பெறும். சித்தாந்த சைவத் தெய்வமாகிய எம்முடைய சுத்த சிவம் இம்மூப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கும். (எ...று)

நீங்காது நிற்றலை மூன்று செய்யுளாற் கூறத் தொடங்கி சுத்த சிவனே சுத்தமாயா தத்துவங்களில் ஒன்பது பேதமாய் நின்று தொழிற் செய்வ னெனக் கூறுகின்றது.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றன் மாலய னென்றி னென்றுப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்று
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

(கொ-டு) ஏகநாதனே சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன் உவந்தருள் உருத்திரன்றன் மாலயன் ஒன்றினென்று பவந்தரும் இங்கு நால் அருவம் நால் உருவம் ஒன்று உபயமாம் நவந்தரு பேதம் நடிப்பனென்பர்.

(பொ-ரை) அங்ஙனம் ஒன்று மின்றி நிற்கும் எம் இறைவனே ஒவ்வொரு தத்துவங்களில் நின்று கொண்டு தத்தம் தொழில்களைச் செய்யும் முறைமையில் சிவ மெனவும் சத்தி எனவும் நாத மெனவும் விந்து வெனவும் சதாசிவனெனவும் மகேசனெனவும் உருத்திர னெனவும் விட்டுணு எனவும் பிரமனெனவும் ஒன்றின் ஒன்றுகத் தோன்றி ஒன்பது பேதமாவன். அப்பேதங்களுள் சிவம், சத்தி, நாதம், விந்துவாகிய நான்கும் இறைவனுக்கு அருவத் திருமேனியாம். மகேசன், உருத்திரன், விட்டுணு, பிரமனாகிய நான்கும் உருவத் திருமேனியாம். சதாசிவம் அருவுருவத் திருமேனியாம். அருவம் உருவம் அருவுருவ மென்னும் இம் முத்திறத்து ஒன்பது பேதத்தினும் இறைவன் வேற்றுமை யின்றி நின்று அவ்வத் தொழில்களைச் செய்வ னென்பர். (எ...று)

இவ் வொன்பது பேதத்துள் சத்தி விந்து வென்னு மிரண்டும் சத்தி பேதமாயினும் சிவன்முதல் பிரமன் ஈறாகிய சிவபேதம் எழும் தோன்றும் முறையில் ஒன்றுக் கொன்று காரணமாய் இடைநிற்றல் பற்றி சிவ பேதத்துடன் வைத் தெண்ணிய வாறும்.

தோன்று முறையாவது:—சிற்சத்தியோடு பிரிப்பின்றிநிற்குஞ் சிவபெருமான் ஆன்மாக்களின் மல நோயைத் தீர்த்தற் பொருட்டுச் சுத்த மாயையில் தொழிற் செய்யத் திருவுளங் கொண்ட அவதாரம் சிவம். துன்பத்தை நீக்க உன்னிய அவதார மாதலின் இதனை பரநாத மென்பர். அவ் வுன்னுதலின் பின் எவ்வாறு தொழிற்செய்ய வேண்டு மென் றெண்ணிய அவதாரம் சத்தி. சத்தி யென்பது அடங்கி நிற்கும் ஆற்றலைக்குறிப்பது. அது இவ்விடத்தில் இவ்வாறு செய்யலாமெனத் தோன்றுது நிற்றலைக்குறித்து நின்றது. இந்த அவதாரத்தில் ஓர் குறிப்பு நிகழ்தலினால் இச் சத்தியை பரவிந்து வென்பர். நாத மென்பது ஒலியையும் விந்து வென்பது குறியையும் உணர்த்தும். அதன்பின் எண்ணிய வாறே செய்தற்கு முதற் காரணமாய் தன்னுள் அடங்கி யிருந்த சுத்த மாயை யோடு கூடிய அவதாரம் நாதம். அச் சுத்த மாயையோடு கூடிச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்ய எண்ணிய அவதாரம் விந்து. முன்னைக் கூறிய நாதம் விந்து சுத்தமாயையோடு கூடாத அவதாரத்தில் உண்டானமையால் பரநாதம் பரவிந்து வெனவும் பின்னைக் கூறிய நாதம் விந்து சுத்த மாயையோடு கூடிய அவதாரத்தில் உண்டானமையால் அபரநாதம் அபர விந்து வெனவுங் கூறப்படும். அபரநாதம் அபர விந்துவை

யும் சிவம் சத்தியெனக் கூறுதலும் உண்டு. மேல் முதற் சூத்திரத்தில் இலய சிவமெனக் கூறிய சிவம் சத்தி இவ் அபரஞாத அபரிந்துக்களேயாம். அதன்பின் இன்னின்னவாறு செய்ய வேண்டுமென் றெண்ணிய அவதாரம் சதாசிவம். சத்தியோடு கூடிய சிவம் சதாசிவம். எண்ணும் முதன்மைசிவத்தையும் எண்ணுதற் குரிய ஆற்றல் சத்தியையும் குறித்து சதாசிவ மெனப்பட்டது. எண்ணியவாறு செய்புங்கால் அவரவர் கன்ம பலத்தை அநுபவிக்கச் செய்பு முறைமையில் அனுபவிக்க வேண்டாத கன்மபலன்களையும் அனுபவிக்கவேண்டிய கன்ம பலன்களில் உள்ள குணதோடங்களையும் மறைத்தலாகிய அவதாரம் மகேசுவரம். மகதைசுவரியத்தையுடையது மகேசுவரம். அனுபவிக்க வேண்டிய ஐசுவரியங்களைக் கொடுத்தும் அனுபவிக்க வேண்டாத ஐசுவரியங்களை மறைத்தும் வைத்தலினால் மகேசுவர மெனப்பட்டது. அவ்வாறு அனுபவிக்குந் காலத்து இளைப்பொழித்தற் பொருட்டும் வேறு உலகத்தில் இன்ப துன்பம் அனுபவித்தற் பொருட்டும் இவ் வுலகத்தில் வேறு சரீர வாயிலாக இன்பதுன்பம் அனுபவிக்கற் பொருட்டும் சங்கரித்தலாகிய அவதாரம் உருத்திரன், அனுபவிப்பதற்காக நிலைக்கச் செய்யும் அவதாரம் விட்டுணு. அனுபவித்தற் குரிய உடல் கருவி உலகம் பொருள் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் அவதாரம் பிரமன். இதன் மேல் செய்யவேண்டுவ தொன்று மில்லாமையால் ஒன்பது பேதமென வகையறுக்கப்பட்டவாறறிக.

இவ்வொன்பது பேதத்திற்கும் உதாரணம் வருமாறு:— அரசன் போல் சுத்தசிவம். அவ்வரசன் உலகத்தைத் தொழிற்படுத்த வேண்டு மென்றெண்ணிய அவதாரம் சிவம். எவ்வாறு தொழிற்படுத்தலா மென்றெண்ணிய அவதாரம் சத்தி. தன்னுளடங்கியுள்ள தொழிற் செய்யும் அதிகாரிகளைத் தெரிந்தெடுக்க எண்ணுதல் நாதம். அவ்வதிகாரிகளைத் தெரிந்தெடுத்தல் விந்து. இன்னின்னார் இன்னின்ன காரியத்தை இவ்வாறு செய்ய வேண்டு மென்று நியமித்தல் சதாசிவம். செய்யுங்காலத்து முறை பிறழாதிருக்கச் செய்தல் மகேசுவரம். முறை பிறழ்ந்தாரைத் தண்டித்தலும் அவசியமாணபோது அப்புறப்படுத்த வேண்டியவர்களை அப்புறப்படுத்த

னும் உருத்திரன். முறை பிறழாதாரைக் காத்தல் விட்டுணு. காப்பதற்காக கைத்தொழில் கிருஷி முதலியவற்றை உண்டுபண்ணுதல் பிரமன். இவ்வாறு உவமையில் வைத்தறிக. இவ்வுவமைக்கண் ஆதி அநாதி என்னும் வியவகாரத்தையிட்டு மலையற்க. இது ஒரு புடை யொப்புவமை யல்லது முற்றுவமை யன்றுதலின்.

சிவம் சத்தி நாதம் விந்து என்னும் நான்கும் வெளிப்படாது தன் மாட்டு நிகழ்தலால் அருவத்திருமேனி யெனவும் நிட்களத் திருமேனி யெனவும் கூறப்படும். தன் மாட்டு நிகழும் இத்திரு மேனியோடு கூடிய சிவபெருமான் சதாசிவரென்பவர். சதாசிவம் சத்தியோடுகூடி பிறபொருளோடு கலந்தும் கலவாமலும் நிற்றலால் அருவுருவத்திருமேனி யெனவும் சகள நிட்களத்திருமேனி யெனவுங் கூறப்படும். ஆலோசனை வடிவாயிருக்கும் இத்திருமேனியோடு கூடிய சிவபெருமான் உத்தியுத்த ரெனப்படுவர். மகேசுவரம் முதலிய நான்கும் உருவமாய்க் காணப்படலால் உருவத்திருமேனி யெனவும் சகளத்திருமேனி யெனவுங் கூறப்படும். தொழிற் செய்வதாகிய இத்திருமேனியோடு கூடிய சிவபெருமான் பிரமிருத்த ரெனப்படுவர்.

களம் என்பது வடிவத்தைக்குறிக்கும். சகளம் வடிவத்தோடு கூடியது. இதுவே நடராஜா முதலிய மூர்த்தங்கள். சகள நிட்களம்—மகாலிங்கம். (எச)

பிரமன் முதல் சிவமீறுகிய சிவபேத மெழுற்கும் பராசத்தியாகிய ஒருத்தியே சரஸ்வதி முதலிய சத்திபேத மேழாய் நிற்பள் எனக் கூறுகின்றது.

சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னுகி
யொத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகு
மெத்திற நின்று னீச னத்திற மவருரு நிற்பள்.

(கொ-ரை) சிவாதிக்கு வருஞ் சத்தி சத்தியாய் விந்துச் சத்தியாய் மனோன்மணி தானுகி ஒத்துறும் மகேசையாகி உமைதிருவாணியாகி வைத்துறும் ஈசன் எத்திறம் நின்றுன் ஒருத்தியாகும் அவளும் இங்ஙன் அத்திறம் நிற்பள்.

(பொ-ரை) மேற்கூறிய ஒன்பதனுள் சத்தி விந்து இரண்டும் சத்தி பேதமாதலால் ஏனைய சிவபேத மேழற்கும் உரிய சத்தி பேதமும் ஏழாம். அவையாவன: சிவத்திற்கு சத்தியும், நாதத்திற்கு விந்துவும், சதா சிவத்திற்கு மனோன்மனியும், மகேசனுக்கு மகேசையும், உருத்திரனுக்கு உமையும், விட்டுணுவிற்கு இலக்குமியும், பிரமனுக்கு சரஸ்வதியுமாம். எம்மிறைவனுகிய பரம சிவன் சிவபேதம் ஏழினும் நின்று நடாத்தும் போதெல்லாம் அவனோடு பிரிப்பின்றி நிற்கும் ஒருத்தியாகிய பராசத்தியும் இச்சத்தி பேத மேழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும். (எ—று)

சுத்தசிவனுகிய பரசிவனிடத்துப் பிரிப்பின்றி நிற்கும் சத்தி பராசத்தி. இச்செய்யுளில் சிவத்திற்குச் சத்தி என்றது சிவதத்துவந் தோன்றிய பின்னர்த் தோன்றுஞ் சத்தி தத்துவமாம். (எடு)

சிவமுஞ் சத்தியுமெனப் பிரித்தெண்ணப்படினும் அவ்விரண்டும் பிரிப்பின்றி நாயகன் நாயகி பாவமாய் நிற்குமெனக்கூறுகின்றது.

சத்திதா னுதி மாதி தானுஞ் சிவமு மந்தச்
சத்திதா னுதி யாகுந் தருமவடி வான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமு மாகுஞ் சத்திதான் சத்த னுக்கோர்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்தி தானே.

(கொ-டு) சத்திதான் நாதம் ஆதிதானுகும் சிவமும் அந்தச் சத்திதான் ஆதியாகும் சத்திதான் தரும் வடிவான எல்லாம் சத்தியும் சிவமுமாகும் சத்தன் வேண்டிற்றெல்லாம் ஆம் சத்திதானே சத்தனுக்கு ஓர் சத்தியாம்.

(பொ-ரை) பராசத்தியானது நாத முதலிய சிவபேதம் எழினுங் கூடியிருக்கும். அவ்வாறே சுத்த சிவமானது சத்தி முதலிய சத்திபேதம் எழினையும் வாயிலாகக் கொண்டு நிற்கும். இவ்வாறு சத்தியுஞ் சிவமும் மாமும் வயிரமும் போல ஒப்பக்கூடி நிற்றலால் சத்தியாற் றரப்படும் எல்லாத் திருமேனியுஞ் சத்தி சிவம் இரண்டற்கும் பொது வடிவேயாம். அவ்வாறு கூடிப் பிரிப்பின்றி நிற்பினுந் தான் வேண்டியவா றெல்லாம் ஆவதாகிய சத்தியே சத்தனுக்கு ஒப்பற்ற தெவியுமாம். சத்தி சிவத்திற் குரிய வடிவு விசேடங் குணவிசேடம் பற்றி சத்தி பேதஞ் சிவபேத மென்றுயின. (எ—று)

அக்கினி பொருளால் ஒன்றுயினும் வடிவால் செம்மை யென்றுங் குணத்தால் சூடு யென்றும் பிரித்தெண்ணப்படுமாறு போல பரம பொருளொன்றேயாயினும் எவற்றையுங் கடந்து நிற்கும் வெளியாகிய

வடிவால் சிவமெனவும் எவற்றுடனுங் கலந்து எவற்றையுந்தன் பால் இழுக்கும் வலிமையாகிய குணத்தால் சத்தியெனவும்பிரித்துக் கூறியவாறும். (எசு)

சிவனுஞ் சத்தியும் நாயகனும் நாயகியுமாய் நிற்பினுஞ் சிவன் பிரமசாரியுஞ் சத்தி கன்னிகையுமா மென "இவற்றின் றன்மை தனக் கெய்தலின்றுதலே" விளக்கிக் கூறுகின்றது.

சிவஞ்சத்தி தன்னை யின்றுஞ் சத்திதான் சிவத்தை யின்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மின்றும்
பவண்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே.

(கொ-டு) இத்தன்மைதான் தவந்தரு ஞானத் தோர்க்கு தெரியு மன்றே.

(பொ-ரை) சிவதத்துவத்தினின்று சத்தி தத்துவந்தோன்றும். சத்திதத் துவத்தினின்று சதாசிவ தத்துவந் தோன்றும். சதாசிவ தத்துவமாவது சத் தியுஞ் சிவமுங் கூடிய நிலையாம். சத்தி சிவமாகிய இருவருங் கூடிய அத்தி லேயே இவ்விடத்துச் சடமுஞ் சேதனமுமாய பிரபஞ்சமெல்லாந் தோன்றும். இவ்வாறு தோன்றினும் எல்லாந் தோன்றுவதற்குக் காரணமாய் சத்தியோடு கூடி நின்ற சிவபிரான் பிரமசாரியாவன். எல்லாவற்றையுந் தோற்றுவித்த சிவ சத்தி கன்னிகையாவள். சத்தியுஞ் சிவமுமாய் நின்று செய்யுஞ் செயல்க ளெல் லாம் நம்மனோர் பொருட்டாக நடித்துக் காட்டும் நாடக மாத்திரையே யன்றி பிறிதில்லை யென்பது முற்றவவிசேடத்தால் முதல்வன் அருள் பெற்ற ஞானி கட்கு விளங்கும். (எ—று)

பிரமசாரியுங் கன்னிகையும் போகத்தில் விருப்பமில்லா திருப் பது போல் தனக்கென விருப்பின்றி ஆன்மாக்களின் பொருட்டு எல்லாஞ் செய்தலால் சிவன் பிரமசாரி யெனவுஞ் சத்தி கன்னிகை யெனவுங் கூறப்பட்டது.

சதாசிவ தத்துவத்தினின்று உயிரும் உலகமும் தோன்று மென்றது உயிரும் உலகத்துக்கு முதற்காரணமான மாயையும் அநா தியென்றதனை மறுத்தோ எனின், மறுத்தது. எவ்வாறெனின் இவ்விடத்துக் கூறுவதெல்லாம் ஒடுக்கி வைத்திருந்த உயிரையும் மாயையினையும் மீளத்தோற்றுவிப்பதாகிய புதுச்சிருட்டியே யாத

யின் என்க. அநாதியில் எவ்வாறெனின், கேவலத்துள் அடங்கிக்கிட
ந்த உயிரையும் இறைவன் தன்னுள் அடங்கிக் கிடந்த மாயையினை
யுஞ் சதாசிவ தேவர் வெளிப்படுத்துவர் என்க. (எ)

தத்துவங்க ளெல்லாம் உயிர்களோடு பொருந்துவன வென்ற
றிந்து நீக்கித் தத்துவாதீதனாகிய பரசிவனை அறிபவன் தத்துவ
ஞானியாவ னெனக் கூறுகின்றது.

தனுகரண புவன போகந் தற்பரம் பந்தம் வீடென்
றனுவிலே டெல்லா மாகி யடைந்திடுந் தத்து வங்க
ளினிதறிந் நிவைவி வித்தி முதற்கலை யிடத்தை நீக்கி
நனிபர முணர்ந்தோ னந்தத் தத்துவ ஞானி யாவன்.

(கொ-டு) தனுகரண புவன போகம் தற்பரம் பந்தம் வீடு எல்லாம் தத்து
வங்கள் ஆகி அடைந்திடும் என்று இவை அணுவிலேடு (என்று) இனிது அறி
ந்து நிவிர்த்திகலை முதல் இடத்தை நீக்கி பரம் நனி உணர்ந்தோன் அத்தத்
துவ ஞானி யாவன்.

தற்பர மென்பது மூல மென்னும் பொருட்டு.

(பொ-ரை) தனுகரண புவன போகங்களும் அவை மூலமாயுள்ள பந்த
முத்திகளும் அப்பந்த முத்திகளுள் உண்டாம் பேதங்கள் அனைத்தும் மேற்
கூறிப் போந்த தத்துவங்களால் ஆயினவென்றும் அத்தத்துவங்கள் உயிர்களோடு
பொருந்துவன அன்றி முதல்வனோடு பொருந்துவன அல்லவென்றும் நூல்களா
னும் யுத்தியாலும் தெளிய உணர்ந்து அத்தத்துவங்களை அவற்றிற்கு ஆதாரமா
கிய நிவிர்த்தி கலை முதலிய பஞ்ச கலைகளின் வைத்துக் கழித்து அத்தத்துவங்
களைக் கடந்து மேலாய் நிற்கும் ஒன்றாகிய பரசிவனை ஐயவிபரீதக் குற்றமின்றி
உணரப்பெற்றவன் யாவனே அவனே மேலைச் செய்யுளில் பவன் பிரமசாரி
யும் பான் மொழி கன்னியுமா மென்பதை அறிந்த தத்துவ ஞானியாகிய உண்
மையறிவுடையவன். (எ—று)

மேல் எழுபதாவது செய்யுளில் தத்துவங்களை அதிட்டிக்கும்
அணுபக்க சம்பந்தத்து அதிதெய்வங்கள் அவ்வத் தத்துவப் பெய
ரைப் பொருந்து மெனவும், எழுபத்து நாலாவது செய்யுளில் சுத்த
சிவனே சுத்த மாயாதத்துவங்களைப் பொருந்தி தொழிற் செய்வ
னெனவும் கூறியதனால் தத்துவங்கள் சிவனேடும் மற்றத் தெய்வங்
களோடும் பொருந்துவனவா மெனப் பெறப்படுமன்றே; அவ்வாறாக

வும் இவ்விடத்து தத்துவங்களெல்லாம் உயிர்களோடு பொருந்துவனவெனக் கூறியது முரணுகாதோவெனின், ஆகாது. என்னை? சுத்த சிவனும் மற்றத் தேய்வங்களும் தத்துவங்களைக் கூடியது உயிர்களின் பொருட்டே யாதலானும் அத் தத்துவங்களையும் அவற்றினிற்குந் சிவபேதங்களையும் கடந்து செல்லுநற்குரிய நிலைமையில் அவற்றிற் கட்டுப்பட்டிருப்பது உயிரே யாதலானுமென்க. (எ-ஆ)

தத்துவங்கள் உயிரைப் பொருந்துவதற்குக் காரணம் உயிர்கட்கு வினைப்பயனை அனுபவிக்கச் செய்து அதனால் கன்மமலம் ஆணவ மலங்களைப் போக்குதற் பொருட்டா மெனக் கூறுகின்றது.

எல்லாமாய்த் தத்து வங்க ளினையைத்தி கன்மமறுவுக் கென்னிற்
றொல்லாய கன்ம மெல்லாந் துய்ப்பித்துத் துடைத்தற் கும்பி
னில்லாமை மூற்று வித்து நீக்கவுங் கூடி நின்ற
பொல்லாத வாண வத்தைப் போக்கவும் புருந்த தன்றே.

(கொ-து) தத்துவங்கள் அறிவுக்கு எல்லாமாய் இயைந்தது என் என்னின் துய்ப்பித்து தொல்லாய கன்மமெல்லாம் துடைத்தற்கும் மூற்றுவித்துப் பின்னில்லா மைநீக்கவும் கூடிநின்று பொல்லாத ஆணவத்தைப் போக்கவும் புகுந்தது அன்றே.

(பொ-ரை) அவ்வாறு தத்துவங்கள் பலவேறுவகைப்பட உயிரோடு பொருந்தியது எதன் பொருட்டெனின், இன்ப துன்ப மென்னும் பலன்களை அனுபவிக்கும்படி செய்து பழமையாய பிராரத்த மென்னும் இருவினைகளை நீக்குதற்பொருட்டும் அவ்வாறு நீக்குதலால் பருவ முண்டான விடத்து நீக்கையால் எஞ்சிய சஞ்சித மாய விரு வினைகளை மேலைக்கு வித்தாகாதவாறு சோதித்துக் கழித்தற் பொருட்டும் அவ்வாறு கழிவதனால் எல்லா அநர்த்தங்கட்கும் மூலமாய் உயிரோடு கலந்து நின்ற ஆணவ மலத்தைப் போக்குதற் பொருட்டும் உயிரோடு தத்துவம் அடைந்ததாம். (எ...று) (எக)

நான்காம் அதிகரணத்தின் ஒழிபு.

ஒழிபு என்பது ஒன்றன் சேடம். முதற்செய்புளின் பகுப்பின் படி நான்காம் அதிகாணம் கூறிமுடித்து அவ்வதிகாணத்தின் சேடமாய்க் கூறமீவண்டுவதான ஆணவமல முதலியவற்றின் இலக்கணங்கூறுதலின் ஒழிபு எனப்பட்டது.

ஆணவ மலத்தின் இலக்கணங் கூறுகின்றது.

ஒன்றதா யநேக சத்தி யுடையதா யுடனு யாதி
யன்றதா யான்மா வின்ற னறிவொடு தொழிலு யார்த்து
நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பினிற்க ளிம்பேய்ந்
தென்றுமந் ஞாநங் காட்டு மாணவ மியைந்து நின்றே.

(கொ-டு) அநேக சத்தி உடையதாய் ஆன்மாவின் உடனுய் ஆணவம் செம்பிற் களிம் பேய்ந்து ஆதி அன்றதாய் இயைந்து நின்றே ஒன்றதாய் தன் அறிவொடு தொழிலு ஆர்த்து நின்று போத்திருத்துவத்தை நிகழ்த்தி என்றும் அஞ்ஞானம் காட்டும்.

(பொ-ரை) மேற் கூறிய ஆணவ மலமாவது யாது? அதன் இலக்கணம் யாதெனின் அளவில்லாத சக்திகளை யுடையதாய் அளவில்லாத உயிர்களுடன் சேர்ந்து நிற்பது ஆணவ மலம். எப்பொழுது சேர்ந்த தெனின் ஆன்மா, உள்ள அன்றே ஆணவ மலமுமுண்டாய் அன்றே ஆன்மாவுடன் சேர்ந்திருத்தலால் செம்பிற் களிம்பு போல அநாதியாய்க் கலந்து நிற்ப தொன்றும். அவ் வாணவ மலும் உயிர்கள் கேவல அவத்தையில் நிற்குங்கால் அறிவு தொழில்களை அவ்வுயிர்க்கட்கு நிகழ ஒட்டாது தனது மறைப்புச் சத்தியால் மறைத்து நிற்கும். கேவலத்தி னின்றும் நீங்கி தனுகரண புவன போக மென்னுஞ் சகலத்தில் உயிர்கள் நிற்குங்கால் அவ்வாணவமானது மோகஞ் செய்தலாகிய கீழ்ச் செலுத்துஞ்சத்தியால் போக அனுபவத்திற் கேற்ற கர்த்தாத் தன்மையை நிகழ்த்தி நிற்கும். இவ்வாறு கேவலத்திலுஞ் சகலத்திலும் அவ் வாணவ மலமே காரணமாய் நின்று உயிர்க்கு அஞ்ஞானத்தை உண்டு பண்ணும். (எ...று)

ஆணவமலம் ஒன்றுயிருந்து பலவுயிர்களுடன் கூடி மறைப்பது எதுபோலவெனின், இருள் ஒன்றுயிருந்து பல கண்களுடன் கூடி மறைப்பதுபோலாம். பல வுயிர்களுடன் கலந்து நிற்குந்தன்மையால் வியாபகமெனப்படும். அவ்வாறு கலந்து நிற்கும் முதல்வன் வியாபகத்திற்கும் இதற்கும் வேற்றுமை என்னையோவெனின், முதல்வன் வியாபகம் உயிரின் வியாபகத்திற்கு மேம்பட்டதாய் அதனுல் அஞ்ஞான காலத்தில் விளங்கித் தோன்றுமையும் முத்திகாலத்தில் விளங்கித் தோன்றுதலுமாகிய வேற்றுமையுடன் நீங்காததாயிருக்கும். ஆணவமல வியாபகம் உயிரின் வியாபகத்திற்கு மேம்படாமலும் குறையாமலும் சம வியாபகமாய் அதனுல் குருவருளால் முத்திகாலத்தில் நீங்கப்பெறுவதாயிருக்கும்.

இம்மலத்தின் காரியம் :—மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என ஏழுவகைப்படும். அவற்றுள் மோகம்—குருவினுலும் நூலினுலும் தீயனவென் றறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம்.

மதம் :—தன்னைப்போல ஒருவருமில்லையென மதித்தல்.

இராகம் :—கிடையாத பொருளினிடத்தில் ஆசைப்படுதல்.

கவலை :—கிட்டியபொருள் பிரிந்தபொழுது வருந்துதல்.

தாபம் :—சுற்றத்தை விட்டு பிரிவதற்கும் பிரிந்ததற்கும் ஆற்றுமை.

வாட்டம் :—அவ்வாற்றுமையால் மலர்ச்சியின்றி வாடுதல்.

விசித்திரம் :—எச்செயலும் வினையின் வழியாய் நிகழ்வதென் றெண்ணுது தான் செய்ததாகவும் பிறர் செய்ததாகவும் எண்ணுதல். (அ0)

மாயையே ஆணவ மல மென்பாரை மறுத்துரைக்கின்றது.

மலமென வேறுன் றில்லை மாயாகா ரியம தென்னி
னிலகுயிர்க் கிச்சா ஞாநக் கிரியைக ளெழுப்பு மாயை
விலகிடு மலமி வற்றை வேறுமன் றதுவே றுகி
யுலகுடல் காண மாகி யுதித்திடு முணர்ந்து கொள்ளே.

(கொ-டு) மாயா காரியம் அது மலமென ஒன்று வேறு இல்லை என்னின் மாயை இலகுயிர்க்கு இச்சாஞானக் கிரியைகளெழுப்பும் மலம் வேறும் அன்று இவற்றை விலகிடும் உலகுடல் காணுமாகி அதுவேறுகி உதித்திடும் உணர்ந்து கொள்ளே.

(பொ-ரை) மாயா காரியமே உயிர்க்கு மறைத்தற் றொழிலைச் செய்யுமாதலின் அம் மாயையின் வேறுக மல மென்று ஒரு பொருள் இல்லையெனின் அது பொருந்தாது. எவ்வாறெனின், மாயையானது விளங்கா நின்ற உயிர்கட்கு வேறுய் நின்று அறி விச்சை செயல்களை விளக்கும். ஆணவமலம் உயிர்களோடு கலந்து நின்று அறி விச்சை செயல்களை மறைக்கும். விளக்குவதாகிய மாயைக்கும் மறைப்பதாகிய ஆணவ மலத்திற்கும் தம்முள்வேற்றுமை பெரிதாகலான் அவ் வேற்றுமை யிறியாது தனுகரண புவன போகமாயும் உயிர்க்கு வேறுகியும்உதிக்கும் மாயையினையே உயிரோடு கலந்துநிற்கும் மலமென்பார் மதம் போலி என்பதனை அறிவாயாக. (எ...று) (அக)

மாயா மலத்தைத் தவிர ஆணவ மலம் வேறில்லை யென்பதற்கு உவமை கூற அவ்வுவமை பொருந்தா தெனக் கூறுகின்றன.

மாயையே யான்ம ஞானக் கிரியையை மறைத்து நிற்குந்
தூயவப் பரிதி தன்னைச் சுடர்முகின் மறைத்தாற் போலப்
போய்முகி லகலச் சோதி புரிந்திடு மதுவே போலக்
காயமு மகல ஞானத் தொழில்பிர காச மாமே.

பரிதியை முகின்ம றைப்பப் பாயொளி பதுங்கி னற்போ
லுருவுயிர் மறைக்கின் ஞானக் கிரியைக ளொழிக்கு மாகுங்
கருதிடு மிச்சா ஞான காரியங் காயம் பெற்றுன்
மருவிடு முயிர்க்குக் காயம் வந்திடா விடின்ம றைப்பே.

(கொ-டு) தூயபரி திச்சுடர் தன்னை முகில் மறைத்தாற் போல மாயை யே ஆன்ம (இச்சா) ஞானக் கிரியையை மறைத்து நிற்கும் அம்முகில் போய் அகலச்சோதி புரிந்திடும் அதுவேபோல காயமும் அகல (இச்சா) ஞானத் தொழில் பிரகாசமாமே பரிதியை முகில் மறைப்பப் பாயொளி பதுங்கிறற் போல் உருமறைக்கின் உயிர் (இச்சா) ஞானக் கிரியைகள் ஒழிக்குமாகும்

(பொ-ரை) மேகமானது சூரியனின் வேறாய் நின்று சூரியனுடையபரி சுத்த ஒளியை மறைத்தாற் போல மாயையானது தனுகரண புவன போகமாய் ஆன்மாவின் வேறாய் நின்று அறி விச்சை தொழில்களை மறைத்தல் கூடும். அம் மேகம் நீங்கின விடத்து சூரியன் ஒளி வெளிப்பட்டுத்தோன்றுமாறுபோல சரீர முதலாகிய மாயை நீங்கிய விடத்து ஆன்மாவின் அறிவிச்சைதொழில்கள் பிரகாசித்தல் கூடும். இவ்வாறுடம்பாட்டானும் எதிர் மறையானும் மாயை யே ஆணவ மலமென்பது இவ்வுவமையில் வைத்து அறியப்படுமெனின் அது பொருந்தாது. எவ்வாறெனின், மேகம் போல மாயை மறைக்குமாயின் மேகத் தால் சூரியன் ஒளி மறைபடுதல் போல மாயா காரியத்தால் உயிரின் கண் அறி விச்சை தொழில்கள் நிகழாதிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி மாயாகாரியமா கிய உடம்பைப் பெற்றால் விளங்குகின்ற உயிர்க்கு அறி விச்சை செயல்கள் நிக ழவும் அவ்வுடம்பைப் பெறுவிடில் அறி விச்சை தொழில்கள் நிகழாது மன்றய வுங் காணப்படுதலால் அவ்வுவமை இவ்விடத்துப் பொருந்தாது. (எ...று) ()

ஆணவ மல மாயா மலங்களின் வேற்றுமையை விளக்கி ஆணவ மலத்தின் தன்மை உயிரின் உணர்வைத் தடுத்தலாமெனக் கூறுகின்றது.

போதகா ரியம றைத்து நின்றது புகன்ம லங்கா
ணேதலாங் குணமு மாகு'வயிரினுள் விரவ லாலே
காதலா லவித்தை சிந்தத் தருங்கலை யாதி மாயை
யாதலா லிரண்டுந் சோதி யிருளென வேறு மன்றே.

(கொ-டு) உயிரினுள் விரவலாலே குணமுமாக ஓதலாம் அவித்தை சித்தக்கலை ஆதி மாயை காதலால் தரும் இரண்டும் சோதி இருளெனவேறும் அன்றே ஆதலால் புகல் மலம் போத காரியம் மறைத்து நின்றது காண்.

(பொ-ரை) அவ்வாறன்றியும் ஆணவ மலத்தாலுகிய மறைப்பு சூரியனின் வேறாய் நிற்கும் மேகத்தாலாகிய மறைப்புப் போலன்று. அம்மறைப்புத் தான் எவ்வாறுநிகழுமெனின், உயிரோடு வியாபகமாய்க்கலந்து உயிரின் குணம்போலத்தோன்றிநின்று மறைப்பதாம். அவ்வாறுமறைக்கும் ஆணவமாகிய இருள்கெடுவதற்கு கலை முதலிய தத்துவங்களாகிய விளக்கை மாயையானது விருப்புடன் தோற்றும். இவ்வாறு மாயையும் ஆணவமும் ஒளியும் இருளும் போலச் செயலின் கண் மாறுபட்டு நிற்பனவாதலால் இருள்போலக் கூறுந் தன்மைத்தாகிய ஆணவ மலமே உயிர் உணர்வின் காரியத்தைத் தடுக்கும் வல்லமையுடையதென உறுதியா யறிக. (எ...று) (அக்)

ஆணவ மலம் உயிர்க்குக் குண மென்பாரை மறுத்துரைக்கின்றது.

புருடன்றன் குணம வித்தை யெனிற்சடம் புருட னுகுங்
குருடன்றன் கண்ணின் குற்றங் கண்ணின்றன் குணமோகூறும்
மருடன்றன் குணமு தாகி மலமசித் தாகி நிற்குந்
தெருடன்றன் குணம தாகிச் சித்தென நிற்குஞ் சீவன்.

(கொ-டு) அவித்தை புருடன்றன் குணம் எனின் புருடன் சடமாகும் குருடன்றன் கண்ணின் குற்றம் கண்ணின்றன் குணமோ மலம் மருள் தன்றன் குணமதாகி அசித்தாகி நிற்கும் சீவன் தெருள் தன்றன் குணமதாகிச் சித்தென நிற்கும் கூறுய்.

(பொ-ரை) மேற் கூறியவாறு உயிரோடு கலந்து நிற்பதாகிய ஆணவமலத்தினை உயிரின் வேறாய் ஒரு பொருளென்றது கலந்து நிற்றலால் உயிரின் குணவிசேடமென்றலே பொருத்தமாமெனின், அவ்வாறு அறியாமைவடிவாகிய மலங்குணமாயின் அறிவுவடிவாகிய ஆன்மா அறிவில்லாத சடமெனப்பட்டுப்பொருந்தாதாய் முடியும். ஒரு பொருளின்கண் குணம்போலக்குற்றமும் உடனாய்க்கலந்துநிற்றல் கூடுமென்பது குருட்டுக்கண்ணிற்காணப்படும் கண்ணிற்குக் குணம்

ஒளியேயாதலால் குருடனது கண்ணில் ஒளிக்குணத்தை மறைத்து கண்ணுடன் கலந்துநிற்கும் படலமாகிய குற்றம் கண்ணின் குணமாதல் செல்லாது. அன்றியும் அறியாமையை தனது குணமாகக்கொண்டு நிற்கும் மலம் அறிவில்லாத சடமாய் நிற்பதன்றி அறிவுடைய பொருளாகாது. ஆதலானும் உயிர் அறிதற்கருவியுடைய சித்தேயாய் நிற்குமாதலானும் உயிரின்கண்ணே குற்றமாகக் காணப்படும் அறியாமைக்குணத்திற்குக் குணிப்பொருள் உயிரின் வேறாய் உயிரோடு கலந்து நிற்கும் ஆணவமலம் என்று அறிவாயாக. எ...று()

மும்மலங்களும் உயிரைப் பந்தப்படுத்துதல் நெல்லுக்கு முளை தவிடு உமிபோலெனவும் வேறும் இருமலமுண்டெனவும் கூறுகின்றது.

மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு மிப்போன்
மெம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணு
மிம்மல மூன்றி னேடு மிருமல மிசைப்ப னின்னும்.

(கொ-டு) • அணுவின் உண்மை வடிவினை மம்மர் செய்துமறைத்து நின்றுனவும் இன்னும் இருமலம் இசைப்பன் எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேல் இச்சூத்திரத்து மூப்பத்தொன்பதாவது செய்யுளில் "தன்மமோடதன்மமாகி" யெனக்கூறப்பட்ட கன்மமலமும் அதன்பின்னை ஐம்பத்து மூன்றாவது செய்யுளில் "நித்தமாயருவா" யெனக்கூறப்பட்ட மாயாமலமும் இவ்விடத்துக் கூறப்பட்ட ஆணவமலமுமாகிய இம்மூன்று மலங்களும் உயிரினது உண்மை வடிவினை மறைத்து மயக்கத்துக் கேதுவாகக் கூடிநிற்றல் எதுபோல எனின், நெல்லுக்கு முளைத்தற் சத்தியும் தவிடும் உமியும்போலவாம். எவ்வாறெனின், முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோலக் கன்மமலம் பொய்ம்மைசெய்கின்ற சுகதுக்கங்களைத் தோற்றுவிக்கும். தவிடு முளைத்தற்கு அனுகூலஞ்செய்து நிற்பதுபோல மாயாமலம் அச்சுகதுக்கங்கள் தோன்றுதற்கு அனுகூலமாகத் தனுகரண முதலியவற்றைத் தோற்றுவிக்கும். உமி அம்முளைதோன்றுதற்கு நிமித்தமாய் பற்றி நிற்பதுபோல ஆணவமலம் அச்சுகதுக்கங்களை உயிர் அனுபவிக்குமாறு பற்றச்செய்து நிற்கப்பண்ணும். இவ்வாறு பந்தப்படுத்தும் இம்மலங்கள் மூன்றனேடும் வேறும் இருமல்கள் உளவாம். எ...று

நெல்லென்பது அரிசியைக் குறிக்கும். அவ்வரிசிக்கு முளை தவிடு உமிப்போலென்றது மும்மலங்கள் உயிரைப் பந்தப்படுத்துதற்கும் பந்தத்திற்குக் காரணமாதற்கும் உவமையாகும். அன்றி உயி

ரும் அம்மும் மலங்களும் கூடிநிற்கும் சம்பந்தத்திற்கு உவமையா காது. எவ்வாறெனின், மூலத்தற் சத்தி அரிசியினுள் அடங்கின்று பந்தப்படுத்துவதுபோல கன்மமலம் ஆன்மாவினுள் அடங்கி நிற்ப தின்றி ஆன்மாவிறற் செய்யப்படுவதா யிருத்தலானும் தவிடு அரி சியைத் தொடர்ந்துநின்று பந்தப்படுத்துவதுபோல மாயை தொடர் ந்து நின்று பந்தப்படுத்துவதின்றிக் கூடி நின்று பந்தப்படுத்துவதா லும் உமி அரிசியின் வேறாய் நின்று பந்தப்படுத்துவதுபோல ஆண வமலம் வேறாய் நிற்பதின்றிக் கலந்து நின்று பந்தப்படுத்துவதா லும் சம்பந்தத்திற்கு உவமை ஆகாமை அறிக. இம்மும்மலங்க ளுள் கன்மமலம் முதற்காரணமும் மாயாமலம் துணைக்காரணமும் ஆணவமலம் நிமித்த காரணமுமாம். எவ்வாறெனின், சுகதுக்கமா கிய காரியங்களை உயிர் அனுபவிப்பது ஆணவமலத்தாலன்றி யில்லை யாதலால் அவ்வாணவமலம் நிமித்தகாரணம். கன்மத்தையின்றி அச் சுகதுக்கங்கள் உண்டாகாமையால் அக்கன்மமலம் முதற்காரணம். உடம்பு முகலியன இன்றி அச்சுகதுக்கங்கள் அனுபவிக்க முடியா மையால் மாயை துணைக்காரணமென அறிக.

பந்தப்படுத்து முறைமையின் வேற்றுமைக் கேற்ப மும்மலங் களும் வேற்றுமைப்படும். அதாவது ஆணவமலம் உயிரோடு கல ந்துநின்று அறிவு, இச்சை, செயல்களைத் தடுத்தலால் பிரதிபந்தம். கன்மமலம் உயிர்செல்லுமிடமெல்லாம் தொடர்ந்துசென்று சுகதுக் கங்களைக் கூட்டுதலால் அனுபந்தம். அது என்பது தொடர்ச்சி. மாயாமலம் உயிரோடு கூடி தனுகரணமுதலியனவாய் நிற்றலால் சம் பந்தமென அறிக. (அசு)

இருமல மென்பது மாயாகாரியமும் திரோதாயி சத்தியுமா மெனவும் ஐந்தமலமும் உயிர்க்குப் பந்தம் செய்யுமெனவும் கூறுகின் றது.

மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்று
மேயுமும் மலங்க டத்தந் தொழிலினை யியற்ற வேவுந்
தூயவுன் றனத்தார் சத்தி திரோதான கரிய தென்று
மாய்வரிம் மலங்க ளைந்து மணுக்களை யிணைந்து நிற்கும்.

(பொ-ரை) அச்சுகதுக்க விளைவுகளுக்கெல்லாம் இடமாய் நின்று ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவதென மேற்கூறிப்போந்த மாயாகாரியமாகிய தனுகரணாதிகளை மாயேயமலமென்றும், பொருந்திய மும்மலங்களையும் தத்தம் தொழில்களைச் செய்ய ஏவும் சிவசத்தியை மறைத்தலைச் செய்வதாகிய திரோதாயி மலமென்றும் வேறு இருமலம் உண்டென்று ஆராய்ந்து கூறுவர். அவ்விருமலங்களுள் மாயாகாரியம் மாயையில் அடங்குமாயினும் பந்தப்படுத்தும் வேற்றுமைபற்றி வேறுவைத் தெண்ணப்படும். வேற்றுமையாவது, மாயை உயிரின் அறிவோடு கூடி அவ்வறிவை மயக்கும். மாயாகாரியம் மயக்கத்திற்கு முன்னிலைப் பொருளாயிருக்கும். இவையே வேற்றுமையாம். இனி மலங்களைத் தொழிற்படுத்துஞ் சிவசத்தியும் பாசசத்தியின் அடங்குமாயினும் தொழில் வேற்றுமைபற்றி வேறுவைத்தெண்ணப்படும். அவ்வேற்றுமையாவது பாசசத்தி கருணை யொன்றே செய்துநிற்கும். திரோதாயிசத்தி கன்மத்திற்கேற்றவாறு உயிரின் அறிவை மறைத்துநிற்கும். இவையே வேற்றுமையாம். இவ்வாறு இவ்வைந்துமலமும் உயிர்தோறும் நின்றுசெய்யும் பந்த வேறுபாடு கண்டுகொள்க. (எ...று)

ஐந்து மலங்களையும் மும்மலங்களுள் அடக்கிக் கூறுங்கால் மாயேயமலத்தை மாயாமலத்தினும் திரோதாயிசத்தியை மறைக்குந் தொழில் ஒப்புமையால் ஆணவமலத்தினும் அடக்கிக்கூறுவர். ()

உயிர் மேற் கூறிய ஐந்துமலங்களினால் பிறந்திறந்துழலுமெனக் கூறுகின்றது.

மலமாயை கன்ம மாயே யந்திரோ தாயி மன்னிச்
சலமாரும் பிறப்பி றப்பிற் றங்கியித் தரைகீழ் மேலு
நிலையாத கொள்ளி வட்டங் கறங்கென நிமிடத் தின்க
ணலமாரு மிறைவ ணாணை யாலுயிர் நடக்கு மன்றே.

(கொ-டு) உயிர்மலம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி மன்னி இறைவன் ஆணையால் நிலையாத கொள்ளி வட்டம் கறங்கு என நிமிடத்தின் கண் அலமாரும் பிறப்பு இறப்பில் தங்கி இத்தரைகீழ் மேலும் சலமாரும் கூடக்கும் அன்றே:

(பொ-ரை) ஆணவம் மாயை கன்மம் மாயேயம் திரோதாயி ஆகிய இவ்வை வகைமலங்களும் உயிருடன் பொருந்துதலால் அம்மலங்களுக்கேற்ப (முதல்வன் ஆணையால் நிலையில்லாத கொள்ளிவட்டமும் காற்றடியும்போல கணப்போதில் பலமுறை சுழற்சியுற்றுப் பிறப்பிறப்பைப் பொருந்தி பூமி நரகம் சுவர்க்கங்களிலே போக்குவரவுடையதாய் அவ்வுயிர் நிற்கும். (எ...று) (அ அ)

பிறந்திறந்துழலுதற்குரிய பிறவிகளுள் மானுடப்பிறவியே அரிதெனக் கூறுகின்றது.

அண்டசஞ் சுரேத சங்க ளுற்பிச்சஞ் சாராயு சத்தேதா
டெண்டருநா லெண்பத்து நான்குநூ றாயி ரத்தா
யுண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா நுடத்து தித்தல்
கண்டிடிற் கடலிலக் கையா னீந்தினன் காரி யங்காண்.

(பொ-ரை) உயிர்கள் பிறத்தற்குரிய முட்டையும் வேர்வையும் வித்தும் கருப்பையுமாக எண்ணப்படும் நால்வகைத் தோற்றத்தினின்றும் உண்டாம் பிறவிகள் தேவர் மனிதர் விலங்கு பாவை ஊர்வன நீர்வாழ்வன தாவரமென எழுவகைப்படும். அவ்வெழுவகைப் பிறப்பினின்று உண்டாகும் உறுப்புப்பேதம் எண்பத்து நான்கு நூறாயிரமாகும். அப்பேதங்களினின்றும் விரிந்த பேதங்கள் அளவின்றி உள்ளன. அவற்றுள் மற்றைப் பிறவிகளெல்லாம் ஒழிந்து ஒரு உயிர் மானுடப்பிறவியைப் பொருந்தக் காணப்பெற்றிடின் அப்பேறு சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரையேறினவன் காரியத்தோடொக்கும். இம்மானுடப் பிறவியே பிறப்பிறப்பிற்பட்டுழலும் சுழற்சியை நீக்குவதற்கு வாயிலாம். (எ...று) (அ)

மானுடப் பிறவியினுள்ளும் உத்தமநாட்டில் உத்தமஜாதியில் உத்தம சமயத்திற் பிறத்தலரிதெனக் கூறுகின்றது.

நார்பயி றேயந் தன்னி னுன்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணீ தே.

(பொ-ரை) அம்மானுடப்பிறவியினுள்ளும் மானுடர் வாழ்கின்ற இவ்வுலகத்துள் வேதாகம விளக்கம் இல்லாத நாட்டிலே பிறவாது அவ்வேதாகம வழக்குமிகுந்துள்ள உத்தம நாட்டிலே பிறத்தலரிது. அவ்வாறு பிறத்தல் மிகுந்த புண்ணியத்தாலுண்டாம். அவ்வுத்தம நாட்டினுள்ளும் கீழ்சாதியிலே தோன்றுது தவஞ்செய்தற்குரிய உத்தம சாதியிலே தோன்றல் அதனினும் அரிது. அவ்வாறு தோன்றினும் புறச்சமயங்களிற் செல்லாது அப்பிறப்பிறப்பை ஒழித்தற்கு வாயிலாகிய உத்தம சமயத்திற்குரிய நன்மை ஒருவனுக் குண்டாதல் அரிது. (எ...று) (கூ)

உத்தம சாதியிற் பிறக்கினும் வாழ்வினாலாகிய செருக்கும் வறுமையாலாகிய சிறுமையும் நீங்கிச் சைவசமயத்தைச் சார்தல் மிகவரிது

தெனவும் அதனினும் சித்தாந்தநெறியினுல் சிவனை வழிபடுவோரே வீடு பெறுவரெனவுங் கூறுகின்றது.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி ணீனப் போற்றுவா ரருள்பெற் றாரே.

(பொ-ரை) மேற்கூறியவாறு உத்தமசாதியிற் பிறக்கினும் பொருளுடையார் இளமை கல்வி செல்வம் அதிகார மென்னுமிவைகளாலுள்ளதாகிய அகங்காரமொழிந்தும், பொருளில்லார் வறுமையால் அச்செருக்குடையார்பின்சென்றுதாழ்ந்து நிற்குஞ் சிறுமையினீங்கியும் இருப்பது அரிது. அவ்வாறிருத்தல் உயர்ந்தசாதியினும் உயர்ந்த குடிப்பிறப்பிற்றான் உண்டாகும். அவ்வுயர் குடிப்பிறப்பே பிறப்பிறப்பை நீக்குதற்கு வாயிலாம். ஆகலான் அவ்வுயர்ந்த குடியிற் பிறந்து சிவபிரானுக்கு நாம் என்றும் அடிமையாவோமென்று கருதி அச்சிவபிரானிடத்து மெய்யன்போடும் சைவசமயத்தைப் பொருந்தும் புண்ணியப் பேறு பெறுதும் அரிதாம். அச்சைவ சமயத்தினுள்ளும் உயர்ந்த சித்தாந்த நெறி உணர்ச்சியைப்பொருந்தி அவ்வுணர்ச்சியால் பிளவுபட்ட இளம்பிறை அணிந்த சிவபெருமானை வழிபடப்பெறுவாருளராயின் அவரே மலத்தாலுண்டாம் துன்பங்களினின்றும் நீங்கிப் பிறவாநெறியாகிய முத்திப் பேறடைவர். (எ...று) (கக)

உத்தமராட்டிஸ் உத்தமசாதியில் மானுடராய்ப்பிறத்தல் வேண்டப்படுமெனவும் வேண்டப்படுதற்குக் காரணம் உணர்ச்சி வீசேடமெனவுங் கூறுகின்றது.

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைதந் தாடு மரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரு மண்மே லவந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் தழலு மூம னொன்றையு முணரா ரந்தோ.

(கொ-டு) ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் மனம்வாக் காயம் பணிக்கா அன்றே மானுடப் பிறவிதானும் வகுத்தது எனவும் அந்தோ ஊன் எடுத்து உழலும் ஊமர்ஒன்றையும் உணரார் எனவுங் கூட்டுக.

வாக்கு என்பது வடசொல் முடிவு பற்றி வாக் எனநின்றது. வாக்கின் றொழில் அசைத்தலும் செபித்தலு மாமென விரிக்க.

(பொ-ரை) அப்பிறப்பிறப்பை நீக்குதற்பொருட்டு பசுவினிடத்துண்டாம் பால் தயிர் நெய் கோமயம் கோசலம் என்னும் பஞ்ச கவ்வியத்தினை அபிஷேக மாகக்கொண்டருளும் சிவபெருமானை மனத்தால் நினைந்தும் வாக்கால் புகழைத் துதித்தும் மந்திரங்களைச் செபித்தும் காயத்தால் பணிந்தும் வழிபாடு செய்ய வேண்டும். இவ்வழிபாடு எனைப்பிறவிகளிற் செய்தல் கூடாமையால் அவ்வழி பாட்டின் பொருட்டாகவன்றே பிறவி விசேடமாகிய மானுடப்பிறவியைமுன் செய்த தவத்தால் வகுத்ததாம். மேலுலகத்துள்ள விட்டுணு முதலிய தேவர்க ளும் அவ்விறைவனை வழிபடுதல் எனை உலகங்களிற் கூடாமையால் தேசவிசேட மாகிய இம்மண்ணுலகத்தில் வந்து அச்சிவபிரானை அருச்சிப்பர். அவ்வாறு அருச் சிப்பதற்குரிய இவ்வுலகத்து அருச்சிப்பதற்குரிய மானுட சரீரம் பெற்றும் அரு ச்சிக்கவேண்டுமென்னு முண்மையை ஐயோ பிறவியிற் பட்டிழலும் ஊமராகிய எனையோர் சிறிதும் அறியமாட்டார். ஆதலால் உண்மை அறிதற்குரிய சாதி விசேடமும் குடிப்பிறப்புவிசேடமும் வேண்டப்படும். (எ...று) (கூஉ)

வாழ்விலுள்ளாகிய மையலை நீக்குதற்கு சரீரநிலையாமையை நோக் குதல் உபாயமெனக் கூறுகின்றது.

கருவினு ளழிவ தாயுங், கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனு யழிவ தாயும்
தருணனு யழிவ தாயுந் தானைத் தழிவ தாயு.
முருவவே யழிவே யாரு ளுள்ளபோ தேபா ருய்ய.

(கொ-டு) நரைத்துத் தானழிவதாயும் எனவும், உள்ளபோதே உய்யப்பார் எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மானுடவாக்கை அவ்வளவு பெருமையுடையதாயினும் மாதாவி னுடைய கருப்பதிற்றானே அழியினுமழியும். பிறந்தவுடனே அழியினுமழியும். பிறந்து சிறிது காலமிருந்து அழியினுமழியும். பாலப்பருவத்திலழியினுமழியும். யௌவனப்பருவத்திலழியினுமழியும். நரையுண்டாகிய விருத்தப்பருவத்திலழியி னுமழியும். இவ்வளவுநாள் நிற்குமென்று அறியமுடியாமல் நீரினிடத்துண்டாங் குமிழி நிலைபெறாது அழிதல்போல் எப்பொழுதும் சரீரம் அழியுந்தன்மையதாம். ஆதலால் நிலைத்திருக்கும் பொழுதே உய்யும் வண்ணம் அந்நிலையாமைகளையுற்று நோக்குவாய். அவ்வாறு நோக்குவார்க்கு சரீரமுதலிய வற்றானுண்டாம் மையலை விடுதல் கூடும். (எ...று) (கூஎ)

விடயங்களின் அறிவும் அறிவும் வாழ்க்கையுழ் நிலையுடையனவல்ல வென அறிதலும் அம்மையலை நீக்குதற் குபாயமெனக் கூறுகின்றது

ஒருபுல னுகரும் போதங் தொன்றிலை யொன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி வந்திடு மெல்லா மாறு
மொருபொழு தணரி லுண்டா மல்லதிவ் வல்லல் வாழ்க்கை
மருள்கன வதுவும் போல மாயும்பின் மாயு மன்றே.

(கொ-டு) அங்கு ஒரு புலன் நுகரும் போது ஒன்று இலை ஒன்றின்பா லும் வருபயன் மாறி மாறி வந்திடும் ஒரு பொழுது எல்லா மாறும் அல்லது இவ்வல்லல் வாழ்க்கை கனவும் மருளதுவும் போல பின்மாயும் அன்றே மாயும் உணரின் உண்டாம்.

(பொ-ரை) மானுட சரீரத்தைப்பெற்று அதில் நின்றுகொண்டு ஒருபொருளை அனுபவிக்குங்கால் மற்றொருபொருளை அனுபவிக்க முடியாமையால் பொருளை அறியுமறிவும் எல்லாப்பொருளையுமொருசார அறியமாட்டாது. ஒன்றைஅறியுமிடத்தும் விட்டுவிட்டு அறிவதன்றி தடையின்றி அறியமாட்டாது அவ்வாறறிதலும் உறக்கம் மூர்ச்சை முதலிய வற்றில் சிறிதுமில்லையாய்விடும் அதுவன்றி இவ்வாக்கையின் பொருட்டுளதாகிய செல்வம் என்னும் அல்லலும் கனைப்பிடாருள் போலவும் மயக்கப் பொருள்போலவும் மாயுந் தன்மையுடையதாம். எவ்வாறெனின், கனைமுடிவுபோகாது இடையே மாய்வதுபோலவும் மயக்கந்தான்றிய பொழுதே மாய்வதுபோலவுஞ் செல்வமும் மாயுமென்றறிக. ஆதலால் இவ்வறிவு நிலையாமை செல்வம் நிலையாமைகளை உணரவல்லார்க்கு அவற்றுலாகிய மையலை விடுதல்கூடும். (எ...று) (கூ)

அதிகாரஞ் செய்வோர் தாம் சும்மாயிருத்தலை நோக்கி நம்மைப் பிணமெனக் கருதலும் அம்மையலை நீக்குதற் குபாயமெனக் கூறுகின்றது.

அரிசனம் பூசி மாலை யணிந்துபொன் னுடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப் பாரகர் பரிக்கக் கொட்ட
வரிசின்ன மூதத் தொங்கல் வந்திட வுணர்வு மாண்டு
பெரியவர் பேச்சு மின்றிக் கிடத்தலாற் பிணத்தோடொப்பர்.

(கொ-டு) மேலைச் செய்யுளிலுள்ள உணரின் உண்டாம் என்னும் வாக்கியத்தை இச்செய்யுளின் இறுதியிலும் வைத்துரைக்க.

(பொ-ரை) அதிகாரஞ் செய்வோர் சந்தனமுதலிய வாசனைதிரவியங்கள் பூசியும் வாசத்தோடு கூடிய பூமாலைகள் அணிந்தும் பீதாம்பரம் போர்த்தும் தம்

பரிவாரங்கள் பின்னே வரவுஞ் சுமப்பவர் சிவிகை சுமக்கவும் வாத்தியங்கள் முழக்கவும் வரிபொருந்திய சின்னங்கள் ஊதவுஞ் சத்திர சாமரங்கள் சூழவரவும் அறிவற்றுப் பெரியராய்ப் பேச்சின்றி அகங்காரத்தைப் பொருந்திக்கிடத்தலால் அவர் செத்தவரோடொப்ப ரென்பதை அறியவல்லாயின் அவ்வாறறிபவர்க்கு வாழ்விலுலாகிய மையலை விடுதல் கூடும். (எ...று)

சத்திர சாமரங்க ளென்பவற்றை இக்காலத்தில் எடு பிடி என்பர். சத்திரம்-கையிற்றரிமமாயிருப்பது. அதாவது கத்திமுத லிய ஆயுதங்கள். (கூ)

சிவபிரானை வழிபடுதலாலுண்டாம் அருட் செல்வத்தை நோக்கப்பொருட் செல்வம் நிலையன்றெனக் கருதிச் செல்வரைப் பின்பற்றிவ்வாழ்தல் பயனிலை யென்றெண்ணுதல் வறுமையாலுண்டாஞ்சிறுமைநீங்குதற்குபாயமெனக் கூறுகின்றது.

பிணத்தினை யொத்து வாழ்வோர் பின்னடைப் பிணங்கள்போல
வுணக்கியே யுழல்வீ ருங்க ளுடலுயி ருணர்வு மெல்லாங்
கணத்திடைத் தோன்றி மாயுங் காயமென் றறிந்தொருக்கால்
வணக்குறீ ரரனை யென்றும் வானவர் வணங்க வைப்பன்.

(கொ-டு) அரனை ஒருக்கால் வணக்குறீர் என்றும் வானவர் வணங்க வைப்பன் காயம் கணத்திடைத் தோன்றி மாயும் உங்கள் உடல் உயிர் உணர்வும் எல்லாம் உணக்கியே உழல்வீர் என்று அறிந்து பிணத்தினை ஒத்துவாழ்வோர் பின் கடைப் பிணங்கள் போல் (ஆம்).

(பொ-ரை) மேற்கூறியவாறு செல்வமுதலியன நிலையாவென்பதனை உணர்ந்து சிவபிரானை ஒருகாலேனும் வழிபாடு செய்கின்றிலீர். செய்யப்பெறின் எக்காலத்துந்தேவர்களும் வணங்கும் வண்ணம் அழியாச் செல்வத்தை அச்சிவபிரான் தருவன். அச்செல்வத்தை நோக்க உடம்பு கணத்திற்றோன்றி அழியுந்தன்மை யுடையதாம். அவ்வுடம்பின் பொருட்டு உம்முடைய உடல் உயிர் உணர்வுமுதலிய வெல்லாம் வருத்தமுறும்படி வருந்திநீர் சேர்க்குஞ் செல்வஞ் செல்வமன்று. இவ்வாறு உடலின்றன்மையினையுஞ் செல்வத்தின்றன்மையினையும் உணர்வீராயின் இச்சிறு செல்வத்தை வேண்டிப்பிணத்தினை ஒத்துவாழும் அவ்வதிகாரச் செருக்குடையார்பின் சென்று நடைப்பிணங்கள் போல் நின்று தாழ்தலாகிய சிறுமையினீங்குதல் உமக்குக் கூடும். (எ...று) (கூ)

நான்காம் அதிகரணம் முடிந்தது.

இரண்டாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திரு விருத்தம் கஅசு.

மூன்றாஞ் சூத்திரம்

பசு உண்மை.

சூடகத்தைக் குயவன் செய்தலினாலேயே கொள்வோன் உண்டென்று கருதப்படுமாறு போலப் பிரபஞ்சத்தை இறைவன் தோற்றுவித்தலினாலேயே அப்பிரபஞ்சத்தில் பற்றுச் செய்து நிற்கும் உயிர் உண்டென்று பெறப்படுமென்பதை இச்சூத்திரத்திற் கூறவேண்டுவதாயினும் இயைபு பற்றி மேலைச் சூத்திரத்தில் "அலகிலா உயிர்க" ளின் பொருட்டு என்றார். என்றதனால் அவ்வுயிரென்பது தான் உண்டோ இல்லையோ? இல்லையாயின் உயிர்களின் பொருட்டென்றது பொருந்தாது, உண்டாயின் அது யாது? எங்கிருக்கும்? என்னும் ஆசங்கைகள் நிகழுபன்றே? அவ்வாசங்கை நீக்குதற் பொருட்டு மூன்றாஞ் சூத்திரமெழுந்தது.

சீதமின்மையால் பனி இன்மை காணப்படுதல் போல உடல் இயக்கமின்மையால் உயிரின்மை காணப்படுமன்றே. இவ்விதிர்மறை கொண்டு உடம்பாட்டு முகத்தால் உடல் இயக்கம் உண்மையால் உயிர் உண்டென்று காட்டுகின்ற அனுபலத்தி எதுவென்னும் அனுமானப் பிரமாணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

சூனியம், தூலவுடம்பு, ஐம்பொறி, சூக்கும உடம்பு, பிராணவாயு, பிரமம், சமுதாயம் என்னும் ஏழும் உயிரல்ல வென்றும் இவற்றின் வேறாய்க் காணப்படும் உடலின் கண் உயிர் உண்டென்றும் கூறுகின்றது.

உயிரெனப் படுவ திந்த வுடலின்வே றுளதா யுற்றுச்
செயிருறு மிச்சா ஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வுறு மின்பத் துன்பப் பலங்களு நுகரும் பார்க்கிற்
றுயிலொடு மஞ்ச வத்தைப் படுமுண்மை துரியா தீதம்.

(கொ-டு) உளதாய் உற்றுச் செயிர்உறும் இச்சாஞானச் செய்திகள் உடையதாகி துயிலொழியும் பயில்வு உறும் இன்பத்துன்பப் பலங்களும் பார்க்கில் நுகரும் அஞ்சு அவத்தைப்படும் துரியாதீதம் உண்மை உயிரெனப்படுவது இந்த வுடலின் வேறு.

(பொ-ரை) உயிர் அறியப்படாமையால் சூனியமென்பர். சூனிய மென்றுணர்வது வேறுண்டாதலின் அவ்வாறுணர்வதுவே உயிராம் எனமறுக்க உயிர் உடம்பே யென்பர். உடம்பினைபானெனதென்று அபிமானித்து நிற்பதொன்றுண்டாதலின் அவ்வாறு நிற்பதே உயிரென மறுக்க ஐம்பொறியே உயிரென்பர். அவ்வைம்பொறிகட்கு அறிதல் மாத்திரையே யன்றி இச்சையுந்தொழிலுமில்லாமையின் அம்மூன்றனையு முடையதாய் அவ்வைம்பொறியின் வேறுயுள்ளதே உயிரென்று மறுக்க சூக்கும உடம்பே உயிரென்பர். அவ்வுடம்பு என்றும் ஒரு தன்மைத்தாய் அகத்தே யிருந்துஞ் சொப்பனத்திலொன்றைத் தெளிவாய் அறியவுஞ் சாக்கிரத்தில் அதனையே மயங்கி அறியவுங் காண்டலால் அச்சூக்கும தேகத்தின் வேறுக நின்றும் அதனோடு கூடி அகத்திற் சென்றவிடத்துத் தெளிவாய் அறிவதும் தூலதேகத்தோடுகூடி புறத்துச்சென்ற விடத்து மயங்கி அறிவதுமாகிய தொன்றுண்டாதலின் அவ்வாறறிவதே உயிரென மறுக்க பிராணவாயுவே உயிரென்பர். உசுழுத்தியிற் பிராணவாயு இயங்கிக்கொண்டிருக்கவும் இன்பதுன்பம் அனுபவிக்கப் படாமையின் அப்பிராணவாயுவின் வேறுய் இன்பதுன்பம் அனுபவிப்பதொன்றுண்டாதலின் அதுவே உயிரென மறுக்க பிரமமே உயிரென்பர். அது அறிந்தபடியே அறிவதன்றி மயங்கி ஐந்தவத்தைப்படாமையின் அவ்வாறு மயங்கி ஐந்தவத்தைப்படுவதொன்றுண்டாதலின் அதுவே உயிரென மறுக்க அனைத்துங்கூடிய சமுதாயமே உயிரென்பர். அவ்வனைத்திற்குந்தனித்தனிப்பெயரிருப்பதனாலும் அவற்றிற்கு உயிரெனப் பெயரின்மையாலும் அவ்வனைத்தும் நீங்கிய அநீதத்தின்கண் நிற்பதொன்றுண்டாகலானும் அதுவே உயிரென மறுக்கவும் அவ்வுயிர் எவ்விடத்துளதென்று வினவ காணப்படும் உடலின்கண் இவற்றின் வேறுய் உளதாம். (எ...று)

உளதாமென்றதனால் உயிர் சூனியமெனவும் உற்றுச்செயிருறுமென்றதனால் உடம்பே உயிரெனவும் இச்சாஞானச்செய்திகள்உடையதாகியென்றதனால் ஐம்பொறியே உயிரெனவும் தூயிலெடும் பயில்வுறுமென்றதனால் சூக்கும உடம்பே உயிரெனவும் இன்பதுன்பப் பலன்களுநும் பார்க்கில் நுகருமென்றதனால் பிராணவாயுவே உயிரெனவும் அஞ்சவத்தைப்படுமென்றதனால் பிரமமே உயிரெனவும் துரியாதீதம் உண்மையென்றதனால் சமுதாயம் உயிரெனவும் குறிப்பே தும் எழும் விரிந்தவாறுகாண்க. அவ்வாறு விரிந்ததால் சிவஞானபோதம் மூன்றும் சூத்திரம்போல் இச்செய்புளரும் எழு கூற்றையுடையது. அவற்றுள் சூனியம் உயிரென்னு முதற்கூறு உளதாயென்றதனால் இம்முதற் செய்புளிற் சாதிக்கப்பட்டது. அதன்கண் வேறு ஆகாமையின் விரித்திலர். ஏனைய ஆறு கூற்றுள் இர

ண்டாவதும் மூன்றுவதும் நான்காவதும் இச்சூத்திரத்துள் கூறுகி
ன்றார். ஐந்தாவதும் ஆறுவதும் ஏழாவதுமாகிய கூற்றுக்கள் நான்கா
ரத்துள் கூறப்படும். (க)

இரண்டாங்கூறுகிய உடம்பு உயிரன்றென்பதை பிணமாய்க்கி
ட்தலினும், உறக்கத்தினும் உணரப்படாமையின் வைத்துவிளக்
குகின்றது.

உடலின்வே றுயிரே னிந்த வுடலன்றே றுணர்வ தென்னி
னுடல்சவ மான போது முடலினுக் குணர்வுண் டோதா
னுடலினின் வாயுப் போது லுணர்ச்சியின் றுடலுக் கென்னி
னுடலினின் வாயுப் போகா தறக்கத்து முணர்வ தின்றே.

(கொ-டு) உடலுக்கு உணர்ச்சி இன்றெனின்.

(பொ-ரை) எழுவகை எதுக்களாலும் உடம்பு முதலியவற்றின் வேறாய் உயிர் உண்டெனச் சாதித்தபின்னரும் அறியுந்தன்மை உடம்பிற் காணப்படு தலால் அவ்வுடம்பே உயிராம் அதனின் வேறாய் உயிருண்டென்றல் பொருந் தாதென்பர். அவ்வாறு உடம்பே அறியுமெனின் உடம்பு பிணமாய்க் கிடந்த விடத்தும் உணர்வு நிகழவேண்டும்; நிகழப்பெறுமையிலுல் உடம்பு உயிரென் றல் எவ்வாறு பொருந்தும் என மறுத்த விடத்துப் பிணமாய்க் கிடந்த பொழுது பிராணவாயு நீங்கினமையால் உணர்வு நிகழவில்லை. பிராணவாயு நீங் காதிருப்பின் உணர்வு நிகழும் ஆதலால் உடம்பின் வேறாய் உயிருண்டென்றல் பொருந்தாதெனின் அவ்வாறாயின், சுழுத்தியில் பிராணவாயும் உடம்புமிருத்த லால் உணர்வு நிகழவேண்டும். அவ்விடத்து உணர்வு நிகழாமையின் உடம்பு அறியுமென்றதும் அதுவே உயிரென்றதும் எவ்வாறு பொருந்தும்? (எ...று)

மூன்றுங்கூறுகிய ஐம்பொறிகள் உயிரன்றென்பதை ஒவ்வொ ன்றையே அறிதலினும் ஒன்றை யொன்று அறியாமையினும் தாமே அறியாமையினும் வைத்து விளக்கு கின்றது.

அறிவதைம் பொறியே யென்னி னுறக்கத்தி னறியா வாகு
மறிவது மொன்றொன் றாக வொன்றொன்று பறியு மென்னி
னறிவுக ளொன்ற யொன்றங் கறிந்திடா வைந்தை யுங்கொண்
டறிவதொன் றுண்ட தாண்மா வைம்பொறி யறிந்தி டாவே.

(கொ-டு) ஐம்பொறியேஅறிவது உறக்கத்தின் அறியாவாகும் என்னின்? எனவும் அறிவுகள் ஒன்றை அங்கு ஒன்று அறிந்திடா எனவும் கூட்டுக.

(பொ-மை). மேல் அறியுந்தன்மை உடம்புக்கின்மையால் அது உயிரன் றெனச் சாதித்த விடத்து ஐம்பொறிகளே அறியுந்தன்மை யுடையனவாம்; அப் பொறிகள் உடம்பு பிணமாம்போது கெட்டொழியும்; நனவின்கண் அவ்வைம் பொறிகளே உடம்பினின்று அறிந்தும் உறக்கத்தின்கண் அறியாதும் நிற்கும். ஆதலின் அவ்வைம்பொறியே உயிரெனின், அவ்வாறுயின் நனவின்கண்ணுறும் அவ்விந்திரியங்கள் ஒவ்வொரு பொருளாக அறிவதன்றி எல்லாப்பொருளையும் ஒன்றுப் அறியமாட்டாது. ஒன்றொன்றுக அறிவதுவே அவற்றின் இயல்பா மென்னின், அவ்வாறறிவதிலும் ஒரு இந்திரியம் ஒரு விடயத்தை அறியும் போது மற்ற இந்திரியம் மற்றொரு விடயத்தை அறியாது. அவ்வாறறிதலினும் ஒரு இந்திரியம் தனக்குரிய ஒரு விடயத்தை அறியுமேயன்றி பிற இந்திரியங் களாலறியப்படும் விடயங்களை அறியாது. அதாவது கண் உருவத்தை அறியும் போது செவி ஓசையைக்கேளாது. கண்ணும் ஒவ்வொரு உருவப்பொருளாய் அறியுமேயன்றி எல்லா உருவப்பொருளையும் அறியாது; அக்கண்ணும் உருவத் தை அறியுமேயன்றி ஒலியை அறியாது. இவ்வாறே பிறவும் காண்க. ஆத லால் அவ்வைந்திந்திரியங்களையும் கொண்டு ஐந்து விடயங்களையும் அறியும்பொ ருளொன்றுண்டு. அதுவே உயிராவதன்றி ஐம்பொறிகள் தாமே அறியாமையால் உயிராகமாட்டாவாம் எ...று. (கூ)

...ன்கான்கூறுகிய பிராணவாயு உயிரன்றென்பதை அப்பிரா ணவாயு நிற்கும்போதும் கருவிகள் நிலலாமையில் வைத்து விளக்கு கின்றது.

அறிந்திடும் பிராண வாயு வடங்குதல் விடுதல் செய்தா
லறிந்திடா துடலு றக்கத் தறிவின்மை காண மின்மை.
யறிந்திடு முதலி யாகி னதுநிற்கக் காரணம் போகா
வறிந்திடும் பிராணன் றன்னை யடக்கியும் விட்டு மான்மா.

(கொ-டு) பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தால் அறிந்திடும் உடலும் உறக்கத்துக்காரணம் இன்மை அறிவின்மை அறிந்திடாது அறிந்திடும் முதலி யாகின் அது நிற்கக்காரணம் போகா அடக்கியும் விட்டும் பிராணன்றன்னை அறி ந்திடும் ஆன்மா.

(பொ-ரை) ஐம்பொறிகள் உயிரல்லவெனச் சாதித்தவிடத்து பிராணவா யுஇயங்குதலினுலேயே அறிவு நிகழக்காண்டலின் அப்பிராணவாயுவே அவ்வை ம்பொறிகளையுங்கொண்டு அறிவதாகிய உயிரென்றல் பொருந்தும்! உறக்கத்தில் உடம்பின்கண் அப்பிராணவாயு இயங்கினும் ஐம்பொறிகளாகிய கருவி னின்மையால் அறிவின்மையாய் அறியாதாயிற்று; ஆதலின் பிராணவாயுவின் வேறாய் உயிருண்டென்றல் பொருந்தாதெனின், பிராணவாயுவே அறியுந்தன் மையுடைய கர்த்தாவாயின் உறக்கத்தில் அப்பிராணவாயு இருக்கவும் கருவிகள் போதல் கூடாவாம். ஆதலால் கருவிகளை அடக்கியும் விட்டும் பிராணவாயுவையு ங் கொண்டு அறிவதாகிய உயிர் வேறுண்டு என்ன, சுழுத்தியில் உயிரிருக்கவுங் கருவிகள் ஒடுங்கி இருக்குமென்று கூறுவதுபோல் பிராணவாயுவே கருவிகளை ஒடுக்கியும் விட்டும் அறியுமென்றல் என் கூடாதெனின், பிராணவாயு சுழுத்தியி லும் நனவிலும் ஒரு தன்மையான போக்கு வரவுடையதாய் இயங்கக்காண்கின் றும்; அவ்வாறு அறிவும் ஒரு தன்மையாய் இன்றி நனவில் அறிந்தும் சுழுத் தியில் அறியாதும் நிற்றலாகிய வேறுபாடு காணப்படுதலால் பிராண்வாயுவின் வேறாய் அவ்வேறுபாடுடையது வேறொன்றுண்டென்ப தறியப்படும். அதுவே இந்திரியங்களை ஒடுக்கியும் விட்டும் பிராணவாயுவைத் துணையாக்கொண்டும் அறி வதாகிய உயிரெனப்படும். (எ...று) (சு)

மூன்றுஞ்சூத்திரம் முடிந்தது

ஆகத்திருவிருத்தம் ககூ0.

இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்.

பசு இலக்கணம்

மேல் மூன்று சூத்திரத்தாலும் பதி பசு பாசமென்னும் மூப் பொருளுண்டென்பதற்குப் பிரமாணங் கூறவே அம்மூப்பொருள் களின் இலக்கணம் யாதோ என்னும் வினை நிகழு மன்றே? அந்நிகழ் ச்சி பற்றி பசு இலக்கணம் பாசு இலக்கணம் பதி இலக்கணம் என் னும் மூன்றினையும் முறையே மூன்று சூத்திரங்களால் கூறத்தொட ங்கி முதற் கண்மேல் அடுத்து நின்ற பசு விலக்கணங் கூறுகின்றார்.

அந்தக் காணங்கள் ஆன்மாவன் றெனவும் ஆணவமலத்தின் சேர்க்கையால் ஆன்மா அந்தக் காணங்களைக் கூடி ஐந்தவத்தைப் படுமெனவுங் கூறுகின்றது.

உணர்வன காண மென்னி லொன்றையொன் றுணரா வெவ்வே
றிணைதருஞ் செயல்க ணான்கு மறிந்தவை யடக்கி யாக்கிப்
புணருமுட் கருவி யாக்கிப் புறக்கரு வியினும் போக்கி
யிணைதரு மிவற்றின் வேறு யானென தென்ப தான்மா.

(கொ-டு) காணம் உணர்வன என்னில் ஒன்றை ஒன்று உணரா ஆன்மா இவ்ற்றின் வேறுய் யான் எனது என்பது இணைதரும் நான்கு செயல்களும் அறிந்து அவை அடக்கிப்புணரும். உட்கருவி ஆக்கி ஆக்கிப்புறக் கருவியினும் போக்கி, வெவ்வேறு இணைதரும்.

அடக்கி யென்பது சொப்பனத்தையும் ஆக்கி யென்பது சாக்கிரத்தையும் குறிக்கும்.

(பொ-ரை) இனி மன முதலிய அந்தக்காணமே அறியுமாதலின் அது வே உயிரெனின், இவ்வந்தக் காணமும் ஐம்பொறி போல் ஒன்றனை யொன் றுணராவாம். அதாவது மனம் சங்கற்பிக்குமே யன்றி சிந்தித்தல் நிச்சயித்தல் அகங்காரித்தல்களைச் செய்யாது. இவ்வாறே புத்தி சித்தம் அகங்காரம் மூன்றினி டத்துங் கண்டு கொள்க. ஆதலால் அந்தக் காணம் நான்கினையுங் கொண்டறியு முயிர் இவற்றின் வேறும். வேறுகியும் யான் என தென்னும் செருக்குறுதற் கேதுவாகிய ஆணவமலம் உயிரோடு அனாதியே பொருந்தி நிற்றலால் உயிரு க்கு தனக்கென அறிவின்றி இவ்வந்தக் காணங்களாலாய நான்கு தொழிலையும் இவற்றோடு கூடி அறியும். அவ்வாறறிகின்ற ஆன்மா சொப்பனாவத்தையில் இவ்வந்தக் காணங்களை அடக்கி உட்கருவிகளாக்கி அகத்து நிகழ்வதையறியும். சாக்கிராவத்தையில் இவ்வந்தக் காணங்களை புறக்கருவிகளோடு சேர்த்துப் புறக் கருவிகளாக்கிப் புறத்து நிகழ்வதையறியும். இவ்வாறு அகத்தும் புறத்துஞ் சோ லால் சாக்கிரஞ் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீத மென்னும் ஐந்தவத் தைகளை ஆன்மா பொருந்தும். இவ்வாறு பொருந்தி நிற்றல் ஆன்மாவுக்குப் பொதுவியல்பாம். (எ—று)

ச்செய்யுள் சிவஞான போதம் நாலாஞ் சூத்திரம் போலமுங் கூறதாகும். அவற்றுள்,

முதற் கூறு—உணர்வன காணமென்னின் ஒன்றை யொன்று ணரா வாதலான் ஆன்மா இவற்றின் வேறும்.

இரண்டாங் கூறு—யாதனை தென்ப திணைதரும்.

மூன்றாங் கூறு—செயல்தனைன்கு மறிந்தவை யடக்கி யாக்கிப் புணருமுட் கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கி வெவ்வேறுணை தரும்.

முதலதிகரணம்.

உணர்வென காரணமென்னில் என்றை என்று உணரா வாகலான் ஆன்மா இவற்றின் வேறு மென்பது.

அந்தக் காரணங்கள் கருவி எனவும் ஆன்மா இவற்றின் வேறெனவும் இவ்வான்மாவை அறியும் ஞானம் பசு ஞான மெனவும் சிவ ஞானம் அதனினும் வேறெனவுங் கூறுகின்றது.

கருவியா மனமும் புத்தி யகங்காரஞ் சித்த நான்கு
மருவியான் மாவே யென்ன வருந்தீப மெனத்தெரிந்தங்
கொருவியான் மாவி னுண்மை யுணர்ந்தவர் தமையுணர்ந்தோர்
தருமிது பசுஞா னம்பின் சிவஞானந் தனக்கு மேலாம்.

(கொ-டு) மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும் கருவியாமருவி எனவும் பின் பசு ஞானம் இதுதரும் சிவஞானந் தனக்கு மேலாம் எனவும் கூட்டுக.

(பொ—ரை) மனம், புத்தி, அகங்காரம். சித்த மென்கின்ற நான்கும் ஒரு விடயத்தை அறிதற்குக் கருவியாக ஆன்மாவோடு ஒற்றித்து நிற்கும். நிற்குங்கால் அக்கருவியே கருத்தா என்னும்படி விளங்கும். அவற்றைக் கருவியாகக் கொண்டு விடயங்களை ஆன்மா அறிவது எதுபோல வெனின், விளக்கைக் கருவியாகக் கொண்டு பொருளை அறியும் கண் போலவாம். ஆதலால் இவ்வந்தக் காரணங்கள் உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பன வென்றறிந்து நீங்கி நின்று இக்கருவியைக் கொண்டறியும் கருத்தாவின் உண்மை யாதென்றாராய்ந்தோ தாமாகிய ஆன்ம சொரூபத்தை இனிதுணர்ந்தவராவர். அவ்வாறு ஆராயுமறிவும் பசு ஞானமேயாம். ஆகலான் அப்பசு ஞானம் வந்த பின்பு அந்த ஞானம் கம்மிடத்தில் முன்னிகழாமையால் காமாக அறிந்தோ மென்றல் பொருந்தாது. அறிவிக்கும் பொருள் வேறிருந்து இப்பருவத்தில் அவ்வறிவினைத் தந்திருக்க வேண்டுமென உணர்ந்து அவ்வறிவினைத் தரும் பொருள் யாதெனத் தேறின் அங்ஙனந் தேறுவார்க்கு அப்பசு ஞானத்தின் மேலாகிய சிவஞானம் விளங்கும். (எ—று)

அந்தக் காரணங்களோடன் நின்று செலுத்தும் அக்காரங்கள் இவை எனவும் அவ்வக்காரங்களைச் சேர்த்து நோக்கிற் பிரணவமா மெனவும் இப்பிரணவதீதின் உண்மை நால்வகை வாக்குகளை உற்று நோக்க வல்லார்க்கு விளங்கு மெனவும் கூறுகின்றது.

அவ்வுட னுவ்வு மவ்வு மனம்புத்தி யகங்கா ரங்கள்
செவ்வைய விந்து நாதஞ் சித்தமோ டுள்ள மாகு
மொவ்வெனு மெழுத்தா மைந்து முணர்வுநித்தொடுங்குமாறும்
பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந் தோன்றும்.

(கொ-டு) அகங்காரம் புத்தி மனம் சித்தமோடு உள்ளங்கள் அவ்வுடன் உவ்வும் மவ்வும் செவ்விய விந்து நாதம் ஆகும்.

(பொ—ரை) அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ள மென்கின்ற ஐந்தும் சடமாதலால் அவை கருவியாக நின்று எவ்வாறு அறிதலைச் செய்யுமெனின், அக்கருவிகளுள் அகங்காரத்திற்கு அகாரமும் புத்திக்கு உகாரமும் மனதிற்கு மகாரமும் சித்தத்திற்கு விந்துவும் உள்ளத்திற்கு நாதமும் என்கின்ற எழுத்துக்கள் உடனின்று செலுத்துவதால் அறிதலைச்செய்யும். அவ்வெழுத்துக்கள் ஐந்தும் பிரிப்பின்றி, நோக்குங்கால் பிரணவ ரூபமாம். இவ்வைந் தெழுத்தானும் உயிரின் கண் உணர்வு மாறி மாறித் தோன்று முறை எது போல வெனின், கடலின் கண்ணே அலை புதிது புதிதாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போலாம். இவ்வைந்தெழுத்தானுங் கருவிகள் தொழிற்படுவதான விகற்பத் தோடு கூடிய இயல்பு நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளைப் பற்றுக் கோடாகச் சார்ந்து தோன்றும் சூக்குமை முதலிய நால்வகை வாக்குகளை உற்று நோக்குவாக்கு இனிது விளங்கும். (எ—று)

உள்ள மென்பது புருட தத்துவமாந் தன்மை. (சு)

அந்தக்காணங்களைச் செலுத்தும் அக்காரங்களின் அதிதெய்வங் களிவை எனவும் இப்பதினைந்தும் கூடிய விடத்து ஆன்மா அறிதலைச் செய்யு மெனவும் போகப்பயிர்ச்சி யுடையார்க்கு இப்பதினைந் தின் உண்மை விளங்கு மெனவும் கூறுகின்றது.

அயனரி யரனு மீசர் சதாசிவ மதிதெய் வங்க
ளுபவரு மவ்வோ டுவ்வு மவ்விந்து நாதந் கட்குப்
பயனுறு மஞ்சி லான்மாப் பரவிடி லசித்தாம் பார்க்கிற்
சயமுறு வ்ளியி ச்ண்டுக் தவிர்த்துறிற் றூணந் தோன்றும்.

(கொ-டு) அவ்வோடு உவ்வும் மவ்விந்து நாதங்கட்கு அயன் அரிஅரனும் ஈசன் சதாசிவம் அதிதெய்வங்கள் உயவரும் அஞ்சில் ஆன்மாப் பாவிடில் பார்க் கின் பயன் உறும் (பாவாவிடில்) அசித்தாம்.

(பொ—ரை) அகார உகார மகார விந்து நாதங்களாகிய அவ்வெழுத்து க்களும் சடமாதலின் அவ்வெழுத்துக்களை முறையே பிரமாவும், விட்டுணுவும், உருத்திரனும், மகேசரும், சதாசிவருமாகிய ஐவரும் அதி தெய்வங்களாய் நின்று செலுத்துவர். ஆகலான் இவ்வாறு காரணமும் அக்காரமும் அதிதெய்வ முமென்னும் இம்முத்திறத்து பதினைந்தோடும் ஆன்மா பொருந்திய விடத்து அறிதற் றொழிலைச் செய்யும். இப்பதினைந்தோடும் பொருந்தாத விடத்து சடம்போல் அறிவின்றிக் கிடக்கும். வலி பொருந்திய பிராணன் அபானனென் னும் இருவகை வாயுவையும் அடக்கிச் செய்யும் யோகிகளுக்கு அவ் யோகப் பயிற்சியில் இவ்வியல்பு இனிது விளங்கும். (எ—று)

அதிதெய்வம் அதிட்டித்து நிற்குந் தெய்வம். அதாவது அக் கரங்களை வாயிலாகக் கொண்டு நிற்குந் தெய்வம். (சு)

அப்பதினைந்தும் சுட்டி அறியப்படுதலின் அவை ஆன்மாவின் வேறெனக் கூறுகின்றது.

ஆன்மாவின் வடிவு தானே யநேகார்த்தக் கூட்ட மென்னிற் பார்ப்பார்கட் கான்மா வின்றுய்ப் பலபொரு ளுண்மை யாகுஞ் சேர்ப்பாய பலவே யுண்மை யென்றிடிற் சென்றி வற்றை யோர்ப்பான்வே றுணர்வோர்க்கெல்லா முணர்பொருள் வேறதாமே.

(கொ-டு) அநேகார்த்தக் கூட்டம் ஆன்மாவின் வடிவுதானே எனின் பார்ப்பார்கட்கு இன்றுய்ப் பல பொருள் உண்மை யாகும் சேர்ப்பாய பலவே உண்மை ஆன்மா என்றிடில் சென்றிவற்றை ஓர்ப்பான் வேறு உணர்பொருள் வேறதாமே உணர்வோர்க் கெல்லாம்.

(பொ—ரை) காரணம், அக்காரம், அதிதெய்வங்களாகிய முத்திறத்தோ டும் கூடிய விடத்தே ஆன்மா அறிதலைச் செய்யு மென்றதனால் அப்பல பொ ருட் கூட்டமே ஆன்ம சொரூபம் என்று சொல்லில், அதனை ஆராயுங்கால் கூட்ட மென்பதற்கு ஒரு பொருளின்றுய் பல பொருளே உண்டென விளங் கும்; அதுபோல ஆன்மா வென்பது தனித்த ஒரு பொருளின்றுய் பல பொரு ளென முடியும்; ஆதலால் அது பொருந்தாது. கூடுதலாகிய அப்பதினைந்துமே உண்மையான ஆன்மா வெனின் அப் பதினைந்தினையும் சுட்டி யறிவதனால் அப் பதினைந்து வேறு அப் பொருளின் வேறுகிய ஆன்மா வேறு. உணர்வோர்க் கெல்லாம் இவ்வுண்மை ஒப்ப முடிந்தது. (எ..:று) (ஞ)

மூலதிகரணம் முடிந்தது.

இரண்டாம் அதிகாணம்.

யானென தென்ப தினைதரும் என்பது.

கருவி முதலிய பதினைந்தோடுங் கூடிய விடத்தன்றி அறிவு விளங்காமையால் ஆன்மாவானது இயல்பாகவே அறிகின்ற பிரமமாகா தெனக் கூறுகின்றது.

அறிவிச்சை செயல்க ளெல்லா மடைந்தனல் வெம்மையும்போற்
குறியுற்றங் கேகா நேக குணகுணி பாவ மாகி
நெறியுற்று நிற்கு மென்னி னிகழ்புலன் கரண மெல்லாஞ்
செறிவுற்றங் கறிவு கொள்ள வேண்டுமோ சிவ னுக்கே.

(கொ-டு) எல்லாம் அங்குக்குறி உற்று அறிவு இச்சை செயல்கள் அடைந்து அனல் வெம்மையும் போல் ஏகா நேககுண குணிபாவமாகி நெறியுற்று நிற்கும் என்னின் சிவனுக்கே நிகழ்புலன் கரண மெல்லாம் செறிவுற்று அங்கு அறிவு கொள்ள வேண்டுமோ.

(பொ-ரை) ஆன்மாக்க ளெல்லாம் கருவி முதலிய பதினைந்தின் வேறு மென மேற் சாதித்த பின்னர் பரிணமவாதிகள் பிரமப் பொருளே வேறுபட்டு சிவ னெனத் தோன்றி அறி விச்சை செயல்களை யடைந்து தீயுஞ் சூடும் போல பிரமமுஞ் சிவனும் பேதாபேதமாகிய குண குணித்தன்மை யுற்று குண மாகியும் சிவனுங் குணகுணித் தன்மையாய் பல வேறு வகைப்பட்டு நிற்குமென் பர். அவ்வாறு பிரமப் பொருளே சிவனையின் அச் சிவனுக்கு பொறிகரணங்களின் கூட்டுறவு இல்லாத போது அறிவு நிகழாமைக்குக் காரணம் யாது? பிரமப் பொருளாயின் பொறிகரணங்களின் துணையின்றி அறிய வேண்டும். அவற்றைத் துணையாகக் கொண்டு அறிவு நிகழ்தலின் சிவன் பிரமமாக மாட்டாது. (எ...று)

பேதா பேதமாவது தீயாகிய ஒரு பொருளில் செம்மையுஞ் சூடும் பிரிக்க முடியாமையால் அபேதம். ஆயினுஞ் செம்மைத் தன்மை வேறு சூட்டுத்தன்மை வேறுதலினால் பேதம். ஆதலின் இது பேதாபேதமாம். இவற்றுள் செம்மை குணி சூடு குணம் இதுபோல பிரமமுஞ் சிவனும் பேதா பேதமாய் பிரமம் குணியும் சிவன் குணமுமாய் நிற்கு மென்பர். அது பொருந்தாதென மறுத்தலாறும். குணி என்பது குணந்தனையுடைய பொருளாம் குறிக்கும். (சு)

சிவஞான சித்தியார் சுபக்கம்.

அறிவிச்சை செயல்களாகிய குணம் ஆன்மாவுக் கின்றெனவும் ஆன்ம சன்னிதியில் காணங் கட்கே உண்டெனவும் கூறுவாரைமறுத்து ஆன்மாவுக் குண்டெனக் கூறுகின்றது.

குணங்களி யின்றி யொன்றுங் குறியுடைத் தான்மா வெண்ணி
னிணங்கிடா விச்சா ஞானக் கிரியைக ளிவையு டற்கட்
பிணங்கிடுஞ் சந்தி திக்க ணெனிற்பிணத் துறக்கத் தின்று
முணங்கிடுங் காண மென்னிற் சந்நிதி யொழிந்த தன்றே.

(கொ-டு) குணங்களை இன்றி ஒன்றுங்குறிஉடைத்து ஆன்மா என்னின் உடற்கண் இச்சா ஞானக்கிரியைகளிவை இணங்கிடா சந்நிதிக்கண் (காணம்) பிணங்கிடும் எனில் பிணத்து உறக்கத்து இன்றும் காணம் உணங்கிடும் என்னில் சந்நிதி ஒழிந்தது அன்றே.

(பொ-ரை) இனிச் சாங்கியர் அறிவிச்சை செயல்கள் குணமாகவும் ஆன்மா குணியாகவும் இருத்தலின்றி அறிவு மாத்திரையாகவே ஆன்மா இருக்கு மென்பர். அவ்வாறுயின் உடலின் கண் அறிவு மட்டும் நிகழல் வேண்டும். அங்ஙனமின்றி அறிவிச்சை செயல்கள் மூன்றும் நிகழக் காண்டலின் ஆன்மா அறிவு மாத்திரம் என்றல்கூடாது. அதன்மேல் உயிரின் சன்னிதியில்காணங்கள் தொழிற் படுதல் பற்றி உடலின் கண் அறிவிச்சை செயல்கள் நிகழுமாதலால் அந்நிகழ்ச்சி பற்றி ஆன்மாவுக்கு அறிவிச்சை செயல்கள் உண்டெனக் கூற வேண்டா மென்பர். அவ்வாறுயின் வியாபகமான சன்னிதியில் உடம்பு பிண மான காலத்தும் உறக்கத்தும் அறிவிச்சை தொழில் உயிரின்கண் நிகழ்தல் வேண்டும். அங்ஙனம் நிகழாமையால் அதற்குக் காரணம் என்னை யென்று வினவ காணங்கள் ஒடுங்கினமையால் என்பர். காணங்கள் ஒடுங்கின காலத்தும் வியாபகமான உயிரின் சன்னிதிக்குக் கேடில்லை யாதலால் சன்னிதி மாத்திரையால் நிகழ்த லென்றல் ஒழிந்தது. ஆதலின் ஆன்மாவின்குணமாகிய அறிவிச்சை செயல்களின் றொழிற்பாட்டால் காரணங்கள் தொழிற்படுமன்றி சன்னிதி மாத்திரையால் காரணங்கள் தாமே தொழிற்படாவாம் (எ...று) (எ)

காந்தத்தின் முன் இரும்பு தொழிற் படுதல் போல, ஆன்மாவின் முன் காரணம் தொழிற்படு மென்பாரை மறுத்து நினைத்தல் மறத்தல் முதலிய மாறுபட்ட தொழில்கள் காரணத்தில் நிகழக் காண்டலின் இழுக்கப் படுதலொன்றே நிகழும் அவ்வுவமை பொருந்தா தெனக் கூறுகின்றது.

சந்நிதி குணம தாகுந் தானென்போ லென்னிற் காந்த
முன்னிரும் பென்ற யீர்க்கு முறைமையுண் டகற்ற லின்றே
முன்னுத லொடுங்க லோடு விருத்தலே கிடத்த னிற்ற
லென்னுமித் தொழில்கண் மற்று மியற்றுவ தான்மா வென்னே.

(கொ-டு) சந்நிதிதான் என்போலென்னின் காந்தமுன் இரும்புக்குணம் தாகும் என்றுய் ஈர்க்கும் முறைமை உண்டு அகற்றல் இன்றும்.

(பொ-ரை) சன்னிதி என்பது வியாபகமாய் நிற்கப் பெறுதல் என்று கொண்டு சன்னிதி மாத்திரையில் காரணங்கள் தொழிற்படு மென்றதை மறுத்தது பொருந்தாது. சன்னிதியாவது எதுபோல வெனின், காந்தத்தின் முன் இரும்பு தொழிற்படுதல் போல உயிரின் முன் உடம்பு தொழிற்படுதற்கு எதிவாயதொரு குண விசேடம் போலவாம் என்பர். அவ்வாறுயினும் ஒரு குணமுடைய காந்தம் இரும்பை இழுத்தலாகிய ஒரு தொழிலைச் செய்வதன்றி அகற்றலாகிய மாறுபட்ட தொழிலைச் செய்தலின்று. அது போல ஆன்ம சன்னிதியில் காரணங்கள் ஒரு தொழிலைச் செய்யாமல் நினைத்தல், மறத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றல் முதலிய மாறுபட்ட தொழில்களைச் செய்வதற்கு என்ன காரணம்? அக்காரணத்தை ஆராயுமிடத்து அத் தொழில்களைச் செய்வதற் கேதுவாகிய அறிவு, இச்சை, செயல்கள் ஆன்மாவினிடத்துக் குணமாக இருந்து அக்குணங்கள் தொழிற்படுதலால் உடம்பு தொழிற்பட்டதே யன்றி ஆன்மா சும்மா யிருக்க அதன் சன்னிதியில் உடம்பு தொழிற்பட்ட தென்றது பொருந்தா தென்பது நன்கு விளங்கும். (எ...று) (அ)

ன்மா உருவப் பொரு ளென்பாரை மறுத்துரைக்கின்றது.

உருவுயி ரென்னி னிந்த வுடலினுட் காண வேண்டும்
வருவது பரிணா மத்தா யநித்தமாம் பூத மாகுங்
கருவினு ளுழைபு மாறுங் காட்டிட வேண்டுங் கண்ணின்
மருவிடா தென்னி னுன்றன் வாயினு லுருவன் றென்னே.

(கொ.டு) உயிர் உருவென்னின்.

(பொ-ரை) இவ்வாறு கூறப்பட்ட ஆன்மா அருவமோ உருவமோ அருவுருவமோ என்னும் சந்தேகத்தின் கண் பவுராணிகர் ஆன்மா உருவமே என்பர். அவ்வாறுயின் இவ்வுடம்பி னுள்ளாகவே வேறொரு வடிவங் காண வேண்டும். அன்றியும் காணப்படும் உருவப் பொருள் மாறுபட்டு அழிவினை யடைவதாகிய காணப்படும் பூதத்தோ டொப்பாகும். அதுவன்றியும் உருவமா யிருக்கின்ற உயிர் மாதாவின் கருப்பத்தினுள் நுழைவ தெவ்வா றென்றும் தெரிவிக்கவேண்

மும். ஆதலால் ஆன்மா உருவுடைப் பொருளென்றல் கூடாது என்று மறுத்த விடத்து கண்ணினுல் காணக் கூடாத உருவை யுடையது ஆன்மா என மீண்டும் கூறுவர். அவ்வாறுயின் உருவத்தை யறிவது கண்ணதலால் அக் கண்ணிற் கெட்டாத தென்ற உன் சொல்லாலேயே அருவமென்று நீயே ஒப்புக் கொண்டதனை இனிது தெளிக. (எ...று) (கூ)

ஆன்மா அருவமாகிய சூக்கும உருவ மென்பாரையும் அதி சூக்கும உருவ மென்பாரையும் மறுத்துரைக்கின்றது.

சூக்கும முருவ தென்னிற் றூலகா ரணம தாகு
மாக்கிய மனுதி தன்மாத் திரைவடி வசேத னம்பி
னீக்கிய சூக்கு மத்தே நிற்பதோ ருருவுண் டென்னி
னுக்கிடு முருவ மெல்லா மசித்துமா யநித்த மாமே.

(கொ-டு) சூக்கும உருவதென்னின் தூல காரணமதாகும் அசேதனம். மனுதிதன் மாத்திரை ஆக்கிய வடிவு பின் நீக்கிய சூக்குமத்தே ஓர் உருநிற்பது உண்டென்னின்.

(பொ-ரை) உயிர் உருவ மன்றென மறுத்த விடத்து அம் மறுப்பு தூல உருவத்தையே குறிக்கு மெனக் கொண்டு அருவமாகிய சூக்கும உருவே உயிர் என்பர். அச் சூக்கும வடிவம் தூல உருவத்தைத் தோற்றி வைக்கின்ற சடமாகிய மனுதி காரணங்கள் தன் மாத்திரைகளால் ஆக்கப்பட்ட புரியட்டக வுடம்பாம் ஆதலால் அதுவும் ஆன்மாவன்று. அதன்மேல் அப்புரியட்டக தேகத்துள் அதி சூக்கும உருவாய் நிற்பதே உயிரென்பர். அவ்வாறு நிற்பது கலை முதலிய தத்துவங்களைத் தோற்றி வைக்கின்ற அசுத்த மாயையின் எகதேச பாகமாகிய பர சரீரமாம். ஆதலால் அதுவும் உயிரன்று. இச் சூக்கும சரீரம் அதி சூக்கும சரீரம் ஆகிய அனைத்தும் அறிவில்லாததும் அழிவெய்தக் கூடியதும் ஆதலால் அவ்வியல்புக ளில்லாத உயிர் அவ்வியல்புகளையுடைய உருவப் பொருளென்றல் எவ்வாறு பொருந்தும்? (எ...று) (கo)

ஆன்மா அருவுருவ மென்பாரை மறுத்துரைக்கின்றது.

அருவுரு வென்னி லான்மா வருவுரு வாவ தின்று
முருவரு வாகா தாகு மொருபொருட் கிரண்டு தன்மை
வருவது மில்லை காட்ட வன்னிபோன் மருவு மென்னி
னுருவமுன் காண வேண்டு முண்மையு மொழிந்து போமே.

(கொ-டு) அருவுரு ஆன்மாவென்னில் அருவுருவாவது இன்றும் உரு அரு வாகாதாகும் இரண்டுதன்மை ஒருபொருட்கு வருவதும் இல்லை காட்டவன்னி போல் மருவு மென்னின்.

பொ-ரை) மேல் ஆன்மா உருவுமன்று அருவு மன்றென மறுத்தவிட த்து கவுளர் என்னும் ஒரு சாரார் ஆன்மாவானது அருவுருவப் பொருளென்பர். அவ்வாறுயின் அருவானது உருவாவதில்லை. உருவானது அருவாவதில்லை. எது போல எனின், அருவான ஆகாயம் உருவாகாதது போலும், உருவான மண் அரு வாகாததுபோலுமாம். ஒன்று பிறிதொன்றாகா தென்பது ஒக்கும். ஒரு பொரு ளிடத்தில் இரண்டு தன்மைகள் இருக்கு மென்றல் என் கூடா தெனின், மாறு பட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளிடத்தில் என்றும் இராவாம் என்று கூற் காட்டமும் அக்கினியுமாகிய இரண்டு மாறுபட்ட தன்மைகள் காட்டத்தி னிடத்தில் காணப்படுகின்றபடியால் மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளிடத்து இராதென்றல் பொருந்தா தென்பர். இவ்வுவமையை ஆராயு மிடத்து காட்டமாய்த் தோன்றிய பொழுது அக்கினி தோன்றுவதில்லை. அக் கினி தோன்றிய பொழுது காட்டங் கெட்டொழிதலோடு அக்கினியுங்கெட்டொ ழியும். இவ்வாறு ஒன்று தோன்றுங்கால் பிறிதொன்று தோன்றுமையால் அவ் விரண்டும் தம்முள் வேறாகி ஒவ்வொன்றுங் காணப்படுதலால் உருவாகி அழி வினை யெய்து மாதலின் இவ்விடத்து உருவ மில்லாததாய் அழியப்படாததா யிருக்கின்ற ஆன்மாவிற்கு உவமை யாதல் செல்லாது. (எ...று)

இறைவனுக்கு அருவுருவத் திருமேனி உண்டென்று நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றதே? அருவமும்உருவமுமாகியமாறுபட்டஇரண்டுதன் மைகள் ஒன்றி யிருத்தல் எவ்வாறுகூடுமெனின், காணப்படாத அரு வமா யில்லாததால் உருவமென்றும், காணப்பட்ட உருவமா யில்லாத தால் அருவ மென்றுங் கூறினதே யன்றி அருவும் உருவுமாகிய இர ண்டின் கூட்டம் அருவுருவமெனக் கூறியதன்று. (கக)

மீளவும் சந்திரன் போல் ஆன்மா அருவுருவ மென்பாரை மறுத் துரைக்கின்றது.

சந்திரன் வடிவு போலத் தானரு வுருவ மென்னின்
வந்துநங் கண்ணிற் றோன்றும் வடிவுள தாமு யிர்க்கு
மிந்தவு ருருவந் தானு யெழுவது முயிரே யென்னிற்
பந்தமா யுயிர்த்தா யான்மாப் பவுதிக மாகு மன்றே.

(கொ-டு) சந்திரன் வடிவுபோல உயிர்க்கும் தான் அருவுருவமென்னின் வந்து நம்கண்ணில் தோன்றும் வடிவு உளதாம் உயிரும் இந்த ஊன் உருவந்தா னுய் எழுவதே யென்னின் ஆன்மா அசித்தாய்ப் பவுதிகமாய்ப் பந்த மாகும்

(பொ-ரை) சந்திரன் அமாவாசை தினத்தில் ஒரு கலையுடன் அருவமாய் நின்று பின் ஒவ்வொரு கலையாய் வெளிப்பட்டு உருவமாய்த் தோன்றுவது போல ஆன்மாவும் அருவுருவமாகுமென்று மீண்டுங் கூறுவர். அவ்வாறுயின் சந்திரனுடைய உருவநிலை காணப்படுதல்போல ஆன்மாவின்உருவநிலை காணப் படல் வேண்டுமே? எனின் ஆன்மாவும் அருவமாய் நின்றே கருவுட் பதிந்து இவ்வுடம்புருவாய் வளர்ந்து காணப்படுமாதலால் அன்மாவின் வடிவம் அருவுரு வமென்றல் பொருந்து மென்பர். அவ்வாறுயின் சித்தாய் அதாவது அறிவுடை யதாய் அழியாததாய் பந்தத்திற்பட்டு நீங்குவதே ஆன்மா வென்றதனுடு மூராணுக அறிவில்லாததாய் அழிவதாய் பந்தமாயுள்ள உடம்பு ஆன்மாவின் வடி வமென்றல் எவ்வாறு பொருந்தும்? எ...று. (கஉ)

ஆகாசம்போல் ஆன்மா அருவமாம் என்பாரை மறுத்துரை க்கின்றது.

அருவனி காரி யான்மா வாகாயம் போல வென்னி
னுருவினைக் கட்டி யாட்டி யோட்டிமீட் டிலாவப் பண்ணி
மருவிநிற் பித்தி ருத்திக் கிடத்திமண் புரட்டி மற்றும்
பெருவிகா ரங்க ளெல்லாந் தருவதென் பேசி டாயே.

(கொ-டு) ஆன்மா ஆகாயம்போல அரு அவிகாரி என்னின்.

(பொ-ரை) இனி பாதஞ்சலரென்னும் ஒரு சாரார் ஆன்மாவானது ஆகாயம்போல் அருவாய் அவிகாரியாய் நிற்குமென்பர். மேல் அருவமென வாதி த்தது சுக்கும வடிவையும் அதிசூக்குமவடிவையும் ஆதலின் இவ்விடத்து அரு வமென்றது அதனின் வேறாய் வடிவமில்லாமையைக்குறித்ததாம். ஆன்மா ஆகா யம்போல் அருவமாயின் உடலோடுகூடி உடலை ஆட்டியும் அவ்வுடலை நிற்கும் படிசெய்தல் நடக்கும்படி செய்தல் மண்ணிற் புரழும்படி செய்தல் முதலிய இப் பெரிய விகாரங்களெல்லாம் எவ்வாறு செய்தல் கூடும் சொல்வாயாக? ஆகா யம் அருவாயும் சடமாதலால் விகாரமில்லாமை கூடும். ஆன்மா அருவாயும் அறி வுடைப்பொருளாதலால் விகாரமில்லாமை கூடாது. ஆதலால் ஆகாயம்போல் அருவென்றல் பொருந்தாது. (எ...று).

அறிவுடைப்பொருளாயிருக்கின்ற இறைவனை விகாரமில்லாத வனென்று கூறுங் கருத்தென்னை? எனின், விகாரமில்லாதவன் பதாவென்றுஞ் செய்யாதவனென்பதல்ல. எல்லாஞ் செய்தும் பற்றில்லாதவனென்பதாம். ஆதலால் முரணின்மையறிக. (கஉ)

ஆன்மா அசித்தென்பாரையும் சித்த சித்தென்பாரையும் சுத்த சித்தென்பாரையும் மறுத்துரைக்கின்றது.

அசித்தெனி னுணரா தான்மா வசித்துச்சித் தாகு மென்னி
னசித்துச்சித் தாகா தாகுஞ் சித்சித் தாவ தில்லை
யசித்தொரு புறமா யொன்றிற் சித்தொரு புறமாய் நில்லா
தசித்துறுச் சித்தே யென்னி னசித்தடைந் தறிவ தின்றும்.

(கொ-டு) ஆன்மா உணராத அசித்தெனின் அசித்துச் சித்தாகும் என்னின் சித்து அசித்தாவதில்லை அசித்துச் சித்தாகாதாகும் ஒன்றில் அசித்து ஒரு புறமாய்ச் சித்து ஒருபுறமாய் நில்லாது அசித்து உறுச்சித்தே என்னின் அசித்து அடைந்து அறிவதின்றும்.

(பொ-ரை) இனி வைசேடிகர் என்னும் ஒரு சாரார் ஆன்மா அறிவில்லாத சடப்பொருளென்பர். சடப்பொருளாயின் அறியமாட்டாது. அறியுந் தன்மை காணப்படுதலால் ஆன்மா சடமாகாதாமென்று கூற ஆன்மா சடமென்றாலும் பின்மனத்தோடு கூடி அறியுமென்பர். அது பொருந்தாது. எவ்வாறெனின், அறிவுடையது அறியாமை யுடையதாகாது, அறியாமையுடையீது அறிவுடையதாசாது என்று கூற அதன்மேல் சைவரி லொருசாரார் ஆன்மா அறிவாயும் அறிவின்மையாயும் அதாவது சித்தசித்தாயிருக்குமென்பர். ஒரு பொருளில் மாறுபட்ட இரண்டு தன்மை இருத்தல் கூடாமையினால் அதுவும் பொருந்தாது என்று கூற அதன்மேல் பட்டாசாரியரென்னும் ஒரு சாரார் கருவிகளைப் பொருந்தாத சித்தே ஆன்மாவென்பர். அவ்வாரூயின் கருவிகளின்றுணை யின்றியே அறியவேண்டும். கருவிகளின் துணையையின்றி அறிதல் கூடாமையால் அதுவும் பொருந்தாது. (எ...று)

சித்தசித்தென மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஆன்மாவினிடத்திலிருக்குமென்றல் பொருந்தாதாயின் முன்னர் ஏழாஞ் சூத்திரத்தில் ஆன்மா "நித்தனுப் சதசத்தாகி" என்று மாறுபட்ட இரண்டு தன்மைகளையுடையது ஆன்மாவென்றதனை முரணுதோவெனின், முரணுது. எவ்வாறெனின், சத்தும் அசத்துமாகிய இரண்டுதன்மை

கள் ஒன்றுமிருக்குமென்று கூறவில்லை. சத்தோடு கூடி சத்தாயும் அசத்தோடு கூடி அசத்தாயும் நிற்றற்கு உரிமை யுடையதெனக் கூறியதாம். ஆதலால் முரணின்மை யறிக. (கச)

ஆன்மா பரமாணு வென்பாரை மறுத்துரைக்கின்றது.

உயிரினை யணுவ தென்னி னுடல்பல துவார மோடும்
பயில்வுறக் கட்டு ணைது பாரமுந் தரித்துச் செல்லா
தபர்வுறு மசித்தாய்ப் பூத வணுக்களி னென்ற தாகு
மியல்புறு மவய வத்தா லணுவுரு விறக்கு மன்றே.

(கொ-டு) உடல் உயிரினை அணுவ தென்னின் அணு உருப்பல துவர்ரம் ஓடும் பயில்வு உறக்கட்டுணைது பாரமுந் தரித்துச் செல்லாது பூத அணுக்களின் ஒன்றதாகும் அயர் வுறும் அசித்தாய் இயல்பு உறும் அவயவத்தால் இறக்கும் அன்றே.

(பொ-ரை) இனி பாஞ்சராத்திரிகள் ஆன்மா அணுமாத்திரமென்று வேதாகமங்களிற் கூறுவதால் இவ்வுடம்பகத்து ஆன்மாவானது அணுவளவாக நிற்கு மென்பர். அணுவடிவாகில் இத்தேகத்துள்ளிருக்கும் பல துவாரங்களில் ஒரு துவாரத்தின் வழியாய் ஓடிப்போய்விடும். அன்றியும் அவ்வுடம்பு பிறிதொரு பொருளோடு பயில்வதற்கும் கட்டுண்டற்கும் வியாபித்திருந்தாலன்றி முடியா வாம். அணுவாய் ஒரு பக்கத்திலிருந்தால் மேற்கூறிய செயல் கூடாது. பெரும்பாரங்களை உடம்பு தாங்கிச் செல்லுதற்கும் அணுவாயிருந்தால் உடன்ப டாது. அம்மட்டோ? பூதபரமாணுக்களோடு ஒன்றாய் அழிவெய்துதலும் வேறுவேறாய் நிற்கும். இயல்பினைப்பொருந்திய பருப்பினையுடையதெனப் பட்டு அழிவினைப்பொருந்தும். ஆதலால் ஆன்மா அணுவென்றல் கூடாது. (எ...று)

வேதங்களில் ஆன்மாவை அணுவென்றதனோடு இவ்விடத்துக் கூறியது முரணுகாவெனின், முரணுது. எவ்வாறெனின், ஆன்மா அந்தக் காணத்துடன் கூடி இருதயத்தில் நின்றுகொண்டு கண்முத லிய பொறிகளின்வழியாய் விடயங்களைக் கிரகிக்கும்பொழுது கிரகிக் கின்ற ஆன்மா அந்த அவத்தையில் மனம் இந்திரியம் விடயமென் பவைகளில் அதி சூக்குமமாய் நிற்றலால் அணுவெனக்கூறியதாம். அன்றி எப்பொழுதும் ஆன்மாவிற்கு வடிவம் அணுவளவென்ப தன்று. ஆதலால் முரணின்மையறிக. (கரு)

மீளவும் ஆன்மாவுடம்பகத்து ஏகதேசமாய் நிற்குமென்பாரைமறுத் துரைக்கின்றது.

உடலினி னேக தேசி யுபிரெனி னுருவாய் மாயும்
படர்வுறு மறிவின் றெங்குஞ் சுடரொளிப் பண்ப தென்னிற்
சுடர்தொடிற் சுடுவ தெங்குந் தொட்டிட மறிவுண் டாகு
மடர்புல னிடத்து மொக்க வறிவெழ வேண்டு மன்றே.

(கொ-டு) உயிர் உடலின் ஏகதேசி (சுடர் ஒளிப்பண்பது) எனின் உரு வாய் மாயும் எங்கும் படர்வுறும் அறிவு இன்று சுடர் ஒளிப்பண்பது என்னின் சுடர்தொடின் சுடுவது தொட்ட இடம் எங்கும் அறிவுண்டாகும் அறிவு அடர் புல்னிடத்தும் ஒக்க எழவேண்டும் அன்றே.

(பொ-ரை) இனி மிருதிநூலார் புல்லின் நுனியிலிருக்கும் சலத்துளி போல் ஆன்மாவானது உடம்பகத்து இதயத்தானத்தில் மிகச் சிறிதாய் நிற்ப அவ்வான்மாவினறிவு எவ்விடத்தும் வியாபிக்கும். எதுபோல வெனின், ஒரு வீட்டினுள் ஓரிடத்தில் ஒரு விளக்கிருப்ப அவ்விளக்கின் ஒளி வீடு முழுதும் பிரகாசித்தல்போல வென்பர். அவ்வாறு ஓரிடத்திருப்பதாயின் உருவமுண்டாய தெனப்பட்டு மேல் உருவமென்றதற்கோதிய குற்றம் அனைத்தும் உண்டாம். அன்றியும் குணமானது அக்குணத்தையுடைய பொருள் அளவில் நிற்பதன்றி அப்பொருளின் வேறாய் வியாபித்து நிற்றல் செல்லாமையால் ஓரிடத்திருக்கும் ஆன்மா எங்கும் வியாபித்தறியுமென்றல் கூடாது. விளக்கின் ஒளி அவ் விளக்கினுடைய சூக்கும வடிவுமன்றி விளக்கின் குணமன்று. குணம் சூடேறும். ஆதலால் விளக்குவமை இவ்விடத்துப் பொருந்தாது. பொருந்துமெனக் கொள்ளினும் விளக்கின் சுடரைத் தொட்டால் சுடுவதுபோல் ஆன்மாவும் இருந்தவிடத்தைத் தொட்டால் அறிவதேயன்றி உடம்பில் எந்த இடத்தைத் தொட்டாலும் அறிதல் கூடாது. அவ்வாறன்றி தொட்ட இடமெல்லாம் உணரக்காண்கின்றோம். அதுவன்றியும் அவ்வுவமையைக் கொள்ளுமிடத்து விளக்கு ஓரிடத்திருந்து ஏக காலத்தில் மற்றுள்ள இடங்களை விளக்குதல் போல ஆன்ம அறிவும் ஐம்பொறி வழியாக ஐந்துவிடயங்களையும் ஏககாலத்தில் அறியவேண்டும். அவ்வாறில்லாமையால் விளக்குவமை எவ்வாற்றானும் பொருந்தாது. (எ...று) (கசு)

ஆன்மாவானது உடம்பளவாக நிறைந்து நிற்குமென்பாரை மறு

உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு முயிரெ னென்னின்
மருவிடா தறக்கம் வாயி லறிவிலாக் கழங்க வேண்டும்

பெருவிடுஞ் சுருங்கும் போதம் பேருடற் சிற்று டற்கண்
வருமுடற் குணைக்க வொக்கக் குறைந்துபின் மாயு மன்றே.

(கொ-இ) உறக்கம் மருவிடாது வாயில் ஒக்க அறிவு வழங்கவேண்டும் பேருடற் சிற்றுடற்கண்பெருகிடும் சுருங்கும்போதம்.

(பொ-ரை) இனி சமணர் உடம்பளவாக உயிர் நிறைந்து நின்று அவ் வுடம்பால் விடயங்களை யறியுமென்பர். அவ்வாறுயின் தூலவுடம்பு நீங்கிய சொப்பளவுத்தையும் தூலருக்கும் உடம்பிரண்டும் நீங்கிய சூழுத்தியவத்தையும் பொருந்தாதிருக்கவேண்டும். அன்றியும் எல்லா உடம்போடும்கூடி நிற்கின்ற சாக்கிராவத்தையினும் ஐம்பொறியினும் ஏககாலத்தில்அறிவு நிகழ்தல்வேண்டும். அதுவுமன்றி பெரிய தேகத்திற்கு பெரிய அறிவும் சிறியதேகத்திற்கு சிறிய அறிவு மாதல்வேண்டும். உடம்பில் ஓர் அங்கங்குறைய உயிரும் ஒருபாகங் குறைந்த உடம்பு அழியுங்கால் உயிரும் அழிய வேண்டும். ஆதலால் அவர்மதமும் பொருந்தாது. (எ...று) (எ)

முதல்வன் போல் ஆன்மாவும் வியாபகப் பொருளாமென்பா
ரை மறுத்துரைக்கின்றது.

எங்குந்தான் வியாபி யாய்நின் றுணருமிவ் வான்மா வென்னிற்
றங்கிடு மவத்தை போக்கு வரவுகள் சாற்றல் வேண்டும்
பங்கமார் புலனெண் ணென்றுப் பார்த்திடல் பகரல் வேண்டு
மிங்கெலா மொழிந்தா னிற்ப தெங்ஙன மியம்பல் வேண்டும்.

(கொ-இ) அவத்தை தங்கிடும் எனக்கூட்டுக.

(பொ-ரை) இனி, அயிக்கியவாதிகள் முதல்வன் போல் எவ்விடத்து வியாபியாய் நின்றறிவது உயிரென்பர். அவ்வாறுயின் சாக்கிரம் முதலிய ஒவ் வொரு அவத்தைகளில் தங்குதலும் பிறப்பு இறப்பாகிய வரவு போக்குகளை பொருந்துதலும் ஐம்பொறிவழியாய் ஐந்து விடயங்களையும் ஒன்றொன்றுயறி தின்றி ஏககாலத்தில் எல்லாவிடயங்களையு மறியாமையும் கூடாவாம். இவ்வாறு அநுபவத்தில் காணப்படுதலால் முதல்வன் போல வியாபகமென்றல் பொருந் தாது. அன்றியும்எல்லாமாய் வியாபித்துநிற்கும் முதல்வன் அவ்வாறு நிற்றலை ஒழித்து உடம்பினுள் ஏகதேசமாய் நிற்றல் எவ்வாறுகூடும்? உருவப்பொருளை னைத்தினுங்கூடுதலே வியாபகமெனவும் அவையனைத்தினையும் அறிதலே முத் துணர்வுறுதலும் கொள்வதனங்குணும் வியாபி என்பதன் பொருள் என்னில் எங்ஙனகாலத்தில் எல்லாப் பொருளும் அழிந்தபொழுது உயிரும் அழிந்துபோ

வேண்டும். அழியுமாயின் பின்னர் புனருற்பவமின்றும். அவ்வாறின்றி சம்சாரத்தின் பின் புனருற்பவமுண்டென்று கேட்கப் படுதலின் எல்லாம் ஒழிந்த சங்காரத்தும் உயிரிருக்கவேண்டும். இருந்தும் ஏனைய பொருளில்லை ஆதலால் உருவப்பொருளைக் கூடுதல் வியாபகமென்றதும் பொருந்தாது. (எ...று) (கஎ)

மாயா காரியத்தால் ஆன்மாவின் ஞானம் ஏகதேசப் படுவதாயிற் றென்டானை மறுத்துரைக்கின்றது.

சுத்தமா மான்ம சித்தைத் துகளுடன் மறைத்த தென்னின்
வைத்துரு துடற்கண் வாயில் காணங்கள் வழியான் ஞான
மொத்துறு மலமற் றுளா முறுமலம் வீடு மின்றும்
பெத்தமு மடையான் முத்த னுய்ப்பிக காணு மீம.

(கொ-டு) உடற் கண்வாயில் காணங்கள் வழியால் ஞானம் வைத்துரு எனவும் மலம் உறும் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) மீண்டும் ஆன்மா முதல்வன் போல் எங்கணும் வியாபகமாய் நின்று அறியும் தன்மை யுடையதாயினும் அவ்வான்மாவினறிவை மாயா காரியமாகிய தநுகரணாதிகள் தடை செய்தலால் சாக்கிர முதலிய அவத்தை உறுதலும் பிறப்பு, இறப்புக்களில் போக்கு வரவு உறுதலும் ஐம்புலன்களை ஒவ்வொன்று யறிதலும் இவை போல்வன பிறவும் பொருந்தி ஏகதேசப் படுவதாயிற் றென்பர். அவ்வாருயின் மாயாகாரியமாகிய இந்திரிய அந்தக் காரணங்களால் ஆன்மாவுக்கு அறிவு விளங்குவதாயிருக்கவும் அதனுடைய முழுமை அறிவைத் தடை செய்யுமென்றது பொருந்தாது. அன்றியும் வியாபகமான ஆன்மா மாயாகாரியத்தால் தடைப்பட்ட தென்னின், மேல் மாயாகாரியத்தை விடுபட்ட முத்திக் காலத்தும் முன் சுத்தமா யிருந்து பற்றியது போல் பின்னும் பற்று மெனப்பட்டு முத்தி என்பதின்றாய் முடியும். வீடு பெற்றபின் மாயாகாரியத்தைப் பற்றுதெனின், முன்னரும் பற்றுதிருக்க வேண்டும். முன்னர் சுத்தமா யிருந்து பற்றிய தென்னின், பின்னரும் சுத்தமெய்தினும் பற்று மென்பதனை ஒத்துக் கொள்ள வேண்டுமாதலால் மாயா காரியத்தால் ஆன்மாவின் அறிவு தடைப்பட்ட தென்று கூறுதல் பொருந்தாது. (எ—று) (கஎ)

சித்தாந்த நெறிப்படி ஆன்ம இலக்கண மிதுவெனக் கூறுகின்றது.

அசித்தரு வியாப கம்போல் வியாபக மருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி யெனும்வழக் குடைய னாகி
நசித்திடா ஞானச் செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய் னாகிப் பசுவென நிற்கு மான்மா.

(கொ-டு) ஆன்மா அசித்து அரு வியாபகம் போல் வியாபகம் அருவம் இன்றாய் எனக்கூட்டுக.

(பொ-ரை) இதுகாறும் ஆணவமல முண்டென்று ஒப்புக்கொள்ளாது ஆன்ம இலக்கணம் கூறிய சமயிகளை மறுத்தவிடத்து ஆன்ம இலக்கணந் தான் யாதோவென வினவ சித்தாந்த நெறிப்படி ஆன்மாவானது இறைவன் போல் பூரண வியாபகமும் அதி சூக்கும சித்தாதலுமின்றி சார்ந்த பொருளினிடத்து அப்பொருள் அளவாக வியாபித்திருக்கும் எகதேச வியாபியாய் இச்சாஞானக் கிரியை என்னும் குணங்களையுடையதாம். உடைபதாயினும் அவ்விச்சாஞானக் கிரியைகள் அநாதியே பற்றி நிற்கும் ஆணவமலத்தினால் தொழிற்படாமல் மறைப்புண்டு கிடக்கும். அதனால் தூலசித்தாய் நிற்கும். இவ்வாறு கட்டுப் பட்டு நிற்குங்கால் பசு வெனப்படும். (எ—று)

தூலசித்து என்பது பிறிதொன்றின் உபகாரத்தால் அறிவது. சூக்கும சித்தென்பது தானே அறிவது. தூலசித்துக்குக் கண்ணினையும் சூக்கும சித்துக்குச் சூரியனெனினும் உவமைகளாம். (20)

காரணசரீரம் கஞ்சுக சரீரம் குண சரீரம் என்னு மூன்றினையும் ஆன்மா பொருந்து முறைமை கூறுகின்றது.

மாயையின் வயிற்றுண் மன்னி வருஞ்செயன் ஞான மிச்சை
யேயுமக் கலாதி மூன்று லகதே சத்தி னேய்ந்திங்
காயுமுக் குணங்க ளந்தக் காரணங்க ளாதி யெல்லாங்
காயபெத் தங்க ளாகிக் கலந்துட னிற்கு மான்மா.

(கொ-டு) ஆன்மா மாயையின் வயிற்றுள் மன்னி ஞானம் இச்சை செயல்வரும் அக்கலாதி மூன்றுல் எகதேசத்தின் எய்ந்து இங்கு எயும் அந்தக்காரணங்கள் ஆதியெல்லாம் பெத்தங்கள் முக்குணங்களாயும் காயமாகிக் கலந்து உடன் நிற்கும்.

(பொ-ரை) மேற் கூறியவாறு அநாதியே ஆணவ மலத்தால் மறைப்புண்டு பசுவென நின்ற ஆன்மாவுக்கு அந்நிலை கேவலமெனப்படும். அதன்பின் அவ்வான்மா அறியாமையினால் துன்பம் அடைந்து வருந்துவதற்கிரங்கி அநந்த தேவராருளால் தரப்பட்ட அசுத்தமாயையிற் கலக்குண்ட பாகமாகிய காரணசரீரத்தைப் பொருந்தும். எல்லாச் சரீரங்களுந் தோற்றுதற்குக் காரணமாகிய மாயையோடு பொருந்தினதால் காரண சரீர மெனப்பட்டது. பொருந்திய பொழுது மறைக்கப்பட்ட அறி விச்சை செயல்கள் பொது வகையால் விளங்கப்பெறும். அதாவது உணர்வும் விருப்பமும் செய்யுந் திறமும் தோன்றி

கல்லது தீயதென்ற உணர்வின் பகுப்பும் வேண்டும் வேண்டா மென்றவிருப் பின் பகுப்பும் செய்யு முறை இவ்வாறு என்ற தொழிலின் பகுப்பும்விள. ங்காத நிலையாம். இது மூர்ச்சையாய்க் கிடந்த ஒரு உயிர் தெளிவு பெற்ற முதல் நிலை போலவாம். அதன்பின் அவ்வசுத்த மாயையினின் றுந் தோன்றும் கலை முதலிய சட்டையாகிய சரீரத்தைப் பொருந்தும். பொருந்தவே முன் பொதுவகையால் விளங்கிய அறிவிச்சை செயல்கள். சிறப்புவகையால் விளங்கப் பெறும். அதாவது முன் பொதுவகை யென் றதற்கு எதிர் மறை. அதன் பின் சாத்துவிகம் இராசதம்தாமதம் என்னும் முக்குணங்களாகிய குணசரீரத்தைப் பொருந்தி அக்குணங்களுள் அடங்கிநின்று பின் வெளிப்படுவனவாகிய மனமுதலிய சூக்கும சரீரம் எலும்பு, நரம்பு முத லிய தூல சரீரமாகிய இரு சரீரங்களிடமாக வரும் விடயங்களைப் பற்றித் தொழிற் செய்யப் பெறும். முக்குணங்களுள் யாதானும் ஓர் குணத்துடன் கூடாமல் தொழிற் செய்ய முடியாததாலால் அந்தக் குணத்துடன் கூடுதலே குண சரீரத்தைப் பொருந்துதலாம். (எ—று) (உக)

சூக்கும சரீரம் தூலசரீரங்களை ஆன்மா பொருந்தி ஐந்தவத்தைப் படும் முறைமை கூறுகின்றது.

சூக்கும மீதகி யாகித் தூலரூ பத்தின் மன்னிச்
சாக்கிர முதலா யுள்ள வவத்தையுட் டங்கி யெங்கும்
போக்கொடு வரவு மெல்லாம் புரிந்துபுண் ணியபங்கள் பாவ
மாக்கியும் பலன்க ளெல்லா மருந்தியு நிற்கு மான்மா.

(கொ-டு) ஆன்மா சூக்கும தேகியாகி எங்கும் போக்கொடு வரவு மெல் லாம் புரிந்து புண்ணியம் பாவங்கள் பலன்களெல்லாம் ஆக்கியும் அருந்தியும். தூலரூபத்தின் மன்னி (எங்கும் போக்கொடு வரவு மெல்லாம் புரிந்து புண்ணி யும் பாவங்கள் பலன்களெல்லாம ஆக்கியும் அருந்தியும்) சாக்கிர முதலாயுள்ள அவத்தையுள் தங்கிநிற்கும்.

(பொ—ரை) மேற்கூறிய மூன்று சரீரங்களும் பரசரீர மெனப்படும். அவ்வாறு பர சரீர மூன்றையும் முறையா னெய்திய ஆன்மா அதன் பின் சூக்கும தேகத்தைப் பொருந்தி எவ்விடத்தும் போக்குவரவுகள் செய்து சூக்கு மமாகிய இருவினைகளைச் செய்து அவ்வினைகளின் பலனாகிய இன்ப துன்பங் களை அநுபவிக்கும். அதன் பின் தூல சரீரத்தைப் பொருந்தி எவ்விடத்தும் போக்கு வரவுகள் செய்து தூல ரூபமாகிய இருவினைகளைச் செய்து அவ் வினைப் பலன்களை அநுபவிக்கும். இவ்வாறு தூலம் சூக்குமம் குணம் தஞ்சு

கம் காரணம் என்னும் ஐந்து சரீரங்களைப் பொருந்தி நிற்கு முறைமையில் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாகிய ஐந்வத்தைப் பட்டு நிற்கும். (எ...து)

சூக்குமவினையும் பலனும் மனோவியாபாரமாம். அதாவது சொப்பனத்தில் செய்யும் வினையும் அநுபவமுமாம். சாக்கிரம்—எல்லாக் கருவிகளோடுங் கூடி நிற்கும் அவத்தை. சொப்பனம்—சில கருவிகள் தொழிற்படாமல் அதாவது தூல தேகந் தொழிற்படாமல் கனவொடு நிற்கும் அவத்தை. சுழுத்தி—கனவுமின்றி உறங்கி விழித்த பின் "ஒன்றுந் தெரியவில்லை. சுகமாய்த் தூங்கினே" னென்று சொல்லப்படும் அவத்தை. துரியம்—பிராணவாயு இயக்கத்துடன் மூர்ச்சையாய்க் கிடந்து தெளிந்த பின் "ஒன்றுந் தெரியவில்லை" யென்று சொல்லப்படும் அவத்தை. துரியாதீதம்—பிராணவாயு இயக்க மின்றி மூர்ச்சையாய்க் கிடக்கும் அவத்தை. (உ2)

ஐந்து சரீரங்களும் ஐந்துகோசங்க ளெனப் பெயர் பெறுமென வும் அவற்றில் ஆன்மா கட்டுப்பட்டுப் போக்கு வரவுசெய்து நிற்கு மெனவுங் கூறுகின்றது.

மருவா னந்தம் விஞ்ஞான மனோபி ராண னன்னமய
முருவாந் தன்மை யுண்டாய்மு னெண்ணுக்கொன் றுசூக்குமமாய்
வருமா மன்ன மயம்பற்றி மாயை முதற்கா ரணமாகு—
மருவா யான்மா வைங்கோசத் தார்ப்புண்டவற்றினகம்புறமாம்.

(கொ-ரை) அருவாய் ஆன்மா முதற்காரணமாகும் மாயை உருவாந்தன்மை உண்டாய் மருவு ஆனந்தம் விஞ்ஞானம் மனோபிராணன் அன்னமயம் அன்ன மயம் முன்பற்றி ஒன்றுக்கொன்று சூக்குமமாய் வருமாம் ஐங்கோசத்து ஆர்ப் புண்டு அவற்றின் அகம் புறமாம்.

(பொ—ரை) கேவலத்தில் ஒரு சரீரமுமின்றி ஆணவமலத்தோடு கூடி அவ்வாணவமல மாத்திரையாய் நின்ற ஆன்மாவுக்கு மூதற் காரணமாகிய மாயையினின்றுந் தோன்றிய மேற்கூறிய காரண சரீரமுதலாகிய ஐந்து சரீரங்களும் வடிவமாம். வடிவாய் நிற்குங்கால் காரண சரீரம் ஆனந்த மயகோச மெனவும், சூக்கும சரீரம் விஞ்ஞான மயகோச மெனவும், தூல சரீரம் மனோமய கோச மெனவும், சூக்கும சரீரம் பிராண மயகோச மெனவும், தூல சரீரம் அன்னமய கோச மெனவும் பெயர் பெறும். இவ்வைங்கோசங்களும் அன்னமயம் முதல்

ஒன்றுக்கொன்று சூக்குமமாய்நிற்கும். ஆன்மா இவ்வைங்கோசங்களில் கட்டுப்பட்டுநிற்குங்கால் அதுவதுவாய் கின்று போக்கு வாவுசெய்யும். எ...து

கேவலத்தில் அறிவிச்சை செயல்கள் விளங்கப்பெறுது நின்ற ஆன்மா மாயையிற் கலக்குண்ட பாகத்தைப் பொருந்திய பொழுது அவ்வறிவு இச்சைசெயல்கள் பொதுவகையால் விளங்கப்பெற்ற மாத்திரையே ஓரானந்த முண்டாகப்பெற்று அம்மயமாய் நிற்றலின் ஆனந்தமயகோச மெனப்பட்டது.

அதன்பின் கலிமுதலிய ஐந்து தத்துவங்களாகிய கஞ்சுக சரீரத்தைப்பொருந்தி அறிவிச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளங்கப் பெற்று அம்மயமாய் நிற்றலின் விஞ்ஞானமய கோசமெனப்பட்டது. விஞ்ஞான மென்பது விசேட ஞானமாம். அது சிறப்பு வகையால் அறிவு முதலியன விளங்குதலை உணர்த்தி நின்றது.

அதன்பின் குண சரீரத்தைப் பொருந்தி அந்தக்கரணத்தின் தன்மை விளங்கப்பெற்று அம்மயமாய் நிற்றலால் மனோமயகோச மெனப்பட்டது.

அதன்பின் சூக்கும சரீரத்தைப் பொருந்தி பிராணவாயுவின் சம்பந்தம்பெற்று அதன் மயமாய் நிற்றலால் பிராணமயகோசமெனப்பட்டது.

அதன்பின் தூலசரீரத்தைப் பொருந்தி அச்சரீரத்தை வளர்ப்பதற்கான அன்னமயமாய் நிற்றலால் அன்னமய கோசமெனப்பட்டது. (உக)

பஞ்சகோசங்களினும் ஆன்மாநிற்கும் முறைமை கூறுகின்றது.

தோற்பாவைக் கூத்துந் தொல்லை மரப்பாவை யியக்க மூஞ்சிர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேறுப்ச் செலுத்துவோர்செய்திதானும்
பார்ப்பாய வேடங் கட்டி யாடுவோர் பரிசு போலு
மார்ப்பாய காயந் தன்னை யான்மாநின் றாட்டு மாறே.

(கொ-டு) ஆர்ப்பாய காயந்தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறெ சிர்த்தேர்ப்பாரின் செலவும் தொல்லை மரப்பாவை இயக்கமும் தோற்பாவைக் கூத்தும்

வேள்ரூய்ச் செலுத்துவோர் செய்திதானும் பார்ப்பாய வேடம் கட்டி ஆடுவோர் பரிசுபோலும்.

(பொ-ரை) மேற்கூறியவாறு கட்டுப்படுத்தப்பட்ட ஐந்து கோசங்களினும் ஆன்மா வேற்றுமையின்றி நின்று அக்கோசங்களைச்செலுத்தும் விதம் எவ்வாறெனின், தேரைச்செலுத்துவோர் தன்மைபோல அன்னமயகோசத்தையும், மரப்பாவையை இயக்குவோர் தன்மைபோல பிராணமய கோசத்தையும், தோற்பாவையினை ஆட்டுவோர் தன்மைபோல மனோமயகோசத்தையும், பரகாயப்பிரவேசம் செய்பவர் தன்மைபோல விஞ்ஞானமயகோசத்தையும், வேதியர் வேடமுதலிய பலவேடங்கட்டி ஆடுவோர் தன்மைபோல ஆனந்தமயகோசத்தையும் ஆன்மா நின்று செலுத்தும். (எ...று)

தேரைச்செலுத்துங்கால் குதிரை, யந்திரம், அறிவு, உற்சாகங்களால் பாகன் செலுத்தி அத்தேரின் வேறின்றி நிற்பதுபோல அன்னமயகோசமாகிய தூலதேகத்தை பிராணன், மனம், கலாதி, மாயைகளால் ஆன்மாசெலுத்தி அத்தூலதேகத்தில் வேறின்றி நிற்கும்.

மரப்பாவையை இயக்குங்கால் கயிற்றால் இயக்கி இயக்குவோன் அக்கயிற்றின் வேறின்றி நிற்பதுபோல பிராணமயகோசமாகிய சூக்குமதேகத்தைச் செலுத்துங்கால் பிராணனியக்கி ஆன்மா அப்பிராணவாயுவின் வேறின்றி நிற்கும்.

தோற் பாவையை ஆட்டுங்கால் ஆட்டுவோன் தன்னுடைப்பினுள் ஒன்றாகிய காத்தால் ஆட்டி அதனின் வேறின்றி நிற்பதுபோல மனோமயகோசமாகிய குணசரீரத்தை ஆட்டுங்கால் மனத்தால் ஆட்டி ஆன்மா அம்மனத்தின வேறின்றி நிற்கும்.

பரகாயப் பிரவேசம் செய்யுங்கால் உயிர் நீங்கிய பரகாயத்தில் விருப்பால் பிறிதோருயிர் பிரவேசித்து அவ்வுபிராய் நிற்பதுபோல் விஞ்ஞானமயகோசமாகிய கஞ்சுகசரீரத்தைச் செலுத்துங்கால் அறிவு முதலியன இல்லாத கலாதிகளில் ஆனந்தத்தால் ஆன்மா பிரவேசித்து அக்கலாதிகளில் வேறின்றி நிற்கும்.

வேடங்கட்டி ஆடுவோர் கட்டிய வேடத்திற்குரியவனைப் நின்று நடித்து அதனின் வேறின்றி நிற்பதுபோல ஆனந்தமயகோசமாகிய

காரணசரீரத்தைச் செலுத்துங்கால் ஆன்மா அவ்வானந்தமயமாய் அதனின் வேறின்றி நிற்கும்.

இவற்றுள் தேரைச் செலுத்துங்கால் செலுத்துவோன் கரம் கால் கண் முதலிய உறுப்புக்களையும் அறிவையும் கொண்டு செலுத்துவன். மரப்பாவையை இயக்குங்கால் கரமும், கயிறும், அறிவும் கொண்டு இயக்குவதலால் தேரைச்செலுத்துவதிலும் மரப்பாவையை இயக்குவது சூக்குமமாயிற்று. தோற்பாவையை ஆட்டுங்கால் கரமும் அறிவுங்கொண்டாட்டுவன். இதிற்கயிறில்லாமையால் மரப்பாவையினின்றும் சூக்குமமாயிற்று. பரகாயப்பிரவேசம் செய்யுங்கால் அறிவொன்றுடன் புறத்திற்செல்வன். இதில் வேறு கருவிகள் இல்லாமையால் முன்னைய தினின்றும் சூக்குமமாயிற்று. வேடங்கட்டி ஆடுங்கால் அறிவுடன் அகத்திற்றங்குவன். புறத்திற்றங்குதலாகிய முன்னையதற்கு அகத்திற்றங்குதலாகிய இது சூக்குமமாயிற்று. இவ்வாறே தூலமே தகமுதல் காரணமே தகமீறாகத்துவங்களின் குறைவிற்கேற்ப ஆன்மா ஒன்றுக்கொன்று சூக்குமமாய் நிற்கும் முறைமையினை அறிந்துகொள்க. (உச)

ஆன்மா பஞ்சகோசங்களினும் வேறென்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது.

என்னுடல் பொறிபிராணன் காணமென் னுணர்வென் றக்காற்
றன்னின்வே றுகு நீயென் றன்மனை யென்ற வெல்லா
நின்னின்வே றுகு மென்னி னீங்கிடா வினையிங் கென்னி
னுன்னின வாகு நீயா முகிர்மயி ருகவுங் காண்டி.

(கொ-டு) என்றன்மனை என்றவெல்லாம் நின்னின்வேறுகும் என்உடல் பொறிபிராணன் காணம் என்உணர்வு என்றக்கால் நீதன்னின் வேறுகும் இவை இங்கு என்னின் நீங்கிடா வென்னின் உன்னினவாகும் நீயாம் உகிர்மயிர் உகவுங்காண்டி.

(பொ-ரை) மேற்கூறியவாறு பஞ்ச கோசங்களினும் ஆன்மா அபேதமாய் நின்று செலுத்தினும் என் மனைவி, என் பதி என்று அபேதமாய் வழங்கி வந்தனவெல்லாம் தன்னின் வேறுதல் போல என்னுடல் என்பொறி என் பிராணன் என் காணம் என் அறிவென்னத் தனித்தனி எனதென்று வழங்கப்படுமாதலால் அவை அனைத்தும் உன்னின் வேறும். நீ அவைகளின் வேறுமாய்

என்று கூற மனைமுதலிய புறப்பொருள்கள் என்னின் வேறுதல்கூடும். உடல், பொறி முதலியவை என்னைவிட்டு நீங்கமாட்டாவாதலின் எவ்வாறு வேறுகு? மென்ன், உன்னுடையனவாகி. அபேதமாய் எனதென்று வழங்கப்படும் நகம், மயிர் முதலியன நீங்குதல் காணப்படுதல் போல் உடல் முதலியனவும் முதற் குரியகாலம் வந்தவிடத்து நீங்குமாதலின் நீ அவற்றின் வேறென்பது துணிவா யறியப்படும். (எ...று) (உரு)

அபேதம் பற்றி பஞ்சகோசங்களை யெனதென்று வழங்கப்படு தலால் ஆன்மா அவற்றின் வேறென்றல் கூடாதென்பாரை மறுத்து ரைக்கின்றது.

பொன்னணி யாடை மாலை போதுமே லான போதிங்
கென்னணி யாயினன் றுன்னி யிருந்தனை பிரிந்த போது
நின்னணி நீயு மல்ல வாயினை காய நின்னி
னன்னிய மாகு முன்னை யறிந்துநீ பிரிந்து பாரே.

(கொ-டு) நின் அணிபிரிந்தபோது நீயும் அல்லவாயினை.

(பொ-ரை) இராகுவினது தலையென்றவிடத்து தலையின் வேறுய் இராகு காணப்படாதவாறுபோல கருவி காரணங்களோ எனதென்றதனால் அக்கருவி கர ணங்களின் வேறுய் ஆன்மா உண்டென்றல் பொருந்தாதென்னின், அபேதம் பற்றி நிகழும் அவ்வுவமை மிகுதியாக வழங்குதலின்றி ஏகதேசமாய் வழங்கப்ப டும் ஆதலால் அவ்வுவமை பொருந்தாது. பொன்னுலாகிய ஆபரணம், நூலாலா கிய ஆடை, மலராலாகிய மாலை முதலிய புறப்பொருள்களோ யணிந்திருக்கின்ற பொழுது அபேதம் பற்றி அப்பொருள்களெல்லாம் நீயாகவே யிருந்தும் என்னு டையதென்று வழங்கப்படுதல் மிகுதியுங்காணப்படும். அப்புறப்பொருள்கள் நீங் கியபோது அப்பொருள்கள் உனக்கு அன்னியமாய் நீ அப்பொருளல்லவாயினைற் போல உடல், பொறி முதலிய அனைத்தும் அபேதம் பற்றி தானுயிருப்பினும் வேறுகுமாதலால் உன்னுடைய உண்மையான ஆன்ம சொரூபத்தை யறிந்து உடல், பொறி முதலியவற்றை நின்னின் வேறுக அறிவாயாக. (எ...று)(உசு)

விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசங்களே ஆன்மா வென் பாரை மறுத்துரைக்கின்றது.

வியா னல்லே னிந்த வுணர்வுயா னல்ல வான
கடனியா தென்னின் வேறு கண்டுணர் வென்ன தென்னை
யிடரிலா வென்ற னன்மா வென்றபோ தான்மா வேறு
திடனதா வுயிரை வேறு கண்டிடார் செப்ப லெக்கான்.

(கொ-டு) இடரிலா என்றன் ஆன்மா என்றபோது ஆன்மா வேறு திடனதா உயிரை வேறு கண்டிடார் செப்பலே காண் இந்த உணர்வு யான் அல்ல வான கடன் யாதெனின் உணர்வு என்னது என்கை வேறு கண்டி உடல் யான் அல்லேன்.

(பொ-மை) அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசமாகிய உடல், பொறி முதலியன யானல்லவென்பதைக்கும். குற்றமில்லாத ஆன்மாவை என்னுடைய ஆன்மா என்றவிடத்து ஆன்மாவின் வேறாய் என்னென்பதற்குப் பொருளில்லாதவாறு போல, அறிவு தொழிற்படுதற்குத் துணையாயிருக்கின்ற விஞ்ஞான மயகோசம் ஆனந்தமயகோசங்களின் வேறாய் ஆன்மா உண்டென்றல் பொருந்தாதெனின், ஆன்மாவை வேறாகக்காணும் அறிவில்லாதவர் இராகுவினது தலையென்றுற்போல என்னுன்மாவென்று கூறுவர். அவ்வாறு கூறுதல் பொதுவழங்கப்படுதலின்றி சிறுபான்மையாக வழங்கப்படும். அதுவும் என்னென்பதும் ஆன்மாவென்பதும் வேறுபொருளாயில்லாத அபேதம்பற்றிய வழக்காகும். விஞ்ஞானமயகோசம் ஆனந்த மயகோசங்கள் அவ்வாறன்று. வேறு எவ்வாறெனின், என்னறிவு என் ஆனந்தம் என எனைக் கோசங்கள் போல எல்லாராலும் வேறாக்காணப்படும் பெருவழக்காதலின் அபேதம் பற்றிய வழக்கென்று கூற அமையாது. அமையுமெனின், என் என்பதன் வேறாக ஆன்மா இல்லாததுபோல் அறிவும் ஆனந்தமும் நீங்காதிருக்கவேண்டும். நீங்காக் காண்கின்றோமாதலால் எனைய உடல் முதலியனபோல விஞ்ஞானமய ஆனந்தமயகோசங்களும் உன்னின்வேறையாம். (எ...று) (உ எ).

என்னுடைய ஆன்மாவென்பதற்குப் பொருள்கூறி மேற்கூறியதனை வலியுறுத்துகின்றது.

புந்தியை மனம தென்று மனமது புந்தி யென்றுஞ்
சிந்தையைச் சீவ னென்றுஞ் சீவனைச் சிந்தை யென்று
முந்தனை யான்மா வென்று மான்மாவை முந்த னென்றும்
வந்திடு மென்ற னுன்மா வென்றற்று மற்றுரன் றைக்கான்.

(கொ-டு) என்றன் ஆன்மா என்றது மற்றுரன்றைக்காண்க என்பதை முன்னுகவைத்து அதன் பின்னுக புந்தியை என்பது முதலாக உரைக்க.

(பொ-ரை) அன்றியும் என்னுடைய ஆன்மாவென்று கூறப்படும் வழக்கில் ஆன்மாவென்பது ஆகுபெயரால் பிராணவாயுவை உணர்த்தும். அது எதுபோலவெனின், புத்தியை மனமென்றும் மனதைப் புத்தியென்றும் சிந்தையைச் சீவனென்றும் சீவனைச் சிந்தையென்றும் சிவபிரானை ஆன்மாவென்றும்

ஆன்மாவைச் சிவபிரானென்றும் ஆகுபெயரால் கூறும் வழக்குப்போலவாம்.
• ஆகுபெயராவது ஒன்றிற்குரியபெயரை அதனோடு சம்பந்தமுள்ள பிறிதொன்
றிற்கிட்டு வழங்குவது. ஆதலின் என்னுடைய ஆன்மாவென்ற அம்மொழி
கொண்டும் விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசங்களின் வேறாக ஆன்மா
இல்லையென்ற நின்கருத்து நிரம்புமாறில்லை. (எ...று) (உ அ)

ஐந்தாகோசங்களை ஆன்மாவென வேதத்துட் கூறியதும் ஆகு
பெயராலெனக் கூறுகின்றது.

அறிவுடல் நிந்தை யான்மா வனேதலா லான்மா வென்ப
தெறிசுடர் விளக்கி னுக்கு மிடத்தையும் விளக்கென் றுற்போற்
பொறிபுலன் கரண மெல்லாம் புலப்படு மபேத மாகிப்
பிறிதரா தறிவ தான்மா வறிபொருள் பின்ன மாமே.

(பொ-ரை) உபநிடதங்களில் ஆன்மாவின்வேறாகிய விஞ்ஞானம் முதலிய
அப்பஞ்சகோசங்களை ஆன்மாபொருந்தி நிற்கும் சம்பந்தம்பற்றி அக்கோசங்களை
ஆன்மாவெனக் கூறும் என்பர். அவ்வாறு கூறுதல் ஒளியை வீசும் விளக்கிருக்
கின்ற தகளியை விளக்கென்றுற்போல அன்றிப் பிறிதில்லை. ஆதலால் உடல்,
பொறிமுதலிய எல்லாவற்றின்கண்ணும் அபேதமாய்ப் பிரிப்பின்றி நின்று
அறிவதாகிய ஆன்மா அறியப்படும் அப்பொருள்களுக்கு வேறு எ...று. (உக)

ஐந்து கோசங்களினும் ஆன்மா வேறென்பதை அனுபவத்தால்
வலியுறுத்துகின்றது.

கண்டுணர் புருடன் வேறு கனவுகண் டொடுங்கிக் காய
முண்டியும் விணையு மின்றிக் கிடந்துயிர்த் திடவு ணர்ந்து
கண்டிடுங் கனவுந் சொல்லி யொடுக்கமுங் கருதி வேறு
யுண்டியும் வினையு முற்றிங் குணர்த்திட வுணரா நிற்கும்.

(கொ-டு) கனவு கண்டு ஒடுங்கி உண்டியும் காயம் வினையும் இன்றிக்கிட
ந்து உயிர்த்திட உணர்ந்து இங்கு உணர்த்திட 'கண்டிடுங் கனவுசொல்லியும் ஒடு
க்கம் கருதியும் வேறுய்உண்டியும் வினையும்உற்று உணரா நிற்கும் கண்டு உணர்
புருடன் வேறு.

(பொ-ரை) ஐந்துகோசங்களும் ஆன்மாவென்றால் அன்னமயகோசத்தைவிட்டு
பிராணமயகோசத்திலும் பிராணமயகோசத்தைவிட்டு மனோமயகோசத்திலும்,
மனோமயகோசத்தைவிட்டு விஞ்ஞானமயகோசத்திலும் விஞ்ஞானமயகோசத்
தைவிட்டு ஆனந்தமயகோசத்திலும் நிற்குங்கால் முறையே "சாத்கிரமுதலாக

ந்தவத்தைப்பட்டு விழித்தபின் சாக்கிரத்தில் அவ்வைங்கோசங்களையும் கூடி நின்று அக்கோசங்களாகிய கருவிகளால் காணப்பட்ட கனவைச்சொல்லும். சுழுத்தியில் ஒன்றுந் தெரியாது சுகமாயிருந்ததைக் கருதும். சுகானுபவமும். பிராணவாயுவினியக்கமுமின்றி மூர்ச்சையாய்க்கிடந்த துரிய துரியாதீதங்களை மறுதலையாகிய சுகானுபவத்திலும் பிராணவாயுவினியகத்திலும் வைத்து அறியும். இவ்வாறு ஜாக்கிரத்தில் வந்தபோது அறிவதின்றி அந்தந்த அவத்தையின்றி அறிதலில்லை. அக்கோசங்கள் ஆன்மாவாயின் ஒவ்வொருஅவத்தையினையும் அவ்விடத்தே அறிதல் வேண்டும். ஆதலால் அவ்வவத்தைகளைக் கண்டறியப்படும் உயிர் அவற்றின் வேறெனத் தெளிவாயாக. (எ...று) (சூ)

ஆன்மாவானது முதல்வனின் வேறாய் அனாதியே ஆணவமலத்தில் மறைந்துநிற்குமெனக் கூறுகின்றது.

புருடனே யறிவ ணுகிற் பொறிபுல ணதி போதந்
தருவதெ னறிவு மாயா தனுகர ணாதி பற்றி
வருவதிங் கநா தி யாக மலத்தினின் மறைந்து நிற்ப
னருவரு யிவற்கீ ரூடாரு மமைச்சரு பரசும் போல்வன்.

(கொ-டு) புருடன் அறிவனே யாகில் பொறி புலன் ஆதி இவற்கீரூடு அமைச்சரும் ஆளும் அரசும் போல்வன் போதம் தருவது என் மாயாதனு கரணாதிபற்றி இங்கு அறிவு வருவது அநாதியாக மலத்தினின் மறைந்து அருவனாய் நிற்பன்.

(பொ-ரை) ஆனமாசுதந்துபபொருளாதலால முதல்வனம்பால கருவிகளின் துணையின்றி அறியாதோ வெனின், அறியாது. எதனாலெனின், முதல்வன்போல சுத்தசித்தன்று. அதாவது அனாதியே மலத்தைப் பற்றுதசித்தன்று. அவ்வாறு சுத்தசித்தாயின் தனுகாணாதிகளுடன் அமைச்சரும் அரசும் போல உடனின்று அத்தனு காணாதிகளை அறிதல் வேண்டாம். அவ்வாறறிதல் காணப்படுகின்றமையால் அனாதியே ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு அறிவிச்சை செயல் விளங்கப்பெறுது பின் மாயா கருவிகளோடு கூடி தத்துவரூபனாய் நின்றறிதல் பெறப்படும். (எ...று) (சூ)

இரண்டாம் அதிகாணம் முடிந்தது.

மூன்றும் அதிகாணம்.

செயல்கணென்கும் அறிந்தவையடக்கி யாக்கிப் புணரு மூட்கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கி வெவ்வே றணைதரும் என்பது.

ஆன்மாவானது ஐந்தவத்தையிற் போக்குவரவு புரிதலை அரச உவமையில் வைத்து விளக்குகின்றது.

படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போ தில்லிற்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்ன
ரடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா
வுடலினி லஞ்ச வத்தை யுறுமுயிர் காவ லாக.

(கொ-டு) ஆணமா படைகொடு பவனிபோதும் பார்மன்னன் இல்லிற் புகும்போது கடை தொறும் விட்டு விட்டுக் காவலும் இட்டு பின்னர் அந்தப் புரத்தினில் தனியே அடைதரும் அதுபோல் உடலின் உயிர்காவலாக அஞ்சு அவத்தை யுறும்.

(பொ-ரை) உடல்பொறி முதலியவற்றோடு ஆன்மா கூடிநிற்றல் எது போல வெனின், அமைச்சர்முதலாயினரும் அரசனும் போலவாம். அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப்போந்த அரசன், மீள அரண் மனையுட்புகுங்கால் அமைச்சர் முதலியோரை எந்தெந்த வாயிலில் எவரெவரை நிறுத்தவேண்டுமோ அந்தந்த வாயிலில் அவரவரை நிறுத்தி பிறர் பிரவேசியா வண்ணம் காவலும் வைத்து அந்தப்புரத்துக்குத் தனியே செல்வன். அதுபோல, ஆன்மாவும் மனத்தைத் தேராகவும் பிராணவாயுவைக் குதிரையாகவும் புத்தியை மந்திரியாகவும் அகங்காரத்தைச் சாரதியாகவும் ஞானேந்திரிய கன்மேந்திரிய ங்களைக் காலாட்களாகவுங்கொண்டு புறத்து விடயங்களில் உலாப்போந்து அக த்து மீளுங்கால் புருவமத்தியம் கண்டம் இருதயம் நாபி யென்னுந் தானங் கள் தோறும் நீக்கவேண்டிய தத்துவங்களை நீக்கி உடலைப் பிறர்மோசஞ்செய்து விடாமல் பிராணவாயுவைக் காவலாக வைத்துவிட்டு மூலாதாரத்திற்கு மேலும் நாபிக்குக் கீழுமாகிய சுவாதிட்டானமாகிய அந்தப்புரத்துக்குத் தனியே சென் று மாயையோடு கூடி ஆனந்தமயகோசனுய் நிற்கும். துரியாதீதத்தில் புருட தத்துவ மொன்றென்று கூறியதும் இக்கருத்துப்பற்றியேயாம். இவ்வாறு ஐந்த வத்தையினை ஆன்மா பொருந்துமாறறிக. (எ...று).

மாயையோடு கூடி நிற்கும் நிலை தனிமையாவது எவ்வாறெனின், தொழிற்பாட்டிற்குரிய தத்துவங்களில்லாமல் தத்துவமில்லாமையால் கேவலமினறிச்சகலனுப் நிற்றற்குட்டுந் துணையாய் மாயை நின்றமையால் தனிமையெனப் பட்டது.

துரியாதீத அவத்தையில் பிராணவாயு இயக்கமில்லாதிருக்கவும் காவலாகப் பிராணவாயுவை வைத்து விட்டென்று கூறியது எவ்வாறு பொருந்துமெனின், காவலாயுள்ளவன் அரசன் நித்திரையின்றியிருக்குங்கால் வாயிலைத் திறந்துவைத்து யாவருக்கும் தெரியுமபடியாக நிற்பன். அரசன் நித்திரைசெய்யுங்கால் வாயிலைப்பூட்டிக் கொண்டு உட்புறமாக பிறருக்குத் தெரியாமல் நிற்பன். அதுபோல துரியாதீதத்தில் பிராணவாயு அடங்கிக் காவலாயிருக்கும். இன்றேல் பின் உயிர்த்தெழ முடியாது. ஆதலால் பிராணவாயுவைக் காவலாக வைத்தென்றது துரியாதீத அவத்தையிலும் பொருந்தும். (நஉ)

ஐந்தவத்தையுள் ஒவ்வோரவத்தைக்குரிய தத்துவங்களும் தானங்களும் இவையென உணர்த்துகின்றது.

சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற் கனவு தன்னி
லாக்கிய விருபத் தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி லிரண்டு நாபி
கோக்கிய துரியா தீத நுவலின்மூ லத்தி னென்ற.

(கொ-டு) நுதலினில் சாக்கிரம் முப்பத்தைந்து களத்தினில் கனவு தன்னில் ஆக்கிய இருபத்தைந்து நீக்கிய இதயந்தன்னில் சுழுனை மூன்று நாபித்தானத்தில் இரண்டு நுவலின் மூலத்தின் நோக்கிய துரீயாதீதம் ஒன்றே.

(பொ-ரை) அரசன்டோல ஆன்மாவும் விட்டுவிட்டுச் சேருமிடத்து எந்தெந்தஇடத்தில் எந்தெந்தத்தத்துவங்களை விட்டுச்சேருமெனின், புறத்துவிடயங்களை யறியுங்கால் புருவ மத்தியாகிய இலாடத்தில் சாக்கிராவத்தையைப் பொருந்தி ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் நந்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, பிராணாதிவாயுப் பத்து, அந்தக்காரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடி நிற்கும். இதனை விட்டுக் கண்டதானத்

திவ் சொப்பனு வத்தையை யடையும். அடையுங்கால் வாயுபபத்து சத்தர்; ஐந்து வசனுதி ஐந்து அந்தக்கர்ணம் நான்கு புருடன் ஒன்று ஆக இருபத்தைந்து தத்துவங்களுடன் கூடிநிற்கும். இதனை விட்டு இருதயத்தானத்தில் சுழுத்தியவத்தையை யடையும். அடையுங்கால் பிராணன் சித்தம் புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் கூடி நிற்கும். இதனை விட்டு நாபித் தானத்தில் துரிய அவத்தையைஅடையும். அடையுங்கால் பிராணன் புருடன் என்னும் இரண்டுடன் கூடி நிற்கும். இதனை விட்டு மூலமாகிய சுவாதிட்டானத் தானத்தில் துரியாதீத அவத்தையையடையும். அடையுங்கால் புருடன் ஒன் றினைக் கூடிநிற்கும். (எ...று)

கலாதி தத்துவங்களும் சுத்ததத்துவங்களும்விட்டு நீங்காமல் சாக்கிர முதல் துரியம் வரை உடனுக வெளிப்பட்டு நின்று துரியாதீதத்தில் அடங்கி நிற்குமாதலால் விட்டு நீங்குந் தத்துவங்களோடு வைத் தெண்ணுதலாறு அறிக. கலாதிகளும் சுத்ததத்துவமும் இல்லையாயின் புருடதத்துவந் தோன்று தாதலின் அதீதத்தில் அவை யடங்கி நிற்றல் காண்க. (கூ)

ஐந்தவத்தைகளும் சகலத்திற் கீழாலவத்தை மேலாலவத்தை யென இருதிறப்படுமெனக் கூறுகின்றது.

இருவகை சாக்கி ராதி யவத்தைக ளியல்பு தானு
மொருவகை கீழ்மே னோக்கி யுற்பவங் காட்டு மொன்று
பெருகுமே னோக்கித் தீய பிறப்பறுத் திடுமி யோகிற்
றருவதோர் சமாதி தானுந் தாழ்ந்துபின் சன்னனுஞ் சாரும்.

(கொ-டு) சாக்கிராதி அவத்தைகள் இயல்புதானும் இருவகை.

(பொ-ரை) மேற்கூறிப்போந்த சாக்கிரமுதலாகிய ஐந்தவத்தைகளும் கீழாலவத்தை மேலாலவத்தை யென இருதிறப்படும். அவற்றுள், கீழாலவத்தை கீழ்நோக்கிச் சென்று ஒடுங்குமுறையும் மேல்நோக்கித்தோன்று முறையுமென இருதிறப்படும். அவற்றுள் ஒடுங்குமுறை மேற்கூறியவாறு புருவ நடுமுதல் ஒவ்வொரு தானமாய் விட்டுச்செல்லுதலாம். அவ்வாறு செய்வதுவினை செய்த வினுலுண்டான இளைப்பு நீக்கத்தின் பொருட்டாம். இளைப்பு நீங்கவே மேல் வினைசெய்தற்குரிய வலிமை யுண்டாம். அதனால் அவ்வொடுங்கு முறை கன்மம் சம்பாதித்தற் கேதுவாய் பிறவிக்கு வித்தாம். பிறிதொன்றுகிய தோன்று முறையாவது துரியாதீதத்தை யடைந்த உயிர் ஒடுங்கியவாறே மீள ஒவ்வொரு தானத்தில் ஒவ்வொரு அவத்தையாய்ப் பற்றி புருவ நடுவில் சாக்கிரத்துக்கு வரு

கல். இவ்வாறு வருதலால் கன்மத்தின் பலனை யனுபவித்தல் கூடும். கன்மா னுபவம் பிறவியறுதற்குக் காரணமாதும். இனிமேலா லவத்தையும் இருதயக் கண்டம் நாக்கின் அடி புருவநடு பிரமாந்திரம் என்னும் ஐந்து தானங்களில் முறையே சாக்கிர முத்தலாக ஐந்தவத்தைப் பட்டு மேற் சென்று ஒடுங்குதலும் கீழ் நோக்கித் தோன்றுதலு மென இருவகைப்படும். மேல் நோக்கிச் செல்ல தாகிய இவ்வைந்தவத்தையும் யோக சமாதிகளாலுண்டாம். இச்சமாதியால் பிரபஞ்ச நாட்டங்குறைந்து அக்குறைதல் பிறவியறுதற்குக் காரணமாகும். பிறி தொன்றாகிய கீழ் நோக்கித் தோன்றுதலாவது, பிரமாந்திரத்தினின்றும் வெளி யே வருதல். அது பிரபஞ்ச நாட்டத்தைத் தோற்றுவித்து பிறவிக்குக் காரண மாகும். (எ—று)

கீழாலவத்தையிற் கீழ் நோக்கி ஒடுங்குதல் சகலத்திற் கேவல மெனவும், மேல் நோக்கித் தோன்றுதல் சகலத்திற் சகலமெனவும் மேலாலவத்தையில் மேல் நோக்கி ஒடுங்குதல் சகலத்திற் சுத்தமெ னவும் அறிக, மேலாலவத்தையில் கீழ் நோக்கித் தோன்றுதல் பிர பஞ்சத் தோற்றத்திற்குக் காரணமாதலால் கீழாலவத்தையில் மேல் நோக்கித் தோன்றுதலோ டொக்கும். அவ்வாறுயின், கீழாலவத் தையில் மேல்நோக்குதல் பிறவியறுதற்குக் காரணமென்றும், மேலா லவத்தையில் கீழ் நோக்குதல் பிறவிக்குக் காரண மென்றும் மேற் கூறியது எவ்வாறு பொருந்து மெனின், வினைப்பயனை யனுபவித் தலால் பல பிறவிகளைப் பெற்று இருவினை யொப்பு முதலிய பக்குவ மெய்தி பரம்பரையில் பிறவியறுமன்றி வினைப்பயனை அநுபவித்தது கொண்டு பிறவியறாது. அதனையும் பிரபஞ்சத் தோற்றத்தில் ஒத்த லாலும் பொருந்துமா றறிக.

கீழாலாவத்தையில் மேல் நோக்கிப் பிறப்பறுத்திடுதலும் மேலாலவத்தையில் மேல் நோக்கிப் பிறப்பறுத்திடுதலுமாகிய இரு வகைப் பிறப்பறுத்திடுலும் வருகின்ற செய்யுளிற் கூறும் மத்தியா லவத்தைக்கும் ஒக்கும்.

சகலத்தில் மத்தியா லவத்தை யைந்துண்டெனவும் சுத்தத் திலும் ஐந்தவத்தை யுண்டெனவுங் கூறுகின்றது.

அறிதரு முதல வத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ்
செறிதரு நாணந் தன்னிற் செயலொழுகுங் கண்டு கொண்மின்

பிறிவிலா ஞானத் தோரும் பிறப்பற வருளா லாங்கே
குறியொடு மஞ்ச வத்தை கூடுவர் வீடு கூட.

(கொ-டு) நீகண்டு கொள் எனவும் ஆங்கே வீடுகூட எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறிய ஐந்தவத்தையினுள் எல்லா விடயங்களையும் அறி கின்ற முதலவத்தையாகிய சாக்கிரத்தை யடையும் இலாடத் தானத்தின் கண் ணும் சாக்கிரமுதல் ஐந்தவத்தை யுளவாம். அவ்வவத்தைகள் விடயங்களை யறி யுஞ் செய்கையில் அதி நுணுக்கமா யிடைவிடாது நிகழும். அவ்வாறு நிகழ்வதை நண்ணுணர்வால் நீ கண்டுகொள்வாயாக. இனி இச்சகலத்தில் நிகழும் இவ் வவத்தைகளே யன்றி பிறிவிலா ஞானத்தை யறிந்தவரும் பிறப்பு நீங்கி அவ் வருள் ஞானத்தால் வீடு அடைதற்குரிய சுத்தாவத்தையினும் அவ்வாறே சாக் கிர முதலாக ஐந்தவத்தையினைப் பொருந்துவர். அவை உண்மை யதிகாரத்துட் கூறப்படும். (எ...று)

சாக்கிரத்தில் நிகழும் ஐந்தவத்தைகளாவன:—

சாக்கிரத்திற் சாக்கிரம்—விடயங்களை நேரே யனுபவித்தல்.

சாக்கிரத்திற் சொப்பனம்—துக்க சுகங்கள் வந்த வாலாற்றை நாடி மனனை வியாபாரஞ் செய்து நிற்றல்.

சாக்கிரத்திற் சுழுத்தி—சுக துக்கத்தில் மூழ்கி நிற்றல்.

சாக்கிரத்திற் றுரியம்—சுக துக்கந் தோன்றுது பெருமூச்செ றிந்து நிற்றல்.

சாக்கிரத்தில் அதீதம்—சுக துக்கங்களைக் கேட்ட மாத்திரையால் திடுக்கிட்டு பிராணவாயு சீவியாமல் மூர்ச்சித்து மயங்கி நிற்றல். ()

சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தையினும் சிவதத்துவ மைந் தும் நின்று செலுத்து முறைமை இவ்வாறெனக் கூறுகின்றது.

ஐந்துசாக் கிரத்தி னொன்கு கனவினிற் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு
மூந்திடுங் காணந் தன்னிற் செயலெறு முணர்ந்து கொள்ளே.

(கொ-டு) சாக்கிராதி அவத்தைகள் சாக்கிரத்தின் ஐந்து கனவினின் நான்கு சுழுனை மூன்று வந்திடுந் துரியந் தன்னின் இரண்டு தந்திடுந் துரியாதீ தம் ஒன்று தானந்தோறும் காணந்தன்னிற் செயல்தொறும் வந்திடும் உணர்ந்து கொள்ளே.

(பொ-ரை) மேற் கூறிப்போந்த சாக்கிராதி அவத்தைகள் ஐந்திலும்கலாதிகளைச்செலுத்தி நிற்கும் சிவதத்துவம் எவ்வாறு நிற்குமெனின், சாக்கிரத்தில் சுத்தவித்தை, மகேசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவமென்னும் ஐந்து தத்துவங்களும், சொப்பனத்தில் மகேசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவமென்னும் மூன்று தத்துவங்களும், சுழுத்தியில் சாதாக்கியம், சத்தி, சிவமென்னும் மூன்று தத்துவங்களும், துரியத்தில் சத்தி சிவமாகிய இரண்டு தத்துவங்களும், துரியாதீதத்தில் சிவதத்துவம் ஒன்றும் தொழிற்படுவதான அவ் வத்தானங்கள் தோறும் கருவியால் அவ்வத் தானங்களில் விடயங்களை அறியும். செய்கை தோறும் அச்செயல் நிகழ்வதற்குக் கலாதி தத்துவங்களைச் செலுத்தி நிற்கும். இதனை நீ நுண்ணுணர்வால் உணர்ந்து கொள்வாயாக. (எ...று)

இனி, இச்செய்யுளுக்கு இவ்வாறன்றி சாக்கிரத்தில் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தையும் சொப்பனத்தில் சொப்பனம் முதலியநான்கவத்தையும் சுழுத்தியில் சுழுத்தி முதலிய மூன்றவத்தையும் துரியத்தில் துரியம் முதலிய இரண்டவத்தையும் துரியாதீதத்தில் துரியாதீதமாகிய ஓரவத்தையும் பொருந்துமென உரைத்தலுமொன்று.

காரிய அவத்தையாகிய சாக்கிராதி ஐந்திற்கும் காரணை அவத்தை கேவல, சகல, சுத்தமென மூன்றுண்டெனவும் அவற்றின் பொதுவியல்பு இவையெனவும் கூறுகின்றது.

கேவல சகல சுத்த மென்றுமூன் றவத்தை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொறிக ளெல்லாம்
காவ்லன் கொடுத்த போது சகலனு மலங்க ளெல்லா
மோவின போது சுத்த முடையனுற் றவந்து ணடத்தே.

(கொ-டு) ஆன்மா கேவல சகல சுத்த மென்று மூன்றவத்தை மேவுவன் எனவும் சுத்தம் உடையன் மலங்களெல்லாம் ஓவினபோது உற்பவந்துடைத்தே எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேற் கூறியவாறு நிகழும் காரிய அவத்தைகளாகிய சாக்கிராதி அவத்தைகளை ஆன்மா பொருந்துவதற்கு கேவலம், சகலம், சுத்தமென மூன்று காரண அவத்தையைப் பொருந்தும். அவற்றுள் கேவலமாவது: இச்சா ஞானக் கிரியா சத்திகள் சிறிதும் தொழிற்படாது தான் மாத்திரையாய் ஆணவ மலத்தோடு கூடி நிற்றல். சகலமாவது: அவ்வாறு ஆணவ மலத்தோடு கூடி நின்ற ஆன்மா பின்பு தநுகாரணாதிகளோடு மூதல்வன் கூட்ட கூடி இச்சா ஞானக் கிரியைகள் ஒருவாறு விளங்கி நிற்றல். சுத்தமாவது: அவ்வாறு தனு

காணுதியோடு கூடி நின்ற ஆன்மா ஆணவ முதலிய பஞ்ச மலங்களையும் நீங் கும்படி செய்து அம்மலங்கள் நீங்கியதால் பிறவி ஒழிந்து சிவத்தோடு கூடி இச்சா ஞானக் கிரியைகள் எங்குமாய் வியாபித்து விளங்கி நிற்றல். (எ...று)

சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளும் கேவலம், சகலம், சுத்த மென்னும் மூன்றவத்தையினுந் தனித்தனி காரியப்படுதலால் அம் மூன்றுங் காரணமாகவும் சாக்கிராதி ஐந்தும் காரியமாகவுங் கூறப் பட்டன. அவத்தை யென்னும் சொல்லொற்றுமை கொண்டு சாக்கி ராதி அவத்தைக்கும் கேவல முதலிய அவத்தைக்கும் வேறுபாடு உண்டோ இல்லையோ வென்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டு காரண காரியமான வேற்றுமை உண்டென்று காட்டப்பட்டது.

கேவலத்தில் ஐந்தவத்தை உண்டென்பது எவ்வாறெனின், மலத்தால் மறைக்கப்பட்டு அறிவு முதலியன தொழிற்பா டின்றிக் கிடக்கும் நிலை அதீதம். அந்நிலையினின்று சிறிது எழுச்சி உண்டா தல் துரியம். எழுச்சி உண்டாகியும் துன்பந் தோன்றுதிருத்தல் சுழுத்தி. துன்பந் தோன்றுதல் சொப்பனம். துன்பத்துக்கு வருந் துதல் சாக்கிரம். இவ்வாறு கேவலத்தில் ஐந்தவத்தையும் காண்க. கருவிகளில்லாத நிலையில் துன்பந் தோன்றுதலும் துன்பத்துக்கு வருந்துதலும் எவ்வாறு கூடுமெனின், இச்சா ஞானக் கிரியா சத்தி கள் இருத்தலாற் கூடுமென்க. கருவிகளோடு கூடின நிலையில் உண் டாகின்ற வருத்தத்திற்கும் கருவிகளோடு கூடாத நிலையிலுண்டாம் வருத்தத்திற்கும் வேறுபாடு என்னையோ வெனின், கருவிகளோடு கூடின நிலையில் காரணந் தெரிந்து வருந்துதலும், கருவிகளோடு கூடாத நிலையில் காரணந் தெரியாது வருந்துதலும் வேறுபாடா மென்க. இது எது போல எனின், சிசுப்பருவத்தில் பசியினால் வருந் தும் வருத்தமும் முதிர்ந்த பருவத்தில் பசியினால் வருந்தும் வருத்த மும் போலாம். சிசு துன்பத்திற் காற்றுது வருந்துமேயன்றி அத் துன்பம் பசியினால் வந்ததென் றறியாது. பருவம் வந்தபின் துன்ப மும் துன்பத்திற்குக் காரணமும் அறியப்படும். இவ்வாறே கருவிக ளோடு கூடாத நிலையினையும் கூடின நிலையினையுங் கண்டு கொள்க.

சகலத்தில் ஐந்தவத்தை மேலில் விரிவாய்க் கூறப்பட்டது.

சுத்தத்தில் ஐந்தவக்தை முன்னர் ஏழாம் சூத்திரம் முதல்விரித்துக் கூறப்படுமாயினும் இவ்விடத்துச் சுருக்கிக் காட்டுதும். இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநி பாதம் நிரம்பிய நிலை நின்மலசாக்கிரம். குரு தரிசனமாகி அவர் அருளுபதேசம் பெறல் நின்மல சொப்பனம். உபதேசத்தில் உறைத்து நின்று சாதித்தல் நின்மல சுழுத்தி. பாச நீக்கம் நின்மல துரியம். சிவப்பேறு நின்மல துரியாதீதம். இவ்வாறு ஐந்தும் காண்க.

ஆன்மா இவ்வாறு நிற்றற்கு ஏதுவென்னை யெனின், சார்ந்த பொருளின் வண்ணமாய் நிற்றல் ஆன்மாவின் இயல்பாதலின் அறியாமையாயைச் செய்யும் மலத்தைச் சார்ந்து அறியாமையாகவும் ஏகதேசத்தைச்செய்யும் கருவியைச்சார்ந்து ஏகதேசமாகவும் வியாபகத்தைச் செய்யும் சிவத்தைச் சார்ந்து வியாபகமாகவும் நிற்குமென்க.

கேவலம் ஒன்றுமில்லாமையையும், சகலம் எல்லாம் உடைமையையும், சுத்தம் அழுக்கு நீக்கத்தையும் குறிக்குமாதலால் அறிவு முதலியன பிண்டமாய்த்தொழிற்படுதலேயன்றி பகுத்துத்தொழிற்படுதற்கான கருவிகள் இல்லாத நிலையைக் கேவல மென்றும் கருவிகளுடன் கூடின நிலையைச் சகலமென்றும் கருவிகளும் மலமுமாகிய அழுக்கு நீங்கிய நிலையைச் சுத்தமென்றும் காரணக் குறியாய் வகுத்தவாறு அறிக.

மூத்தினையைக் கேவலமென்பதும் தத்துவமாகிய கருவிகளின் நீக்கம் பற்றியேயாம். முன்னைய கேவலம் அறியாமையோடு கூடி நீங்குதல். பின்னைய கேவலம் அறிவோடு கூடி நீங்குதல். (கூ-எ)

கேவலத்தின் சிறப்பியல் இதுவெனக் கூறுகின்றது.

அறிவில னமூர்த்த னித்த னராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்க ளில்லான்
குறியிலன் கருத்தா வல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னோடும் வியாபிகே வலத்தி லான்மா.

(கொ-டு) ஆன்மா அமூர்த்தன் கலாதியோடும் சேர்வுஇலன் அராகாதி குணங்களோடும் செறிவுஇல்ன் குறிஇலன் அறிவுஇலன் செயல்களில்லான் கருத்தா அல்லன் போகத்திற் கொள்கை இல்லான் நித்தன் வியாபி கேவலத்தில் மலத்தினோடும் பிறிவு இலன்.

(பொ-ரை) மேற்கூறிப்போந்த காரண அவத்தை மூன்றனுள் கேவல அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்குமெனின், உடம்பின்றியும் கலைமுதலிய தத்துவங்ளோடு கூடி அறிதலின்றியும் போகத்தின் குணமாகிய தருமம், ஞானம், வயிராக்கியம், ஐஸ்வரியம், அதருமம், அஞ்ஞானம், அவயிராக்கியம், அனைஸ்வரியம் ஆகிய எட்டும் இன்றியும் மனமுதலிய கருவிகளின்றியுட் இச்சையின்றியும் அறிவின்றியும் ஒரு தொழிலுமின்றியும் தனக்கென ஒரு சுதந்திரமின்றியும் போகத்திற் கொள்கையின்றியும் சரீரத்தோற்றக் கேடுகளின்றியும் சரீரமில்லாமையால் ஏகதேசியாயின்றியும் ஆணவமலத்தோடு அம்மலமாத்திரையாய் வியாபித்து நிற்கும் (எ...று.) (நஅ)

சகலத்தின் சிறப்பியல்பு இதுவெனக் கூறுகின்றது.

உருவினைக் கொண்டு போக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயன் மருவிச் சத்த மாதியாம் விடயந் தன்னிற்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்கு முன்று
திரிதருஞ் சகல மான வவத்தையிற் சிவன் சென்றே.

(கொ-டு) சிவன் உருவினைக்கொண்டு போக(த்து)மருவி போக்கியத்து(மருவி) உன்னல் (மருவி) செப்பல் (மருவி) வருசெயல்மருவி சத்தம்ஆதியாம் விடயந்தன்னிற் புரிவதும் செய்து இங்கு எல்லா யோனியும் புக்கு உழன்று சகலமான அவத்தையில் சென்றே திரிதரும்.

(பொ-ரை) சகல அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்குமெனின், மேற் கூறிப்போந்த கேவல அவத்தையைப் பொருந்தி நின்ற ஆன்மா அந்நிலைக்கு மறுதலையாகிய உடம்பினைப் பெற்றும் கலாதிதத்துவங்களொடு கூடியும் தருமம் முதலிய குணங்களைப் பொருந்தியும் மனமுதலிய கருவிகளைக்கூடியும் இச்சை, வாக்குகளால் நிகழும்அறிவு, செயல்களைப் பொருந்தியும் சத்தாதி விடயத்தில் விருப்பம் செய்தும் போகத்தை அனுபவித்தும் பிறப்பு இறப்புக்களில் புகுந்து திரிந்தும் ஏகதேசியாகியும் சகலாவத்தையில் ஜீவித்து நிற்கும் (எ...று) (நக)

சுத்தத்தின் சிறப்பியல்பு இதுவெனக் கூறுகின்றது.

இருவினைச் செயல்க ளொப்பி னீசன்றன் சத்தி தோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
தீமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே.

(கொ-டு) சுத்தம் என்பதை இருவினை யென்பதன் முன்னுக வைத்து பெறுவது ஆமே எனக்கூட்டுக.

(பொ-ரை) சுத்த அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்குமெனின், மேற் கூறிய சகல அவத்தையினின்ற ஆன்மா அந்நிலையை விட்டு இருவினை ஒப்பு வந்து சிவசத்தி பதியப்பெறுதலால் குருவருள்பெற்று ஞான யோகத்தைப்பொருந்தி மும்மலங்களையும் நீக்கி விடய அனுபவத்திற்கேதுவாகிய விருப்பு வெறுப்பு என்னும் பழைய வாதனையும் நீக்கி ஞானத்தைப் பெருக்கி சிவபெருமான் திருவருளை அடைந்து நிற்கும். (எ . று)

இருவினை யொப்பால் சத்தாதி விடயத்தைப்பற்றிய செயல்நீக்கமும் சத்திபதிதலால் கருவிகளின் கூட்டம் நீக்கமும் குருவருள் பெறுதலால் தானஞ்செய்தல் காரணமாக உடம்பு நீக்கமும் ஞான யோகம் பெறுதலால் பிறப்பிறப்பு நீக்கமும் மலம் அறுதலால் ஏகதேசத் தன்மை நீக்கமும் விருப்பு வெறுப்பு நீக்கத்தால் விடயாநுபவ நீக்கமும் ஞானப் பெருக்கால் விடய ஞான நீக்கமும் உண்டாம். விடய ஞான மென்றதனால் விடய இச்சை செயல்களும் கருவியென்றதனால் போக காண்டமாகிய கலாதிகளும் நீங்குமாறறிக. (சு0)

மூன்றும் அதிகாணம் முடிந்தது.

நான்காஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் உக0.

ஐந்தாஞ் சூத்திரம்.

பாச இலக்கணம்.

நான்காஞ்சூத்திரத்தால் அச்சூத்திரத்தையடுத்து நின்ற மூன்றாஞ் சூத்திரத்திற் கூறிய பசுவுக்கு இலக்கணங் கூறினமையால் அம்முறைப்படி மூன்றாஞ் சூத்திரத்தை யடுத்துநின்ற இரண்டாஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட பாசத்திற்கு இலக்கணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

பாசமாவது:—ஆணவம் கன்மம் மாயை மாயாகாரியம் திரோதாயி என ஐவகைப்படும். அவற்றுள் திரோதாயி யென்பது மறைத்தலைச் செய்வது. இதனாலே ஏனைய நான்கு மலங்களுங் காரியப்படும். ஆதலால் இதனிலக்கணங் கூறவே எல்லாப் பாசங்களினிலக்

கண்முன் கூறியதாகு மாதலால் திரோதாயி என்கின்ற திரோதான சத்தியினிலக்கணமட்டுமே இச்சூத்திரத்திற் கூறப்படுகின்றது. திரோதான சத்தியென்றது உயிருள் மறைந்துநின்று கன்மத்துக் கேற்ப அறிவிக்கும் சிவசத்தி. பந்தமுறுதலால் இச்சத்தி பாச மெனப்பட்டது. பந்தநீக்கத்தில் இதுவே அருளாகும்.

ஆன்மாவானது தன்னைச் செலுத்தியுடனுய் நிற்கும் முதல்வனை அறியமாட்டாதெனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

பொறிபுலன் கரண மெல்லாம் புருடனு லறிந்தான் மானை
யறிதரா வலைவீ சீபோல வான்மாக்க ளனைத்து மெங்குஞ்
செறிதருஞ் சிவன்ற ஞீலை யறிந்திடுஞ் சிவனைக் காணு
வறிதருஞ் சிவனே யெல்லா மறிந்தறி வித்து நிற்பன்.

(கொ-டு) புருடனுல் பொறிகரணமெல்லாம் புலன் அறிந்து ஆன்மாவை அறிதரா அலைவீ போல எங்கும் செறிதரும் சிவன்றனைலை ஆன்மாக்கள் அனைத்தும் அறிந்திடும் சிவனைக்காணு அறிதரும் சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பன்.

(பொ-ரை) மேலைச் சூத்திரத்துட்கூறிய ஆன்மாவினுல் உடனின்று செலுத்தியறியும்படி செய்ய இந்திரியம் அந்தக் காணம் முதலியன தத்தம் விடங்களிற் சென்று இஃதின்னதென்று அளவிட்டு அறியும். அவ்வாறறிந்தும் அறிகின்ற தம்மையும் தம்மோடு உடனுய் மறைந்து நின்று செலுத்தும் அவ்வான்மாவையும் அவ்விந்திரிய அந்தக்காணங்கள் அறியமாட்டா. அவ்வாறே எவ்விடத்தும் வியாபகமாகிய முதல்வனது சிற்சத்தியின் அம்சமாகிய திரோதான சத்தியானது உடனின்று வினைப்பயன்களை யறிந்தனுபவிக்கும்படி செய்ய ஆன்மா அறிந்தனுபவிக்கும். அவ்வாறனுபவித்தும் தம்மையுந் தம்மைச் செலுத்தி நிற்குந் திருவருளாகிய திரோதான சத்தியையும் ஆன்மாக்கள் அறியமாட்டாவாம். ஐம்பொறி முதலியன ஆன்மாவை அறியாவாயினும் ஆன்மா ஐம்பொறிமுதலியவற்றையறிந்து உடனிற்றல்போல ஆன்மாக்கள் முதல்வனை யறியாவாயினும் பாசநீக்கத்தில் தன்னையறியும்படி செய்பவனுகிய அம்முதல்வன் அவ்வான்மாக்களை யறிந்தும் அவற்றிற்கு அறிவித்தும் அவற்றுடனிற்பன். (எ...று)

இந்திரிய முதலான கருவிகள் சடமாதலால் எக்காலத்தும் ஆன்மாவை யறியமாட்டா. ஆன்மா சித்துப் பொருளாதலால் எக்காலத்தும் இறைவனை அறியமாட்டாதென்றல் பொருந்தாது. அன்றியும்

இறைவனை யறிந்தின்புறுவதான முத்திநிலையும் இல்லையாய் முடியும். ஆதலால் அஞ்ஞானகாலத்தில் ஆன்மாவானது இறைவனை யறியாது. அவ்வஞ்ஞானம் நீங்கியகாலத்தில் அறியும். அப்பொழுது அறிதலும் இறைவன் அறிவிக்க அறியும் என்பதனைத் தற்கு "அறிதருஞ்சிவ" னென்று கூறினர். அறிதருஞ் சிவனென்றதை அறிதலித்தருஞ் சிவனென்று விரித்துக்கொள்ளல்வேண்டும். அறியப்படாது நின்ற முதல்வன் என்றது முதல்வனது சிற்சத்தியாகிய திரோதானசத்தியை.

இச்செய்யுள் முதனூல் ஐந்தாஞ் சூத்திரம்போல இருகூற்றை யுடையது. அவற்றுள்

முதற்கூறு—பொறிபுலன் காணமெல்லாம் புருடனலறிந்தான் மாலை யறிதரா.

இரண்டாங்கூறு—அலைவேபோல ஆன்மாக்களனைத்து மெஞ்ஞான்றுஞ் செறிதருஞ் சிவன்றனலே யறிந்திடுஞ் சிவனைக்காணு அறிதருஞ் சிவனே யெல்லாம் அறிந்தறிவித்து நிற்பன்.

இவற்றுள் முதற்கூறு உவமையா யதன்க ணைசங்கையின்மையின் அதனை யுள்ளடக்கி நிற்கும் இரண்டாங்கூறு கூறத்தொடங்குகின்றார். (க)

ரண்டாம் அதிகாணம்.

அலைவேபோல அறிந்தறிவித்து நிற்பன் என்பது.

ஆன்மாக்களைச் செலுத்துதல் கன்மமேயன்றி முதல்வன் அன்றென்பாரை மறுத்துரைக்கின்றது.

இறைவனே யறிவிப் பானே லீண்டறி வெவர்க்கு மொக்குங்
குறைவதி கங்க டத்தங் கன்மமேற் கோமான் வேண்டா
முறைதரு செயற்குப் பாரு முளரிகட் கிரவி யும்போ
லறைதரு தத்தங் கன்மத் தளவினுக் குளிப்ப ஞதி.

(கொ-டு) முளரிகட்கு இரவியும் முறைதரு செயற்குப்பாரும் போல்.

(பொ-ரை) ஆன்மாக்களுக்கு இறைவனே அறிவிப்பானெனின், இறைவன் நடுவுநிலைமையுடையவனுதலால் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒன்றுபோலறிவிக்கவேண்டும். நடுவு நிலைமையுடையவனுயினும் அவரவர் கன்மத்துக் கீடாக வேறு வேறு விதமாய் அறிவிப்பானெனின், அறிவிப்பதற்குக் கன்மமேயன்றி இறைவன் வேண்டாம். தாமரை விரிவதற்கு சூரியன் வேண்டப்படுதல் போலவும் உழவு முதலிய செயல்கள் பலன்தருவதற்கு நிலம் வேண்டப்படுதல் போலவும் கன்மம் பலன்தருவதற்கு இறைவன் வேண்டப்படும். ஆதலால் கன்மமே போதுமென்றல் பொருந்தாது. (எ...று) (உ)

கன்மத்தோடு கூடிய ஆன்மா அறிவுடைப் பொருளாதலின் அவ்வான்மாவே தன்னைச் செலுத்திக்கொள்ளும்;இறைவன் வேண்டாமென்பாரை மறுத்துரைக்கின்றது.

அறிந்திடு மான்மா வொன்றை யொன்றி னலறித லானு
மறிந்தவை மறத்த லானு மறிவிக்க வறித லானு
மறிந்திடுந் தன்னை யுந்தா னறியாமை யானுந் தானே
யறிந்திடு மறிவ னன்று மறிவிக்க வறிவ னன்றே.

(பொ-ரை) மேற்கூறியவாறு கன்மத்தோடுங் கூடிய ஆன்மா அறிவுடைப் பொருளாதலான் அவ்வான்மாவே கன்மத்தின் பலனை அறிந்தெடுத்துக் கொள்ளுமெனின், இவ்வான்மா அறிவுடைப் பொருளாயினும் ஒவ்வொரு விடயங்களை ஒவ்வொரு இந்திரியங்களால் அறிதலேயன்றி இந்திரியத்தின் துணையில்லாமல் தானே ஒரு விடயத்தையும் அறியாது. அவ்வாறு இந்திரியத்தைக் கொண்டு விடயத்தை யறிதலே ஆன்மாவின் இயல்பென்பையாயின், முன் அறிந்த விடயத்தைப் பின்னெரு விடயத்தை அறியுங்கால் மறவாதிருக்கவேண்டும். மறத்தல் காணப்படுகின்றது. அறிந்த விடயத்தைப் பின்னறியவேண்டாமையால் மறக்கலாயிற்றென்பையாயின், மறந்து பிரிதொன்றை அறிந்துகொண்டிருக்குங்கால் மறந்த விடயத்தை மீண்டு ஒருவன் அறிவிக்க அதில் அறிவு செல்லுகின்றது, அவ்வாறுயினும் யாதானு மொன்றை அறிந்துகொண்டிருப்பதனல் அறிதலில் வேறுபாடில்லை என்பையாயின், அறிகின்ற தன்னை அறியாமையினல் அறிதலில் வேறுபாடில்லை என்பது எவ்வாறு கூடும்? ஆதலால் ஆன்மாவானது முதல்வன்போல தானே அறியும் சுதந்தர அறிவின்றி இறைவன் அறிவிக்க அறியும் தன்மையுடையது. (எ...று)

இச்செய்புளில் விடயத்தை இந்திரியத்தால் ஆன்மா அறியுமெனக் கூறியதனால் இந்திரியம் ஆன்மாவினால் விடயத்தை அறிந்தும் தன்னையும் ஆன்மாவையும் அறியாதென்ற முதற்சூறு அடங்கியவாறு காண்க. (கூ)

மாயேயமாகிய தத்துவங்களே ஆன்மாவிற்கு அறிதலையுண்டுபண்ணும்; இறைவன் வேண்டாமென்பாரை மறுத்துரைக்கின்றது.

கருவியாற் பொருளாற் காட்டாற் காலத்தாற் கருமந் தன்னை
யுருவினை லளவா னூலா லொருவரா லுணர்த்த லானு:
மருவனு யுண்மை தன்னி லறியாது நிற்ற லானு
மொருவனே யெல்லாத் தானு முணர்த்துவனருளி னலே.

(கொ-டு) உண்மை தன்னில் அருவனுய் அறியாது நிற்றலானும் எல்லாத்தானும் அருளினலே உணர்த்துவன் ஒருவனே.

(பொ-ரை) ஆன்மா அறிதலைச் செய்வதற்கு மாயாகாரியமாகிய தத்துவங்களே அமையும்; இறைவன் வேண்டுமென்றல் கூடாதெனின், ஆன்மாவின் அறிவைச்செலுத்துகின்ற அகக்கருவிகளாகிய ஆன்மதத்துவமும் புறச்கருவிகளாகிய தாத்துவிகமும் அறிவுமுதலியவற்றை விளக்குவனவாகிய கலை, வித்தை முதலிய தத்துவங்களும் கன்மபலனை வரையறை செய்யும் காலம், நியதி முதலிய தத்துவங்களும் தூலவுடம்பும் பிரத்தியட்சாதி பிரமாணங்களும் அறிதற்குக்காரணமாகிய நால்வகை வாக்குக்களும் பொருந்தும்படி ஒருவன் கூட்டி உணர்த்த உயிர்உணரும். அவைகளைக்கூட்டாத அநாதி கேவலத்தில் உயிர்மலத்துடன்கூடி உணராது. அம்மாயாகாரியங்கள் அறிதற்குத் துணையாயினும் தாமே ஆன்மாவுடன் கூடாது. ஆதலின் அவை அனைத்தையும் ஆன்மாவுடன் கூட்டி அறிவிப்பதற்கு ஒரு இறைவன் வேண்டப்படு மாதலால் இறைவனையின்றி மாயாகாரியங்களால் அறிதல் கூடாது. (எ...று) (கூ)

இறைவன் பிறர் அறிவிக்கவேண்டாது தானே ஆன்மாக்களின் பொருட்டு தூலம், சூக்குமம், அதிசூக்குமமென்னும் மூவகையான ஐந்தொழிலைச் செய்வனெனக் கூறுகின்றது.

கருவியும் பொருளுங் காட்டுங் காலமுங் கருமந் தானு
முருவமு மளவு நூலு மொருவரு முணர்த்த வின்றி
யருவனு யுலக மெல்லா மறிந்தவை யாக்கி வேறு
யொருவனே யுயிர்கட் கெல்லா முயிருமா யுணர்த்தி நிற்பன்.

(பொ-ரை) ஆன்மாக்களுக்கு இறைவனே அறிவிப்பானெனின், இறைவன் நடுவுநிலைமையுடையவனுதலால் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒன்றுபோலறிவிக்கவேண்டும். நடுவு நிலைமையுடையவனுயினும் அவரவர் கன்மத்துக் கீடாக வேறு வேறு விதமாய் அறிவிப்பானெனின், அறிவிப்பதற்குக் கன்மமேயன்றி இறைவன் வேண்டாம். தாமரை விரிவதற்கு சூரியன் வேண்டப்படுதல் போலவும் உழவு முதலிய செயல்கள் பலன்தருவதற்கு நிலம் வேண்டப்படுதல் போலவும் கன்மம் பலன்தருவதற்கு இறைவன் வேண்டப்படும். ஆதலால் கன்மமே போதுமென்றல் பொருந்தாது. (எ...று) (உ)

கன்மத்தோடு கூடிய ஆன்மா அறிவுடைப் பொருளாதலின் அவ்வான்மாவே தன்னைச் செலுத்திக்கொள்ளும்;இறைவன் வேண்டாமென்பாரை மறுத்துரைக்கின்றது.

அறிந்திடு மான்மா வொன்றை யொன்றினு லறிந்த லானு
மறிந்தவை மறத்த லானு மறிவிக்க வறிந்த லானு
மறிந்திடுந் தன்னை யுந்தா னறியாமை யானுந் தானே
யறிந்திடு மறிவ னன்று மறிவிக்க வறிவ னன்றே.

(பொ-ரை) மேற்கூறியவாறு கன்மத்தோடுங் கூடிய ஆன்மா அறிவுடைப் பொருளாதலான் அவ்வான்மாவே கன்மத்தின் பலனை அறிந்தெடுத்துக் கொள்ளுமெனின், இவ்வான்மா அறிவுடைப் பொருளாயினும் ஒவ்வொரு விடயங்களை ஒவ்வொரு இந்திரியங்களால் அறிதலேயன்றி இந்திரியத்தின் துணையில்லாமல் தானே ஒரு விடயத்தையும் அறியாது. அவ்வாறு இந்திரியத்தைக் கொண்டு விடயத்தை யறிதலே ஆன்மாவின் இயல்பென்பையாயின், முன் அறிந்த விடயத்தைப் பின்னொரு விடயத்தை அறியுங்கால் மறவாதிருக்கவேண்டும். மறத்தல் காணப்படுகின்றது. அறிந்த விடயத்தைப் பின்னறியவேண்டாமையால் மறக்கலாயிற்றென்பையாயின், மறந்து பிரிதொன்றை அறிந்துகொண்டிருக்குங்கால் மறந்த விடயத்தை மீண்டு ஒருவன் அறிவிக்க அதில் அறிவு செல்லுகின்றது, அவ்வாறுயினும் யாதானு மொன்றை அறிந்துகொண்டிருப்பதனுல் அறிதலில் வேறுபாடில்லை என்பையாயின், அறிகின்ற தன்னை அறியாமையினுல் அறிதலில் வேறுபாடில்லை என்பது எவ்வாறு கூடும்? ஆதலால் ஆன்மாவானது முதல்வன்போல தானே அறியும் சுதந்தர அறிவின்றி இறைவன் அறிவிக்க அறியும் தன்மையுடையது. (எ...று)

இச்செய்புளில் விடயத்தை இந்திரியத்தால் ஆன்மா அறியு மெனக் கூறியதனல் இந்திரியம் ஆன்மாவினல் விடயத்தை அறிந்து தன்னையும் ஆன்மாவையும் அறியாதென்ற முதற்கூறு அடங்கியவாறு காண்க. (கூ)

மாயேயமாகிய தத்துவங்களே ஆன்மாவிற்கு அறிதலையுண்டு பண்ணும்; இறைவன் வேண்டாமென்பாரை மறுத்துரைக்கின்றது.

கருவியாற் பொருளாற் காட்டாற் காலத்தாற் கருமந் தன்னு
ளுருவினு ளளவா னூலா லொருவரா லுணர்த்த லானு:
மருவனு புண்மை தன்னி லறியாது நிற்ற லானு
மொருவனே யெல்லாத் தானு முணர்த்துவ னருளி னலே.

(கொ-டு) உண்மை தன்னில் அருவனுய் அறியாது நிற்றலானும் எல்லாத்தானும் அருளினலே உணர்த்துவன் ஒருவனே.

(பொ-ரை) ஆன்மா அறிதலைச் செய்வதற்கு மாயாகாரியமாகிய தத்துவங்களே அமையும்; இறைவன் வேண்டுமென்றல் கூடாதெனின், ஆன்மாவின் அறிவைச்செலுத்துகின்ற அகக்கருவிகளாகிய ஆன்மதத்துவமும் புறச்கருவிகளாகிய தாத்துவிகமும் அறிவுமுதலியவற்றை விளக்குவனவாகிய கலை, வித்தை முதலிய தத்துவங்களும் கன்மபலனை வரையறை செய்யும் காலம், நியதி முதலிய தத்துவங்களும் தூலவுடம்பும் பிரத்தியட்சாதி பிரமாணங்களும் அறிதற்குக்காரணமாகிய நால்வகை வாக்குக்களும் பொருந்தும்படி ஒருவன் கூட்டி உணர்த்த உயிர்உணரும். அவைகளைக்கூட்டாத அநாதி கேவலத்தில் உயிர்மலத்துடன்கூடி உணராது. அம்மாயாகாரியங்கள் அறிதற்குத் துணையாயினும் தாமே ஆன்மாவுடன் கூடாது. ஆதலின் அவை அனைத்தையும் ஆன்மாவுடன் கூட்டி அறிவிப்பதற்கு ஒரு இறைவன் வேண்டப்படு மாதலால் இறைவனையின்றி மாயாகாரியங்களால் அறிதல் கூடாது. (எ...று) (சு)

இறைவன் பிறர் அறிவிக்கவேண்டாது தானே ஆன்மாக்களின் பொருட்டு தூலம், சூக்குமம், அதிசூக்குமமென்னும் மூவகையான ஐந்தொழிலைச் செய்வனெனக் கூறுகின்றது.

கருவியும் பொருளுங் காட்டுங் காலமுங் கருமந் தானு
முருவமு மளவு நூலு மொருவரு முணர்த்த லின்றி
யருவனு யுலக மெல்லா மறிந்தவை யாக்கி வேறு
யொருவனே யுயிர்கட் கெல்லா முயிருமா யுணர்த்தி நிற்பன்.

(கொ-டு) ஒருவனே அருவனுய் வேறாய் உலகமெல்லாம்அறிந்து அவை ஆக்கி உயிர்கட்கெல்லாம் உயிருமாய் உணர்த்தி நிற்பன்.

(பொ-ரை) மேற்கூறிய வாறு சித்துப் பொருளாகிய ஆன்மா தன்னின் வேறுகிய இறைவனுல் தத்துவ முதலாகியவற்றைக் கூட்டி அறிவிக்க அறிதல் போல, சித்துப்பொருளாகிய இறைவனும் அவ்வாறே வேறொருவனுலறி விக்க அறிவனென்று கூறலாகாதோவெனின், அவ்வாறாயின் அவனுக்கறிவிக்க மற்றொருவனும் அவ்வாறே வரம்பின்றி ஓடுதல் என்னும் குற்றத்திற்கிடனு கும். ஆதலால் தத்துவ முதலியனவும் வேறு அறிவுடைப் பொருளும் அறிவி க்க வேண்டாது இறைவன் தானே முதல்வனுய் உயிர்களின் பொருட்டு கேவல அவத்தையில் அறிதலாகிய வகையில் சூக்கும ஐந்தொழிலையும் சகல அவத்தை யில் விடயத்தைத் தோற்றுவிக்கும் முறையில் சிருட்டிமுதலிய தூல ஐந்தொழி லையும் அச்சகல அவத்தையினுள்ளும் சாக்கிரத்தில் இன்ப துன்பப்பயனை ஊட் டுவிக்கும் முறையில் அதிசூக்கும ஐந்தொழிலையும் செய்து நிற்பன். (எ...று)

சூக்கும ஐந்தொழிலாவது:—கேவலத்தில் ஆன்மாக்களின் பரிபா கத்தை அறிதல் சிருட்டி. பரிபாகமல்லாத ஆன்மாக்களை கேவலத் தில் வைத்தல் திதி. பரிபாகம் உள்ள ஆன்மாக்களைக் கேவலத்தினி ன்று நீக்குதல் சங்காரம். கேவலத்தி லிருக்கும் பரிபாக மில்லாத ஆன்மாக்களுக்குக் கேவலமெனத் தோன்றுதிருக்கச்செய்தல் மறை ப்பு. சகலத்தில்விடுதல் அனுக்கிரகம். இது உயிர்களின்பொருட்டு இறைவன் மாட்டு நிகழ்வது.

தூல ஐந்தொழிலாவது:—தனுகரணபுவன போகங்களைத் தோற் றுவித்தல் சிருட்டி. அவற்றைநிலைப்படுத்தல் திதி. அவற்றைஅழி த்தல் சங்காரம். அவற்றுள் அநுபவிக்க வேண்டாதன வற்றை மறை த்துவைத்தல் திரோபவம். அனுபவிக்க வேண்டிய வற்றைத் தோற் றுவித்தல் அநுக்கிரகம். இது உயிர்களின் பொருட்டு உடல் உலக மாகிய பாசத்தின் மாட்டு நிகழ்வது.

அதிசூக்கும ஐந்தொழிலாவது:—ஆன்மாவிற்கு அறிவித்தல் சிரு ட்டி. அறிந்தவற்றுள் அழுத்துதல் திதி. முன்னறிந்தவற்றினின்றும் பிரித்தல் சங்காரம். ஒன்றனை அறியவேண்டுங்கால் பிறிதொன்றனை அறியவொட்டாது மறைத்தல் திரோபவம். அறிந்தவற்றை அனுப விக்கச் செய்தல் அனுக்கிரகம். இது உயிரின் மாட்டு நிகழ்வது

இம்மூவகைபான ஐந்தொழில்களுள் தூல ஐந்தொழில் மூதற் சூத் திரத்தாலும் சூக்கும ஐந்தொழில் இரண்டாஞ் சூத்திரத்தாலும் சங்கையுத்தரங்களோடு கூறிவிடடமையால் இச்சூத்திரத்துள் அதி சூக்கும ஐந்தொழிற்கணுண்டாம் சங்கையுத்தரங்களை விரித்துக்

உயிருக்கு இறைவன் அறிவித்தலால் அவ்விறைவன் உயிர்போ லும் பந்தம் அடையானெனைக் கூறுகின்றது.

இறைவன்றன் சந்நி திக்க ணுலகின்றன் சேட்டை யென்னு
மறைகளு மறந்தாய் மாயை மருவிடான் சிவன வன்க
ணுறைதரா தசேத னத்தா லுருவுடை யுயிர்கட் கெல்லா
நிறைபரன் சந்நி திக்க ணீடுணர் வுதிக்கு மன்றே.

(கொ-து) உயிர்கட்கு எல்லாம் நிறைபரன் சந்நிதிக்கண் நீடு உணர்வு உதி க்கும் உருவுடை அன்றே அசேதனத்தால் மாயை மருவிடான் இறைவன்றன் சந்நிதிக்கண் உலகின்றன் சேட்டை என்னும் மறைகளும் மறந்தாய் சிவனவன் கண் உறைதராது.

(பொ-ரை) கருவி முதலியன விடயங்களை அறிதலால் வரும் பயன் அக்கருவிகளுக்கு அறிவித்து நிற்கும் உயிர்க்காயவாறு போல, உயிர் அறிதலால் வரும் பயன் அவ்வுயிருக்கு அறிவித்து நிற்கும் இறைவனுக் காதல் வேண்டும். வேண்டவே இறைவனும் பந்தமுறுவ னெனப்பட்டு வழுவாம்.ஆதலால் கருவி முதலியவற்றிற்கு உயிர் அறிவிப்பது போல உயிர்க்கு இறைவன் அறிவிப்ப னென்றல் பொருந்தாதெனின், பொருந்துமாறுகூறுதும். கருவிமுதலியன உயிரின் சங்கற்பத்தால்உணரும். உயிர் இறைவன் சங்கற்பமின்றி அவன் சந்நி மாத்திரையால் உணரும். உயிர் வெவ்வேறு விதமாய் உணர்தற்கு வினைக் கீடான உடம்பினை உடையதாய் நிற்கும். இறைவன் அவ்வாறு உணர்தலும் வினையும் வினைப்பயனுகியஉடம்புடன் கூடுதலும் இன்றிநிற்பன். அன்றியும் உயிருக்கு பிரபஞ்சம் சுட்டி அறியப்படும். அகண்டாகாரமாய் நிற்கும் இறை வனுக்குப் பிரபஞ்சம் சுட்டியறியப்படமாட்டாது. ஆகவே சடமாகிய பிரபஞ் சத்தையும் சுதந்தர அறிவில்லாத உயிரையும் இறைவன் சந்நிதி கூட்டுவிக்கு மென்ற ஆகமப்பிரமாணத்தையு மறந்து பிணங்குகின்ற அறிவில்லாதவனே உயிருக்கும் இறைவனுக்குங்காட்டிய வேற்றுமையால் பிரபஞ்சத் தோற்றத் தையும் சங்கற்பத்தையும் உடம்பையுமுடைய உயிர்க்கே அறிதற் பயனன்றி அம்மூன்று மில்லாத இறைவனுக்கு அறிதற் பயனில்லை. (எ...று)

இறைவனுக்கு பிரபஞ்சத்தோற்றமும் உடம்பும் இல்லை யென்றது ஒக்கும்; சங்கற்பம் இன்றி சந்நிதிமாத்திரைபால் உயிரும் உடலுங் கூடுமாயின் கேவலத்திலும் இறைவன் சந்நிதிக்குக் கேடில்லை யாதலால் அவ்விடத்துக் கூடவேண்டுமென்றீர்? கூடாமையாலும் சிவமே னெல்லா மறிந்தறிவித்து நிற்பனென மேல் இச்சூத்திரம் முதற்செய்யுளிற் கூறுகலாலும் சந்நிதி மாத்திரையென்றல் எவ்வாறு பொருந்துமெனின், சந்நிதியென்றது நேராக எதிர்முகமாகலைக் குறித்ததன்று. இறைவனேவு பிரிப்பின்றி நிற்குந் திருவருளைக் குறித்ததாம். ஆகவே சந்நிதி மாத்திரையாலென்றது திருவருளாலென்றபடியாம். அத்திருவருளுக்குச் சங்கற்பமுண்டோ இல்லையோ எனின் இல்லையெனின், மேற்கூறிய குற்றம் உண்டாம். உண்டெனின், உயிர்போலப் பந்தத்தைப் பொருந்தும். ஆகலால் உண்மையாதெனின், திருவருளுக்குச் சங்கற்பமுண்டு. அச்சங்கற்பம் தன் பொருட்டன்று. உயிர்களின் பொருட்டாம். உயிர்களின் சங்கற்பம் இந்திரியத்தின் பொருட்டன்று, தன் பொருட்டேயாம். ஆகலால் உயிர் உணர்தற்பயன் உயிர்க்காமாறுபோல இறைவன் உணர்தற்பயன் இறைவனுக்காகாமையறிக. சந்நிதி யென்பதற்கு திருவருட் சங்கற்பம் என்பதே முடிவான பொருளாம் என்பதை இந்நூல் முதற்சூத்திரம் ககூவது செய்யுளில் "சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே" என்பதற்கு "சிவசத்தி சங்கற்ப ரூப சந்நிதியினின்றும்" எனவும் சிவஞான போதச் சிற்றுரை ஐந்தாம் சூத்திரம் உ-ம் அதிகரணத்து முதல் வெண்பா உரையில் "சிவசத்தி அவ்வக் காரியங்களின் உன்முகமாதலாகிய சங்கற்பமே சண்டு சந்நிதி எனப்படும்" எனவும் மாதவச் சிவஞானயோகிகள் அருளியவாற்றானறிக. (சு)

இறைவன் உயிருக்கறிவித்தலால் விகார மெய்தானெனக் கூறுகின்றது.

உலகமே யுருவ மாக வோங்கு ஞாயிற்ப தாக
விலகுமே ரிச்சா ஞானக் கிரியையுட் கரணமாக
வலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
கலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப தொன்.

(கொ-டு) நாதன் உலகமே உருவமாக யோகிகள் உறப்பதாக இலகுபோர் இச்சாஞானக் கிரியை உட்காணமாக அலகுஇரா உயிர்கட்குப் புலன் அறிவி னை ஆக்கி நலம் மிகு தொழில்கள் ஐந்தோடும் நாடகம் நடிப்பன்.

(பொ-ரை) இறைவன் உயிர்க்கு அறிவிக்குங்கால் எவ்வாறு நின்றறி விப்பனெனின், ஆன்மா உடம்புமுதலிய வற்றைக்கொண்டு நின்றுணருமாறு போல, இறைவனும் இருநூற்றிருபத்து நாலு புவனங்கள் திருமேனியாகவும் எண்பத்துநான்கு நூருயிர குறிபேதங்கள் அவயவங்களாகவும் மிக்க விளக்க முடைய இச்சாஞானக்கிரியைகள் உட்காணமாகவும் கொண்டு எண்ணிறந்த உயிர்களிடத்து அறிவிற் கறிவாய் நின்றுணர்த்துவான். அவ்வாறுணர்த்துத லாகிய நலம் மிகுந்த அதிசூக்கும ஐந்தொழிலும் மேற்கூறிய திருமேனி முத லிய கருவிகளின் துணையைக் கொண்டன்றி சங்கற்ப மாத்திரையாகவே அக் கருவிகளைக் கொண்டு செய்தருள்வன். (எ...று)

திருமேனியாகவும் அவயவங்களாகவும் புவனத்தையும் குறி பேதத்தையுங் கூறியதனல் இறைவன் உயிர்க்கு உயிராய் நின்று உணர்த்துதல் மட்டுமன்றி அவ்வுயிரால் உணரப்படும் பொருள்களி னும் நிறைந்து நின்று அப்பொருள்களை விளங்கும்படி செய்கின்று னென்பதறிக. அவ்வாறு பொருள்களில் நிறைந்து நிற்கவில்லையா யின் பொருள் விளங்கமாட்டாது. உயிர்க்கறிவித்தலால் பயனுமின் று. இவ்வாறு நின்று உணர்த்துவதும் சங்கற்ப மாத்திரை என்றதி னல் காணத்தோடு கூடித் தொழிற் செய்யும் உயிர் விகாரமெய்து தல்போல் இறைவன் விகார மெய்தான் னன்பது குறிப்பால் உண ரக்கிடந்தது. விகாரமென்பது—வேற்றுமைப்படுதல். (எ)

இறைவன் உயிர்க்கு அறிவித்தற் கட்படும் அதிசூக்கும ஐந் தொழிற்குப் பயன் ஏகதேச அறிவும் வியாபக அறிவும் நிகழ்ந்து அவற்றல் போக மோட்சங்களை உயிரடைதலாமெனக் கூறுகின்றது.

தெரிந்துகொண் டொருவொன் றுகச் சென்றைந்து புலனும் பற்றிப்
புரிந்திடு முணர்வி னோடும் போகமுங் கொடுத்தி யோனி
திரிந்திடு மதுவுஞ் செய்து செய்திகண் டுயிர்கட் கெல்லாம்
விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்.

(கொ-டு) மேலோன் உயிர்கட்கெல்லாம் ஐந்தும் பற்றிப் புலன் ஒரொ வொன்றுகத் தெரிந்து கொண்டு சென்று உணர்வினோடும் புரிந்திடும் போக முங்கொடுத்து யோனிதிரிந்திடுமதுவுஞ்செய்து செய்திகண்டு விரிந்திடும் அற் வுங்காட்டி வீட்டையும் அளிப்பன்.

(பொ-ரை) மேற்கூறிய அதிகுக்கும ஐந்தொழிலாகிய அறிவித்தல் நல மிகுந்த தொழிலாமாறு எவ்வாறெனின் ஆன்மாவிற்கு, நலமாவது, போகம் மோட்சமென இருதிறப்படும். இறைவன் அறிவித்தலாகிய தொழிலால் ஆன் மாவிற்கு ஐம்பொறிவழியாக விடயங்களை அறிவித்து அவ்வாறு அறிவித்த லால் எகதேச அறிவுங்கழச் செய்து உலக போகத்தைக் கூட்டி அப்போக, அநு பவத்தினால் பல பிறவிகளை எய்தும்படிக்கும் அதனால் வெறுப்புத் தோன்றும் படிக்கும் செய்து பருவம் முதிர்ந்தவிடத்து வியாபக அறிவை விளக்கி அவ் வறிவிற்குப் பயனுக பரபோக மாகிய பேரின்பத்தைக் கொடுத்தருள்வன். ஆத லால் நலமிகுந்த தொழிலாயிற்று. (எ...று) (அ)

அவ்வைந்தொழிலால் இறைவனுக்கு யாதொரு பயனுமின்றெ னவும் அருட்பெருக்கால் அவ்வாறு செய்தல் இயல்பேயாமெனவும் கூறுகின்றது.

அருளது சத்தி யாகு மரன்றனக் கருளையி ன்றித்
தெருள்சிவ மில்லையத்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பின் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன்.

(கொ டு) அருளது அரன்றனக்குச் சத்தியாகும் அருளை இன்றித்தெ ருள் சிவமில்லை அந்தச்சிவம் இன்றிச் சத்தி இல்லை கண்கட்கு இருளினை ஒளி யால் ஓட்டும் இரவியைப்போல ஈசன் மன்னுயிர்க்கு மருளினை அருளால் வாட் டி அளிப்பான்.

(பொ-ரை) மேற்கூறியவாறு ஆன்மாவின் பொருட்டு இறைவன் செய் யும் அறிவித்தலாகிய ஐந்தொழிலால் அவ்விறைவனுக்கு ஆகக்கடவது என்னை யோவெனின், ஆன்மாக்களுக்கு அறிவித்து விடயத்தைக் காட்டி அதனைக் கூட் டி அநபவிக்கும்படி செய்வதாகிய அக்கருணையும் இறைவனுக்கு இயற்கைக் குணமெனப்படும் சத்தியாம். அவ்வருட்குணமாகிய சத்தியை யின்றி சிவ மில்லை அச்சிவத்தை விட்டு சத்தி நீங்குதலில்லை. ஆதலின் உலகத்து புற இருளினை கிரணத்தால் ஓட்டி கண்களுக்குப் பிரகாசத்தைச் செய்கின்ற ஆதித் தன்போல அச்சத்தியின் அருட்குணமாக இறைவன் அவ்வருளால் உயிர்கட்கு மயக்கத்தினை நீக்கி அறுக்கிரகஞ் செய்வன். ஆதித்தனுக்கு இருளை ஓட்டுவது இயற்கையாய் ஓட்டுவதனால் ஆகக்கடவதோ? பயனுமின்றுதல்போல இறைவ னுக்கு அருட்குணம் மேம்படுதல் இயற்கையாய் அதனால் ஆகக்கடவதோர் பய (எ...று) (கூ)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

ஞாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் உகூ

ஆறாஞ் சூத்திரம்

பதி இலக்கணம்.

மேல் அடுத்துநின்ற இரண்டு சூத்திரங்களால் பசுபாசங்களுக்கு இலக்கணங் கூறினமையால் இலக்கணங் கூறவேண்டியதாய் எஞ்சிநின்ற பதிப்பொருளுக் கிலக்கணம் இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

சிவம் அறியப்படும் பொருளாகவும் அறியப்படாத பொருளாகவுமின்றி சித்துச் சத்தாய் நிற்குமென சூத்திரப் பெருளுத் தொகுத்துக் கூறுகின்றது.

அறிவுறும் பொருளோ வீச னறிவுறு தவனே வென்னி
னறிபொரு ளஞ்சித்த சத்தா மறியாத தின்று மெங்குஞ்
செறிசிவ மிரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கு
நெறிதரு சத்தின் முன்ன ரசத்தெலா நின்றி டாவே.

(கொ-டு) ஈசன் அறிவுறும் பொருளோ அறிவுறுதவனே என்னின் அறிபொருள் அசித்து அசத்தாம் அறியாதது இன்றும் நெறிதருசத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றிடாவே (ஆகலான்) எங்கும் செறிசிவம் இரண்டுமின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்.

(பொ-ரை) மேலைச்சூத்திரத்துட் கூறியவாறு ஆன்மாக்கட்கு அறிவித்தலைச் செய்யும் சிவபிரான் மனத்தால் கருதி கண்ணுலறியப்படும் பொருளோ? எவ்வகையானும் அறியப்படாத பொருளோ? எனின், கருதிக் கண்ணுலறியப்படும் பொருளாயின் அவ்வாறறியப்படும் உலகப்பொருள்போல அறிவில்லாததாய் அழிந்து போவதுமாகும். அறியப்படாத பொருளென்று சொல்லில் சூனியமெனப்படும். அன்றியும் இறைவனே யறிதல் முத்தியென்றலும் வீணுகும். ஆதலால் கண்ணுலறியப்படாததாய் மனத்தால் கருதியறியப்படும் பொருளென்று கூறலாமோ? எனின், சிவபிரான் முன்னர் சடமாகிய மனமுதலிய காரணங்கள் முனைத்து நிற்கும் வலிமையில்லாததாய் நீங்குந்தன்மை யுடையதாதலின் அத்தகைய மனத்தால் அறியப்படுமென்றலும் பொருந்தாது. இவ்வாறுயின் உண்மைதான் யாதோ? எனின், எவ்விடத்தும் வியாபகமாகிய சிவம் கருவி காரணங்களா லறியப்படாததாய் எவ்வாற்றுனும் அறியப்படாத தல்லாததாய் சிவஞானத்தாலறியப்படுஞ் சித்துச் சத்தாய் நிற்கும். (எ...று)

இவ்வாறு நிற்றல் முதல்வனுக்கு சொரூப இலக்கணமெனப்படும் சிறப்பியல்பு.

அழியும் பொருள்சடமாதல்போல சடப்பொருள் அழியுமென் றல் கூடாது. கூடுமெனின் மலம் நித்தியமென்பதின்றுப் வழுவாம். ஆதலால் சடமாயும் பலவாயும் இருப்பின் அழியுமென்றும் சடமா யும் ஒன்றுயுமிருப்பின் அழியாதென்றும் அறிக.

சித்துச் சத்தென்ற இரண்டிலக்கணங் கூறுவானேன்?. எனின், பாசஞானத்தா லறியப்படாதென்றமையால் அதனு லறியப்படும் சடம்போலன்றிச் சித்தாயும், பதிஞானத்தாலறியப்படும் என்றமை யால் அறியப்படும் உலகப்பொருள்போல் அழிவின்றிச் சத்தாயும் விளங்கும் உண்மை யுணர்த்துதற்குச் சித்துச் சத்து என்றார். சத் துச் சித்தென்னுது சித்துச்சத்தென்பானேனெனின், பாசநீக்கத் தில் முதற்கண்விளங்குவது சித்தும் அதிலழுந்துதலால் சத்தும் அநுபவமாகு முறைபற்றியென்க. அவ்வாறாயின் சத்துவேறு சித்துவேறேறுவெனின், அன்று. அவ்விரண்டும் எதுபோலவெனின், சூரியனும் ஒளியும்போலவாம். உலகப்பொருளைவிட்டுச் சூரியனை நோக்குவார்க்கு முதற்கண் விளங்குவது ஒளியும் அவ்வொளியை ஊடுருவிச் சென்றபின்னர் விளங்குவது சூரியனும்போல அறிக. சத்துச்சித்தென்று கூறுமிடமெல்லாம் பொருள் இருக்கும் முறை மைபற்றியாம். அநுபவமுறை இருக்கும் முறைகளின் வேறுபாடு எப்பொருளிடத்தும் உண்டு.

இச்செய்யுள் சிவஞானபோதம் ஆறாஞ் சூத்திரத்திற்கொண்ட இருகூற்றேறும் " அறியாததின்று மென்றதனை ஒரு கூறுக்கொண்டு மூக்கூற்றினை உடையதாம்." அவற்றுள்

முதற்கூறு—அறிபொருள் அசித்த சத்தாம்.
இரண்டாங்கூறு—அறியாததின்றும்.

மூன்றாங்கூறு—அறிவுறும்பொருளோ ஈசன் அறிவிலாதவனே என்னில் நெறிதரு சத்தின்முன்னர் அசத்தெலாம் நின்றிடா (ஆக லான்) எங்கும் செறிசிவ மிரண்டுமின்றி சித்தொடு சத்தாய் நிற் கும்.

முதனூலில் இரண்டாங் கூற்றின்கண் ஐயப்பாடுமுதலியன நிகழாது எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தமையால் வேறெ டுத்துரைக்காதுவிடுத்தனர். ஆயினும் மந்த வுணர்வுடையாருக்கு

அதன்கண் ஐயம் நிகழாமைப்பொருட்டு இந்நூலாசிரியர் வேறு கூறுக எடுத்தோதிப் பரிகரித்தனர். (1)

முதலதிகாரணம்.

அறிபொருள் அசித்தசத்தாம் என்பது.

வேறுகச் சுட்டி அறியப்படுதலால் அறியப்படும் பொருளினைத் தும் அசத்தெனக்கூறுகின்றது.

ஆவதா யழிவ தாகி வருதலா லறிவு தானுங்
காவலா லுலகு போகங் கணுகா ணுதி யாகி
மேவலான் மலங்க ளாகி விரவலான் வேறு மாகி
போவலா லசத்தாஞ் சுட்டி யுணர்பொரு ளான வெல்லாம்.

(கொ-டு) ". அறிவுதானும் ஆவதாய் அழிவதாகி வருதலால் தாவலால் தணுகாரண உலகுபோகம் ஆதியாகி மேவலால் மலங்களாகி விரவலால் வேறுமாகி யுவலால் சுட்டி உணர்பொருளான வெல்லாம் அசத்தாம்.

(பொ-ரை) விடயத்தை வேறுக நின்று கருதி உரைரும் சுட்டறிவு ஒரு பொருள்பற்றித் தோன்றியும் பின்னொரு பொருளைப் பற்றுங்கால் முந்தின தோற்றங் கெட்டும் நிற்றலால் அவ்வறிவு தோற்ற நாசமுடையதாம். அதனானும் ஒன்றில் நிலைபெறுது ஓரிடம் விட்டு ஓரிடம் தாவுதலானும் தணுகாரணபுவன போகமுதலியவைகளாய் பலவேறுவகைப்பட அறிதலானும் அப்பொருள்களின் நிலையாமையை அறியாமையானும் உண்மை ஞானம் வந்தவிடத்து வேறுபட் டொழிதலானும் அச்சுட்டறிவு அசத்தேயாம். ஆதலால் அச்சுட்டறிவினால் சுட்டியறியப்பட்ட பொருளனைத்தும் அசத்தாவனவன்றி அவற்றுள் ஒருபொரு ளும் சத்தாதல் செல்லாது. (எ...று) (2)

மேலைச் செய்யுளில் அறிவின் மேல் வைத்து அறியப்படும் பொருள் அசத்தென்று கூறினமையால் இதில் பொருளின் மேல்வைத்து அழிதற் றன்மை பற்றி அறியப்படும் பொருள் அசத்தெனக் கூறுகின்றது.

மண்டனிற் வாழ்வும் வானத் தரசயன் மாலர் வாழ்வு
மெண்டருந் தூத தேத யோனிக ளிபாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் கனாக்கழு திரதங் காட்டி
யுண்டுமீ போ வின்றும் பண்டி லுலகினி யசத்து மென்பர்.

(கொ-து) கண்ட எல்லாம் எனவும் உண்டு போல் காட்டி எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு அறியுந்தன்மைபற்றி காணப்படும் பொருள் அசத்தாமாறுபோல பொருளின் தன்மைபற்றி ஆராயுமிடத்தும் அசத்தேயாம். எவ்வாறெனின், மண்ணுலகில் அரசர் வாழ்வும் விண்ணுலகில் இந்திரன், பிரமா, விட்டுணு முதலியோர் வாழ்வும் பூதபரிணமமாகிய எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதங்களுள் எனையவற்றுள் பொருந்திய வாழ்வுமாகிய காணப்பட்ட யாவும் தோன்றும் பொழுதே இல்லையாய் மாறுபடுகின்ற இந்திரஜாலமும் கனாபோதலின்றி இடையே அழியப்படும் சொப்பனக்காட்சியும் கடும்வேனில் நீங்கும் காரணத்தால் அழியப்படும் கானற்சலமும் போல நெடுங்காலம் நிலைபெறுவனபோற் றோன்றி விரையக் கெட்டு மறைந்துபோம். ஆதலால் அவ்வாறு கெட்டொழிந்து போம் தன்மைபற்றி உலகப் பொருளனைத்தும் அசத்தெனக் கூறுவர். (எ..று).

சற்காரிய வாதத்தில் உள்ளது போகாது இல்லது தோன்றுதென்னும் முறைபற்றி எல்லாம் உள்பொருளே யன்றி அசத்தென்பதொன்றில்லை என்று கூறவும் இவ்விடத்து அறியப்படும் பொருள் அசத்தென்று கூறுதல் முறைதாமெனின், முறைது. என்னை? காரணரூபமாய் ஒடுங்கியிருக்கலையே அசத்தென்ப தொன்றில்லை என்பதேயன்றி காரியத்தினழிவு இல்லை என்று சற்காரியவாதம் கூறுவதின்று ஆகலால் முறைமையறிக. (க)

முதலதிகரணம் முடிந்தது.

ரண்டாமதிகரணம்.

அறியாத தின்றும் என்பது.

அறியாதபொருள் உண்டெனக் கொள்ளவேமென்பார்க்கு அப்பொருள் யாதை செய்வானால் அறியப்படாமையால் உண்டென்றல் பொருந்தாதெனக கூறுகின்றது.

உணராத பொருள்சத் தென்னி னெருபய னில்லை தானும்
புணராது நாழுந் சென்று பொருந்துவ தின்று மென்றுந்
தணவாத கருமம் மொன்றுந் தருவது மில்லை வானத்
திணாமார்பூந் தொடையு மியாமைக் கெழுமையிற் கயிறுஞ் போலும்.

(கொ-டு) உணராத பொருள் சத்தென்னின் தானும் புணராது நாமும் சென்று பொருந்துவது என்றும் இன்றும் ஒருபயனில்லை வானத்து இணர் ஆர் பூந்தொடையும் யாமைக்கு எழுமயிர்க்கயிறும் போலும் தணவாத கருமம் ஒன்றும் தருவதும் இல்லை

(பொ-ரை) அறியப்படும் பொருள்கள் தோன்றி அழியக் காண்கின்றோம்; அதுபோல அறியப்படாத பொருட்குத் தோற்றக்கேடு முதலியன இல்லாமையால் அவ்வறியப்படாத பொருளைச் சத்தெனக்கொண்டாற் படும் இழுக்கென்னையோ வெனின், அவ்வாறு கொண்டதனால் அது நம்மைப் பொருந்தாது, நாமும் அதனைப் பொருந்துதல் ஒருநாளுமில்லை. ஆதலால் ஆகாயப் பூவும் யாமை மயிரும் உண்டென்று கொள்வதனால் பயனில்லாததுபோல அறியப்படாதபொருளால் பெறக்கடவதோர் பயனுமில்லையாம். ஆகாயத்தினும் யாமையினும் பூவும் மயிரும் தோற்றமின்றி அதிசூக்குமமாய் உளவென்றும் அவற்றால் ஆகற்பாலனவும் உளவென்றும் கொள்ளக் கூடாதோ வெனின், அறிந்து மாலையாகவும் கயிறாகவும் ஆக்கும்படியான செயலில்லாமையால் அப் பொருளும் பயனும் உண்டென்று கூறுதல் பொருந்தாது. (எ...று) (சு)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்றாம் அதிகரணம்.

அறிவுமாம் பொருளோ.....சத்தாய் நிற்கும்.

அறியப்படுவதும் அறியப்படாததுமாகிய பாம்பொருள் அநிர்வசனமும் அன்று மனம் வாக்குகளுக்கு எட்டுவதும் அன்றெனக் கூறுகின்றது.

தத்துவஞ் சத்த சத்துச் சதசத்து மன்றென் றுலை
னுய்த்துணர்ந் துண்டோ வின்றே வென்றவர்க்குண்டென்றேதில்
வைத்திடுஞ் சத்தை யூகு மனத்தெதாடு வாக்கி றந்த
சித்துரு வதுவ சித்தா மனத்தினுற் றோர்வ தெல்லாம்.

(கொ-டு) மனத்தினால் தோர்வதெல்லாம் அசித்தாம். தோர்வது எல்லாமென்பது தோர்வது என்னும் ஒருமையும் எல்லாமென்னும் பன்மையும் கூடிய ஒருமைப் பன்மை மயக்கம்.

(பொ-ரை) மேற்கூறியவாறு அறியப்படுதலும் அறியப்படாமையு மல்லாத பாம்பொருளாவது உள்ளது மன்று, இல்லது மன்று, உள்ளது மில்லது

மன்று, வேறுமன்று எனக்கூறும் அநிர்வசனமாகக்கொண்டால் உண்டாமி
ழுக் கென்னையோ? வெனின், நன்று சொன்னாய். அவ்வாறு ஆராய்ந்துணர்ந்து
அநிர்வசனமெனக் கூறப்படும் பொருள் உண்டோ இல்லையோ வென வினவு
மிடத்து உண்டென்பையாயின் உள்பொருளாகவே முடியும், இல்லையென்பை
யாயின் இல்லாத சூனியப் பொருட் கோதிய குற்றமுண்டாம். அக்குற்றத்திற்
கஞ்சி உண்டென்று ஒத்துக்கொள்ளவயாயின் பரம்பொருள் உள்பொருளா
வதன்றி அநிர்வசன மன்றென்பதற்கு உன் வாய்மொழியே சான்றாகும். இனி
உள்பொருள் என்னுலறியப்படவேண்டு மென்பையாயின் அப்பரம்பொருள்
மனம் வாக்குக் காயங்களாகிய பாச உணர்வினைக்கடந்துநின்ற அறிவுடைப்
பொருளாதலின் அம்மனவாக்குக் காயங்களைக்கொண்டு அறிதல் கூடாது.
அவற்றைக் கொண்டறியப்படுமாயின் அவற்றுலறியப்பட்டன வெல்லாம் சட
மாய் அழிவெய்துமாறு போல் பரம்பொருளும் சடமாய் அழிவெய்திவிடும்
ஆதலால் பாச அறிவால் அறியப்படாதென்பதனை அறிவாயாக. (எ...று) (கு)

சிவபரம்பொருளை அப்பரம் பொருளின் அருளால் ஆன்மா
பிரிப்பின்றி நின்று அறியுமெனக் கூறுகின்றது.

அறிபொரு ளசித்தாய் வேறு மறிவுறுப் பொருள்சத் தென்னி
னறிபவ னறிபா லுகி லதுவின்று பயனு மில்லை
யறிபவ னருளி னுலே யநநிய மாகக் காண்ப
னறிபொரு ளறிவாய் வேறு யறிவரு ளுருவாய் நிற்கும்.

(கொ-டு) அறிபவன் அநநியமாக அருளினுலே காண்பன்.

(பொ-ரை) மேற் கூறியவாற்றுல் அறியப்படும் பொருள் சடமாய் அழி
தலும் அறியப்படாத பொருள் உண்டென்றுல் பயனின்றுதலும் பெறப்பட்ட
மையால் சிவபரம் பொருள் அறியப்படுவதுமன்று, அறியப்படாதது மன்றெ
னக் கூறின், அவ்வாறு கூறுவது உள்ளது மன்று, இல்லது மன்று என்பது
போல அநிருவசனமாகாதோ எனின், மேற்கூறியவாறே அப்பொருள் உண்
டோ இல்லையோ வென வினவுமிடத்து உண்டென்பையாயின் அறியப்பட்ட
பொருளாய் சடமாய் அழிவெய்தும்; அறியப்படாத பொருட்குத்தோற்றக்கேடு
முதலியன இல்லாமையால் இல்லாத பொருள் உண்டென்று கொள்வேமென்
பையாயின் அப்பொருள் அறிதற்குரிய ஆன்மாவால் அறிதல் வேண்டும். அறியு
மாயின் இல்பொருளென்றல் கூடாது. அறிய முடியாதாயின் அவ்வாறு கொ
ண்ட பொருளும் இல்லையாய் முடிந்து அதனுற் பெறக் கடவதோர் பயனுமில்
லையாய் முடியும். ஆதலால் பரம்பொருள் அறியப்படுமென்று கூறுதலும் அறி

யப்படாத தென்று கூறுதலுங் குற்றமாம். இவ்வாறுயின் உண்மையாதெனின், சிவம் அறியப்படுவதன்று என்பதற்கு கருவிகரணங்களால் அறியப்படுவதன்று எனவும், அறியப்படாதது தன்று என்பதற்கு சிவ ஞானத்தால் அறியப்படாத தன்று எனவுங் கொள்ளல் வேண்டும். இம் முறைப்படி பாச பசு ஞானங்களைக் கடந்து நின்று அறிதற்கு வல்லமையுடைய ஒருவன் அச் சிவப் பொருளை அப் பொருளோடு ஒன்று பட்டு நின்று அப் பொருளின் அருளால் அறிவன். ஒன் றாய் நின்றால் அறிதல் கூடாதே? அறிதல் கூடுமாயின் ஒன்றாய் நிற்றல் கூடாதே எனின், அப் பொருளை யறியும் அனுபவத்தில் அறிவு நிகழ்வதற்கு ஆன்மாவின் அறிவுடன் கலந் தொன்றாயும் அறியப்படுவதற்கு ஆன்மாவின் வேறாயும் அறிதற் றொழில் நிகழ்தற்கு ஆன்மாவின் அறிவைச் செலுத்தி அவ் வறிவோடு உடனாயும் இவ்வாறு இறைவன் அத்துவிதமாய் நிற்பன். எது போல வெனின், கண் சூரியனை யறியுங்கால் கண்ணொளியோடு சூரியன் கலந் தொன்றாயும் காணப்படுவதற்கு சூரியன் கண்ணின் வேறாயும் காணுந் தொழில் நிகழ்ச்சிக்கு சூரியன் கண்ணொழியைச் செலுத்தி உடனாயும் நிற்றல் போல வாம். (எ...ற்) (சூ)

யோக பாவனையால் இறைவனைக் காணக்கூடு மென்பாரை மறுத்து அவனருளால் காண வேண்டு மென்பதை வலியுறுத்துகின்றது.

பாவிப்ப தென்னிற் பாவம் பாவகங் கடக்கிற் பாவம்
பாவிக்கு மதுநா னென்னிற் பாவகம் பாவங் கெட்டுப்
பாவிப்ப தென்னிற் பாவம் பாவனை யிறந்து நின்று
பாவிக்கப் படுவ தாகும் பரம்பர னருளி னாலே.

(கொ-டு) பாவிப்பதென்னின் பாவம் பாவகம் கடக்கின் பாவம் பாவம் கெட்டுப் பாவிப்பதென்னின் பாவம் பாவிக்கும் அது நானென்னின் பாவகம் பாவனை இறந்து நின்று பரம் பரனருளினாலே பாவிக்கப்படுவதாகும்.

(பொ-ரை) இறைவனைத் தரிசிப்பதற்கு மேற்கூறியவாறு அவனருளால் பிரிப்பின்றி நிற்றல் வேண்டாம். யோக பாவனையினால் இறைவனைத் தரிசிக் கக் கூடு மென்பையாயின் அப்பாவனை கருவிகளோடு கூடியதாயின் சகலாவத் தையாம். கருவிகளை நீங்கி நின்றதாயின் சகலத்தில் தூரியாதீதமெனப்படுங் கேவலாவத்தையாம். இரண்டு மின்றி நின்று பாவிப்பதாயின் அது அநிர்வசன மெனப்பட்டு ஒன்று மில்லாத பாழாய் முடியும். ஆதலால் அவ்வா றொன்று மின்றி பாவனைக் கெய்தாத் அப்பரம் பொருளைத் தன்னிடத்தில்வைத்து நானே அப்பரம் பொருளென அப் பொருள் எய்தியதாகப் பாவிப்ப னென்பையாயின், அப்பாவனையானது கண்ணிற் சூரிய னிருப்பதாகவும் நாக்கில் சர்க்கரை யிருப்

பதாகவும் பாவிப்பதால் ஒளியும் திரித்திப்பும் பொருந்தாத வாறு போல பயனில் லேயாய் முடியும். ஆதலால் அப்பாவனை யனைத்தும் நாடக மாந்திரையே யன்றி பாம் பொருளை யறிவதற்குச் சாதனமாகாவாம். ஆதலின் மேற்கூறிய வாறு பிரிப்பின்றி நின்று அவனருளால் அவனைக் காண்டலே அவனை யறிதற் கேற்ற பாவனையாம். (எ...று)

அநிர்வசனம் என்பது உறுதியாய்ச் சொல்லக் கூடாதது. எவ் வாறெனின், வசனம்-சொல்வது. நிர்வசனம்-நிர்ப்பந்தம் என்பது போல் உறுதியாய்ச் சொல்வது. அநிர்வசனம் உறுதியாய்ச் சொல் லக் கூடாதது. (ஏ)

மலமாகிய குற்றம் நீங்கிய உயிரி னறிவால் சிவனை யறியக்கூடு மென்னும் சிவ சம வாதியை மறுத்துரைக்கின்றது.

அந்நிய மிலாமை யானு மறிவினு ணிற்ற லானு
முன்னிப வெல்லா முண்ணின் றுணர்த்துவ தாத லானு
மென்னதி யானென் றோது மிருஞ்செருக் கறுத்த லானுந்
தன்னறி வதனுற் காணுந் தகைமைய னல்ல னீசன்.

(கொ-டு) ஈசன் அந்நியமிலாமையானும் எனக் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு பாவனையான யோகத்தால் இறைவனையறி யக் கூடாதாயினும் மலம் நீங்கிய விடத்து ஆன்ம அறிவு தடையின்றி விளங்குமாதலால் அவ்வறிவால் இறைவனை யறியக்கூடு மென்றலே பொருந்தும். அவனருளால் அறியவேண்டு மென்றல் பொருந்தாதெனின், அவ்வாறாயின் உயிர் அறிவால் அறியப்படும் பொருள் உயிரின் வேறாயிருத்தல் வேண்டும். அச் சிவம் உயிரின் வேறல்லாமையால் ஒன்றாயும் அறிவித்தற்கு உயிரறிவினுள்ளீ டாக நிற்றலால் வேறாயும் அறிந்தவற்றிற் செல்வதற்கு உயிரின் அறிவினுள் ளாக நின்று செலுத்துதலால் உடனாயும் நிற்கும். அவ்வாறு நிற்கும் அந்நிலை யுடைய பொருளை வேறாய் நிற்கு முறைமையால் தானாக அறிய முடியாது. ஒன்றாய் நிற்பதால் தன்னறிவாக அறிய முடியாது. உடனாய் நிற்பதால் வேறு பொருளாகப் பிரித்தறிய முடியாது. இவ்வாறு அறிய முடியாமையினால் யானென தென்னுஞ் செருக்கால் அப்பரம் பொருளைப் பகுத்தறிய முடியா தாம். யான் அறிவே என்றதனால் மலம் நீங்கியதுமில்லை. ஆதலால் அவ் விறைவன் உயிரறிவால் அறியப்படுவ னென்றல் பொருந்தாது. (எ...று)

ஒன்று யென்றதனல் உயிர் தனித்து நில்லாமையையும், வேறு யென்றதனல் தனித்து நில்லாவிடினும் இறைவனே உயிர் அறிதல் கூடுமென்பதையும், உணையென்றதனல் இறைவனே யறிதல்கொண்டு உயிருக்கு சுதந்தரம் உண்டென்று கொள்ளலாகாதே தா வென்னும் ஐயத்தை நீக்கி அறியுங்காலும் உடனிருந் தறிவு மென்பதையும், ஆயின் உயிர் அறிந்தது என்பானேன் எனின், அறிதற்பயன் உயிர்க் காதலின் அது நோக்கி யென்பதையும் இச் செய்யுளால் உய்த்துணர்ந்து கொள்க. (அ)

பிரித்தறிய முடியாத நிலையில் ஒன்றுதலும் வேறுதலும் உடனுதலும் உளவென்பதற்கு ஏதுக் கூறுகின்றது.

ஒன்றெனு மதனு லொன்றென் றுரைப்பதுண் டாகை யாலே
யின்றனன் வேறுப்த் தன்னி னீங்கிடா நிலை யாலே
பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமைய னறிவி னுள்ளே
யென்றுநின் றிடுத லாலே யிவனவ னென்ன லாமே.

(பொ-ரை) இறைவன் ஒன்றே யென்று வேதங்கள் கூறவும் மேற்கூறியவாறு உயிரோடு ஒன்றுய் நிற்றல் வேறுய் நிற்றல் உடனுய்நிற்றல் ஆகிய முத்திறமும் உயிரும் உளவா மென்றலே எதனு லறியக்கூடு மெனின், உயிருஞ் சிவமும் ஒன்றென்று சொல்லில் அவ்வாறு சொல்லுகிறவன் ஒருவனுண்டாதலால் அச்சிவம் சொல்லுவானுக்கு வேறுய் நிற்றல் பெறப்படும். அது கொண்டு வேறென்று சொல்லில் அவ்வாறு வேறுக அறிவதற்கு உயிருக்கு சுதந்தர அறிவின்மையால் அறிவுக்குள் அறிவாய் நின்று அறிய வேண்டு மாதலால் உடனுதல் பெறப்படும். அவ்வாறு அறியுங்கால் அவ்வறிவி னுள்ளாக நீரினிடத்து ஒன்றுகக் கலந்திருக்கும் நிழல்போல உயிரே சிவமெனும் படி கலந்து நிற்குமாதலால் ஒன்றுதல் பெறப்படும். ஆதலால் இவ்வாறு உயிரோடு பிரிப்பின்றி அத்துவிதமாய் நிற்கும் இறைவனைக் காண வேண்டின் கண்ணெளியோடு பிரிப்பின்றி நின்று கண்ணுக்கு வேறு விடயங்களைக்காணும்படி உபகரிக்கும் சூரியனை கண் காணவேண்டின் அவன் கிரணத்தால் காண்டல் போல அவனருளாற் காண்டலே தக்கது. (எ...று)

நீரினிடத்து வெளி இன்மையால் நிழல் உண்டென்பது எவ்வாறறியப்படுமெனின், தன்னுள் இயங்கும் உயிர்கட்கு நீர் இடங்கொடுத்தலால், நீரின் கண் வெளி உண்டென்பது பெறப்படும். வெளி

உண்டாதலால் நிழலுண் டென்பதும் பெறப்படும். அந்நிழல் வேறு நில்லாது நீரோடு கலந்து நிற்றலால் நீர் போலக் காணப்படாதாயிற்று. இது சிவ ஞான போதச் சிற்றுரை மாட்டாஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து மூன்றுவது வெண்பா வுரையிற் காண்க.

அத்துவிதம் என்னுஞ் சொல்லில் முன்னின்ற அகரம் அன்மை இன்மை மறுதலை யென்னும் மூன்று பொருளை உணர்த்தும். உதாரணமாக "அப் பிராமணன்" என்ற விடத்து பிராமணனல்லாத க்ஷத்திரிய வைசிய சூத்திரனைக் குறியாது, பிராமணனு யிருந்தும் பிராமணத் தன்மை யில்லாமையைக் குறித்தலால் அகரம் அன்மைப் பொருளில் வந்தது. "அமலம்" என்ற விடத்து மலம் இன்மையைக் குறித்தலால் அகரம் இன்மைப் பொருளில் வந்தது. "அநீதி" யென்ற விடத்து நீதியின் மறுதலையைக் குறித்தலால் அகரம் மறுதலைப் பொருளில் வந்தது. இம்மூன்றனுள்,

இன்மைப் பொருள் கொண்டு இரண்டாவதாகிய பசு பாசப் பொருள்க ளில்லை, பிரமப் பொருள் ஒன்றே உள்ளது என்பர் ஏகான்ம வாதிகள். ஒன்றென் றுணர்வது வேறுண்டாதலால் இவர் கருத்துப் பொருந்தாது.

மறுதலைப் பொருள் கொண்டு நீதியின் மறுதலை கொள்ளவே நீதியும் கொள்ளக் கிடப்பது போல இரண்டன் மறுதலையாகிய ஒன்று கொள்ளவே இரண்டுங் கொள்ளக் கிடந்து ஒன்றும் இரண்டும், நீதியும் அநீதியும் வேறு வேறுதல் போல ஒன்றுகிய கடவுளும் இரண்டாவதாகிய உயிரும் பந்தமும் வேறு வேறுய் நிற்குமென்பர் மாத்துவர். வேறு வேறுயின் கடவுள் வியாபகத்துக்கு இழுக்கும் உயிருக்குத் தனித்து நிற்கும் சுதந்தரமும் உளவெனப்பட்டு நூலோடும் அனுபவத்தோடும் முரணுமாதலின் இவர் கருத்தும் பொருந்தாது.

மேற் கூறிய இன்மைப் பொருளே கொண்டு கடவுள் வியாபகப் பொருளே யெனவும், உயிரும் பாசமும் கடவுளில் அடக்கமெனவும், ஆயினும் உயிரும் பாசமும் பலவாயினுற் போல கடவுள் பல

வல்ல ஒன்றே என்பர் பாஞ்சராத்திரிகள். ஒன்றென்று கூறுவதற்கு வடமொழியில் ஏகமென்னும் சொல்லிருக்கவும் அதனை விட்டு அத்துவித மென்னும் சொல்லால் உய்த்துணர வைக்க வேண்டாம் என மறுக்க விடத்து பிரமம் ஏக மென்று ஓரிடத்திலும் பிரமம் அத்துவிதமென்று பிறிதோரிடத்திலுங் கூறுதலால் அத்துவித மென்பதும் ஏக மென்பதும் ஒரு பொருட் சொற்களா மென்பர். ஏகமேவ அத்துவ தீயம் பிரமம் என ஓரிடத்திலேயே ஏகமெனவும் அத்துவிதமெனவுங் கூறுதலால் ஏக மென்பதும் அத்துவிதமென்பதும் வேறு வேறு பொருளைக் குறித்ததாமென மறுக்க விடத்து அவ்வாறு கூறியது உறுதிபயக்கும் அடுக்கு மொழியாமென்பர். அடுக்கு மொழியாயின்ஏகம் ஏகம் என்றுவது அத்துவிதம் அத்துவிதம் என்றுவது இருக்க வேண்டுமே யன்றி இரு வேறு மொழிகளாயிருத்தல் கூடாது. மற்றென்னையோ? அவ் வாக்கியத்திற்குப் பொருளெனின், ஏகமாகிய பிரமம் பல வுயிர்களோடுங் கலந்து நிற்குமென்பதையாம் ஆதலின் அத்துவித மென்னும் சொல்லிற்குக் கடவுள் ஒன்றென்று கொண்ட இவர் கருத்தும் பொருந்தாது.

இனி அத்துவிதச் சொற்குப் பொருள் என்னையோ? வெனின், அகரம் பொருட் பெயர்ச் சொல்லில் வரும்பொழுது தான் அன்மை இன்மை மறுதலை என்னும் முப் பொருள் பயக்கும். எண்ணுப் பெயர்ச் சொல்லில் வரும்பொழுது அன்மைப் பொருள் ஒன்றேயன்றிப் பிறபொருள் பயவாது. உதாரணமாக எண்ணுப் பெயர்மேல் ஏகத்தின் முன்னுகவும் துவிதத்தின் முன்னுகவும் அன்றி ஏனைய எண்ணுக்களுடன் அகரம் முன்னிற்பதில்லை. அவற்றுள் ஏகத்தின் முன்னுக நின்ற அகரம் அன்மைப் பொருள்பற்றி அநேகமெனப் பொருள் தருமாறு போல துவிதத்தின் முன்னின்ற அகரமும் இரண்டன்மையைக் குறிக்கும் என்பதே தேற்றம்.

இக் கருத்தே பற்றி அன்மைப் பொருள் கொண்டு பிராமணரைக விருந்தும் பிராமணத் தன்மை யில்லாதவாறு போல கடவுளரும் உயிர்களும் பொருட்டன்மையால் இரண்டாயினும் இரண்டின் நன்மையாக வேறு பிரித்தறிய வாது கண்ணெனினியும் சூரியனெனினியும் போலக் கலந்து நிற்குமென்பர் சைவசித்தாந்திகள். இக் கருத்தும்

பற்றியே "அத்துவிதமாவது—பேதப் பொருள் இரண்டும் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்த விசேடம்" என உரையாசிரியர் மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான போதச் சிற்றுரை பதினெண்ணும் சூத்திரத்து அருளிபவாறும். கலந்து நிற்குங்கால் உண்டாம் வேறுபாடுகள் யாவும் உரைப் பாயிரத்தும் பிற யாவும் சிவஞான போதமா பாடியம் ஆறும் சூத்திரத்தும் காண்க.

பதி, பசு, பாசம் எனப் பொருள்கள் மூன்றுகவும் அத்துவித மென இரண்டின் மேல் வைத்துக் கூறியதன் கருத்தென்னையெனின், பாசம் ஆணவம், கன்மம், மாயை என முத்திறப்பட்டு அவற்றுள் ஆணவம் அநாதியே ஆன்மாவுடன் கலந்தும் கன்மமும் மாயையும் இறைவன் உடைமைப்பொருளாகவும் நிற்றலால் பதி பசுவென்னும் இரண்டு பொருளின்மேல் வைத்துக் கூறியவாறு மென்க. (கூ)

மூன்றும் அதிகரணம் முடிந்தது.

ஆறும் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திரு விருத்தம் உசஅ.

சாதனவியல்.

எழாஞ்சூத்திரம்.

நாலாஞ்சூத்திரம் முதல் மூன்று சூத்திரத்தானும் முறையே பசுவிலக்கணம், பாசவிலக்கணம், பதி இலக்கணம் கூறி முடித்தமையால் அவ்வாறு இலக்கணம் கேட்டவிடத்து அம்மூப்பொருள்களுள் பதிப்பொருளை அடைவதற்கு உரிமையுடையதெதுவெனவும் செய்ய வேண்டுவது எதுவெனவும் செய்யும் முறை எவ்வாறெனவும் ஆசங்கை நிகழுமாதலின் அந்நிகழ்ச்சிபற்றி சாதன இயல் மூன்று சூத்திரத்தால் கூறத்தொடங்குகின்றார்.

மேல்அடுத்து நின்ற ஆறாஞ்சூத்திரத்தில் பதி பாச்சத்தை அறியாது, பாசம் பதியை அறியா தென்று கூறினமையால் அவ்விர

ண்டனையும் அறிதற்குரியது எதுவென்னும் சங்கேதகத்தை நிவர்த்தித்தற்பொருட்டு ஏழாஞ்சூத்திரம் எழுந்தது. இச்சூத்திரத்தாற் பாச மீரண்டனையும் அறிதற்குரிமையுடையது பசுவெனக்கூறுகின்றார்.

சூத்திரத்துள் பதி இலக்கணம் கூறியவிடத்து ஆன்மாவால் பதி அறியப்படுமென்று கூறி இருக்கவும் இவ்விடத்தும் அறிதற்குரிமையுடையது ஆன்மாவென்று கூறுதல் கூறியது கூறலாகாதோவெனின், ஆகாது. எவ்வாறெனின், பதி அறியப்படும் பொருளோ அறியப்படாத பொருளோவென்னும் ஆசங்கைக்குஉத்தரமாக ஆன்மாவினால் அறியப்படும் பொருளென்று அவ்விடத்து பதிக்கு இலக்கணங்கூறினர். இவ்விடத்து பதியை அடையும் முறைமையில் சாதனஞ்செய்து அடைதற்குரியது ஆன்மாவென அதிகாரி இயல்பு கூறுகின்றார் ஆதலின் கூறியது கூறலாகாமையறிக.

பாசத்தைத் பதி அறியாது, பதியைப் பாசமறியாதெனக் கூறுகின்றது

அனைத்துஞ்சத்தென்னினெண்ணையறிந்திடாதசத்தா லென்னின்
முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போ
னினைப்பதிங் கசத்தே யென்னிற் சத்தின்முன் னிலாமை யாலுந்
தனைக்கொடான் றுணர்த லாலுந் தானசத் துணரா தன்றே.

(கொ-டு) சத்து அனைத்தும்(அறிவது)என்னின் ஒன்றை அறிந்திடாது அசத்தால் (அறிவது) என்னின் இரவிமுன் இருள்போல் சத்தின்முன் அசத்து முனைத்திடாது இங்கு அசத்தே நினைப்பது என்னின் சத்தின் முன்னிலாமையானும் தனைக்கொடு ஒன்று உணர்தலாலும் அசத்துத்தான் உணராதன்றே.

(பொ-ரை) மேலைச்சூத்திரத்திற் கூறியவாறு சத்து அசத்தினையும் அசத்து சத்தினையும் அறியாதாயின் அறியப்படாதபொருள் பயனில்லை எனப்பட்டு வழுவாம். ஆதலின் அவ்விரண்டனையும் அறியும் பொருள் யாதெனவினவுமிடத்து சத்தாகியசிவமே அசத்தாகிய பாசமனைத்தினையும் அறியுமென சிவாத்துவித சைவர் கூறுவர். சத்தாகிய சிவம் வியாபக அறிவாதலால் எவற்றினையும் உடனாய் நின்று ஒருசோ அறிந்து நிற்பதன்றி தனித்தனி பிரித்து ஒன்றையும் அறியாது என்று மறுக்க அவ்வாறு சிவம் வியாபக அறிவாயினும் உயிரின்பொருட்டு அசத்தாகிய கருவி காணங்களைக்கூடிநின்று பகுத்தறிதல் கூடுமென்பர். இரவி முன் இருள்போல சிவசந்நிதியில் அசத்தாகிய கருவி காணங்கள் முனைத்து நில்லாமையால் சிவம், கருவி, காணங்களிடமாக நின்று

பசுத்தறியுமென்பதுங்கூடாது என்றவிடத்து விகாரமின்றி நிற்கும் ஆன்மாவின் சந்நிதியில் அசத்தாகிய கருவியே சிவகரணமாய் நின்று சத்தாகிய சிவத்தை அறியுமென சிவசங்கிராந்தவாதிகள் கூறுவர். அவ்வாறாயின், மேற் கூறியவாறு அசத்தாகிய கருவிகள் சிவ சந்நிதியில் முனைத்து நில்லாமையானும் அக்கருவிதானும் உயிர் அறிவதற்குத் துணையாய் நிற்பதன்றி அதற்குத் தனக் கென அறிவின்மையானும் அக்கருவிகள் சிவகரணமாய் நின்று சத்தாகிய சிவத்தை அறியுமென்பதுங்கூடாது. இவ்வாறு சத்து அசத்தையும் அசத்து சத்தையும் அறியாதென்பது பெறவே பாரி சேட அளவையால் இவ்விரு பொருளின் வேறாய் எஞ்சி நின்ற உயிர்ப்பொருளே இவ்விரண்டனையும் பசுத்தறியும். (எ...று.)

இச்செய்யுள் முதனூல் எழாஞ்சூத்திரம்போல முக்கூற்றினை யுடையது. அவற்றுள்,

முதற்கூறு—அனைத்துஞ்சத்தென்னி.....

னிரண்டுமுன்போல். இவ்விரண்டடியும் சத்து அசத்தை உணரா வென்பது.

இரண்டாங்கூறு—நினைப்பதிங்கசத்தே

தான் அசத்துணராதன்றே. இவ்விரண்டடியும் அசத்து சத்தை

மூன்றாங்கூறு—பாரிசேட அளவையால் பதிபாசமிரண்டனை யும் உயிரறியுமென்பது.

இம்முக்கூற்றினுள் முன்னை இருகூற்றினும் விரிக்கக்கூடிய தான சங்கை உத்தரங்களின்மையின் அவற்றை இம்முதற் செய்யு ளினால் உணர்த்தியதோடு நிறுத்தி ஏனைய மூன்றாங்கூற்றை மூன்று செய்யுளினால் விரிக்கின்றார். (க)

மூன்றாமதிகரணம்.

பதி பாசமிரண்டனையும் ஆன்மா அறியுமெனவும் அவ்விரண் டனையும் அறியும் முகத்தால் ஆன்மா தன்னை அறியுமெனவும் கூறு கின்றது.

சுத்தசத் தறிவ தானமாத் தான்சத்து மசத்து மனறு
நித்தனுச் சதசத் தாகி நின்றிடு மிரண்டன் பாலு.
மொத்துட னுணர்ந்து நில்லா துதியாது நின்றி டாது
பத்திபெற் றோதற்ற நாற்ற மலரினில் வாழ்தல் போலும்.

(கொ-டு) சத்து அசத்து அறிவது ஆன்மாவுடன்ஒத்துநில்லாதுஉதியாது நின்றிடாது மலரில் நாற்றம் வருதல் போலும் சான் சத்தும் அசத்தும் அன்று இரண்டன் பாலும் உதித்து வைத்திடும் சதாற்றம் சதசத்தாகி நித்தலுய் நின்றிடும்.

(பொ-ரை) சத்தும் அசத்தும் மேற்கூறியவாறு ஒன்றனை ஒன்று அறிதற் குரிமையில்லாமையால் அவ்விரண்டனையும் அறிவது ஆன்மாவேயாம். அவ்வான்மா தன்னை அறியுமோ அறியாதோவென வினவின் சத்தையும் அசத்தையும் இது சத்து, இது அசத்தென தனித்தறிவதுபோல் ஆன்மா தன்னைத்தனித் தறியமாட்டாது. அவ்வாறறியப்படாமையால் சூனியமுமன்று. மலரினிடத்து வாசனையானது மலர்போல விளங்கித்தான்றுமலும், சூனியமல்லாமலும் அம்மலரின்கண் அடங்கித் தோன்றுமாறுபோல சத்து அசத்தென்னும் இரண்டின்வேறுகிய ஆன்மாவும் சத்தொடுகூடி தன்னைச்சத்தாயும் அசத்தொடு கூடி தன்னை அசத்தாயும் அறியப்படுவதாம். அவ்வாறறியப்படுவதால் ஆன்மா 'சத சத்தென்று சொல்லுதற்குரிமையுடையது. (எ...று)

இதனால் ஆன்மா யாதானுமொன்றைச் சார்ந்து நிற்பதன்றி தனித்து நில்லாதென்ப தறிக. (உ)

பதி சூக்குமசித்தும் பசு தூலசித்தமாய் நிற்றலால் பசுவைப் பாசம் பற்றுமெனவும் அப்பற்றுதல் அநாதியெனவும் அப்பற்றுதலால் பதிபாசம் இரண்டனையும் அறிதற்குக் காரணமெனவும் பதி பசு பாசத்திற்கு உவமையுங் கூறுகின்றது.

- சுத்தமெய்ஞ் ஞான மேனிச் சோதிபா லசத்தஞ் ஞான
  மொத்துறு குற்ற மெல்லா முற்றிடு முயிரின் கண்ணே
  சத்துள போதே வேறுஞ் சதசத்து மசத்து மெல்லாம்
  வைத்திடு மநாதி யாக வாரிநீர் லவணம் போலும்.

(கொ-டு) மெய்ஞ்ஞான மேனிச்சுத்த சோதிபால் அசத்து அஞ்ஞானம் ஒத்துறு உயிரின்கண்ணே குற்றமெல்லாம் உற்றிடும் சத்து உளபோதேவேறும் சதசத்தும் அசத்துஎல்லாம் அநாதியாக வைத்திடும் வாரி நீர் லவணம் போலும்.

(பொ-ரை) பதியும் பசுவும் சித்துப்பொருளாகவும் பதியின்முன் முனைத்து நில்லாத பாசம், பசுவினுலறியப்படுவதாய் அப்பசுவின்முன் முனைத்து நிற் றற்குக் காரணம் என்னையோவெனின், பதியும் பசுவும் சித்து என்னும் சாதி ஒற்றுமையால்போதுவலகையாக ஒக்குமாயினும் அவற்றுள் உண்மை ஞானமே

சிவஞானசித்தியார் சுபக்கம்.

சொரூபமாக உடையப் பதி சூக்குமசித்தாதலால் அப்பதிமுன் அசத்தாகிய பாசம் முனைத்து நில்லாது. பசுவாகிய உயிர் தூலசித்தாதலின் அப்பசுமுன் பாசம் முனைத்துநிற்கும். உயிருக்கு இவ்வியல்பு எக்காலத்து உண்டாயிற்றெனின், சத்தாகிய சிவம் என்று உள்ளது? அன்றே சதசத்தாகிய உயிர்களும் உள்ளன வாய் அன்றே அவ்வுயிர்களை அசத்தாகிய பாசம் பற்றி நிற்கும். இவ்வாறு நிற்றல் எதுபோலவெனின்? நீருக்கு இடங்கொடுத்திருக்கும் ஆகாயமாகிய கடலும், நீரும், உப்பும் போலவாம். (எ...று)

ஆகாயமாகிய கடலும், நீரும், உப்பும் அனாதியேயாகவும் ஒரிடத்திலிருப்பவும் அவற்றுள் உப்பானது இடமாகிய ஆகாயத்தைப் பற்றாது நீரைப்பற்றிநிற்கும். அவ்வாறு பற்றாமைக்கும்பற்றுவதற்கு ங்காரணம் ஆகாயத்தின்சூக்குமமும் நீரின் தூலமுமேயாம். இதுபோலப் பதிபசு பாசம்மூன்றும் அனாதியாய் ஓரிடத்திருப்பினும் பாசம் சூக்குமாகிய பதியைப்பற்றாது, தூலமாகிய பசுவைப்பற்றி நிற்கும். அவ்வாறு பற்றுவதற்குப்பசுவின் தூலத்தன்மையேகாரணம். அப்பாசப்பற்றே பதியைப் பசு அறிதற்குங் காரணமாயிற்று. எவ்வாறெனின், பாசத்தைப்பற்றி நிற்றலால் துன்பமெய்திய உயிர் துன்ப நீக்கத்தை வேண்டி பாசத்தினின்றும் நீங்கி பதியைப்பற்றி நின்று அப்பதியை யறியுமென்க. (ஈ)

சிவம் சூக்குமசித்தாவதற்கும் சீவன் தூலசித்தாவதற்குங் காரணம் பற்றுந்தன்மையின்மையும் பற்றுந்தன்மை யுண்மையுமெனக் கூறுகின்றது.

அறிவிக்க வறிதலானு மழிவின்றி நிற்ற லானுங்
குறிபெற்ற சித்துஞ் சத்துங் கூறுவ துயிருக் கீச
னெறிநித்த முத்த சுத்த சித்தென நிற்ப னன்றே
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின்னுயிர்க் கருளி னாலே.

(கொ-டு) அறிவிக்க அறிதலானும் (அறிந்தபின்) அழிவின்றி நிற்றலானும் உயிருக்குக் குறிபெற்ற சித்தும் சத்துங் கூறுவது ஈசன் உயிர்க்கு மலங்களெல்லாம் பின் அருளினாலே பிறிவிப்பன் நெறிநித்த முத்த சுத்தசித்(து சத்) தென நிற்பன் அன்றே.

(பொ-ரை) சிவம் சூக்கும சித்தென்பதும் சீவன் தூலசித்தென்பதும் எதனாலறியப்படுகின்றதென்னெனின்; உயிர்தன்னறிவுதொழிற்பட்டவேண்டுமாயின் சுகவத்தில் கருவிமுதலிய துணையையும் சுத்தத்தில் திருவருட்டுணையையும்

இன்றி முடியாமையால் தூலசித்து. அவ்வாறறிந்து என்றும் அழிவின்றி நிற்றலால் தூலசத்துமாம். சிவம் தனக்கொரு தினைவேண்டாது தானே அறியும் முறைமையினை யுடையதால் சூக்குமசித்து. உயிர்க்கு மலத்தை அருளால் நீக்கித் தன்னுண்மையினை அறிவிக்கும் உயிர்த்துணையாத லுடைமையால் சூக்குமசத்துமாம். (எ...று)

தூலசித்தென்பது பிறபொருளாகிய தூலத்தைக் கொண்டறியுங் காரணத்தால் வந்தது. இது பிறவொளியைக் கொண்டறியுங் கண்ணொளி போலவாம். சூக்கும சித்தென்பது பிறபொருளாகிய தூலம் வேண்டாது தானே அறியுங் காரணத்தால் வந்தது. இது தானே அறியும் சூரியவொளிபோலாம். மேலைச்செய்யுளில் பதி, பசு, பாசம் மூன்றுக்கும் கடல், நீர், உப்பை உவமை கூறியது அம்மூப்பொருள்களின் இருப்புக்கும் பாசம் பசுவைப்பற்றுதற்கும் பதியைப் பற்றுமைக்குமென்னவும், இவ்விடத்துக்கூறிய சூரியவொளிக்கண்ணொளி உவமை அம்மூப்பொருள்களின் இலக்கணமாகிய வியாபகத்திற்கும் பாசம் பதியைப் பற்றுது பசுவைப் பற்றுவதற்குக் காரணம் பற்றுந்தன்மை பசுவிற்கு உண்டெனவும் பதிக்கு இன்றெனவும் உணர்த்துதற்கும் எனவும் அறிக. எவ்வாறெனின், கடல்நீர் உப்பு உவமை பதி பசு பாசம் மூன்றும் அநாதியே உள்ளனவென்றும் பாசம் பதியைப் பற்றுது பசுவைப்பற்றுமெனவும் உணர்த்தும். சூரிய வொளி பதிக்குப்பூரண வியாபகமுண்டென்பதையும் கண்ணொளி பசுவுக்கு வரையுற்ற வியாபகம் உண்டென்பதையும் உணர்த்திக் கண்ணொளியை மறைக்கும் இருளுக்கு சமவியாபகங் காணப்படுதல்போல பல உயிர்களோடுங்கலந்து நிற்கும் பாசத்திற்குச் சமவியாபகமுண்டென்பதையும் உணர்த்தும். சமவியாபகமாவது மறைக்கப்படும் பொருளின் சக்திக்குக் குறையாமலும் கூடாமலும் அதனளவாக நிற்றல். குறையின் ஒருகாலத்துத்தானே நீக்குதல் கூடும். கூடின் எக்காலத்தும் எவராலும் நீக்குதல் கூடாது. ஆதலின் நீக்கப்படும் பாசம் சம வியாபகமாய் நின்றது. இவ்வாறு இருப்புக்கும் இலக்கணத்திற்கும் கூறிய உவமை வேறுபாடு கண்டு கொள்க. (எ)

மூன்றும் அதிகாரணம் முடிந்தது.

ஏழாஞ்சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம் உரை.

எட்டாஞ் சூத்திரம்.

மேலைச்சூத்திரத்தால் பதிப்பொருளை அடைவதற்கு உயிர் உரிமையுடையது எனக் கூறியதனால் அவ்வுயிர் பதிப்பொருளை எவ் வாறடையு மென ஆசங்கை நிகழுமன்றே? அந்நிகழ்ச்சி பற்றி செப்ய வேண்டுவது இது வென்று கூறுதற்கு எட்டாஞ் சூத்திரம் எழுந் தது.

அடைதற்குரிய உரிமை தனக்கே உண்டென்பதை உணர்ந்த உயிர்க்கு பதியை அடைதலாகிய அப்பேறு தனக்கு வேண்டு மென் பதையும், அப்பேறடைவதற்குச் சிறந்த சாதனம் இது வென்பதை யும், அச்சாதனம் எவ்வாறு வருமென்பதையும் அறிந்தாலன்றி பதியை அடைதற்குரிய மன எழுச்சி கூடாது. ஆதலால் உயிர்க்கு மனவெழுச்சி உண்டாகும் பொருட்டு பதியை அடைய வேண்டிய தவசிய மென்றும், அதற்குச் சிறந்த சாதனம் இது வென்றும், அது ஞான சற்குருவால் வருமென்றும் மூவகையாகப் பிரித்து செய்ய வேண்டுவதை இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

இறைவன் குருவாகி வந்து உணர்த்துவனென சூத்திரப் பொரு ளைத் தொகுத்துக் கூறுகின்றது.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனே யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தாணுக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
தவனவனையு மறியாது துயருறுந்தொல் லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தாணுக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

(பொ-ரை) அரச குமாரனாகிய ஒருவன் பிள்ளைமைப் பருவத்து மட மையால் வேடரிடத்துப் பொருந்தி அவ்வேடனே வசமாய் நின்று தன் ஜாதி க்குரிய பெருந் தகைமையினை இழந்து இழிதொழில் செய்து வளர்ந்து தந் தையாகிய அரசனையும் தன்னையும் அறியாது மயக்கத்தைப் பொருந்தி நிற்

குங்கால் பின்பு தந்தையாகிய அவ்வாசன் வந்து மகனைப் பார்த்து "நீ வேட குமாரனல்லன், என்மகனென்று அறிவுறுத்தி அவ்வேடரினின்றும் அவனை நீக்கி அரசகுமாரனுக்குரிய பெருந் தகைமையுடன் அரசனுகிய தானும் வண்ணஞ் செய்து போற்றுமாறு போல, நிலைபெற்ற உயிர் தன்னிலையினின்று வேறு பட்டு நெருங்கிய ஐம்பொறியாகிய வேட்டருடைய சுழலிற்பட்டு அறிவினை இழந்து தன்னை அறியாமையே யன்றி தலைவனையும் அறியாது வருந்துவதை அறிந்து அவ்வுயிர் செய்த மிகுந்த தவமுதிர்ச்சியால் இரங்கி நித்த முத்த சுத்தசித்தெனப்படும் தலைவனுகிய அவ்வீசன் குருவடிவங் கொண்டெழுந்தருளி வந்து தன்னையும் தலைவனையும் அறியும் வண்ண முணர்த்தி அவ்வைவம் பொறியினின்று நீங்குதற்கு அதனேடு கூடும்படி செய்த மலவலியைக் கெடுத்து அதனின்றும் மீட்டிப் பழைய நிலையாகிய தன் வண்ணமாக்கி அவ்வுயிரை மலர்போலும் தனது திருவடிக்கீழ் வைத்து வாழ்விப்பன். (எ—று)

இச்செய்யுள் மூதனூல் எட்டாஞ் சூத்திரம்போல நான்கு கூற்றையுடையது. அவற்றுள்

முதற்கூறு—குருவாகி வந்துணர்த்தி.

இரண்டாங்கூறு—மன்னுமருளால் உணர்த்தி.

மூன்றுங்கூறு—மன்னவன்றன்.....
சேணுமாம்போல் தன்னிய ஐம்புல வேடர் சுழலிற்பட்டு தன்னைவனை யும் அறியாது தயர் உறும் தொல்லுயிர்.

நாலாங்கூறு—அவரினீக்கி மலமகற்றி தானுக்கி மலரடிக் கீழ் வைப்பன்.

முதற்கூற்றிலும் இரண்டாங் கூற்றிலும் உணர்த்தி யென்பது வருவிக்கப்பட்டது. (க)

முதலதிகாணம்.

குருவாகி வந்துணர்த்தி என்பது:

உணர்த்தும் முறையில் தீக்கையால் உணர்த்துவனுதலின் அத் தீக்கை சாதாரு தீக்கை நிராதாரு தீக்கை என இருவகைப்படு மெனவும், சாதாரு தீக்கைக்குரியார் சகலரும் நிராதாரு தீக்கைக்குரியார் பிரளயாகலரும் விஞ்ஞானகலருமெனவுங் கூறுகின்றது.

சிவஞானசித்தியார் சுபக்கம்.

உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்று
முயருமின்ஞா னகலர்பிர ளயாகலர் சகலர்
தினையின்மல மலங்கன்ம மலங்கன்ம மாயை
நிற்குமுத லிருவர்க்கு நிராதாரா மாகிக்
கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தால்
கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்ம வொப்பிற்
றரையிலா சான்மூர்த்தி யாதாரா மாகித்
தரித்தெழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபா தத்தால்.

(கொ-டு) உரைதரும் இப்பசு உணரின் உயரும் விஞ்ஞானகலர் பிரள யாகலர் சகலர் மூன்றுவர்க்கமாம் நிலையின்மலம் மலம்கன்மம் மலம்கன்மமாயை நிற்கும் சகலர்க்கு கன்ம ஒப்பில் சதுர்த்தா சத்திநிபாதத்தால் தரையில் ஆசான் மூர்த்திதரித்து ஆதாரமாகி மலம் ஒழிப்பன் முதல் இருவர்க்கும் தீவிதாசத்திநி பாதத்தால் கரையி லருட்பரன் நிராதாரமாகி மலங்கழிப்பன்.

விஞ்ஞானகலரென்பது செய்யுளாதலின் விஞ்ஞான கலரென நின்றது.

(பொ-ரை) பதியையடைதற்கு உரிமையுடையதென மேற்கூறியஆன் மாக்கள் [illegible] ஆராயுமிடத்து அவ்வான்மாக்கள் உயர்ந்த விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலரெனமூவகைப்படுவர். அவருள் விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்றுடையர். பிரளயாகலர் ஆணவமலம், கன்மமலம் இரண்டுமுடையர். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமும் உடையர். அவருள் மும்மலங்களுமுடைய சகலவருக்கத்து உயிர்கள் இருவினையொப்பால் மந்தாரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென்னும் நால்வகையான சத்திநிபாதத்தைப் பொருந்துதற்குரியர். ஆதலால் அச்சகலவர்க்கத்துயிர்களுக்கு இருவினை ஒப்பு வந்தவிடத்து பொருந்திய சத்திநிபாதத்திற்கேற்ப உணர்த்தவேண்டுவதுமுறை மையாதலின்? அவ்வாறுஉணர்த்துவதற்கு இவ்வுலகின்கண் இறைவன்குருமூர்த் தியைஆதாரமாகக்கொண்டுதோன்றி சாதாரதீக்கைசெய்து மலத்தை நீக்குவன். பிரளயாகலராகிய உயிர்கள் தீவிரதர சத்திநிபாதத்தைப் பொருந்துதற்குரி யராதலால் அவருக்கு இறைவன் மான்மழு கதுர்ப்புஜங்களுடைய திருமேனி யோடுதோன்றி நிராதாரதீக்கைசெய்து மலத்தைநீக்குவன். விஞ்ஞானகலராகிய உயிர்கள் தீவிரதர சத்திநிபாதத்தைப் பொருந்துதற்குரியராதலால் அவருக்கு அனவிடுதற்கரிய கருணைவடிவாகிய இறைவன் அவரறிவின் உள்ளீடாகநின்று உணர்த்தி உணர்த்துமுறையில் நிராதாரதீக்கைசெய்து மலத்தை நீக்குவன். ()

சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என ஆன்மாக்களை வகுத்த தற்குக் காரணம் என்னை? யெனின், கலர் என்பது கலையை உடை

யலெனப் பொருள் படும். படவே கலை முதலிய தத்துவங்களோடு கூடிய ஆன்மாக்களைச் சகலமென்றும், கலை முதலிய தத்துவங்களைப் பிரளயத்தில் நீக்கப் பெறும் ஆன்மாக்களைப் பிரளயாகலரென்றும், கலை முதலிய தத்துவங்களை விஞ்ஞானத்தால் நீக்கப் பெறும் ஆன்மாக்களை விஞ்ஞானகல மென்றும் பிரித்தவாறும். பிரளயாகல மென்பதை பிரளய அகலமென்றும், விஞ்ஞான கலமென்பதை விஞ்ஞான அகலமென்றும் பிரித்து பிரளயத்திற் கலையற்றவர் விஞ்ஞானத்தால் கலை யற்றவர் எனக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு வகுத்ததற்குத் தான் காரணம் என்னை? யெனின், விஞ்ஞானகலர்—அநாதி கேவலத்தில் ஆன்மாக்க ளெல்லாம் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும். மலத்தின் சத்திபலவாதலால் மறைப்பும் பல வேறு வகைப்படும். அங்ஙனம் மறைப்புண்டு கிடக்கும் ஆன்மாக்களுக்கு மலரோனையைத் தீர்க்கச் சிவபெருமான் திருவுளங் கொண்டருளுவன். கொண்டருளுங்கால் கன்மமல மாயாமலங்களைக் கூட்டாமலே விஞ்ஞானத்தால் ஆணவ மலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்களுக்கு விஞ்ஞானத்தால் ஆணவமலத்தை நீக்குவன். விஞ்ஞான மென்பது விசேட ஞானம். அதாவது பாசஞானம் பசு ஞானங்களின்றும் மேம்பட்ட பதி ஞானமாம். இப்பதி ஞானத்தை இறைவன் எவ்வாறு நின்று உணர்த்துவனெனின், அறிவினுள் அறிவாய் நின்று உணர்த்துவ னென்க. அவ்வாறு உணர்த்துவதற்குக் கலை முதலிய தத்துவங்களாலாக்கப்படும் சரீரமும் புவனமும் இன்றியமையாது வேண்டப்படும். படவே சுத்த மாயாகாரியமாகிய கலாதி தத்துவங்களாலாக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து அசுத்த மாயைக்கு மேல் வைகும்படி செய்வன். இவ்வாறு கலாதி தத்துவங்களைப் பெற்று விஞ்ஞானத்தால் அத்தத்துவங்களிற் கட்டுப்படா திருத்தலின் விஞ்ஞானகல ரெனப் பெயராயிற்று. இத்தகைய ஆன்மாக்களுக்கு ஆணவமலபந்த மிருத்தலால் இவர் ஒரு மலமுடைய ரெனப்படுவர். இவ்விஞ்ஞானகலரும் பக்குவர் அபக்குவரென இருதிறப்படுவர். பக்குவர் அப்பொழுதே சிவ சாயுச்சியத்தைப் பெறுவர். அபக்குவர், உத்தமர் மத்திமர் அதமரென மூத்திறப்பட்டு உத்தமர், அணுசதாசிவர் முதலியோராய் சதாசிவ தத்துவத்திலும், மத்திமர், அட்டவித்தியேசுவ

'ர் முதலியோராய் ஈசுவர தத்துவத்திலும், அதமர், மூன்றரைக் கோடி தேவர்களாய் சுத்தவித்தியா தத்துவத்திலும் வசித்து அதிகாரமுடையராய் பிரளயத்திலும் மத்தியிலும் முத்தியடைவர். இந்த விஞ்ஞானகலருக்கு எடுத்த சன்மத்தை யன்றி வேறு சன்மங் கிடையாது. இவ்விடத்துக் கூறிய தேவர்கள் வேறு, சகல வருக்கத்துத் தேவர்கள் வேறு.

பிரளயாகலர்—கன்மமலத்தைக் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்களுக்கு அசுத்தமாயா காரியமாகிய கலாதி தத்துவங்களாலாக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து அவ்வசுத்த மாயையின் மத்தியில் வைகும்படி செய்து பிரளயத்தில் இறைவன் தடத்தத் திருமேனி கொண்டு அருள் செய்வன். இவருக்குப் பிரளயத்தின் பின் பிறவி இல்லாமையால் பிரளயாகலரெனப் பெயராயிற்று. விஞ்ஞானகலரில் பிரளயத்தில் முத்தியடைபவருக்கும் இவருக்கும் வேற்றுமை யென்னையோ? வெனின், விஞ்ஞானகலருக்குக் கன்மமலம் இல்லாமையால் பிரளயம் வரை ஒரு பிறவியே யன்றி மறுபிறவி யில்லை. பிரளயாகலருக்குக் கன்ம மலம் உண்மையால் ஒரு பிரளயத்துள் சில பிறவிகளுள. இவையே வேற்றுமையாம். இவர் ஆணவம் கன்ம மென்னும் இருமலமுடையர்.

சகலர்—கன்மமலம் மாயா மலத்தைக் கூட்டி ஆணவ மலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்களுக்கு அசுத்த மாயா காரியமாகிய கலாதி தத்துவங்களாலாக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து பிரகிருதி மாயையில் வைகும்படி செய்து படக்குவம் வந்த காலத்து இறைவன் குருமூர்த்தியாய்த் தோன்றி நின்று அருள் செய்வன். இவர் ஆணவம் கன்மம் என்னும் இரண்டினை மாயா மலமுடையராதலின் மயக்கத்தினால் பிரளயம் வரை பல பிறவிகளை யெடுத்து பிரளயத்தில் கலாதிகளுடன் ஒடுங்கிக் கிடந்து புனருற்பவம் ஆகுங்கால் மீண்டுந் தோன்றி இவ்வாறே பிறப்பிறப்பிற் பட்டுழலுவராதலின் சகலரெனப் பட்டார். தேவர் முதல் எறும்பீறாக உள்ள உயிர்கள் சகலரெனப்படும்.

சகலரிலும் பிரளயாகலத் தன்மை விஞ்ஞானகலத் தன்மை தித்திக்கல் கூடும். அதாவது பிரகிருதி மாயாபுவனம் பற்று நீங்கம்

பெற்றவர் சகலரில் பிரளயாகலராவர். இவருக்கு இறைவன் கடத்தத்திருமேனியைத் தரிசித்தல் கூடும். பிரகிருதி மாயாபுவனம் அசுத்த மாயாபுவனமாகிய இருபுவனங்களின் பற்றும் ஞானத்தால் நீங்கப்பெற்றவர் சகலரில் விஞ்ஞானகலராவர். இவருக்கு இறைவன் அறிவுக்குள் அறிவாய் நின்று உணர்த்துவன். சகலரில் விஞ்ஞானகலத்துவம் வந்தால் மேல் பிறவியில்லை. பிரளயாகலத்துவம் வந்தால் சிலபிறவியுண்டு. மேற்கூறிய விஞ்ஞானகலர் பிரளயாகலர் அநாதியாயுள்ளவர். சகலரில் விஞ்ஞானகலர் பிரளயாகலர் ஆதியாயுள்ளவர்.

சத்திநி பாதமென்பது—சத்திபதிதலெனப் பொருள்படும். அதாவது திருவருட் சத்தியின் விளக்கம் ஆன்ம அறிவின் கண் உண்டாதல். அது மந்ததாமாக உண்டாதலென்பது அதிக மந்தமாக என்றபடியாம்.

அதாவது அருட் சத்தியின் விளக்கம் சிறிது உண்டாகி அதற்கேற்றவாறு சிறிது மல வாசனை நீங்குதல். இதனை மந்ததர முதல் நான்கு வகையாக பிரித்ததின் கருத்து மல வாசனையை நான்கு கூறுக்கியும், அவ்வாறே திருவருட் சத்தியை நான்கு கூறுக்கியும், ஒரு கூறு திருவருட் சத்தி தோன்ற ஒரு கூறு மலவாசனை நீங்குதலே மந்ததர சத்திநி பாதமென்றும், இருகூறு திருவருட்சத்தி தோன்ற இருகூறு மலவாசனை நீங்குதலே மந்த சத்திநி பாதமென்றும், மூன்று கூறு திருவருட்சத்தி தோன்ற மூன்றுகூறு மல வாசனை நீங்குதலே தீவிர சத்திநி பாதமென்றும், நான்குகூறு திருவருட்சத்தி தோன்ற மல வாசனை முற்றும் விடுபடுதலே தீவிரதர சத்திநி பாதமென்றும் பிரித்துக் கூறினர். இதனால் மலபரிபாகமும் நான்கு வகைப்படுமென்பதறிக. மலபரிபாகமென்பது மல சத்தி தேய்தல்.

சகலவர்க்கத்துயிர்கள் பிரகிருதி மாயா புவனவாசிகளாதலால் நால்வகைச் சத்திநி பாதத்தையும் பொருந்துதற்குரியர். பிரளயாகலர் விஞ்ஞானகலருக்குப் பிரகிருதி மாயா புவனமின்மையால் மந்ததரம், மந்தமென்னும் இருவகைச்சத்திநி பாதம்

இருவினை ஒப்பு என்பதை முதற்சூத்திரம் கூன-வது செய்யுள் உரைசிற் கூறியிருக்கின்றமையால் அவ்விடத்துக்காண்க.

சாதாரதீக்கை என்பது ஆதாரத்தோடு கூடி நின்று செய்யும் தீக்கை எனப்படும். அதாவது:இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாகக்கொண்டு நின்றுசெய்யும் தீக்கையாம்.

நிராதாரதீக்கை என்பது ஆதாரமின்றி நின்றுசெய்யும் தீக்கையாம். அது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று இறைவன் தடத்தத்திருமேனியோடு முன்னின்றுசெய்யும் தீக்கை, மற்றொன்று சொரூபத்திருமேனியாகிய ஞான சொரூபியாய் அறிவினுள் நின்று உணர்த்துவதாகிபதீக்கை. (உ)

சாதாரதீக்கையாவது நோக்கம் முதலாக பலவகைப்படுமெனவும், அவற்றுள் அவுத்திரி சிறந்ததெனவும், அவ்வவுத்திரி, ஞானவதி, கிரியாவதியென இருவகைப் படுமெனவும், அவ்விரண்டும் தனித்தனி நிர்ப்பீசம், சபீசமென இரண்டிரண்டாக நால்வகைப்படுமெனவும் கூறுகின்றது.

பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிபனத் தருள்பரிசம் வாசகமா னதழு
மலகில்சாத் திரம்யோக மவுத்தி ராதி
யதிகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனு
மிலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட லாதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதா னின்னு
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்.

(கொ-டு) அவற்றின் அவுத்திரி இலகுஞானம் கிரியையென இரண்டுதிறனும் எழிற்குண்ட மண்டலம் ஆதிமனத்தால் கிரியை இயற்றுவதுஞானம் நிலவுவித்துச்செய்தல் கிரியாவதிதான் இன்னும் நிர்ப்பீசம்சபீசமென இரண்டாகி நிகழும்.

(பொ-ரை) சகலவர்க்கத்து உயிர்களுக்கு மலபரிபாகம் மந்ததரம் முதலாக பலவகைப் படுதலின் அவற்றிற்கேற்ப ஆசிரியன் அம்மலத்தைக் கெடுக்கும் படி செய்யும் சாதாரதீக்கையும் இருவகைப்படும். அவற்றுள் திருவருள்நோக்கம்,

பரிசம், வாக்கு, பாவனை, தூல், யோகம் என ஆறும் ஒருவகை. அவ்வாறுடனே கூடிய அவுத்திரி சாம்பவம் மற்றொருவகை. அவுத்திரி தீக்கைக்குரியரல்லா தாருக்கு அந்தஆறு தீக்கைமட்டுஞ் செய்யப்படும். அவ்வவுத்திரியும் ஞானவதி கிரியாவதிஎன இருதிறப்படும். அவற்றுள் அழகினையுடைய குண்டம், மண்டலம், அங்கி, நெய்முதலிய அனைத்தும் மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி ஆகுதிமுதலிய கிரியையை அகத்தேசெய்வது ஞானவதியாம். அவையனைத்தும் புறத்தேஅமைத்துக்கொண்டுஅக்கிரியையைப்புறம்பேசெய்வதுகிரியாவதியெனப்படும். இவ்விருவகைப்பட்டஅவுத்திரி தீக்கையும் நிர்ப்பீசம் சபீசமென இருவகைப்பட்டு ஞானத்தில் நிர்ப்பீசம், ஞானத்தில் சபீசம், கிரியையில் நிர்ப்பீசம், கிரியையில் சபீசமென நால்வகைப்படும். (எ...று)

நோக்கம்—சட்சு தீட்சை எனப்படும். அதாவது கண்ணால் பார்த்தல். பார்வை அநுக்கிரக மென்றும் நிக்கிரக மென்றும் அவ்விரண்டு மின்றிய பொதுவான அழகென்றும் மூன்றுவகைப்படும். அவற்றுள் அநுக்கிரகமான பார்வையே சட்சுதீட்சையாம். அதாவது ஆசிரியன் உண்மைப்பொருளிலே சித்தத்தைவைத்து அச்சித்தவிருத்தியோடுகூட மாணாக்கனுடைய பந்தம் நீங்கும்படி பார்த்தல்.

பரிசம்—பரிசதீட்சை எனப்படும். அதாவது ஆசிரியன் தனது வலதுகையில் சிவபெருமானைப் பாவனை செய்து பூசித்து அக்கைபால் மாணாக்கன்தலைபைப்பரிசித்து அதாவது கையைத்தலை மேல்வைத்து பாசநீங்கும்படி செய்தல்.

வாக்கு—வாசகதீட்சை எனப்படும். அதாவது மாணாக்கனுடைய வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் ஏற்றவாறு பஞ்சாக்கர மந்திரத்தை உபதேசித்தல்.

பாவனை—மானத தீட்சை எனப்படும். அதாவது ஆசிரியன் தன்னுடைய யோகாப்பியாசத்தால் மாணாக்கனுடைய இருதயத்தில் பிரவேசித்து அம்மாணாக்கன் அறிவில் சிவமாந் தன்மை விளங்குப்படி செய்தல்.

நூல்—சாஸ்திரதீட்சை எனப்படும். அதாவது ஞான சாஸ்திரப்பொருள்களை எல்லாம் தொகுத்து பதி, பசு, பாசங்களினுடைய இலக்கணங்களையும் சிவ சீவர்களுடைய ஐக்கியத்தையும் நூல்வழியாகப் போதித்தல்.

யோகம்—யோகதீட்சை எனப்படும். அதாவது சிவ யோக 'த்தை' அப்பியாசம் பண்ணும்படி உபதேசித்தல்.

அவுத்திரி—அவுத்திரி தீட்சை எனப்படும். அதாவது ஓமத் தோடு கூடிச்செய்யுந் தீட்சையாம்.

சாம்பவம்—சத்திதீட்சை எனப்படும். அதாவது சத்தியோடு கூடிச்செய்யுந் தீட்சையாம்.

ஞானவதி, கிரியாவதி என்பன ஞானவழி, கிரியாவழி எனப் யடும். அதாவது ஞானமார்க்கம், கிரியாமார்க்கமாம்.

நிர்ப்பீசம்—பீசமில்லாதது எனப் பொருள்படும். அதாவது செபிக்கக்கூடிய மந்திரத்திற்குமூலமாகிய பீசாக்கர மின்றி மந்திரத்தைமட்டும் உபதேசிப்பது நிர்பீசமாம்.

சபீசமாவது பீசாக்கரத்தோடு கூட மந்திரத்தை உபதேசிப் ப்து. (க)

நிர்ப்பீச தீட்சைக்கு அதிகாரி இவனெனவும் அத்தீக்கையின் இலக்கணம் இதுவெனவும் அது நிரதிகார தீக்கைஎனச் சொல்லப் பட்டு சமயம், விசேடம், நிருவாணமெனமூன்றுப் விளங்குமெனவுங் கூறுகின்றது.

பாலரொடு வாலீசர் விருத்தர்பணி மொழியார்
பலபோகத் தவர்வியா திப் பட்டவர்க்குப் பண்ணுஞ்
சிலமது நிர்ப்பீசஞ் சமயா சாரந்
திகழ்சுத்தி சமயிபுத் திரர்க்கு நித்தத்
தெலுமதி காரத்தை யியற்றித் தாணு
மெழினிரதி காரையென நின்றிரண்டாய் விளங்குஞ்
சாலநிகழ் தேகபா தத்தி லோடு
சத்தியநிர் வாணமெனச் சாற்றுங் காலே.

(கொ-டு) நிர்ப்பீசம் பாலரொடு வாலீசர் விருத்தர் பணிமொழியார் பல போகத்தவர் வியாதிப் பட்டவர்க்கு திகழ் சமயாசாரஞ் சுத்தி நித்தத்து எலும் அதிகாரத்தை இயற்றி எழில் நிரதிகாரை எனநின்று அதுதானும் சமயிபுத்திரர்

க்குப் பண்ணும் சிலம் சாற்றுங் காலே சாலநிகழ் தேகபாதத்தினேடு சத்திய நிர் வாணமென இரண்டாய் விளங்கும்.

(பொ-ரை) மேற்கூறிய நிர்ப்பீசம் சபீசமென்னும் இரண்டனுள் நிர்ப் பீஜ தீக்கையாவது மலபரிபாகமுடையராயும் சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலும் கர்மத்தை யநுட்டிக்கும் அறிவும் இல்லாதவருமாகிய பாலரும், அறிவில்லாதவரும், வயதில் முதிர்ந்தவரும், மாதரும், போகானுபவம் மிகுதி யுமுடையவரும், நோயினையுடையவருமாகிய இவர் முதலாயினர்க்குச் செய்யப் படுவதாம். செய்யுங்கால் அவர் அனுபவிக்கவேண்டிய கன்மங்களை ஆகுதியி னல் ஆசிரியன் சுத்திசெய்து அநுட்டிக்கவேண்டிய சமயாசாரங்களையும் அவ் வாறே ஆகுதியால் சுத்திசெய்து கன்மங்களையும் சமயாசாரங்களையும் அநுபவத் திற்குவராமலும் செய்யவேண்டுவ தில்லாமலும் நீக்க நித்தியகன்ம மாத்திரை யில் இயன்றவாறு அநுட்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து நைமித்திக கன்மத் தும் காமிககன்மத்தும் அதிகாரம் கொடாதிருக்கப் படும். நைமித்திகத்தும் காமிகத்தும் அதிகாரமில்லாமையினல் இத்தீக்கை நிரதிகாரதீக்கை எனவும் படும். இவ்வாறு செய்யப்படும் அவுத்திரி தீக்கையும் சமயம், விசேடம், நிர் வாணமென மூன்றும். அவற்றுள் சமயம் சமயிக்கும் விசேடம் புத்திரருக்கும் செய்யப்படும். நிர்வாணம் சத்தியோ நிர்வாணம் அசத்தியோ நிர்வாணமென விளங்கும். சத்தியோ நிர்வாணமாவது தீட்சை செய்த அப்பொழுதே முத்தி யைத்தருவது. அசத்தியோ நிர்வாணமாவது பிராரத்ததேகம் ஒழிந்த பின்னர் முத்தியைத்தருவது. இந்நிர்வாணதீட்சை மோட்ச விருப்புடையாருக்குச் செய்யப்படுவது. (எ...று)

நித்தியகன்மம் என்பது—நாள்தோறும் செய்ய வேண்டிய சந் தியாவந்தன முதலிய கிரியைகள்.

நைமித்திககன்மமாவது—விசேடகாலமாகிய கிரஹணமுதலிய புண்ணியதினங்களில் விசேடமாகச் செய்யும் செபம் ஆராதன முத லியன.

காமிகமென்பது—சித்திமுதலிய பயனேவேண்டிச் செய்யும் விசேடக்கிரியை.

சமய தீட்சையாவது—சமயத்தில் பிரவேசிக்கச் செய்வதாகிய தீட்சையாதலின் இவர் சமயி எனப்படுவர்.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

சேட தீட்சையாவது சமயப்பிரவேசம் செய்தவனுக்கு சிவ பூஜை முதலிய ஆராதனங்கள் செய்யும்படி செய்வதாம். ஆசாதித் தலின் இவர்புத்திர னெனப்படுவர்.

நிர்வாண தீட்சையாவது—பாசபந்த மலினத்தையும் அறவே நீக்கி சிவபெருமான் றிருவடியை அடையும்படி செய்வதாம்.

மந்ததரபக்குவ முடையார்க்கு சமய தீட்சை ஒன்று செய்து சரியை யினையும் மந்த பக்குவ முடையார்க்கு சமய விசேடம் இரண்டுஞ் செய்து கிரியையினையும், தீவிர பக்குவமுடையார்க்கு அவ்வி ரண்டு தீக்கையும் செய்து யோகத்தினையும், தீவிரதர பக்குவமுடை யார்க்கு நிருவாண தீக்கை செய்து ஞானத்தினையும் அநுட்டிக்கும் படி செய்வர். சபீசதீட்சைக்கும் இவ்வாறே கொள்க. (சு)

சபீசதீக்கைக்கு அதிகாரி இவனெனவும், அத்தீக்கையின் இல க்கணம் இது எனவும், அது சாதிகார தீக்கை என்று சொல்லப்பட்டு சமயம் முதலிய நான்காய் விளங்கு மெனவும், இத்தீக்கை யுடை யார் சாதகர் ஆசாரியரென இருதிறப்படுவ ரெனவும், இத்தீக்கை யும் உலகதருமிணி சிவதருமிணி யென ஆச்சிரம பேதம் பற்றி இரு திறப்படுமெனவுங் கூறுகின்றது.

ஓதியுணர்ந் தொழுக்கமெறி யிழுக்கா நல்ல
வுத்தமர்க்குச் செய்வதுபர் பீசமிவர் தம்மை
நீதியினு னித்தியனை மித்திககா மியத்தி
னிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதுஞ் செய்து
சாதகா சாரியரு மாக்கி வீடு
தருவிக்கு முலோகசிவ தருமிணியென் றிரண்டா
மாதலினு லதிகாரை யாஞ்சமய விசேட
நிருவாண மபிடேக மிவற்றடங்கு மன்றே.

(கொ-டு) உயர்பீசம் ஓதி உணர்ந்து ஒழுக்கமெறி இழுக்கா நல்ல உத்தமர் க்கு நிறுத்திச்செய்து இவர்தம்மை நீதியினுன் நித்திய நைமித்திககாமியத்தின் நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து அதிகாரையாம் சாதகாசாரியரும் ஆக் கி வீடு தருவிக்கும் உலோக (தருமிணி) சிவதருமிணியென் றிரண்டாம் ஆதலி னால் இவற்று சமயவிசேட நிருவாணம் அபிடேகம் அடங்குமன்றே.

(பொ-ரை) இனி உயர்ந்த சபீச தீக்கையாவது மலபரிபாகத்தோடுகூட கற்றறிந்து ஒழுக்க வழியில் வழுவாது நிற்கும் ஆற்றல் மிக்குடைய உத்தமத் தில் உத்தமாயினர்க்குச் செய்யப்படுவதாம். செய்யுங்கால் அதிகாரியினுடைய பக்குவத்தை அறிந்து அநுட்டிக்க வேண்டிய சமயாசார கன்ம மாத்திரம் அனு ட்டிக்கும்படி நிறுத்தி உலகபோகானுபவத்திற்குரிய ஏனைய கன்மங்களைச் சுத்தி செய்து அதாவது அனுபவத்திற்கு வரவொட்டாமல் சிவாக்கினியால் கெடுத்து ஒழித்து நித்தியம், நைமித்திகம், காமிக மென மூன்றினும் போதி காரமுடையராகச் செய்யப்படும். இவ்வாறு செய்தலால் இத்தீக் கை சாதிகார தீக்கை யெனவும் பெயர் பெறும். இத்தீக்கைப் பேறுடை யார் சாதகரும் ஆசாரியரு மென்றிருதிறட்படுவர். அவ்வா றிருதிறப்படுத தற்குக் காரணம் தீக்கையின் வேறுபாடேயாம். அவ்வேறுபாடாவது இச்சபீச தீக்கை சமயம், விசேடம், நிர்வாணம், அபிடேக மென நால்வகைப்பட்டு அவ ற்றுள் சமயம், விசேடம் நிர்வாணம் மட்டும் செய்யப் பெற்றவர் சாதகரும், அம்மூன்றுடன் அபிடேகமும் செய்யப் பெற்றவர் ஆசிரியருமாவ ரென்பதே யாம். இவ்வாறு செய்யும்படியான இத்தீக்கையும் இல்லற முடையாருக்கு சிகையோடு கூடிச் செய்வதாகிய உலோகதருமினி என்றும் துறவறமுடையா ருக்கு சிகாச்சேதத்தோடு செய்வதாகிய சிவதருமிணி என்றும் இருதிறப்படும். உலோக தருமிணியை பவுதிக தீக்கை என்றும் சிவதருமிணியை நைட்டிக தீக் கை என்றுங் கூறுவர். இவ்வாறுதலில் நிர்ப்பீசம், சபீசமென்னும் இருவ கைத் தீக்கையினுள் சமயம், விசேடம், நிர்வாணம், அபிடேக மென்னும் பேத மெல்லாம் அடங்கும். (எ—று)

சமயாசார கன்ம மென்பது சந்தியா வந்தன, சிவபூஜை முத லிய கருமங்கள்.

சாதிகார தீக்கை அதிகாரத்தோடு கூடின தீக்கை.

அபிடேக மென்பது ஆசிரியனுக்குரிய மந்திரக்கிரியைகளோ டும்பத்திற் செய்து ஸ்நானஞ் செய்விப்பது.

பவுதிக தீக்கை என்பது பவுதிகம் பூதத்தின் காரியமாதலால் பூதகாரியமாகிய உலகத்தோடு கூடியிருக்கும்படி செய்யும் தீக்கை எனப்படும்.

நைட்டிக தீக்கை என்பது நைட்டிகம் நிட்டையாதலால் நிட் யோடு கூடி யிருக்கும்படி செய்யும் தீக்கை எனப்படும்.

தீக்கை செய்யும் ஆசிரியன் சிவமெனவும் செய்யும் விதமாகிய அக்கிரம சுத்தி இவ்வாறெனவுங் கூறுகின்றது.

அழிவிலாக் கிரியைபயீ ரைகல்சத்தி பத்தா
ஞதலத்து வாசுத்தி பண்ணிமல மகற்றி
யொழிவிலாச் சிவப்பிரகா சித்தற்கு ஞான
முதிப்பித்துற் பவர்துடைப்ப ரைவரைநுழு வர்க்கும்
வழுவிலா வழியாறு மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்
கழிவிலா துரைத்தமுறை யொன்றிரண்டு வியாத்தி
கருதுகலை சத்திபின்கண் சத்திசிவன் கண்ணும்.

(கொ-டு) அான் ஒரு மூவர்க்கும் அழிவிலாச்சத்திமத்தாஞதல் கிரியை யிரைஞதல் மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் ஆறும் வழுவிலா வழி உரைத்த முறை ஒன்றிரண்டு கழிவிலாது வியாத்தி கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன் கண்ணும் அத்துவாசுத்தி பண்ணி மலம் அகற்றி ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானம் உதிப்பித்து உற்பவம் துடைப்பன்.

(பொ-ரை) மேற்கூறியவாறு தீக்ஷையை சிவபெருமானே குருமூர்த்தியை வாயிலாகக் கொண்டு நின்று செய்வன். தீக்கையைப் பெறும் மாணாக்கர் ஞான மார்க்கத்திற் குரியவரும் கிரியா மார்க்கத்திற் குரியவரு மென இருதிறப்படுவர். அவ்விரு திறத்தவரும் உத்தமர், மத்திமர், அதமர் என முத்திறப்படுவர். அவருள் மேற்கூறியவாறு கற்றறிந்து ஒழுக்க நெறியில் நிற்பவர் உத்தமர். கற்றறிந்து ஒழுக்க நெறியில் நில்லாதவர் மத்திமர், கற்றறிதலும் ஒழுக்க நெறி நில்லாமையு முடையர் அதமர். ஒழுக்க நெறி நில்லா ரென்பதற்கு சரியையாதி ஒழுக்க மில்லார் என்பது பொருளே யன்றி இழுக்க நெறியுடையாரென்பது பொருளன்று. இத்தகைய பக்குவருக்கு அவரவர் பக்குவத்திற் கேற்ப ஞான தீக்கை, கிரியாதீக்கை என்கின்ற இரண்டனுள் ஒன்றை ஆசிரியர் செய்வர். எவ்வாறு செய்வரெனில், மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் என அறுவகைப்படுவதான குற்றமில்லாத ஆறத்துவாக்களுள் மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்துவத்திலும், தத்துவம் கலையிலும் அடங்க நீக்கமின்றி ஒடுக்கி அவற்றுள் முடிவான கலையை திரோதான சத்தியிலும், அத்திரோதான சத்தியைச் சிவத்திலும் அடங்குமாறு ஒடுக்குவர். அவ்வாறு ஒடுக்குவதனால்பிறவிக் கேதுவாகிய மலத்தொகுதி கெடுத்து எங்கணும் வியாபகமாகிய சிவம் பிரகாசித்தற் கேதுவாகிய ஞானத்தைக் கொடுத்துப் பிறவியை ஒழிப்பர். (எ...று)

மந்திரமுதலிய அத்துவாக்களே வழி என்று கூறுவர். அவ்வழியும் உபிருக்கு இதம், அகிதம் என்னும் கன்மம் வருகின்ற வழி எனவும், உயிர் இறைவனே அடைவதற்கு வழி எனவும், இரு வகைப்படும். அவற்றுள் கன்மம் வரும் வழி என்பது எவ்வாறெனில்,

மந்திரங்களே உரத்துச் சொல்லல், மெல்லச் சொல்லல், உச்சரிப்பின் பேதம் ஆகிய இம்முறைமையில் எந்த மந்திரத்தை எவ்வாறு சொல்ல வேண்டுமோ அவ்வாறு சொல்லில் புண்ணியமும், தப்பிச் சொல்லில் பாவமுமாம்.

பதங்களில் பிரிக்கக் கூடிய பதமாயின் பிரித்தும் பிரிக்கக்கூடாத பதமாயின் பிரியாமலும் இருப்பின் புண்ணியமும் இதற்கு மாறுபடின் பாவமுமாம்.

வன்னமென்பது அக்காரம். அவ்வக்காரங்களில் குறிலைக் குறிலாகவும் நெடிலை நெடிலாகவும் அளபெடையை அளபெடையாகவும் அந்தந்தத் தானங்களில் உச்சரிக்கில் புண்ணியமும் மாறுபடிற் பாவமுமாம்.

புவனங்களுக்குப் பதியாகிய தெய்வத்தைப் பூஜிக்கில் புண்ணியமும் பூஜியாது நிந்தை செய்யில் பாவமுமாம்.

தத்துவங்களாகிய ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக் காரணங்களிலேலே பிறர்க்குச் செய்யும் இதம், புண்ணியம். அகிதம், பாவம். நல்வழியில் திரவியத்தைத் தேடிப் போக மனுபவிப்பது புண்ணியம். தீவழியில் திரவியத்தைத் தேடிப் போக மனுபவிப்பது பாவம்.

பஞ்ச கலைகளுக்கு அபிமானிகளான பஞ்ச சத்திகளுக்குப்பூஜை செய்யிற் புண்ணியம். பூஜைசெய்யாது இருப்பது பாவம். இவ்வாறு மந்திர முதலிய ஆ.மின் வழியாலும் உயிர்க்குக் கன்மம் வருவதை அறிக.

பஞ்ச கலைகளுக்கு அபிமானிகளான பஞ்ச சத்திகளாவன:— நிவிர்த்தி கலைக்குக் கிரியா சத்தியும், பிரதிட்டா கலைக்கு ஞான சத்தியும், வித்தியா கலைக்கு இச்சா சத்தியும், சாந்தி கலைக்கு ஆதி சத்தியும், சாந்தியதீத கலைக்குப் பரா சத்தியும் அபிமானிகளாம்.

சிவஞான சித்தியார் சுபக்கம்.

இனி இந்த ஆறத்துவாக்களும் சொற் பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சமென இருவகைப்படும். அவற்றுள் மந்திரம், பதம், வன்னம் மூன்றும் சொற்பிரபஞ்சம். புவனம், தத்துவம், கலை மூன்றும் பொருட் பிரபஞ்சம். பிரபஞ்சமெல்லாம் சொல் பொருளென்னும் பிரண்டினில் அடங்கும். அவற்றுள் சொல்லாவது எழுத்து, அவ்வெழுத்தாலாகிய பதம், பதத்தாலாகிய சொல் (மந்திரம்) என விரியும். பொருள் உடலும், உலகமும், அவற்றை ஆக்கும் சத்தியுமென மூவகைப்படும். அவற்றுள் உடல், இந்திரிய அந்தக் காரணம் முதலிய தத்துவவடிவாயிருக்கும். புவனம் பஞ்சபூத வடிவாயிருக்கும். சத்தி கலை வடிவா யிருக்கும். இவ்வாறு பிரபஞ்ச வடிவா யிருக்கிற சொல்லும் பொருளுமாகிய ஆறத்துவாக்களும் ஆணவ கேவலத்துட் கிடந்து அறிவு விளங்காத ஆன்மாக்கட்கு அறிவு விளங்குவதற்கு வழியாய்த் தோன்றி அதனால் அறிவு விளங்கும். அவ்வறிவு விளக்கம், ஏகதேசமென்பதை உணர்ந்தபின்னர், இவ்வத்துவாக்கள் ஆறினையும் ஒன்றினொன்று ஒடுக்கும் வழிபினால் இறைவனை அடைதற்கும் வழியாயிற்று.

ஒன்றினொன்று ஒடுங்குவதற்குக் காரணம் மந்திரமென்னும் சொல் பதத்தையின்றி யில்லாமையால் மந்திரம் பதத்தில் ஒடுங்கும். பதம் எழுத்தை யின்றி யில்லாமையால் பதம் எழுத்தி லொடுங்கும். இம் மூன்றும் சொல்லாதலால் சொல் பொருளைக் குறித்தன்றி நில்லாமையால் அச் சொல் பொருளில் ஒடுங்கும். அப்பொருள் புவனம் தத்துவம், கலை ஆதலால் அவற்றுள் வெளிப்படையாகக்காணப்படும் புவனத்தில் முதற்கண் சொல் லொடுங்கும். புவனம் தத்துவத்தை யினறி இல்லாமையால் தத்துவத்தில் ஒடுங்கும். தத்துவம் கலையை யின்றித் தோன்றுமையால் கலையில் ஒடுங்கும். அதாவது பேச்சை நிறுத்தி உலகை வெறுத்து உடலைத் தானல்லவென அறிந்து அருளால் தன்னையுந் தலைவனையும் அறிவு முறையாம்.

கலை நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என ஐவகைப்பட்டு சத்தி கலை என்றும் சத்தி அதிட்டித கலையென்றும் ஒவ்வொன்றும் இருவகைப்படும். அவற்றுள்,

சத்தி கலையாவது சத்தியின் அம்சமெனப் பொருள்படும். அவ்வம்சம் உயிருக்கு பிரபஞ்ச விடுதலையை உண்டுபண்ணுங்கால் நிவிர்

த்தி கலை என்றும், விடுதலைசெய்த பிரபஞ்சத்தை மீளப்பற்றுதல் விடுதலையை நிலைப்படுத்துங்கால் பிரதிட்டா கலை என்றும், விடுதலை அடைந்த உயிருக்கு உண்மைப்பொருளை உணர்த்துங்கால் வித்தியா கலை என்றும், உண்மைப் பொருளை உணர்ந்த உயிர் அப்பொருளில் அடங்கி இருக்கச் செய்யுங்கால் சாந்திகலை என்றும், அவ்வாறடங்கின உயிர் அடங்கியிருக்கின்றதென்னும் போதமிறந்து அதீதப்படச் செய்யுங்கால் சாந்தி அதீதகலை என்றும் திருவருட் சத்தியே செயல் வேறுபாட்டால் இவ்வாறு ஐவகைப்படும். இச் செயல் சுத்தாவத்தையில் உயிர் அறிவின் கண் செய்வது.

இனி, சத்தி அதிட்டிதகலையாவது பிறிதொன்றின் வாயிலாகத் தொழிற் செய்யும் சத்தியின் அம்சமாம். அதாவது திருவருட்சத்தி பிரமாவைவாயிலாகக் கொண்டு கேவலத்தி லிருந்த ஆன்மாக்கட்கு அக்கேவலத்தை நிவிர்த்தித்துப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கையால் நிவிர்த்தி கலை என்றும், தோற்றியபிரபஞ்சத்தைவிட்டுணுவின் வாயிலாய் நின்று நிலைப்படுத்தும் சிவசத்தி பிரதிட்டா கலை என்றும், வேறோர் புவனத்தை அறிவிக்கு நிமித்தம் நிலைப்படுத்திய புவனத்தை உருத்திரன் வழியாய் நின்று அழிக்கும் சிவ சத்தி வித்தியா கலை என்றும், புவனத்திற் றங்கி போகங்களை அனுபவிக்குங்கால் கன்மத்திற் கேற்ற போகங்களில் அமைந்து அனுபவிக்கும்படி மகேசன் வாயிலாகச் செய்யும் சிவசத்தி சாந்திகலை என்றும், அனுபவிக்கவேண்டிய போகப் பொருள்களை அனுபவிக்கும்படி சதாசிவர்வாயிலாகக் கூட்டி வைக்கும் சிவ சத்தி சாந்தி அதீதகலை என்றும் ஐவகைப்படும். இச் செயல் உயிரின் சகலாவத்தையில் தத்து, காரண புவன, போகங்களிடத்துச் செய்வது.

திரோதான சத்தி என்பது மறைத்தற் சத்தி. அது மேற் கூறிய மகேசன் வாயிலாய் நின்று செய்யும் சாந்தி கலையாகிய சத்திக்கும் இப் பஞ்ச கலை கட்கும் ஆதாரமாகிய சத்திக்கும் பெயராம். மகேசன் வாயிலாக நிகழும் திரோதான சத்தி உயிர்க்கு போகத்தில் அமையும்படி செய்வதென மேற் கூறியாயிற்று. இனிப் பஞ்ச கலை கட்கும் ஆதாரமாகிய திரோதான சத்தியாவது ஞான சொரூபமாகிய சிவசத்தி பஞ்சகலைகளாக மாறுதற்குரிய அவசரபேதமாம். ()

சிவஞான சித்தியார் சுபக்கம்.

நிவிர்த்தி பிரதிட்டை என்னும் இரண்டு கலைகளுள் அடங்கு வனவாகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவையெனக் கூறுகின்றது.

மந்திரங்கண் முதலிலந்துங் கலையைந்தின் வியாத்தி
மருவுமந் திரமிரண்டு பதங்க ணிலை
முந்தநிலை யெழுத்தொன்று புவன நூற்றெட்
டவனிதத் துவமொன்று நிவிர்த்தியயன் றெய்வம்
வந்திடுமந் திரமிரண்டு பதங்கண் மூவேழ்
வன்னங்க ணாலாறு புரமைம்பத் தாறு
தந்திடுந்தத் துவங்களிரு பத்து மூன்று
தரும்பிரதிட் டாகலைமா லதிதெய்வந் தானும்.

(கொ-டு) மந்திரங்கள் முதலிலந்தும் கலையைந்தின் வியாத்தி. நிவிர்த்தி மந்திர மிரண்டு பதங்கள் நாலேழ் அந்த நிலையெழுத்து ஒன்று புவன நூற்றெட்டு அவனி தத்துவம் ஒன்று மருவும் அயன் தெய்வம் பிரதிட்டாகலை வந்திடு மந் திர மிரண்டு பதங்கள் மூவேழ் வன்னங்கள் நாலாறு புரம் ஐம்பத்தாறு தந்திடுந் தத்துவங்கள் இருபத்து மூன்று தரும் அதி தெய்வம் மால் தான் ஆம்.

(பொ-ரை) மேற்கூறிய அத்துவாக்களுள் மந்திரம், பதம், வன்னம் மூன்றும் சுத்தமாயாகாரியமாதலால் சுத்தாத்துவாவெனப்படும். தத்துவம் சுத்த மாயை அசுத்தமாயா காரியமாதலால் மிச்சிராத்து வாவெனப்படும். புவனம் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயாகாரியமாதலால் சுத்தாத்துவா மிசி ராத்துவா அசுத்தாத்துவா வெனப்படும். ஆகவே சுத்தம், மிச்சிரம், அசுத்த மென்னும் மூவகை அத்துவாக்களும் மந்திரம், பதம், வன்னம், புவனம், தத் துவமென்னும் ஐந்தாக விரியும். இவ்வைவ் தத்துவாக்களும் ஒன்றிலொன்றுக மேற்கூறியவாறு நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளுள் எவ்வாறடங்குமெனின், நிவிர்த்தி கலையில் சத்தியோசாதம், இதயமாகிய மந்திரமிரண்டும், ஓம் நமோ நமவென்னும் பத முதலாக மகாதேவ என்னும் பத மீறுக இருபத்தெட்டுப் பதங்களும், முடிவான கூகாரை அக்காரமொன்றும், காலாக்கினி ருத்திரபுவன முதல் வீரபத்திரர் பத்திரகாளி புவன மீறுக புவனம் நூற்றெட்டும், பிருதிவி தத்துவ மொன்றும் ஆகிய இவைகள்மேற் கூறிய முறையே ஒன்றின் ஒன் றுக அடங்கும். இந்த நிவிர்த்திகலைக்கு அதிதெய்வம் பிரமன். பிரதிட்டாகலை யில் வாமதேவம், சிரசு ஆகிய மந்திரமிரண்டும், மகேசுவரமுதலிய பதமுதலாக அரூபின் முதலிய பதமீறுக பதங்கள் இருபத்தொன்றும், ளகாரமுதலாக டகார மீறுக எழுத்துக்கள் இருபத்து நான்கும் அமரேசாதி புவன முதல் சீக

ண்ட புவனமீருக புவனம் ஐம்பத்தாறும், அப்புதத்துவமுதல் பிரகிருதியீ ருக தத்துவங்கள் இருபத்துமூன்றும் ஒன்றினொன்ருக ஒடுங்கும். இப் பிர திட்டாகலைக்கு அதிதெய்வம் விட்டுணு. (எ...று) (எ)

வித்தை, சாந்தி என்னும் இரண்டு கலைகளுள் அடங்குவனவா கிய ஏணைய அத்துவாக்களின் தொகை இனவையெனக் கூறுகின்றது.

வித்தையின்மந் திரமிரண்டு பதநா லைந்து
வீரவுமெழுத் தேழுபுர மிருபத் தேழு
தத்துவமு மோரேழு தங்குமதி தெய்வந்
தாவிலுருத் திரனுகுஞ் சாந்தி தன்னின்
னவத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதி னொன்று
வன்னமொரு மூன்றுபுரம் பதினெட் டாகு
முத்தமமீரந் தத்துவமு மொருமூன் றாகு
முணரிலதி தேவதையு முபரீச னீமே.

(பொ-ரை) வித்தியாகலையில் அகோரம், சிகையாகிய மந்திரமிரண்டும் வியாபின் என்னும் பதமுதலாக தியானகாராயா என்னும் பதமீருக பதங்களி ருபதும், ஞகாரமுதல் வகாரமீருக அக்காங்கள் எழும், வாமாதி புவனமுதல் அங்குட்ட ருத்திராந்த புவன மீருக புவன மிருபத்தேழும், புருடதத்துவமுதல் மாயை யீருக தத்துவங்கள் எழும் ஒன்றின் ஒன்ருக ஒடுங்கும். இவ்வித்தியா கலைக்கு அதிதெய்வம் முடிவில்லாத ருத்திரன். சாந்தி கலையில் தற்புருடம் தவசமாகிய மந்திரமிரண்டும், நித்திய யோகினே என்னும் பத முதல் வியோம வியாபினே என்னும் பத மீருக பதம் பதினொன்றும், ஔக என்னும் எழு த்து மூன்றும், வாமை புவனமுதல் சாதாக்கிய புவன மீருக புவனம் பதினெட் டும், சுத்தவித்தை, ஈசுவரம், சதாக்கியமாகிய தத்துவங்கள் மூன்றும் ஒன்றி னொன்ருக அடங்கும். இச்சாந்தி கலைக்கு அதிதெய்வம் மகேசுவரன். (எ...று) ()

சாந்தி யாதீதகலையில் அடங்குவனவாகிய ஏணைய அத்துவாக்க ளின் தொகை இவையெனக் கூறுகின்றது.

சாந்தியா தீதகலை தன்னின்மந் திரங்க
டாழுன்று பூதமொன்றக் கூரங்கள்பதி னைஞ்சு
வாய்ந்தபுர மூனைவந்து தத்துவங்க ளிரண்டு
மருவுமதி தேவதையு மன்னுசதா சிவமாம்

மேய்ந்த முறை மந்திரங்கள் பதினென்று பதங்க
ளெண்பத்தொன் றக்கரங்க ளைம்பத்தொன் ருகு
மாய்ந்தபுர மிருநூற்றே டிருபத்து நாலா
மறிதருதத் துவமுப்பத் தாறுகலை யைந்தே.

(பொ-ரை) சாந்தியதீத கலையில் ஈசானம், அத்திரம், மூலமந்திரமாகிய மந்திரங்கள் மூன்றும், ஓம் என்னும் பதம் ஒன்றும், ஊகாரம் முதல் கூஃ வரை அக்காரங்கள் பதினேறும், நிவிர்த்தி முதல் சாந்தியதீத மீருக புவனம் ஐந்தும், இந்திகை முதல் அனுசிருதை ஈருக புவனம் பத்தும் ஆகப் புவனம் பதினைந்தும், சத்திதத்துவம் சிவதத்துவங்களாகிய தத்துவமிரண்டும் ஒன்றினென்ருக அடங்கும். இச்சாந்தியதீத கலைக்கு அதிதெய்வம் சதாசிவமூர்த்தி. இவ்வாறு சத்தியோசாதம் முதலிய பதினைந்து மந்திரங்களும் சிவாய நமோ நம முதலிய வெண்பத்தொருபத மந்திரங்களும் கூகாரம் முதலாகிய அக்கரம் ஐம்பத்தொன்றும் அனுசிருத புவனமுதல் புவனம் இருநூற்றிருபத்துநாலும் பிருதிவி முதல் தத்துவம் முப்பத்தாறும் நிவிர்த்தி முதலிய கலை ஐந்தும் ஒடுங்கும் முறையில் வைத்துக் கண்டுகொள்க. (எ...று)

மந்திரமுதலிய ஆறத்துவாக்களும் வியாபகமாம். இன்மேறல் எல்லா ஆன்மாக்களோடும் பொருந்துதல் கூடாது. ஆயினும் ஒன்றினென்று மேலான வியாபகமாம். அவ்வாறு இன்மேறல் உயர்ந்த வியாபகமாகிய கலையில் மந்திரமுதலியன அடங்குமாறில்லை. அவ்வாறாயின் மேல் ஆறாவது செய்யுளில் "மந்திரங்கள்முத லைந்தும் கலை ஐந்தின் வியாத்தி" என ஒன்றினென் றடங்குமாறு கூறியதனோடு இவ்விடத்து எல்லாம்வியாபகமென்றல்முரணுமோ வெனின், முரணுது. எவ்வாறெனின், மேற்கூறியவாறு ஒன்றினென்றடங்குவதான வியாபகமாதலினுலென்க. இவ்வாறு கூறியதன் கருத்தென்னெனின், ஏகதேசவியாபகமாகிய வியாப்பியத்திற்கு ஒடுக்கமும் அடக்கமாகிய வியாத்திக்குக் கேடுமே உரிமையாம். இது சூரியன் ஒளிமுன் வியாப்பியமாகிய கண்ணொளி ஒடுங்குதலும் வியாத்தியாகிய இருள் கெடுதலும்போலவாம். ஆகலின் மேல் ஆறாவது செய்யுளில் வியாத்தி என்றதனால் கேடு சொல்லல்வேண்டும். இவ்விடத்து ஒடுங்குமென்றதனால் வியாப்பியம் சொல்லல் வேண்டும். இவ்வாறு சொல்லுங்கால் வியாத்தி என்றதனோடு வியாப்பியமென்றது முரணும். அவ்வாறு முரணுமல் வியாத்தி என்றது ஒன்றினென்ற

டங்கும் வியாபகத்தையே குறித்தமென்று கொள்ளுதற் பொருட் டாம் என்க.

பூரணவியாபகம் ஏகதேச வியாபகம் சமவியாபகமென வியாப கம் முத்திறப்படும். அவற்றுள் ஏகதேச வியாபகத்தை வியாப்பிய மென்றும் சமவியாபகத்தை வியாத்தி யென்றுங் கூறுவர்.

வியாப்பியம் பிறிதொன்றால் வியாபிக்கப்படுவது. வியாத்தி பிறி தொன்றின் அடங்கியிருப்பது. வியாபகம் பிறிதொன்றால் வியாபிக் கப்படுதலும் பிறிதொன்றின் அடங்குதலுமின்றி யுள்ளது. வியா பகத்திற்கு உவமை சூரியன். வியாப்பியத்திற்குவமை கண்ணொளி. வியாத்திக்குவமை இருள். இவ்விருள் கண்ணளவில் மறைத்தலால் சமவியாபக மெனப்பட்டது. இவ்வாறே பதி பசு பாசம் மூன்றி னிடத்துங் கண்டுகொள்க. (கூ)

கன்மங்கள் யாவும் அத்துவாவாகிய வழியால் வருதலின் அத் துவ சுத்தியே சிறந்ததென்றும் இவ்வத்துவ சுத்தியால் ஆணவம் கன்மமாகிய ஏனைய மலங்களும் சுத்தியா மென்றுங் கூறுகின்றது.

மூன்றுதிறத் தணுக்கள்செயுங் கன்மங் கட்கு
முன்னிலையா மூவிரண்டா மத்து வாவி
னன்றிமுறை யவையருத்தி யறுத்துமல முதிர்வித்
தரும்பருவ மடைதலுமே யாசா னுதித்
தோன்றிநுக ராதவகை முற்செய் கன்மத்
துகளறுத்தங் கத்துவாத் துடக்கறவே சோதித்
தேன்றவுடற் கன்மமனு பவத்தினு லறுத்தின்
னினிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்.

(கொ-ம) அணுக்கள் மூன்று திறத்துச் செயுங் கன்மங்கட்கு முன்னி லையாம் மூவிரண்டாம் அத்துவாவின் ஆன்ற முறை அவை யருத்தி யறுத்து மலம் முதிர்வித்து அரும் பருவம் அடைதலுமே ஆசானுதித் தோன்றி அத் வாத்துடக்கு அறவே சோதித்து அங்கு நுகராத வகை முன் செய் கன்மத் கள் அறுத்து உடல் என்ற கன்மம் அனுபவத்தினால் அறுத்து ஞானத்தால் மூலமலம் இங்கு இனிச் செய் கன்மம் இடிப்பன்.

(பொ-ரை) மேற்கூறியவாறு இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாய்க் கொண்டு நின்று செய்யும் தீக்கையில் ஆணவமலம் கன்மமலங்களைச் சுத்திசெய்யாது மாயாமலமாகிய அத்துவ சுத்தியே செய்வனென அத்துவ சுத்தியைச் சிறந் தெடுத்துக் கூறிய தென்னை யெனின், ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயமென்னும் மூன்றினாலும் செய்யப்படுங் கன்மங்களுக்கு முன்னிலையாய்ப் பற்றுக் கொடுத்து நிற்பது அத்துவாக்கள் ஆறுமேயாம். இவ்வத்துவாவாகிய வழியால் செய்த கன்மங்களை செய்த முறையானன்றி அக்கன்மங்கள் பக்குவமான முறையில் அனுபவிக்கும்படி இறைவன் செய்து அந்தக் கன்மத்தை ஒழிப்பன். அவ்வாறு செய்தலால் ஆணவ மலத்தைத் தேயும்படி செய்து அவ்வாணவமலம் தேய்தலால் உண்டாகிற அருமையான பக்குவம் நோக்கி அவ்விறைவனே குருவடிவாய் எழுந்தருளி வந்து அத்துவ சோதனை செய்து தன்னுடைய கிரியா சத்தி விருத்தியாகிய தீக்கையினால் மாணாக்கன் அனுபவிக்க வேண்டியதாய் பக்குவப்படாமல் கட்டுப்பட்டிருக்கும் சஞ்சித கன்மத்தைச் சுத்தி செய்து அனுபவியாதபடி ஒழித்து பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும்படி செய்தொழித்து ஞான சத்தியினால் ஆணவமலத்தையும் வாதனை பற்றி நிகழும் ஆகாமிய மலத்தையும் ஒளி முன் இருள் போல ஒழிப்பன். (எ...று)

இதனால் ஆணவமலம், கன்ம மலங்கள் அத்துவாக்கள் இடமாகத் தொழிற்பட வேண்டுதலாலும் அத்துவ சுத்தியால் அவ்விரு மலங்களும் சுத்தி யெய்து மாதலானும் அத்துவ சுத்தியே சிறந்தெடுத்துக் கூறிய தென அறிக. சுத்தி யென்பது இவ்விடத்தில் நீக்கம்.

கன்மானுபவத்தால் மல சத்தி எவ்வாறு கெடுமெனின், கன்ம பலன்களை அனுபவிக்கும்படி செய்தலால் இனைப்புத் தோன்றும். தோன்றவே அவ்வினைப்பாகிய துன்பத்தின் நிவிர்த்தியை நாடும். அவ்வாறு நாடும் நாட்டம் மலசத்தியின் தேய்வைக் குறிக்குமாதலால் கன்ம பலனை அனுபவிக்கும்படி செய்தல் மலசத்தி கெடுதற்கு உபாயமாயிற்று. (கஎ)

முதலதிகரணம் முடிந்தது.

இரண்டாமதிகாணம்.

மன்னுயிருளால் உணர்த்தி என்பது

புறச் சமய நெறிமுதல் படிமுறையால் மேம்பட்டு சைவத்தை அடைந்தவர்க்கு அத்துவ சுத்தி எய்துதற்குரிய பருவமுண்டாமெனவும் அச்சைவமாகிய தவநெறியும் தரியைமுதல் நான்கு வகைப்படுமெனவும் கூறுகின்றது.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளனைவயடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கங்கைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றுற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

(பொ-ரை) மேல் கண்ம நுகர்ச்சியால் அத்துவ சுத்தி எய்துதற்குரிய அரும் பருவம் உண்டா மெனக் கூறப்பட்டது. அவ் வரும் பருவம் எவ்வாறு உண்டாகுமெனின், உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாம்சம், மாயாவாதம், பாஞ்சராத்திர மென்னும் தூலமாகிய புறச்சமயங்களினின்று அவ்வாழுகியும், அவ் வொழுக்கத்தின் முதிர்ச்சியால் அப் புறச்சமயத்தினின்று நீங்கி சைவம், பாசுபதம், வாமம், பைரவம், மாவிரதம், காளா முக மென்னும் சூக்குமமாகிய அகச் சமயங்கள் ஆறிற் புகுந்து அந்நூல் வழியே ஒழுகியும், மநு முதலியவராற் சொன்ன தரும சாத்திரம் பதினெட்டின் வழிய சென்றொழுகியும், வேதத்திற் சொல்லப்பட்ட பிரமசரிய முதலான ஆச்சிரமங்கள் நான்கின் நெறிகளில் வழுவா தொழுகியும், அனுட்டித்தற்கரிதாகிய பஞ்சாக்கினி முதலிய வற்றினின்று அரிய தவங்களைச் செய்தும் கற்பதற்கரிதாகிய கலை ஞானங்கள் பலவுற்றறைப்பயின்றும், இருக்கு முதலிய நான்கு வேதங்களை ஓதியும், சிறப்பினையுடைய பதினெண் புராணங்களை ஓதி உணர்ந்தும், வேதாந்தமாகிய உபநிடதப் பொருளை மிக ஆராய்ந்து தெளிந்தும் இவ்வாறு படிமுறையாக பல பிறவிகளினும் அப்பியாசம் பண்ணி அவைகள் முற்றுப் பெற்றால் சைவக் கூற்றின் முடிவாகிய சித்தாந்த சைவத்தை அடைவர். இவ்வாறு படி முறையால் அன்றி ஒரு காலத்தில்லாம் பெற முடியாது, முறையே ஒன்றன் பின் ஒன்றாகப்

பின்று முடிவில் அடையப்படும் இச் சித்தாந்த சைவத்திலும் சரியை கிரியா யோகங்களை முறையாய் அனுட்டித்து முற்றிய பின் ஞானத்தைப் பெற்று அந்த ஞானத்தால் சிவபெருமான் திருவடிகளைச் சேர்வர். (எ...று) (கக)

புறச் சமய நெறி முதல் பல வேறு வகைப்பட்ட நெறிகளின் பயனாய முத்திகளின் இலக்கணமும் சைவ முத்தியின் இலக்கண மும் இவை எனக் கூறுகின்றது.

இம்மையே யீசனட்டாண் டெய்தியெழி லாரு
மேந்திழையார் முத்தியென்று மிருஞ்சுவர்க்க முத்தி
யம்மையே யென்று முத்தி யைந்து கந்த
மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தி யென்று
மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும்
விவேகமுத்தி யென்றுந்தன் மெய்வடிவாஞ் சிவஞ்தைச்
செம்மையே பெறுகைமுத்தி யென்றுஞ்செப் புவர்கள்
சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே.

(கொ-து) அம்மையே இருஞ்சுவர்க்கம் முத்தியென்றும் ஐந்து கந்தம் அறக்கெடுகை முத்தியென்றும் எனவும் இங்கேயாம் செப்புவது சிவனடியைச் சேருமுத்தி எனவுங்கூட்டுக.

(பொ-ரை) சித்தாந்த சைவமல்லாத வேனைச் சமய நூலாருக்கும் முத்திக ளுள .அம் முத்திகள் படி முறைபால் நிலமுதல் நாத மீறுகிய மூப்பத்தாறு தத் துவங்களில் ஒவ்வொன்றில் இருப்பனவாம். அவை வருமாறு: உலோகாய தன் இவ்வுலகமேயுள்ளது. பரலோகமாகியசுவர்க்கம்நரகமென்பதொன்றில்லை. ஸ்நான, போஜன முதலிய சுகுக்கியமே சுவர்க்கம். இவைகளின்றி தரித்தி ரத்தினாலும் வியாதியினாலும் துன்பப்படுவதே நரகம். அழகினையுடைய பதினா ருண்டுள்ள ஆபரணங்களணிந்த பெண்களுடனே கூடி இன்புறுதலே முத்தி எனக்கூறுவன். மீமாம்ச நூலார் வேதோக்தமான யாகாதி கன்மானுஷ்டானங் களைச் செய்து இந்தச் சரீகம் நீங்கிய பின் மறுமையில் திவ்ய தேகத்தைப் பெ ற்று பெரிய போகத்தை உடைத்தாகிய சுவர்க்க லோக போகம் அனுபவித்தலே முத்தி என்பர். பௌத்தன் ரூபம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞான மாகிற ஐவகைக் கந்தங்களும் முற்றக் கெடுதலே முத்தி என்பன். சைனனாகிய ஆருகதன், அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம், நிர்காமம், நிர்க்கோத்திரம், நிராயுஸ்யம், சகல சூன்யதாபாவம் ஆகிய எண் குணமும் அடைதலே முத்தி என்பன். வைசேடிகர் ஆத்ம ஞானுத்தினாலே சுக

தக்கங்களும் அவற்றிற்கேதுவாகிய ஞானமும் நீங்க பாடாணம் போல ஓரறிவும் அற்றிருப்பதே மோட்சமென்பர். சாங்கியர் பிரகிருதி புருஷ விவேகத்தைப் பண்ணி பிரகிருதி விகாரங்களுக்கு ஆன்மாவாகிய தான் அன்னியமாகயான் என தென்பதற நிற்பதே மோட்சமென்பர். மாயாவாதி மாயை பிரமங்கமே விசாரித்து மாயையைக்கடந்தவதே மோட்சமென்பர். பாஞ்சராத்திரிகள் மகாவிஷ்ணுவின் கிருபையினால் இத் தேகத்தினின்றும் நீங்கி சத்திய சொரூபமாகிய சுத்த சித்து ரூபியாய் விட்டுணுவிற்குச் சமானமாய் சகல போகங்களும் மகா விஷ்ணுவைப் போலவே நித்தியமாய் உடைத்தாயிருக்கை மோட்சமென்பர். சிவ சமவாதி முதலிய சைவர்கள் சிவானுக் கிரகத்தாலே ஆணவம் முதலிய மும்மலங்களும் நீங்க சத்தியமும் சுத்தமுமாகிய ஆத்மாவின் முன் ஞானக் கிரியைகள் பிரகாசிக்கப் பெற்று அந்த ஞானக் கிரியைகளின் பிரகாசத்தால் சர்வஞ்ஞத்துவாதி ஆறு குணங்களும் விளங்கப் பெற்று சிவ சமமாயிருப்பதே மோட்சமென்பர். இதுவும் சிவபிரானுடைய உண்மை நிலையை அறிந்து இன்புறுத நிலையாதலால் பத முத்தியேயாம். இவ்விடத்து வேதாகம நூலுண்மையின்படி யாம்சுறும் முத்தியாவ தெது வெனின், ஆன்மாவும் சிவமும் அனாதியே பிரிவற்றுள்ளன. அப்பிரிவில்லாமையைத்தோன்றுதபடி அனாதியே ஆணவமலம் ஆன்மாவின் அறிவைத் தடுத்திருப்பதால் அந்த வுபாதியினால் அசத்தியமாகிய போகங்களைச் சத்தியமென மயங்கிநின்று சிவானுக்கிரகத்தாலேஅம்மயக்கம் நீங்க கண்ணினது காசம் நீங்கிய விடத்து அக்கண் காட்சியைப் பெற்றது போல அம் மயக்கம் நீங்கிய விடத்து சிவனுடைய பிரிவில்லாமையை அநன்னியமாக நின்று கண்டு சிவானந்த பரவசத்தினாலே முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த சிவபெருமான் திருவடியை அடைதலேயாம். (எ...று)

திருவடி யென்பது இறைவனுடைய சித்துத் தன்மை. இக்கருத்துப்பற்றியே "அடியெனுமதுவும் அநாளனுமதுவும் அறைந்திடிற் பூரண நிறைவு" எனத் தாயுமான சுவாமிகளருளிச் செய்வாராயினர்.

அடைதலென்றதனால் வேறுகப் பிரிந்திருந்து அடைந்ததென்பது பொருளன்று. தன்னுடைய பிள்ளையானவன் வியாதியினாலே மிகவும் துன்பப்பட்டு குணமானபொழுது இந்தப் பிள்ளையை இப்பொழுது பெற்றே னென்றது போலயான் என தென்னும்போதத்தினால் சிவானுபவம் விளங்காதிருந்து அப்போதம் அறுதியில் அச்சிவானுபவம் விளங்கினதை அடைந்ததென்று சொல்லிய தென

உண்மைச் சமயமும் அதனிலக்கணமும் உண்மை நூலும் இவை யெனக் கூறுகின்றது:

ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றேறுடொன் றெவ்வாம வுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருளூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
தீதியிரு னிவையியல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருளூ
லாதலிரு னிவையியல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடங்கும்.

(பொ-ரை) மேற்கூறியவாறு பல சமயங்களும், அச்சமயப் பொருள்களை அறிதற்கேதுவாகிய பல நூல்களும் மாறுபட்டனவாகக் காணப்படுதலால் அவற்றுள் முதன்மையான சமயம் யாது? அதன் இலக்கணம் யாது? அச்சமயப் பொருளை யுணர்த்தும் நூல் யாது? எனின், கண்ணில்லாத பலர் கூடிக் கொண்டு யானையைக்கையாற்றடவி தத்தமக் கெய்திய உறுப்புக்களினிலக்கணமே யானையினிலக்கணமெனச் சொல்லி முரண்பட்டவிடத்து யானையினிலக்கணம் முழுதுங் கண்ட கண்ணுள்ளான் ஒருவன் எனையோர் கூறும் இலக்கணங்க ளெல்லாம் தான் கண்ட இலக்கணங்களில் அடங்கிய ஒவ்வோரிலக்கணமென்றும் அவ்விலக்கணங்களும் கொள்ளத் தக்கனவே என்றும் அறிவன். அதுபோல இந்தச் சமயம் பொருந்தும் அந்தச் சமயம் பொருந்தாது என்னும் பிணக்கின்றி படி முறையால் இச்சமயமனைத்தும் அங்கமாக தன்னிடத்தே காணப்பட்டுநின்றது எச்சமயமோ அச்சமயமே உண்மையான சமயமாம். அச்சமய சாத்திரமே உண்மையான சாத்திரமாம். எனைச்சமயங்களோடு பிணக்கின்மையே அதன் இலக்கணமாம். அச்சாத்திரம் எதுவெனின், எல்லாப் பொருளையும் சொல்வதே சாத்திர மென்பதின் பொருளாதலால் அவ்வாறு எல்லாப் பொருளையும் சொல்லுவனவாகிய முதல்வனருளிச்செய்த வேத ஆகமங்களே அச்சாத்திரமாம். அவ் வேதாகமங்களில் எல்லாச் சமய நூற்பொருள்களும் அடங்கிக் காணப்படும். காணப்படினும் அவ்வேதாகமங்களால் சிறந்தெடுத்துக் கூறப்படும் சமயமே உண்மையான சமயமாம். அவ்வுண்மைச் சமயம் சிவபிரானையே தெய்வ மெனக் கொள்ளுதலாலும் அச்சமய சாத்திரத்தைப் பூர்வபட்சம் பண்ணுவதற்கு வேறு சாத்திரமில்லாமையாலும் அவ்வுண்மைச் சமயத்தைச் சித்தாந்த சைவமெனக் கூறப்படும்..(எ—று). (கஉ)

உண்மை நூல்களாகிய வேதாகமங்களே முதனூலெனவும் ஏனைய நூல்களெல்லாம் வழிநூல் சார்பு நூல்களாய் முதனூலிலடங்கு மெனவுங் கூறுகின்றது.

அருமறைபா கமமுதனூ லதனைத்தமுரைக் கையிரு
ளளப்பரிதா மப்பொருளை யானருளா லணுக்க
டருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற்
றர்க்கமொடுத் தாங்களினற் சமயஞ்சா திக்கு
மிருதிபுரா ணைங்கலைகண் மற்றுமெல்லா
மெய்ந்நூலின் வழிபுடைபோ மங்கம்வே தாங்கஞ்
சருதிசிவா கமமொழியச் சொல்லுவதான் றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொ ணாதே.

(கொ-ப) மூதலநூல அருமறையாகமம அனைதும உரைகளையனைய அளப்பரிதாம் அப்பொருளை அணுக்கள் அரனருளால் பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில் தர்க்கமொடு உத்தரங்களினல் சாதித்துத் தருவர்கள் சமயம் மிருதி புராணம் கலைகள் மற்றுமெல்லாம் மெய்ந்நூலின் வழி (ஆம்) அங்கம் வேதாங்கம் புடையாம்.

(பொ-ரை) மேற்கூறிய நூலெனப்படுவன வெல்லாம் முதனூல், வழி நூல், சார்பு நூல், பூர்வ பக்க நூலெனப் பல வேறு வகைப்படும். அவற்றுள் முதனூலில் வழிநூலும் அவ்விரண்டில் சார்பு நூலும் அம்மூன்றில் பூர்வ பக்க நூலும் முறையே அடங்கும். ஆகவே முதனூற் பொருள்களையே வேறு வேறெடுத்துக் கூறுதலால் எல்லா நூல்களும் மேன்மையுடையனவேயாம். வேறு வேறு கூறுவானேன் எனின், முதனூலாகிய வேதாகமங்களில் அனைத்தும் கூறுங்கையால் அவ்வாறு கூறியுள்ள அளவிடுதற்கரிய உயர்ந்த பொருள்களை முழுவதும் உள்ளவாறுணரமாட்டாத உயிர்கள் முதல்வனருளால் அவ்வேதாகமங்களுள் சில பொருளைத்தத்தமறிவிற் கேற்ப எடுத்துக் கொண்டு சங்கை உத்தரங்களினல் சாதித்து தொகுத்தும் விரித்தும் செய்தனர். அவை எல்லாம் சைவமல்லாத ஏனைச் சமய நூல்களாதலின் அந்நூல்கள் பூர்வ பக்க நூலெனப்படும். மிருதி, புராணமுதலாயின வெல்லாம் அவ்வேதாகமப்பொருளை இனிது விளக்குதற் பொருட்டு அவற்றை உள்ளவாறுணர்ந்தோர் செய்த நூலாதலால் அந்நூல்கள் வழிநூலெனப்படும். காருடம், தக்ஷணம், சிகை, கற்ப சூத்திரம் முதலிய அங்க நூல்கள் வேதாகமங்களை உள்ளவாறுணர்தற்குச் சார்பாகப் பக்கத்து நிகழ்தலின் சார்புநூலெனப்படும். ஆதலால் வேதாகமங்களில் அடங்காத பொருளாக ஒன்றனை எடுத்துச்சொல்லும் நூலொன்றுமில்லை.

உண்டென்று பிணங்கும் பேதையர்க்கு உத்தாஞ்சொல்லி அறிவுறுத்த இய லாது. (எ...று) (கச)

வேதம் பொது நூலெனவும் ஆகமம் சிறப்பு நூலெனவும் சித் தாந்தமெனவும் கூறுகின்றது.

வேதநூல் சைவநூ லென்றிரண் டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலா
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வ சிவாகமங்கள் சித்தாந்த மாகும்.

(கொ-டு) வேதநூல் சைவநூல் என்று இரண்டு ஆதிநூல்கள் அநாதி அமலன்தருநூல் வேறு உரைக்கும்நூல் இவற்றின் விரிந்தநூல்கள் இரண்டு. மே நூல் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் நீதியினுன் ஆணம் சைவம் நிகழ்த்தி யது நீள்மறையின் ஒழிபொருள் வேதாந்தத்தீது இல்பொருள் கொண்டுஉரைக் கும் சைவநூல் பொதுநூல் அருஞ்சிறப்புநூலாம் பிறநூல் திகழ்பூர்வம் சிவாக மங்கள் சித்தாந்தமாகும்.

(பொ-ரை) மேற்கூறிய நூல்களுள் வேதாகமங்களிரண்டும் எல்லா நூல் களுக்கும் முதனூலாகி இறைவனுற் றாப்படும் நூலாம். ஏனைய நூலெல் லாம் இவ்வேதாகமங்களிரண்டினின்றும் விரிந்த நூலாதலின் இவ்வேதாகமங் களே நூலென்று உயர்த்துக் கூறப்படுவனவாம். முதல்வன் இருவேறுவகைப் பட்ட நூல் செய்வானேன் எனின், அவன் பெருங்கருணையாள னுதலின் நீதி நெறியில் நிற்கும்உலகோரும் ஞானநெறியில் நிற்கும் உயர்ந்தோருமாகிய இருவரு முய்தற்பொருட்டு வேதத்தையும், ஞானநெறியில் நிற்போர்மட்டும் உய்தற்பொருட்டு ஆகமத்தையும் அருளிச்செய்தனன். அன்றியும் வேதத்திற் கூறும் கரும காண்டத்துள் சிவார்ச்சனை செய்யவென்று கூறி அதனைச்செய் யும்விதம் அவ்விடத்துக் கூறுமையால் அதனைக் கூறுவதற்காகவும் ஞானகாண் டமாகிய உபநிடதம் பல கடவுட்கும் பாத்துவம் கூறுதலால் அப்பல கடவுள ருள்ளும் சிவன் ஒருவனுக்கே பாத்துவம் கூறுவதற்காகவும் ஆகமத்தை அருளிச் செய்தனன். இதனால் வேதம் சூத்திரமும் ஆகமம் அச்சூத்திரத்தின் விருத்தி உரையாகிய பாடியமும் போலவாம். வேதம் உலகர்க்கும் ஞானுதிகாரிக்குமு ரித்தாதலின் பொதுவும், ஆகமம் ஞானுதிகாரிக்கே உரித்தாதலிற் சிறப்புமாம்.

அன்றியும் வேதம் பல கடவுளர்க்கும்பாத்தவங் கூறுதலால் பொது. ஆகமம் சிவபெருமானுக்கே பாத்தவங் கூறுதலால் சிறப்பு. இச்சிவாகமப் பொருட்கு வேறாய் வேதத்தின் பூர்வபக்கப்பொருளைச் சொல்லும் நூல்களெல்லாம் மேற் கூறியவாறு பூர்வபக்க நூலெனப்படும். வேதத்தின் முடிவான பொருளைச் சொல்லும் சிவாகமம் சித்தாந்தமெனப்படும். (எ...று) (கரு)

சித்தாந்த நெறியில் நிற்போர்க்கு அந்தச் சென்மத்திலேயே சிவபிரான் முத்திதந் தருளுவரெனக் கூறுகின்றது.

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
சொருபமொன்றி லேசிவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி.

(கொ-டு) சொருபமொன்றிலே சிவன்றன் திருக்கடைக்கண்சேர்த்தி (சொருபமொன்றிலே) மலங்கழுவிஞானவாரி மடுத்து ஆனந்தம்பொழிந்து சிவன்முத்தராகவைத்து ஆண்டுவரும் பிறப்பை அறுத்து முத்தாந்தப் பாதமலர்க்கீழ்வைப்பன் என்று சித்தாந்தத்தே மொழிந்திடவும்.

(பொ-ரை) மேற்கூறிய சித்தாந்தமே முத்திக்கு நேர்வழியாம். சித்தாந்த நெறியில் நிற்கும் பக்குவான்மாக்களுக்கு எடுத்த சனனமொன்றிலேயே சிவபிரான் தமது காருண்யத்தால் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து திருக்கண்நோக்கம் முதலிய தீக்கைசெய்து மலத்தைப்போக்கி ஞானசாகரத்தில் மூழ்குவித்து சிவானந்தம் மேலிடச்செய்து சீவன் முத்தராக்கி மேல் வரும் பிறவியை ஒழித்து முத்திமுடிவாகிய திருவடி மலர்க்கீழ் அடங்கி நிற்கச் செய்வன். இத்துணைப் பெருமை பொருந்திய சித்தாந்த நெறி வீடுபேற்றிற்கு நேர் வழி என உபமன்னியர் அகத்தியர் முதலிய உயர்ந்தோரெல்லாம் எடுத்தோதவும் உலகத்தார் அதனைத் தெளியமாட்டாது தாபிமானம் கொண்டு தத்தமக்கு வேண்டியவாறே உரைத்து உரைத்த அப்பாவத்தால் கொடு நரகத்தில் வீழ்வர் என்ன மயக்கம். (எ...று) (கூ)

மூற்றுணர்வு முதலிய குணங்களை யுடைய சிவபிரானுக்கே ஒரு சனனத்தில் முத்தியைத் தருதல் கூடுமெனவும் அக்குணங்கள் சிவபிரானிடத்துள வென்பதற்கு ஏதுக்கள் இவை எனவும்

இறைவ னவ் வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மையனுக் கிரகமெல்லா மியல்புடைபா னிபம்பு
மறைகளா கமங்களினை னறிவெல்லாந் தோற்று
மரபின்வழி வருவோர்க்கும் வாரா தோர்க்கு
முறைமையினை வின்டாத்துன் பங்கொடுத்த லாலே
முதன்மையெலா மறித்துமுயங் கிரண்டு போகத்
திறமதனல் விளையறுக்குஞ் செப்தி யாலே
சேருமனுக் கிரகமெலாங் காணுதுநாஞ் சிவற்கே.

(கொ-டு) எல்லா ஞான எல்லா முதன்மை எல்லா அநுக்கிரகம் சிவற்கே நாம் காணுதும் எனவும் இயல்புடையானிறைவனவ்வான் எனவும் கூட்டுக.

(பொ-ரை) ஆன்மாக்களுக்கு எடுத்த ஒரு சன்மத்திலேயே முத்தியைத் தருதல் சிவபிரானுக் கெவ்வாறு கூடுமெனின், முற்றுணர்வும், முடிவிலாற்றலும், பேரருளும் ஆகிய மூன்று குணங்களும் சிவபிரானிடத்திலேயே காண்கின்றோம். அம்மூன்றும் இயல்பாக வுடைய வல்லவ ரதலால் கூடும். அம்மூன்று குணங்களும் உடையனுமென்பது எவ்வாறு பெறப்படுமெனின், வேதாகமங்களை அருளிச்செய்த ஏதுவினால் முற்றுணர்வுடையனுதல் தெளியப்படும். எவ்வாறெனின், பலவேறு வகைப்பட்ட ஆன்மாக்களுக்கு வேண்டிய எல்லாவிஷயங்களும் வேதாகமங்களில் காணப்படுகின்றன. அவ்வாறு சொல்வதற்கு முற்றுணர்விருந்தாலன்றி முடியாது. ஆதலால் முற்றுணர்வுடையனுதல் தெளியப்படும். அவ்வேதாகமவழி நடப்போர்க்கு சுகத்தையும் நடவாதோர்க்கு துக்கத்தையும் தருதலாகிய ஏதுவினால் முடிவிலாற்றலுண்டென்பது தெளியப்படும். அவ்வாறு சுகதுக்கங்களை அனுபவிக்கும்படி செய்து அச்சுக துக்கங்களுக்குக் காரணமாகிய இருவினைகளை நீக்குகின்ற ஏதுவால் பேரருளுடையனென்பது தெளியப்படும் (எ...று) (கஎ)

சைவநெறியாகிய முத்திநெறி சரியை முதலிய நான்கு பேதப்படுமெனவும் அவற்றின் பயன் பதமுத்தி பரமுத்தி என இருவகைப் படுமெவும் கூறுகின்றது.

சன்மார்க்கநஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்
தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனை யடையு
நன்மார்க்க நாலவைதா ஞான மீயாக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்பிய
சாரூப்பிய சாயுச்சிய மென்றுசதுர் விதமா
மூன்மார்க்க ஞானத்தா லெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர்.

(கொ-டு) சங்கரனை அடையும் நன்மார்க்கம் தாதமார்க்கம் சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்கம் என்றும் நால் அவைதாம் நற்சரியை கிரியாயோகம் ஞானமென நவிற்றுவதும் செய்வர் சன்மார்க்கமுத்திகள் சாலோக்கியசாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியமென்று சதுர்விதமாம் மூன்றினுக்கு முத்திபதமென்பர் முன்ஞான மார்க்கத்தால் எய்து முத்திமுடிவென்பர்.

(ஒபா-ரை) அவ்வாறு சிவபிரான் திருவடியை அடைதற்குரிய சைவநெறியாகிய நன்னெறியும் தாதமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தோழமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு வகைப்படும். அவை முறையே சிவசரியை, சிவகிரியை, சிவயோகம், சிவஞானம் என வழங்கப்படும். அந்த நன்மையாகிய மார்க்கத்திற்குப் பயன் முறையே சிவசாலோகம், சிவசாமீபம், சிவசாரூபம், சிவசாயுச்சியமென நான்கு வகைப்படும். அவற்றுள் சிவசரியை முதலியமூன்றினால் மடைதற்குரிய சிவசாலோக முதலிய மூன்றினை பத முத்தியாகிய அபாமுத்தி எனக்கூறுவர். முடிவான ஞானநெறியால் அடையும் சிவசாயுச்சியத்தைப் பாமுத்தியெனக் கூறுவர். (எ...று)

சரியை முதலியவற்றின் விவரம் பின்னர்க் கூறப்படும்.

சாலோகம்:—சிவபிரான் திருமேனி கொண்டெழுந்தருளி யிருக்கும் உலகத்துள் எவ்விடத்தும் தடையின்றிச் சஞ்சரித்து அவ்வுலக போகங்களை அனுபவித்து வாழ்தல்.

சாமீபம்:—அவ்வுலகபோகத்தை அனுபவித்தலோடு மைந்தர்க்குரிதாகிய உரிமைபோல சிவபிரானுக்கு சமீபமாக இருந்து அப்போகங்களை அனுபவித்துவாழ்தல்.

சாரூபம்:—தோழர்க்குரிய உரிமைபோல சிவபிரான் கொண்டருளும் திருமேனிகளுள் ஒரு திருமேனியைப் பெற்று அத்திருமேனிக்குரிய ஆபரணமும் போகானுபவமும் உடையராய்வாழ்தல்.

சாயுச்சியம்:—சிவபிரான் திருவடியில் இரண்டறக் கலந்து நின்று நித்தியானந்தத்தை அனுபவித்து வாழ்தல். (கஅ)

தாசநெறிபாகிப சரிணைபினிலக்கணமுட் அதன் பயனும் இவை யெனக் கூறுகின்றது.

தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரன்றன் கோயிற்
றலமலகிட் டிலதுதிரு மெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதிறிரு விளக்கிட்டுத் திருந்த வனமுஞ்
செய்துதிரு வேடங்கண் டாலடிபேன் செய்வ
தியாதுபணி யீரென்று பணிந்தவர்கம் பணியு
மியற்றுவதிச் சரிணைசெய்வோ ரீசனுல கிருப்பர்.

(கொ-டு) தாதமார்க்கம் சாற்றில் சங்கரன்றன் கோயிற்றலம் அலகுஇட்டு இலகு திரு மெழுக்கும் சாத்தி தீது இல் திருவிளக்கு இட்டு திருந்தவனமுஞ் செய்து போதுகளும் கொய்து பூந்தார் மாலைகண்ணி புனிதற்குப்பல சமைத்து புகழ்ந்துபாடி திருவேடங்கண்டால் அடியேன் செய்வது யாது பணியீர் என்று பணிந்து அவர் தம்பணியும் இயற்றுவது இச்சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர்.

(பொ-ரை) மேற்கூறிய தாதமார்க்கமுதலிய அந்நான்கனுள் தாதமார்க்க மாகிய சரியையாவது யாதெனின், சிவபிரான் திருமேனிகொண்டெழுந்தரு ளியிருக்கும் கோவிலில் அசுத்தத்தைப் போக்கித் திருமெழுக்கிட்டு, திருவிளக் கிட்டு, நந்தனவனங்கள் வைத்துப் புஷ்பங்களெடுத்து இண்டை முதலிய மாலை கள் அமைத்து சிவபிரான் திருமேனியில் அழகுறும்வண்ணம் சாத்தி, சிவபெரு மானுடைய மேலான கீர்த்தியினை வாயார வாழ்த்தி, சிவனடியார் திருவேடத் தைக் கண்ணுற்றபொழுதே அடியேனுல் செய்யத்தக்க அடித்தொண்டியாது? அதனை யருளவேண்டுமென்று வணங்க அவ்வருளிச் செய்யும் பணிவிடையும் செய்வதாம். இச்சரியை இந்திரியத்தொழிலாகிய புறத்தொழில் மாத்திரை யானே சிவபிரான் உருவத் திருமேனியை நோக்கி வழிபடுதலால் இதனீ யதறு ட்டித்தோர் சிவசாலோகமாகிய பதமுத்தியைப்பெறுவர். (எ...று) (கக)

புத்திர நெறியாகிய கிரியையினிலக்கணமும் அதன் பயனு

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து.
சுத்திசெய்தா சனமூர்த்தி மூர்த்தி மானஞ்
சோதனையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினை லருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவிலெறி மெரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலுதிக் கிரியையினை யியற்று வோர்க
ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே.

(கொ-டு) பரிவிலெறியும் பாவிப்போற்றி நித்தலும்எரியில் வருகாரியமும் பண்ணிநினையுங்காலே இக்கிரியை யினை இயற்றுவோர்கள் நின்மலன்றன் அருகு இருப்பர்.

(பொ-ரை) புத்திரநெறியாகிய கிரியையினிலக்கணம் யாதெனின், புதிதாகிய வாசனையுடைய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம்,(ஜலம்)திருவமுது முதலிய பூஜைக்குவேண்டிய யாவும் தேடி யமைத்துக்கொண்டு அப்பொருள்களைப் பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி என்று சொல்லப்பட்ட ஐவகைச் சுத்திகள் செய்து சிவாசன மூர்த்தி மூல மந்திரங்களினால் ஆசனமிட்டு அவ்வாசனத்தில் மூர்த்திபை எழுந்தருளச் செய்து அம்மூர்த்தியில் மூர்த்திமானாகிய சிவபெருமானைப் பாவனைசெய்து வெளிப்படுத்தி நிர்மலமாகிய மெய்யன்பினை லர்ச்சனைசெய்து துதித்து நமஸ்காரமுதலிய வழிபாடியற்றி நித்தியாக்கினி காரியமும் செய்து முடிப்பதாம். இக்கிரியை இந்திரியங்களும் மனமுங்கூடி தொழிற்படுவதாகிய புறத்தொழில் அகத்தொழிலென்னு மிரண்டானும் சிவபிரானுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுவதாதலின் இதனை அநுட்டித்தோர் சிவசாமீபமாகிய பதமுத்தியைப்பெறுவர். (எ...று) (20)

தோழிநெறியாகிய யோகத்தினிலக்கணமும் அதன் பயனும் இவையெனக் கூறுகின்றது.

சகமார்க்கம் புலனெறிக்கித் தடுத்தவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துசீபாய் மேலேறி யலர்மதிமண் டலத்தின்
முகமார்க்க வழுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முறறு
முழுத்தழுந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்.

(கொ-டு) சகமார்க்கம் உழத்தல் இரண்டும் தடுத்துவளி சலிப்பு அற்று புலன் ஓடுக்கி முச்சதாரமுதல் ஆதாரங்கள் அகமார்க்கம் அறிந்து அவற்றினரும் பொருள்களுணர்ந்து அங்கு அணைந்துபோய் மேல்னறி அலர்மதி மண்டலத்தின் முகடார்க்க அமுது உடலம் முட்டத்தேக்கி முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாகவினைகள் உகமார்க்க அட்டாங்கயோகம் முற்றுமுழந்தவர் சிவன்றன் உருவத்தைப் பெறுவர்.

(பொ-ரை) தோழமார்க்கமாகிய யோகநெறியாவது யாதெனின், கீழ் நோக்கிச் செல்லும் வாயுவையும் மேல்நோக்கிச் செல்லும் வாயுவையும் அடக்கி சுழுமுனை மார்க்கத்தில் வாயுவைச்செல்லும்படி நிறுத்தி மனத்தைவிடயங்களில் செல்லவொட்டாது திருப்பி முக்கோணம், சதுர முதலிய அடையாளங்களையுடைய மூலாதாரம் சுவாதிட்டான முதலிய ஆறுதாரங்களையு முணர்ந்து அவ்வாதாரங்களின் அதிதேவதைகளைத் தியானித்து அவ்வாறுதாரங்களினும் சிவனை வெளிப்படுத்துவதாக நிற்கும் அசபாசத்தியை நோக்கி மேலாகிய பிரமாந்திரமளவும் அவ் வசபையுடன் சென்றணைந்து அப்பிரமந்திரத்தின் கண்ணதாகிய தாமரை முகையை மலரும்படி செய்து அத்தாமரை மலரின் தாதுக்களிலுள்ள சந்திரமண்டலத்தை மூலாக்கினியிறை விளகப்பண்ணி அம்மண்டல வழியாக வொழுகும் அமிர்தத்தைத் தேகமுழுவதும் நிரப்பிப் பூரணப்பிரகாசத்தைத் தியானித்தல் முதலியனவாம். இது வினைகள் கெடுதற்கு வழியாகிய இயமம், நியமமுதலிய அட்டாங்கயோகமெனப்படும். இவ்வழிபாடு அகத்தொழில் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவத்திருமேனியிடத்து நிகழ்வதாதலின் இதனை யனுட்டித்தோர் சிவ சாரூபமாகிய பதமுத்தியைப் பெறுவர். (எ...று)

வாயுவை யடக்குதலாவது:—வாயுவானது எப்பொழுதும் வெளியே வருதலும் உள்ளே போதலுமாக இயங்கிக்கொண்டிருக்கும். வெளியே வருதல் இரேசகம். உள்ளே போதல் பூரகம். வெளியே வருதலை மேல்நோக்கிச் செல்லும் வாயுவென்றும் நிசுவாசமென்றுங்கூறுவர். உள்ளே செல்லுதலை கீழ்நோக்கிச் செல்லும் வாயுவென்றும் உசுவாசமென்றும் கூறுவர். இவ்வாயுவை இவ்வாறு செல்லவொட்டாது தடுத்து அடக்குதலாகிய கும்பகமாவது சுழுமுனைநாடியின்வழியாக அகத்து ஓர் குறியில் மனதோடு கூட நிறுத்திப் பழகுதலாம்.

ஆறுதாரங்களாவன:— மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்பனவாம். மூலாதாரம்

மூலத்துக்கு இரண்டங்குலத்துக்குமேல் லிங்கத்திற்கு இரண்டங் குலத்திற்குக் கீழ் உள்ள இடம். இவ்விடத்தில் முக்கோணவடிவ மிருக்கும். அவ்வடிவுத்தில் நான்கிதழ்களையுடைய செந்தாமரை யும், வஸஷஹஸ என நான்கு அக்காங்களு மிருப்பனவாம். இவ்வா தாரத்தில் விளங்குந் தேவதை விநாயகர்.

சுவாதிட்டானத்திற்குத் தானம் லிங்கமூலம். வடிவு அறு கோணம். அக்கோணத்தில் அதிக காந்தியினையுடைய ஆறிதழ் தாமரையிருக்கும். அத்தாமரையில் வஹ மபரல என்னும் ஆறக்காங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை பிரமதேவர்.

மணிபூரகத்திற்குத் தானம் நாபி. வடிவு மூன்று வட்டம். இரத்தினப் பிரபைபோன்ற பத்து இதழ்களையுடைய தாமரை அவ் விடத்திருக்கும். அதில் ஔ ணதயஐய நவஹ எனப் பத்து அக் காங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை விஷ்ணு.

அனாகதத்திற்குத்தானம் இருதயகமலம். வடிவு முக்கோணம். இதில் பொன்போன்ற நிறத்தினையுடைய பன்னிரண்டு இதழ்த்தாம ரை மலரிருக்கும். அதில் கவஎஙஞடஉஊஜஃஸஷ்டீ எனப் பன்னி ரண்டு அக்காங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை உருத்திரன்.

விசுத்திக்குத்தானம் கண்டம். வடிவு அறு கோணம். இதில் வெண்மை நிறமுடைய பதினாறிதழ் தாமரையிருக்கும். அதில் சகூஐஂஏஂஒஉஊஐஐஓளஎஔவஹவொஓளகஂஃஂ எனப்பதினாறு அக் காங்களிருக்கும். இவ்வாதாரத்தில் விளங்குந் தேவதை மகேசு வரன்.

ஆக்ஞைக்குத்தானம் புருவநடு. இதில் இரண்டிதழ்களையு டைய செந்தாமரையிருக்கும். அதில் ஹ க்ஷ என இரண்டு அக் காங்களிருக்கும். இதில் விளங்கும் அதி தேவதை சதாசிவர்.

இவ்வாறுதாரங்களையும் ஆதனமாகக்கொண்டு அவற்றிற்கு மேலா கிய பிரமரந்திரத்தில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மலரின் மேல் பரமசிவன் எழுந்தருளியிருப்பர்.

அசபையாவது—நாதவடிவாயிருக்கின்ற குண்டலினி சத்தி சொரூபம்.

அட்டாங்க யோகமாவது—இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி -என எண் வகைப்படும். அவற்றுள்

இயமமாவது–கொல்லாமை, உண்மைகூறல், களவுசெய்யாமை, பிறர்பொருள் விரும்பாமை, இந்திரியங்களை விடயங்களிற் செல்ல வொட்டா தடக்குதல் என்பனவாம்.

நியமமாவது—தவம், சுத்தமுடைமை, தத்துவநூலாராய்தல், பெற்றதுகொண்டு மகிழ்தல், தெய்வம் வழிபடல் என்பனவாம்.

ஆதனமாவது--இருக்கும்முறைமையிற் பலவேறுவகைப்படும். அவற்றுள் சுகாதனம் ஒன்று. அதாவது எவ்வாறிருந்தால் அறு சந்தானஞ் செய்வதற்குச் சுகமாயிருக்குமோ அவ்வாறிருத்தல்.

பிராணயாமமாவது—பிராணவாயுவை யடக்கல். அது மந்திர செபத்துடன் அடக்கலும் மந்திர செபமின்றி அடக்கலுமென இரு வகைப்படும்.

பிரத்தியாகாரமாவது—மனத்தைப் புறத்துச் செல்ல வொட்டாது அடக்குதல்.

தாரணையாவது—மனத்தை அகத்து ஓர் தானத்தில் நிறுத்துதல்.

தியானமாவது—மூர்த்தியின் சொரூபத்தை மனத்தால் பாவித்துச் சிந்தித்தல்.

சமாதியாவது—மூர்த்தியாகிய தோற்றமும் சிந்தித்தலாகிய தொழிலும் சிந்திக்கின்ற தானும் ஆகிய பேதங்களின்றி மூர்த்தியுந் தானும் இரண்டறக்கலந்து நிற்றல்.

இவ்வெட்டும் தோழநெறி யென்ற யோகத்துள் அடங்கும். எவ்வாறெனின், வாயுவை யடக்கல் பிராணயாமம். புலனெறிக்குதலாகிய மனமடக்கம் பிரத்தியாகாரம். சுழுமுனை மார்க்கத்திற் செலுத்துதல் தாரணை. ஆதாரங்களையும் அதிதெய்வங்களையும் அறிதல் தியானம். பிரமரந்திரத்தில் பூரணப்பிரகாசத்தைத்தியானித்தல் சமாதியாம். இயமம், நியமம், ஆதன மூன்றும் உடையார்க்கே இவ்வது சந்தானங்கூடுமாதலால் அவற்றைக்கூறாராயினர். " (உக)

சன்மார்க்கமாகிய ஞானத்தி னிலக்கணமும் அதன் பயனும் இவை எனக்கூறுகின்றது.

சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
நேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.

(கொ-டு) கீழாக என்பதனோடு கழித்து என்னும்சொல்வருவித்து உரைக்க.

(பொ-ரை) சனமார்க்கமாகிய ஞான நெறியாவது யாதெனில், எல்லாக் கலைஞானங்களும, புராணங்களும் வேத சிவாகமங்களிலுள்ள கரும காண்டங்களும், எனைச்சமய சாத்திரங்களும் ஆராய்ந்து அவற்றின் பொருள்கள் யாவும் கீழெனக்கண்டு கழித்து மேலாய பதிபசுபாசங்களின் தடத்த இலக்கணங்களை யும் அவற்றுள் பசுபாசங் நீங்கிய பதியின் சொரூப இலக்கணத்தையும் உணர்த்துவதாகிய ஞான சாத்திரங்களை தாளை ஓதியும் ஆசிரியனிடத்துக்கேட்டும் கேட்டவாறு சிந்தித்தும் சிந்தித்தலில் காணப்படும் காண்பான் காட்சி காணப் படும் பொருளாகிய சவி கற்ப ஞானத்தையும் கடந்து அம்மூன்றுமின்றி அத் துவிதமாய் இயைந்த அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் மாட்டு நிருவிகற்ப ஞானத்தாற் செய்யும் வழிபாடாகும். இவ்விடத்து வழி பாடென்பது திரிபுடியின்றி நிருவிகற்ப ஞானமாய் நிற்றலேயாம். இவ்வழி பாடு புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழில் மாத்திரை யானே சிவபெருமானுடைய உருவம் அருவம் அருவுருவம் என்னும் மூன்று திருமேனிக்குமேலாகிய சொரூபத்திருமேனியினிடத்து நிகழ்வதாம். இதனை அனுட்டித்தோர் சிவசாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெறுவர். (எ—று)

சன்மார்க்கமென்பது சத்தியமாகிய நெறி எனப்படும். அப் பேர்க்குக் காரணம் யாதெனின், சரியை முதலிய அநுட்டானங்க ளும் அவற்றின் பயனாகிய சாலோகமாதி பத முத்திகளும் அநித்த மாகையால் அசத்தியம். அநித்தமென்பது மேலானதில்லை என் பதைக் குறிக்கும். ஞானமும் அதனாற் பெறும் சிவசாயுச்சியமும் மேலானதாலும் அதற்குமேலில்லாமையாலும் சத்தியம். ஆதலால் இந்த ஞான நெறிக்குச் சத்திய நெறி எனப்பெயராயிற்று.

சத்திபதநெறியாகிய சன்மார்க்கத்தைச் சுருக்கமாகக் கூறுமிடத்து எல்லாச் சாத்திரப்பொருள்களையும் உணர்ந்து அப்பொருள்களெல்லாம் கீழெனக்கழித்து ஞானசாத்திரப்பொருளை நாடி சிவபிரான் திருவடியில் இரண்டறக்கலத்தல் என முடித்துக்கொள்ளலாம். (22)

ஞானத்தால் வழிபடுதலாகிய ஞானயாகமே முத்திபைத்தருமெனவும் கன்ம முதலிய நான்கு யாகங்களும் போகத்தைத் தருமெனவுங் கூறுகின்றது.

ஞானநூ றனேயாத லோது வித்த
னற்பொருளைக் கேட்பித்த றன்கேட்ட னன்றி
வீணமிலாப் பொருளதனைச் சிந்தித்த லந்து
மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை
யூனமிலாக் கன்மங்க டபஞ்செபங்க டியான
மொன்றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போக
மானவையான் மேலான ஞானத்தா லானே
யருச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம்.

(கொ-டு) ஊனம் இலா கன்மங்கள் தபம் செபங்கள் தியானம் இவை ஒன்றுக்கு ஒன்று உயரும் போகம் ஊட்டுவது ஆனவையான் ஞானநூல் தனையோதல் ஓதுவித்தல் நற்பொருளைக்கேட்பித்தல் நன்றுத்தான் கேட்டல் ஈனம்இலாப் பொருளதனை சிந்தித்தல் ஐந்தும் எழில் ஞான பூசை இறைவன் அடி அடைவிக்கும் வீடு எய்த அறிந்தோர் எல்லாம்மேலானஞானத்தால் அனை அர்ச்சிப்பர்.

(பொ-ரை) இறைவனை வழிபடுகின்ற முறை சிவ தருமோத்தரத்திற் கூறியவாறு கன்மயாகம், தவயாகம், செபயாகம், தியானயாகம், ஞான யாகமென ஐவகைப்படும். யாகமென்பது வழிபாடாம். அவற்றுள் குறைவில்லாத கன்மயாகமாவது—விடிய ஐந்து நாழிகைமுன் எழுந்திருந்து செய்யும் சிவசிந்தனை முதலாக சிவபூஜை, அக்கினி காரியம் ஈறாகிய செயல்களாம். தவயாகமாவது—சாந்திராயண விரத முதலியவற்றால் சரீரத்தை மெலிவித்தல். செபயாகமாவது—மந்திரங்களை வாசகம், ரகசியம், மானதம் என்னும் முறையில் தத்தம் தகுதிக்கேற்றவாறு செபித்தலாம். தியானயாகமாவது—இருதய முதலியதானங்களில் சதாசிவன் முதலிய மூர்த்திகளின் திருமேனிகளைப்பாவித்துத் தியானிப்பது. இந்த நான்கு யாகங்களும் ஒன்றுக்கொன்றுயரும். உயர்தலாவது--பிரபஞ்சப்பற்று நீக்கீத்தைக் குறிப்பதாம். ஆயினும் பற்று நீக்கம் அறிவு உண்டாகாமையால் அவ்வழிபாடுகள் போகத்தையே கொடுக்கும். போக

மென்பது சாலோகாதிபத முத்தியாம். இனி ஞானயாகமாவது—ஞான சாத்திரத்தை முன்னெவின் மலமற ஆசிரியனின்றிப் படித்தலும் தான்படித்த படி பக்குவமுடைய பிறர்க்குப் படிப்பித்தலும் அச்சாத்திரப்பொருள்களை நட்பமாயாராய்ந்து பிறர்க்குச் சொல்லுதலும் இவ்வாறு சொல்லினும் இது ஆராய்ச்சியறிவேயன்றி அனுபவ அறிவாகாமையால் அவ்வனுபவ அறிவு விளங்கும்பொருட்டு ஞானசிரியனிடத்து அச்சாத்திரப்பொருளை உபதேசமுறையிற் கேட்டலும் கேட்டவாறே தனித்திருந்து சிந்தித்தலுமென இவ்வகைப்படும். இத்த ஞானயாகமே முத்தியைத்தரும். முத்தியடைய விரும்புவோர் யாவரும் மேம்பட்ட இவ்வகை யான இந்த ஞான யாகத்திலேலேயே சிவபிரானை வழிபடக் கடவர். (எ...று)

ஞானசிரியனிடத்தைக்கேட்டு முன்னர் பிறர்க்குச் சொல்லுதல் கூறியிருத்தலினால் சாத்திரப் பொருளைத் தன்னுடைய நுண்ணறிவாலறிந்து சொல்லுதல் கூடுமெனவும் அனுபவ முண்டாதற் குரிய அனுசந்தானத்தை ஆசிரியனிடத்து உபதேச முறையால் கேளாதவர் சொல்லாரெனவும் அறிக. உபதேசம் கேட்டு அனுபவம் வந்த பின்னர் பிறர்க்கு உபதேச நெறியைச் சொல்லுங்கால் அச்செயல் சிந்தனையுள் அடங்குமாதலின், அதனைவேறு கூறாயினர். சிந்திக்கலென்று கூறியதனாலேயே அனுபவம் வந்த பின்னர் பிறர்க்கு உபதேசிக்கலா மென்பது பெறப்படும்.

சாந்திராயணமாவது:—அமாவாசை முதல் பவுர்ணமி வரை உண்ணும் அன்னத்தை பதினைந்து பங்காக்கி காளொன்றுக்கு ஒவ்வொரு பங்காகக் குறைத்துண்ணலும் பவுர்ணமி முதல் அமாவாசை வரை அவ்வாறே கூட்டி உண்ணலுமாம்.

வாசகமாவது:—பிறர்க்குக் கேட்கும்படி செபித்தல்.
ரகசியமாவது:—தன் செவிக்குக் கேட்கும்படி செபித்தல்.
மானதமாவது:—அக்கரங்களை மனத்தால் பாவித்தல். முன்னை இரு செபங்களிலும் எண்ணிக்கை கூடும். மானதத்தில் எண்ணிக்கை கூடாது. (உக)

உண்மை ஞானம் நான்கு வகைப்படுமெனவும் ஞானத்திற்கு வராமல் ஓதல் முதலியவற்றில் நின்று சரீரம் நீங்கினவர் கதி இதுவெனவும் கூறுகின்றது.

கேட்டலுடன் சிந்திக்க றெளித னிட்டிட
இன்றந்தமில்ல யிரண்டாங் கிளக்கின் ஞானம்

வீட்டையடைந் திடுவர்நிட்டை மேவி னோர்கண்
மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்
கீட்டியபுண் ணியபோ காகி யின்ப
மினிதுநுகர்ந் தானருளா லிந்தப் பார்மே
னீட்டியநற் குலத்தினில்லஞ் தவதரித்துக் குருவான்
ஞானநிட்டை யடைந்தவர் நாதன் றாளே.

(கொ-டு) கிளக்கில் ஞானம் கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல்என ஈரிரண்டேயாம் நிட்டை மேவினோர்கள் வீட்டை அடைந்திடுவர் எனவும் நாதன்தாள் அடைவர் எனவும்கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறிய ஞான யாகம் ஐந்தனுள் ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல்லாகிய முன்னைய மூன்றும் ஆசிரியனை இன்றியும் நிகழ்வனவாக லின் ஆசிரியனால் அறிவுறுத்தும்கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என் னும் நான்குமே உண்மை ஞானமெனப்படும். இந்நான்கினும் முதை யேபழகி நிட்டை பொருந்தினவர் வீட்டினை அடைவர். இந்நான்கினுள்வராது தீக்கை யில் அத்துவ சுத்தி பண்ணப்பட்டு ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தலாகிய மூன் றினும் நின்று சரீரம் நீங்கினவர் சிவலோகாதிபத முத்திகளைப் பெற்று ஆண்டு, ள்ள இன்பத்தினை நன்கு அனுபவித்து முதல்வன் ஆணையால் அங்கு நின்று நீங்கி இவ்வுலகத்தின் கண் உயர்ந்த குலத்தில் பிறந்து ஞானு சிரியனை அடை ந்து கேட்டல் முதலிய ஞானநெறியால் நிட்டையினைக் கூடி வீட்டினை அடை வர். இவ்வுலகத்திற்கு வராமல் சிவலோகத்தில் சிவபிரானே குருவாய் உபதே சிக்கக கேட்டல் முதலிய ஞானத்தைப் பெற்று நிட்டையினால் வீட்டை யடை யினு மடைவர். ஆதலின் இங்கு வருவ தென்பது நியதமன்று. (ஏ...று) (உசு)

தானம் முதலியன பசு புண்ணிய மெனவும் சரியை முதலிய மூன்றும் பதி புண்ணிய மெனவும் இம்மூன்றும் ஞானத்தைப் பயப்பித் து முத்தியைத் தருமெனவும் கூறுகின்றது.

தானமியா கந்தீர்த்த மாச்சிரமந் தவங்கள்
சாந்திவிர தங்கன்ம யோகங்கள் சரித்தோ
ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வ
ரீசனியோ கக்கிரியா சரியையினி னின்றே
ஞானமிலா முத்திபதம் பெற்றுலக மெல்லா
மொடுங்கும்போ தான்முனிலா தொழியினுற்ப வித்து
ஞானநெறி யடைந்தடைவர் சிவனே யங்கு
நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றூளே.

(கொ-டு) ஈசன் சரியை கிரியாயோகினின் நின்றோர் எனவும் ஞான நெறி அடைந்தே சிவனெயடைவர் எனவும் அங்ஙு நாதன் முன்னிற்கின் நற்ரு ளோநணுகுவர் எனவும் கூட்டுக.

(பொ-ரை) வேதோக்தமான தரும நெறிகள் பல இருப்பினும் ஞான நெறியைச் சிறந்தெடுத்துக் கூறிய தென்னை யெனின், தானம் கொடுத்தல், யாகஞ் செய்தல், புண்ணிய தீர்த்தங்களாடல், பிரமசரிய முதலிய தத்தம் நிலை களிற் றவறுது நிற்றல், உண்டி சுருக்குதல்முதலிய தபசுகள் செய்தல், பிரா யச்சித்தங்கள் பண்ணல், விரதங் காத்தல், பிராணவாயுவை ரேசகாதி தொழில்க ளால் அடக்குதலாகிய கரும யோகஞ்செய்தல் ஆகிய இவைகள் பசு புண்ணி யம். இவற்றை அனுட்டித்தோர் துன்பமின்றி இன்பமே மிகுந்திருக்கும் சுவர்க்க உலகத்தினைப் பொருந்தி அங்குள்ள போகங்களை அனுபவித்து வினை ந்து மீளுவர். இவ்வாறு மேன்மேல போயும் மீளுதற் கேதுவாகிய அப் பசு புண் ணியம் போலல்லாத சரியை, கிரியை, யோகங்களாகிய சிவ புண்ணியங்களை விதி வழி அனுட்டித்தோர் உண்மை ஞானத்தைப் பொருந்தாது ஓதல் முதலிய மூன்றினின்று தப்பினவரோடு ஒப்ப சாலோகாதிபத முத்திகளில் நெடுங்காலம் தங்கி உலக முழுதும் சங்காரப்படும் பொழுது போகத்தில் வைராக்கியம் பிற வாநிருப்பின் முதல்வன் குருமூர்த்தியாய்த் தோன்றி அனுக்கிரகம் செய்யமாட் டான், அதனல் மீட்டும் சனனத்தை அடைந்து குரு அருளால் ஞான நெறியைத் தலைப்பட்டு வீடடைவர். சாலோகாதிபத முத்தியில் இருந்தவாறே போகத்தில் வைராக்கியம் பிறக்குமாயின் அவ்விடத்திலேயே முதல்வன் குருமூர்த்தியாய்த் தோன்றி அருள்செய்வன். அவ்வாறு அருள் செய்யப் பெறின் சனனத்தை டாமலே முத்தியிற் கலப்பர். ஆதலால் தான முதலியன போலன்றி எவ் வாற்ரூனும் சரியை யாதிகள் சாலோகாதிபத முத்திகளைத் தந்து முடிவான முத்தியையும் தரும். (எ...று) (உரை)

தானமும் சாமானியருக்குக் கொடாமல் சிவ ஞானிகளுக்குக் கொடுக்கில் முத்திக் கேதுவா மெனக் கூறுகின்றது.

சிவஞானச் செயலுடையோர் கையிற் ரூனங்
தினமளவே செம்நிதியு நிலமலிபோற் றிகழ்ந்து
பவமாயக் கடலினழுந் தாதவகை யெடுத்துப்
பரமபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரிபைகிரி யாதியோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாகுந் தத்துவநா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே.

(கொ-டு) சிவஞானச்செயல் உடையோர்கையின் தானம் நிலம் அளவே செய்திடினும் நிலம் மலைபோல் நிகழ்ந்து பரபோகம் நுய்ப்பித்து தவம் ஆரும் பிறப்பு ஒன்றின் சாரப்பண்ணி சரியை கிரியாயோகம் தன்னினும் சாராமே பவ மாயக்கடலின் அழுந்தாதவகை எடுத்து பாசத்தை அறுக்க நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கியே நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும்தான்.

தன்னினும் என்றதில் உள்ள உம்மை சரியை கிரியாயோகங்கள் சார்தற்கு உரிமை உடையன வென்னுஞ் சிறப்பை உணர்த்தி நின்றது.

(பொ-ரை) சரியை யாதிகளை அனுட்டிக்கும் விதிவழியின்றி சிறுத்தொண்டர் முதலாயினர் போன்று பத்தி வழியில் நின்று சிவ ஞானச் செயலுடைய ஞானிகள் கையில் தானமாய்க் கொடுத்த பொருள் சிறிதேயாயினும் அத்தானம் பூமியைப் போலும் மலையைப் போலும் விரிவாகி ஓங்குதலால் பதி புண்ணிய மெனப்படும். அத் தானத்தைச் செய்த பத்தர் மேற்கூறியவாறு பசு புண்ணியத்திற் குரிய சுவர்க்க லோகங்களை யடையாது பதி புண்ணியத்திற் குரிய சிவ சாலோகாதி பதங்களைப் பொருந்தி ஆண்டுளவாகிய இன்பங்களை அனுபவித்து பின்னர் இவ்வுலகத்தில் தவஞ் செய்தற்குரிய உயர்ந்த குலத்தில் ஒருபிறவியை யடைந்து சரியை கிரியை யோகங்களை வேனையோர்க்குப் போல கால நீட்டிப்பும் அருமையுமின்றிச் செய்து சனன மரணமாகிய கடலின் கண் அமிழ்ந்தாத வண்ணம் பாசத்தினை நீக்குதற்குரிய உண்மை ஞான நெறியினைப்பொருந்தி முதல் வனது திருவடியாகிய வீட்டினை அடைவர். (எ—று) (உசு)

வீடு பேற்றிற்குச் சிறந்த சாதனம் ஞானமே யன்றிப் பிறிதில்லை எனக் கூறுகின்றது.

ஞானத்தால் வ்டென்ம்ற நான்மறைகள புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னு
மூனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தா
னனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞாநம் விடப்பந்த மறுமுத்தி யாகு
மீனத்தார் ஞானங்க ளல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பர்.

(கொ-டு) ஞானத்தாலே வீடுஎன்று எனவும் அஞ்ஞானத்தால் பந்தம்உறுவதுதான் எனவும்அது அலர்கதிர்முன் இருள்போல் உயர் மெய்ஞ்ஞானந்தான் ஆனத்தால் போவது எனவும் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாற்றால் ஞானம் அல்லாத பிறவெல்லாம் ஞானத்தை உண்டுபண்ணுதற்குச் சாதனம் என்றும் ஞானம் ஒன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த சாதனமென்றும் வேதாகம முதலிய பிரமாண நூல்களெல்லாம் தணிந்து கூறவும் அவற்றொடு பிணங்கி வீடுபேற்றிற்கு தீக்கையே அமையும், வேள்வியே அமையும், பத்திநெறியே அமையும் என்று பிதற்றுவாரை எவ்வாற்றானும் அறிவுறுத்தித் திருப்ப முடியாது. ஞானமல்லாதனவெல்லாம் அஞ்ஞானமாதலின் அவர்க்கு அவ்வஞ்ஞானப் பகுதிகளால் பந்தமுறுதலே யன்றி வீடு பேறடைதல் கூடாது. அவ்வஞ்ஞானங்களெல்லாம் விரிந்த ஒளிமுன் இருள் போல ஞானத்தால் கெட்டொழியும். ஒழியவே அவ்வஞ்ஞானத்தாலாகிய பந்தம் நீங்கும். அப்பந்தம் நீங்கவே முத்திநிலை கூடும். ஆதலின் ஞானமே முத்திக்குச் சிறந்த சாதனம். இந்த ஞானமும் பசு ஞானம், பாசஞானம், பதிஞானமென முத்திறப்படும் அவற்றுள் ஏனைச்சமயிகள் கூறும் ஞானங்களெல்லாம் பசு ஞானம் பாசஞானங்களேயாம். இவ்விரண்டு ஞானங்களின் வேறாகிய முதல்வன்றிருவடியை அடையச்செய்தலாகிய பதிஞானமே மேற்கூறிய உண்மை ஞானமாம். இவ்வாறு வேதாகமங்களை உணர்ந்தோர் கூறுவர். (எ...று)

தீக்கை முதலியன அஞ்ஞான மெனக் கூறியதனால் அவற்றை அநுட்டிக்க வேண்டாமென்பது கருத்தன்று. ஞானம் வருவதற்காக அவையாவும் அனுட்டிக்கற் பாலனவேயாம். இன்றேல் "அழிவிலாக் கிரியையினு ஞதல்சத்தி மத்தானுதல் அத்துவா சுத்தி பண்ணி மலமகற்றி, யொழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞான முதிப்பித்தற்பவந் துண்டப்பனான்" என மேற்கூறிய ஆறுவது செய்யுளோடு முரணுமாறறிக. அவ்வாறுயின் .இவ்விடத்து அவற்றை அஞ்ஞானமெனக் கூறுவானேனெனின், அவை ஞானமேயெனப் பிணங்குவார்க்கு ஞானமல்லவென்ப துணர்த்துதற் பொருட்டு அஞ்ஞானச்சொல் உபயோகிக்கப்பட்ட தென்க. (உ-ள)

கேட்டலாகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக்கூறுகின்றது.

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோ
லாரியனு மாசான்வந் தருளாற் றோன்ற
வுடனூன .மான்மாவிற் றோன்றுந் தோன்றத்

தூரியனுஞ் சிவன்மேலன்றுங் தானுந் தோன்றுந்
தொல்லுலக மெல்லாந்தன் னுள்ளே தோன்று.
நேரியனுப்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு
நின்றநிலை யெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும்.

(கொ-டு) செய்யசுடர்தோன்றி இடசூரியகாந்தக்கல்லின் இடத்தேசோதி (நிகழ்ந்து) தோன்றுமாபோல் அருளான் ஆரியனும் ஆசான்வந்துதோன்ற ஆன்மாவின் அடிஞானம் (நிகழ்ந்து) தோன்றும் தோன்றத் தூரியனும் சிவன் (முன்னிகழ்ந்து) தோன்றும் (தன்னுள்ளே) தானும் (முன்னிகழ்ந்து) தோன்றும் தன்னுள்ளே தொல் உலக மெல்லாம் (முன்னிகழ்ந்து) தோன்றும் நேரியனுய் உயிர்க்கு உயிராய் (நின்றநிலை) பரியனுமாய் எங்கும் நின்றநிலை எல்லாம் முன்னிகழ்ந்து தோன்றும்.

(பொ-ரை) மேற்கூறியவாறு ஞானம் கேட்டல் முதலியனவாக நால்வகைப்படுமாகலின் அவற்றுள் கேட்டலும் அதன்கண் நிகழும் உபவமும் வருமாறு.—சூரிய சந்நிதி மாத்திரையானே சூரியகாந்தக் கல்லினிடத்து நெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல ஞானசாத்திரப்பொருளை உபதேசமுறையால் சொல்லுந்தகுதியுடனே வந்து தோன்றும் ஞானசிரியன் சந்நிதி மாத்திரையானே மாணாக்கனுக்கு கேட்டல் அறிவு விளங்கித்தோன்றும். தோன்றவே மூதல்வனுகிய பதியும் அப்பதியினுள்ளே பசுவும் அப்பசுவினுள்ளே பிரபஞ்சவடிவாயுள்ள பாசமும் பதி உயிர்க்குயிராய்ச் சிறிதாயும் எவற்றினும் வியாபகமாய்ப்பெரிதாயும் நின்ற நிலையும் நிருவிகற்பமாய்த் தோன்றும். (எ...று)

ஆசிரியன் நூற்பொருள் உரைக்கும் வழியால் அவ்வாசிரியனுடைய ஞானமே மாணாக்கனிடத்துச் சென்று தோன்றுவதே சந்நிதிமாத்திரையால் தோன்றும் ஞானமென்பர். அதுபொருந்தாது. எவ்வாறெனின், சடமாகிய கண்டப்பொருள் ஒன்றுடன் ஒன்று கூடும். சித்துப்பொருள் அவ்வாறு கூடாது. எதனாலெனின், சித்துப் பொருளாகிய உயிர் வியாபகப் பொருளாதலின் தானில்லாத இடமில்லையாதலால் கூடுமாறில்லை. சுவர்க்க முதலிய இடங்களில் போக்குவரத்தும் பலசரீரங்களைப் பற்றுதலும் உயிர்க்குண்டெனல் றுகூறும் கருத்தென்னையோவெனின், உயிர் வியாபகமாயினும் ஒன்றனைப்பற்றுங்கால் பிறிதொன்றனைப் பற்றாது. அதாவது மண்ணுலகத்தைப் பற்றுங்கால் சுவர்க்க நரகங்களைப் பற்றாது. மண்ணுலகத்தும் ஓர் உடம்பைப்பற்றுங்கால் பிறிதோருடம்பைப் பற்றாது. ஓர்

ம்பைப் பற்றி நிற்கும் காலத்தும் ஒரு இந்திரியத்தைப் பற்றுங்கால் பிறிதொரு இந்திரியத்தைப் பற்றாது. ஆதலி னுற்றான்உயிர் எங்கேதக விபாபக மெனப்பட்டது. போக்கு வரத்துக்களாகிய இறப்பு, பிறப்பு என்பன ஒன்றைவிடுதலும் பிறிதான்றைப் பற்றுதலுமாகிய அவ்வளவேயாம். இத்தகைய உயிர் பிறிதொருயிரைக்கூடாது. கூடவேண்டுவது மின்று. இனி இறைவனுகிய சித்துப்பொருளோ டெக்காலத்தும் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும். இருப்பி னும் இறைவனைக் கூடுதலென்றது, பிறவற்றின் பற்றறவிட்டுக் கலந்திருத்தலே அறிதலேயாம். ஆதலால் சித்துப்பொருளுக்குக் கூடுதல் இல்லையென்பது சிவாகம நூற்றுணிபு. மலமாயா கன்மங்கள் விபாபகமாயினும் ஆணவமலம் ஆன்ம அறிவைப் பற்றியும் மாயை கன்மங்கள் இறைவனுள் அடங்கியும் நிற்பனவாகலின் அவையும் ஒன்றுடன் கூடுவதேயாம். ஆதலின் சடப்பொருளுக்குக் கூடுதல் உண்டென்பதும் எவ்விடத்தும் பொருந்தும்.

இனி சந்தி மாத்திரை யென்பதற்குப் பொருள்தான் என்னை யெனின், ஆசிரியன் கிருபையினால் மாணாக்கனுடைய அறிவு விளங்கித் தோன்றுதலாம். (உஅ)

சிந்தித்தலாகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது.

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாத
மேவுதலா ஞானம்விளைந் தோர்குருவி னருளாற்
புக்கநுட்டித் தேதெளிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
றபநியத்திற் சமபுத்தி பண்ணிச்சங் காமே
டொக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே
யுடந்தையாய்ச் சிவன்றேறற்ற மொன்றுமே காண்பர்.

(கொ-ரு) பூதலத்தின் தக்கபிரியாப்பிரியம் இன்றி ஒட்டில் தபநியத்தில் சமபுத்திபண்ணி புகழ்சீவன் முத்தராகி அவன் இவரை இவர் அவனைவிடாத்த உடந்தையாய்ச்சங்காமேலுடனொக்க உறைந்துசிவன் தேறற்றம் ஒன்றுமே காண்பர்.

(பொ-ரை) நிலிரதாசத்தினி பாதம் பொருந்திய மாணாக்கருக்கு முற்கூறிய கேட்டலறிவு மந்தமாதலின்றி முதிர்ந்து முறுகி விளையும். அப்பொழுது தம் ஆசிரியராலாவது தம்மோடொத்த ஒருசாலை மாணாக்கருள் மூத்தாரொருவராலாவது தான் கேட்ட பொருளைச் சிந்திக்குமாறு அதன் முறைமையைச்சொல்லக்கேட்டு அப்பொருளின்கண் மனம் ஒருப்பட்டு நிட்டை கூடுதற்கண் ஆசை உடையராகப் பெறுவர். அவ்வாறு பெற்றால் இவ்வுலகின்கண் விருப்பு வெறுப்பின்றி சிந்தித்தற்றொழில் ஒன்றையே மேற்கொண்டு ஒடும் செம்பொன்னும் ஒக்க நோக்குவதாய் மற்றொன்றிலும் பற்றின்றி புகழத்தக்க சிவன் முத்தரோடு ஒத்து போறிவாகிய சிவமும் சிற்றறிவாகிய தாமும் ஆதித்தனொளியும் கண்ணொளியும் போல் அத்துவிதமாய்க் கலந்து நிற்பர். அவ்வாறு நிற்றலால் அந்நிலையில் தாமொருபொருள் உண்டென்றறியப்படாது சிவத்தோற்ற மொன்றுமே காணப்பெறுவர். காணப்பெறுதலாகிய அது சவிகற்பமென்றுவது நிருவிகற்ப மென்றுவது சொல்ல முடியாத இடை நிலையாயிருக்கும்(எ...று)()

தெளிதலாகிய ஞானத்தின் நெறியும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது.

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினு னறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயிற்
பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெல்லாந் தானுப்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வாகி
நின்றென்றுந் தோன்றிடுவ னிராதார னுயே.

(கொ-டு) அருளினுல் அறியாமை அறிவு அகற்றி அறிவினுள்ளே அறிவுதனை அறியாதேஅறிந்து குறியாதே குறித்து குழைந்து அந்தக்கரணங்களோடும் கூடாதே வாடாதே இருப்பையாயின் பிறியாத சிவன்றானே பிரிந்துதோன்றி பிரபஞ்ச பேத மெல்லாம் தானுப்த்தோன்றி இவையெல்லாம் அல்லவாகி நெறியாலே என்றும் நின்றே நிராதாரனுப்த் தோன்றிடுவன்.

(பொ-ரை) மேற்கூறியவாறு ஞானசிரியன் திருவருளால் முதல்வனை அறியாமையும் உலகத்தை அறிதலுமாகிய இருவகைப் பாசங்களும் நீங்கி முதல்வனை அறியும் முறைமையைக் கேட்குமுறையிற் கேட்டு சிந்திக்குமுறையிற் சிந்தித்து அதன் பின்பு சிந்திக்கப்பட்ட பொருளிடத்து அன்பு வைத்து அந்தக்

காணங்களிற் சேராது அடங்கிநிற்கப் பெறுவாரானுல் அப்பொழுது தம்மோடு பிரிதலில்லாத முதல்வனியல்பு முன்னர் கேட்டபொழுது பொருட்டன்மை பற்றி வேறுய்த்தோன்றி பின்னர் சிந்தித்தபொழுது சலப்புப்பற்றி ஒன்றுய்த் தோன்றினும் தெளிந்த இப்பொழுது அவ்விரு தன்மையுமின்றி உடனுய் நிற்றல் பற்றி ஒன்றினும் பற்றிலனுய் எக்காலத்தும் எப்பொருளிடத்தும் நிறைந்து தோன்றும். (எ...று) (கூ0)

நிட்டையாகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும்அனு பமும் இவையெனக் கூறுகின்றது.

புண்ணியமே லேக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னுலே
நண்ணியஞா னத்தினு லிரண்டினையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணு ஞகி
வெண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்ரு
னெங்கெழிலென் ஞாயிறமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதற னிறைவதனிற் கலந்து காயங்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன்.

(கொ-டு) கீழ் நூக்கும் பாவம் மேல் நோக்குவிக்கும் புண்ணியம் இரண் டினையும் புண்ணியனை பூசித்த புண்ணியத்தினுலே நண்ணிய ஞானத்தினுல் அறுத்து ஞாலமொடு கீழ்மேலும் நண்ணுஞகி இவன்ரு ன் கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து ஞாயிறு எங்கு எழில் என் எமக்கென்று குறைவுஇன்றி எண்ணும் இகலோகத்தே முத்தி பெறும் காயம் கழிந்தக்கால் எங்குமாய் கருது அரன் போல் நிற்பன்.

(பொ-ரை) வியாபகமாகிய உயிர் அவ்வியாபகத் தன்மையை இழந்து ஏகதேசப்பட்டு நாகத்திற்குக் காரணமாகிய பாவத்தையும் சுவர்க்கத்திற்குக் கார ணமாகிய புண்ணியத்தையும் பொருந்தும். புண்ணியபாவமாகிய அவ்விரண்டும் ஏகதேசத்தன்மையில் கட்டுப்படுத்தும் தளையே யாதலின் அவ்விரண்டனையும் சிவபிரானே அர்ச்சித்தலாகிய ஒதல் முதல் சிந்தித்தலீருகிய ஞானபூஜையின் பயனுய் நிகழ்ந்த தெளிதல் என்னும் ஆரத்தால் அறுத்து அவ்வாறு அறுத்தலி னல் பாவபுண்ணிய மின்மையின் பூமி, நாக, சுவர்க்கங்களில் போக்குவரவாகிய ஏகதேசப்படுதல் இல்லையாய் ஒழிந்து அஃதொழியவே காணங்களின் வயத்த ராகாமல் இறைவனது வியாபகத்திற் கலந்து சூரியன் எவ்விடத்து உதயமாயி னும் அதனல் தம்க்காவதோர் பயனில்லை என்று அறிந்தவராய் எவ்வாற்ரு னும் குறைவின்மையை அடைந்து இப்பொழுதே சிவன் முத்தராகி உடம்பு நீங்கப்

பெறுங்கால் பெருங்காய மிருந்தெடுத்த கலத்தில் அவ்வாசினே தங்கியிருப்பது போல் சீவன் முத்தாயிருந்தகாலத்தும் இடையிடையே வந்து தாக்கிக்கொண் டிருந்த வாசனைமலம் நீங்கி அழுக்கு நீங்கிய விடச்து ஆடையினது வெண்மை ஆடை முழுதும் விளங்கினாற் போல பரமுத்தி நிலையில் தமது வியாபகம் முழு வதும் அறிவு விளங்கப் பெற்று முதல்வனேடு ஒத்து நிற்பர். (எ—று) (உக)

ஞான நிட்டையுடையோர் எக்தொழிலேச் செய்யினும் இறை வன் நிருவடியைவிட்டுப் பிரியாரெனக் கூறுகின்றது.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோ ருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதான் றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமல மில்லை
கோலமிலை புலனில்லை கரண மில்லை
குணமில்லை குறியில்லை குலமு மில்லை
பாலருட வுன்மத்தர் பிசாசர்குண மருவிப்
பாடலிறை யாடலினை பயின்றிடினும் பயில்வர்.

(பொ-ரை) மேற்கூறிய ஞானநிட்டையினே உடைய சீவன் முத்தருக்கு இவ்வுலகத்தின்கண் நல்வினே தீவினேகளாகிய இருவினேகளும் இல்லே. வினே களேச் செய்தாராயினும் ஒரு பலனே நாடுவதுமில்லே. பலனேக் கருதாது வினே களேச் செய்யுங்காலத்தும் சமயாசாரங்கள், தவம், விரதம், ஆச்சிரம தருமம், தியான பாவனேகள், சித்தசஞ்சலம், தானிற்கும் சமயத்திற்கேற்ற வேடம் விடயங்களே விடுதல் பற்றுதல், அந்தக்காணங்களே அடக்கல், சத்துவகுணத் தில் மேம்பட்டிருக்கவேண்டுமென்ற நியமம், ஒரு குறியின்கண்ணே மனத்தை நிறுத்துதல், குலாசாரதருமத்தில் ஒழுகுதல் ஆகிய இவையாவுமில்லே. இவ் வாறொன்றுமின்றி பாலரைப்போல இவையெல்லாம் செய்யாதிருப்பினு மிருப் பர். ஒருக்கால் செய்யினும் பித்தர்போல நியதியின்றி நேர்ந்தவாறு செய்வர். அவ்வாறு செய்யுங்காலத்தும் பேய்பிடிக்கப்பட்டவன்போல் தேகத்தில் தானே ன்னும் போதம் அற்று சிவமே தானுக நின்று செய்வர். இதுவன்றி பரமானந்த மேலீட்டால் பாடலாடல்களேச் செய்திடினும் செய்வர் (எ...று)

பாலர் சில தொழிலச்செய்யினும் பயன் கருதாது செய்வர். ஆத லால் அவ்வுவமை மாயாமல நீக்கத்தையும் பித்தர் விருப்பு வெறுப் பின்றி ஒருதொழிலச் செய்வராதலால் அவ்வுவமை கன்மமல நீக்க த்தையும். பேய்பிடி உண்டவன் தன்னே மறந்து தொழிற்செய்வ னே தலால் அவ்வுவமை ஆணவமல நீக்கத்தையுங் குறித்தவாறறிக (உட)

இதுவுமது.

தேச்மிடங் காலந்திக் காசனங்க ளின்றிச்
செய்வதின்று போற்செய்யாச் செயலதனைச் செய்தல்
கூசல்படு மனமின்றி யுலாவ னிற்ற
லுறக்கமுணர் வுண்டிபட்ட டினியிருத்தல் கிடத்தன்
மாசதனிற் றாய்மையினின் வறுமை வாழ்வின்
வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி
னாசையினின் வெறுப்பினிவை யல்லாது மெல்லா
மடைந்தாலு ஞானிகடா மானடியை யகலார்.

(கொ-டு) ஞானிகள் தாம் தேசம் இடம் காலம் திக்கு ஆசனங்களின்றி ஒன்று செய்வதுபோல் செய்யாச் செயலதனைச் செய்து உலாவல் நிற்றல் உறக்கம் உணர்வு உண்டி பட்டினி இருத்தல் கிடத்தல் மாசதனின் தூய்மையினின் வறுமை வாழ்வின் வருத்தத்தின் திருத்தத்தின் மைதுனத்தின் சினத்தின் ஆசையினின் வெறுப்பின் இவையல்லாதும் எல்லாம் அடைந்தாலும் அங்கு ஊசல்படும் மனமின்றி அரன்அடியை அகலார்.

(பொ-ரை) இன்னும் அச்சிவஞானிகள் ஓர்தேயம், ஓர் இடம், ஓர் காலம், ஓர் திக்கு, ஓராசனம் முதலிய நியமமின்றி செய்தற்கெளிய உலக காரியங்களை உலகர் செய்வதுபோல் செய்தற்கரிய நிட்டை முதலியவற்றைச் செயது போக்கு வரத்துக்கள், உறங்குதல் விழித்தல்கள், உண்ணுதல் உண்ணாமைகள், இருத்தல் கிடத்தல்கள், களங்கம் பரிசுத்தங்கள், வறுமை செல்வங்கள், துன்ப இன்பங்கள், புணர்ச்சி கோபங்கள், விருப்பு வெறுப்புக்கள் ஆகிய இவையாவுமின்றி விகாரமுறுதற் கேதுவாக தம்முள் மாறுபட்ட பல தொழில்களைச் செய்தாயினும் அவைபற்றி சிறிதும் விகாரப்படுதலின்றி முதல்வன் திருவடியை விட்டு நீங்கார். அவ்வாறு விகாரமான தொழில்களைச் செய்தும் முதல்வன் திருவடியை நீங்காதிருத்தல் எதுபோலவெனின், வாயுவானது வாசனையுடனே கூடிய மிருதுவான தென்றலாகவும் இதற்கு மாறான சூறாவளியாகவும் சாரிக்கினும் ஆகாயத்தை விட்டு நீங்காததுபோலவாம். (எ-று)

இதனால் பிராரத்தகன்மம் ஞானோபதமாகையால் ஞானிகளுள் சிலர் கோபமுடையவராகியும், சிலர்சாந்தம் உடையவராகியும், சிலர் வைராக்கிய முடையவராகியும், சிலர் ஆசையுடையவராகியும், சிலர் போகானுபவ முடையவராகியு மிருப்பாராதலின் ஜீவன் முத்தருடைய இலக்கணம் இவ்வாறு தானென்று வரையறுத்துக் கூற முடியாதென்பதை யறிக. (கூ)

சிவஞானசித்தியார் சுபக்கம்.

ஞானநிட்டையில் நிலைபெறுதார் அந்நிட்டையில் நிலைத்தற்குச் செய்யும் உபாயம் இதுவெனக் கூறுகின்றது.

இந்நிலைதா னில்லையே லெல்லா மீச
னிடத்தினு மீசனெல்லா விடத்தினு நின்ற
வந்நிலையை யறிந்தந்தக் காரணங்க ளடக்கி
யறிவதொரு குறிகுருவி னருளினை லறிந்து
மன்னுசிவன் றனையடைந்து நின்றவன்ற னிலே
மருவுபசு காரணங்கள் சிவகாரண மாகத்
துன்னியசாக் கிராமதனிற் றுரியா தீதந்
தோன்றமுயல் சிவாநுபவஞ் சுவாநுபூ திகமாம்.

(கொ-டு) இந்நிலை தான் இல்லையேயல் ஈசன் எல்லா இடத்தினிலும் எல்லாம் ஈசனிடத்திலும் நின்ற அந்நிலையை அறிந்து அந்தக் காரணங்கள் அடக்கி குருவினருளினால் நின்று அறிவது ஒரு குறி அறிந்து அவன்றனிலே மன்னு சிவன்றனை அடைந்து மருவுபசு காரணங்கள் சிவகாரணமாக துன்னிய சாக்கிரம தனின் துரியாதீதம் தோன்றமுயல் சிவானுபவம் சுவானுபூதிகமாம்.

(பொ-ரை) மேற்கூறிய முறையானே அகம் புறம் என்னும் பேதமின்றி எவ்விடத்தும் ஏகநிலையாகக் கண்டு இறைவன் நிறைவில் அழுந்துவதாய நிட்டையினை மேவப்பெறுது பண்டைப்பழக்க வயத்தால் புறத்தே பிரபஞ்சம் காட்சிப்பட வருமாயின் அப்பிரபஞ்சத்தைக் காணும்பொழுதே இறைவன் அப்பிரபஞ்சத்திற்கு உள்ளும் புறமுமாய் நிற்கும் நிலைமையை உடையன் எனக் காண வேண்டும். அவ்வாறு காண்டல் கூடாதாயின் குருவருளால் அகத்தே திரும்பி ஓர் குறியின்கண் அறிவை நிறுத்தி இறைவனை அறிந்து அவ்வாறு அறிகின்ற முறையில் நிலைபெற்ற அந்த ஏகநிலையை அறிந்து அங்ஙனம் அறியுங்கால் அறியுங் காரணங்களெல்லாம் சிவகாரணமாகப் பேணி இவ்வாறு கருவிகளோடு தொழிற் பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்திற்றானே கருவி ஒன்றுமேலுங் கூடாத நின்மல துரியாதீத நிலை கைகூடும்படி முயல வேண்டும். முயன்றால் சிவானுபவத்தை சுவானுபவமாகக்கொண்டு அனுபவிக்கலாம் (எ...று)

ஞான நிட்டையில் முயலுபவரின் பெருமை இதுவெனக் கூறுகின்றது.

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பேர்வதுவெ னிம்மையிலே யுயிரின்
பற்றறுத்துப் பாத்தையடை பசாவுசிவ னன்றே

வாக்குஞ்டி கவித்தாசாண் டவர்களரி வையதோ
. டணுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்.
நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றூலு
நுழைவர்பிறப் பினின்னிகை ணுங்கி டாவே.

(கொ-கி) அவர்கள் ஆக்கு முடிகவித்து அரசு ஆண்டு எனவும் வினைகள் தங்கிடாவே பிறப்பினின் நுழைவர் எனவும் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறிய வாறு சாக்கிரத்தில் நின்று கொண்டே பசுகரணங்களெல்லாம் சிவகாணமாக காணங் கடந்த துரியாதீதத்தை பயில்கின்றவர்கள் கருவிகளினின்றும் நீங்கி நிட்டை பொருந்தினவரோ டொப்பச் சிறந்தவரோயாவர். இவர்கள் இந்நிலையை அடைவதற்கு முற்பிறவியிற்செய்த சிவபுண்ணியப் பேற்றை என்னென்று சொல்வது! இவ்வுலகத்தில் உயிர்ப் பற்று நீங்கி சிவத்தைப்பற்றி நிற்கையால் இவர்கள் சஞ்சரிக்கின்ற சிவமேயாவர். இத்தகையார் மூடியினை அணிந்து அரசு புரியினும் மகளிரோடு கூடி இன்புற்றிருந்திடினும் அகப்பற்று நீங்கினவரேயாவர். ஆதலின் உண்டு உடுத்து பூசிமுடித்து செய்யும் தொழில் ஒப்புமைபற்றி அவரை உலகத்தாரோடு வைத்தெண்ணக் கூடாது. இவ்வாறு அகப்பற்று நீங்காதோர் புறப்பற்று நீக்கமாகிய துறவு பூண்டாலும் வினைகள் கெடாது மேலும் வினையேறுதலால் பிறப்பினை அடைவர். (எ...று) (கூ)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

துன்னிய ஐம்புலவேடர் சூழலிற்பட்டு துணை வினையு மறியாத் துயர் உறும் தொல்லுயிர் என்பது.

சிவசரணமாய் நின்றவிடத்து சிவனைக் காண்க கூடுமன்றி காணங் கடந்தவிடத்து சிவனைக் காண்பனென்பது பொருந்தாதென்பாரை மறுத்துரைக்கின்றது.

கருவிகழிந் தாற்காணு சொன்றுமெனிற் காணுர்
காணுதார்கன் னிகைதான் காமமதங் காணுண்
மருவியிரு வரும்புணர வந்த விண்பம்
வாயினுற் பேசரிது மணந்தவர்தா முணாவு.

ருருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலர்காண் சிவனை
யுணராதா ருணர்வினு லுணர்வதுகற் பனைகா
ணருள்பெறினவ் விருவரையு மறிவிறந்தங் கறிவ
தறியாரேற் பிறப்புமிடா தாணவமு மறுதே.

(கொ-டு) மருவி இருவரும் புணரவந்த இன்பம் வாயினல் பேச அரிது மணந்தவர் தாம் உணர்வர் காமரதம் கன்னிகைதான் காணுள் அருள் பெறின் அவ்விருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர் காணுதார் காணர் அறியாரேல் உருவின் உயிர் வடிவதுவும் உணர்ந்திலர்காண் உணராதார் உணர்வினல் சிவனை உணர்வது கற்பனைகாண் கருவிகழிந்தால் ஒன்றுங்காணுரொனின் பிறப்பும் விடாது ஆணவமும் அறுதே.

(பொ-ரை) தலைமகனும் தலைமகளும் கூடி அனுபவித்த இன்பம் வாக்காற் சொல்லமுடியாதாயினும் அனுபவித்த அவர் அறிவர். அவ்வின்பத்தினை பக்குவமில்லாத கன்னிகை அறியாள். அதுபோல அதிதீவிரதரபக்குவர்கள் திருவருளைப் பெற்று விஷய அறிவு இறந்து தம்மையும் தலைவனையுமறிந்து மேற்கூறியவாறு இன்புறுவர். அபக்குவர் அவ்வின்பத்தினை அறியார். அவருக்கு உணர்த்தும் வழியுமில்லை. எதனலெனின், பல நிறங்களால் மயங்கித் தன் னெளியிழந்த படிகம்போல பிரபஞ்சக் காட்சியால் மயங்கி ஆன்ம சொரூபமாகிய தன்னை உணராததாலென்க. அவ்வாறு பிரபஞ்சக்காட்சி தன்னை உணரவொட்டாது தடைசெய்யுமென்பதை உணராதார் பிரபஞ்சத்தை அறியும் காரணங்களை சிவகாரணங்களாக மாற்றி சிவனை அறிவேமென்று கூறுவர். அக்கூற்று வெறும் பாவனையேயன்றி சிவனை காரணத்தால் அறிதல் கூடாது. காரணங்கள் யாவும் கடந்து அருளினுல் சிவனை அறியப்பெறுராயின் காரணங்களால் உண்டாகிய பிரபஞ்சக்காட்சி நீங்காது, அக்காட்சி நீங்காத அதனல் பிறப்பிற்குக் காரணமாகிய ஆணவமலமும் அறாது. (எ...று) (நக)

மூன்றும் அதிகாரணம் முடிந்தது.

நான்காமதிகாரணம்,

அவரி னீக்கி மலமகற்றி தானுக்கி மலரடிக் கீழ்வைப்
பன் என்பது.

காரணங்கடத்தற்கு உபாயம் இதுவெனக் கூறுகின்றது.

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போ லுள்ளம்
பலபுலன்க ணிறங்காட்டும் பரிசு பார்த்திட்
டிந்நிறங்க ளென்னிறமண் றென்று தன்ற
னெழினிறங்கண் டருளினு லிந்நிறத்தின் வேறுய்ப்
பொய்ந்நிறவைம் புலநிறங்கள் பொய்யெனமெய் கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினெடும் போதான் பின்னை
முன்னிறைநீர் சிறைமுறிய முடுகி யோடி
முந்நீர்சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா முறைபோல்.

(கொ-டு) தன்றன் எழில்நிறம் இந்நிறத்தின் வேறுய் அருளினல் கண்டு பொய்நிற ஐம்புலநிறங்கள் பொய்யென மெய்கண்டான் சிவத்தினெடு பொருந் திடுவன் முன்னிறைசிறை நீர்முறிய முடுகியோடி முந்நீர்சேர்ந்து அந்நீராய் பின்னீ ங்காமுறைபோல் பின்னைப்போதான்.

(பொ-ரை) காரணங்களில் நின்று ஆன்மா நீங்குமாறு எவ்வாறெனின், பளிங்கு தன்னை அடுத்த பல நிறங்களினியல்பையே தன்னிடத்துக் காட்டி நிற்கும். இது அப்பளிங்கிற்குப் பொது இயல்பு. இதுபோல ஆன்மாவும் தன்னுல் சாரப்பட்ட கருவிகளின் இயல்பே தன்னிடத்து விளங்க அது வாய் நிற்கும். இது ஆன்மாவிற்குப் பொது இயல்பு. இப்பொது இயல்பினை முன்னர் சிந்தித்தறிந்துகொண்டு பின்னர் பலநிறங்களின் வேறுக படிகத்தி ற்கு சிறப்பான ஒளி உளதாயிருற்போல இப்பொதுவியல்பை தன்னியல்பு அன்றென்றும், தன்னியல்பாகிய சிறப்பியல்பு இப்பொதுவியல்பின் வேறுய் உண்டென்றும் அருளால் அறிந்து பொதுவியல்பாகிய அக்கருவிஞானம் நீங்கு ம்படி தன்னியல்பாகிய உண்மையை உணர்ந்தால் அத்தன்னியல்பு விளங்கித் தோன்றும். தோன்றவே சிவத்தைப் பொருந்துவன். அவ்வாறு பொருந்தி னவன் தடைப்பட்ட நீர்தடை நீங்கியவிடத்து விரைந்தோடி கடலின்கட் சென்று அக்கடல் நீராய் அடங்கி பின் மீளாதவாறுபோல அக்கருவிக்கூட்டத் தில் மீளச்சோரான் (எ...று) (கூ எ)

சிவத்தைப் பொருந்தினவன் காரணங்களில் மீள வரினும் இழுக்கில்லை என்பாரை மறுத்துக் காரணங்களோடு கூடில் சிவன் அறியப்படானென்றுரைக்கின்றது.

எங்குந்தா னென்னிரு மெய்த வேண்டா
வெங்குமில னென்னின்சிவ நிறையு மல்ல

ணங்களுஞ் சீ ருயிர்போல்வ னென்னி னங்கத்
தவயவங்கள் கண்போலக் காணு வான்மா
விங்குநா மியம்புந்தத் துவங்களின்வைந் தறிவ
திறைஞானந் தந்துதா ளீதல்சுட ரிழந்த
துங்கவிழிச் சோதியுழுட் சோதியும்பெற் றூற்போற்
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணை.

(கொ-டு) இங்குஆன்மா நாம்இயம்பும் தத்துவங்களின் வைத்துஅறிவது.

(பொ-ரை) எல்லாஞ் சிவமேயாதலால் கருவிகளோடு கூடினதிரல் இழுக்கில்லை எனின், எல்லாஞ் சிவமேயாயின் யாமவனை யடையவேண்டாம். எல்லாஞ் சிவமில்லையாயின் அவனுடைய வியாபகத்திற்குக் குறையாய் முடியும். ஆதலால் இவ்விருவகையுமின்றி உடம்பின்கண் உயிர்போல எல்லாவற்றின் கண்ணும் இறைவன் கலந்து நிற்பன். உடம்பின்கண் உயிர்கலந்து நிற்பினும் கண்ணிந்திரியம் நீங்கிய ஏனைய செவி முதலிய நாலிந்திரியங்களும் தன் மாட்டு வந்த விடயங்களை மட்டும் அறியும். கண்ணிந்திரியம் தன்மாட்டு வராத விடயங்களையும் சென்றறியும். எல்லா இந்திரியங்களோடும் உயிர்கலந்து நின்றும் இந்திரியங்களின் தொழிலில் வேற்றுமை காணப்படுதல்போல எவற்றுடனும் இறைவன் கலந்து நிற்பினும் ஆன்மாவினிடத்து விளங்கித் தோன்றுதலும் கருவிகளிடத்து விளங்கித் தோன்றுமையுமாகிய வேற்றுமை உண்டாம். ஆதலின் விடயங்களை விட்டுத் திருவடிகளைப் பெறவேண்டும். அங்ஙனம் பெறுதல் ஒளியிழந்த கண் ஒளியிழத்தற்கேதுவாகிய மாசு நீங்கிய விடத்துத் தன்னொளியையும் தனக்குள்ளாய் நிற்கும் ஆன்ம ஒளியையும் பெற்றுற்போலும். அவ்வாறு கருவிக்கூட்டங்களினின்று நீங்கிய ஆன்மாவிற்கு தானும் தன்னறிவிற்குள்ளாய் நிற்கும் இறைவனும் விளங்கித் தோன்றுமாதலின் இறைவன் கருவிகளோடு கூடிய விடத்துத் தோன்றுன். ஆன்ம ஒளியைக் கண்பெறுதலாவது ஆன்மாவின் அறிவுகண்வழியாக விளங்கப் பெறுதல். (எ...று)(கூ அ)

சிவத்தைப் பொருந்தினவர் பழைய வாசனையால் காணங்களைக் கூடநேரில் உபாயத்தினல் வாசனையை நீக்கவேண்டுமெனக் கூறுகின்றது.

பாசிபடு குட்டத்திற் கல்லினிட் டெறியப்
படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பரக்கு
மாசுபடு மலமாய்ப யருங்கன்ம மனைத்து
மாண்டினைய புணருமோ தகலும்பின் னதனைக

நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி
யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ
ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி புரைப்பாம்.

(கொ-டு) நேசமொடும் திருவடிக் கீழ் நீங்காதே தூங்கும் நினைவுடையோர் நிலையதுவேயாகி நின்றிடுவர் எனவும் படுகுட்டத்தில் கல்லினை விட்டெறியப்படும்பொழுது நீங்கி அது விடும்பொழுதில் பாசிஎனவும்கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு சிவபெருமானிடத்து நீங்காத அன்போடு அச்சிவத்தைப் பொருந்தி பொருந்தி நிற்கின்றேமென்னும் நிலையினையும் கடந்த அதீதத்தை அடையவிரும்புவோர் அச்சிவமாய் நிற்பர். ஒரோவிடத்து பாசி பொருந்திய தடாகத்தில் கல்லெறியும்போது பாசிநீங்கியும் கல்லெறியாதபோது பாசிபடர்ந்தும் காண்பது போல சிவபெருமான் திருவடியை உணரும்போது மல மாயாகன்மங்கள் நீங்கியும் அத்திருவடியை உணராத பொழுது அச்சமயம் பார்த்து மல மாயா கன்மங்கள் வந்து தலைப்பட்டும் நிற்கும். அவ்வாறு மல மாயா கன்மங்கள் தலைப்பட்டு நிற்குமாயின் அந்நிலை பழைய வாசனை பற்றி நிகழ்வதாம். அவ்வாசனையால் சிவத்தினிடத்தும் கருவிகளிடத்தும் நிலைபெறுது சுழல்பவர் அவ்வாசனையைப்போக்கும் வண்ணம் முன்னர் ஒன்பதாம் சூத்திரத்திற் சொல்லும் உபாயத்தைக் கடைப் பிடித்து அனுட்டித்து அவ்வாசனையை நீக்கிக்கொள்ள வேண்டும். (எ...று) (உகூ)

நான்காமதிகரணம் முடிந்தது.

எட்டாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத்திருவிருத்தம் உகூக.

ஒன்பதாஞ்சூத்திரம்.

மேலைச் சூத்திரத்தால் பதிப்பொருளை அடைவதே பேறு. அப்பேற்றிற்குச் சிறந்தசாதனம் ஞானம். அந்தஞானம் ஞானசிரியனால் உண்டாமென்றுணர்ந்த பின்னர் ஞானத்தை அனுட்டிக்குமுறை எவ்வாறென்னும் ஆசங்கை நிகழுமன்றே. அந்நிகழ்ச்சிபற்றி அனுட்டிக்குமுறையைக் கூறுதற்கு ஒன்பதாஞ்சூத்திரம் எழுந்தது.

அனுட்டிக்கும் முறை தெரியாதவிடத்து அனுட்டிக்க முடியாதாதலின் அனுட்டிக்கும் முறையை வகுத்து இச்சூத்திரத்தாற் கூறுகின்றார்.

பதிஞானத்தால் சிவனை அடைதல் கூடுமெனவும் அப்பதி ஞானத்தில் நிலைபெறவொட்டாது செய்யும் வாசனையைக் கெடுக்கும் உபாயங்கள் இவையெனவும் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறு கின்றது.

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடு முள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே நீங்கிப் போதி
ஞைசதரு முலகமெலா மலகைத்தே ராமென்
றறிந்தகல வந்நிலையே யாகும் பின்னு
மோசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
வுள்ளத்தே புகுந்தளிப்ப ஞானமெலா மோட.

(கொ-டு) பதிஞானத்தாலே உள்ளத்தே நாடி நேசமொடும் பாதநீழற்கீழ் எனவும் பின்னும் உள்ளத்தேபுகுந்து ஞானமெலாம்ஓட அளிப்பன் ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க எனவும் கூட்டுக.

(பொ-ரை) கருவிகளோடு கூடி அறிவதாகிய பாசஞானத்தாலும் நான் பிரமமென்னும் பசுஞானத்தாலும் பரசிவனை அடைய முடியாது. அவ்விரு ஞானங்களாலும் அடையமுடியாத பரம்பரனை அவனது திருவடி ஞானமாகிய பதிஞானம் ஒன்றுனேதன்னறிவின்கண் வைத்தாராய்ந்து அன்புடன் அத்திரு வடி நீழலின் கீழ் நீங்காதேதூங்கப் பெறவேண்டும். அங்ஙனம் நிற்கப்பெறுது பிரபஞ்சத்தை நாடவருமாயின் அப்பிரபஞ்சம் யாவும்கானற் சலத்தின் தன்மை போல அசத்திய மெனக் கண்டு கழிப்பின் அந்நிலை கைகூடும். அங்ஙனம் கழிப்பதற்கு அறிவு சலனமின்றி நிற்க வேண்டுமாதலின் பண்டைப் பயிற்சி வயத்தால் வாசனை பற்றி சலிப்புஉண்டாமாயின் சலியாதிருத்தற் பொருட்டு பிர பஞ்ச நீக்கமும் சிவப்பேறும் தருவதாகிய முத்தி பஞ்சாக்காத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும். (எ...று)

இச்செய்யுள் முதனூல் ஒன்பதாஞ்சூத்திரம் போல முக்கூற் றை உடையது. அவற்றுள

முதற்கூறு—பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை பதிஞானத்தாலே நேசமொடுமுள்ளத்தே நாடிப் பாத நீழற் கீழ் (நிற்க)

இரண்டாங் கூறு—நில்லாதே நீங்கிப் போதி ஞைசதருமுலக மெலாமலகைத்தே ராமென்றறிந்தகலவந்நிலையேயாகும்.

மூன்றாங்கூறு—பின்னுமோசைதருமஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க வுள்ளத்தே புகுந்தளிப்ப ஞானமெலாமோட. (க)

மூதலதிகாணம்.

பாசஞானத்தாலும்.....பாத நிழற் கீழ் (நிற்க) என்பது

பாசஞானம் பசுஞானம் பதிஞானங்களின் இலக்கணம் இவை எனக் கூறுகின்றது.

வேதசாத் திரமிருகி புராணகலை ஞானம்
விரும்பசனை வைகரியா திக்திறங்கண் மேலா
நாதமுடி வானமெல்லாம் பாச ஞான
நணுகியான் மாவினைவகீழ் நாடலாலே
காதலினை ஞன்பிரமமென்னு ஞானங்
கருதுபசு ஞானமிவ ணுடனிற் கட்டுண்
டோதியினார்ந் தொன்றென்று வுணர்ந்திடலாற் பசுவா
மொன்றுகச் சிவனியல்பி ணுணர்ந்திடுவன் காணை.

(கொ-டு) பாசஞானம் வைகரி ஆதித்திறங்கள் வேதம் சாத்திரம் மிருதி புராணம் கலைஞானம் விரும்பு அசனைமேலாம் நாதமுடி வானமெல்லாம் கருது பசு ஞானம் நணுகி(ய) ஆன்மா இவைகீழ் நாடலாலே காதலினை நான் பிரம மென்னும் ஞானம் எனவும் சிவன் இயல்பின் ஒன்றுக உணர்ந்திடுவன்காணை எனவும் கூட்டுக.

(பொ-ரை) மேற் கூறிப்போந்த மூவகை ஞானங்களுள் பாசஞானமாவது—வைகரி முதலிய வாக்கின் பகுதியவாகிய வேத சாத்திர முதலிய கலை ஞானங்களும் விரும்புகின்ற அசனையுமாகிய சொற்பிரபஞ்சமும், நில முதல் நாத மீறுகிய பொருட்பிரபஞ்சமும் ஆகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய் ஆன்மாவின் கண் நிகழும் எகதேச ஞானமாம். பசு ஞானமாவது—இப் பிரபஞ்சங்களைப் பொருந்திய ஆன்மா இனைத்தும் தன்கீழ் அடங்கியதென் றறிந்து அவற்றினின்றும் நீங்கிய பொழுது அப் பிரபஞ்சமாகிய பாச நீக்கத்தால் அறிதியே பாசத்தினீங்கி யிருக்கின்ற சிவனை ஒப்பேனென்று சடுதியில் மதிக்கவருவதோர் சிவசமவாதஞானமாம். கருவிகளினீங்கிய இந்தஞானத்தை யுடைய பசுவை சிவனேடு சமமென்றதனால் இழுக்கென்னை எனின், இவ்வான்மா தூல சூக்கும காரண தேகங்களால் கட்டுப்பட்டும் நாலுணர்வால் உணர்த்த உணர்ந்தும் ஒவ்வோரிந்திரியங்களை உணர்ந்தும் இவ்வா றுணர்வதாகிய பாசத் தடையை ஞானத்தால் இடையே நீங்கப் பெறுதலின் அவ்வான்மா ஆதி முத்தனென்னப்படும். பதி ஒருவன் உணர்த்த உணர்தலின்றி தானே முழு

தும் ஒரு சோ அறிந்து அநாதியே பாசத்தடை நீங்கிய போறிவ்ணுதலின் அநாதி முத்தனெனப்படும். ஆதலால் ஆதி முத்தனுகிய பசுவை அநாதி முத்தனுகிய பதியோடு சமமென்றல் கூடாது. இவ் வேற்றுமையைத் தெளிவாய் அறிந்து அப்பதியினுள் ளடங்கி அப்பதி வாயிலாய் நிகழும் ஞானம் பதி ஞானமாம். (எ...று)

பதிஞானமா மென்றது "ஒன்றுகச் சிவனியல்பின் உணர்ந்திடு வன் காணே" என்றதனுல் பெறப்பட்டது.

வேத சாத்திரங்க ளெல்லாம் பாச ஞான மெனக் கழிப்பின் ஞான நூல்தனே ஓதல் ஓதுவித்தல் முதலியன, ஞான பூசையென மேற்கூறியதோடு முரணுதா வெனின், முரணுது. என்னே? அவ் வேத சாத்திரங்கள் பதி ஞானம் விளங்குதற்கு ஏதுவாக பயன் படுதல் கூடும் ஆதலா லென்க.

பசு ஞானத்தை சடுதியில் மதிக்க வருவதோர் ஞானமென்றது— ஆன்மா தனித்து நில்லாமையை விளக்கி நின்றது. அதாவது கரணங் கடந்த விடத்து பதியில் அழுந்த வேண்டும். அங்ஙனம் அழுந்தாது சீவன் தனித்து நிற்க முடியாது. நின்றதாக எண்ணுதலே யன்றி நிற்குமாறில்லை. அவ் வெண்ணமும் சடுதியில் மாறிக் கருவி களோடு கூடு மென் றறிக. (உ)

பாடாண வாத ஞானமும் பேதவாத ஞானமும் பசு ஞானமே யெனவும் பதி ஞானத்தா லன்றி பசுத்துவ வாதனை நீங்காதென வும் கூறுகின்றது.

கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னிற்
கதியாகுஞ் சினைமுட்டை கருமரத்தி னுயிர்கண்
மரணங்கொண் டிடவுறங்கு மயங்கிமூர்ச் சிக்க
வாயுத்தம் பனைபன்ன வவ்விடத்தை யடையச்
சரணங்கள் புகுநிழல்போற் றனையடையுஞ் சமாதி
தவிராது மலமிதுவும் பசுஞான மாகு
மரணங்க ளெரித்தவன்ற னடியையறி விறந்தங்
கறிந்திடார் செறிந்ததுக ளகற்றி டாரே.

(கொ-டு) சினைமுட்டை கருமரத்தின் உயிர்கள் (மருவக்) கதி ஆகும் ரணங்கள் புகும் நிழல்போல் தனைஅடையும் சமாதி (முத்தியாமென்னில் மர

ணங்கொண்டிட வுறங்க மயங்கி மூர்ச்சிக்க வாயுத்தம்பனை பண்ண வல் விடத்தையடையப் (கதிஆகும்) இதுவும் பசுஞானமாகும் அறிவு இறந்துஅங்கு ஆணங்கள் எரித்தவன்றன் அழலையை அறிந்திடா் செறிந்ததுகள் அகற்றிடுமோ மலந்தவிராது.

(பொ-ரை) மேற் கூறியவாறு நான் சிவமென நிகழும் ஞானம் முத்தியாகாதாயினும் காரணங்களெல்லாம் கெடும்படி அவற்றினின்றும் ஆன்மா நீங்கப் பெறுதல் முத்தியாமெனின், மீனிற் றோன்றிய சினையினும், முட்டையினும், கருப்பாசயத்தினும், மரத்தினும், உயிர்கள்பொருந்துங்கால் காணமின்றியிருத்தலின் அவையும் முத்தியாதல் வேண்டும். ஆகாமையின் இது பாடாண வாத ஞானமாம். பாடாண மென்பது கல். இனி ஒருவனுடைய நிழல் உச்சிப் போதின் கண் தன்னடியில் வந்து ஒடுங்கிறற் போல அறிவானது காரணங்களிற் செல்லாது ஆன்மாவாகிய தன்னிடத்து ஒடுங்கி நிற்பதே முத்தி எனின், மாணம், உறக்கம், மயக்கம், மூர்ச்சை, நஞ்சம் ஆகிய இவை பொருந்தியவிடத்தும் பிராண வாயு இயங்காது தம்பித்த விடத்தும், அறிவானது காரணங்களிற் செல்லாது ஆன்மாவாகிய தன் மாட்டொடுங்கி யிருத்தலால் அதுவும் முத்தியாதல் வேண்டும். ஆகாமையின், இது பேத வாத ஞானமாம். மேற்கூறிய பாடாண வாத ஞானமும் இப் பேத வாத ஞானமும் மேலைச்செய்யுளிற் கூறிய சிவ சமவாத ஞானமும் ஆகிய இவையெல்லாம் பசு ஞானங்களாம். இந்தஞானங்களால் சிவபிரானை அறிய முடியாதாதலால் முப்புரங்களையு மெரித்த சிவபிரானையும் ஆன்மாவாகிய தம்மையும் சிவ ஞானத்தால் அறியப் பெறுவீராக. அவ்வாறறிந்து உம்மைப் பந்தித்த மலத்தை நீக்கப் பெறுவீராக. மேற்கூறிய பசு ஞானங்கட் கேதுவாகிய பசுத்துவ வாதனையாகிய மலம் இச் சிவஞான முடையார்க் கன்றி நீங்காது. (எ...று) (நூ)

பதி ஞானத்தா லன்றி பசு ஞானம், பாசஞானங்களால் சிவனை அறியக் கூடாமைக் கேது அவ்விரு ஞானங்களும் தானே பிரகாசித்தலும் பிறிதொன்றைப் பிரகாசப் படுத்தலும் இல்லாமை எனக்கூறுஞ்

சிவனெயவன் றிருவடி ஞா னத்தாற் சேரச்
செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லா
மவனெய வணு காவென்று மாத லாணு
மவனடியவ் வொளிஞான மாத லாணு
மிவனுமியான் றுவக்குதிர மிறைச்சி மேனை
யென்புமச்சை சுக்கிலமோ விந்திரியக் கொத்தா
வவமகல வெனெயறியே னெனுமைய மகல்
வடிகூட்டி யான்மாவைக் காட்ட லாணும்.

(கொ-டு) சித்தைவாக்குச் செயல் எல்லாம் அவனைஎன்றும் அணுகா ஆத லானும் இவனும் யான் தவக்கு உதிரம் இறைச்சி மேதை என்பு மச்சை சுக் கிலமோ இந்திரியக் கொத்தோ அவம் அகல எனை அறியேன் எனும் பயம் ஆகலானும் அவன் அடி ஞானம் அகல அவ்வொளி அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலானும் அவன் திருவடிஞானத்தால் சிவனைச் சோச் செப்புவது.

(பொ-ரை) மேற்கூறிய பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானமாகிய மூன்றனுள் பாச ஞானமாகிய மனவாக்குக் காய முதலியன இறைவனை எக் காலத்தும் அணுகாமையால் அப் பொறிகள் வாயிலாய் ஏக தேசமாய் நிகழும் சுட்டுணர்விற்கு தானே பிரகாசித்தலும் பிறிதொன்றைப் பிரகாசப்படுத்துதலு மில்லை. பசு ஞானத்தை உடைய ஆன்மாவும் தன்னை தோல், இரத்தம் முத லியனவோ என ஐயப்பட்டு குற்றங்கள் நீங்கும்படியாக தன் சொரூபத்தை உள்ளவா றறியாது நிற்றலால் அதற்கும் தானே பிரகாசித்தலும் பிறிதொன் றைப் பிரகாசப்படுத்தலுமில்லை. ஆதலால் பாச ஞானம், பசு ஞானங்களால் பசிவனை அறிய முடியாது. இறைவன் திருவடி ஞானமாகிய பதி ஞானம் மேற்கூறிய குற்றங்களின்றி தானே பிரகாசித்தலும், தன்னையும் ஆன்மாவை யும் அவ் வான்மாவிற்கு பிரகாசப்படுத்துதலுமாய் நின்று எல்லாப் பொருளையும் இனிது விளக்குவதாம். ஆதலால் அத் தன்மைத் தாகிய பதி ஞானம் ஒன்று னை அப்பதிப் பொருளை அறிய முடியும் என மேற்கொண்டது. (எ...று)

ஆன்மா தன் சொரூபத்தை உள்ளவா றறியாமைபாவது—கருவி களின் வேறான சித்தெனவும் தனித்து நிற்கும் முதலன்றெனவும் உணராமையாம். (சு)

பசு ஞானம் பாசஞானங்கட்கு தானே பிரகாசித்தலும் பிறிதொ ன்றைப் பிரகாசப்படுத்துதலு மில்லாமையை அனுபவத்தில் வைத்து விளக்குகின்றது.

கண்டிடுங்கண் டனைக்காணு காணங் காணு
காணங்க டமைக்காணு வுயிருங் காணு
வுண்டியமு ருயிர்தானுந் தன்னைக் காணு
வுயிர்க்குயிரா மொருவனையுங் காணு தாகுங்
கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங் காட்டிக்
கண்ணுதிக் காணங்கள் காணுமை னிற்பன்
கொண்டானை யுள்ளத்திற்கண் டடிகூடிற் பாசங்
கூடாது கூடினுங் குறித்தடியி னிறுத்தே.

(கொ-டு) தனைக்காட்டி உயிருங் காட்டிக் கண்டசிவன்.

(பொ-ரை) மேற்கூறிய பசுஞான பாச ஞானங்கட்கு தானே பிரகாசித்தலும் பிறிதொன்றைப் பிரகாசப்படுத்தலு மில்லை என்றல் எவ்வாறு கூடுமெனின், பிறிதொரு பொருளை அறிகின்ற கண்ணுனது தன்னியல்பையுங் காணமாட்டாது, தனக்கு முதலாகிய அந்தக் காரணங்களையும் காணமாட்டாது. கண்ணை விளக்குகின்ற அவ்வந்தக்காரணங்கள் தாமும் தன்னியல்பையும் தன்னைவிளக்குகின்ற வித்தியாதத்துவங்களையும் அறிய மாட்டாவாம். அந்தக்காரணங்களை விளக்குகின்ற அவ் வித்தியா தத்துவங்களும் தன்னியல்பையும் தனக்கு முதலாய் நிற்கும் உயிரையும் காணமாட்டாவாம். அவை போல வித்தியா தத்துவம் முதலியவற்றை விளக்குகின்ற ஆன்மாவும் தன்னியல்பையும் தனக்குயிராய் அறிவித்து நிற்கும் முதல்வனையும் காணமாட்டாது. ஆதலால் தற்சாரூபத்தையும் விளக்கி ஆன்ம சொரூபத்தையும் விளங்கச்செய்து இவ்வாறு விளக்குவதற்கும் விளங்கச்செய்வதற்கும் தனக்கொரு முதலின்றி எல்லாவற்றையும் ஒரு சேர அறிந்து தானே பிரகாசித்தும் பிறவற்றைப் பிரகாசப்படுத்தியும் நிற்பது சிவஞானமாம். அவ்வாறு நிற்றலால் அச்சிவஞானத்தைத் துணையாகக் கொண்டுமுதல்வனைக் காணப்பெற்று அவன்திருவடியைக் கூடப்பெற்றால் பாசம் நீங்கும். நீங்கிய அப்பாசம் மீண்டும்கூடவரின் சிவபாவனையைவிடாது செய்து அவன்றிருவடி ஞானத்தால் அச்சிவபாவனைச்சோல் வேண்டும். (எ...று)

இதனால் பாச ஞானமாகிய கருவிகளும் பசுஞானமாகிய ஆன்ம அறிவும் தானே பிரகாசித்தல் அறவே இல்லை எனவும் தனக்குள் அடங்கிய பொருளை விளக்குவதாயினும் தனக்கு மேற்பட்ட பொருளை விளக்காமையால் பிறிதொன்றைப் பிரகாசப்படுத்துதல் இல்லை யெனவுங் கூறியவா றறிக. (டு)

முதலதிகாரணம் முடிந்தது.

இரண்டாமதிகரணம்.

நில்லாதே நீங்கிப்போதின்.....அங்ஙலேயே யாகுமென்பது.

பதி ஞானம் பிரபஞ்ச வயிராக்கியத்தா லுண்டாகு மெனக் கூறுகின்றது.

குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச் சித்தி
கோகநதன் முதல்வாழ்வு குலவுபத மெல்லாம்
வெறுத்துநெறி யறுவகையு மேலொடுகீ ழடங்க
வெறும்பொயென நினைந்திருக்க மேலொடுகீ ழில்லா
னிறுத்துவதோர் குணமில்லான் றன்னையொ'ரு வர்க்கு
நினைப்பரியா னென்றுமிலா னேர்படவந் துள்ளே
பொறுப்பரிய போரண்டை யருளியதன் வழியே
புகுந்திடுவ னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே.

(கொ-டு) அடியில் குறித்து நின்று எனவும் அறுவகை நெறியும் எனவும் உள்ளேவந்து நேர்பட எனவும் எங்கும் இலாப் போகத்தைப் புரிந்தே புகுந்திடுவன் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறிய பதிஞானம் எதனால் வருமெனின், குருவருளால் ஒருகுறியின்கண் உரைத்து நின்றுகொண்டு பைசாசபதத்திற்குரிய அட்டமாசித்திலைய நோக்க எண் மடங்கேற்றமாகிய அட்டசித்தியையுடைய பிரமபதமுதலிய எவ்வகைப் புவனங்களும் அப்புவனங்களின் உள்ள போக்கியங்களும் கக்கின சோறெனக் கண்டு அருவருத்துவிட்டு சுவரினுடையா வடிவைக் காணுங்காலத்து அதிலெழுதியிருக்கும் சித்திரம் காணப்படாததுபோல பிரபஞ்சம் யாவும் பொய்யெனக்கண்டு அவ்வாறு கண்டகாட்சி சலியாதிருக்கப்பெற்றால் அப்பிரபஞ்சத்திற்கு வேறாகியும் மேல் கீழ் இல்லாதாகியும் ஒருகுணமில்லாதாகியும் பிரபஞ்சாட்டமுள்ள ஒருவராலும் உணரப்படாததாயுமுள்ள ஞான சொரூபம் விளங்கித்தோன்றும். தோன்றவே அந்த ஞானத்தினிடத்துப் பெருங்காதல் அதிகப்படும். அதிகப்படவே சிவபிரான் அவ்வன்பின் வழியாகப் புகுந்து எவ்விடத்து மறிதற்கரிய பேரின்பமயமாய் உயிரின்கண் விளங்கித் தோன்றுவன். (எ...று) (சூ)

இரண்டாம் அதிகரணம் முடிந்தது.

மூன்றுமதிகாணம்.

ஓசை தரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க உள ளத்தே புதந்து அளிப்பன் ஊனமெலா மோட என்பது.

பிரபஞ்ச வியாகாக்கியம் நிலைப்பதற்கு சிவோகம் பாவனை செய்ய வேண்டுமெனக் கூறுகின்றது.

கண்டவினை யல்லேனு னென்றகன்று காணைக்
கழிபாமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டிலெடு முளத்தவன்று னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
வீண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விட்மொழியு மதுபோல விமலனையு மடையும்
பண்டைமறை களுமதுகா ணுனே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணை.

(கொ-டு) கண்ட இவைநான் அல்லேன் என்று காணைக்கழிபாமும் நான் அல்லேன் எனஅகன்று உளத்து அவன்றன் நின்ற கலப்பாலே கருதி கசிந்த தொண்டிலெடும் சோகமெனப் பாவிக்க கருடதியானத்தால் விடம் ஒழியுமது போல வேறு இன்றித்தோன்றுவன் மலங்களெல்லாம் விண்டு அகலும் விமல னையும் அண்டையும்.

(பொ-ரை) உயிரானது தன்னை உடம்பென்றும் அவ்வுடம்பென்ற அறிவு நீங்கிய விடத்து பிரமமென்றும் இவ்வாறு விபரீதமாக உணரும். அவ் வாறுணர்தல் சுட்டி யறியப்பட்ட உடம்புமுதலியன தன்னின் வேறுதலால் தான் அன்றென்றும், சுட்டியறியாது மேம்பட்டுநின்ற அப்பதிப்பொருள் சுட் டியறியாததலின் அதுவும் நான் அன்றென்றும், இவ்வாறுதலின் பாசத்திற் கும் பிரமத்திற்கும் தான் வேறென்றுங் கண்டு தன்னின் வேறுக அப்பாசத் தை மேற்கூறியவாற்றால் நீக்கவேண்டும். நீக்கி ஏனைப் பதிப்பொருள் தன் னின் வேறுயினும் கண்ணெளியும் ஆதித்தனெளியும்போல தான் வியாப்பிய மாய் அடங்கியும் பதிவியாபகமாய் மேம்பட்டும் வேற்றுமையின்றி ஒற்றுமைப் பட நிற்றலை உணர்ந்து அவ்வாறு நிற்கும் பதிப்பொருளிடத்து தானடங்கி யிருத்தலாகிய் அடிமைத் திறத்தையும் தன்னிடத்துப் பதிப்பொருள் கலந்தி ருத்தலையும் நோக்கி முன்போல் முனைப்பின்றி அருள்வழியில் நின்று சிவமே

தானென சிவோகம் பாவனை செய்யவேண்டும். செய்யின் கருடபாவனை செய்யும் மாந்திரீகனுக்கு அக்கருடனெகிய அந்நிதெய்வம் பிரிப்பின்றித்தோன்றி விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறுபோல சிவபிரானும் இவ்வான்மாவிற் பிரிப்பின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்கள் முழுவதும் நீக்கி சுத்தமாகும் படி செய்வன். பழைய வேதாந்தமும் அது நான் ஆனேனென்று பாவிக்கச் சொல்வது இப்பாவனையையேயாம். யாதானு மொன்றைப்பற்றி நிற்பதன்றி தனித்துநிற்கமாட்டாத ஆன்மா பாசத்தை நீக்கியவிடத்து சிவோகம் பாவனை செய்யவில்லையாயின் மீண்டும் பாசத்தைப் பற்றுமென்பது கருத்தென அறிக. (எ...று)

பதியும் ஆன்மாவும் இவ்வாறு பிரிப்பின்றி நிற்கும் அத்துவித நிலையை உணராது ஒருபொருள் மற்றொரு பொருளாதல் எவ்விடத்துமில்லாமையால், அது நான் ஆனென்னும் மகா வாக்கியத்திற்கு ஒன்று கெட்டுப் பிறிதொன்றுமென பரிணம வாதங்கூறுவர் ஓர் சாரார். இனி அம்மகா வாக்கியத்திற்கு அதுவென்றதும் நானென்றதும் விட்டுவிடாத இலக்கணை எனக்கொண்டு கேவலாத்துவிதம் கூறுவர் மற்றொரு சாரார். விட்டுவிடாத இலக்கணைபாவது பிரம்மசாரியாய் மதுரையில் இருந்தவனே சந்நியாசியாய்க் காசியிலிருக்கின்ற னென்னுமிடத்து ஆச்சிரமத்தையும் இடத்தையும் தள்ளில் ஒருவனேயாதல்போல ஜீவ உபாதி ஈசுவர உபாதிகளைத் தள்ளில் பிரமம் ஒன்றே எனக்கூறுதல். இவர் அத்துவிதச்சொல்லிற்கு இரண்டாவது பொருள் ஒன்றுமில்லையென்று கொண்டதால் கேவலாத்துவிதி எனப்பட்டார். ஒன்றுமில்லாத நிலை கேவலம். இனி அம்மகா வாக்கியத்திற்கு அதுவென்னும் பதி பல பேதப்படினும் அப்பேதமெலாம் ஆதிபௌரிணல் ஒரு கடவுளையே குறிக்குமென்பர் பிறிதொரு சாரார். இவர் கடவுளின் வேறுகிய ஆன்மாவையும் பாசத்தையும் ஒப்புக்கொண்டு கடவுள் ஒன்றே என்பது அத்துவிதச் சொல்லின் பொருளெனக்கொண்டாராதலின் விசிட்டாத்துவிதி எனப்பட்டார். விசிட்டம் விசேடணத்தை யுடையது. விசேடணம் பசுபாசங்களாம். இவ்வாறு கூறுவாரெல்லாம் வேதாந்தத்தில் கூறும் அது நான் ஆனேனென்னும் மகா வாக்கியத்தையும் அவ்வாறுதற்குரிய சம்பந்தத்தை விளக்கும் அத்துவிதச் சொல்லையும் பிரமாணமாகக் கொண்டுள்ளாராகலின் அவ்வாக்கியங்கட்கு அவர் கொண்ட பொருள் உண்மையல்ல வென்பதை உணர்த்

துவதற்குப் பண்டை மறைகளும் அது நான் ஆனேனென்று பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைக் காணை யென்றருளிச் செய்தவாறறிக.

ஆகவே வேதாந்தமும் சித்தாந்தமும் உண்மையாய் நோக்கு வார்க்கு அதுவென்னும் பதிப்பொருளொன்றும் நானென்னும் பசுப் பொருளொன்றும் ஆக இருபொருளுண்டெனவும் ஆனேன் என்ற தனுல் ஆகிவாட்டாது தடைசெய்து நின்ற ஏனைப் பாசப் பொருள் பிரிக்கப்படுவதுபோல் அவ்விருபொருளும் பிரிக்கமுடியாதெனவும் ஆதலால் பிரிக்கக்கூடிய பாசத்தைப் பிரித்து பிரிக்கமுடியாத பதிப் பொருளை சார்ந்த பொருளின் தன்மையை யடைதற்குரிய ஆன்மா தர்ஞக டாவிக்கில் பதியே யாகுமெனவும் நன்கு விளங்கும். (எ)

சிவோகம் பாவனை நிலைப்பதற்கு பஞ்சாக்காத்தை விதிப்படி உச்சரிக்கவேண்டுமெனக் கூறுகின்றது.

அஞ்செழுத்தா லான்மாவை யரனுடைய பரிசு
மானுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்ககர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியி னனலே யோம்பி
யஃணவரிய கோதண்ட மஃணந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்க
னிணையரவம் போற்றிரண்டு மான்மாவி லானே.

(கொ-டு) (ஆன்மா அரனுக்கு உடைமையாம் பரிசும்) ஆன்மாவை அரனுடைய பரிசும் அஞ்செழுத்தால் (அறிந்திட்டு) அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு அங்ககர நியாசம் அஞ்செழுத்தாற் பண்ணி இதயத்து ஆன்மாவின் அஞ்செழுத்தால் அர்ச்சித்து குண்டலியின் அஞ்செழுத்தால் அனலோம்பி எனவும் அரனே ஆன்மாவிற் றிரண்டும் மதியருக்கன் அணையாவம்போல் எனவுங்கூட்டுக.

ஆன்மாவை அரனுடைய பரிசும் என்றதிலுள்ள உம்மையால் ஆன்மா அரனுக்கு உடைமையாம் பரிசும் வருவிக்கப்பட்டது.

(பொ-ரை) மேற்கூறியவாறு பதியினிடத்து தானடங்கியும் தன்னிடத்து பதிகலந்தும் இருக்கின்றதனல் சிவோகமெனப் பாவிக்குமிடத்து அப்பாவனை நிலைத்தற்காக தானுகிய ஆன்மா அரனுக்கு உடைமையாந்தன்மையும் ஆன்மாவை அரன் உடையனுமாய் நிற்கின்ற தன்மையும் ஐந்தெழுத்து ஓதும்

மூலையில் வைத்தறிந்து அவன் திருமேனியும் ஐந்தெழுத்தாலமைந்திருப்பதை உணர்ந்து அடிமையும் உடையானுமாய் நிற்கின்ற அம்முறையே அங்கநியாச கரநியாசங்களும் அவ்வைந்தெழுத்தாற் செய்து கொண்டு இருதயத்தில் ஆன்மாவில் ஐந்தெழுத்தால் இறைவனைப் பூஜித்து உந்தியில் அவ்வஞ்செழுத்தால் ஓமம் செய்து அணைதற்கரிய புருவநடுவைப் பொருந்தி இறைவன் திருமேனியைத் தியானித்து அவனருள் வழியாக நின்று அவ்வஞ்செழுத்தை மானதமாக உச்சரிக்கவேண்டும். இவ்வாறு சிவோகம் பாவனையும் ஐந்தெழுத்து மந்திரமும் அகத்தே செய்யும் பூஜை, ஓமம், தியானம் என்னும் கிரியையும் ஆகிய இம் மூன்றுனும் சலனமின்றி நின்றுகொண்டு அவ்வைந்தெழுத்தை உச்சரிக்கப் பெறுவார்க்கு பசுபாசங்கள் போல விளங்கித் தோன்றுத அப்பதிப்பொருள் ஆன்மாவின் மாட்டு விளங்கித்தோன்றும். தோன்றுதல் எதுபோலவெனின் வகிரகங்களுள் ஏனைய கிரகங்கள்போல தனித்து விளங்காத இராகு கேதுக்கள் கிரகணகாலத்தில் சூரிய சந்திரர் மாட்டு விளங்கித் தோன்றுவதுபோலவாம். (எ...று)

ஐந்தெழுத்தின் பொருள் சிவம், அருள், ஆன்மா, திரோதை மலம் என ஐவகைப்படும். இவற்றுள் மலம் திரோதையை நீக்கி ஆன்மா அருளால் சிவனுடன் கலக்கு முறையை உணர்த்துவதாய ஐந்தெழுத்தே இங்கு கூறப்பட்டது. அது சிவோகம் பாவனையை உணர்த்துவதாம். அம்மந்திரத்தின் முறையை குருவினிடத்து உபதேச வாயிலாக அறிக.

பசு விளங்கித் தோன்றுதலாவது—யான் இதனை அறிந்தேன், அறிகின்றிலேன் என உணர்தல்.

பாசம் விளங்கித் தோன்றுதலாவது—என் கண், என் மனம் என உணர்தல். (அ)

பஞ்சாக்கரத்தால் இதயத்தில் இறைவனைப் பூசிக்குமுறை இவ்வாறென வகுத்துக்கூறுகின்றது.

நாட்டுமித யந்தானு நாபியினி லடியாய்
ஞாலமுத றத்துவத்தா லெண்விரலு ளத்தாய்
மூட்டுமோ கினிசுத்த வித்தைமல மெட்டாய்
முழுவிதமெட்டக்கசங்கண்முறைமையினினுடைத்தாய்க்
காட்டுகம லாசனமே லீசர்சதா சிவமுங்
கலாமூர்த்த மாமிவற்றின் கண்ணுருஞ் சத்தி
கீட்டையுருள் சிவன்மூர்த்தி மாருகிச் சத்தி
மேலாகி நிற்பனிந்த வினைவறிந்து போற்றே.

(கொ-டு) * காயினில் ஞாலம் அடியாய் முதல்தத்துவத்தால் எண் விரல் காளத்தாய்.மூட்டுமோகினி சுத்தவித்தை மலரெட்டாய் முழுஇதழ் எட்டு அக் காங்கள் முறைமையினில் உடைத்தாய் ஈசர் சதாசிவமுங் கலாமூர்த்தமாம் சத்தி இவற்றின் கண்ணுதும் காட்டும் இதயகமலந்தானும் காட்டு ஆசனம் மேல் சத்தி மேலாகி வீட்டையருள் சிவன் மூர்த்தி மானுகி நிற்பன் இந்தவிளவு அறிந்து,போற்றே.

(பொ-ரை) மேற்கூறியவற்றுள் இதயத்தில் இறைவனைப் பூசிக்கும் முறை எவ்வாறெனின், உந்தியில் பிருதிவிதத்துவம் கிழங்காகவும் எனைய அப்பு முதலிய இருபத்துமூன்று தத்துவங்களும் அவ்வுந்தியினின்று தோன்றி எண் விரல் அளவாயுள்ள தண்டாகிய நாளவடிவாகவும் வித்தியா தத்துவங்கள் எழும் சுத்ததத்துவத்தில் வித்தை ஒன்றும் ஆக எட்டுத் தத்துவங்களும் எட்டு இதழ் வடிவாகவும் அவ்விதழ் எட்டும் பிரணவமுதலிய எட்டு அக்காங்களை உடையதாக வும் ஈசுவரம், சதாசிவமென்னும் இரண்டு தத்துவமும் அறுபத்துநான்கு பேதப் படுமாதலால் அறுபத்துநான்கு கேசரமாகிய பூந்தாதுவடிவமாகவும் சத்திதத்து வம் அக்கேசரங்களுக்குள்ளாகிய கொட்டையாகிய பொகுட்டு வடிவமாகவும் அச்சத்திதத்துவமே அப்பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொரு அக்காரமாகிய பீசவடிவாகவும் உடைய இருதயகமலம் ஆசனமாம். அவ்வாசனத்தின்மேல் சத்தியே வடிவாகவும் அவ்வடிவத்தில் வீடுதருகின்றவனுகிய சிவபிரான் வடிவ த்தை உடையவனுகவும் நிற்பன். இம்முறையை அறிந்து பூசிப்பாயாக. இவ் வாறு செய்யும் பூசை அந்தரியாக பூசையெனப்படும். (எ...று)

மேல் இறைவன் வடிவம் ஐந்தெழுத்தெனக் கூறி அதன்பின் ஆன்மாவில் அர்ச்சிக்கவேண்டுமென்று கூறி இவ்விடத்து சத்தியில் விளங்குவனெனக் கூறியதன் கருத்தென்னேனெனின், இறைவனுக்கு ஐந்தெழுத்து தூலவடிவம். ஆன்மா சூக்குமவடிவம். சத்தி அதி சூக்குமவடிவமென்பதை அறிவித்தற்கு இவ்வாறு கூறினர். ஐந் தெழுத்து தூலவடிவமாவது எவ்வாறெனின், அவ்வைந்தெழுத்தும் பதி, பசு பாசமென்னும் மூப்பொருளையும் குறிக்கும். அம்மூப் பொருளிலும் இறைவன் கலந்துநிற்கின்றனன். அந்நிலை அவ்விறை வனுக்குத் தூலம். அம்மூப்பொருள்களுள் ஆன்மாவிற் கலந்துநிற் கும் இறைவன் நிலை சூக்குமம், சிற்சத்தியிற் கலந்துநிற்கும் இறை வன் நிலை அதிசூக்குமம். சத்தியினின்று பிரிந்து தோன்றுதல் இல்லையாதலால் அதற்குமேல் நிலையில்லை. (கூ)

அந்தரியாக பூசைக்கு வேண்டிய பூசாதிரவியங்கள் சேகரிக்கும் முறை இதுவெனவும் இப்பூசை அவசியம் வேண்டுமெனவும் கூறுகின்றது,

அந்தரியா கந்தன்னை முத்திசா தனமா
வறைந்திடுவ ரதுதானு மான்மசுத்தி யாகும்
கந்தமலர் புகையொளிமஞ் சனமமுது முதலாக்
கண்டனைவ லாமனத்தாற் கருதிக் கொண்டு
சிந்தைதனி லர்ச்சிக்கச் சிவனேஞா னத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமவ் வொளிபோல மருவியர னுளத்தே
வாவாவந் திடுவன்பின் மலமான தறுமே.

(கொ-டு) கந்தம் மலர்புகை ஒளிமஞ்சனம் அமுது முதலாக் கண்டனவெலாம் மனத்தால் கருதிக்கொண்டு சிந்தைதனில் சிவனே ஞானத்தால் அர்ச்சிக்கச் சிந்திக்கச் சிந்திக்க தர்ப்பணத்தை விளக்க வந்திடும் அவ்வொளிபோல ஆன் உளத்தேமருவி வாவா வந்திடுவன் பின்மலமானது அறுமே அதுதானும் ஆன்மசுத்தியாகும் அந்தரியாகந்தன்னை முத்திசாதனமா அறைந்திடுவர்.

(பொ-ரை) மேற்கூறிய அந்தரியாக பூசைசெய்யுமிடத்து சந்தனம், புட்பம், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய பூசா திரவியங்களெல்லாம் மனத்தால் கற்பித்துக்கொண்டு அபிஷேகம் அலங்காரம் தூப தீப ஆராதனை நைவேத்தியம் முதலியனவும் மனத்தால் செய்து ஆன்மாவினிடத்தில் சிவனே ஞானத்தால் அர்ச்சித்தலும், ஓமித்தலும், தியானித்தலும் செய்யவேண்டும். அவ்வாறு செய்யச் செய்ய கண்ணுடிக்குப் பொடியிட்டு விளக்க விளக்க ஒளி மேலிட்டு மாசு நீங்கு மாறுபோல அச்சிவம் உளளத்தில் மேலிட்டு மேலிட்டு விளங்கித்தோன்றி மலம் பற்றறக் கழியும். அங்ஙனம் கழிதல் ஆன்ம சுத்தியாம். மலங்கழிதலாகிய அவ்வான்மசுத்திக்கு இவ்வந்தரியாக பூசை அவசியம் வேண்டப்படும். ஆதலின் இப்பூசையை முத்திசாதனமாக அறிக.(எ...று)(50)

மலம் கழிதலாகிய ஆன்மசுத்திக்கு புறப்பூசையும் அங்கமெனவும் அப்பூசை செய்யுமுறை இவ்வாறெனவும் கூறுகின்றது.

புறம்பேயு மான்கழல்கள் பூசிக்க வேண்டிற்
பூமாத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனே ஞானத்தா லங்குச்
சிந்திக்கும் பீடியிக்குச் சிந்தித்துப் போற்றி,

யறம்பாவங் கட்குநா மென்கடவே மென்று
மாண்டவனைக் கண்டக்கா லகம்புறமென் ஞதே
நிறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றே
சீரடியார் தம்முடைய செய்தி தானே.

(கொ-டு) சிறந்துஆரும் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச் சிந்திக்கும்படி புறம்பேயும் இங்குச் சிந்தித்து வேண்டின் பூமரத்தின்கீழ் உதிர்ந்தபோதுகளுங் கொண்டு அரன்கழல்கள் போற்றிப்பூசிக்க ஆண்டவனைக் கண்டக்கால் அறம் பாவங்கட்கு நாம் என்கடவே மென்றும் அகம் புறம் என்னுதே நிறம்பாதே பணிசெய்து நிற்கையன்றே சீரடியார் தம்முடைய செய்திதானே.

(பொ-ரை) மேற்கூறியவாறு சிவபெருமானை அகத்துப் பூசித்தலே யன்றி புறத்துப் பூசித்தலும் அவனை அடைவதற்கு அங்கமாதலின் அப்புறப் பூசைசெய்யவேண்டுமாயின் சிறந்து விளங்கும் புகழையுடைய அம்முதல்வனை ஞானத்தால் அகத்து ஆன்மாவில் பூசித்ததுபோல புறத்தே ஒரு வடிவத்தில் இறைவனைச் சிந்தித்து பூசாதிரவியங்கள் வேண்டுமாயின் தான் வருந்துதலும் பிறரை வருத்துதலுமின்றி மரத்தின் கீழுதிர்ந்த பூக்களும் யாறு குளம் முத லியவற்றுள் உளதாகிய நீரும் யாசகமின்றி வந்த அமுது முதலியனவும் கொண்டு அம்முதல்வன் றிருவடிகளைப் பூசிக்கக்கடவர். பூசிக்குங் காலத்து அகத்தாவது புறத்தாவது ஒரு குறியின்கண் இறைவனைக் காணப்பெறுங்கால் அகம் புறம் என்னும் வேற்றுமையால் இவ்வுலகத்தார்போலப் பூசித்தலும் புண் ணிய பாவங்கட்கு யாம் என்செயக் கடவேமெனச் சிந்தித்தலும் அது வேறு இது வேறென்னும் வேற்றுமையுமின்றி எவ்விடத்தும் சிவனையே பார்க்குந் தன்மையராய் எச்செயலும் அவனருள்வழியே செய்துநிற்றல் மெய்யடியார் செய்தியாதலால் அவ்வாறு செய்யவேண்டும். (எ...று) (கக)

புறப்பூசை, அகப்பூசை இரண்டினுள்ளும் அகப்பூசையே விசேடமென்கூறுகின்றது.

இந்தனத்தி னெரிபோனி னெய்பழத்தி னீரத
மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள னிறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளு
மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தாற்
சிந்தனைசெய் தர்ச்சிக்கச் சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற் சிவன்றன்னைப்
பந்தனையை யறுத்துத்தா னுக்கித்தன் னுருவப்
பரப்பெல்லாங் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே.

(கொ-டு) இறைவன் எங்கும்உளன் எவ்விடத்தும் வந்தனைசெய்து வழி படவே அருளும் எனவும் சிவன்உளத்தே தோன்றிப்பந்தனையை அறுத்து என வும் இவன்பாலே பதிப்பன் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) இறைவன் உலகத்தார்க்கு விறகினிடத்துத் தீப்போல சிறிதும் தோன்றுது மறைந்து உடனுயும் மந்தகாமலபாகமுடைய சரியையாளருக்கு பாலில் நெய்போல ஒருவாற்றுற் றோன்றியும் தோன்றுது மறைந்து உடனுகி யும் மந்தமலபாகமுடைய கிரியையாளருக்கு பழத்தில் இரதம்போல உய்த்து ணருமிடத்துத் தோன்றுவதாய் உடனுகியும் தீவிரமலபாகமுடைய யோகி களுக்கும் தீவிரதர மலபாகமுடைய ஞானிகட்கும் எள்ளின்கண் எண்ணெய் போல விளங்கித்தோன்றினும் பிரித்தறியப் படாது உடனுகியும் நிற்பன். இவ்வாறு அகம்புறமென்ற பிரிவின்றி இறைவன் எவ்விடத்து முளதலால் மேற் கூறியவாறு அகத்தாதல் புறத்தாதல் எவ்விடத்து வழிபடினும் அணுக் கிரகிப்ப னென்பதே தேற்றம். அவ்வாருயினும் பண்டைப்பயிற்சி வயத்தால் வாதனுமலம் வந்து தாக்கப் பெறுவோர் அம்மலத்தை நீக்கும் பொருட்டு அம்ம லத்திற் கிருப்பிடமாகிய ஆன்மாவிடத்தில் பதிஞானத்தால் சிவனை வழிபடுத லாகிய அகப்பூசை அம்மலநீங்குதற்குரிய இயைபு நோக்கி விசேடமாம். அவ் வாறு அகப்பூசைசெய்யின் சிவன் ஆன்மாவினிடத்து விளங்கித்தோன்றி வாச னையைப்பற்றறத்துடைத்து இரும்பைத் தன் வண்ணமாக்கும் தீப்போலசிவனை தன் வண்ணமாக்கி தனது சர்வஞ்ஞத்துவாதி எண்குணங்களாகிய பேரானந்தப் பெருஞ் செல்வ முழுவதும் இவனுடையதாகச் செய்தருள்வன். (எ...று)

ஆன்மாவினிடத்து அர்ச்சிக்க மலம் அறுமென மேல் பத்தா வதை செய்யுளில் சொல்லிவிட்ட படியால் இவ்விடத்துச் சொல்லவே ண்டுவதின்று. ஆயினும் பாச நீக்கம் சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள் மேல் பாச நீக்கம் கூறி இவ்விடத்து "தாளுக்கு தன் னுருவப் பரப்பெல்லாம் கொடுபோந்து பதிப்பன்" என சிவப்பேறு கூற வேண்டியதற்காக கூற வேண்டாத அதனையும் இயைபுபற்றிக் கூறினர். ஆதலின் இது வேண்டாது கூறி வேண்டியது முடித்த தாம்.

எண் குணங்களாவன—தன் வயத்தனுதல், தூய வுடம்பினனு தல், இயற்கை யுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம். இவற்றுள் தன்வயத்தனு தலே சுவதந்திரத்துவம் எனவும் தூய வுடம்பினனுதலே விசுத்ததே கமெனவும் இயற்கை யுணர்வினனுதலே நிராமயாண்மா எனவும் முற்று

முணர்தலி சருவஞ்ஞத்துவ மெனவும் இயல்பாகவே பாசங்களி னீங்குதலி அநாதிபோத மெனவும் போருளுடைமையை அலுப்த சுத்தி எனவும் முடிவிலாற்ற லுடைமையை அநந்த சத்தி எனவும் வாம்பினின்ப முடைமையை திருப்தி எனவுங் கூறுவர். இவ்வெண் குணங்களுடையஇறைவனை குணாதீத னென்று கூறுதல் எவ்வாறு பொருந்துமெனின், மாயையாகிய சடத்தின் குணமும் ஞானமாகிய சித்தின் குணமுமென குண மிரு வகைப்படும். அவற்றுள் மாயை யின் குணம் சாத்துவிகம், இராசதம், தாமத மென முத்திறப்படும். இம்முக்குணங்களும் மாயாகாரியமாகிய தனுகரண புவன போகங்க ளிற் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாவி னிடத்து நிகழ்வனவாம், இம் முக்குணங்களுள் சாத்துவிகம் சாந்தத்தையும் இன்பத்தையுந்தரும். இராசதம் பிரவிருத்தியையுந் துன்பத்தையுந் தரும். தாமதம் மோகத்தையும் மூடத்தையுந் தரும். இவ்வாறு ஒன்றோடொன்று மாறுபடுகின்ற இம் முக்குணங்களும் பந்த ஏதுவாம். இறைவன் மாயாகித ஞானதால் இம் முக்குணங்களையுங் கடந்தவ னென்பது தோன்ற குணாதீதனென்றது பொருந்தும். இவ்வாறன்றிக் குண தீத னென்பதற்கு ஞான குணமு மில்லாதவ னென்பது பொருளா ன்று. ஞான குணமு மில்லாதவனுயின் குணமில்லாத குணி இல்லை யாதலால் இறைவனும் இல்லை யென்ற நிரீச்சுரவாதமாகும். அன்றி யும் ஒரு குணமுமில்லாத பொருள் வெறும் பாழெனப்பட்டு அப்பாழ் உயிர்களின் நன்மை தீமைகளை யறியு மென்றலும் அநுக்கிரகஞ் செய்யுமென்றலும் பொருந்தாதாய் முடியும். ஆதலால் ஞான குண முடையவ னென்பதே தேற்றம்.

இனி அந்த ஞான குணம் எட்டு வகைப்படுவானே னெனின், எட்டுத்தன்மை இறைவனுக்கு வேண்டப்படுதலால் எட்டுவகைப்பட் டனவாம். எட்டுத் தன்மை வருமாறு—உயிர்க்கு வினையின்பயனகிய இன்ப துன்பப் பயனை ஊட்டுவித்தற்கும் வினை யொப்பு வந்தவர்க்கு முத்தி கொடுத்தற்கும் எண்ணியதை இடையூறு புகுதாமல் எண் ணியபடி முடிக்குந் தன்மையாகியதன்வய மென்னுஞ் சுவதந்திரத் தீவம் வேண்டப்படுவ தாயிற்று. இவ்வாறு செய்யு மிறைவனுக்கு வடிவம் உருவமாயின் வியாபகமாய் எவற்றையும் அறிதல் கூடாதா தலின் வியாபகமாய் எவற்றையும் அறியுந்தன்மையாகிய தூயவுடம் பென்னும் விசுத்த தேகம் வேண்டப்படுவதாயிற்று. அதாவது சித் தருவென்ற படியாம். சித்தருவாயினும் ஆன்மாவாகிய சித்துப்

(கொ-டு) அவன் இவனுய் நின்றமுறை எகனுகி அரன் பணியின் நின் றிடவும் சிவனும் இவன் செய்தியெல்லாம் என் செய்தியென்றும். (உடனுகி நின்று கொள்வன்) இவனுக்குச் செய்தது எனக்குச் செய்ததென்றும் பவ்ம் அகல உடனுகி நின்றுகொள்வன் பரிவால் பாதகத்தைச் செய்திடினும் (புண்ணி யத்தைச் செய்திடினும்) பணி ஆக்கிவிடுமே உலகில் இவனுக்கு இதம் அகிதஞ் செய்தார்பால் இவன் செய்த இதம் அகிதமெல்லாம் இசையும் குற்றம் அகலும்.

(பொ-மை) மேலைச் சூத்திரத்து இறுதிச் செய்யுளில் கூறியவாறு பதி ஞானத்தால் காணப்பட்ட இறைவன் பெத்தநிலையில் உடனுப் நிற்பினும்வேறு காணப்படுமாறின்றி ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழி நிற் பன். அம்முறைபோல மேற்கூறியவாறு அகத்து இறைவனே வழிபடுகின்ற இம் முத்திக்காலத்து அம்முதல்வனேடு ஆன்மா உடனின்றறியினும் ஆன்மாவாகிய் தான் வேறு காணப்படாத வாறு அவ் விறைவனேடு ஒற்றுமைப்பட்டு நிற்கவும் அவன் அருள் வழியில் வழுவாது நிற்கவும் பெறவேண்டும். பெற்றுல் 'அவ்வி ரண்டனுள் ஒற்றுமைப்பட்டு எகனுய் நிற்றலால் யான் எனதென்னும் செருக்க றும். அச் செருக்கறுதலால் அவ் விறைவன் இவன் செய்யும் இதம், அகிதங் கஞெல்லாம் யான் செய்யும் இதம், அகிதங்களென உடனுய் நின்று என்று கொள்வன். அருள்வழி நிற்றலாகிய அரன்பணியில் நிற்றலால் இந்திரியங்க ளின் வசமாய் நிற்கும் பாதந்திரம் ஒழியும். ஒழியவே இவனுக்கு இன்பத்துன் பம் அனுபவிக்கும்படி பிறர் செய்யும் இதம் அகிதங்களெல்லாம் அவ்விறைவன் தனக்கு அனுபவிக்குமாறு செய்தனவேயாமென உடனுய்நின்று என்றுகொள் வன். இவ்வாறு எகனுய் நிற்றல் இறைபணி நிற்றலென்னும் இருதிறத்தினுள் எகனுய் நிற்றலால் அன்புடன் இவன் செய்யும் இதம், அகிதங்கள் வினையாய் முடியாமல் இறைவன் பணியாய முடியும். இறைபணி நிற்றலால் இவனுக்கு இதம் அகிதம் செய்தாரிடத்து அவ்வித மகிதங்கள் செய்த அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு இவன் செய்த இதம் அகிதங்கள் துணைக் காரணமாய்ப் பொருந்தும். இவ்வாறுவினையும் வினைப்பயனின் அநுபவமும் இவனைப் பந்தப் படுத்தாது ஒழியவே வினை செய்தலாலாகிய ஆகாமியமும் வினைப்பயன் அநுபவித்தலாலாகிய பிராரத்துவமும் ஒழிந்தனவாம். அவ்விரு வினைகளும் ஒழி யவே ஏனைச் சஞ்சித வினையும் மாயையும் ஆணவமுமாகிய குற்றங்கள் மூன் றும் இவனைப் பந்திக்க மாட்டாவாய் விட்டுப்போம். (எ...று)

இவன் செய்த இதம் அகிதங்கள் இவனுக்கு இதம் அகிதஞ் செய்த பிறர்பால் அவ் வித மகிதங்கள் மிகுதிப்படுதற்கு துணைக்கா ரணமாதலன்றி இவன்செய்த இதம் அகிதங்களை இவனுக்குச் செய் தாரிடத்துப்பொருந்துமென்று சொல்லில்செய்த அவருடைய இதம்

அதிதங்கள் எவ்வாறுதுமென விஞ்யினர்க்கு விடையின்மையும் அவ ரவர் வினையை அவரவர் அனுபவிக்க வேண்டுமென்ற நியதிதப்புத லும் சிவஞானச் செயலுடையோர் கையிற் றூணம் திலமளவே செய்த திடினும் அத்தானமே நிலமலைபோற் றிகழுமென்றுற் போல் வன வற்றேறு முரணுதலு மாகிய குற்றங்கள் உளவாமாறு உணர்க.

இச்செய்யுள் முக்கூற்றை உடையது அவற்றுள்

முதற்கூறு—அவனிவனுய் நின்ற முறை எகனெகி (நின்றிடவும்) சிவனும் இவன் செய்தி எல்லாம் என் செய்தி என்றும்

இரண்டாங் கூறு—அரன் பணியில் நின்றிடவும் இவனுக்குச் செய்தது எனக்குச்செய்ததென்றும் பவமகல உடனெகி நின்று கொள் வன் பரிவால் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே உல கில் இவனுக்கு இதமகிதம் செய்தார்பால் இவன் செய்த இதமகித மெல்லாம் இசையும்.

மூன்றாங்கூறு—குற்றமகலும்

இவற்றுள் குற்றமகலு மென்பதை முதனூலில் வேறு கூறுக வைத்தோதாதது இருகூறுகக் கூறினர். இந்நூலில் அம்மூன்றாங் கூற்றை பதினென்றாஞ் சூத்திரத்தில் விரித்துக் கூறுகின்றுராத லின் இச்சூத்திரத்தால் இரண்டு கூறு கூறுகின்றுர். (க)

முதலதிகாணம்.

அவனிவனுய்.....

என் செய்தி என்றும் என்பது.

எகனெகி நின்றுலன்றி யான் என தென்னுஞ் செருக்கறுதலில்லை எனக் கூறுகின்றது.

யான்செய்தென் பிறர்செய்தா ரென்னதியா னென்னு
மிக்கோணை ஞானவெரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்று னேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடுந்

நான்செய்தே னெனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம
மூன்செய்யா ஞானந்தா னுதிப்பி னெல்லா
லொருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே.

(கொ-டு) யான் என்னது எனவும் அத்தத்துவன்முன் தனை அளித்து நேரே முன்னிற்கும் எனவும் போகத்தை நண்ணுவிக்கும் கன்மம் பண்ணுவிக் கும் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) மேலைச் சூத்திரத் தோதியவாறு ஆன்மாவினிடத்து இறை வனை ஆராதித்து ஆராதிக்கின்ற ஆன்ம ஞானத்திலும் அவ்விறைவனைத் தரி சித்தலே அமையும்; அதன் மேலும் எகனாய் நிற்கவேண்டு மென்று கூறுவா னேன் எனின், யான் என தென்னும் செருக்கு வினைதற்கேதுவாகிய மலத்தி னுயுண்டாம் அறிவின் கோணுதலை இறைவனேடெகனாய் நிற்கும் ஞானக் கினியினாற் காய்ச்சித் தீர்த்து தான் இறைவன் அருள் வழி நிற்க அவ்விறை வன் தனது சொரூபத்தை ஆன்மாவிற்கு விளக்கி வெளிப்படுத்தோன்று வன். அவ்வாறு தோன்றுதலான் இவன் செய்யும் இதம் அகிதங்கள் இவனு க்கு வினையாகாமல் இறைபணியாகியும் அவ் வித மகிதங்களை இவனுக்கு இத மகிதங்கள் செய்தவரிடத்து செய்த அவ் வித மகிதங்கள் செய்த அளவினன்றி மிகுத்தற்குத் துணைக் காரணமாகவும் ஆகும். மேற் கூறிய யான் எனதென்னும் செருக்குடையாருக்கு முதல்வன் விளங்கித் தோன்றுதலின்றி அவர் செய்த கன்மத்திற் கீடாக போகத்தைப் புசிப்பித்து அங்ஙனம் புசிப்பிக்கும் முறையில் மேல் ஆகாமிய வினையும் ஏறச்செய்வன். ஆதலால் மாயா கருவிகளைப் பொரு ந்தி அறிகிற சிற்றறிவினின்றும் நீங்கி இறைவனோடு எகமாய் நிற்கும் ஞானம் பெற்றாலன்றி யாவருக்கும் யான் என தென்னும் செருக்கறுதலில்லை. (எ-று).

இறைவனைத் தரிசிக்குங்கால் மாயா கருவிகள் நீங்கப் பெறு தோ வெனின், பெறுது. மாயா கருவிகள் சிவ கருவிகளாக மாறித் தரிசித்தலே யன்றி நீங்கினதில்லை. சிவ கருவி என்பது—சிவத் தின் வழிச் செல்லுங் கருவியாம். நீங்காமைக்கு ஏது வென்னை யெனின், ஆணவ மலம் நீங்கப் பெற்றும் அம்மலத்தின் வேரறுக்கப் படாமையேயாம். வேர் என்பது பற்றெனப்படும். மலம் அறியாமை யைச் செய்யும். பற்று செருக்கைச் செய்யும். அப்பற்றறுதி இறைவ னைப் பற்றி எகமாய் நிற்றலினாலுண்டாம். இப்பற்றையே திருவா னைக்காப் புராணத்தில் கச்சியப்ப முனிவர் "வன்மலவேர்" என்றரு ளினர். மலத்திற் கன்னியமாகப் பற்று என்பதோன். றுண்டென்

பதை அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினை யென சிவ ஞான போதச் சிற்றுரை நான்காஞ் சூத்திரம் இரண்டாம் அதிகர ணத்திறுதியில் மாதவச் சிவஞான யோகிகள் அருளியவாற்றுணர்க. இக்கருத்துப் பற்றியே "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என் றார் தேவரும். (உ)

முதலதிகரணம் முடிந்தது.

ரண்டாமதிகரணம்.

"அரன் பணியின்றிடவும்.....
.....இசையும் என்பது".

இறை பணியில் நின்றுலன்றி இந்திரியங்களின் வழிப்பட்டுச் செல்லுட் பரதந்திரம் நிந்ததலில்லை எனக்கூறுகின்றது.

இந்திரிய மெஜுப்பற்றி நின்றேறியென் வசத்தி
னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற ணேவழி நின்றிடலா லென்றுந்
தானறிந்திட் டிவற்றினிறைந் தனையுடையான் றாள்கள்
வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி.
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேன்
முந்தனுடைச் செயலென்று முடித்திதாழுக வினைகண்
மூளாவங் காளாகி மீளா னன்றே.

(பொ-ரை) ஏகனுய் நிற்றலே அமையும்; அதன்மேலும் இறைபணியில் நிற்க வேண்டு மென்பானேன் எனின், உலகத்தில் ஊர்க்காவல் செய்பவரா யுள்ளார் பிழை செய்துள்ளாரை தம் மெண்ணப்படி தண்டிக்கின்றனர். தண்டிப்பது தம்மை அவ்வாறு செய்யும்படி நியமித்திருக்கும் அரசனது ஆணை வழியேயாம். அவ்வரசன் ஆணையின்றி இவர் தாமாக ஒன்றும் செய்ய முடியாது. அவ்வுண்மையை அறிந்து அவ்வூர்க் காவலருக்கும் தமக்கும் இறை வனுகிய அவ்வரசனைச் சிந்தைசெய்யப் பெற்று அவன் கருத்தின் வழி நடக்க வல்ல ரையவிடத்து அவர் அவ்வூர்க் காவலர் கீழ் அடங்குதலினின்றும் நீங்கி அக்காவ லரையும் தம் ஆணை வழியில் அடங்கும்படி அரசனருளால் செய்து கொள்ள

வல்ல சுதந்தராவர். அது போல இறைவனுணையால் இந்திரியங்கள் என்னைக் கூடிநின்று எனக்குள் அடங்காமல் என்னைத் தம்முளளடக்கி நிற்கு மென் பதை அறிந்து அவ்விறைவனைக் கூடப் பெறின் அவ்விறைவன் திருவருளால் அவ்விந்திரியங்களை தன்னுணைவழி அடக்கி நிறுத்திக் கொள்ள வல்லவனுவன். அவ்வாறு நின்றவிடத்தும் பண்டைப் பயிற்சி பற்றி சில சமயம் அவ்விந்திரிய ங்களின் குறும்பு நிகழும். நிகழுங்கால் இந்திரியங்கட்கும் எனக்கும் கூடி கிற சுதந்தரம் இல்லாமையால் இந்திரியங்களையும் என்னையும் கூட்டுவித்த முதல்வன் செயலே என்று இறைபணியில் நிற்க வேண்டும். அவ்வாறு நிற் கில் அவ்விந்திரிய வழியாய்ப் புகுந்து பந்தப்படுத்தக்கூடிய வினைகள் பந்திக்க மாட்டாவாய் மடங்கி ஒழியும். அவ்வாறு அடிமைத்திறத்து நின்றவன் மீண் டும் இந்திரியங்களின் வழிப்பட மாட்டான். (எ-று) (உ)

இறைபணி நிற்றல் இவ்வாறெனவும் இறைபணி நின்றார் செய லெலாமிறைவன் தன் செயலென என்று கொள்ளுதலும் பிறர் செயலை அவ்வாறென்று கொள்ளாது அவர் செயலாகப் பாவனுபவிக்கச் செய்தலும் பற்றி இறைவன் நடுவுநிலைக்குக் குறையாகா தெனவும் கூறுகின்றது.

சலமிலனுப் ஞானத்தாற் றனையடைந்தார் தம்மைத்
தானுக்கித் தலிவனவர் தாஞ்செப்பினை தன்னு
னலமூடனை பிறர்செய்வினை யூட்டியொழிப் பானுப்
நனுகாமல் வினையவரை நாடிக் காப்ப
னுலகினிலென் செயலெல்லா முன்னிதியே நீயே
யுண்ணின்றுந் செய்வித்துஞ் செய்கின்று மென்று
நிலவுவதோர் செபலெனக்கின் றுன்செயலே யென்று
நினைவார்க் நவினைகளெல்லா நீங்குந் தானே.

(கொ-டு) நீயே உள் நின்றும் (செய்கின்றாய்) உலகினில் நிலவுவதோர் செயல் எனக்கு இன்று என் செயலெல்லாம் உன்விதியே யென்றும் செய்வித் தும் செய்கின்றாய் உன்செயலே என்றும் நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங் குந்தானே தலைவன் ஆய் ஞானத்தால் தனை அடைந்தார் தம்மை தானுக்கிக்காப் பன் நாடியும் அவரை நனுகாமல்வினை அவர் தாம்செய்வினை தன்னுல் பிறர் செய்வினை நலமுடனே ஊட்டி ஒழிப்பானுப் சலம் இலன்.

(பொ-ரை) இறைபணி நிற்றல்எவ்வாறெனின், எகனுப்நின்ற நிலையில்நின்று நீங்கி சில சமயம் தன்னுல் புறத்துச் செயல் நிகழுமாயின் அப்பொழுது அவர்

இறைவனைநோக்கி நீயேஎனக்கு உள்நின்று செய்கின்றுயாதலின் உலகின்கண் எனக்குச் செயலில்லை எனவும் என்னால் செய்யப்படும் இதம் அகிதங்க ளெல் லாம் நீ செய்யும் செயலே எனவும் எனக்கு பிறர் செய்யும் செயலெல்லாம் நீயே பிறரைக் கொண்டு செய்விக்கின்றுயாகலின் அவையும் நீ செய்யும் செய லேயன்றி பிறிதில்லை எனவும் இவ்வாறு அவனருளை அல்லது ஒன்றனையுங் கருதாராய் தம்மை இழந்து நிற்கப்பெறுவர். இறைபணியின் முறை இதுவே யாம். பணி என்பது செயல். இறைபணி என்பது எல்லாம் இறைவன் செயலாகக் காண்டல். இவ்வாறு நிற்கப் பெறுவாரிடத்து நான்செய்தேன் பிறர் செய்தாரென்று எண்ணுதலாகிய அஞ்ஞானமும் புண்ணிய பாவங்களாய்க் கட் டுப்படும் கன்மமும் பிரவேசிக்க மாட்டாவாய் ஒழிந்து விடும். ஆதலால் சிவபெ ருமான் அத்தன்மை யுடைய மெய்யுணர்வால் தன்னை அடைக்கலம் புகுந்தவரை தன்னைப் போலச் சுத்தராகச் செய்து பாது காத்தலும் மந்திர வலியால் அடங்கி இரை நுகரப்பெறுது கிடக்கும் பாம்பு போதனும் ஓர் சமயம் வாய்த்தவிடத்து சும்மாகிடவாது தீண்டுவாறு போல இறை பணி நிற்கும் அவரைச் சாரமீட் டாது ஒழிந்து கிடந்த ஆகாமியவினை அவருக்கு இதமகிதங்களை பிறர் செய்த விடத்து செய்த அச்சம்பந்தம்பற்றி அவருடைய இதம் அகிதங்களுக்குத் துணை யாய்ச் சென்று கூடுமாதலின் அவ்வாறு கூடும்படி செய்து பிறர் செய்த அவ ற்றின் பலன்களை அவர் நல்வழிப்படுதற் பொருட்டு அதிட்படுத்தி ஊட்டுத லுஞ் செய்வன். இங்ஙனம் முத்தர் செய்த வினையை அவருக்கு இறை பணி யாக்கியும் பிறர் செய்த வினையை அவருக்கு வினையாக்கியும் செய்தல் இறை வனுக்கு சலனமாகாதோ எனின், முத்தன் தன்னையே சார்ந்து நிற்றலினாலும் ஏனையோர் அங்ஙனம் சாராது நிற்றலினாலும் அவரவருக்குத் தக்கவாறு செய் தல் தகுதி யாதலின் சலன மின்மையறிக. (எ–று) (சு)

எல்லாம் சிவன் செயலென்றெண்ணும் இறைபணியில் நில்லா தார் செய்யுங் கிரியா யோகங்களால் பிறப்பு அறுதனைக் கூறுகின் றது.

நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து
நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்ந்து
நீடுபல காலங்க ணித்தமா யிருந்து
நின்மலனா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பி
லேதருமலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
யெறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

(கொ-டு) நின்மல ஞானத்தை இல்லார் நாடுகளில் புக்கு உழன்றும் என வும் இறைஞானங்கூறி அவர் ஏடெருட் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடை க்கே எறிபடுவிழியின் கடைக்கே கிடந்தும் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு இறைபணியாகிய நின்மல ஞானமில்லாத வர் புண்ணிய தேயங்களிற் சென்று புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும் புண் ணிய தலத்தைத் தரிசித்தும் வனத்திற் சென்று கிழங்கு பழம் முதலியவற் றைப் புசித்தும் மலையிலுள்ள குகையில் யோகத்திலிருந்தும் அந்த யோகப் பயி ற்சி வலியினல் பசியினையும் நீர் வேட்கை முதலியனவற்றையும் ஒழிந்தும் நெடுங்காலம் மரண மில்லாதிருந்தும் பிறப்பென்னும் தன்பத்தினின்றும் நீங்க மாட்டார் அவ்வினை பணியில் நிற்போர் இதழ் பொருந்திய மாலை யணிந்த கூந்தலையுடைய மங்கையர் கொங்கையிடம் தோய்பெற்று இன்பம் அனுபவி த்தலும் பிறப்பினின்று நீங்கி பெறுதற்கரிய வீட்டினைப் பொருந்தி சிவந்த குஞ்சித பாதத்தின்கண் அடங்கிநிற்பர். ஆகலால் எத்தனை நன்மைகளும் இறை பணித் தினையாகா. எத்தனைத் தீமைகளும் இதன் பயனைக் கெடுக்க மாட்டா வாம். (எ-று)

மேல் எட்டாஞ் சூத்திரம் கூறுவது செப்புளில் மங்கைபோடு கூடி இன்பம் நுகரினு மெனக்கூறியது நிற்போரது பெருமை யை உணர்த்துதற்கும் ஈண்டவ்வாறு கூறியது நிற்பவரது தொண் டின் பெருமை உணர்த்துதற்கு மாதலின் கூறியது கூறலென்னுங் குற்றமாகாமை யறிக. (டு)

இறைபணியில் நின்றோர் இந்திரியங்களோடு கூடினும் பற்றற் றிருப்பரென்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது.

அங்கித்தம் பினவல்லார்க் கனல்சுடா தாகு
மெளடதாஞ் திரமுடையார்க் கருவிடங்க ளேறு
வெங்கித்தைக் கன்மமிலாஞ் செய்தாலு ஞானிக்
கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத்
தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்னினை தவிர்ந்த
சக்காமுங் கந்திக்குச் சுழலு மாபோன்
மங்கிப்போய் வாதனைபா லுழல்விக்கு மெல்லா
மலங்களுமபி ன் காயமொடு மாயு மன்றே.

(கொ-டு) ஞானிக்கு எங்கித்தை (நின்று) கன்மமிலாம் செய்தாலும் இருவினைகள் சென்றணையா முன்செய்வினை மங்கிப்போய் வாதனையால் உழ

வ்விக்கும் இங்ஙித்தங்கிப்போம் பாத்திரமுங் கந்தித்து குலாலன் வினை தவிர்ந்த சக்காரமும் சுழலுமாம்போல் எல்லாமலங்களும் பின்காயமொடு மாயும் அன்றே.

• (பொ-ரை) இந்திரியங்களோடு கூடி இன்பம் அனுபவித்த காலத்தும் அவ்வின்பமும் இந்திரியமும் தன்னைத்தாக்காமலும் அதனால் மேல்வினை எறுமலும் இறைவனைக் கூடியிருப்பனென்றது எதுபோல வெனின், சுடுதற்கேதுவாகிய அக்கினியை மந்திரத்தினால் தம்பனஞ்செய்ய வல்லவன் அவ்வாறு தம்பனஞ்செய்து அவ்வக்கினியில் மூழ்கிக்கிடப்பினும் அவனை அது சுடாதவாறு போலும் கொலைசெய்வதற்கேதுவாகிய விடங்களைத்தடுக்கவல்ல மந்திர மருந்துகளைப் பெற்றுடையான் அவற்றை உபயோகப் படுத்திக்கொண்டு விடங்களை எல்லாம் நிறைய உண்டபோழ்தும் அவனை அவ்விடம் கொல்லாதவாறுபோலும் விருப்பு, வெறுப்புங்கள் நிகழ்தற்கேதுவாகிய இந்திரியங்களை மேற்கூறிய இறைபணியில் நின்று தன்னைவல் கேட்கும்படி அடக்கவல்ல ஞானிகள் எவ்விந்திரியங்களினின்று எத்தொழிலைச்செய்தாராயினும் அதுபற்றி அவர்மாட்டு விருப்பு வெறுப்பு நிகழ்ந்துமேலைக்குவித்தாகியசஞ்சிதமாதல்செல்லாது. ஏனைப் பிராரத்தவினையுந் தனதுசெயலை நீத்த அவர்மாட்டு பொருந்தமாட்டாமல் அக்கினியினால் வெந்தபுடைவை பார்வைக்கு வடிவம்போற் றோன்றினும் வடிவத்தின் தன்மையில்லாததுபோல சத்திகெட்டேபோய் வாசனைமாத்திரையாய் நின்று சிறிது தாக்கும். அவ்வாறு தாக்குதலினால் மேல் ஆகாமிய வினை எறுமாறில்லை. வாசனைமாத்திரையாய் நின்று பயனில்லாதுபோதல் எதுபோலவெனின், காயமிருந்தொழிந்த பாத்திரத்தில் அவ்வாசனை கிடந்து வாசித்தும் ஒரு கறிக்கு உபயோகமாதலில்லாததுபோலவும் குயவனானவன் குடத்தை வனையுமளவும் சுழற்றிவிட்ட திகிரியானது வனைந்தபின்னரும் அச்சுழற்றுதலாகிய தன் வேகமுள்ள அளவும் சுழன்றுமற்றொருகுடத்தினை வனைதற்கு உபயோகமாதலில்லாமை போலவுமாம். காயவாசனை பாத்திரத்தோடு ஒழிதல்போலவும் சுழற்சியானது வேகம்நின்றவுடன் ஒழிதல் போலவும் தங்கி நின்ற பிராரத்தவினையும் தேகமுள்ள அளவும் இருந்து தேகம் நீங்கும்காலத்து அதனுடன் நீங்கும். (எ...று)

வாசனை தாக்காதிருத்தற்கு கூறிய காயவுவமையும் திகிரி உவமையும் அவ்வாதனைபின் மேலுற்றுணர்மனை உணர்த்த நின்றன. ஆதலின் மிகைபடக் கூறலாகிய குற்றமின்று. அவை வருமாறு:—காயவாசனையான து தங்கியிருந்த பாத்திரம் உள்ள அளவும் அவ்வாசனை ஓரளவிதமாயிருத்தல் போல இறை பணி நின்ற காலத்தும் தேகம் நீங்கும் வரையும் ஓரளவிதமாயிருக்கின்ற தீவிர வாதனையை அவ்வுவமை குறிக்கும். திகிரி முதற்கணத்திற் சுழலும் சுழற்சி மறுகணத்திலில்லாது அவ்வாறே கணந்தோறும் குறைந்து குறைந்து

விசையில் நின்றுவிடுவதுபோல பிராரத்த வாதனை சிறிதுசிறிதாகக் குறைந்து வருகின்ற மந்தவாதனையை அவ்வுவமை குறிக்கும். (கூ)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

பத்தாஞ் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம்–கூ0கூ.

மேல் பத்தாஞ்சூத்திரத்தால் எகனெகி நிற்றல் இறைபணி நிற்றலென்னும் இரண்டினாலும் பாசநீக்கம் கூறியபின்னர் அவ்வாறு பாசநீக்கம் எய்திய ஆன்மாவிற்கு நிகழும் சிவானுபவத்தில் அனுபவிக்கின்ற ஆன்மா, அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் ஆகிய இம்மூன்றும் உண்டோ இல்லையோவென ஐயம் நிகழுமன்றே? அந்நிகழ்ச்சி பற்றி அம்மூன்றும் அத்துவிதமாய் உண்டென சிவப்பேறுகிய பயனை வருத்துக்கூறுதற் கெழுந்தது பதினொன்றாஞ்சூத்திரம்.

சிவப்பேறென்பதே முத்தி எனப்படும். முத்தி என்பது விடுதல். அம்முத்தியும் பரமுத்தி சீவன்முத்தி என இருதிறப்படும். பரமுத்தியாவது பரனோடுகூடி நின்று பாசத்தை விடுதல். ஜீவன்முத்தியாவது ஜீவனெகி நின்றும் பாசத்தை விடுதல். அதாவது ஜீவத்தன்மையைச் செய்வதாகிய பாசத்தை இழந்து நிற்றல். இவ்விருவகை முத்தியினுள் பரமுத்தியை விதேக முத்தியென்றுங் கூறுவர். அப்பரமுத்திதான் முதற்கண் நிகழ்வது. அவ்வாறுயின் "காயமொடு மாயுமன்றே" "காயமொழிந்தாற் சுத்தனெகி" என இந்நூலிற் கூறுவதினாலும் இகருத்துத் தோன்றக் கூறும் பிறநூல்களானும் உடம்பு நீங்கிய பின்னர் பரமுத்தி உண்டென்றுணரக்கிடக்கவும் அக்கருத்தொடு மூரணதோ எனின், மூரணது. என்னை? நீங்கிய உடம்பு ஆன்மாவிற்குத் தெரியாததுபோல உடம்பிருக்கும் பொழுதே அவ்வுடம்பைப் பற்றிய எண்ணம் சிறிதுமின்றி சாதனத்தில் உறைத்து நிற்கப்பெற்றால் உடம்பு தோற்றுதும் அப்பொ

மூதே சிவம் தோற்றும். இந்நிலையே பாமுத்தி. ஆயினும் பிராரத்த கன்மத்தால் மீண்டும் உடம்பு தோன்றவரும். தோன்றுங்கால் முன்னர் நிகழ்ந்த சிவானுபூதியைச் சிந்திக்கில் உடம்பு மறையும். இவ்வாறு உடம்பு தோன்றுதலும் மறைதலுமாகிய நிலை பிராரத்தம் உள்ள அளவும் நிகழும். ஆதலின் எக்காலத்தும் உடம்பு தோன்றுத பிராரத்த தேக ஒழிவு பாமுத்தி எனப்பட்டது. அப்பாமுத்தியாகிய சிவானுபவ நிலையே சாதனத்தில் உறைத்து நிற்றலால் முதற்கண் விளங்குவதான்றுதலின் பாமுத்தி முதற்கண் நிகழுமென்பதும் பொருந்துமாறு அறிக. இதனை இச்சூத்திரத்து முதற்செய்யுளில் "அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே" என்பதனாலும் அறிக. ஆதலால் பாமுத்தியாகிய சிவப்பேறு இப்பதினென்றாஞ் சூத்திரத்தாற் கூறுகின்றார்.

இச்சூத்திரத்தாற் பாமுத்தியே கூறுகின்றாரெனபதனை அவனுட் கூறுவதாகிய "எவ்விடத்தும்" என்றற்றொடக்கத்துச் செய்யுளை எடுத்துக்கொண்டு பாமுத்தியில் உயிருக்கு விடயமாவது ஒன்றின்மையின் வழிநூலாசிரியர் எவ்விடத்துமென்றது அமையுமாறென்னையென சிவஞானபோதச் சிற்றுரை பதினென்றாஞ் சூத்திராத்து முதலதிகாணத்தில் மாதவச் சிவஞான யோகிகள் அருளுமாற்றானுமறிக. அன்றியும் பன்னிரண்டாஞ் சூத்திரம் சீவன் முத்தனியல்பு கூறுகின்றது என்பதனாலேயே இச்சூத்திரத்திற் கூறுகின்ற முத்தி, பாமுத்தி என்பதுதானே விளங்கும்.

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணுமுபகாரத்தைச் சிந்தித்து அன்பு செய்தலினால் மலங்கள் நீங்கிச் சிவானுபவமுண்டாமென சூத்திரப்பொருளாத் தொகுத்துக் கூறுகின்றது.

காயமொழிந் தாற்சுத்த னெய் யான்மாக்
காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்
கேயுழுயிர் காட்டிக்கண் டிடுமா போல
வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ னித்தை
யாயுமறி வுடையனு யன்பு செய்ய
வந்நிலைமை யிந்நிலையி லடைந்தமுறை யாலே
மாயமலா நீங்கியான் மலரடிக்கீ ழிருப்பன்
ஞாநாத சிவாநாடவ மருளிக் கொண்டே.

(கொ-டு) காட்டக் கண்டிடுந்தன்மை உடைய கண்ணுக்கு ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமாபோல உயிர்க்கு ஈசன் காட்டிக்கண்டிடுவன் காயம்ஒழிந்தால் சுத்தனாகி ஆன்மா இத்தை ஆயும் அறிவு உடையனாய் எனவும் மருவிக் கொண் டேஇருப்பன் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) காட்டக்காணும் தன்மையுடைய கண்ணுக்கு உருவத்தைக் காணும்படி காட்டியும் அதாவது அறிவித்தும் கண்ணெதி நின்று அவ்வுருவத் தைக் கண்டும் உயிர் உபகரிப்பதுபோல அவ்வுயிர்க்கு விடயத்தை அறியும்படி அறிவித்தும் உயிரோடுகூட நின்று விடயத்தை அறிந்தும் இறைவன் உபகரி த்து வருவன். ஆதலான் எல்லாமலங்களும் பின் காயமொடு மாயுமென மேலைச் சூத்திரத்து இறுதியில் கூறியவாற்றான் காயமொழிந்த பின்னர் மும்ம லங்களும் நீங்கப்பெற்று சுத்தனதற் குரிய ஆன்மா முதல்வன் அத்துவிதமாய் நின்று அறிவித்தும் அறிந்தும் வருகின்ற உபகாரமாகிய உரிமையை உறுதியா கப்பற்றி அறிந்துகொண்டு நிற்கப்பெற்றால் அம்முதல்வனை அடையவேண்டு மென்ற இச்சை இடையறாது நிகழும். அங்ஙனம் அறிவும் இச்சையும் பிறி தொன்றிற் சேராவின்றி அத்துவித நிலை ஒன்றே பற்றி முதல்வன் திருவடிக் கண் ஒருங்கு நிகழுமே காயமொழிந்த பின் மல நீங்கி சுத்தனாய் நிற்கும் முறை மையை காயத்தோடு நிற்கும்பொழுதே கைகூடப்பெறும். அவ்வாறு பெறுத லால் எனைக்கிரியையினையும் எல்லாமலங்களையும் இம்மைக்கண்ணே நீத்தொ ழித்து இறைவனுடைய அறிவிச்சைகளோடு ஆன்மாவாகிய தன்னுடைய அறி விச்சைகள் ஒற்றுமைப்பட்டு அவ்விறைவனது செங்கமலமலர் போலும் திருவ டியைக் கூடி மாறுபடாத சிவாநுபூதியே சுவாநுபூதியாய்க்கொண்டு வாழ்வன். (எ...று)

இச்சூத்திரத்தில் மேலைச் சூத்திரத்தில் கூறாது விடுத்த குற்ற மகலுமென்பதை விரித்துக் கூறுகின்றாராதலின் இச்செய்யுள் முக் கூற்றை உடையது. ஆயினும் முதனூல் விதியின்படி இச்சூத்தி ரத்தை இரண்டு கூறாக்கி மேலைச் சூத்திரக்கூற்றை ஒரு கூறாகப்பிரித் தெண்ணுது முதற்செய்யுளுடன் தொகுத்து வைக்கப்பட்டிருகின் றது. அம்மூக்கூற்றுள் மேலைச் சூத்திரத்தின் ஒழிபாகிய கூறு—

காயமொழிந்தாற் சுத்தனாகி அந்நிலைமை இந்நிலையில் அடை ந்த முறையாலே மாயமெலாம் நீங்கி

இச்சூத்திரத்து முதற்கூறு—ஆன்மா காட்டக்கண்டிடும் தன் மையுடைய கண்ணுக்கு ஏயும் உயிர்காட்டிக் கண்டிடுமாபோல ஈச ன் உயிர்க்குக்காட்டிக் கண்டிடுவன்.

இரண்டாங்கூறு—இத்தை ஆயும் அறிவுடையனைப் அன்பு செய்ய அரன்மலரடிக்கீழ் மாறுத சிவானுபவம் மருவிக்கொண்டே யிருப்பன்.

சிவானுபவமுடைய முத்தருக்கு சிவமேயன்றி பிறபொருள் தோன்றுதெனக் கூறுகின்றது.

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வரிக்கவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பஞானமாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சிவன்முத்தர் சிவமேமகண் டிருப்பர்.

(கா-டு) கலக்கந் தருவயிந்தவத்தின் ஞானம் எனவும் போகத்தங்கிய ஞாதிருஞான ஞேயஞானம் சங்கற்பனை ஞானமாகும் எனவும் இவையெல் லாங் கடந்த சிவஞானம் திருஞானமெனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு அத்துவிதமாய் நின்று உபகரிக்கும் இறை வன் உரிமையை ஆயும் அறிவாகிய பரஞானத்தால் அச்சிவத்தை நோக்கி அன்பு செய்யப்பெற்றவர் அச்சிவம் ஒன்றனையே அறிந்து நிற்பான்றி பிராரத்தவினை தாக்குதற்குரிய ஏனைப்பொருள்களை ஒரு சிறிதும் காண்பாரல்லர். அப்பொ ருள்களைக் காணவரும் ஞானங்கள் கருவிகளோடு கூடிநின்றறியும் பிரத்தியட் சம், அனுமானம், ஆகமமென்னும் சுட்டுணர்வின் பேதங்களாகிய அனைவ ஞானங்களாம். குருவினிடத்துக் கேட்கும் சாத்திரஞானமோ எனின், அது சுத்த மாயாகாரியமாகிய சொல்லும் பொருளுமான ஞானமாம். அச்சாத்திரம் பல வேறுவகைப்பட விரிந்து கிடக்குமாதலால் இது சரியோ அது சரியோ என்ற கலக்கமுண்டாகும். அக்கலக்கந் தீர்வதற்காக அப்பொருளை ஆராய்வதான சிந்தித்தல் ஞானமோவெனின், அது ஆராய்ச்சி ஞானமாம் சிந்தித்தபின்னர் தெ ளிவதாகிய சாதனஞானமோவெனின், அதுகாண்பானும் காட்சியும் காணப்படுபொ ருளுமாகிய பேத ஞானமேயன்றி அநுபூதி ஞானமன்று. ஆதலால் இவையனைத் தினும் மேலாய் இவ்விடத்திற் கூறப்பட்ட நிட்டையாகிய சிவஞான மொன் றே சிறப்புடைய ஞானமாம். இதனைப் பெற்ற சீவன் முத்தர் சிவம் ஒன்றே கண்டிருப்பான்றி பிராரத்த வாதனையிற் படுவாரல்லர். (எ...று) (உ)

திவ்விய தேகத்தோடு இருக்கலே முத்தியென்பார்மை மறுத்து சிவானுபவ முடையவர்க்கு மாயாமலம் பற்றறக் கழியு மெனக் கூறுகின்றது.

அநாதியுட லொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மா
லாயழிந்து வருதலா லந்த மில்லை
பிறதிபருள் பெற்றவர்க ணித்தவுரு வத்தைப்
பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவ!
மிறுதுநிலை யிதுதானுங் காய முண்டே
லிருங்கன்ம மாயைமல மெல்லா முண்டா
மறுதிதரு முடலாதி காரியத்தா லாதி
மலமறுக்கு மருந்தற்ற லுடன்மாயுங் காணே.

(கொ-டு) உடல் அநாதி ஒன்றினைவிட்டு ஒன்று பற்றிக் கன்மால ஆய்ப் பின் அழிந்து வருதலால் அந்தம் இல்லை ஆதிஅருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனில் காயம் உண்டேல் மாயை இருங்கன்மம் மலம் எல்லாம் உண்டாம் இதுதானும் இறுதுநிலை இதுவும் பதமே பெறும் மறுதிதரும் உடல்காரியத்தால் ஆதி.

(பொ-ரை) ஆன்மாக்களுக்கு அநாதியே கன்மத்திறல் நீரோட்டம் போலதொடர்ச்சியாய் தேகம் உண்டாகியும் அழிந்தும்வரும். ஆதலால்யாதேனும் ஒருதேகம் இல்லாதநிலைஇல்லை. அவ்வாறு ஒரு நிலை உண்டென்று கூறுதல் பொருந்தாது. ஆதலால் முதல்வனருளைப் பெற்ற இடத்தும் தோற்றியழியும் உடம்பு போலின்றி நித்திய மங்கள திப்பிய சரீரத்தைப் பெற்றிருத்தலே முத்தியென்று உருவசிவ சமவாதிகள் கூறுவர். அவ்வாறுயின் உடம்பு உளதாகவே அதற்குக்காரணமாகிய மாயையும் கன்மமும் ஆணவமும் ஆகிய அனைத்தும் விட்டு நீங்குதலில்லை. ஆதலின் அந்நிலை துன்பம்பயக்கும் நிலையேயாம். அதனை முத்தியென்று நூல்களிற் கூறுவதற்கு தாத்பரியம் பதமுத்தியென்பதேயாம். அன்றியும் இவ்வுடம்பு சூக்கும சரீரத்தினின்றும் தோன்றப்படுதலினால் ஆதியேயாம் அநாதியன்று. அதுவும் ஆன்மாவை அநாதியே பற்றி இருக்கின்ற ஆணவமலமாகிய நோயைத் தீர்த்தற்கு மருந்தாகத் தோற்றுவதாம். ஆதலால் ஆணவமலம் நீங்கிய விடத்து உடம்பு நீங்குவதே அன்றிமலம் நீங்கி அருள் பெற்ற முத்தியிலும்உடம்பு உண்டென்றல் பொருந்தாது. (எ...று) (டு)

சிவானுபவ முடையார்க்கு ஆணவமலம் பற்றறக் கழியு மெனக்

தெரிவரிய வெப்ஞ்ஞான ந்தோச்ந்த வாதோற
சிவப்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னாகு
முரியபல தோஷ சத்தாற் றடுப்புண்ட விடமு
பொன்னொளியி னெனிமுன்ன ரிருளஞ் தேகற்றின்
வருபரல்சேர் நீர்மருவு கலங்கலுந்தோ லாகி
மாயாதி தன்சத்தி மாய்ந்து காயந்
திரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ்
சோதவகைதானுந் தேயு மன்றே.

(கொ-டு) உரியமலம் மாபாதே தன்சத்தி மாய்ந்து காயம் திரியும் அள வும் உளதாய் பின்பு காயஞ்சோராதவகை தானுந் தேயுமன்றே தேற்றின்வருபர ல்சேர் நீர்மருவு கலங்கலும் ஒள் எரியின் ஒளிமுன்னர் இருளும் ஒளடதத்தால் தடுப்புண்ட விடமும் போலாகி.

(பொ-ரை) மேற்கூறிய பரஞானத்தைப் பெற்ற பொழுதே சிவம் பிர காசிக்கும். அப்பொழுதே சீவன் முத்தனவன். சீவன் முத்தியாவது சிவம் பிர காசிக்கப்பெற்றும் பிராரத்த தேகத்தோடு கூடிய நிலையாம். தேகத்தோடு கூடி யிருப்பினும் சகசமாகிய ஆணவமலம் தனது சக்திகெட்டு வாசனை மாத்திரை யாய்உடம்புள்ள அளவும் நின்று உடம்பு நீங்குங்கால் பிறிதொரு பிறவிக்கேது வின்றி அவ்வுடம்போடு பற்றறக் கழியும். மலமிருந்தும் அதன்செயலில்லா மற் போவது எவ்வாறெனின், தேற்றான் விரை சேரப்பெற்ற நீரில் அடங்கியி ருக்கும் கலங்கல் யாதானும் ஒரு காரணத்தால் மேற்படினும் மீண்டும் அத் தேற்றான்விரை அடக்கிவிடும். அதுபோல பரஞானத்தால் அடங்கியிருக்கும் மலம் பண்டை வாசனையால் மேற்படினும் மீண்டும் அப்பரஞானம் அடக்கி விடும். அடங்கியாவது மலமிருத்தலினால் பிறிதொரு பிறவியைத் தாராது கழி யுமென்றல் எவ்வாறு கூடுமெனின், மிகுந்த அக்கினிப் பிரகாசத்தின் முன் னர் இருளில்லாதது போல் தேகம் நீங்கிய பின்னர் சதாசிவம் பிரகாசிக்கப் பெறுவாதலின் அவரிடத்து மலம் பற்றறக் கழியும். கழியினும் அக்கினிப் பிரகாசம் இல்லாதவிடத்து இருளிருப்பது போல ஏனைப் பெத்தரிடத் தில் மலமிருக்கும். அவ்வாறுயின் தேகத்தோடு கூடியிருகும் போதே சிவம் பிரகாசித்து விட்டபடியால் சீவன்முத்தி நிலையினும்மலம் அறவேயில்லை யென் றுசொல்லக்கூடாதோவெனின், கூடாது. எதனாலெனின், மருந்தினாற்றப்பட் பட்டிருக்கும் நஞ்சமானது மருந்தின் வலியின்குறைவையெதிர்பார்த்திருப்பது போல் சீவன் முத்தரிடத்து சிவபாவனையினின்றும் நழுவுதலேமலம் எதிர் பார்த்து அடங்கி இருக்கும். ஆதலால் சிவம் பிரகாசிக்கப்பெற்ற சீவன் முத்தி நிலையினும் சதா சிவபாவனைசெய்து தேகம் நீங்கப்பெற்றால் மலம் பற்றறக்கழி யும். (எ...றி)

(9)

ஆணவமலம் அநாதிபாதலால் பற்றறக் கழியா தென்பாரை மறுத்து பற்றறக் கழியு மென வலியுறுத்து கின்றது.

ஆணவந்தா ணநாதிபந்த மடையா தாகு.
மடையினந்த வான்மாவு மழியுமெனிற் செம்பிற்
காணலுறுங் களிம்பிரத குளிகைபரி சிக்கக்
கழியுஞ்செம் புருநிற்கக் கண்டோ மன்றே
தாலுயின்றன் கழலணையத் தவிருமலந் தவிர்ந்தாற்
றூன்சுத்த ஞாயிருக்கை முத்தியான் றூளைப்
பூணைவெண் டுவதான்று மில்லெனினு னருக்கன்
புகுதவிருள் போமடியிற் பொருந்தமலம் போமே.

(கொ-டு) இரதகுளிகை பரிசிக்கச் செம்பில் காணலுறுகளிம்பு கழியும் எனவும் மலம் தவிரும் எனவும் பொருந்தவே மலம்போம் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) முற்கூறிய ஆணவமலம் அநாதி நித்தமாதலால் முத்தியில் அதுஅழியுமாயின் அநாதி நித்தமாகிய ஆன்மாவும் அழியுமெனப்பட்டு இரு பொருளும் நித்தமென்பது இழுக்காய் முடியும். ஆதலின் முத்தி நிலையினும் சகசமாகிய ஆணவமலம் நீங்குதாறில்லை யென்பர் பாடாண வாதசைவர். மலத் தோடு கூடி அறியாமையாய் அடங்கி இருத்தலின் பாடாணவாதியெனப்பட் டார் பாடாணமென்பது கல். அநாதியாகிய செம்பினிடத்து அநாதியாயுள்ள களிம்பு இரத குளிகை பரிசித்தமாத்திரத்தில் நீங்கி செம்பு பொன்னுருவாய் நிற்கக்காண்பதுபோல் இறைவன் றிருவடியாகிய மெய்ஞ்ஞானம் சாந்தமாத் திரையே உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிக்க உயிர் சிவமாய் நிற்ற ற்கு இழுக்கில்லையாதலின் அப்பாடாணவாதசைவர் மதம் பொருந்தாது. இனி மலம் நீங்கப்பெற்ற மாத்திரையே மெய்ஞ்ஞானம் சாரும். அதுவே முத்தி. மலம் நீங்கியதன் மேலும் திருவடி யடைதல் வேண்டா மென்பர் பேதவாத சைவர் இவர் சிவபேறு கலவாமையின் பேதவாதி யெனப்பட்டார். இருள் நீங்கி சூரியனொளி பிரகாசித்தவிடத்தும் சூரியனொளியோடு கண்ணொளி கலந் தால் இருள் நீங்கும். கலவாது இமைகளால் மூடப்பெற்றிருப்பின் கண்ணு சகு இருள் நீங்காதவாறுபோல ஆன்மாவின் அறிவுக்கு மெய்ஞ்ஞானம் பிரகா சித்து ஆன்மா இறைவனுடன் கலத்தால்மலம் பற்றறக்கழியும். இன்றேல் ஆன் மாவினிடத்து மலம் பற்றறக்கழியாது. ஆதலால அப்பேதவாத சைவர் மத மும் பொருந்தாது. (எ...று) (9)

அநாதியான ஆணவமலம் கெடுமென்பதற்கு உவமை கூறி கெடுமென்ற ஏனைப் பெத்தரிடத்திருத்தலினால் நித்தத்திற் கிழுக்கில்லை எனக்கூறுகின்றது.

கொல்லி னுக்குங் கவிகுடிக ளாதி யாதிய
கொல்லுலைவிட்டு நீஙகுமவைக ணின்றகில நிகத்தீர்
சால்பிரிடம் நுகரும்பு வரிசிலின்பா லில்லை
தொகுத்தொருங்கு மடம்பொருகுசெருப் பிறன்றி டாவா
மெல்லினவை விரிதாமரை யினைவதோல வுணவை
மேலாரை மடல்கண்ம மகரங்கிளிட்டே நீங்கு
கல்லசிவ ணத்நிரின்கட் பிடிக்தான் மாலை
கடாஅகந்நிற்கு மாதலா னரசுமின் குழீம.

(இதன்-பி) கொல்லினுக்கு ஆதியாகிய (மூன்ன) கவிகு உமிகள் கொல்லை விட்டுங்கத்தூய்மைகள் நின்றகிலங்கழ்ந்து தொகுத்து இருந்தாம் மற்றொரு கொல் தொன்றிடாவாம் சொல்லியிடன் நுகராற்ற அரிசியின்பால் இல்லை மெல்லிய தோல் அறிவுகளிலும் நுல்லைமீபோல அதாதி அனுவனை மேவுமலம் உடம்புகண்மம் கல்ல சிவழுத்தியின்கண் விட்டிடாங்குமும்.

(பொ-ரை) இதற குளிகை பார்சித்த செம்பிலும் களிம்பு தொக்கியிருக்கும். அதுபோல சிவம் பிரகாசித்த ஆன்மாவிடத்தும் மலம் தொக்கியிருக்கும். ஆதலால் அப்வுவமையினால் மலம் அழ்ந்தும் ஆன்மா அழியாதென்று சாற்றுதல் பொருந்தாது வென்னின், அரிசியொடும் சகசமாய் நின்ற முளை தவிடு உமிகள் அவ்வரிசியை விட்டுத் தெட்டொழிய அவ்வரிசியை கேடின்றி நிலைபெறுதல் கண்டாம். அங்ஙனம் நீக்கிய அவ்வரிசியின் கண்ணும் முளை தவிடு உமிகள் தீட்டுக் முறையினால் அடங்கி நிற்றலானும் அவ்வரிசி வேறொரு மெல்லுதற் தோன்றுதற்கு அதாவது முளைப்பதற்குக் காரணமாதல் சொல்லாமையால் அம் முளை முதலியன அடங்கி இருக்குமென்று சொல்லுதற்கு ஓரியைபின்றி பாகம் செய்வதற்குரிய தொழிலால் மலம் மலை நீங்கிவிடுமாதலின் அனை இல்லை யென்பதே தேற்றம். அதுபோல அநாதியாய உயிர்களோடு சகசமாய் நின்ற மும் மலங்களும் முத்திநிலையில் விட்டொழியுமென்றே கொள்க. விட் டொழியினும் ஏனைப் பெத்தரிடத்து இருத்தலால் அம்மலங்கள் தத்தப் பொருளாதற்கும் இழுக்கில்லை. (எ...று)

உன்மை விளக்கம் தான்றும் நூலில் நிக-வது செய்யுளில் இத் தை தவிர்வித்தல் மலம் வினைக் கூறியிருத்தலால் முத்திநிலையில் மலம் நீங்கு மென்றல் எவ்வாறு பொருந்துமெனின், துன்பத்தை விளைவிக்கும் மலம் இன்பத்தை விளைவிக்க மாட்டாது. மலம் நீக் கமே இன்பத்தை விளைவிக்கு மென்பதை அவ்வாறு கூறினாதலின் மலம் நீங்குமென்றல் பொருந்தும். அச்செய்யுளில் இல்லை யென்னும் உணர்விற்கு விடயமாய் மலம் நின்றவாறு அறிக. இது அநுபவத்தினுதுவெனப்படும். ஆயினும் இல்லையென்று கூறவேண்

டிய மலத்தை உண்டென்று கருதும் வண்ணம் கூறியது பொருந்து மோவெனின், சுருக்கிக் கூறவேண்டிய இடங்களில் அவ்வாறு கூறுதல் நூல் வழக்காதலின் பொருந்தும். இதனை "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே, யெடுப்பதூஉ மெல்லா மழை" என்னுந் திருக்குறளாலு மறிக.

பெத்தான்மாவை நணுகி நிற்றலிஞல் மலம் நித்தமென்ற இதனுனே சில ஆன்மாக்கள் நித்திய பெத்தரா இருப்பரோ எனின், அன்று. ஒவ்வொரு ஆன்மாக்களும் முத்தியடைதற்குரியனவேயாம். இதுபற்றிய சங்கை உத்தரங்களை இவ்விடத்து விரிப்பிற் பெருகும். "விண்டவர்கண் மூலமலம் வீற்றிவர மீளார், பண்டைமுறை நாடுடல் படைப்புநிலை யிறுங், கண்டனை யிழந்த உயிர் காரணனி டத்தே, யுண்டுலவி டாதகிழி யுற்றபொரு ளொத்தே" என்னும் சிவதருமோத்தரச் செய்யுளாலும் "பிறந்த நாண்மேலும் பிறக்கு நாள் போலுந், துறந்தோர் துறப்போர் தொகை." என்னுந் திருவருட்பயனாலும் பிறவாற்றாலும் உய்த்துணர்ந்துகொள்க.

இதனுல் மலம்அநாதியென்றும் அதுஅழியுமென்றும் அதனுல் ஆன்மா அழியாதென்றும் வலியுறுத்தப்பட்டன. (சூ)

மூதலதிகாணம்.

ஆன்மா காட்டக் கண்டிடும்.....கண்டிடுவன் என்பது.

அனுதி சம்பந்தமான ஆணவமலத்தினின்று முத்திக் காலத்து உயிர் நீங்குமாறுபோல பெத்தமுத்தி இரண்டினும் இறைவனை விட்டு உயிர் தனித்து நிற்றல் இல்லையெனக் கூறுகின்றது.

எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி டாவுயிர்க ளீசன் றானுஞ்
செவ்விதினி லுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப ,

னிவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்று
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிவ ஞதலாலு
மரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே.

(கொ-டு) எவ்விடத்தும் இறை அடியை இன்றி உயிர்கள் அமைந்திடா ஈசன்ரு னும் அம்முதலெழுத்துக்கெல்லாமாய் நிற்கும் அவ்வுயிர்போல் இவ்வுயி ர்கள் தோற்றும் போது அவனையின்றித் தோற்ரு இவற்றினுக்கு நின்றிடுவன் ஒன்றை அறிந்து இயற்ற செவ்விதினின் உளம்புகுந்து செய்தியெலாம் உணர் ந்து சேட்டிப் பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன் ஆதலால் நாம் அரனடியை அகன்று நிற்பது எங்கேயாமே.

(பொ-ரை) மேற்கூறியவாறு அநாதியான ஆணவமலத்தினின்று நீங்கு வதுடேதல அநாதியாகிய இறைவனை விட்டும் உயிர் நீங்குமோ எனின், எக் காலத்தும் இறைவனை விட்டு உயிர் நீங்காது. எதனலெனின், பெத்த முத்தி இரண்டினும் ஆன்மாக்கட்கு இறைவன் திருவடியை இன்றி அறிவு செயல்கள் விளங்குதலும் விளங்கியபின் விடயத்திற் சென்று பற்றுதலும் கூடாவாம். அக்காரங்களை இயக்குதற் பொருட்டு அகரமாகிய நாதம் அவ் வக்காரங்களின் உடன் நிற்குமாறுபோல ஆன்மாக்கட்கு அறிவுசெயல் விளங்கு தற் பொருட்டு இறைவன் அவ்வான்மாக்களோடு கலந்து நிற்பன். இது காட் டும் உபகாரம். அங்ஙனம் விளங்கிய அறிவுசெயல்கள் விடயத்திற்சென்று பற்றுதற் பொருட்டு அவ்வுயிர்களை இறைவன் இடமாகக்கொண்டு உயிர்கள் செல்லும் வழி எல்லாம் இறைவன் அறிந்து செலுத்தி விடயங்களினும் உட னைகக் கலந்து நிற்பன். இது காணும் உபகாரம். ஆதலால் ஆணவமலத்தி னின்றும் நீங்கி முத்தியில் உயிர்வேறு நிற்பதுபோல இறைவனை விட்டு நீங்கி தனித்து நிற்றல் பந்த முத்தி இரண்டினுமில்லை. (எ.. று)

இதனல் மலம் அநாதியாய்க் கூடியுள்ளதாதலால் பிரியுமென வும், இறைவன் அநாதியாய்க் கலந்துள்ளானுதலால் பிரிக்கப்படாத னெனவும், கூடுதலுக்கும் கலத்தற்கும் வேற்றுமை உண்டெனவும் அறிக.

காட்டும் உபகாரமேயன்றிக் காணும் உபகாரமும் உயிர்க்கு வேண்டப்படுமென்பதை கண்ணொளியினிடத்துக் கலந்திருக்கின்ற விளக்கொளியில் வைத்தும் அறியலாம். அதாவது கண் ஒரு விட யத்தைக் காணவேண்டுமாயின் அக்கண்ணினிடத் திருக்கின்ற இருளை விளக்கொளி மாற்றுவதோடு பார்க்கப்படும் பொருளினிட்

க்குமம் இருளை மாற்றல் வேண்டும். அவ்வாறின்றி கண்விளக்கொளி யோடு கூடினும் பொருள் இருளில் இருக்குமாயின் பொருளை அறிய முடியாது. ஒளியோடு கூடிய பொருளை இருளிலிருக்கின்ற கண் பார்க்கின்றதே எனின், அவ்விருளிலிருக்கின்ற கண்ணொளி பொருளிற் கலந்திருக்கின்ற விளக்கொளியோடு சென்று கலந்து பொருளை அறிவதே யன்றி பிறிதில்லை என அறிக. இதனால் கண்ணொளிக்கு காணுந்தன்மையும் செல்லுந்தன்மையும் உண்டெனவும் அவற்றுள் கண்ணொடுகூடிய இருள் காணுந் தன்மையைத் தடுக்குமேயன்றிச் செல்லுந் தன்மையைத் தடுக்காதாதலின் கண் இருளோடு கூடியிருப்பினும் ஒளியோடுகூடிய பொருளை அறிதல் கூடுமெனவும் அறிக. ()

முதலதிகரணம் முடிந்தது.

ரண்டாமதிகரணம்.

இத்தை ஆயுமறிவுடையனை.....இருப்பன் என்பது.

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் செய்யினும் அவ்வாறு செய்கின்று னென்பதை , அறிவுடையபக்குவமோ யன்றி அபக்குவர் அறியாரெனக் கூறுகின்றது.

எங்குந்தா னிறைந்துசிவ னின்று ணுகி
லெல்லாருங் காணவே வேண்டுந்தா னென்னி.
லிங்குந்தா னந்தகருக் கிரவியிரு ளாகு
மீசனருட் கண்ணில்லார்க் கொளிபாயே யிருளாம்
பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தை யடையப்
பரிதியலர்த் திடுவதுபோல் பருவஞ்சே ருயிர்க்குத்
துங்கவான் ஞானக்கண் கொடுத்தருளி ணுலே
சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.

(கொ-டு) சிவன் எங்குந்தான் நிறைந்து நின்றுணுகில் எனவும் இரவி அந்தகருக்கு இருளாகும் எனவும் ஈசன் ஒளியாயே அருட்கண் இல்லார்க்கு

இருளாம் என்னும் ஞானக்கண் அான் தங்க அருளினுலே கொடுத்து எனவுங் கூட்டுக.

(பொ-ரை) மேற்கூறியவாறு முதல்வன் எங்கும் நிறைந்து நின்று உபகரித்து வரின் யாவரும் என் அறியவில்லை எனின், ஆதித்தன் எங்கும் விளக்கமாயிருப்பினும் அந்தகருக்கு அறியவராது இருளாயிருப்பது போல முதல்வன் உபகாரம் விளக்கமாயிருப்பினும் அருட்கண்ணுடையார்க்கன்றி ஏனையார்க்கறியவராது. சேற்றிற்றோன்றிய தாமரை மலர்களுள் பக்குவமுடைய தாமரை மலரைமட்டும் ஆதித்தன் விரியச் செய்தல் போல அவ்வருட்கண்ணும் பக்குவமுடையார்க்கன்றி கிடைக்கப் பெறாது. பக்குவமுடையார்க்கும் அவ்வருட்கண் முதல்வன் பெருங்கருணையால் வகுக்கப்பெற வேண்டுமே யன்றி தானே பெறமுடியாது. ஆகலால் முதல்வன் அருளால் அவ்வருட்கண்ணைப் பெற்றுடையார்க்கே அவ்விறைவன் அறிவிற்கறிவாய் நின்று உபகரித்து வரும் அத்துவித நிலை இனிது விளங்கும். (எ-று) (அ)

முத்தநிலையை வேறு வேறு கூறும் சுசுவர அவிகாரவாதி, பரிணாம்வாதி, ஐக்கியவாதிகளை மறுத்துரைக்கின்றது.

சென்றவினை நிறுத்தபோலச் சிவனிற்ப வென்னிற்
சென்றவினை மவன்முதலி சிவத்தையவினைந் தொன்றுப்
நின்றதுயிர் கெட்டென்னிற் கெட்டதவை வின்று
நின்றதற் கேதுவில்லை யவினைத்துகெட்ட தென்னிற்
பொன்றினதற் முத்தியினைப் பெற்றவரார் புகனீ
பொன்றுவதையே முத்தியெனிற் புருடனித்த னன்று
மொன்றியிரு நீரோடுநீர் சேர்ந்தாற்போ லென்னி
னொருடபொருளா மதிபதியோ டுயிர்பொருளான் றன்றே.

(சொ-து) உயிர்கெட்டு சிவத்தை அணைந்து ஒன்றுபட்டு நின்ற தென்னின் எனவும் நீரோடுநீர் சேர்ந்தாற்போல் ஒன்றியிடும் என்னின் எனவுங்கூட்டுக.

(பொ-ரை) அருட்கண் இறைவன் கொடுக்கப்பெற்று அக்கண்ணிற்கு இறைவன் தோன்றுவானென்று கூறல் வேண்டாம். மாத்தினிழல்போல் முதல்வன் விகாரமின்றி நிற்ப அந்நிழலைச் சென்றணையும் வழிச்செல்வோரைப் போல் உயிர்களுக்குப் பருவம் வந்தவிடத்து தானே ஞானக் கண்ணைப்பெற்று அம்முதல்வனைக் கூடுதல் அமையுமென சுசுவர அவிகாரவாதிகள் கூறுவர். இவ்வுவமையில் மாநிழலிற்கு வழிச் செல்வோரை அணையச் செய்யும் சுதந்தரமின்மையும் சென்றவனுக்கு அணையுஞ் சுதந்திரவுண்மையுங் காணப்படுதல் போல சுசுவனுக்கு சுதந்தரமின்மையும் உயிருக்கு சுதந்தரவுண்மையும் காண

ப்படுதலின் இது பொருந்தாது. இனி பரிணம வாதிகள் உயிர்கெட்டுக்கூடி முதல்வனடியில் ஒன்றாய்ப் போமென்பர். கெட்டபின் கூடுமாறின்று, கெடாது நின்று கூடுமெனின், கேடின்மையினால் ஒன்றுதல் பெறப்படாது, கூடியபின் கெட்ட தெனின், கெட்ட விடத்து முத்தியினைப் பெற்றவர் யாவரென்னும் வினாவிற்கு விடையின்று. கேடே முத்தி எனின், உயிர் நித்தமாதல் செல்லாது. ஆதலால் அவர் கூற்றும் வழுவாம். இனி ஐக்கியவாதிகள் நீரிலே நீர் சேர்த்தாற் போல உயிர் முதல்வன் திருவடியைச் சேர்ந்து ஒன்றுமென்பர். உவமானப் பொருள சமமாதற் போல முதல்வனும் உயிரும் தம்முள் சமப் பொருளாதல் செல்லாமையின் அதுவும் பொருந்தாது. (எ-று) (கூ)

சிவசமவாதி கூறும் முத்தியை மறுத்துரைக்கின்றது.

செம்பினிட முளிகையினுஞ் களிம்பற்றுப் பொன்னுப்ச்
செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற் சிவ
னம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்ல
னற்குளிகை போலவர னணுதுமலம் போக்கி
யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு
மக்குளிகை தானும்பொன் னாகா தாகு
மும்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய
னுபிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே.

(கொ-டு) நற்குளிகை போல அரன் பொன் போல் அல்லன் அருங்களங்கம் அறுக்கும் அக்குளிகை பொன்றானும் ஆகாது உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்குமே உரித்து உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்குரியனாகும் நணுகும் மலம்போக்கி அம்பொன் அடிக்கீழ் வைப்பன்.

(பொ-ரை) இனி சிவசமவாதிகள் செம்பினிடத்துக் களிப்புள்ள அளவும் பொன்னுடன் ஒத்து ஒன்றுதலில்லையாயினும் இரத குளிகையினால் களிம்பு நீங்கிய விடத்து செம்பு பொன்னாகியேனும் பொன்னுடன் ஒத்து ஒன்றாகும். அது போல மல நீங்கியவிடத்து உயிர் முதல்வனோடு ஒத்து ஒன்றாகுமென்பர். களிம்பை நீக்கும் ஆற்றல் பொன்னுக்கு இல்லாமையால் அவ்வாற்றலையுடைய இரத குளிகையை முதல்வனோடு ஒப்பிடுவதன்றி பொன்னை முதல்வனோடு ஒப்பிடுதல் இவ்விடத்துப் பொருந்தாது. அன்றியும் களிம்பு நீங்கிய பொன் குளிகையைப் போல் களிம்பை நீக்காது. அதுபோல மல நீங்கிய உயிர் சிவானுபவத்திற்கு உரித்தாதலன்றி ஐந்தொழிற்கு உரித்தாதல் செல்லாது. முதல்வனே ஐந்தொழில் செய்தற்கு உரிமையுடையவனாவன். அம்முதல்வன் உயிர்களிடத்துப் பொருந்திய மலத்தை நீக்கி பொன்போலும் தனது திருவடிக்கீழ்

வைப்பன். இதனால் பொன்னுக்கு ஒப்பாக திருவடியைக் கூறினதேயன்றி இறைவனைக் கூறியதன்று. திருவடிக்கீழ் வைப்பன் என்றதனால் அடக்கி வைப்பனெனப்பட்டு அவன் செய்யும் ஐந்தொழிலை உயிர் செய்ய முடியாதென்பதும் விளங்கும். ஆதலால் சிவசமவாதம் கூறும் அவர் மதமும் அடாது. (எ...று) (கo)

இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள அந்தரங்க பேதங்களை பெடுத்துக் காட்டி ஆன்மா இறைவனோடு சமமாகா தென்பதை வலியுறுத்துகின்றது.

சிவன்சிவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவம்நீகடி புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்று
ணவன்றானே யறியுஞ்சித் தாதலினி லிரண்டு
மஃணந்தாலு மொன்றுகா தநந்தியமா யிருக்கு
மிவன்றானும் புத்தியுஞ்சித் திவனேமா புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே.

(கொ-து) (இவன்) அவற்றிற் படியுஞ் சித்து அவன்தானே அறியுஞ் சித்து இவன்றான் அறிவிக்கப்படும் சித்தும் இரண்டும் அணைந்தாலும் அநந்திய மாயிருக்கும் ஒன்றுகாது ஆதலினால்.

(பொ-ரை) முதல்வனும் உயிரும் சித்துப் பொருள் ஆதலால் ஒத்து ஒன்றுகும் என்றலே பொருந்தும். அவ்வாறன்றி உயிர் சிவானுபவம் ஒன்றற்கே உரித்தென்று கூறுதல் பொருந்தாது எனின், சிவன் அருளாகிய சித்து. உயிர் அவ்வருளைச் சேரும் சித்து. சிவன் பிறப்பினைக் கெடுத்து போகமோட்சம் தரும் சித்து. உயிர் அவைகளில் அழுந்தும் சித்து. இவன்தானே அறியும் சித்து. உயிர் அறிவிக்க அறியும் சித்து. இவ்வாறு சித்து இரண்டிற்கும் வேற்றுமை யிருப்பது எதுபோல எனின், கண்ணொளியும் சூரியன் ஒளியும் போலவாம். எவ்வாறெனின், அவ்விருவொளிகளும் ஒளி யென்கின்ற பொதுமையால் சமமாயிருப்பினும் கண்ணொளியானது சூரியவொளியின் துணையையின்றி ஒரு பொருளையும் காணமாட்டாது. சூரிய வொளி துணை வேண்டாதுதானே விளக்கும். இவ்வாறே சிவனுக்கும் உயிருக்கும் வேற்றுமை பெரிதும் உண்மையால் சிவனோடு உயிர்கூடிய விடத்தும் அத்துவிதமாய் (கலந்து) நிற்றலே யன்றி ஒன்றாய்ப் போமாறில்லை. அன்றியும் உயிரும் புத்தி தத்துவமும் உணரும் ஒப்புமை பற்றி சித்தெனக்கூறப்படினும் புத்தி தத்துவம் உயிராதலில்

லாதது போலவுமறிக. அப்புத்தி தத்துவம் சடமும் உயிர் சித்துமாகிய வேற் றுமை யுடைமையால் ஒன்றுகாமை ஒக்கும். முதல்வனும் உயிரும் சித்தேயாத லின் ஒன்றுகு மென்பதே பொருந்த மெனின், உயிரும் ஏனைத் தத்துவங்களை நோக்க சித்தேயாயினும் முதல்வனை நோக்க சடமேயாம். ஆதலால் ஒன்றுமா றில்லை. (எ...று) (கக)

ஈசுவர அவிகாரவாதி பரிணமவாதி அபிக்கியவாதி சிவ சம வாதிகள் கூறும் ஆசங்ஙைகளை மறுத்து வேறு வேறு உவமை யெடுத்துக் காட்டி. சித்தாந்தத்தை வலி யுறுத்துகின்றது.

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலினைந்தங் குயிரை
பெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னுக்கி
யரும்பித்திந் தனத்தைபன லழிப்பது போன் மலத்தை
யறுத்தமல னப்படிணைந்த வப்பேபோ லிணைந்து
விரும்பிப்பொன னினைக்குளிகை யொளிப்பது போ லடக்கி
மேனித்துத் தானெல்லாம் வேதிப்பா னதுபோற்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்ணைக்
கட்டியைபோற் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே.

(கொ-டு) காந்தம் இரும்பை வலித்தாற்போல் (அமலன்) அங்கு உயிரை இயைந்து எரிஇரும்பைச் செய்வதுபோல் அனல் இத்து அரும்பு இத்தனத்தை அழிப்பதுபோல் (அமலன்) இவனைத்தானுக்கி மலத்தை அறுத்து அப்பு அனை ந்த உப்பேபோல் விரும்பி அமலன் அணைந்து (குளிகை (மேனித்து) பொன் னினை ஒளிப்பதுபோல் தான் எல்லாம் மேனித்துவேதிப்பானுகி அடக்கி கரும் பைத்தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியைக் கலந்தே ஒத்து (அமலன்) அந்த முத்தியினில் இருப்பன்.

(பொ-ரை) ஈசுவர அவிகார வாதிகள் இறைவன் விகாரமின்றி நிர்விகா ரியாய் நிற்பன் ஆதலால் மாநிழலுவமையைமறுத்தது செல்லாதென்பரெனின், காந்தமானது விகாரமின்றி நின்றே இரும்பை இழுப்பதும் கண்டாம். அது போல இறைவனும் விகாரமின்றியே உயிரைத்தன் வழிப்படுத்தி நிற்பன். ஆத லின் மாநிழல்போல சிவன் இல்லையென்றது பற்றி சிவன் நிர்விகாரியாதற்கு இழுக்கில்லை யென்க. பரிணமவாதிகள் முத்தியில் இறைவனும் உயிரும் ஒன் றுமாதலால் கேடே முத்தி யென்றதை மறுத்தது பொருந்தாதென்பரெனின், தீயானது இரும்பைக் கெடுக்காமல் தன் வண்ணமாக்கி அவ்விரும்பின் கண் உடன்றுன்றி நிற்கின்ற தறைமாத்திரம் கெடச்செய்யும். அதுபோல இறைவ னும் உயிரைத் தன் வண்ணமாகச் செய்து அவ்வுயிரின் கண் உடன்றுன்றி

நிற்கின்ற மலமோத்திரம் கெடச் செய்வனுதலால் கெடுதல் முத்தியாகாது என் றது பற்றி ஒன்றுதற் கிழுக்கில்லை யென்க. அயிக்கியவாதிகள் முத்தியில் உயிர் சிவனோடு சமமாதலால் நீரொடு நீர் சேர்ந்தாற்போலென்றவுவமையையமறுத்தது செல்லாதென்பர் எனின், நீரோடுசேர்ந்த உப்பானது தன் சுவை முழுவதும் அந்நீர்க்காக்கி தன்னோடொப்ப சமன்செய்து நிற்கும். அதுபோல உயிரைச் சேர்ந்த இறைவனும் தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின்கட் பதிப்பி த்து தன்னோடு ஒப்பச்செய்து நிற்பன். ஆகலால் நீரோடு நீர்சேர்ந்தாற்போல் என்பதை மறுத்ததுபற்றி சிவசமமாவதற் கிழுக்கில்லை யென்க. சிவசமவாதி கள் உப்புடன் கூடிய நீர் உப்பாதல் போல சிவனுடன் சேர்ந்த உயிர் சிவமாகி சிவன் செய்யும் பஞ்சகிருத்தியங்களைச் செய்யுமாதலின் உயிர் பஞ்சகிருத்தியம் செய்யாதென்றது பொருந்தாதென்பர் எனின், இரத குளிகை செம்பை யுருக்கி தன்னோடு கூட்டிப் பொன்னாகச் செய்தும் அக்குளிகை தன்னிடத்துள்ள பொன்னியல்பை அப்பொன்னுக்குக் காட்டாதுதன்னுளடக்கி நிற்குமாறு போல இறைவன் உயிருக்கு எண் குணங்களெல்லாம் பதியச்செய்தும் பதி ந்த அவ்வெண் குணங்களினியல்பு சிறிதும் தோன்றுது அறிவிறந்து நிற்கு மாறு தனது வியாபகத்துள்ளடக்கி நிற்குமாதலால் உம்பர் பிரான் ஒருவனே உற்பத்தியாதிகளுக் குரியனுதற் கிழுக்கில்லை யென்க. சுத்தசைவர் அறிவிற ந்து நிற்கும் முத்திநிலையில் அனுபவங்கூடாதாதலின் சிவானுபவத்திற்கு உரித் தென்றல் பொருந்தாதென்பர் எனின், கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, இர தம், கற்கண்டு, சருக்கரை முதலிய சுவைப்பொருளெல்லாம் ஒன்றுகக் கலந்த வி—த்து உளதாகிய சுவை இத்தன்மைத்தெனப் பிரித்தறியவராது. அது போல இறைவனும் பரமுத்தியில் உயிரோடு கலந்தவிடத்து இத்தன்மைத் தெனப்பிரித்தறிய முடியாத ஆனந்த சொரூபமாய் நிற்பனுதலால் அறிவிறந்து நிற்பன் என்பது பற்றி சிவானுபவத்திற் குரித்தாதற்கிழுக்கில்லை யென்க. அறிவிறந்து நிற்றலென்பதற்கு பிரித்தறியாது நிற்றலென்பது பொருளாம். (எ...று)

எட்டாம் சூத்திரத்தில் மலாடிக் கீழ்வைப்பன் என்றதை இச்செய்யுளில் நிர்விகாரியாய் தன் வண்ணமாகச் செய்து எனக் கூறினர். இது சிவரூபம். ஒன்பதாம் சூத்திரத்தில் பாதநிழற் கீழ் நிற்க என்றதை இச்செய்யுளில் தன்னோடொப்பச் செய்தெனக் கூறினர். இது சிவ தரிசனம். பத்தாம் சூத்திரத்தில் எகனுகிநின்றிட பென்றதை இச்செய்யுளில் உயிரினியல்பு சிறிதும் தோன்றுது நிற் குமாறு அடக்கி நிற்குமெனக் கூறினர். இது சிவயோகம். இப்பதி னென்றும் சூத்திரத்தில் அரன்மலாடிக் கீழிருப்பனென்றதை இச் செய்யுளில் பிரித்தறியவராது ஆனந்த சொரூபமாய் நிற்பனெனக்

கூறினர். இது சிவபோகம். இவ்வாறு நான்கு சூக்குமங்களுக்கும் பேதம் உண்டென்பதை இச்செய்யுளிற் கூறியவாறறிக. இன்னும் நிர்விகாரி யாக்கல் நின்மல சாக்கிரம். தன் வண்ணமாகச் செய்தல் நின்மல சொப்பனம். தன்னைடொப்பச் செய்தல் நின்மல சுழுத்தி. அடங்கி நிற்கச்செய்தல் நின்மல துரியம். ஆனந்த சொரூபமாய் நிற்கச் செய்தல் நின்மல துரியாதீதம் எனவும் அறிக. (கஉ)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

பதினென்றும் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திருவிருத்தம்—கூஉக.

பன்னிரண்டாம் சூத்திரம்.

மேல் பத்தாஞ்சூத்திரத்தால் பாச நீக்கமும் பதினென்றும் சூத்திரத்தால் சிவப்பேறும் கூறினமையால் அப்பயனைப் பெற்ற முத்தர் உடம்புள்ள அளவும் எவ்வாறிருப்பர் என்னும் ஆசங்கை நிகழுமன்றே? அந்நிகழ்ச்சி பற்றி சீவன் முத்தி நிலையில் நிகழும் இயல்பினை வகுத்துக் கூறுதற்கு எழுந்தது பன்னிரண்டாம் சூத்திரம். மேல் ஆசங்கை யின்மையின் இச்சூத்திரத்தோடு நூல் முடிகின்றது.

சீவன் முத்தரியல்பு இவ்வாறென சூத்திரப்பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசமொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா
மானெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி
யெங்குமியா மொருவர்க்கு மெனியோ மல்லோம்
யாவர்க்கு மேலாமே மென்றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே.

(பொ-ரை) மேற்கூறியவாறு சிவப்பேறெய்திய முத்தர்களுக்கு கன்மத் துக் கீடான சரீரம் உள்ள அளவும் இறைவன்றிருவடியை அடைய ஒட்டாது முன் மறைத்தலைச் செய்துநின்று பின்பற்றறக் கழிந்த மும்மலங்கள் விளக்கற் றம் பார்க்கும் இருள்போல் அறிவற்றம் பார்த்து நிற்பனவாம். ஆதலால் அம்மு த்தர் அவற்றை அஞ்சாது நிட்டையிலற் பரிகரித்தும், அங்ஙனம்நிட்டைசாதித் தற்குத் துணையாகிய மெய்யன்பரோடு பழகியும், அப்பழக்கம் நிலைபெறும்படி அவாது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனக் கண்டு வழிபாடி யற்றி ஆனந்த மேலீட்டால் ஆடல் பாடல்களைச் செய்தும், இப்பேறு பெறமா ட்டாதவர் சிறுமையை நோக்கி யாவர்க்கும் மேலாகுமென்று ஆனந்த மெய் தியும், இப்பேறு பெற்றூர் பெருமையை நோக்கி அவர்க்கு அடிமையென வாழுமியல்பினையும் உடையராவர். இவர் சீவன்முத்தனெனப்படுவர். (எ...று)

இச்செய்யுள் முதனூல் போல் முக்கூற்றை யுடையது. அவற் றுள்

முதற்கூறு—செங்கமலத்தாளிணைகள் சேரலொட்டாத் திரிமல ங்க ளறுத்து.

இரண்டாங் கூறு—ஈசனேசரொடும் செறிந்திட்டு.

மூன்றாங் கூறு—அங்கவர் தம் திருவேடம் ஆலயங்களெல்லாம் அனனவே தொழு திறைஞ்சி ஆடிப்பாடி.....

.....செய்தியுடையோரே.

இவற்றுள் முதற்கூறு இச் செய்யுளிலேயே செங்கமலத்தாளி ணைகள் சேரலொட்டா வெனக்கூறி மலத்தை எதற்காக நீக்கவேண் டும் என்னும் ஆசங்கையை நீக்கினமையின் வேறு கூறாது விடுத்த னர். (க)

ஏண்டாம் அதிகாணம்.

ஈசனேசரோடும் செறிந்திட்டு என்பது.

சீவன் முத்தன் சிவனடியாரிடத்து அன்புடையனாகவும் ஏனை ய அறிவில்லாரிடத்து வேறுப்புடையனாகவும் இருக்கவேண்டுமெனக் கூறுகின்றது.

ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன் பில்லா
செவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார்
பேசுவதென் னறிவில்லாப் பிணங்கலோரா மிணங்கிற்
பிறப்பினிலு மிறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ
யாசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட்
டவர்கருமு முன்கருமு மாகச் செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறியி னின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

(கொ-டு) நாம்பேசுவது என் நீ அரன் அடியார் அடியாரை அடைந்திட்டு அவர்கருமம் உன்கருமமாக அருண்ஞானக்குறியில் நின்று ஆசையொடுஞ்செய்து அறிவில்லாப் பிணங்கலே இணங்கில் பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்விடு கூசி மொழிந்து கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

(பொ-ரை) காமுகனெவா னொருவன் ஒரு பெண்ணிடத்து அன்புடையனாகில் அவ்வன்புடைமையை அப் பெண்ணினுடைய சுற்றத்தைக் கண்டவிடத்து நிகழும்அன்பினளவாகத் தெளியப்படும். அதுபோல ஈசனுக்கன்புடையனாகில் அவ்வன்புடைமை அவனடியவனைக் கண்ட விடத்து நிகழும் அன்பினளவாகத் தெளியப்படும். ஆதலால் அடியவரிடத்து அன்பில்லாதார் ஈசனிடத்தும் அன்பில்லாதாரோ ஆவர். அவர் ஈசனுக்கன்புடையவர் போல் ஒழுகுதல் நாடக மாத்திரையே யன்றிப் பிறிதில்லை. அன்றியும் ஈசன் எவ்வுயிரிடத்தும் உளனாதலால் அத் தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கும் அன்புடையாதல் கூடும். ஈசனிடத்து அன்பில்லாதவிடத்து எவ்வுயிரிடத்தும் அன்பில்லாதவரோ யாவர். இவ்வாறு சிவனடியாரிடத்தும் வேனைய உயிர்களிடத்தும் அன்பில்லாதார் தம்முயிர்க்குநிலைத்த இன்பத்தைச் செய்து கொள்ளாதவராதலின், அவரைப் பற்றி நாம் என்ன சொல்வது! காமம் மிகுதியுடையவர்க்கு அத்தொடர்புடையாருடைய இணக்கம் அக்காமப் பயிரை வளர்க்கும் நீராதலால் அவ் வினக்கத்தில் மிகுந்த உவகையுண்டாவதுபோல அரன் மலரடிக்கீழிருக்கப் பெற்ற நீ அவ்வனுபவத்தை வளர்க்கும் தன்மையாகிய அடியாரோ டிணங்கி அவர் பணியை உன் பணியாக அகங்கார முனைப் பின்றி உவகை மிகுதியுடன் செய்து காமுகரல்லாதா ரினக்கம் காமப் பயிரைக் கெடுக்கும் களை யென்றெண்ணி காமுகர் வெறுப்பதுபோல சிவானுபவத்தைக் கெடுக்கும் தன்மையராகிய அறிவில்லாப் பிணம்போன்றவரோடினங்கில் பிறப் பிறப்பாகிய துன்பத்தை உண்டுபண்ணுவ ராதலின், அவரினக்கத்தை விட்டு நீங்கி அடியாரது உயர்வையும் உனது இழிவையும் நோக்கி நாணி அடியாரிடத்து தாழ்ந்த மொழி கூறி உவகை மிகுதியால் கும்பிட்டு கைகொட்டி கூத்துமாடித் திரிவாயாக. (எ...று)

அநுபவ நிலைய விதியாகக் கூற வேண்டுவதின் றுகவும் அந் நிலை அனுபவமாய் ஆனந்தம் விளைத்தலே யன்றி சாதனமாய் மலம் அறுத்தலும் செய்தலின் விதி முகமாகக் கூறினர்.

உயிர்களிடத்து அன்பில்லாதவர் தமக்கும் அன்பில்லாதவரென்ற இக் கருத்து ''அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்'' என்ற திருக்குறளோடு முரணுதா எனின், தம் என்னுஞ் சொல்லிற்கு இவ்விடத்து உயிரும் குறளில் உடம்புமாதலில் முரணுமை யறிக. (உ)

இரண்டாமதிகரணம் முடிந்தது.

மூன்றாமதிகரணம்.

ஈச னேசனோடும் சேறிந்திட்டு என்பது.

பாசப்பற்றுடையார் பற்று விடுதற்கு சிவனடியாரை சிவனெனவே துணிந்து வழிபட வேண்டுமெனக் கூறுகின்றது.

அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலிறைற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம்பா விக்குமத்தாற் சிவனு மாவர்
குறியதனு விதயத்தே யானைக் கூடுங்
கொள்கையினு லானுவர் குறியொடுதா மழியு
நெற்றியதனுற் சிவமேயாய் நின்றிடுவ ரென்று
னேசத்தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே.

(கொ-டு) பாசத்தார் விடவே நேசத்தால் நீ தொழுதிடு என்பதை முன்னுக வைத்துரைக்க.

(பொ-ரை) மேற்கூறியவாறு அறிவில்லாதாருடைய இணக்கத்தை விடுதற் பொருட்டு யாது செய்யவேண்டுமெனின், சிவனடியாரை சிவனெனவே தேறி அன்புடன் வழிபடவு வேண்டும். சிவனடியார் சிவமாவது எவ்வாறெனின், சிந்தனைக்கு அதீதனுகிய பரம்பொருள் உலகத்தில் உள்ளார் தன்னை யறிதற் பொருட்டு திருநீறு, கண்டிகைமுதலிய திருவேடமாகிய தனது வடிவத்தை

தன் அன்பர்க்குக்கொடுத்து உயிர்க்குயிராய் நின்று அவ்வன்பர் அறிவினை விளக்கி அருளினால் அவரோடு கலத்தலால் அத் திருவேடமுடைய மெய்யன்பர் சிவமே யாவர். சிவோகம் பாவனையானும் அவர் சிவமே யாவர். இருதயத் தானத்தில் ஒரு குறியின்கண் வைத்து முதல்வனைக் கூடும் செயலானும் அவர் சிவமே யாவர். அவ்வாறு கூடும் காலத்து குறியும் குறிக்கின்ற தாமுமின்றி நின்ற தன்மையானும் சிவமே யாவர். (எ...று) (ந)

சிவாலயத்தை சிவனெனக் கண்டு வழிபடும் முறையைவகுத்துக் கூறுகின்றது.

திருக் கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யிருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென்பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தில் வந்துதித்து மிருஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே.

(கொ-டு) திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிதன்னையே சிவனெனக் கண்டவர்க்கு சிவன் அங்கே உறைவன் மந்திரத்தால்உருக்கோலியெனநினையும வர்க்கும் உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும் இந்தனத்தின் எரிபோல் மந்திரத்தில் விருப்பாய வடிவாகி (அங்கே) வந்து உதித்தும் அன்பர்க் கேமிகும் உருவங்குங்காண ஒண்ணுத பால் சுரபிக்கு முலை பால் விம்மி ஒழுகுவது போல் அங்கே வெளிப் பட்டருளுவன்.

(பொ-ரை) மேற்கூறியவாறு சிவனடியாரை வழிபடுதலோடு சிவாலயத்தையும் சிவமெனக் கண்டு வழிபட வேண்டும். சிவாலய வழிபாடு நான்குவிதப் படும். அவை வருமாறு—சிவாலயத்துள் எழுந்தருளி யிருக்கும் சிவலிங்க முதலிய திருமேனிகளையே சிவம் வேறு இவ் வுருவும் வேறு என்னும் பேதமின்றி சிவம் எனக்கண்டு வழிபடுபவர் சரியையாளர். இவர்க்கு சிவபிரான் அத் திருமேனிகளில் வெளிப்படாது நின்று அருள் செய்வன். ஈசாநாதி மந்திரங்களினால் அருவப் பொருளாகிய சிவபிரான் சிவலிங்க முதலியதிருவுருக்கொண்டான் எனக் கருதி மந்திரக் கிரியையால் வழிபடுவர் கிரியையாளர். இவர்க்கு விறகைக் கடைந்த விடத்துத் தோன்றும் அக்கினி போல பிரயாசையின் பேரில் சிவபிரான் அத்திருமேனிகளில் வெளிப்பட்டுத் தோன்றி யருள் செய்வன். உள்ளம் எங்கணும் இல்லமாக வாழும் சிவபிரான் இத்திருமேனியிலும் வீற்

நிருந்து பூசை கொண்டருளுவ னெனக் கருதி சிவலிங்க முதலிய திருமேனி களை வழிபடுவர் யோகிகள். இவர்க்கு கறந்த விடத்துத் தோன்றும் பால் போல இலகுவில் வெளிப்பட்டுத் தோன்றி யருள் செய்வன். கிரியையாளர் யோகி கள் இருவர்க்கும் வெளிப்பட்டுத் தோன்றினும் அப்போதப்போது தோன்று வதே யன்றி எப்போதும் தோன்றுவதில்லை. அவர்போல் ஏகதேசமாய் வழிபடாமல் நீங்காத அன்பினல் சிவலிங்க முதலியதிருமேனிகளை சிவமே யெ னக் கண்டு வழிபடுவர் ஞானிகள். இவர்க்கு மேம்பட்ட பசுவின் வடிவ முழு தும் காணப்படாத பால் தன் கன்றை நினைந்த மாத்திரையில் அதன் முகமில் விம்மி ஒழுகுவதுபோல் கருணை மிகுதியால் சிவபிரான் அவ்வன்பே தானாய் எப்போதும்அத்திருமேனிகளில் வெளிப்பட்டு நின்று அருள் செய்வன். ஆக லால் அவ்வன்பின் வழியே வழிபடுக. (எ-று)

திருவேட்டத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழி படலும் திருவேடத்தை வழிபடுதல் அவ்வேட முடையார் கருத்து சிவமாயி ருத்தல் பற்றி யெனவும் சிவாலயத்தை வழிபடுதல் வழிபடுபவர் கரு த்து சிவமாயிருத்தல் பற்றி யெனவும் அறிக. (4)

ஞானிக்கு நால்வகை வழிபாடும் கூடுமெனவும் வேறியாக்கு தன்னிலைமைக்கு மேம்பட்ட வழி பாடு கூடாதெனவும் ஞானி யாவர்க்கும் குருவாவர் எனவும் சிவலாயமும் சிவனடியாரும் அக் குருவின் வேறல்ல எனவும் கூறுகின்றது.

ஞானயோ கக்கிரியா சரியை நான்கு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய
ஞானமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்ற னெண்கிரியை யாதி
யீரிணவிரண்டினுக்குரியன் சரியையினி னின்றே
னச்சரியைக் கேயுரிய ஞகலினல் யார்க்கு
மீனமிலா ஞானகுரு வேவகுருவு மிவனே
யீசனிவன் றானென்று மிறைஞ்சி யேத்தே.

(பொ-ரை) மேலச்செய்யுளிற் கூறியவாறு சிவாலயத்தை வழிபடுதல் அவரவர் கருத்துக்கு ஏற்ற வாறு உரித்தாயிருக்க சரியையாளரைப்போல் ஞானியும் அச்சிவாலயத்தை வழிபடுவானே னெனின், சரியை முதல் நான்கும் இறைவனது உண்மைப் பணியாதலால் ஞானி நாலினுக்கும் உரியன். எது போலு வெனின், அகத் தொழில் செய்வார் புறத்தொழிற்கும் உரியராத

ல் போலவாம். புறத்தொழில் செய்வோர் அகத் தொழிற் குரியர் அல்லாதது போல் யோகியானவன் யோகம் கிரியை சரியை ஆகிய மூன்றிற்கும் கிரியாவான் கிரியை சரியையிரண்டிற்கும் சரியாவான் அச்சரியையொன்றிற்கும் உரியனவன். ஆதலினல் சரியை முதலிய அந்நால் வகைப் பாதத்தினிற்கும் மாணாக்கருக்கு உபதேசிக்கும் ஆசிரியரும் அவ்வாறேயாவர். அதாவது ஞானகுரு எல்லாருக்கும் குருவாவதொன்பதும் வேண்ய குரு தன்னின் மேம்பட்ட மாணாக்கருக்கு குருவாகாதொன்பதுமாம். ஆதலால் ஞானகுருவே மேலான குருவென்றும் மேற்கூறிய சிவாலயங்களும் சிவனடியார்களும் இக்குருவேயென்றும்துணிந்து சிவாலயம் சிவனடியார் ஆகிய அவ்விரண்டினும் வழிபடுக. (எ...று)(நி)

ஞான குருவின் அருளாலன்றி சிவபிரான் திருவடியை அடைதல் கூடாதெனக் கூறுகின்றது.

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தயோகத்தான்
மணிபிரத குளிகையினுன் மற்று மற்றுந்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்க டிரிகால ஞான
மந்தமிலா வணிமாதி ஞானங்க ளெல்லா
மடைந்திடுமா சானருளா லடிசேர் ஞானம்
வந்திடுமற்றென்றுலும் வாரா தாகு
மற்றனையு மவனருளான் மருவு மன்றே.

(பொ-ரை) மந்திரங்களாலும் மருந்துகளாலும் சிறந்தயோகத்தாலும் மணியாகிய இரத குளிகையினுலும் இன்னும் சாத்திரங்களிலே கூறியவாறு செய்தலாலும் வருகின்ற சித்திஞானங்களும் வேதாகமம் முதலிய கலைஞானங்களும் மூன்றுகாலங்களையும் அறியும் ஞானங்களும் அளவில்லாத அணிமா முதலிய அட்டசித்தி ஞானங்களும் ஆகிய அனைத்தும் ஞானாசிரியன் இல்லாமலும் கூடும். சிவபெருமான் திருவடியை அடையும் ஞானம் ஞானாசிரியன் திருவருளால் கூடுதலே யன்றி வேறெவற்றினும் கூடாது. அக்குருவருளால் மேற் கூறிய சித்தி முதலிய ஞானங்களும் கூடும். ஆதலால் இக்குருவே ஈசன் என்று வழிபட்டுத்துதிக்க (எ...று) (சு)

ஞானகுருவை வழிபட்டவர்க் குண்டாம் பயன் இதுவென்னக் கூறுகின்றது.

பரம்பீரம மிவனென்றும் பாசிவன்ற னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்ற னென்று
மரண்றருஞ் சிர்ஷ்டிநிலையெல்லா மிவனே யென்று
மருட்குருவை வழிபடலே பவனிவன்ற ஞியே
யிரங்கியவா ணம்யாமை மீனண்டஞ் சிஷ்டை
யியல்பினைடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந் தானே.

(கொ-டு) இரங்கிய வாரணம் யாமை மீன் இவைஎனவும் சிவமே பார்த்தானே எனவுங் கூட்டுக.

(பொ-ரை) சொரூப சிவமும், தடத்த சிவமும், பர ஞானத்தையுடையாரும், சிவலிங்காதி மூர்த்தங்களும் சிவபக்தர் பொருட்டாக அப்போதப்போது வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்களும் ஆகிய வெல்லாம் குரு மூர்த்தமே யெனத்தேறி ஞானகுருவை வழி படுக. அவ்வாறு வழிபடின் சிவபெருமான் இக்குருவை ஆவேசித்து நின்று கோழியானது தன் முட்டையைப் பரிசித்துக் காத்துச் சிசு உற்பத்தி செய்வது போல் மாணாக்கன் சிரசில் கையைவைத்தலாகிய பரிசதீட்சை செய்தும் ஆமையானது தன்முட்டையைக் கருதி சிசு உற்பத்தி செய்வது போல சிந்தித்தலாகிய பாவனாதீட்சை செய்தும் மீனானது பார்வையினால் சிசு உற்பத்தி செய்வதுபோல் பார்த்தலாகிய சட்சு தீட்சை செய்தும் சிவமாகச் செய்தருளுவன். (எ...று) (எ)

மூன்றா மதிகரணம் முடிந்தது.

பன்னிரண்டாம் சூத்திரம் முடிந்தது.

ஆகத் திரு விருத்தம்-கூஉஅ.

சுவஞானசித்தியார் சுபக்கம் முற்றுப்பெற்றது.

மெய்கண்ட தேவன் திருவடி வாழ்க.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
10	13	சிவபக்தி	சிவகதி
11	9	இரிக்காலாகும்	இரிக்கலாகும்
12	2	போலென்பதை	போல்வனென்பதை
13	14	விகற்பமின்றி	விகர்பமின்றிய
15	18	க்ம காடுப்பது	செய்து கொடுப்பது
,,	26	உயிர்கண்	உயிர்க்கண்
19	10	என்பதை	என்பதற்கு
25	5	காரியப்பெரு	காரியப்பொரு
28	4	தருபவன் ஒருவன் வேண்டும்	வந்து நின்று போவது
29	28	அ.ம்மீமாம்சகர்	கார்க்கிகர்
32	12	சேரடு	கோடு
,,	19	சிற்காந்தாந்த	சித்தாந்த
33	18	மீமாம்சகர்	சாங்கியர்
34	27	பிபஞ்ச	பிரபஞ்ச
37	11	சவிகர்ப்ப	சவிகற்ப
,,	33	அக்காரங்கள்	அக்காரங்களின்
40	25	ஸவிகர்ப்ப	சவிகற்ப
41	25	அதவது	அதாவது
42	15	அவ்வகாயத்தின்	அவ்வாகாயத்தின்
43	10	மயை	மாயை
56	16	கடத்து	கடந்து
63	9	ஸ்வன்ருமே	வொன்ருமே
66	5	ஞானசத்தியால்	ஞானசத்தியாவது
,,	6	அறிவன்	அறியும் அறிவாம்
,,	7	கிரியா சத்தியால்	கிரியாசத்தியாவது
,,	8	செய்வன்	செய்யுந் திறம்
68	11	எதுவாக	ஏதுவாக
70	17	பொருள்களையும்	பொருளின்றன்மைகளையும்
76	25	செய்கி	செய்து
82	23	யகிதங்	பகிதஞ்
83	1	திக்கிரகமாகி இரண்டய	க்கிரகமாகிய இரண்
86	25	எவல்	ஏவல்
92	1	அன்பிலார்	அன்பிலாது
,,	22	ரென	ரெனை
93	24	குறிபிப்	குறிப்பி
94	31	யாபினும்	யாயினும்
98	6	தாகித்	தாகிக்
101	1	தேவரும் மனிதரும்	தேவருக்கும் மனிதருக்கும்
112	24	வாயல்	கோயில்

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
	26	வாயல்	வாயில்
113	22	முனைமுறை	முனைமுரை
114	18	குணமாக	விடயமாக
145	13	உசுழுத்தி	சுழுத்தி
149	30	கூறதாகும்	கூற்றதாகும்
151	27	பயிர்ச்சி	பயிற்சி
152	13	பயிர்ச்சி	பயிற்சி
155	24	ணுணைழயு	ணுணைழயு
175	27	கந்து	ந்து
	32	கண்டதான	கண்டத்தான
181	12	சிவதை	சிவத்தை
184	18	விட	விடய
188	15	அறிதல்	அறிந்து தன்பந்தோற்றுவித்தல்
232	29	சைனை	சைன
233	24	அறைந்திடிற் பூரணநிறைவு	அறிந்திடில் நிர்க்குண நிறைவு
238	31	படு மவும்	படுமெனவும்
266	31	ரணங்கள்	சரணங்கள்
267	35	அடிகூட்டி	அடிகாட்டி
271	2	உளை	உள்
272	8	பறறு	பற்று
276	25	யரம்	யாம்

78802